


மொழிபெயர்ப்பு இணைப்பிதழ்

புது எழுத்து

pudhuezuthu@gmail.com

புது எழுத்து

15-ம் ஆண்டு சிறப்பிதழ்

ஆசிரியர் • மனோன்மணி

ISSN 2249-5177

9 772249 517007

அனைத்து தொடர்புகளுக்கும்

புது எழுத்து
2/205, அண்ணா நகர்
காவேரிப்பட்டிணம்-635 112 • கிருஷ்ணகிரி மாவட்டம்
90421 58667 • pudhuezuthu@gmail.com

இரண்டு புத்தகங்கள் ரூ. 200/-



புதுஎழுத்து மகிழ்கிறது. மொழிபெயர்ப்புக்கான சாகித்ய
அகாதெமி விருது பெற்ற சா.தேவதாஸ் ஓவியம்
ஞானபிரகாசம் ஸ்தபதி

சின்னுவா அச்சபே

இறந்த மனிதர்களின் பாதை

தமிழில்: ருத்ரநீலி



மிக்கேல் ஒபியின் நம்பிக்கைகள் அவர் எதிர்பார்த்ததற்கு முன்பாகவே முழுமையடைந்தது. அவர் நுடுமே மத்தியப்பள்ளியின் தலைமைஆசிரியராக 1949ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் நியமிக்கப்பட்டிருந்தார். அந்தப் பள்ளி எப்போதுமே ஒரு முன்னேற்றம் காணாததாக இருந்தது. அதனாலேயே சமயக்குழுவின் நிர்வாகிகள், இளமையான, ஆற்றல் மிக்க ஒருவரை அப்பள்ளிக்கு அனுப்பமுடிவெடுத்தனர். ஒபி இந்த பொறுப்பை உற்சாகத்துடன் ஏற்றுக்கொண்டார்.

அவரிடம் நிறைய அற்புதமான எண்ணங்கள் இருந்தன. அத்தகைய எண்ணங்களை நடைமுறைப்படுத்த இதுவே சிறந்த வாய்ப்பாக எண்ணினார். அவரது தரமான உயர்பள்ளிக் கல்வி, அவரை கூர்மையான அறிவு கொண்ட ஆசிரியராக அலுவலகப் பதிவேடுகளில் இடச்செய்து, அதன்மூலம், அவரை சமயக்குழுவின் பிறதலைமை ஆசிரியர்களிடமிருந்து வேறுபடுத்தியது. வயதானவர்கள், குறிப்பாக குறைந்த படிப்பறிவு உடையவர்களின் குறுகிய கொள்கைகளுக்கு தன் கண்டனத்தை வெளிப்படையாகக் கூறுபவர்.

“நாம் இதில் நல்லமுறையில் வேலை செய்வோம். அப்படித்தானே?” ஒபி தன் இளம் மனைவியிடம் இவ்வாறாக தன்பதவி உயர்வுக்கான செய்தி கிடைத்ததும் மகிழ்ச்சியாக கேட்டார்.

“நம்முடைய சிறப்பை இதில் காட்டுவோம்” அவள் பதிலுரைத்தாள். “நாம் அழகிய பூங்காக்களை வைப்போம். எல்லாமே நவீனமாகவும், மகிழ்ச்சிகரமாகவும் அமையும்” அவர்களின் இந்த இரண்டு வருட திருமண வாழ்வில், அவளுக்கும், கணவரின் புதுமை உபாயங்கள் குறித்த பேரார்வம், பழமையான சிந்தனைகள் மற்றும் மூப்படைந்தவர்கள் இந்த கற்பித்தல் தொழிலைவிட ஓனிட்ஷா சந்தையில் வியாபாரிகளாக இருக்க சிறந்தவர்கள் என்ற எண்ணமும் தொற்றிக் கொண்டிருந்தது. அவள் தன்னை இளம் தலைமையாசிரியரின் மெச்சத்தக்க மனவியாக, பள்ளியின் ராணியாக தன்னைப் பார்க்கத் தொடங்கி விட்டாள்.

சகஆசிரியர்களின் மனைவிகள் இவளின் அந்தஸ்தை நினைத்து பொறாமை கொள்ளக்கூடும். அவள் எல்லாவற்றிலும் நாகரீகத்தை அமைக்கக்கூடும். உடனடியாக அவள் மனதில் அங்கு மற்ற ஆசிரியர்களின் மனைவிகள் இருப்பார்களா இல்லை மாட்டார்களா என்று மனதில் தோன்றியது. நம்பிக்கைக்கும் பயத்துக்குமிடையே தடுமாற்றத்துடன் தன் கணவரை அபயத்துடன் பார்த்துக் கொண்டே கேட்டாள்.

”என் சக ஆசிரியர்கள் அனைவரும் இளமையான திருமணம் ஆகாதவர்கள்” ஒபி உற்சாகத்துடன் கூறினார். “அதுவே ஒரு நல்ல விஷயம்” என்றும் தொடர்ந்தார்.

“ஏன்”

“ஏனென்றால் அப்போதுதான் அவர்கள் தங்கள் நேரத்தையும் திறமையையும் முழுவதாக பள்ளிக்குத் தர இயலும்.”

நான்சி முகவாட்டமடைந்தாள். சில நிமிடங்களுக்கு அவள் புதிய பள்ளியின் உண்மை தன்மை குறித்த கேள்வியுடன் இருக்கலானாள். ஆனால் அதுவும் சில நிமிடங்களுக்கு மட்டுமே. ஏனெனில் அவளது இந்த சிறிய

தனிப்பட்ட துரதிஷ்டம், தன் கணவரின் சந்தோஷ வாய்ப்பை கட்டுப்படுத்துவதை விரும்பவில்லை. நாற்காலியில் மடங்கி உட்கார்ந்து கொண்டிருந்த தன்கணவனை நோக்கினாள். தோளை சுருக்கி அவன் உட்கார்ந்திருப்பது நலிவுற்றவன் போல் காட்சியளித்தான். ஆனால் அவன் சில வேளைகளில் திடீர் உடல் சக்தி வெளிப்பாட்டினால் பிறரை ஆச்சரிய மூட்டியிருக்கிறான். இந்த தற்சமய தோற்றமானது, துளைக்கும் சக்தியுடன் ஆழமாய் நிலைநிறுத்தப்பட்ட கண்களுடன், அவனது உடல் வலிமை முழுவதும் ஓய்வுற்றது போல இருந்தது. அவனுக்கு இருபத்தாறு வயது மட்டுமே .ஆனால் பார்க்க முப்பது அல்லது அதற்கு மேற்பட்டவன் போல் தோன்றினான். முழுமையாக அவன் அழகற்றவனாகவும் இல்லை.

"உன்னுடைய எண்ணங்களுக்கு ஒரு சிலவார்த்தைகள், மைக்" சிலநேரத்திற்கும் பிறகு நான்சி, அவள் வாசித்த பெண்கள் பத்திரிகை குறித்து பாவிக்கத் தொடங்கினாள்.

"இம்மக்களுக்கு, ஒரு பள்ளியை எப்படி நடத்த வேண்டும் என்பதை வெளிக்காட்ட இது எவ்வளவு பெரிய சந்தர்ப்பம் என நான் யோசித்துக் கொண்டிருந்தேன்"

நடுயுமெ பள்ளி இவ்வுலகத்திலேயே எல்லாவிதத்திலும் பின்தங்கிய ஒன்றாய் இருந்தது. திரு. ஒபி மற்றும் அவர் மனைவி தங்களுடைய வாழ்க்கையை முழுமையாக பணியில் வைத்தனர். ஒபிக்கு இரண்டு குறிக்கோள்கள் இருந்தன. உயர் தரத்தோடு கல்வி வற்புறுத்தப்படுவதும் மேலும் அந்த பள்ளியின் சுற்றுப்புறம் அழகான இடமாக மாறவேண்டுமென்பதும். நான்ஸியின் கனவுத் தோட்டம், பருவமழையினால் உயிர்பெற்று பூக்கத் தொடங்கியது. அழகான செம்பருத்தி பூக்களும், அலமாண்டா குறு மரவரிசைகளும் நேர்த்தியாக சிவப்பு மற்றும் மஞ்சள் நிறத்தில் குறிக்கப்பட்டு அயலாரின் புதர்களிடமிருந்து விலகி பள்ளியின் சுற்றுப்புறத்தில் இருந்தன. ஒருநாள் ஒபி தன்வேலையை நினைத்து பிரமித்துக் கொண்டிருந்தபோது, அந்த கிராமத்திலிருந்து ஒரு மூதாட்டி, நொண்டியபடி மெரிகோல்ட் மலர்ப் படுக்கைகளை மிதித்தபடி பள்ளி வளாகத்தில் போவதைக் கண்டு மனம் புண்பட்டார். வேகமாக அந்த இடத்திற்கு

போய் பார்த்ததில், அங்கு பூச்செடிகள் மிதிக்கப்பட்டு கிராமத்திலிருந்து பள்ளிக்கு எதிர்ப்புறமாக அதன் மதில் வழியாக செல்லும் வழக்கொழிந்த மங்கலான பாதைச்சுவடைக் கண்டார்.

“இது என்னை ஆச்சரியமூட்டுகிறது” என மூன்று வருடங்களாக அந்தப் பள்ளியில் பணிபுரியும் ஒரு ஆசிரியரிடம் சொன்னார் ஒபி. “நீங்கள் இந்த கிராமத்தினரை இவ்வழித்தடத்தை உபயோகிக்க அனுமதித்து உள்ளீர்கள். இது ஒரு நம்ப முடியாத விஷயமாகும்” என தன் தலையை குலுக்கினார்.

“அந்தபாதை” மன்னிப்புக் கேட்கும் விதமாக அந்த ஆசிரியர் கூறினார். “இப்பாதை அவர்களுக்கு மிக முக்கியமானதாகத் தெரிகிறது. அவர்கள் அதை அரிதாகப் பயன்படுத்தினாலும், இப்பாதை கிராமக் கோவிலையும் இடுகாட்டையும் இணைக்கிறது.

“இது பள்ளிக்கு என்ன செய்யப் போகின்றது” எனக் கேட்டார் தலைமையாசிரியர்.

“அது எனக்குத் தெரியாது” இன்னொரு ஆசிரியர் தோள் குலுக்கலுடன் பதில் கூறினார். “ஆனால் ஒன்று மட்டும் எனக்கு ஞாபகம் உண்டு, சிலகாலம் முன், நாங்கள் இப்பாதையை மூட முயற்சித்தவுடன் ஒரு பெரிய கலகம் தோன்றியது.”

“அது சிலகாலம் முன்பு. ஆனால் இப்போது அதைப் பயன்படுத்த முடியாது” என்று கூறிய ஒபி சென்று கொண்டே “அடுத்த வாரம் இங்கு பள்ளியை ஆய்வு செய்யவரும் அரசுகல்வி அதிகாரி இதைப் பற்றி கேள்விப்பட்டால் என்ன நினைப்பார்? எனக்குத் தெரிந்தவரை இதை அனுமதித்தால் கிராமத்தினர், ஆய்வு சமயத்தில் பள்ளி வகுப்பறைகளை புறச் சமயசடங்குகளுக்கு உபயோகிக்க முடிவெடுக்கக் கூடும்.”

கனமான குச்சிகள் பாதையில் நெருக்கமாகவும் குறுக்காகவும் நடப்பட்டு வரி முட்கம்பியால் வலிமையாக்கப்பட்டன.

மூன்று நாட்கள் கழித்து, அநியின் கிராமத்து பூசாரி பள்ளித் தலைமையாசிரியரை அழைத்தார். அவர் ஒரு வயதான மனிதர். அவர் மெலிதான தோற்றத்துடன்

கூனியபடி நடந்தார் .அவர் ஒரு தடித்த கைத்தடியை உடன் கொண்டிருந்தார். தன் விவாதத்தின் போது ஏதேனும் புதிய கூர்மையான கருத்தைக் கூறும்போது, முக்கியத்துவம் அளிப்பதற்காக அக்கைத்தடியை தரையில் தட்டுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

"நான் கேள்விப்பட்டேன்" வழக்கமான இணக்கப் பேச்சுகளுக்குப் பிறகு அவர் கூறினார் "எங்களது மூதாதையரின் நடைபாதை அடைக்கப்பட்டுள்ளது என்பதை"

"ஆமாம்" பதில் கூறினார் ஒபி.

"பள்ளி வளாகத்தை நடைபாதையாக பயன்படுத்தும் மக்களை எங்களால் அனுமதிக்கமுடியாது"

"இங்கே பார், மகனே" தன் கைத்தடியை கீழிறக்கிய படியே பூசாரி தொடர்ந்தார். "இந்தப் பாதையானது நீ பிறக்கும் முன்னே இருந்தது. உன் தந்தை பிறப்பதற்கு முன்னும். இந்த கிராமத்தின் எல்லாருடைய வாழ்க்கையும் இதை சார்ந்திருக்கிறது. இறந்த எங்களது உறவினர்கள் இப்பாதை வழியே விடை பெறுகிறார்கள். எங்களது மூதாதையர்கள் இப்பாதை வழியே எங்களை பார்வையிடுகிறார்கள். மிக முக்கியமாக, இப்பாதை இனி பிறக்க இருக்கும் குழந்தைகளுக்கானது"

திரு. ஒபி தன் முகத்தில் திருப்தியான புன்னகையுடன் கவனித்தார்.

இறுதியாக, ஒபி "நம் பள்ளியின் முழுமையான செயல் நோக்கம் யாதெனில், இது போன்ற நம்பிக்கைகளை வேருடன் அறுப்பதே. இறந்த மனிதர்களுக்கு நடைபாதை தேவைப்படுவதில்லை என்பதை. இந்த எண்ணங்கள் விநோதமானவை. மேலும் உங்கள் கடமை என்னவென்றால் உங்கள் குழந்தைகளை இத்தகைய கருத்துக்களுக்கு நகைக்க செய்யுமாறு கற்பிப்பதே ஆகும்." எனக்கூறினார்.

"நீங்கள் சொல்வது உண்மையாக இருக்கக்கூடும்" எனப் பதிலுரைத்த பூசாரி"ஆனால் நாங்கள் எமது முன்னோர்களின் வழக்கத்தையே பின்பற்றுகிறோம். நீங்கள் அந்த நடைபாதையை திறப்பீர்களானால் இதில் நாங்கள் சச்சரவு செய்ய எந்த அவசியமும் இல்லை. நான் எப்பொழுதும் சொல்வது என்னவென்றால் : பருந்திற்கும் உட்கார இடம் இருக்கட்டும் அதோடு கழுகுக்கும் உட்கார

இடம் இருக்கட்டும் (Let the hawk perch and let the eagle perch - இது ஆப்பிரிக்காவின் பழமொழிக்கு சமமானவாசகம்)" எனக் கூறி செல்வதற்கு எழும்பினார்.

"என்னை மன்னியுங்கள்' எனத் தொடர்ந்தார் அந்த இளம்தலைமையாசிரியர்

"ஆனால் பள்ளியின் மதில் சுவர்பக்கம் ஒரு பொது நடைபாதையாக்க முடியாது. அது எங்களின் ஒழுங்கு விதிகளுக்கு எதிரானது. எங்கள் வளாகத்திற்கு ஓரமாக இன்னொரு பாதையை நீங்கள் அமைத்துக் கொள்ளவே நான் பரிந்துரைக்கிறேன். அதை உருவாக்க எங்கள் பள்ளிமாணவர்களின் உதவியைக் கூட உங்களுக்கு அளிக்கிறேன். இப்படி ஒரு சுற்று வழியில் செல்வதை உங்கள் முன்னோர்கள் பாரமாகக் கருதமாட்டர்கள் என்றே பாவிக்கிறேன்."

"நான் சொல்வதற்கு வார்த்தைகள் ஒன்றும் இல்லை" என்ற முதிர்ந்த பூசாரி, அப்பொழுதே வெளியேறினார். இரண்டு நாட்கள் சென்றபின், அக்கிராமத்தில், ஒரு இளம் பெண் தன் பேறுகாலத்தில் இறந்தாள். உடனடியாக இது பற்றி கிராமத்து குறி சொல்பவரிடம் ஆலோசனை கேட்கப்பட்டது. நடைபாதை விஷயத்தில் அவமானப்படுத்தப்பட்ட முன்னோர்கள் சினந்தணிக்க பலமான வேட்டல் தேவைப்படுவதாக சிகிச்சைக் கூறப்பட்டது.

அடுத்த நாள் காலையில் ஒபி தன் வேலையின் அழிவு மத்தியில் விழித்தெழுந்தார். கிராமத்தினர் ஊடே சென்ற நடைபாதையில் மட்டுமல்லாது முழுப்பள்ளியின் சுற்றுப் புறத்தில் அழகான குறு மரவரிசைகள் முற்றிலும் சிதைக்கப்பட்டிருந்தது, பூத்துக் குலுங்கிய மலர்கள் மிதிக்கப்பட்டு இறந்திருந்தன, பள்ளியின் ஒரு கட்டிடம் தரை மட்டமாக்கப்பட்டிருந்தது. அதே நாளில், அந்த வெள்ளைக்கார பள்ளிஆய்வாளர், ஒபியின் பள்ளியை ஆய்வு செய்ய வந்து நிலைமை குறித்து மோசமான குறிப்பை எழுதியதோடு மட்டுமல்லாது, "புதிய தலைமையாசிரியருடைய ஆர்வக் கோளாறின் தவறான வழி காட்டுதலால், பள்ளிக்கும், கிராமத்திற்கும் இடையே ஒருகுல மரபுக்குழு போர் உருவாகியிருக்கிறது" என முக்கியமாகக் குறிப்பிட்டிருந்தார்.

யென்டில் என்னும் யெஷிவா இளைஞன்

ஐசக் பாஷ்விஷ் சிங்கர்

தமிழில் - செ. ஜார்ஜ் சாமுவேல்



அவளுடைய தந்தையின் இறப்பிற்குப் பின் யெநவ்வில் தங்கியருக்க யென்டில்லிற்கு காரணமெதுவும் இருக்கவில்லை. அவள் வீட்டினுள் தன்னந்தனியாக வசித்து வந்தாள். அவ்வீட்டிற்கு வாடகைக்கு குடிபுக பலர் விருப்பம் தெரிவித்திருந்தனர். கல்யாணத் தரகர்கள் லூப்ளின், டொமாசெவ், ஷாமோஸ் ஆகிய இடங்களிலிருந்து பேட்கப்பட்டட வரன்களோடு அவள் வீட்டின் கதவைத் தட்டியபடியேயிருந்தனர். ஆனால் யென்டில் திருமணம் செய்து கொள்ள விரும்பவில்லை. அவளுக்குள்ளாக இல்லை திருமணத்திற்கு பின் ஒரு பெண்ணிற்கு என்னதான் நேர்ந்துவிடப் போகிறது. அதற்குப் பின் உடனடியாக பொறுத்துப் போவதும், பணிந்து நடப்பதுமே தொடர்கதையாகி விடும். தன் பங்கிற்கு மாமியார் தனது அதிகாரத்தை நிலைநாட்ட ஆரம்பிப்பார். ஒரு சராசரியான பெண்ணின் வாழ்கையை வாழத் தான் தகுதியற்றவள் என்பது யென்டில்லிற்கு தெரிந்திருந்தது. அவளுக்கு உடைகளை தைப்பதற்கோ, கூடை முடைவதற்கோ, கண்டிப்பாகத் தெரியாது. அவளுக்கு பாலை தேவைக்கு அதிகமாக கொதிக்க வைப்பதற்கோ, உணவை கருக்கி கெட வைப்பதற்கோதான் தெரிந்திருந்தது. சாபத்பிட்டு என்றுமே அவளால் சரிவர சமைப்பட்டதில்லை. யென்டில் பெண்களுடையதை காட்டிலும் ஆண்களுடைய

செய்கைகளிலேயே அதிகம் ஆர்வம் காட்டத் தொடங்கினாள். அவளுடைய காலஞ்சென்ற தகப்பனார், ரெப் டொட்ரோஸ், அவருடைய ஆத்துமா சாந்தியடையட்டும், படுக்கையில் முடங்கிப் போன தனது இறுதிக் காலங்களில், மகனெனப் பாவிக்கப்பட்ட தனது மகளுடன் டோராவை வாசித்துக் கொண்டிருந்தார். அவர் யென்டில்லை ஜன்னல் திரைச்சீலைகளை மூடிவிட்டு, கதவை அடைத்து தாளிட்ட பின் தன்னருகே வந்து உட்காரச் சொல்வார். பின் இவ்விருவரும், பென்டா டியூச், மிஷ்னா, கெமாரா ஆகிய புனித நூல்கள் மற்றும் அதன் கருத்துரைகளில் ஆழ்ந்து விடுவார்கள். அவள் இதற்கேற்ற சரியான மாணவராக இருந்து வந்துள்ளார் என்பதே இவளது தந்தை அடிக்கடி கூறும் கருத்து.

யென்டில் நீ ஒரு ஆணின் ஆன்மாவைக் கொண்டிருக்கிறாய் என்பார்.

பின் எதற்காக நான் பெண்ணாய்ப் பிறந்தேன்?
என்ற அவளது கேள்விக்கு,

சில நேரங்களில் சுவர்க்கமும் கூட தனது பங்கிற்கு தவறு செய்ய நேர்ந்து விடுகிறது என்பார்.



அதில் எந்தவித சந்தேகத்திற்கும் இடமில்லை. யென்டில், யென்னவ்விலிருக்கும் மற்ற எந்த பெண்களையும், போலிருக்கவில்லை. மாறாக உயரமான, ஒல்லியான தேகமுடைய, சிறிய மார்பகங்களையும், குறுகிய இடையையும் கொண்டிருந்தாள். சாபத் (கிறித்துவரின் ஏழாம் நாள் - ஞாயிற்றுக்கிழமை) நாளின் மதிய வேளைகளில் அவளுடைய தந்தை உறங்க ஆரம்பித்த பின், அவருடைய காற்சட்டை, பட்டாலான மேலாடை, மென்பட்டுத் துணியாலான வெல்வெட் தொப்பி ஆகியவற்றை அணிந்து, கண்ணாடியினுள் பிரதிபலிக்கும் தனது உருவத்தை ஆராய்ந்து கொண்டிருப்பாள். அவள் கருமையான, அழகிய வடிவுள்ள ஆண்மகனாகத் தன்னை உணர்வாள். அதற்கேற்றாற்போல் அவளுடைய மேலுதடு சற்றே கீழ்ப்புறமாகத் தாழ்ந்திருக்கும். அவளுடைய அடர்ந்த பின்னஞ்சடைகளோ அவளுடைய பெண்மையை பறைசாற்றியபடியிருக்கும். ஆனால் அவை அளவிற்கு அதிகமாக வளரத் தொடங்கினால், உடனடியாக கத்தரிக்கப்பட்டுவிடும். இந்நிலையில் யென்டில் தனது மனதிற்குள்ளாக ஒரு திட்டத்தை வகுத்து இரவு பகலாக அதைப்பற்றியே சிந்திக்க தொடங்கியிருந்தாள். இல்லை, அவள் அடுக்களையில் களி வகைகளை செய்து கொண்டிருப்பதற்கும், போக்கிரித்தனமான பெண்களைப் போல் அரட்டை அடிப்பதற்கும், கறிக்கடைகளின் நீண்ட வரிசையில் நின்று கொண்டிருப்பதற்கும் படைக்கப்படவில்லை. அவளது தந்தை பலதரப்பட்ட யெஷிவாக்கள் (தால்முயூடிக் படிப்பகங்கள்) யூத மதகுருக்கள் ஆகியோரைப் பற்றி பல கதைகளை கூறி வந்துள்ளார். அவளது தலை முழுவதும் தால்முயூடிக் வாக்குவாதங்கள், கேள்வி பதில்கள் மற்றும் கருத்துரைகளால் நிரம்பியிருந்தது. ரகசியமாக, சில நேரங்களில் அவள் தனது தந்தையினுடைய நீண்ட குழாயின்வழியாக புகைப்பிடித்துக் கொண்டும் இருந்திருக்கிறாள்.

யென்டில் வீட்டுத் தரகர்களிடம் தன்னுடைய வீட்டை விற்றுவிட்டு காலீஷிலிருக்கும் தன்னுடைய அத்தையுடன் கூட இருந்துவிடப் போவதாக சொல்லியிருந்தாள். அவளுடைய அண்டை வீட்டுக்காரர்கள் இதைப்பற்றி அவளிடம் பேசுவதற்கு முற்பட்டனர். திருமணத் தரகர்கள் அவளுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்றனர். ஏனெனில் யெனவ் என்கிற இந்த ஊரிலேயே அவளுக்குப் பொருத்தமான வரன் கிடைக்குமென்ற நிலையில், அவள் ஏன் இதை புரிந்து கொள்ளவில்லை என்று கேள்வி எழுப்பினர். ஆனாலும் யென்டில் தனது பிடிவாதத்தைத் தளர்த்திக்

கொள்ளவில்லை. தன்னுடைய வீட்டை முதலில் விலைக்கு கேட்ட ஒருவருக்கு விற்றதுடன், அதனோடு கூட மற்ற தட்டுமுட்டு சாமான்களையும், இலவசமாக கொடுத்துவிட்டாள். இச்சொத்தின் மூலம் அவள் பெற்றதென்னவோ நூற்றி நாற்பது ரூபிள்கள் மட்டுமே. ஒரு புனித மாதமொன்றின் இரவில், ஒட்டுமொத்த யெனவ் மக்களும் தூக்கத்தில் ஆழ்ந்தபோது தனது உடைகள், புனிதத் தாயத்து மற்றும் சில புத்தகங்கள் ஆகியவற்றை தனது நாராலான கைப்பெட்டியினுள் வைத்துக் கொண்டு, ஓரப்ளினை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

பிரதான சாலையை அடைந்த அவள் சாயோசிற்குச் செல்லும் வண்டி ஒன்றினுள் ஏறி அமர்ந்தாள். இறங்கிய இடத்திலிருந்து மீண்டும் நடக்க ஆரம்பித்தாள். அவ்வழியில் எதிர்ப்பட்ட விடுதியில் தங்கும் பொருட்டு தனது பெயரை அன்ஷெல் என்று தெரிவித்தாள். அன்ஷல் இறந்து போன அவளுடைய மாமாவின் பெயராகும். அவ்விடுதி புகழ்பெற்ற யூத மதகுருக்களுடன் இணைந்து, கல்வி கற்க சென்று கொண்டிருந்த இளைஞர்களால் நிரம்பியிருந்தது. அவர்களிடையே புகழ்பெற்ற யெஷிவாக்களின் (யூத மதம் பற்றிய பாடங்களை கற்கும் இடம்) சாதக பாதகங்களைப் பற்றிய விவாதம் நடந்து கொண்டிருந்தது. சிலர் லித்யாணியாவிலுள்ள சிறப்புகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்க, மற்றொரு குழுவினர் போலந்திலுள்ள தரமான கல்வி மற்றும் தங்குமிடங்களைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தனர். வெற்றுப் பேச்சுகளில் மூழ்கியிருக்கும் பெண்களிலிருந்து அவர்களுடைய பேச்சு எவ்வளவு தூரம் வித்தியாசப் பட்டிருக்கிறது என்றுணர்ந்த அவள், அப்பேச்சினுள் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதற்கு சற்றேத் தயங்கினாள். அவள் இளைஞர்களிடம் தனியாக பழக நேர்ந்த சந்தர்ப்பங்களில் இதுவே முதல் முறையாகும். அவ்விளைஞர்களில் ஒருவன் எதிர்காலத்தில் தான் பெறப்போகும் வரதட்சணை திருமண இணைவு பொருத்தம் ஆகியவற்றைப் பற்றி பேசிக்கொண்டிருந்த அதே வேளையில், மேலும் சிலர் புயூரிமைச் சேர்ந்த யூத மதகுருவின் செயல்வகைகளை கேலி செய்ததுடன், தோராவிலிருக்கும் வாசிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட பகுதியை விவாதத்திற்கு உட்படுத்தி மிகக் கேவலமாக கிண்டலடித்துக் கொண்டிருந்தனர். ஒரு கட்டத்தில் அவர்களிடையே சண்டை மூளுவதற்கான அறிகுறி தென்பட்டது. இவர்களில் ஒருவன் மற்றொருவனை தனது முஷ்டியால் குத்துவதற்காக எழுந்தபோது, மற்றொருவன் தனது நண்பனின் கையை முறுக்கத் தொடங்கினான். இவர்களில் ரொட்டி மற்றும்

பால் அருந்திக் கொண்டிருந்த மாணவன் ஒருவன், கரண்டிக்குப் பதிலாக தனது பேனாக் கத்தியின் மூலம் பாலைக் கிளறிக் கொண்டிருந்தான்.

இதே வேளையில், அங்குக் குழுமியிருந்த குழுக்களில் ஒன்று நேராக யென்டிலை நோக்கி நகர்ந்து வந்து அவளுடைய தோளில் குத்தினார். ஏன் அமைதியாக இருக்கிறாய்? உன்னால் பேச இயலாதா? என்று கேட்டனர்.

எனக்கு சொல்வதற்கு ஒன்றுமில்லை என்றாள்.

உன்னுடைய பெயர் என்ன?

அன்ஷல்

நீ மிகவும் கூச்சப்படுகிறாய். என்றானொருவன்.

இளைஞனொருவன் யென்டில்லின் மூக்கைப் பிடித்து திருகினான். அவள் நினைத்திருந்தாள் அவனை அடித்திருக்க முடியும். ஆனால் ஏனோ அவளது கை அதற்கு ஒத்துழைக்கவில்லை. மற்ற எல்லோரையும் விட உயரமாக இருந்த மற்றொரு மாணவன் இவளுக்கு உதவும் பொருட்டு அவள் அருகில் வந்தான். வெளுத்த முகத்தோடிருந்த அவனது கண்கள் தீர்க்கமாகத் தோன்றியதுடன் கருநிற தாடியையும் கொண்டிருந்தான்.

ஏய் நீ எதற்கான அவனை தொல்லைப்படுத்துகிறாய்?

உனக்கு அவனைப் பிடிக்கவில்லையென்றால், அவனைப் பார்க்கத் தேவையில்லை.

நான் உனது கிருதாவை பிடித்து இழுக்க வேண்டும் என்று நினைக்கிறாயா? என்று கோபமாகக் கேட்டான்.

அங்கிருந்த தாடி இளைஞன் யென்டிலுக்கு ஊமைச் சைகை செய்து அவளை கூப்பிட்டு நீ எங்கிருந்து வருகிறாய், எங்கு போய் கொண்டிருக்கிறாய் என்று கேட்டான். அதற்கு யென்டில், தான் ஒரு அமைதியான யெஷிவாவைத் தேடிக் கொண்டிருப்பதாகச் சொன்னாள். இளைஞன் தனது தாடியை தடவியபடியே யோசிக்கத் தொடங்கினான்.

அப்படியென்றால் நீ என்னுடன் பெச்செவ்விற்கு வரலாம் என்றான்.

அவன் பெச்செவ்விற்கு தனது நான்காவது வருடப் படிப்பிற்காகத் திரும்பி கொண்டிருப்பதாகத் தெரிவித்தான். அவன் தற்போதிருக்கும் யெஷிவாவில் முப்பது மாணவர்கள் மட்டுமே படிப்பதாகவும், அவர்களுடைய உணவுத் தேவையை அந்த ஊர் மக்களே பார்த்துக் கொள்வதாகவும் கூறினான். மேலும் உணவு

தாராளமாக நிறைய பணமும், மாணவர்களின் உடைகளைத் துவைத்து, காலுறைகளைத் சரி செய்து அனைத்து வேலைகளையும் அவற்றிலுள்ள திறமையான பெண்களே கவனித்துக் கொள்வதாகச் சொன்னான். இக்குறிப்பிட்ட பெண்கோவிலுள்ள மருத்துவ மிகவும் அறிவுக்கூர்மை வாய்ந்தவர் என்றும், பத்து கேள்விகள் கேட்டபிறெகன்றால் அவற்றிற்கான பதிலை தன்னிடமுள்ள ஆதி ஆதாரத்தைக் கொண்டு விளக்கிவிடக் கூடியவர் என்றும். பெரும்பாலான மாணவர்கள் தங்களுக்கானத் துணைவியை இந்த ஊரிலேயே கண்டடைந்து விடுவர் என்றான். அதற்கு பெண்டிக்ஸ் நீ ஏன் ஒரு கல்வியாளனுடன் மத்தியிலே படிப்பை கைவிட நேர்ந்தது என்று கேட்டாள்.

எனது அப்பா இறந்ததால் கல்வியை தொடரமுடியாத நிலை இருந்தது. அதனால் தற்போது நான் நானே ஊர் திரும்பிக் கொண்டிருக்கிறேன் என்றான்.

உனது பெயர் என்ன? என்று கேட்டாள்.

அலிக்டார் என்று பதிலுரைத்தான்.

நீ ஏன் திருமணம் செய்து கொள்ளவில்லை.

அதற்கு அவ்விளைஞன் தனது தலையை சொறிந்தபடி அது ஒரு பெரிய கதை என்றான்.

தயவு செய்து சொல்லேன். கேட்போம். என்றாள்

கண்களை மூடியபடி சிறிது நேரம் சிந்தித்த அலிக்டார் நீ என்னுடன் பெண்கோவிற்கு வருகிறாய் தானே என்று கேட்டான்.

ஆமாம் என்றாள்.

பின் சீக்கிரமாக அதைப்பற்றி உனக்கு முழுமையாகத் தெரிந்துவிடும். ஊரிலேயே மிகப் பெரிய பணக்காரரான ஆல்டர் விஞ்கோவர் என்பவருடைய மகளுக்கும் எனக்கும் திருமண நிச்சயதார்த்தம் நடந்து முடிந்திருந்தது. திருமண தேதி முடிவாகியிருந்த நிலையில், திடீரென்று நிச்சயதார்த்திரத்தை திருப்பி அனுப்பிவிட்டனர்.

எதற்கென்று தெரியவில்லை. எளிதாகப் பரவும் வதந்திகள் தான் காரணமாக இருந்திருக்கும். இதனால் பாதி வரதட்சணையை நான் கேட்டுப் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் அது என் சுபாவத்திற்கு அப்பாற்பட்டது. தற்போது அவர்கள் எனக்கு வேறொரு துணையை திருமணம் முடிக்க பேசிக் கொண்டிருக்கிறார்கள். அக்குறிப்பிட்ட பெண் எனக்கு ஏற்றத் துணையாக இருக்கமாட்டாள் என்று எண்ணுகிறேன்.

பெச்சோவ் பெண்களை யெஷிவா இளைஞர்கள் பார்ப்பதுண்டா? என்று கேட்டாள்.

ஆமாம் ஆல்டர் அவர்களின் வீட்டில் வாரத்திற்கொருமுறை நான் அவர்களின் வீட்டில் உணவருந்தச் சென்றிருக்கிறேன். ஹாடாஸ் என்கிற அவருடைய மகள் தான் எங்களுக்கு உணவு பரிமாறுவாள்.

அவள் அழகான தோற்றமுடையவளா?

அவள் பொன்னிற கேசத்தையுடையவள்

கருமைநிற முடி உடையவர்களும் அழகானவர்கள்தான் என்றாள்.

இல்லை என்றான் அவன் யென்டில் அவிக்டாரைப் நேராகப் பார்த்தாள். அவன் மிகவும் ஒல்லியானவனாகவும், குழி விழுந்த கன்னங்களையும் பெற்றிருந்தான். அவனுடைய கிருதா நீலநிறமாகத் தோன்றினாலும் கருநிறத்தையேக் கொண்டிருந்தது. அவனது புருவங்கள் மூக்கின் மேற்புறம் வரை வளைந்து நீண்டிருந்தன. அவன் தற்போதான் ஒரு ரகசியத்தை அறிந்தவன் போல் அவளை கூர்ந்து நோக்கினாள். அவன் உடுத்தியிருக்கும் யூதமேலாடை வாடகைக்கு எடுத்ததாகத்தானிருக்கும் என்று அவள் கண்டிப்பாக எண்ணினாள். அவன் தொடர்ச்சியாக மேசையில் தட்டியபடி ஏதோவொரு ராகத்தை முணுமுணுத்துக் கொண்டிருந்தான். அவன் புருவத்தை நெறிக்கையில் ஏதோ யோசித்துக் கொண்டிருக்கிறான் என்பது மட்டும் புலப்பட்டது. திடீரென பேசத் தொடங்கினாள்.

அதனாலென்ன, நன்று, நான் தனியாகவே இருந்து விட்டுப் போகிறேன்.

யென்டில் அல்லது அன்ஷல் என்கிற இவள் பெசேவ்விற்கு வந்து சேர்ந்த போது அவிக்டாரோடு முன்பு திருமணம் நிச்சயிக்கப்பட்டு பின்னர் திருமணம் முறிந்துபோன பெண்ணின் தந்தையான ஆல்டர் விஷ்கோவரின் வீட்டில், வாரவிடுமுறை உணவருந்தும் சூழ்நிலை ஏற்பட்டது எதிர்பாராத ஒன்று தான்.

யெஷிவாவில் பயின்ற மாணவர்கள் ஜோடியாக இணைந்து கல்வி கற்றனர். இதனால் அவிக்டார் தனது இணையாக அன்ஷிலை தேர்ந்தெடுத்தான். அவளது பாடங்களில் அவளுக்கு உதவினான். அவன் நீச்சலில் அதிக திறம் பெற்றிருந்ததால், அவளுக்கும் அதை கற்றுத் தருவதாகக் கூறினான். ஆனால் அவளோ ஒவ்வொரு முறையும் ஆற்றுக்கு வருவதை பல்வேறு காரணங்களைச் சொல்லி தவிர்த்து வந்தாள். அவிக்டார் தன்னோடு தங்குமாறு அவளைக்

கேட்டுக் கொண்ட போதும், அவள் அதைத் தவிர்த்து ஒரு அரைக்குருடான வயதான விதவையுடன் தங்குவதற்கு ஏற்பாடு செய்து கொண்டாள். ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் அன்ஷல், ஆல்டர் விஷ்கோவரின் வீட்டில் உணவருந்தும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையால், ஹாடாஸ் அவளின் வரவுக்காக காத்துக் கொண்டிருப்பாள். அவிக்டார் ஹாடாஸைப் பற்றிப் பல கேள்விகளை கேட்டப்படி இருப்பான். ஹாடாஸ் எப்படியிருக்கிறாள்? அவள் கலையாகத் தோன்றுகிறாளா? மகிழ்ச்சியாக இருக்கிறாளா? அவளைத் திருமணம் செய்து கொடுக்க முயல்கிறார்களா? அவள் எப்போதாவது எனது பெயரைக் குறிப்பிட்டிருக்கிறாளா? என்று கேட்பான். அதற்கு அன்ஷல், ஹாடாஸ் அடிக்கடி உணவுப் பாத்திரங்களை மேசையில் தவறவிட்டு விடுவதாகவும், உப்பு கொண்டு வரக்கூட மறந்துவிடுவதாகவும், அழுக்குப் பாத்திரங்களினுள் தன்னுடைய விரல்களை மிதக்க விட்டபடியே சுமந்து செல்வதாகவும் தெரிவித்தாள். ஹாடாஸ் பெரும்பாலும் கதைப் புத்தகங்களினுள் மூழ்கிவிடுவதால் தன்னுடைய வேலைக்காரியையே வேலை செய்யச் சொல்வாள். மேலும் வாரத்திற்கொருமுறை தனது சிகையலங்காரத்தையும் மாற்றிக்கொள்வாள் என்றாள். மேலும், அவள் ஒன்றும் அத்துனை அழகாக தோன்றாவிட்டாலும், தன்னைத் தானே மிக அழகானவளாகக் கருதுவதால் பெரும்பாலான நேரத்தை கண்ணாடி முன் நிற்பதில் செலவழிப்பாள்.

கல்யாணமாகி இரண்டாண்டுகளுக்குப் பின் கண்டிப்பாக வயது முதிர்ந்தவளாகவே தோன்றப்போகிறாள் அவள் என்றாள் அன்ஷல்.

அவள் உனக்கு அழகாகப் படவில்லையா? என்று கேட்டான்.

அதற்கு அவள் அவ்வளவு அழகாகத் தெரியவில்லை என்பாள்.

ஒருவேளை அவள் உன்னை விரும்பத் தொடங்கினால், நீ அவளை நேசிக்கத் தொடங்கிவிடுவாயா? என்று கேட்டான்.

எனக்கு அவள் ஒன்றும் அத்தனை முக்கியமாகப்படவில்லை.

உனக்கு இம்மாதிரியான துர்ச்சிந்தனைகளே தோன்றுவதில்லையா? என்றான் அவன்.

இவ்விரண்டு நண்பர்களும் ஒரே சாய்மேசையை படிப்பகத்தில் பகிர்ந்து கொண்டாலும், கற்றுக் கொள்வதைத் தாண்டி உரையாடுவதிலேயே அதிக நேரத்தைக் கழித்தனர். எப்பொழுதாவது அவிக்டார் புகைக்க நேரிடுகையில், அன்ஷல்



அவன் வாயிலிருந்த சிகரெட்டை எடுத்து புகைக்க ஆரம்பிப்பாள். அவிக்டார் வேகவைத்த சதுர வடிவ கோதுமை கேக்குகளை அதிகம் விரும்புவான். அதனால் அன்ஷல் ஒவ்வொரு நாள் காலையிலும் அடுமனைக்குச் சென்று ஒரு கேக்கை அவனுக்காக வாங்கித் தருவாள். அவள் எப்பொழுதுமே அவனது பங்கிற்கான பணத்தை செலவழிக்க விட்டதில்லை. இதைப் போல அவிக்டாருக்காக பல ஆச்சரியகரமான விஷயங்களை அன்ஷல், தொடர்ச்சியாக செய்து வந்தாள். உதாரணத்திற்கு, ஒருவேளை அவிக்டாரினுடைய கோட் பட்டன் கழன்று வந்துவிட்டால், மறுநாளே அன்ஷல் ஊசி மற்றும் நூலோடு தைப்பதற்குத் தயாராக பாடசாலைக்கு வந்துவிடுவாள். பட்டாலான கைக்குட்டை, ஒரு ஜோடி காலுறைகள், கழுத்துப்பட்டை ஆகிய வெவ்வேறு விதமான பரிசுப் பொருட்களை அவிக்டாருக்காக, அன்ஷல் வாங்கி பரிசளிப்பது வழக்கமாகிப் போனது. அவிக்டாரும் தன்னை விட ஐந்து வயது குறைந்த, மீசையே அரும்பாத இந்த இளைஞனிடம் மிகுந்த பற்றுதலாயிருந்தான். ஒருமுறை அவிக்டர், அன்ஷாலிடம் நீ ஹாடாஸை திருமணம் செய்து கொள்ளவேண்டுமென்று நான் விரும்புகிறேன் என்றான்.

இதனால் உனக்கு என்ன பயன் நேரப்போகிறது? என்றாள் அன்ஷல்.

முகம் தெரியாத வேறொரு நபரைக் காட்டிலும், நீ பொருத்தமானவளாக இருப்பாய் என்பதால்தான் என்றான்.

அப்படி நடந்ததென்றால் நீ எனது எதிரியாகிவிடுவாய் என்பாள்.

கண்டிப்பாக இல்லை. என்றான் அவிக்டார். ஊரைச் சுற்றி காலாற நடப்பது அவிக்டாருக்குப் பிடித்தமான விஷயமாக இருந்தது. இந்த சந்தப்பங்களிலெல்லாம் அன்ஷல் அவனுடனே இருந்தாள். தீஷி உரையாடலில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டபடி

நீர் இறைக்கப்படும் கிணற்றிற்கு அருகாமையில் உள்ள சாலையின் வழியாக நடந்து பைன் மரக்காடுகளினூடாக பயணித்து முச்சந்தியில் அமையப் பெற்ற பழங்காலத்து கிறித்துவ மடாலயத்தை அடைவார்கள். சில நேரங்களில் புல்தரையில் காலை நீட்டி இளைப்பாருவதுமுண்டு.

ஒருமுறை அவிக்டார் வானத்தை நோக்கிப் பார்த்தப்படி ஒரு பெண் ஏன் ஆணைப் போல் இருக்கக்கூடாது? என்று கேட்டான்.

நீ என்ன சொல்ல வருகிறாய்? என்று கேட்டாள்.

ஹாடாஸ் ஏன் உன்னைப்போல் இருக்கக்கூடாது என்றான்.

ஆமாம் உன்னைப் போல நல்ல விதமாக என்றான்.

அப்போது அன்ஷல் அருகிலிருந்த பூ ஒன்றை பறித்து, ஒவ்வொரு இதழாக பிய்க்கத் தொடங்கினாள். பின்னர் அவள் செந்தவிட்டுநிற கொட்டை ஒன்றை எடுத்து அவிக்டாரின் மேல் விளையாட்டாக வீசினாள். பின்னர் தன்னருகே கடந்து சென்ற விட்டில் ஒன்றை உள்ளங்கையில் எடுத்து வைத்து ஆராயத் தொடங்கினாள்.

சிறிது நேரம் கழித்து பேசத் தொடங்கிய அவன் அவர்கள் எனக்கு திருமணம் முடித்து வைக்க முயற்சிக்கிறார்கள் என்றான்.

உடனடியாக நிமிர்ந்து உட்கார்ந்த அன்ஷல்

யாருடன் என்று கேட்டாள்

பெய்டல் என்பவரின் மகளான பெஷேவுடன் என்றான்.

அந்த விதவைப் பெண்ணுடனா?

ஆமாம். அவளேதான்

நீ ஏன் ஒரு விதவைப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும்?

மற்ற எவரும் என்னை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை என்றான்.

அது உண்மை இல்லை. யாராவது ஒருவர் உன்னை கண்டிப்பாக விரும்புவார்கள் என்றாள்.

அது நடக்கப் போவதில்லை.

கண்டிப்பாக அவிக்டாருக்கு ஏற்ற துணை அவள் இல்லை என்பதாக அன்ஷல் கூறினாள். பெஷே அழகற்றவளாக

இருந்ததோடு மட்டுமல்லாமல் முட்டாளும் கூட. மேலும் ஒரு ஜோடி கண்களை மட்டுமேயுடைய மாட்டைப போன்ற தோற்றமுடையவள் அவள். அதிர்ஷ்டம் கெட்ட அவள், திருமணமான ஒரே வருடத்தில் தனது கணவனை பறிகொடுத்தவள். இத்தகைய பெண்கள் கணவரையே கொல்லக்கூடிய குணாதிசயம் கொண்டவர்கள். அற்கு அவிக்டார் பதிலெதுவும் சொல்லவில்லை. அவன் சிகரெட் ஒன்றை பற்றவைத்து, ஆழமாக புகையை உள்ளிழுத்து காற்றில் சின்னஞ்சிறு வளையங்களாக வெளியிட்ட போது அவன் முகம் சற்றே புத்துணர்ச்சியடையத் தொடங்கியிருந்தது.

எனக்கு ஒரு பெண் தேவைப்படுகிறாள், அப்படியொருத்தி இல்லையெனறால் என்னால் இரவில் உறங்க முடியாது என்றான்.

திகைப்படைந்த அன்ஷல் உனக்கேற்ற துணையமையும் வரை நீ ஏன் காத்திருக்கக் கூடாது? என்ற போது,

ஹாடாஸ் தான் என்னுடன் வாழத் தீர்மானிக்கப்பட்டவள் என்று எண்ணுகிறேன், என்றாள்.

இதைச் சொன்ன போது சற்றே கண்கலங்கிய அவிக்டார், திடீரென எழுந்து நின்றபடி ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது போதும், நாம் கிளம்பலாம் என்றான்.

அதற்குப்பின் அனைத்தும் மிக வேகமாக நடந்தேறியது. மற்றொரு நாள் அவிக்டார் இவ்விஷயங்களைப் பற்றி அன்ஷலிடம் சொல்லிக் கொண்டிருந்தான். இதற்கு இரண்டு நாட்களுக்குப் பின், அவனுக்கும் பெஷெவிற்குமிடைய திருமண நிச்சயதார்த்தம் முடிந்துவிட்டிருந்தது. அவன் பெஷிவாவிற்கு ஹனிசூகக், பிராந்தி சகிதமாக வந்திருந்தான். அதைத் தொடர்ந்து சீக்கிரமாகவே அவர்களுடைய திருமண தேதி முடிவு செய்யப்பட்டது. மணப்பெண் விதவையாக இருந்ததினால் ஆடையணிமணிகளுக்காக காத்திருக்கும் நிலை ஏற்படவில்லை. அனைத்தும் தயார் நிலையிலிருந்தது. மேலும், மணமகனும் அனாதையாக இருந்ததினால் யாருடைய அறிவுரைக்கும் காத்திருக்கும் நிலை ஏற்படவில்லை. யெஷிவா மாணவர்கள் பிராந்தியை அருந்தியவாறே தங்களுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டிருந்தனர். அன்ஷல் தன் பங்கிற்கு சிறிதளவு பிராந்தியை உறிஞ்சிக் கொண்டிருந்தபோது சற்றே விக்கலெடுக்கத் தொடங்கியது.

இது தொண்டைக்குள் மிகவும் எரிகிறது என்றாள்.

அதற்கு அவிக்டார் இன்னமும் நீ இதற்கேற்ற ஆண் மகனாக மாறவில்லை என்று கேலி செய்தான்.

கொண்டாட்டத்தைத் தொடர்ந்து இவ்விருவரும் புனித நூலான கெமாராவிலிருந்து சில பகுதிகளை விவாதிக்கத் தொடங்கினர். ஆனால் அவர்களுடைய பேச்சு மிகவும் மந்தமாகவே நகர்ந்தது. அவிக்டார் தன்னுடைய தாடியை நீவியபடியே சற்று தடுமாற்றத்துடன் ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தான்.

அவளை உனக்குப் பிடிக்கவில்லையென்றால், பின் ஏன் அவளைத் திருமணம் செய்து கொண்டாய்? என்றாள்.

அதற்கு அவன், நான் ஒரு பெண் ஆட்டைக் கூட திருமணம் செய்துக் கொண்டிருக்கலாம் என்றான். இதற்கு அடுத்த நாள் அவிக்டார் படிப்பகத்திற்கு வரவில்லை. ஹசிடிஸமைச் சேர்ந்த தோல் வியாபாரியான அவிக்டாரின் மாமனார் பெய்டில், தன்னுடைய மருமகன் ஹசிடிக் வழிபாட்டு மன்றத்தில் படிப்பைத் தொடருவதையே விரும்பினார். யெஷிவாவைச் சேர்ந்த மாணவர்கள், அவிக்டாரின் மனைவி குள்ளமானத் தோற்றத்துடன் கூடிய பீப்பாய் போன்ற உடலமைப்புக் கொண்டவள் என்றும், அவளுடைய தாய் ஒரு பால் வியாபாரியின் மகள் என்றும், முட்டாள்தனமான தந்தையைக் கொண்டவள் என்றும், மொத்த குடும்பமே பணத்தாசைப் பிடித்தவர்கள் என்று ரகசியமாகத் தங்களுக்குள் உரையாடிக் கொண்டிருந்தனர். பெய்டில் ஒரு தோல் தொழிற்சாலையில், தொழில் பங்காளியாக முதலீடு செய்திருந்தார். பெஷே தனது வரதட்சணைப் பணத்தை கடல்மீன், தார், மண்பானை, மற்றும் பாத்திரங்கள் விற்கும் கடையொன்றில் முதலீடு செய்திருந்தார். இவ்விடம் எப்போதும் ஊர் விவசாயிகளால் நிரம்பியிருந்தது. தந்தை, மகள், இவ்விருவரும், அவிக்டாருக்கு ஏற்ற தோல் மேலாடை, மென்பட்டுச் சட்டை, இரண்டு ஜோடி காலணிகள் ஆகியவற்றை வாங்கி வைத்திருந்தனர். கூடுதலாக மேலும் பல பரிசுப் பொருட்கள் அவனுக்கு கிடைத்தன. பெஷேவின் முதல் கணவருடைய வில்மா பதிப்பான தால்மியூட் புத்தகம், ஒரு தங்க கடிகாரம், மெழுகுவர்த்தித் தண்டு, நறுமணப்பெட்டி ஆகியவையும் அதில் அடங்கும். அன்ஷல் படிப்பக சாய் மேசையில் தனியாக அமர்ந்திருந்தாள்.

செவ்வாய்கிழமையன்று ஆல்டர் விஷ்கோவர் வீட்டிற்குச் சென்ற அன்ஷலிடம், ஹடாஸ், உன்னுடைய படிப்பகத் தோழர் க்ளோவருக்குத் திரும்பிவிட்டானா? என்று விசாரித்தாள்.

யாருமே அவனை விரும்புவதில்லை. பின்னர் ஏன் அவனைப் பற்றி கேட்கிறாய்? என்றாள் அன்ஷல். அதற்குப் பதிலளித்த ஹடாஸின் முகம் சிவந்திருந்தது. நான் அதற்கு காரணமில்லை எனது தந்தைக்கு தான் அவனைப் பிடிக்கவில்லை. என்றாள்.

என்னால்?

அவனுடைய சகோதரன் ஒருவன் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டதை எனது கணவர் அறிந்தவர் தான் என்றாள்.

அன்னை [illegible] ஒட்டிய கன்னத்துடன் நீண்ட கழுத்தோடு உயரமாக நின்றிருந்த பொன்னிற கேசமுடைய ஹுடானை உற்று நோக்கினாள். அவன் பருத்தியிலான மேலாடையை அணிந்திருந்தான். அவனது முடி இரட்டைப் பின்னலாகக் முதுகுக்குப் பின்னால் தொங்க விடப்பட்டிருந்தது. நான் ஆணாகப் பிறந்தது மேலான விஷயம் தான் என்று அன்னை எண்ணினாள்.

நீ அதைக் குறித்து வருத்தப்படுகிறாயா? என்று அன்னை அவனிடம் கேட்ட போது ஆமாம் என்று பதிலளித்தான். ஹுடான் அவ்விடத்திலிருந்து உள்ளறைக்கு சென்றுவிட்டான். பின்னர் மீதமிருந்த உணவு, கறி உருண்டைகள், தேநீர் ஆகியவை வேலைக்காரப் பெண்ணால் பரிமாறப்பட்டது. அவள் சாப்பிட்டுவிட்டு இறுதியாக விடை பெற எண்ணியபோது ஹுடான் அவள் முன் மீண்டும் தோன்றினான்.

ஹுடான் உணவு மேசைக்கருகில் நெருங்கி வந்து மெதுவான குரலில் சத்தியமாக நீ நான் சொல்வதை யாரிடமும் பகிர்ந்து கொள்ளக்கூடாது. என் மனதில் என்ன ஒளிந்து கிடக்கிறது என்பதை அவள் ஏன் அறிந்து கொள்ள முற்படுகிறாள்? என்று கேட்டான்.

பின்னர் மீண்டும் அவள், வாயிற்படியில் தடுக்கி விழுவது போல வேகமாக ஓடினாள்.

[illegible] தலைமையாசிரியர் அன்னையிடம் வேறொரு படுக்கைத் துணையைத் தேடிக்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். ஆனால் வாரங்கள் கடந்த பிறகும் அன்னை தனியாகவே படுக்கத் தொடங்கினாள் அவிட்டாவின் இடத்திற்கு தகுதியான ஒருவரும் அப்பகுதியில் இருந்திருக்கவில்லை. அங்குள்ள அனைவரும் உடல் மற்றும் மனதளவில் சிறியவர்களாகவே தோன்றினர். அவர்கள் முட்டாள்தனமாகப் பேசுவதிலும், விளையாட்டுத்தனமான காரியங்களில் ஈடுபடுபவர்களாகவும் எல்லோரையும் விட தாங்களே மேம்பட்டவர்கள் என்கிற எண்ணம் உடையவர்களாகவும் இருந்தனர். அவிட்டா இல்லாத அந்த இடம் வெறுமையாகக் காட்சியளித்தது. தூக்கத்தை இழந்த அன்னை தன்னுடைய அறையில் அமைந்துள்ள பெஞ்சில் உறங்க முயற்சித்தாள். பெண்ணுக்கேயுரிய தனது ஆடையணிகலன்களைத் துறந்து, மற்றொரு பெண்ணுடன் நிர்வாணமாக ஒருவரின் காதலியாக [illegible] மனைவியாக [illegible]



மீண்டும் பெண்டிலாக மாறியிருந்தாள். தான் அவனிடம் உண்மையைச் சொல்லியிருக்க வேண்டும் என்று அன்ஷெல் நினைத்தாள். ஆனால் இப்போது காலம் கடந்துவிட்டது. புத்தகங்கள் மற்றும் படிப்பகத்தைத் தவிர்த்து அன்ஷெல் மீண்டும் பெண்ணாக மாறுவதற்கு வாய்ப்பேயில்லை. அவளது அமைதியைக் குலைக்கும் இத்தகைய எண்ணங்கள் அவளை பித்துப்பிடித்த நிலைக்கேத் தள்ளிவிடும். தூக்கத்திலாழ்ந்த அவள், விழித்தெழுந்த போது தன்னெதிரே ஒரு புதிய துவக்கம் காத்துக் கொண்டிருப்பதை உணர்ந்தாள். அவளது கனவில் அவள் ஒரே நேரத்தில் ஆண் மற்றும் பெண் உருவில் வாழ்வதாகக் கண்டாள். அந்நிலையில் அவள் பெண்ணின் உள்ளாடைகளையும், ஆணின் மேலாடைகளையும் அணிந்திருப்பதாக உணர்ந்தாள். பெண்டிலின் மாதவிலக்கு தள்ளிபோயிருந்ததால் சிறிது கலக்கமுறவே செய்தாள்.

யாருக்கு என்ன நடந்தது என்று தெரியும்?

அவள் மெட்ராஷ்டால்போயித் என்னும் புனித நூலில், ஓர் ஆணை கற்பனையில் விரும்பியதால் மட்டுமே கர்ப்பமுற்ற ஒரு பெண்ணைப் பற்றி வாசித்திருந்தாள். எதிர்ப்பாலினத்தின் உடைகளை அணிவது ஏன் தோராவில் குற்றமாக சொல்லப்பட்டிருக்கிறது என்பதன் பொருளை அவள் இப்போதுதான் உணரத் தொடங்கினாள். இப்படி செய்வதினால் ஒருவர் மற்றவர்க்கு மட்டுமல்லாமல் தனக்கும் தீங்கிழைத்துக் கொண்டிருக்கிறார். இந்த ஆன்மா குழப்பமடைந்திருந்த போதிலும், இவ்வினோதமான உடம்போடு ஒத்த பிறவியெடுத்திருக்கிறது.

அன்ஷெல் இரவு முழுவதும் விழித்திருந்தபடியால் பகலில் முழித்திருப்பது மிகவும் கஷ்டமாகத் தோன்றியது. அவள்

உணவருந்திய வீடுகளிலுள்ள பெண்கள், அவள் சரியாக சாப்பிடாமல் தட்டில் உணவை மீதம் வைத்துவிடுகிறாள் என்று புகார் செய்தனர். வகுப்பு நடைபெறுகையில் பாடங்களைக் கவனிக்காமல் அன்ஷல் சன்னலுக்கு வெளியே பார்த்தபடி தனது தனிப்பட்ட நினைவுகளில் புதைந்து போவதை மகரு கண்டுகொண்டார். செவ்வாய்க்கிழமையன்று அன்ஷல் வழக்கம் போல் விஷ்கோயரின் வீட்டிற்கு இரவு உணவிற்காக வந்து சேர்ந்தாள். ஹடாஸ் சூப் பாத்திரத்தை அவள் முன்பாக வைத்து காத்திருந்த போதும், கலங்கிய நிலையிலிருந்த அன்ஷல் நன்றி சொல்வதற்கும்கூட மறந்து போனாள். அவள் கரண்டிக்காகக் கையை நீட்டிய அதே வேளையில் கரண்டியை தவறவும் விட்டுவிட்டாள். ஹடாஸ், அன்ஷலிடம் அவிக்டார் உன்னை பாழ்படுத்திவிட்டான் என்றுதான் கேள்விப்பட்டதை தைரியமாகச் சொன்னாள்

திடீரென சுயநினைவிற்கு திரும்பிய அன்ஷல் எதைப் பற்றி பேசுகிறாய் நீ என்று கேட்டாள்.

படிப்பகத்தில் அவன் இனி மேலும் உதை கூட்டாளியாக இருக்கப்போவதில்லை.

அவன் யெஷிவாவை விட்டுச் சென்றுவிட்டான்.

உன்னால் அவனை மீண்டும் பார்க்க முடியும் என்பதாகத் தோன்றவில்லை.

அவன் எங்கோ மறைந்து கொண்டுவிட்டான்.

அவனது திருமணத்திற்காகவது நீ செல்வாயா? என்று அடுக்கடுக்கான கேள்விகளை ஹடாஸ் அன்ஷலிடம் கேட்டாள்.

ஏதோ சிறிது நேரம், வார்த்தைகளையே மறந்துவிட்டது போல் அமைதியாக இருந்த அன்ஷல் அவன் ஒரு பெரிய முட்டாள் என்றாள்.

எதற்காக நீ அப்படி சொல்கிறாய்? என்றால் ஹடாஸ்.

நீயோ அழகானவள், ஆனால் அவனுக்குக் கிடைக்க அந்தப் பெண்ணோ குரங்கைப் போன்றத் தோற்றமுடையவள் என்றாள் அன்ஷல். அதைக்கேட்டு முகம் சிவந்த ஹடாஸ் இவையனைத்திற்கும் எனது தந்தைதான் காரணம் என்றாள்.

கவலைப்படாதே உனக்கேற்ற துணையை நீ கண்டிப்பாக கண்டடைவாய் என்றாள் அன்ஷல்.

எனக்கும் யாரும் தேவையில்லை.

ஆனால் அனைவரும் உன்னைத்தான் விரும்புகிறார்கள் என்றால் அன்ஷல்.

பின் இவ்விருவரிடையேயும் மௌனம் நிலவியது. ஆற்றாமையின் வலி ஹடாஸின் கண்களில் பிரதிபலித்தது.

ஹடாஸ் உனது சூப் ஆறிக்கொண்டிருக்கிறது என்றாள்.

நானும் கூட உன்னை விரும்புகிறேன் என்றாள் அன்ஷெல்.

திடீரெனத் தான் உதிர்த்த வார்த்தைகளைக் குறித்து தனக்குத் தானே அதிர்ச்சியடைந்து போனாள் அன்ஷெல். ஹடாஸும் ஆச்சரியததில் வாயடைத்துப் போனாள்.

என்ன சொல்கிறாய் நீ

உண்மையைத் தான் சொல்கிறேன்.

யாராவது கேட்டுவிடப் போகிறார்கள்.

நான் அதற்கொன்றும் பயப்பட போவதில்லை என்றாள் அன்ஷெல்.

சூப்பை குடித்துக் கொண்டிரு. அதற்குள் கறி உருண்டைகளை கொண்டு வந்து வருகிறேன் என்று சொல்லியபின் உள்ளே சென்ற ஹடாஸின் காலணி படபடக்கும் ஓசை கேட்டது. அதே வேளையில் சூப்பினுள் பீன்ஸைத் தேடிக் கொண்டிருந்த அன்ஷெல் ஒன்றைக் கையிலெடுத்து மீண்டும் கீழே தவறவிட்டாள். இதனிடையே பசியும் அவளை விட்டு பறந்து போயிருந்தது. அவள் தான் ஒரு தீங்கான விஷயத்திற்குள் மெதுமெதுவாக நுழைந்து கொண்டிருப்பதை அறிந்திருந்தாலும், ஏதோவொரு சக்தி அவளை தூண்டிக் கொண்டிருந்தது. இதனிடை ஹடாஸ் ஒரு தட்டில் இரண்டு கறி உருண்டைகளை வைத்தபடி இவளை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தாள்.

நீ ஏன் உணவருந்த தயங்குகிறாய்? என்று கேட்டாள்.

அதற்கு அன்ஷெல் நான் உன்னைப் பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன் என்றாள்.

நான் உன்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன் என்றாள்.

இதைக் கேட்ட ஹடாஸின் முகம் ஏதோவொன்றை விழுங்கிவிட்டது போல் தோற்றமளித்தது.

இம்மாதிரியான விஷயங்களை நீ என் அப்பாவிடம்தான் பேச வேண்டும் என்றாள் ஹடாஸ்.

அதற்குப் பதிலளித்த அன்ஷெல் எனக்குத் தெரியும்/ திருமணப் பொருத்தம் பார்ப்பவரை அனுப்புவதுதானே வழக்கம் என்றாள்.

அவ்வறையிலிருந்து வெளியே ஓடிய ஹடாஸ் அவளுக்கெதிரேயுள்ள வாயிற் கதவை சத்தமாக அடித்து மூடினாள். தனக்குள்ளாகவே சிரித்துக் கொண்ட அன்ஷெல் இப்பெண்களுடன் தன்னாலும் மிக எளிதாக விளையாட முடிகிறது என்று எண்ணிக்கொண்டாள். அவள் சூப்பினுள் மிளகு மற்றும் மிளகுத்தூளை தூவினாள். அங்கு மிகவும் சாவகாசமாக

உட்கார்ந்திருக்க அன்ஷெல், எனக்கு என்ன ஆயிற்று? நான் ஏன் இப்படி இறுக்குக்கனமாக நடந்து கொள்கிறேன்? என்று நினைக்கலானான். இதற்கு எந்தவித விளக்கமும் கிடையாது. அவன் வலுக்கட்டாயமாக உணவருந்தத் தொடங்கியதால் எந்தவித ருசியும் அவனுக்குப் புலப்படவில்லை. அந்த வேளையில் தான் அவிகடோர் ஹடாஸை திருமணம் செய்ய விரும்பினான் என்பதை நினைவு கூர்ந்தான். இக்குழப்பத்திற்கிடையே அவனுக்கு ஒரு திட்டம் உதித்தது. அவன் அவிக்டோரை பழிதீர்த்துக் கொள்ளும் அதே வேளையில், ஹடாஸ் மூலம் அவளைத் தன்னருகே எளிதாக நெருங்கி வரச் செய்துவிட முடியும் என்று நம்பினான். ஹடாஸ் கன்னிகழியாத பெண். அவளுக்கு ஆண்களைப் பற்றி என்ன தெரியும்? அவளைப் போன்ற பெண்கள் நீண்ட நாட்களாக முட்டாளாக இருக்க வேண்டியதுதான். அதே வேளையில் அன்ஷெலும்கூட கன்னிகழியாத பெண்தான். ஆனால் அன்ஷெல் யெஷிவாவிலுள்ள ஆண்கள் இவ்விஷயங்களைப் பேசுவதை பலமுறை கேட்டிருக்கிறாள். இதன் மூலம் அன்ஷெல் ஒரு ஒட்டுமொத்த சமூகத்தையே முட்டாளாக்கப் போகிறோம் என்று எண்ணிய போது ஒருசேர பயம், மகிழ்ச்சி என்ற இரண்டு மனநிலைக்கிடையே தவித்து வந்தாள். ஏனோ பொதுமக்கள் முட்டாள்களே என்ற பழமொழி அவள் மனதிற்குள் தோன்றியது. அவள் எழுந்து நின்று நான் உண்மையிலேயே ஒரு விஷயத்தை துவங்கப் போகிறேன் என்று உரக்கக் கத்தினாள்.

அன்றிரவு அன்ஷெல் ஒரு நொடிகூட கண்ணயரவில்லை. ஒரு சில நிமிடங்களுக்கொருமுறை எழுந்து தண்ணீர் அருந்தினாள். அவளது தொண்டை வறண்டு போயிருந்தது. முன் தலையும் கொதிக்க ஆரம்பித்தது. அவளது மூளை தனது விருப்பத்திற்கேற்றபடி செயல்பட ஆரம்பித்துவிட்டது. அவளுக்குள்ளாக ஏதோவொரு சண்டை நிகழ்ந்து கொண்டிருந்தது. அவளது வயிறு புரட்டிக் கொண்டிருக்க அதே நேரத்தில் முட்டிகளும் வலிக்கத் தொடங்கின. ஏதோ அவள் சாத்தானிடம் உடன்படிக்கை செய்து கொண்டதைப் போல், கேடான விஷயங்களின் மூலம் மனித மனங்களுக்கு பிரச்சினை மற்றும் தடைகளை உருவாக்கி சூழ்ச்சியில் சிக்கவைக்கப்பட்டது போல் உணர்ந்தாள். இந்நிலையில், அன்ஷெல் அதிகாலை நேரத்தில் உறங்கத் தொடங்கியிருந்தாள். அவள் தூக்கம் கலைந்து எழுந்தபோது மிகவும் சோர்வுற்றவளாகக் காணப்பட்டாள். அவளால் அவ்வீட்டு எஜமானியான விதவையின் கட்டிலில் உறங்க முடியவில்லை. மிகவும் கஷ்டப்பட்டு எழுந்து தனது மறைவாசகங்கள் அடங்கியப் பையை எடுத்துக் கொண்டு

பாடசாலையை நோக்கி நடக்க ஆரம்பித்தாள். போகும் வழியில் அவள் ஹெடாளின் தந்தையை சந்திக்க நேரிட்டது. அவரிடம் தனது மரியாதை கலந்து வணக்கத்தை தெரிவித்த அன்ஷெலிடம் அவரும் தனது பங்கிற்கு வாழ்த்துதலைத் தெரிவித்தார். ஆல்டர் அவர்கள் தனது தாடியை நீவியபடியே தனது உரையாடலை தொடங்கினார் எனது மகள் உனக்கு மிதமானவற்றைத் தான் தருகிறாள் போலும், நீ மிகவும் பசியோடிருப்பவன் போல் தோன்றுகிறாய் என்றான்.

அதற்கு அன்ஷெல் உங்கள் மகள் மிகவும் பண்பான பெண், மிகவும் தாராளமாகத் தான் நடந்து கொள்கிறாள் என்றாள்.

அப்படியென்றால் நீ ஏன் மிகவும் சோர்வாகக் காணப்படுகிறாய் என்றார்.

அதற்கு அன்ஷெல் ரெப் ஆல்டர் அவர்களே நான் உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டும் என்று விரும்புகிறேன் என்று தயங்கினாள். அதற்கு அவர் பரவாயில்லை, நீ சொல்ல வந்ததை சொல் என்றார்.

அன்ஷெல் அவரிடம் ரெப் ஆல்டர் அவர்களே உங்கள் மகளை நான் மிகவும் நேசிக்கிறேன் என்றாள். அதிர்ச்சியடைந்த ஆல்டர் விஷ்கோவர் அப்படியா அவள் இதைப்பற்றி என்ன நினைக்கிறாள், யெஷிவா மாணவர்கள் இதைப் போன்ற விஷயங்களையெல்லாம் பேசமாட்டார்களே என்றார்.

அவரது கண்களில் சிரிப்பு குடிகொண்டிருந்தது.

எது எப்படியோ நான் உண்மையைத் தான் சொல்லுகிறேன் என்றாள்.

இதைப் போன்ற விஷயங்களை மற்றொரு இளைஞனிடம் கூட பகிர்ந்து கொள்ள மாட்டார்களே என்றார்.

அதற்கு அன்ஷெல் ஆனால் தான் ஒரு அனாதை, என்றாள்.

சரி அப்படியென்றால். நீ இவ்விஷயத்தை கல்யாணத் தரகர் மூலம் அல்லவா பேசியிருக்க வேண்டும் என்றார்.

ஆமாம்... என்று பதிலுரைத்தாள்.

அவளிடம் அப்படியென்ன பிடித்திருந்தது உனக்கு? என்றால் ஆல்டர்.

அவள் மிகவும் அழகானவள், பண்போடு கூடிய புத்திசாலி என்றாள்.

சரி சரி அப்படியென்றால் உன்னுடைய குடும்பத்தைப் பற்றி என்னிடம் சொல் என்றாள்.

அன்ஷெலினுடைய தோளின் மேல் கையைப் போட்டபடியே நடந்து சென்றார் விஷ்கோவர்.

சிறிது நேரத்திற்குப் பின் இவ்விருவரும் புனித மடாலயத்தின் முற்றத்தை அடைந்தனர்.

ஒரே ஒரு முறை நீ "A" என்று சொன்னால் கண்டிப்பாக "B" என்று சொல்ல வேண்டிவரும் எண்ணங்கள் வார்த்தைகளாகவும், வார்த்தைகள் செயல்களாகவும் மாறுகின்றன. ரெப் ஆல்டர் விஷ்கோவர் இந்த திருமணப் பொருத்தத்திற்கு தனது சம்மதத்தை தெரிவித்தார். முதலில் இதற்கு சற்றே தயக்கம் காட்டினார். ஹடாஸின் தாயான ஃப்ரைடா லியா அவனுக்கு இதற்கு மேலும் யெஷிவா மாணவர்களுக்கு தனது மகளைத் தரத் தயாராக இல்லை, இதற்கு மாறாக லூப்ளின் அல்லது சாமோஸிலிருந்து வரும் டாக்டர் ஒருவருக்குக்கூடத் தனது மகளைத் தர தயாராக இருந்தார். ஆனால் ஹடாஸ் அவர்களை வெளிப்படையாக எச்சரித்திருந்தாள். இன்னொருமுறை இப்படியொரு அவமானம் (அவிக்டோருடன் நடந்த திருமணப் பொருத்தம்) நிகழ்ந்தால் தான் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொள்ளப் போவதாக மிரட்டியிருந்தாள். இதே போன்ற நிகழ்வு அடிக்கடி நிகழ்ந்தால் ஹடாஸின் தோழிகள் பலரும் மற்றும் உறவினர்கள் என அனைவரும் இவனுக்கு ஆதரவாகவே பேசினர். அன்ஷல் பெசோல் தெருவில் நடந்து செல்லும் நேரங்களிலெல்லாம் அவ்வூரில் உள்ள பெண்கள் அவனை சற்று ஏக்கத்துடனேயே பார்த்துக் கொண்டிருந்தனர். அன்ஷல் எப்பொழுதும் தனது காலணிகளை பளபளப்பாகவே வைத்திருந்தான். மேலும் அவன் அப்பெண்களைப் எப்பொழுதும் ஏறெடுத்துப் பார்ப்பதில்லை. பெய்லா என்கிற பேக்கரியின் பெண்டில் என்றும் உணவுப் பண்டத்தை வாங்குவதில், அங்குள்ள கடைக்காரர்களிடம் சராசரியான மனிதர்களைப் போல மிக எளிமையாகப் பேசிக் கொண்டிருப்பான். அங்குள்ள பெண்கள் அன்ஷலிடம் ஏதோவொரு சிறப்பான விஷயம் உள்ளது என்று நம்பினார்கள். குறிப்பாக அவன் தனது கழுத்துப்பட்டையை வித்தியாசமாக கட்டியிருந்தான். அவனது [illegible] வளைந்து சுருங்கியிருந்தன. எப்பொழுதுமே சிரித்துக் கொண்டிருக்கும் அவனது கண்கள் தூரத்தில் தெரியும் ஏதோவொன்றின் மேல் நிலைக்குத்தியிருந்தது போலிருக்கும். அவளை விட்டுவிட்டு பெய்டிலின் மகளான பெசேயுடன் அவிக்டோருக்கு நிச்சயிக்கப்பட்டிருந்தாலும், ஊரில் உள்ள மற்றவர்களைக் காட்டிலும் அவன் மேல் அதிகப் பிரியம் கொண்டிருந்தாள் ஹடாஸ். ஆல்டர் விஷ்கோவரின் வீட்டில் ஏற்கனவே ஒரு திருமண நிச்சயதார்த்தம் கைவிடப்பட்டிருந்த நிலையிலும், அவர் அன்ஷலுக்கு அதிகளவு பணம், பரிசுப் பொருட்கள், நீண்ட காலம் பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் குடியிருக்கத் தேவையான பொருட்கள் ஆகியவற்றிற்கு உறுதியளித்திருந்தார். பெசேவை

சேர்ந்து பெண்கள் ஹடானை கட்டியணைத்து தங்களது வாழ்த்துக்களை தெரிவித்தனர். ஹடாஸ் மிகவும் ஆர்வத்துடன் மணமகனுக்குத் தேவையான பட்டுவஸ்திரத் துணிமணிகள், சால்வைகள், ஆகியவற்றைத்தன் கையாலே பின்னத் தொடங்கினாள். அன்ஷெலின் திருமண நிச்சயதார்த்தம் பற்றி அறிந்த அவிக்டார் படிப்பகத்திற்கே நேரடியாக வந்து தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தான். கடந்த சில வாரங்களில் அவனது வயது சற்றே கூடிவிட்டதைப் போல் உணர்ந்தான். அவனது தாடி ஒழுங்கு செய்யப்படாமல் இருந்ததோடு கண்களும் சிவந்திருந்தன.

எனக்கு அவன் அன்ஷெலிடம் முன்பே தெரியும். இப்படித்தான் நடக்குமென்று முதன் முதலாக விடுதியில் பார்த்தவுடனேயே இதைப் புரிந்து கொண்டேன் என்றான்.

ஆனால் இந்த யோசனையை அறிவுறுத்தியதே நீதான் என்றாள்.

ஆம் எனக்குத் தெரியும்.

எதற்கு என்னைத் தனியாக விட்டு சென்றாய்? விடை பெறுகிறேன் என்றுகூட சொல்லாமல் போய்விட்டாய்? என்றாள்.

நான் என்னை சுற்றியிருக்கும் உறவுகளைத் துண்டிக்கும் பொருட்டே அப்படி செய்தேன் என்றான்.

அவிக்டார் தன்னுடன் சிறிது தூரம் நடந்துவரும்படி அன்ஷெலைக் கேட்டுக்கொண்டார்/ அது மாலை மயங்கும் நேரமாக இருந்தாலும், சூரிய ஒளியின் வெளிச்சம் சற்று கூடுதலாகவே இருந்தது. இதற்கு முன்பிருந்ததை விட அவிக்டார் மிகவும் வெளிப்படையாக தனது மனதை அன்ஷெலுக்கு திறந்து காட்டினான். ஆம், கடும் துக்கத்தினால் தனது சகோதரனொருவன் தன்னையேத் தூக்கிலிட்டுக் கொண்டது உண்மைதான். தற்போது இவனும் கூட அத்துக்கத்தின் கிணற்றிற்கு வெகுஅருகில் வந்துவிட்டான். அதிகப் பணத்தைக் கொண்டிருக்கும் பெசோவின் தந்தை பணக்காரராயிருந்தாலும் இரவுகளில் அவரால் நிம்மதியாக தூங்க முடிவதில்லை. அவர் பொருட்களின் காவற்காரனாய் இருக்க விரும்பவில்லை. அவரால் ஹடாஸை மறக்க முடியவில்லை. அவள் அவருடைய கனவுகளில் தோன்றி கொண்டேயிருந்தாள்.

ஓய்வு நாளன்று, இரவுகளில் நடத்தப்படும் வழிபாட்டில் ஹடாஸின் பெயர் உச்சரிக்கப்படுகையில் அவர் மிகவும் அசிரத்தையாக உணர்ந்தார். ஹடாஸை திருமணம் செய்து வேறொரு நபராக இல்லாமல் அன்ஷெலாக இருப்பது தனக்கு மிகுந்த மகிழ்ச்சியே. இறுதியில் அவள் நல்லதொரு நபரின் கைகளிலேயே

அடைக்கலம் புகுந்துவிட்டாள் என்றான். திடீரென்று பேச்சை நிறுத்திய அவிக்டார் அங்கிருந்த புற்களை குறுக்கே பிய்த்துக் கொண்டிருந்தான். ஏதோவொரு ஆவியின் ஆளுகைக்கு உட்பட்டது போல் அவனது பேச்சு தொடர்பற்றதாய் மாறியிருந்தது. திடீரென அவன் நான் எனது சகோதரன் செய்வதையே பின்பற்றப் போகிறேன் என்றான்.

நீ அவளை அந்த அளவிற்கு நேசிக்கிறாயா? என்று கேட்டாள் அன்ஷல்.

அதற்கு அவன் அவள் எனது மனதில் பொறிக்கப்பட்டு விட்டாள் என்றான்.

பின் இவ்விருவரும் இனி எப்பொழுதுமே தங்கள் நட்பை முறித்துக் கொள்ளப் போவதில்லையென்று சத்தியம் செய்து கொண்டார்கள். இருவரும் இணைந்து தினமும் படிக்கப் போவதாகவும், என் கடையின் பங்குதாரர்களாகக் கூட மாறிக் கொள்ளலாம் என்று முடிவெடுத்தனர்.

உனக்கொரு உண்மை தெரியுமா, என்று அவிக்டார் அவனிடம் கேட்டான். அது யாக்கோப் மற்றும் பெஞ்சமின் கதையை ஒத்தது. எனது வாழ்க்கை உன்னுடைய வாழ்க்கையின்னுள்ளாக பொதிந்து வைக்கப்பட்டுள்ளது என்றான்.

பின்னர் ஏன் நீ என்னை விட்டுச் சென்றாய்?

அது இந்தக் காரணத்தினாலேயே கூட இருக்கலாம் என்றான்.

அக்குறிப்பிட்ட நாள் மிகுந்த காற்றுடன் குளுமையாக இருந்த போதிலும், இருவரும் பேசிக்கொண்டே பைன் மரக்காடு வரை நடந்து வந்துவிட்டார்கள். பெசோவினுள் குடியிருக்கும் பெண்கள் தங்களுடைய வீட்டின் ஜன்னல்களினூடாக, இவ்விருவரும் தோளோடு தோளாக மிக நெருக்கமாக குப்பைகளையும், கீழே விழுந்துகிடந்த புதர் மற்றும் முட்களைப் பொருட்படுத்தாமல் நடந்து சென்று கொண்டிருப்பதைப் பார்த்து ஆச்சரியமடைந்தார்கள். அலங்கோலமாகத் தோற்றமளித்த அவிக்டாரின் முடிக்கற்றைகள் காற்றின் விசைக்கு எற்றவாறு கலைந்து கொண்டிருந்தது. அன்ஷல் தனது நகங்களைக் கடித்துக் கொண்டிருந்தாள். ஹடாஸம் கூட ஜன்னல்களின் வழியாக இவ்விருவரும் நடந்து செல்வதைப் பார்த்தாள். அப்பொழுது அவளின் கண்கள் குளமாகத் தொடங்கியிருந்தது.

இதைத் தொடர்ந்து பல நிகழ்ச்சிகள் வேகமாக நடந்தேறின. அவிக்டார் தான் முதலில் திருமணம் செய்து கொண்டான். மணப்பெண் விதவையாக இருந்த படியால் எவ்வித

ஆர்ப்பாட்டமுமில்லாமல் திருமணம் எளிமையாக நடந்து முடிந்தது. முதல் நாள் மணப்பெண்ணாக இருந்த பெஷே மறுநாளே தனது கடைக்குத் திரும்பி கைகளில் பசையப்ப வேலை செய்து கொண்டிருந்தாள். அவிக்டார் தனது புதிய கழுத்துப்பட்டையை அணிந்து ஹசிடிக் மடாலயத்தில் ஜெபம் செய்து கொண்டிருந்தான். மதிய வேளைக்குப்பின் அன்ஷெல் அவனைப் பார்ப்பதற்காகச் செல்வாள், பின்னர் மாலை வரை அவர்கள் பேசிப்பொழுதைப் போக்குவார்கள். ஹடாஸின் தந்தை அவளின் திருமணத்தை வேகமாக முடிக்க விரும்பிய போதிலும், ஹனுக்கா வாரத்தில் வரும் ஒரு ஓய்வு நாளில் இவர்களின் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்தது. ஹடாஸ் ஏற்கனவே திருமணம் நிச்சயிக்கப்பட்ட பெண். மேலும் மணமகன் ஒரு அனாதை. விரைவில் திருமணம் செய்து கொள்ளப் போகும் அன்ஷெல் ஏன் ஒரு தற்காலிக சாக்கு சொல்லி ஒரு விதவையின் வீட்டில் தங்க வேண்டும்?

அன்ஷெல் ஒவ்வொரு நாளும், பலமுறை தனக்குத் தானே தான் ஏதாவது பாவகாரியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறேனா, அல்லது ஒழுக்கமற்ற செயல்களை செய்கிறேனா என்று கேட்டுக் கொண்டாள். தனது சூழ்ச்சிக்கும் ஹடாஸையும் பலிகடாவாக்கி வரம்பு மீறிய செயல்களை செய்ய வைத்து மீள முடியாத துயரத்தில் ஆழ்த்துகிறேன் என்று எண்ணினான். ஒரு பொய்யைத் தொடர்ந்து மற்றொரு பொய். அவள் தொடர்ச்சியாகத் தன்னுடைய மனதில், பெசோவ்வை விட்டு சீக்கிரமாக வெளியேறி இந்த வினோதமான நகைச்சுவை நாடகத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று முடிவெடுத்தாள். ஏனெனில் கண்டிப்பாக அவளது இச்செய்கை மனிதத் தன்மையற்ற பேய்ச் செயலாகும். இச்செய்கையின் அதிகாரப்பிடிப்பு அவள் கைகளில் இருந்ததால் அவளால் எளிதாக வெளிவர முடியவில்லை. அந்த வேளையில், அவள் அவிக்டாருடன் நெருக்கமாக பழகி வந்தாள். ஹடாஸின் மாயத்தோற்ற நம்பிக்கையும் சீக்கிரமாக சீர்குலைக்க விரும்பவில்லை. தற்போது அவிக்டாருக்கும் திருமணமாகி விட்டதால், அவனுக்கு கல்வி கற்கும் ஆர்வம் அதிகமாகத் தொடங்கியது. நண்பர்கள் இருவரும் காலை, மாலை இருவேளைகளிலும் இணைந்துப் படிக்கத் தொடங்கினர். அவர்கள் காலையில் கெமாராயின் போதனைகளையும், மதிய நேரங்களில் அதன் சட்டவரையறைகளுக்குட்பட்ட விளக்கவுரைகளை கற்றுத் தேர்ந்தனர். ஆல்டர் விஷ்கோவர் மற்றும் தோல் வியாபாரியான பெய்டில்லும் ஒரு சேர அவிக்டார், அன்ஷெலை டேவின், ஜோதானுக்கு நிகராக ஒப்பிட்டனர். இதைப் போன்ற புகழ்ச்சியுரைகளை அன்ஷெல் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

தையல்காரர்கள் அவளது புதிய ஆடைகளுக்கு அவளை அளவெடுக்க நெருங்கிய போது அவள் தனது அனைத்து தந்திரங்களையும் பயன்படுத்தி அவர்கள் தான் ஒரு ஆண் என்பதை கண்டுபிடிக்க முடியாதபடி செய்தாள். எப்படி இந்த மோசடி பல வாரங்கள் தொடர்ந்தது என்பதை கண்டு அன்ஜேலே திகைப்படைந்தாள். எப்படி இது சாத்தியமாகும்? ஒரு சமூகத்தையே முட்டாளாக்கும் தன்னுடைய விளையாட்டு எதுவரை தொடரப் போகிறது? மேலும் எந்த வகையில் இந்த உண்மை வெளிச்சத்திற்கு வரும்? அன்ஜேல் அவளுக்குள்ளாகவே அழவும் விம்மவும் செய்தாள். அவள் மக்களை கேலி செய்து ஏமாற்றுவதற்காக இந்த உலகில் கொண்டு வரப்பட்ட குட்டிப் பிசாசு. நான் மோசமானவள், அனைத்தையும் மீறி நடப்பவள் என்று அவள் தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள். அவளது ஆத்மா தோராவைக் கற்க வேண்டுமென்ற ஆர்வத்தினாலேயே அனைத்து பிரச்சனைகளையும் தனதாக்கிக் கொண்டாள் என்பதே அவள் தரப்பு நியாயம்.

அவிக்டார் வெகு சீக்கிரத்திலேயே பெஷே தன்னை மிகவும் மோசமாக நடத்துகிறாள் என்று குறை கூற ஆரம்பித்தான். அவள் அவனை வேலையற்றவன், முட்டாள் மற்றும் தண்டச்சோறு என்றும் சொல்லிக் கொண்டிருந்தாள். அவள் அவனை கடை வேலைகளைச் செய்யுமாறு செய்தாள். அவன் செய்ய விரும்பாத ஆர்வமற்ற வேலைகளை, அவன் மேல் திணித்து அவனது கைச்செலவிற்குத் தரும் பணத்திலும் கஞ்சத்தனம் செய்தாள். அன்ஷெல், அவிக்டாரை பெஷேவிற்கு எதிராகத் தூண்டிவிட்டாள். அவள் அவிக்டாரின் மனைவி பார்ப்பதற்கு அருவருப்பானவள் என்றும், கஞ்சத்தனம் மிகுந்த அடங்காபிடாரி என்றும், சந்தேகத்திற்கு இடமிராமல் அவளது முதல் கணவனை அவளேதான் கொன்றிருப்பாள் என்றும், அதுவே தான் அவிக்டாருக்கும் நிகழப் போகிறது என்றும் சொன்னாள். அதே வேளையில் அன்ஷெல் அவனுடைய அறிவுத்திறன், ஆண்மைத்தனம் அவனது பேச்சுத்திறனை ஆகியவற்றை மிகவும் புகழ்ந்து பேசினான்.

நான் மட்டும் பெண்ணாக பிறந்திருந்தால் உன்னைத்தான் திருமணம் செய்திருப்பேன் என்ற அன்ஷெல், உன்னை சரியான நேரத்தில் பாராட்டவும் செய்திருப்பேன் என்றாள்.

அதெல்லாம் சரி, ஆனால் நீ தான் அப்படி பிறக்கவில்லையே என்று அவிக்டார் ஏக்கப் பெருமூச்சுவிட்டான்.

இந்நிலையில், அன்ஷெலின் திருமணத் தேதியும் நெருங்கிக் கொண்டிருந்தது.

ஹனுக்காவிற்கு முந்தைய சாபத் திருநாளில் அன்ஷெல் ஆலய மேடையில் ஏறி தோராவை வாசிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார். அங்கு கூடியிருந்த பெண்கள் முந்திரி மற்றும் வாதுமைப் பருப்புகளை இவர்கள் மீது தூவிக்கொண்டிருந்தனர். திருமண நாளன்று ஆல்டர் விஷ்கோவர் அங்கு குழுமியிருந்த இளைஞர்களுக்கு விருந்தளித்தார். மணமகன் தால்மியூடிக் உரையாடலைத் தொடங்கிய போது, அங்கு வைன் அருந்திக் கொண்டும், எலுமிச்சம்பழச்சாறு மற்றம் பழரசம் அருந்திக் கொண்டிருந்த பலரும் தங்கள் பங்கு வாதத்தை முன்வைத்தனர். பின்பு மணப்பெண்ணுக்கு முக்காடிடும் வைபவம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து புனித மடாலயத்திற்கு அருகில் அமையப் பெற்ற மேடைக்கு மணமகன் அழைத்து வரப்பட்டார். பனியால் நிரம்பியிருந்த அந்த நிசப்த இரவில் வானமெங்கும் நட்சத்திரங்கள் நிரம்பியிருந்தன. இசைக் கலைஞர்கள் ஏதொவொரு இசையை வாசிக்கத் தொடங்கியிருந்தனர். பாதையின் இரு பக்கங்களிலும் பெண்கள் வண்ணமயமான மெழுகுவர்திகளை தங்கள் கையிலேந்தியபடி நின்று கொண்டிருந்தனர். திருமண நிகழ்ச்சிக்குப் பின் தம்பதியினர் தங்களது நோன்பை கோழிச்சாறைக் குடித்து நிறைவு செய்தனர். ஆடல் நிகழ்ச்சித் தொடங்கியவுடன், பரிசளிப்பு பற்றிய அறிக்கை வெளியிடப்பட்டது. அனைத்தும் முறைப்படி நடந்தேறியது. பலதரப்பட்ட பரிசுப் பொருட்கள் கிடைத்ததோடு விலை உயர்ந்ததாகவும் இருந்தது. அவை மணமகன் எதிர்கொள்ளப்போகும் மகிழ்ச்சி, துக்கம் ஆகியவை நாடகப் பாணியில் நடித்துக் காட்டப்பட்டது. அவிக்டாரின் மனைவி பெஷேவும் விருந்தாளிகளில் ஒருவராக வந்திருந்தாள். அவள் தனது முகத்திற்கு ஒப்பாத ஒப்பனைகளால் தன்னை அழகுப்படுத்தியிருந்தாள். அவள் அழகிய மென்பட்டாலென ஆடைகளை உடுத்தியிருந்தாலும், அழகான கையுறைகளைக் கொண்டிருந்தாலும், அவளது தார் நிரம்பிய மறைக்க இயலாத அழுக்குக் கைகள் அவளை அவலட்சணமானவளாகவே காட்டின. இந்த மகிழ்ச்சியான நடனத்திற்குப் பிறகு மணமகன், மணமகள் ஆகியோர் கல்யாண மேடைக்கு வழிநடத்தப்பட்டனர். இவ்விருவரையும் ஒரு சேர நிற்க வைத்த திருமண ஏற்பாட்டாளர்கள் தம்பதியினர் பல்கிப் பெருகி பல்லாண்டு வாழ ஆசிர்வாதம் செய்தனர்.

புலர்காலைப் பொழுதில் தம்பதியினர் தங்கியிருந்த இடத்திற்கு வந்த அன்ஷெலின் மாமியார் போர்வைகளை உருவி கிழித்துப் பார்த்து தாம்பத்யம் முழுமையாக நிறைவடைந்ததற்கு சாட்சியாக இருக்கக்கூடிய தடயங்களை ஆராய்ந்தனர்.

இரத்தத்துளிகள் கண்ணுற்ற அவர்கள் மகிழ்ச்சியடைந்து, மணமகளை முத்தமிட்டு தங்களது வாழ்த்துதலைப் பகிர்ந்து கொண்டனர். ஜமுக்காளத்தை கழற்றி வீசிய அவர்கள், அவ்விடத்தை விட்டு வெளியே வந்து புதிதாக விழத் தொடங்கிய பனியின் மீது யூத மரபிற்கேயுரிய நடனத்தை ஆடத் தொடங்கினர். அன்ஷல் மணமகளின் கன்னித் தன்மையை போக்குவதற்கான வழியைக் கண்டுபிடித்திருந்தாள். ஹடாஸ் தன்னுடைய அறியாமையின் காரணமாக நடந்து முடிந்த விஷயத்தின் தீவிரத்தை உணர்ந்திருக்கவில்லை. அவள் ஏற்கனவே அன்ஷலைத் தீவிரமாக காதலிக்கத் தொடங்கியிருந்தாள். மணமகன் மற்றும் மணமகள் தங்களது முதல் தாம்பத்ய உறவிற்குப் பின் ஏழு நாட்கள் பிரிந்து இருக்கவேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டனர். இதற்கு மறுநாள் அவிக்டார் மற்றும் அன்ஷல் ஆகிய இவ்விருவரும் மாதவிடாய் சார்ந்த பெண்கள் பற்றிய ஆய்வுக் கட்டுரையைப் படிக்கத் தொடங்கினர். மடாலயத்தை விட்டு அனைவரும் வெளியேறிய பின்னரும் இவ்விருவர் மட்டுமே அங்கே தனித்திருந்தனர். அவிக்டார் கூச்சத்துடன், அன்ஷல் ஹடாஸிடையே நிகழ்ந்த முதலிரவைப் பற்றி விசாரித்தான். அன்ஷல் அவனது ஆர்வத்தை மகிழ்விக்கும் பொருட்டு தன்னைப் பற்றிய செய்தியைப் பகிர்ந்து கொண்டதோடு, இரவு நெருங்கும் வரை ரகசியமாக பேசிக்கொண்டிருந்தனர்.

அன்ஷல் நல்லவள் ஒருவரின் கைகளிலேயே அடைக்கலம் புகுந்திருக்கிறாள். ஹடாஸ் நல்லதொரு மனைவியாக இருந்ததோடு மட்டுமல்லாமல், அவளுடைய பெற்றோரும் தங்களுடைய மருமகனை சரியான விதத்தில் ஊக்குவித்து அவனுடைய ஆசைகளை நிறைவேற்றினர். பல மாதங்கள் கடந்த பின்பும், ஹடாஸிற்கு குழந்தை பிறக்காமலிருப்பதைக் கண்டு யாரும் வருத்தப்படவில்லை. இதற்கு மாறாக அவிக்டாரின் நிலைமை மோசமாகிக் கொண்டே வந்தது. பெஷே அவனுக்கு சரியான உணவு மற்றும் உடைகளைக்கூட தர மறுத்து அதிகமாகத் துன்பத்திற்குள்ளாக்கினாள். எப்பொதும் போல் அவனிடம் பணமில்லாதிருந்ததால் அன்ஷல் தினமும் அவனுக்கு பெரிய கோதுமை கேக் ஒன்றை வாங்கி வந்து கொடுத்தாள். பெஷே எப்பொழுதும் பரபரப்பாக இருந்ததால், வேலைக்காரனைக்கூட வேலைக்கு அமர்த்துவதற்கு கஞ்சத்தனம் காட்டினாள். அன்ஷல், அவிக்டாரைத் தன்னுடைய வீட்டில் உணவருந்துமாறு கேட்டுக் கொண்டாள். ஆனால் இதற்கு ரெப் ஆல்டர் விஷ்கோவரும், அவரது மனைவியும் எதிர்ப்பு தெரிவித்தனர். ஏற்கனவே ஹடாஸுடன் நிச்சயிக்கப்பட்ட அவிக்டார் வீட்டிற்கு வருவதை அவர்கள்

விரும்பவில்லை. இதனால் ஊரார் இதைப்பற்றி அதிகம் பேசத் தொடங்கிவிடுவார்கள். ஆனால் அன்ஷெல் தங்கள் மதச்சட்டப்படி இது தவறல்ல என்பதற்கான உதாரணங்களைக் காட்டினான். அவிக்டார் தொடர்ச்சியாக விவகாரத்திற்கு வலியுறுத்தி வந்தான். பெஷேவைப் போலிருக்கும் ஒரு சண்டைக்கார பெண்ணுடன் இணைந்து குழந்தைப் பெற்றுக் கொள்ள அவன் விரும்பவில்லை. புனித நூலான கெமாரா சொல்வது போல் அவள் தீமையை மட்டுமே கொண்டுள்ள தன்னகத்தே மிகக் கொடூரமான பெண். அவள் அன்ஷெலிடம் தன் மனைவி எப்படி தன்னைத் தானே சுத்தம் செய்ய கூட விரும்பாதவளாகப் படுக்கைக்கு வருவதைப் பற்றியும், வட்டமான ரம்பம் ஏற்படும் ஒலியைப் போல் குறட்டை விடுவதையும், தூக்கத்தில் கூட அன்று கடையில் கிடைத்த பணத்தை பற்றி உளறிக் கொண்டிருப்பதைப் பற்றி பேசினான்.

ஓ அன்பான அன்ஷெலே உன்னுடைய வாழ்க்கையைக் குறித்து நான் மிகவும் பொறாமைப்படுகிறேன் என்றான். எனது வாழ்க்கையைக் குறித்து நீங்கள் பொறாமைப்படுவதற்கு எனக்கு எந்த காரணமும் இருப்பதாகத் தெரியவில்லை என்றாள்.

நீ அனைத்தையும் பெற்றிருக்கிறாய், நான் உனக்கு கிடைத்த சௌகரியம் எனக்கும் கிடைக்க வேண்டுமென்று விரும்புகிறேன். ஆனால் உனக்கும் எவ்வித நஷ்டமும் ஏற்பட்டுவிடக்கூடாது என்றான்.

அனைவரும் தங்களுக்கேயுரிய பாடுகளைக் கொண்டிருக்கிறார்கள் என்றாள்.

உனக்கு என்ன பிரச்சினை இருந்துவிடப் போகிறது? சும்மாவெனும் அனுமானத்தில் சொல்ல வேண்டியதில்லை என்றான்.

எப்படி அவிக்டார் அன்ஷெலால் இரவில் சரியாகத் தூங்க முடியாமல் தொடர்ச்சியாக அவ்விடத்தை விட்டு ஓடிப்போய் விடவேண்டும் என்ற எண்ணத்தால் அலைகழிக்கப்பட்டதை உணர்ந்து கொள்ள முடிந்தது? தொடர்ச்சியாக ஹடாஸிடம் பொய்களைச் சொல்லி அவளை ஏமாற்றி வருவது அன்ஷெலுக்கு மிகவும் வேதனையான காரியமாகப்பட்டது.

ஹடாஸின் அன்பு கலந்த கனிவு அன்ஷெலை வெட்கப்பட வைத்தது. அவளின் மாமனார், மாமியார் ஆகியோரின் பேரன்பேத்தி குறித்த நம்பிக்கை பெரிய பாரமாக மனதை அழுத்தியது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஊர் மக்கள் பொது குளிப்பகத்திற்குச் செல்கையில் அன்ஷெல் தான் செல்லாமல் இருப்பதற்கான காரணமாக புதிய பொய்களை சொல்லி வந்தாள். இதைக் குறித்து ஊர் மக்களிடையே பல்வேறு வதந்திகள் பரப்பப்பட்டன. அவளுக்குப் பார்க்கக் கூடாத இடத்தில் மோசமான தழும்பு இருக்கலாம்,

இருவருக்கிடையேயும் இணக்கமற்ற சூழல் நிலவலாம், அல்லது ஆண்குறி சரியாக சுன்னத்து செய்யப்படாமலிருக்கலாம். அன்ஷலின் வயதை வைத்துப் பார்த்தால் கண்டிப்பாக இந்நேரம் அவளுக்கு தாடி முளைக்கத் தொடங்கியிருக்க வேண்டும். அதற்கு மாறாக அவளது கண்ணங்கள் மிருதுவாக தோன்றுகிறது என்று அவர்கள் பலவழிகளில் கணித்து கொண்டிருந்தனர். ஏற்கனவே யூதத் தோல்வித் திருவிழாவென ப்யூனிடம் முடிந்து வெள்ளித் திருவிழாவான பாஸ்ஓவர் நெருங்குகிறது. சிக்கிரத்தில் கோடை காலமும் தொடங்கிவிடும். பெஷிவாவிற்கு அருகிலுள் ஆற்றில் தண்ணீர் வெதுவெதுப்பாக இருப்பதால் யெஷ்வரிடமாணவர்கள் மற்றும் இளைஞர்கள் நீச்சலடித்துத் கொண்டிருப்பார்கள். இப்பொய் ஒரு பெரிய கட்டியாக உருமாறிக் கொண்டு வருவதால் கண்டிப்பாக ஒரு நாள் வெடிக்கப் போவது நிச்சயம். அன்ஷல் சீக்கிரத்தில் இதிலிருந்து விடுவதற்கான வழியை கண்டுபிடிக்க வேண்டும்.

வெற்றித் திருவிழாவின் விடுமுறை நாட்களில் ஊரில் உள்ள தம்பதியர்கள் அருகாமையிலுள்ள ஊர்களுக்கு சுற்றுலா செல்வது வழக்கம். அவர்கள் இந்த நாட்களை மகிழ்ச்சியாகப் போக்குவதற்கும், புதிய வியாபாரம் சார்ந்த வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் இளைஞர்கள் தங்களுக்குத் தேவையான புத்தகங்கள் போன்றவைகளை வாங்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவார்கள். பெஷோவ் ஒன்றும் லூப்ளினிலிருந்து அதிக தூரம்இல்லை என்பதால் அன்ஷலுடைய செலவிலேயே அவிக்டார் தன்னுடன் பயணம் மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொண்டாள். அவிக்டார் இந்த வாய்ப்பின் வாயிலாக தன்னுடன் வீட்டில் குடியிருக்கும் அடங்காப்பிடாரியிடமிருந்து விடுபட்டு சிறிது நாட்கள் மகிழ்ச்சியாக இருக்கலாம் என்று எண்ணினான். இப்பயணத்திற்கு வண்டியைப் பயன்படுத்தினால் அது இன்னமும் அழகு. பச்சை பசேலென இருக்கக்கூடிய புல்வெளியைக் கடந்து அவர்கள் சென்று கொண்டிருக்கும் அதே சமயத்தில் தான், உஷ்ணம் அதிகமாக இருக்கக்கூடிய நாடுகளிலுலிருந்து கொக்கு போன்ற பறவைகள் திரும்பிக் கொண்டிருந்தன. அவை வானத்தில் வட்டவடிவில் பறந்து கொண்டிருந்தன. தண்ணீர் பள்ளத்தாக்குகளில் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. பறவைகள் கீச்சிட்டுக் கொண்டிருந்தன. பெரிய காற்றாடிகள் சுற்றிக் கொண்டிருந்தன. குளிர்காலப் பூக்கள் நிலங்களில் பூத்துக் குலுங்கின. சில பசுக்கள் வயல்களில் இங்கும் அங்கும் மேய்ந்து கொண்டிருந்தன. நண்பர்கள் இருவரும் பேசிக்கொண்டே ஹடாஸ் கொடுத்தனுப்பிய கேக்குகள் மற்றும்

பழங்களை சாப்பிட்டபடி தங்களுக்கிடையே நகைச்சுவை துணுக்குகளைப் பரிமாறிக் கொண்டனர். அவர்கள் சேர வேண்டிய இடத்தை அடைந்தபின் ஒரு விடுதியில் இரண்டு தனியறைகளை பதிவு செய்தனர். பயணத்தின் போது அன்ஷல் அவிக்டாரிடம் ஹூரப்ளின் சென்றடைந்தபின் ஒரு ரகசியத்தை பகிர்ந்து கொள்ளப்போவதாக சொல்லியிருந்தாள். என்ன மாதிரியான ரகசியம் அது என்று அவிக்டார் நகைச்சுவையாக கேட்டான். அன்ஷல் ஏதாவது புதையல் எதையும் கண்டுபிடித்திருக்கிறாளா? அவன் கட்டுரை ஏதும் எழுதியிருக்கிறாளா? கபாலாவை படித்ததினால் புறா போன்ற எதையாவது தோன்றச் செய்துவிட்டாளா? என்றும் கேட்டான்.

அவர்கள் இருவரும் அறைக்குள் நுழைந்தவுடன் கவனமாக கதவை சாத்திய அன்ஷலிடம் அவிக்டார் இப்போது உன்னுடைய இரகசியத்தை பற்றிச் சொல் என்று கிண்டலடிக்கும் தொனியில் கேட்டான்.

அதற்கு அவள் இப்போது நம்புவதற்கரிய விஷயத்தைக் கேட்பதற்கு தயாராகிக் கொள் என்றாள்.

நான் அனைத்திற்கும் தயாராகத்தான் இருக்கிறேன் என்றான்.

அதற்கு அன்ஷல் நான் ஆணல்ல பெண். எனது பெயர் அன்ஷல் அல்ல. யென்டில் என்றாள்.

சத்தமிட்டு சிரித்த அவிக்டார் நீ விளையாட்டிற்காகத்தானே சொல்லுகிறாய் என்றான்.

ஆனால் இது உண்மை என்றாள்.

அதற்கு அவன் நான் முட்டாளாக இருந்தால்கூட இதை என்னால் ஜீரணித்துக் கொள்ள முடியாது என்றான்.

என்னை நீ முழுவதுமாக பார்த்தால் நம்புவியா,? என்ற அவளிடம் ஆமாம் என்றான்.

வேறு வழியில்லை நான் ஆடைகளை அவிழ்த்துக் காட்டுகிறேன் என்றாள்.

ஆச்சரியம் அடைந்த அவிக்டார்.

ஒருவேளை அன்ஷல் மற்றொரு ஆணான என்னுடன் சிற்றின்பத்தில் ஈடுபடவிரும்புகிறான் என்று நினைத்தான். முதலில் தனது மேலாடைகளை களைந்த அன்ஷல் பின் தனது உள்ளாடைகளையும் களைந்தாள். முதலில் வெளுக்க தொடங்கிய அவிக்டார் முகம் பின்னர் சிவக்கத் தொடங்கியது. பின்னர் அன்ஷல் விரைவாக தனது ஆடையை உடுத்திக் கொண்டாள். அன்ஷல் அவனிடம் நான் இதை உன்னிடம் சொல்லியதே விசாரணைக்

கூடத்தில் சாட்சி சொல்ல வேண்டுமென்பதற்காகத்தான். இல்லாவிட்டால் ஹடாஸ் கடைசி வரை கன்னிகழியாத விதவையாக வாழ நேரிடும் என்றாள்.

அவிக்டாரின் தொண்டையிலிருந்து வார்த்தைகள் எதுவும் எழவில்லை. அவன் சற்றே நடுங்கவும் ஆரம்பித்திருந்தான். அவன் பேச நினைத்தபோது, உதடுகள் தான் அசைந்ததேத் தவிர வார்த்தைகள் ஏதும் வெளிவரவில்லை. அவனால் உறுதியாக நிற்கக்கூட முடியவில்லை. சட்டென்று கீழே உட்கார்ந்து விட்டான்.

இறுதியாக இது எப்படி சாத்தியம் என்னால் நம்பவே முடியவில்லை என்று முணுமுணுத்தான்.

நான் வேண்டுமென்றால் இன்னொரு முறை ஆடைகளை அவிழ்க்கவா? என்று அன்ஷல் கேட்டாள்.

வேண்டாம். என்றான்.

யென்டில் மொத்தக் கதையையும் முதலிலிருந்து சொல்ல ஆரம்பித்தாள். நோயுற்றிருந்த அவளது தந்தையிடமிருந்து எப்படி தோராவைக் கற்றாள். அவளுக்கு ஏன் பெண்களுக்கேயுரிதான பயனிலாப் பேச்சுகளில் நாட்டமில்லாதிருந்தது, அவள் எப்படி தனது வீடு மற்றும் உடைகளை விற்றபின் ஒரு ஆணுடைய தோற்றத்தில் லூப்ளினை அடைந்து அவிக்டாரை சந்தித்தாள் என அனைத்தையும் கூறி முடித்தாள். இந்தக் கதைச் சொல்லியின் வார்த்தைகள் கேட்டுக் கொண்டிருந்த அவிக்டார் வாயடைத்துப் போயிருந்தான். யென்டில் மீண்டும் தன்னுடைய ஆண்களுக்கான உடைகளை அணியத் தொடங்கியிருந்தாள். அவிக்டார் இது ஒரு கனவாக இருக்குமோ என்று சொல்லியபடி தன்னைத் தானே கிள்ளிக் கொண்டான். அதற்கு அவள் உண்மையாகவே இதுதான் எனக்கு நிகழ்ந்தது என்றாள்.

நீ ஏன் இதைச் செய்ய வேண்டும்? நான் இதைத் தெரிந்து கொள்ளாமலேயே இருந்திருக்கலாம் என்றான்.

அன்ஷல் நான் வாழ்க்கை முழுவதும் சமையல் செய்து கொண்டும், பாத்திரம் அலம்பிக் கொண்டிருக்கவும் விரும்பவில் லை என்றாள்.

ஹடாஸின் நிலைமை என்னவாகும் அவளைப் பற்றி ஏன் நீ யோசிக்கவில்லை? என்றான்.

நான் உனக்காகவே இதை செய்தேன். உன்னுடைய வீட்டில் பெஷே உன்னை அதிகமாக கஷ்டப்படுத்துவதால் என்னுடைய வீட்டிலாவது நீ மகிழ்ச்சியாக இருக்கலாம் என்பதற்காக அப்படி செய்தேன் என்றாள்.

அவிக்டார் சிறிது நேரம் மௌனமாகஇருந்தான். தலையை குனிந்தபடி யோசனையில் மூழ்கியிருந்த அவன் இப்போது நீ என்ன

செய்யப்போவதாக முடிவெடுத்திருக்கிறாய் என்று அன்ஷலிடம் கேட்டான்.

நான் வேறொரு யெஷிவா விற்கு செல்ல முடிவெடுத்திருக்கிறேன் என்றாள்.

என்ன? நீ இதை என்னிடம் முன்னரே சொல்லியிருந்தால் நாம் இருவரும்... என்று தான் சொல்ல வந்ததை பாதியிலேயே நிறுத்தினான் அவிக்டார்.

இல்லை அது ஒரு நன்மையும் நமக்கு செய்திருக்காது என்றாள்.

ஏன்?

அன்ஷல் அதற்கு நான் இரண்டுமற்ற நிலைமையில் தான் இருந்திருக்க முடியும் என்றாள்

நான் எப்படி இரண்டிலொன்றை தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளேன் பார் என்றாள்.

நீ அந்த வெறுப்பிற்கிடமானவளை விவாகரத்து செய்துவிட்டு ஹடாஸை திருமணம் செய்து கொள் என்றாள் அன்ஷல்.

பெஷே என்னை விவாகரத்து செய்ய அனுமதிக்க மாட்டாள், அதே வேளையில் ஹடாஸும் என்னை ஏற்றுக் கொள்ளமாட்டாள் என்றான்.

திடீரென எழுந்து நின்ற அவன், என்னால் உன்னை எப்பொழுதுமாக மறக்க முடியாது என்று சொன்ன அவன் மறுபடியும் உட்கார்ந்து கொண்டான்.

மத ஒழுங்கின்படி அவிக்டார் இனி ஒரு நிமிடம் கூட யென்டிலிடம் நேரம் செலவழிக்க இயலாது என்பதால் யென்டில் உடனடியாகத் தன்னுடைய உடைகளை சரி செய்து கொண்டு மீண்டும் எல்லோராலும் அறியப்பட்ட அன்ஷலாக மாறினாள்.

அவர்கள் தங்களுடைய பேச்சை மதம் சார்ந்த விஷயங்களுக்குத் திருப்பினர். நீ எப்படி மதவிதிகளுக்கு எதிராகத் திரும்பினாய்.

ஒரு பெண் ஆணுக்குரிய எந்தவொரு உடைகளையும் அணியக்கூடாது என்று உனக்குத் தெரியாதா? என்று கேட்டான்.

அதற்கு அவள் கண்டிப்பாகத் தெரியும் என்றாள்.

ஆச்சரியத்தில் அவிக்டாரின் கண்கள் விரிந்தன.

அவன் இப்பொழுது தான் அன்ஷலுடைய கண்கள் ஏன் மென்மையாக உள்ளது. கேசம் ஏன் அடர்த்தியாக உள்ளது, கைகள் ஏன் நீளம் குறைவாக உள்ளது என்று அறிந்து கொண்டான். இருந்த போதிலும் இந்த சம்பவங்கள் அனைத்துமே அவனுக்கு நம்ப முடியாத ஆச்சரியத்தை அளித்தது. எழுந்திருக்க நினைத்த அவன்

அதற்கு முன்பாகத் தன்னைத்தானே கிள்ளிப் பார்த்துக் கொண்டான். இவ்விஷயங்கள் அவனுக்கு போலியாகத் தோன்றிய அதே நேரத்தில் ஏமாற்றத்தையும் அளித்தது. ஒரு கணம் அவன் அன்ஷல் ஒரு பிசாசாகக் கூட இருக்கலாம் என்று எண்ணினான். அவன் தனக்குத்தானே தைரியத்தை வரவழைத்துக் கொண்டான். அவன், அன்ஷல் யென்டிலாக இருந்தாலும்கூட அவர்களிடையேயுள்ள உறவை எக்காரணம் கொண்டும் முறித்துக் கொள்ளக்கூடாது என்று முடிவெடுத்தான்.

அவிக்டார் கைவிடப்பட்ட பெண்ணுக்காக சாட்சி சொல்ல முன் வரும் ஒருவன் அப்பெண்ணை திருமணம் செய்து கொள்ள முடியாது, சட்டம் - அவன், அவள் மேல் காதல் கொண்டிருப்பதால் தான் இப்படி நடந்து கொள்கிறான் என்று சொல்லிவிடு என்றான்.

அப்படியா? அது என்னுடைய விஷயத்தில் நடைபெறப் போவதில்லை என்றாள்.

நாம் இதைக் குறித்து எபிநேசர் புத்தகத்தில் பார்க்க வேண்டும் என்றான்.

கைவிடப்பட்ட பெண்ணைக் குறித்த சட்டத்தை இந்த விஷயத்தில் பொருத்திப் பார்க்க முடியாது என்று அறிஞர் தோரணையில் பேசினாள் அன்ஷல்.

அதற்கு அவன் நீ ஹடாஸை கன்னி கழியாத விதவையாக பார்க்க விரும்பாவிட்டால் அவளிடமே நேரிடையாக சொல்லிவிடுவதுதானே என்றான்.

அப்படி என்னால் செய்ய முடியாது.

எந்தவொரு சம்பவத்திலும் நீ மற்றொரு சாட்சியை முன்னிறுத்த வேண்டும் என்றாள்.

படிப்படியாக மீண்டும் அவர்கள் தங்கள் தால்முயூடிக் விவாதத்திற்குள் மூழ்கிவிட்டனர். இதற்கு முன்னர் இவர்கள் இணைவதற்கு தோரா காரணமாக இருந்தாலும், பரிசுத்த விதிகளுக்கு மாறாக ஒரு பெண்ணுடன் இணைந்து செயல்படுவதை பற்றி வினோதமாக உணர்ந்தான். அவர்கள் இருவரின் உடல்களும் வேறுபட்டவையாக இருந்தாலும் ஆன்மா ஒன்றாகத்தான் இருந்தது. அன்ஷல் தனது கைகளை ஆட்டி பேசும் விதத்தில், வசனங்களை இழுத்துப்பேசி உச்சரிப்பதில் என அனைத்து நடைஉடை பாவனைகளிலும் யெஷிவா மாணவனாகவே மாறிப் போயிருந்தாள். விவாதம் உச்சகட்டத்தை நெருங்கியபோது அவள் அவிக்டாரின் மேற்சட்டைப் பகுதியைப் பிடித்து இழுத்து முட்டாள் என்று கத்தினாள். அவிக்டார் அன்ஷல் மேல் கொண்டிருந்த அன்பின் காரணமாக அதை எளிதாக எடுத்துக் கொண்டான். அவன் தனது

நினைவுகளில் அன்ஷல் (என்கிற யெண்டிலை) தங்களது புனித நூலின் வரும் ரெப்மேயரின் மனைவியான ப்ருரீயாகவும், ரெப் நாக்மேனின் மனைவியான யால்டாவாகவும் எண்ணிக் கொண்டான். முதலாவதாக அவன் விரும்பியது இதைத்தான். உலகப் பிரகாரமான பொருட்களின் மேல் ஆசை கொள்ளாத மனைவி அமையவேண்டுமென்பது ..... அவனுக்கு இப்போது ஹடாஸின் மேல் உள்ள ஆர்வம் போய்விட்டது. அவன் யெண்டிலிற்காக ஏங்கிக் கொண்டிருந்த போதிலும் அவனுக்கு அதை வெளிப்படுத்த துணிவில்லை. அவன் உஷ்ணமாக உணர்ந்ததால் அவனது முகம் சிவக்கத் தொடங்கியிருந்தது. அவனால் அன்ஷலின் கண்களை நேரடியாக எதிர்கொள்ள முடியவில்லை. அன்ஷலின் பாவங்களை மனத்திற்குள்ளாக கணக்கிட்டு அவன் அவளின் மாதவிடாய் நாட்களில் அவளைத்தொட்டு அவளோடு நெருங்கி பழகியதால் தெரிந்தோ தெரியாமலோ தானும்கூட அதற்கு காரணமாகி விட்டதை எண்ணி வருந்தினான். ஹடாஸுடனான அவளது திருமணத்தைப் பற்றி என்ன சொல்வது? எத்தனை விதமான வரம்பு மீறல்கள், விரும்பி ஏற்றுக்கொண்ட தந்திரம், பொய்யான ஆணைகள், தவறான கருத்துரைகள், இன்னும் என்னவெல்லாம் நடந்ததோ கடவுள்தான் அறிவார் என்று நினைத்துக் கொண்டான்.

அவிக்டார் திடீரென அவளிடம் உண்மையைச் சொல், நீ கடவுள் மறுப்பாளர் தானே? என்று கேட்டான்.

கடவுள் மன்னிப்பாராக என்றாள்.

பின்னர் எப்படி நீ இப்படியொரு செயலை செய்ய முன்வந்தாய்? என்றான். அன்ஷல் அதிகமாக பேசியபோதிலும் அவிக்டார் குறைவாகவே புரிந்து கொண்டான். அன்ஷலின் அனைத்து விளக்கங்களும் ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றியே இருந்தது. அவள் ஒரு ஆணின் ஆத்மாவையும் பெண்ணின் உடலையும் கொண்டிருந்தாள் என்பதே அது. அன்ஷல் தான் அவிக்டாருக்கு அருகிலிருக்க வேண்டுமென்கிற ஒரே காரணத்தற்காகவே ஹடாஸை திருமணம் செய்து கொண்டதாகச் சொன்னாள்.

அதற்கு மாறாக நீ என்னையே திருமணம் செய்து கொண்டிருக்கலாம் என்றான் அவிக்டார். நான் நமது புனித நூலான கெமாராவையும் அதன் கருத்துரைகளையும் கற்கவே விரும்பினேன், உன்னுடைய காலுறைகளைத் தைத்துக் கொண்டிருப்பதற்கு அல்ல என்று கூறினாள் அன்ஷல்.

நீண்ட நேரத்திற்கு இருவரும் மௌனமாயிருந்தனர். மௌனத்திலிருந்து மீண்ட அவிக்டார், இதனால் அதிகம்

பாதிப்படைந்தது ஹடாஸ் தான். கடவுள் தான் அவளைக் காப்பாற்ற வேண்டும் என்றான்.

அதற்கு அன்ஷல் நானும் அதைக் குறித்துதான் அஞ்சுகிறேன் என்றாள்.



இப்போது என்ன நடக்கப் போகிறதோ? இருள் கவியத் தொடங்கிய வேளையில் இருவரும் தங்களது மாலைநேர ஜெபத்தை ஏறெடுக்கத் தொடங்கினர். குழப்பமுற்றிருந்த அவிக்டாரால் ஜெபத்தை சரியாக சொல்ல முடியவில்லை. தன்னருகிலிருந்த அன்ஷலைப் பார்த்தான் அவிக்டார். அவள் வானத்தை நோக்கி அண்ணாந்து பார்த்தபடி தீவிரமாக ஜெபம் செய்து கொண்டிருந்தாள். இருவரும் தங்களுடைய ஜெபத்தை முடித்துக் கொண்டுவிட்ட பிறகு எதிரெதிராக போடப்பட்டிருந்த நாற்காலிகளில் அமர்ந்தனர். இருள் சூழத் தொடங்கியிருந்த அவ்வறையின் ஜன்னல் வழியாக நுழைந்த மாலை நேர ஒளி கருஞ்சிவப்புநிற சித்திரப் பின்னலாக எதிரேயுள்ள சுவற்றில் படிந்து கொண்டிருந்த அவிக்டார் மீண்டுமொருமுறை தனது உரையாடலை தொடர முன்வந்த போது வார்த்தைகள் அவன் வாயிலிருந்து வெளியேற மறுத்தது.

திடீரென இருவரும் ஒரே நேரத்தில் தங்களது பேச்சைத் தொடங்கினர். இப்போது ஒன்றும் காலம் கடந்துவிடவில்லை? சாபத்திற்குரிய அந்த பெண்ணோடு இனியும் வாழ முடியாது. நீ என்ன நினைக்கிறாய், என்று கேட்டான் அவிக்டார்.

இல்லை அவிக்டார். அதற்கு வாய்ப்பில்லை.

ஏன்?

என்னுடைய வழியை நான் பார்த்துக் கொள்கிறேன்...என்றாள்.

உன்னைப் பிரிவது எனக்கு மிகவும் கடினமாக விஷயம் என்றாள்.

அதற்கு அன்ஷல் எனக்கும் கூட தான் என்றாள்.

மொத்தத்தில் இதன் அர்த்தம் தான் என்ன? என்று கேட்டான் அவிக்டார்.

அன்ஷல் அதற்கு பதிலெதுவும் சொல்லவில்லை. வெளிச்சம் தோய்ந்து இரவாகியிருந்தது. இருட்டினுள் ஒருவர் மற்றொருவரின்

அவிக்டார் தங்கியிருந்தது. பின்னர் அவன் பெச்சேவ்விற்கு பொலிவிழந்த கண்களுடனும் வாடிய முகத்துடனும் நோய்வாய்ப்பட்டது போல் திரும்பியது ஆகியவை அவர்களுக்கு ஆச்சரியமூட்டின. உடல்நலக்குறைவால் ஹடாஸ் படுக்கையில் கிடத்தப்பட்டு மருத்துவர் நாளொன்றுக்கு மூன்று முறை வந்து பார்த்துச் சென்றார். அவிக்டார் யாருடைய தொடர்பின்றி தனியாக இருந்து வந்தான். சந்தர்ப்பசவமாக யாரோ ஒருவர் அவனுக்கு நேரேதிராக வந்தாலும் அவன் பதிலளிக்கவில்லை. பெஷே தன்து பெற்றோர்களிடம் அவிக்டார் தனிமையில் தொடர்ச்சியாக புகைப்பிடிப்பதாகப் புகார் தெரிவித்தாள். அவன் சோர்ந்து படுக்கையில் விழுகையில் யாருமே அறிந்திராத யென்டில் என்ற பெண்ணின் பெயரை உச்சரித்தான். பெஷே விவாகரத்துப் பற்றிய பேச்சைத் தொடங்கினாள். ஊரார் அவிக்டார் இதற்கு கண்டிப்பாக சம்மதிக்கமாட்டான் அல்லது பணம் கேட்கக்கூடும் என்று எண்ணினர். அதற்கு மாறாக அவன் எந்தவித எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை.

பெச்சேவ் மக்கள் இதைப் போன்ற புதிரான விஷயங்களை முன்னெப்போதும் கேள்விப்பட்டிருக்கவில்லை. அடுத்த வீட்டில் என்ன சமைக்கப்படுகிறது என்பதைக் கூட அறிந்து கொள்ள முடிந்த ஒரு ஊரில், எத்தனை நாள் தான் ஒரு ரகசியத்தைப் பாதுகாக்க முடியும்? இருப்பினும் சிலர் சாவித் துவாரங்களின் வாயிலாகவும், கதவருகே காதுகளை வைத்து கேட்பதன் மூலமாகவும் இந்த புதிரை விடுவிக்க முயன்று கொண்டிருந்தனர். ஹடாஸ் தனது படுக்கையில் இருந்தபடியே அழுது கொண்டிருந்தாள். வுனினா என்ற மூலிகை மருத்துவர் அவள் தேவையில்லாமல் தன்னை வருத்திக் கொள்கிறாள் என்றார். அன்ஷல் திடீரென ஒரு நாள் எவ்வித சுவடுமில்லாமல் மாயமாகிவிட்டாள். ஆல்டர் விஷ்கோவர், அவிக்டாரை வீட்டிற்கு வரச் செய்தார். அவர்களிருவரும் என்ன பேசிக் கொண்டிருந்தார்கள் என்பதை ஜன்னலோரம் நின்றிருந்தவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. தொடர்ச்சியாக அடுத்தவர் விஷயத்தில் தலையிட்டு தங்களது கருத்துக்களை பரப்பும் சிலரால் கூட ஒரு குறிப்பிட்ட முடிவை எட்டமுடியவில்லை.

அத்தகைய கூட்டத்தைச் சேர்ந்த ஒருவர் அன்ஷல் கத்தோலிக்கப் பாதிரியாரிடம் அகப்பட்டு மதமாற்றம் அடைந்துவிட்டாள் என்றார். அது ஒரு வகையில் சரியாகவே தோன்றினாலும், யெஷியாவில் படித்துக் கொண்டிருக்கும் அன்ஷலுக்கு பாதிரியார்களைப் பார்ப்பதற்கு எப்படி நேரம் கிடைக்கும்? சமயக் கொள்கைகளை கடைப்பிடிக்காத ஒருவனால் எப்படி விவாகரத்துப் பத்திரத்தை அனுப்பி வைக்க முடியும்?

மற்றொரு கூட்டத்தார் அன்ஷெலுக்கு வேறொரு பெண்ணின் மேல் கண் உண்டு என்று சொல்லித் திரிந்தனர். தற்போது பெச்சேவ் வில் எந்த காதல் விவகாரமும் நடைபெறாத போது அது யாராக இருக்கக்கூடும்? சமீபத்தில் அது யூதர் அல்லது யூதரல்லாத எந்தப் பெண்ணும் ஊரைவிட்டு சென்றதாகத் தகவல் இல்லை.

சிலர் அன்ஷலுக்கு பேய்பிடித்திருக்கலாம் என்றும் கருத்துத் தெரிவித்தனர். உதாரணத்திற்கு அவள் குளியலகம் அல்லது ஆற்றிற்கு வந்ததேயில்லை என்றனர். அப்பாவி நபர்களை பேய் எளிதாகப் பிடித்துக் கொள்ளும் என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம் என்றனர். மேலும் ஹடாஸ் அவனை வெறுங்காலில் பார்த்ததேயில்லை. யாராவது தனது மனைவிக்கு விவரகாரத்து பத்திரத்தை அனுப்பிய பேயைப் பற்றி கேள்விப்பட்டதுண்டா? இறக்கும் தன்மையுள்ள ஒருவரின் மகளை எந்தப் பேய் திருமணம் செய்து கொள்ளும், அது அவளை விதவையாகத் தான் இருக்க செய்திருக்கும்.

யாரோ ஒருவருக்கு அன்ஷல் பெருந்தவறு இழைத்திருக்கக் கூடும் அதற்குப் பிராயச்சித்தமாக அவன் எங்கோ தன்னை ஒளித்துக் கொண்டிருக்கிறார் என்றனர். அவன் என்ன மாதிரியான தவறை செய்திருக்க முடியும்? அவள் எப்படி அவள் மதகுருவிடம் மறைத்திருப்பாள்? பின் அவிக்டார் ஏன் பேயை போல் திரிந்து கொண்டிருக்கிறான்.?

இவர்களில் டெவல் என்கிற இசைக்கலைஞனின் கூற்று உண்மையோடு சற்றே ஒத்துப் போகக்கூடியதாய் இருந்தது. டெவல் ஊர் மக்களிடம் அவிக்டரால் ஹடாஸை மறக்க முடியாமல் போயிருக்கலாம். அதனால் அன்ஷல் தனது நண்பனுக்கு உதவும் பொருட்டு ஹடாஸிற்கு விவாகரத்து பத்திரம் அனுப்பிவிட்ட பின்பு, அவர்கள் திருமணம் செய்வது உறுதியாகிவிடும் என்று நினைத்திருக்கலாம் என்றான். ஆனால் இத்தகைய நட்பு இந்த உலகில் சாத்தியமா? ஒருவேளை இப்படியே காரியங்கள் நடைபெற்றிருந்தால், அவிக்டார் பெஷேயை விவாகரத்து செய்வதற்கு முன்பாகவே அன்ஷல் ஏன் ஹடாஸை விவாகரத்து செய்ய வேண்டும்? மேலும், மனைவிக்கு இது குறித்த விபரங்கள் தெரிவிக்கப்பட்டு சம்மதம் பெற்றிருக்க வேண்டும். இவையனைத்திற்கும் அப்பாற்பட்டு ஹடாஸ் அன்ஷலின் மேல் மிகுந்த பிரியம் வைத்திருந்தாள் என்பது அனைவருக்கும் தெரியும், இதன் காரணமாகவே அவள் மனமுடைந்து நோய்வாய்ப் பட்டுவிட்டாள்.

ஒரு விஷயத்தை மட்டும் அனைவரும் அறிந்திருந்தனர். அவிக்டாருக்கும் கண்டிப்பாக உண்மை தெரியுமென்பதே அந்த

கருத்தாகும். ஆனால் அவனிடமிருந்து எந்த விஷயத்தையும் அவர்களால் பெற முடியவில்லை. அவன் தனிமையில் மௌனமாக அமைதி காத்ததே அனைவருக்கும் சந்தேகத்தை கிளப்பி விட்டது.

பெஷேயின் நெருங்கிய நண்பர்கள் அவிக்டாரை விவாகரத்து செய்ய வேண்டாம் என்று வலியுறுத்தினர். அவர்களிருவரும் ஒன்றாகவே இருந்திருந்தாலும், கணவன் மனைவியாக வாழ்ந்ததில்லை. அவன் வெள்ளிக்கிழமை இரவுகளில் நடத்தப்படும் மதச்சடங்குகளில் கலந்து கொண்டு தனது மனைவிக்கு வாழ்த்துக்களை பகிர்ந்து கொண்டதேயில்லை. அவன் பெரும்பாலும் அன்ஷல் தங்கியிருந்த விதவைப் பெண்மணியின் வீட்டிலேயே நேரத்தை செலவு செய்து கொண்டிருந்தான். பெஷே இதைக்குறித்து அவனிடம் கேட்கையில் அவன் தலையை கீழேத் தொங்கபோட்டபடி அமைதியாக நின்றிருப்பான். வியாபாரத்தில் ஈடுபடுகிற பெண்ணான பெஷேயால் இதைப் பொறுத்துக் கொள்ளவே முடியாது. அவள் தன்னுடைய கடையில் உதவுகிற இளைஞனைத்தான் தேடிக்கொண்டிருந்தாள். இதைப் போல் கனவுகளில் மூழ்குகின்ற யெஷிவா மாணவனை அல்ல யாரோ ஒருவன் இத்தகைய விஷயத்தை அவனது தலைக்குள் புகுத்தி அவளைத் தனிமையில் விட்டுவிட வழி வகுத்திருக்க வேண்டும். பெஷே விவாகரத்திற்கு சம்மதம் தெரிவித்தாள்.

அதே வேளையில், ஹடாஸ் தனது நோயிலிருநது குணமாகிவிட்டாள். ரெப் ஆல்டர் விஷ்கோவர் ஹடாஸின் திருமணம் ஒப்பந்தம் முடிவிற்கு வந்ததாய் அறிவித்தார். இனி ஹடாஸ் அவிக்டாரை மணந்து கொள்ளப்போகிறாள். இதைக் குறித்து ஊர் மக்கள் மீண்டும் ஆர்வமடைந்தனர். ஏற்கனவே திருமணம் நிச்சயிக்கப்பட்டு சில நாட்களுக்கும் பின், இந்நிச்சயதார்த்தம் கைவிடப்பட்டது என்று அறிவிக்கப்பட்ட பின், மீண்டும் அதேப் பெண் மற்றும் ஆணுக்கிடையே திருமணம் நடைபெற்றது. இந்த ஊர் மக்கள் இதுவரை கேள்விப்படாத விஷயம். இவர்களிடையேயானத் திருமணம் திசே பிஅவ் என்கிற புனித நாளுக்கு பின் வந்த முதல் ஞாயிற்றுக்கிழமையன்று நடந்தேறியது. ஒரு கன்னிகழியாத மணமகளுக்கு நடைபெற வேண்டிய அத்தனை சடங்குகளும் விமரிசையாக நடந்தேறின. ஏழைகளுக்கான உணவுப் பந்தி, மடாலயத்திற்கு முன்பாக போடப்பட்ட பந்தல், இசைகலைஞர்களின் ஆடல் பாடல் நிகழ்ச்சி என அனைத்தும் நடந்தேறியது.

ஒரேயொரு விஷயம் மட்டும் குறைவுப்பட்டது. அது மகிழ்ச்சி மட்டுமே. மணமகன் கல்யாணப் பந்தலுக்கு கீழே மகிழ்ச்சியற்றவனாகக் காணப்பட்டான். மணப்பெண் தனது

நோயிலிருந்து விடுபட்ட போதிலும் ஒல்லியானத் தோற்றத்துடன் முகம்வெளுத்து காணப்பட்டாள். அவள் கண்களிலிருந்து வெளிக் கிளம்பிய கண்ணீர் அங்கு வைக்கப்பட்டிருந்த கோழிச் சாறினுள் விழுந்து தெறித்தது. அங்கு குழுமியிருந்த மக்கள் அனைவரின் கண்களிலும், அன்ஷல் ஏன் இப்படி செய்தான்? என்ற கேள்வி இன்னமும் மீதமிருந்தது.

அவிக்டாருக்கு ஹடாஸுடன் திருமணம் முடிந்தவுடன், பெஷே தனது பங்கிற்கு அன்ஷல் தன்னுடைய மனைவியை அவிக்டாருக்கு விற்றுவிட்டதாகவும், இந்தத் தொகை ஆல்டர் விஷ்கோவரால் தரப்பட்டது என்றும் வதந்தியைப் பரப்பினாள். இவர்களின் கதையை நீண்ட நாட்களாக பேசிக் கொண்டிருந்த இளைஞனொருவன் இறுதியாக அன்ஷல் தன்னுடைய மனைவியை அவிக்டாருடன் நடைபெற்ற சீட்டாட்டத்திலோ அல்லது யூத விடுமுறை நாளன்று விளையாடப்படும் சூதாட்டத்திலோ பணம் வைத்து தோற்றிருக்கலாம் என்ற முடிவிற்கு வந்திருந்தான். உண்மையை கண்டடைய முடியாத சந்தர்ப்பங்களிளெல்லாம் மக்கள் தாங்கள் உண்டு திருப்தியடைந்து கொள்கிறார்கள்.

உண்மையும் கூட அடிக்கடி யாருமறியாத வகையில் மறைத்து வைக்கப்படுகிற போது, எந்த அளவிற்கு நீங்கள் உறுதியாகத் தேடினாலும் அதைக் கண்டடைவதற்கு கடினமாகத்தான் தோன்றும்.

திருமணத்திற்குப் பின் சீக்கிரமாகவே ஹடாஸ் கருவுறவும் செய்தாள். தம்பதியருக்கு ஆண் குழந்தை பிறந்ததால் சுன்னத் திருநாளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வின் போது குழந்தையின் தந்தை தனது மகனை அன்ஷல் எனப் பெயரிட்டு அழைத்த போது அங்கு குழுமியிருந்த மக்கள் ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர்.



05.03.1953 இல் ஸ்டாலின் இறந்த போது ரஷ்யாவெங்கும் பீதியும், குழப்பமும், வேதனையும் வெளிப்படுத்தப்படுகின்றன. சுதந்திரமாயில்லாதவர்கள் எப்போதும் தம் அடிமைத்தனத்தை லட்சியப்படுத்துகின்றனர் என்று குறிப்பிடுகிறார் பாஸ்டர்நாக்.

டாக்டர் ஷிவாகோ நாவலை வெளியிட Novy Mir எனும் இதழ் மறுக்கின்றது. ஸ்டாலினையும், கூட்டு வாழ்க்கை, குலக் போன்றவற்றைக் கடுமையாக விமர்சிக்கும் அது, சோவித்திற்கு எதிரானது எனக் கடுமையாக கண்டனம் செய்யப்படுகிறது. இந்நிலையில் செர்ஜிடோ டி ஏஞ்சலோ என்னும் பத்திரிக்கையாளரின் இரகசிய உதவியால் நாவல் 1957ல் இத்தாலியில் பிரசுரிக்கப்படுகிறது.

1958ல் பாஸ்டர்நாக்கிற்கு நோபல் பரிசு அறிவிக்கப்படுகிறது. 1946லிருந்து 1950 வரை ஒவ்வோராண்டும் பாஸ்டர்நாக் பெயர் பரிசீலிக்கப்பட்டு வந்தது, 1958 இப் பரிசு அறிவிக்கப்பட்டது என்கிறார் நோபல் குழுத் தலைவர் லார்ஸ் கில்லென்ஸ்டென்.

ஆனால், இப்பரிசின் பின்னணியில் ஒரு சூழ்ச்சியும் உண்டு. பாஸ்டர்நாக்கிற்கும் ரஷ்ய அரசுக்குமிடையிலான சிநேகபாவமாற்ற உறவு நிலையைப் பயன்படுத்திக் கொண்டு அமெரிக்கா, சிஅய்ஏ மூலம் டாக்டர் ஷிவாகோவை ரகசியமாக ரஷிய மொழியில் அச்சிட்டு விநியோகித்தது. பாஸ்டர்நாக்கிற்கு நோபல் பரிசு வாங்கித்தந்தது. சர்வதேச நம்பகமின்மையை சோவியத் அரசுக்கு சுமத்துவது நோக்கம். இதில் அமெரிக்க சிஅய்ஏவுடன் ஒத்துழைத்தது பிரிட்டிஷ் உளவு நிறுவனம் **M16.**

அடுத்து, நோபல் குழுவிடம் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் நூற்றுக்கணக்கில் பிரச்சார இயக்கங்களை/ குழுக்களை முடுக்கிவிட்டது சிஅய்ஏ. டச்சுப் பதிப்பகம் மூலம் ஒரு பதிப்பு கொண்டு வரப்பட்டு, பெல்ஜியத்தில் நடந்த ப்ரஸ்ஸல்ஸ் புத்தகக் கண்காட்சிக்கு 500 பிரதிநிதிகள் அவசர அவசரமாக அனுப்பப்பட்டன.

இதற்கிடையே, அல்பெர்ட்டோ மொரேவியா என்பவருக்கு நோபல் பரிசு கிடைத்து விடலாம் என்னும் கவலையை பாஸ்டர்நாக் தன் கடிதம் ஒன்றில் வெளிப்படுத்தி இருந்தார். 23.10.1958ல் பாஸ்டர்நாக்கிற்கு பரிசு அறிவிக்கப்பட்டுவிடுகிறது. ரஷ்ய தன்னுணர்ச்சிக் கவிதைக்கான பங்களிப்பு மற்றும் மாபெரும் ரஷிய இதிகாச மரபைத் தொடர்வதிலான பங்கு பணிக்காக பரிசளிக்கப்படுவதாக அறிவிக்கப்படுகிறது.

சோவியத் அரசு தன் அதிருப்தியை கடுமையாகவே வெளிக்காட்டுகிறது. பாஸ்டர்நாக்கை வெளியேற்றிவிடவும்

எண்ணுகிறது. பரிசு பெறும் பொருட்டு அவர் ஸ்டாக்ஹோம் சென்றால் திரும்ப அவரை, தன் நாட்டுக்குள் அனுமதிக்கக்கூடாது என்று கருதுகிறது.

இதனால் பாஸ்டர்நாக் பரிசுக்குழுவுக்கு ஒரு தந்தி அனுப்புகிறார். எனக்களிக்கப்பட்ட தகுதியற்ற இச்சிறப்பினை கைவிடுகிறேன்.

தாய்நாட்டை விட்டுப்போவது சாவுக்கு ஒப்பாகும். பிறப்பாலும், வாழ்வாலும் பணியாலும் ரஷ்யாவுடன் பிணைக்கப்பட்டிருப்பவன் நான், என்று பிரதமர் குருசேவுக்கு எழுதுகிறார் பாஸ்டர்நாக்.

பரிசு வழங்கும் விழா நிகழாது போனது. ஆனால் 1989ல் பாஸ்டர்நாக்கின் மகன் யெவ்கெனி பரிசைப் பெற்றுவந்தார்.

நேருவின் தலையீட்டால்தான் குருசேவ் பாஸ்டர்நாக்கை வெளியேற்றாது விட்டார் என்பதையும் யெவ்கெனி பதிவு செய்துள்ளார்.

இதற்கெல்லாம் பிராயச்சித்தமாக டாக்டர் ஷிவாகோ 1988ல் **Novy Mir** இல் தொடராக வெளிவந்தது. 1980ல் கண்டறியப்பட்ட சிறியதொரு கோளுக்கு 3508 பாஸ்டர்நாக் என்று பெயரிடப்பட்டது.

இருதயக் கோளாறு, நுரையீரல் புற்றுநோய், இரைப்பைச் சிக்கல் போன்றவற்றால் 30.05.1960ல் இறந்து போகும் பாஸ்டர்நாக், பிரதானமாக ஒரு கவிஞர். அடுத்து மொழிபெயர்ப்பாளர் கதே, ஷேக்ஸ்பியர் போன்றவர்களது படைப்புகளை ரஷிய மொழியில் தந்தார். பின்னரே உரைநடை ஆசிரியராக டாக்டர் ஷிவாகோ வை எழுதினார். நோபல் பரிசு இல்லாமலேயே கூட அதன் காரணமான அரசியல் நெருக்கடிகள் இல்லாமலேயேகூட பாஸ்டர்நாக் உலகறிந்த இலக்கிய ஆளுமையாக திகழ்ந்திருக்க முடியும். தூரந்தொலைவிலுள்ள குட்டிக் கோளால் எந்த ரணத்தை / சித்திரவதையை தணிக்க / குணப்படுத்த இயலும்?

இங்கு பாஸ்டர்நாக், டால்ஸ்டாய் இறந்தபோது எழுதியிருந்த ஒரு குறிப்பைத் தருவது சரியாக இருக்கும். தந்தையுடன் அஸ்டபோவோ நிலையத்திற்கு இரயிலில் சென்றபோது மனதில் தோன்றியதை அவர் இப்படி எழுதினார்.

ஓய்வெடுத்துக் கொண்டிருந்த, உழப்பட்ட பூமியை ஜன்னல்கள் வழியாக காணமுடிந்தது. ஒரு கல்லெறி தூரத்தில் அருகாமையிலேயே தனது கடைசி மாவீரன் இறந்திருந்தது பூமிக்குத் தெரியாது - அவன் தன் பரம்பரை காரணமாக அவளது மன்னனாக இருந்திருக்கக் கூடியவன். உலகின் நுணுக்கங்களெல்லாம்

சேர்ந்துள்ள நன்கு பரிசோதிக்கப்பட்ட ஞானமுடைய அவன் அனைவருக்கும் சலுகைகள் தரக்கூடியவனாகவும் பெறக் கூடியவனாகவும் இருந்திருக்கக் கூடியவன். எனினும் அதே பூமி மீதான நேசத்தால், அதனுடன் முனைப்புக் கொண்டிருந்த காரணத்தால் குடியானவனின் ஆடையணிந்து கலப்பையின் பின் நடந்து போனான். (P.Z77, Selected Writings and Letters / Boris Pasternak / Progress Publishers, Moscow, 1990)

பாஸ்டர்நாக்கின் நேர்முகம்

ஒல்கா கார்லிஸ்லே யால் இரண்டு மூன்று சந்திப்புகளில் பதிவு செய்யப்பட்டது. பாரிஸ் ரிவ்யூ தொகுதி 25, 1960 இல் வெளியானது. தமிழில் சா.தேவதாஸ்.

சக கவிஞர் ஒருவருக்கு பாஸ்டர்நாக் எழுதிய கடிதத்திலிருந்து ஒரு பகுதி.

இன்னோசை சுரக்கோட்பாட்டின் பாலும்,

அலெக்ஸாண்டர் ப்ளாக் "ascent" என்னும் சொல்லுக்கு அளித்த அதியுன்னத அர்த்தத்தின்பாலும் நீங்கள் கொண்டுள்ள விசுவாசம் போன்றே, பெரும்பாலான உங்களது படைப்பின் இன்னோசையின் அசலானதன்மை எனக்கு மிகவும் பிடித்தமானது.

எனது பெரும்பாலான சமீபத்தைய கவிதைகளின் வாசிப்பிலிருந்து, நானும் அதே தர்க்கத்தில் இருப்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள். ஆனால் அலெக்ஸாண்டர் ப்ளாக்கிடம் இருப்பது போலவே, தாக்கம் ஏற்படுத்தாத எதிரொலி காற்றில் மடிந்துவிடுவது என, முதலில் நம்மை வசீகரித்த சப்தங்களின் நினைவூட்டலாக மட்டுமே இல்லாமல், இச்சுரக்குறிப்பு எண்ணங்களின் அறுதியான தெளிவிற்கு இயங்க வைக்கின்றது, வெளிப்படுத்துகிறது, மறு அவதாரம் கொள்ள வைக்கிறது மற்றும் வெளியிடுகிறது என்பதை நாம் உறுதிப்படுத்திட முயலவேண்டும்.

ஒரு ஜனவரி மாதத்தில் நான் மாஸ்கோவுக்கு வந்த 10 நாட்களுக்குப் பிறகு பாஸ்டர்நாக்கை போய் பார்க்கவேண்டும் என்று தீர்மானித்தேன். பல ஆண்டுகளாக அவரைஅறிந்திருந்த என் பெற்றோரிடமிருந்து, அவரைப் பற்றி நான் நிறையவே தெரிந்து கொண்டிருந்தேன். எனது ஆரம்ப ஆண்டுகளிலிருந்தே அவரின் கவிதைகளை கேள்விப்பட்டிருந்தேன். விரும்பியிருந்தேன்.

என் பெற்றோரிடமிருந்தும் மற்ற அபிமானிகளிடமிருந்தும் அவருக்கு எடுத்துச் செல்ல என்னிடம் செய்திகளும் அன்பளிப்புகளும் இருந்தன. ஆனால் பாஸ்டர்நாக்கிடம் தொலைபேசி இல்லை என்பதை மாஸ்கோவில் கண்டறிந்தேன். குறிப்புச் சீட்டு

அனுப்புவது மிகவும் விலகியதாயிருக்கும் என்று அதனைக் கைவிட்டேன். ஏகப்பட்ட கடிதத் தொடர்பு காரணமாக அவரைப் பார்ப்பதற்கான வேண்டுகோள் படிவம் ஒன்று அவரிடம் இருந்திருக்க வேண்டும் என்று பயந்தேன். அவ்வளவு புகழ்பெற்ற ஒருவரை முன்கூட்டியே தெரிவிக்காமல் பார்ப்பது பெரும் முயற்சியை வேண்டியது. தன்னுணர்ச்சிப் பாங்கானதும் உந்துதல் மிகுந்ததும் எல்லாவற்றுக்கும் மேலாக இளமை நிரம்பியதுமான அவரது கவிதைகளால் உணர்த்தப்பட்ட அவரைப் பற்றிய என் படிமத்திற்கு, அவர்தன் பிற்காலங்களில் நியாயம் செய்யாது போய்விடுவாரோ என்று பயந்தேன்.

அவர் நோபல் பரிசு வாங்குவதற்குச் சற்று முன்னர், 1957ல் பாஸ்டர்நாக்கைச் சந்தித்த என் பெற்றோர் ஞாயிறுகளில் அவர் பார்க்க அனுமதித்தார் என்று குறிப்பிட்டிருந்தனர். ரஷ்யர்களிடம் இருந்துவந்த இம்மரபு வெளிநாட்டு ரஷ்யர்களிடம் நீட்சி கொண்டது. பாரிஸில் பதின்பருவத்தினளாக இருந்த நான், ஞாயிற்றுக்கிழமைப் பிற்பகல்களில் எழுத்தாளர் ரெமிஸோவையும் புகழ்பெற்ற தத்துவாசிரியர் பெர்ட்யாயேவையும் பார்க்க அழைத்துச் செல்லப்பட்டது எனக்கு நினைவிலிருக்கிறது.

மாஸ்கோவில் இரண்டாவது ஞாயிறன்று பெரிடெல்கினோ போவதென்று சட்டென்று முடிவெடுத்தேன். நான் தங்கியிருந்த நகரின் மையத்திலிருந்து பார்க்கையில், அன்றைய பிரகாசமான நாளில், கிரெம்ளினின் பொன் விமானங்களில் பொலிவான பனி பளிச்சிட்டது. தெருக்களில் பார்வையாளர்கள்



நிறைந்து காணப்பட்டனர். குடியானவர்களைப் போல நகரிலிருந்து வெளியேறிய அவர்கள் கிரெம்ளின் நோக்கி நடந்து கொண்டிருந்தனர். புதிய தொட்டாற் சிணுங்கிக் கொத்துக்களை பலர் எடுத்துச் சென்றனர். சில வேளைகளில் ஒரு காம்பினை வைத்திருந்தனர். குளிர்கால ஞாயிறுகளில் மாஸ்கோவுக்கு தொட்டாற்சிணுங்கிப் பூக்கள் நிறையவே தருவிக்கப்பட்டன. அன்றைய தினத்தின் பவித்திரத்தைக் குறிப்பது போல, ஒருவருக்குத் தரும் பொருட்டோ வெறுமனே கொண்டு செல்லவோ, ரஷ்யர்கள் அவற்றை வாங்கினர்.

மாஸ்கோவின் எல்லைக்கருகிலுள்ள கீவ் இரயில் நிலையத்திலிருந்து ஒரு மின் ரயில் செல்வதை நான் அறிந்திருந்தாலும், பெரொடங்கினோவுக்கு வாடகைக் கார் அமர்த்த முடிவெடுத்தேன். அந்நியரை வரவேற்பதில் பாஸ்டர்நாக்கிற்குள்ள விருப்பமின்மை குறித்து விபரமறிந்த மாஸ்கோவாசிகள் திரும்பத் திரும்ப எச்சரித்திருந்தாலும், திடீரென்று அங்கு போகும் அவசரத்தில் இருந்தேன். என் செய்திகளைச் சேர்க்கவும், அவரின் கையைக் குலுக்கிவிட்டுத் திரும்பும் ஆயத்தமாயிருந்தேன்.

எங்கேனுமுள்ள வாடகைக் கார் ஓட்டுனர்களுக்குரிய ஊர்-பேர் தெரியாததன்மை கொண்ட இளைஞ்ரான வண்டி ஓட்டுனர் தனக்கு பெரோடல்கினோவை நன்றாகத் தெரியும் என்று எனக்கு உறுதியளித்தார். கீவ் நெடுஞ்சாலையில் சுமார் 30 கி.மீ. தூரத்திலிருந்தது அது. வாடகைக் கட்டணம் சுமார் 30 ரூபிள்கள் (சுமார் 3 டாலர்கள்) அன்றைய இனிதான சூரியஒளி வீசும் தினத்தில் போக வேண்டும் என்பதை அவர் முற்றிலும் இயற்கையானதாகக் கண்டதாகத் தோன்றிற்று.

ஆனால் தனக்குப்பாதை நன்கு தெரியும் என்று ஓட்டுனர் கூறிக் கொண்டது வெறும் பீற்றலே. நாங்கள் சீக்கிரமே பாதையைத் தவறவிட்டுவிட்டோம். பனியோ விளம்பரப் பலகைகளோ பெட்ரோல் நிலையங்களோ இல்லாத நான்குவழிச் சாலையில் அதிவேகத்தில் சென்றிருந்தோம். மங்கலான சாலை அடையாளங்கள் சில இருந்தன. ஆனால் அவை எங்களை பெரெடெல்கினோவுக்குத் திருப்பிவிடுவதில் தவறிவிட்டன. எனவே வழியில் தென்பட்டவர்களிடமெல்லாம் திசைவழி கேட்க நிற்கத் தொடங்கினோம். ஒவ்வொருவரும் நட்பார்ந்தவராக உதவ விரும்புபவராக இருந்தனர். ஆனால் பெரோடல்கினோவைத் தெரிந்தவராக யாரும் தோன்றவில்லை. முடிவில்லாத வெண்ணிற வயல்களின் வழியே, பாதையில்லாத உறைந்த தடத்தில் நீண்ட நேரம் சென்றோம். இறுதியில் மாஸ்கோவுக்குப் புறத்திலுள்ள

பிரும்மாண்டமான புதிய அடுக்கக வீடுகளுக்கு மாறான வகையில் இன்னொரு சகாப்தத்தின் கிராமத்தில் நுழைந்தோம். நேரான பிரதான வீதியின் இருமருங்கிலும் பழமையாகத் தோன்றும் தாழ்வான மரக்குடில்கள் கொண்டது அது. குதிரை வண்டி ஒன்று கடந்து போனது. மரத்திலான சிறிய தேவாலயமருகே கைக்குட்டையால் தலையை மூடியிருந்த பெண்கள் கூடியிருந்தனர். பெரெடெல்கினோவுக்கு அருகாமையிலுள்ள குடியிருப்பில் நாங்கள் இருநதோம் என்பதைக் கண்டுக் கொண்டோம். அடர்ந்த செடி கொடிகள் மரங்களினூடாகச் செல்லும் சாலையில் பத்து நிமிடம் சென்ற பிறகு பாஸ்டர்நாக்கின் வீட்டின் முன்னே இருந்தேன். அதன் புகைப்படங்களை பத்திரிக்கைகளில் பார்த்திருந்தேன். சட்டென்று அது என் வலப்புறத்தே இருந்தது. ஃபிர் மரங்களின் பின்புலத்தில் ஒரு சரிவில் நின்றபடி நாங்கள் சட்டென்று நகருக்குள் நுழைத்து சாலையைப் பார்த்தப்படி பெரிய ஜன்னல்களுடன் பழுப்பு நிறத்தில்,

விருந்தோம்பும் தோற்றத்தில் பிரகாசமாக மதிய வேளையின் வசீகரம் கொண்ட, அங்குமிங்குமாகச் சிதறிக் கிடந்த சிறிய நகரமே பெரெடெல்கினோ. நானறிந்தவரை, பல எழுத்தாளர்களும் கலைஞர்களும் தங்களுக்குத் தரப்பட்ட வீடுகளில் ஆயுள் முழுவதும் அங்கு வாழ்ந்தனர். சோவியத் எழுத்தாளர்கள் ஒன்றியம் எழுத்தாளர்களுக்காகவும் பத்திரிக்கையாளர்களுக்காகவும் நடத்திய பெரிய ஓய்வில்லம் இருந்தது. ஆனால் நகரின் ஒரு பகுதி சிறிய கைவினைக் கலைஞர்களுக்கும் குடியானவர்களுக்கும் இன்னும் உரியதாயிருந்தது மற்றும் சூழலில் கலைதன்மை கொண்டதாக ஏதுமில்லை.

புகழ்வாய்ந்த இலக்கிய விமர்சகரும் குழந்தைகள் நூல்களின் ஆசிரியருமான சுகோவ்ஸ்கி, வசதியானதும், விருந்தோம்பல் கொண்டதுமான புத்தகங்கள் அடுக்கப்பட்ட வீட்டில் வசிக்கிறார். அவர் நகரத்துக் குழந்தைகளுக்காக இனியதொரு சிறு நூலகத்தை நடத்துகின்றனர். ரஷ்யாவின் வாழும் நாவலாசிரியர்களுள் சிறப்பாக அறியப்பட்டவருள் ஒருவரான கான்ஸ்டாண்டின் ஃபெடின், பாஸ்டர்நாக்கிற்கு அடுத்த வீட்டில் வசிக்கிறார். அவர் இப்பொழுது எழுத்தாளர்கள் ஒன்றியத்தின் பொதுச் செயலாளர். 1956ல் தான் இறக்கும் வரை இங்கே வாழ்ந்திட்ட அலெக்ஸாண்டர் ஃபதீவாவ் இப்பதவி நீண்டகாலத்திற்கு வகிக்கப்பட்டது. பிற்பாடு 1930களில் தான் கைது செய்யப்பட்டதும், அங்கு ஒருபோதும் திரும்பியிராததுமான ஐஸக் பேபரின் இல்லத்தை பாஸ்டர்நாக் எனக்குக் காட்டினார்.

மலையிலிருந்து சரிந்து ஒரு நீரோடைக்குச் செல்லும் இனிதாய் வளைந்து செல்லும் கிராமத்துச் சாலைமேல் பாஸ்டர் நாக்கின் வீடு இருந்தது. பிரகாசமான அன்றைய தினத்தன்று அக்குன்று, பொம்மைக் காடிகள் அடைப்பட்ட சறுக்கு வண்டிகளிலும் கட்டைகளிலும் குழந்தைகளால் நிறைந்திருந்தது. அவ்வீட்டிலிருந்து சாலையைத் தாண்டி வேலியிடப்பட்டட பெரிய வயல் இருந்தது. கோடையில் சாகுபடி செய்யப்பட்ட சமுதாய வயல் அது. இப்போது அது சாகலின் ஓவியத்திலிருந்து வெளிப்பட்ட, சிறியதொரு பின்புலமான, குன்றின் மீதான சிறிய கல்லறையால் மேலாதிக்கம் செலுத்தப்பட்ட பாரிய வெண்பரப்பாயிருந்தது. பிரகாசமான நீலம் தீட்டப்பட்ட மரவேலிகளால் கல்லறைகள் சூழப்பட்டிருக்க, குறுக்குமறுக்குமாக சிலுவைகள் நடப்பட்டிருக்க, அழுத்தமான இளஞ்சிப்பிலும் சிவப்பிரசமான காகித மலர்கள் பனியில் அரைபாதி புதையுண்டியிருந்தன. அது ஒரு உற்சாகமிகு கல்லறை.

வீட்டு முற்றம், நாற்பதாண்டுகளுக்கு முந்தைய அமெரிக்காவின் சட்டமிடப்பட்ட வீடெனத் தோன்றிற்று. ஆனால் ஃபிர் மரங்களுக்கு எதிராக இருந்ததால், ரஷிய அடையாளத்தைக் கொண்டிருந்தது. நகரைச் சுற்றிலும் அம்மரங்களின் சிறு தோப்புகளே இருந்த போதும், அவை நெருங்கி வளர்ந்து அடர்ந்த வனத்தில் உணர்வை தந்தன.

ஓட்டுனருக்குக் கட்டணத்தைத் தந்துவிட்டு துணிச்சலுடன், சாலையிலிருந்து தோட்டத்தைப் பிரித்திட்ட கேட்டினைத் திறந்து, இருண்ட வீட்டை நோக்கி நடந்தேன். சிறிய முற்றத்தின் ஒருபுறத்து கதவில் ஒட்டப்பட்டிருந்த சுருங்கிப் போன, ஆங்கிலத்தில் எழுதப்பட்ட குறிப்பு, இப்போது நான் பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். யாரையும் நான் வரவேற்க இயலாது, தயவு செய்து போய்விடவும், என்றது. தருணத் தயக்கத்திற்குப் பின்னர், அதனைத் ஒதுக்கித்தள்ள முடிவு செய்தேன். அது பழையதாகத் தோன்றியதும் என்கைகளில் சிறிய பொதிகள் இருந்ததும் தான் காரணம். கதவைத் தட்டினேன் அநேகமாகச் சட்டென்று கதவு திறக்கப்பட்டது. பாஸ்டர்நாக்கினாலேயே.

முரட்டுத் துணித் தொப்பி அணிந்திருந்தார். ஈர்க்கும் பகையில் பொலிவோடு இருந்தார். உயர்ந்த கன்ன எலும்புகள் மற்றும் கருப்பு விழிகளுடனும் கம்பளித் தொப்பியுடனும், ரஷியக் கதையொன்றிலிருந்து வெளிப்பட்டவரராகத் தோன்றினார். பயணத்தின் நெருக்கியடித்த பதற்றத்தால் சட்டென்று ஆசுவாசத்தை உணர்ந்தேன். நான் பாஸ்டர்நாக்கைச் சந்திப்பேனா என ஒருபோதும் சந்தேகித்திருந்ததில்லை என்றெனக்குத் தோன்றியது.

என் தந்தையின் நெகிழ்வூட்டும் பெயரைப் பயன்படுத்தி வாதிம் லியோனிடோவிச் சின் மகள் ஒல்கா ஆண்ட்ரீவென என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன். சிறுகதை ஆசிரியரும், நாடகாசிரியரும் He who gets slapped, The seven that were Hanged முதலான நாடகங்களை எழுதியவருமான லியோனிடின் முதல் பெயர் மற்றும் இறுதிப் பெயரால் ஆனது அது. ஆண்ட்ரீவ் என்பது மிகவும் பொதுவான ரஷ்யப்பெயர்.

அவரைப் பார்ப்பதற்கென நான் வெளிநாட்டிலிருந்து வந்திருந்தேன் என்றுணர பாஸ்டர்நாக்கிற்கு ஒரு நிமிடம் பிடித்தது. என் கையைத் தன்னிருகைகளாலும் பற்றிக் கொண்டு என் தாயாரின் ஆரோக்கியம், தந்தையாரின் எழுத்து மற்றும் பாரிஸில் கடைசியாக நான் எப்போதிருந்தேன் என்று விசாரித்தபடி, என் குடும்ப ஒப்புமையை என் முகத்தில் நெருக்கமாய் கவனித்தவாறும், பெரும் அன்புடன் என்னை வரவேற்றார். தொலைபேசி அழைப்புகள் சிலவற்றுக்கு பதிலளிக்கப் போய்க்கொண்டிருந்தார். ஒரு நிமிடம் தாமதித்திருந்தால் அவரைத் தவறவிட்டிருப்பேன். எழுத்தாளர் மன்றம் வரும்வரை தன்னுடன் நடந்து வருமாறு கேட்டுக் கொண்டார்.

அவர் கிளம்புவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்த வேளையில், எனக்குக் காட்டப்பட்டிருந்த சாப்பாட்டு அறையின் எளிய வசதிகளை நோட்டமிட எனக்கு வாய்ப்பிருந்தது. உள்ளே அடியெடுத்து வைக்கையிலிருந்து மாஸ்கோவிலுள்ள லியோ டால்ஸ்டாயின் வீட்டுடனான ஒத்த தன்மையால் அதிர்ந்து போயிருந்தேன். முந்தைய தினம் அங்கு சென்று வந்திருந்தேன். இரண்டிலுமான சூழல் எளிமையினையும், விருந்தோம்பலையும் ஒருசேரக் கொண்டிருந்தது. ஒரு விதத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டு ரஷ்ய அறிவுஜீவியின இல்லத்தின் பண்பு நலன் அது என்றெண்ணினேன். வசதியாயிருந்த மேசை நாற்காலிகள் பழமையானவையாகவும், பாவனையில்லாதும் இருந்தன. திரை பொழுது போக்கிற்கும் சிறுவர் கூடுவதற்கும் கடுமையாக உழைப்பதற்குமான இடைசியப் பூர்வமானவையாக அறைகள் காணப்பட்டன. டால்ஸ்டாயின் இல்லம் அக்கால கட்டத்திற்குப் பெரிதும் எளிமையாய் இருந்ததாலும், பாஸ்டர்நாக்கினுடையதை விட பெரிதாய் விசாலமானதாய் இருந்தது. ஆனால் நேர்த்தி குறித்து அக்கறையில்லாதிருந்தது. அல்லது காட்சியழகு ஒன்றேயானதாயிருந்தது.

வழக்கமாக, பாஸ்டர்நாக்கின் வீட்டுக்குள் சமையலறை வழியாகவே ஒருவர் நடந்து செல்ல வேண்டும். அங்கே

புன்னகைக்கும் நடுத்தர வயதுடைய சிறிய சமையல்காரரால் அவர் வரவேற்கப்படுவார். ஒருவரின் ஆடையிலிருந்து பனியைத் தட்டிவிட அவர் உதவுவார். பகட்டான ஜெரேனியச் செடிகள் வளர்ந்த ஜன்னலுடைய சாப்பாட்டறை அடுத்து வந்தது. அந்த எழுத்தாளரின் அப்பா லியோனித் பாஸ்டர்நாக் வரைந்த கரிக்கட்டை உருவரை ஓவியங்கள் சுவர்களில் தொங்கின. உருவச் சித்திரங்களும் முழு உருவ விவரிப்புகளும் அங்கிருந்தன. போரிஸ் பாஸ்டர்நாக் அவரது சகோதர-சகோதரியர் சிறுவர்களாக இருந்த விவரிப்புகளும் பெரிய தொப்பிகளில் உள்ள பெண்களின் ஓவியங்களும் இருந்தன. பாஸ்டர்நாக்கின் பதின்பருவக் காதல் குறித்த அவரது ஆரம்பகால ஞாபகங்களின் உலகமாகவே அது பெரிதும் இருந்தது.

பாஸ்டர்நாக் கிளம்புவதற்கு சீக்கிரமே ஆயத்தமாகி விட்டார். பிரகாசமான சூரிய ஒளியில் நுழைந்து ஆழமான பனியினுள்ளே வீட்டுக்குப் பின்னிருந்த பசிய தோப்பினூடே நடந்தோம். உயரம் குறைந்த என் பூட்ஸ்களுக்குள் பனி நகர்ந்தது.

மேடுபள்ளங்களும் பனிக்குவியல்களும் இருப்பினும், வசதியான சாலைக்கு நாங்கள் சீக்கிரமே வந்துவிட்டோம். பாஸ்டர்நாக் நீண்ட காலடிகள் எடுத்து வைத்தார். குறிப்பிட்ட ஆபத்தான இடங்களில் என் கையைப் பிடித்துக் கொண்டார். மற்றபடி உரையாடலில் தன் கவனத்தையெல்லாம் செலுத்தினார். ரஷ்யாவில் அவரது வாழ்வின் அத்தியாவசிய அங்கமான நடை இருக்கிறது. தேநீர் அருந்துவது போன்றோ நீண்ட தத்துவார்த்த விவாதங்கள் நடத்துவது போன்றோ அப்பகுதியை அவர் வெளிப்படையாகவே விரும்பினார். எழுத்தாளர்கள் மன்றத்திற்கு சுற்றுப்பாதை என்று இயல்பாகத் தெரிந்ததன் வழியே சென்றோம். நடை சுமார் 40 நிமிடங்கள் நீடித்தது. அவர் முதலில் மொழிபெயர்ப்புக்கலை குறித்த விரிவான விவாதத்தில் இறங்கினார். பிரான்ஸிலும் அமெரிக்காவிலுமுள்ள அரசியல் இலக்கிய நிலவரங்களை விவரிப்பதற்காக அவ்வப்போது நிறுத்துவார். அரிதாகவே செய்தித்தாள்களை வாசிப்பதாகக் கூறினார். பென்சிலைச் சீவி அதன் துகள்களை அள்ளுவதற்காக செய்தித்தாளின் பக்கத்தைப் பார்ப்பது தவிர்த்து, இப்படித்தான் போன இலையுதிர்காலத்தின் போது அல்ஜீரியாவில் டிகாலுக்கு எதிராய் புரட்சி நிகழ்ந்ததையும், செளல்டெல்லா வெளியேற்றப் பட்டதையும் தெரிந்து கொண்டேன். ஆனால் வெளிநாட்டு இலக்கியப் போக்கு குறித்து நன்கு அறிந்தவராகவே காணப்பட்டார். அது அவரைப் பெரிதும் ஆர்வமூட்டியதாகத் தோன்றிற்று.



பாஸ்டர்நாக்கின் பேச்சுக்கும் கவிதைக்குமுள்ள ஒப்புமையால் முதல் கணத்திலிருந்தே வசீகரிக்கப்பட்டேன். ஈர்க்கப்பட்டேன். எதுகை மோனைகளும் வழக்கத்திற்கு மாறான படிமங்களுமாய் நிறைந்திருந்தது. ஒலிப்புப் பாதிக்கப்படாமலோ சரியான அர்த்தத்தை இழக்காமலோ, அவர் வார்த்தைகளை இசை ரீதியில் ஒன்றுடன் ஒன்றைத் தொடர்புபடுத்தினார். ரஷ்ய மொழியால் அவர் கவிதைகள் பரிச்சயமாயுள்ள ஒருவருக்கு, பாஸ்டர்நாக்குடனான உரையாடல், நினைவில் இருக்கக்கூடிய அனுபவமாயிருக்கும். அவரது வார்த்தை உணர்வு அவ்வளவு தனிப்பட்டதாயிருந்தது. அவ்வுரையாடல் ஒரு கவிதையின் தொடர்ச்சியாயும் விரிவாயும், வார்த்தை அலைகளும் படிமங்களும் ஏறுமுகத்ல் ஒன்றினை ஒன்று பின் தொடரும் துரிதப் பேச்சாயும் இருந்ததை உணர முடியும்.

பின்னர், அவரது பேச்சின் இசைத்தன்மை குறித்து அவரிடம் குறிப்பிட்டேன். எழுத்திலும் சரி, பேச்சிலும் சரி, வார்த்தையின் இசை ஒருபோதும் சப்த விவகாரமில்லை. அது உயிரொலிகள், மெய்யொலிகளின் ஒத்திசைவில் பிறப்பதில்லை. பேச்சுக்கும் அதன் அர்த்தத்திற்கும் இடையிலான உறவிலிருந்து பிறப்பது. மற்றும் அர்த்தம் உள்ளடக்கம் எப்போதும் தலைமை தாங்கவேண்டும் என்றார்.

எழுபது வயது மனிதருடன் பேசிக்கொண்டிருந்தேன் என்பதை நம்புவது சிரமமாயிருந்தது. பாஸ்டர்நாக் மிகவும் இளைஞராக நல்ல ஆரோக்கியத்துடன் தோற்றமளித்தார். விசித்திரமானதும் விலக்கப்பட்டதுமான ஒன்று இவ்விளமையில் இருந்தது போல அவரைப் பாதுகாத்திடுவதான ஒன்றுடன் கவர்ந்திருந்ததென - அது கலையா? இருந்தது. அவரது அசைவுகள் முழுதும் இளமையுடன் இருந்தன. அவரது கைகளின் சமிக்ஞைகளும், அவர்தன் தலையை பின்னோக்கிச் சாய்த்த விதமும், அவரது தோழி, கவிஞர் மரினா ஸ்வெட்டேவா, ஒருமுறை குறிப்பிட்டார். பாஸ்டர்நாக் ஒரே சமயத்தில் அரேபியனாகவும் அவனது குதிரை போன்றும் தோன்றுகிறார். உண்மையிலேயே அவரின் கருப்பு சருமத்துடனும், ஒருவாறான பழங்கால அம்சங்களுடனும் பாஸ்டர்நாக் ஒருவிதத்தில் அரேபிய முகத்தைப்

பெற்றிருந்தார். சில வேளைகளில் தன் அசாதாரண முகம், தன் முழு ஆளுமையின் தாக்கம் குறித்து திடீரென்று உணர்ந்து கொண்டவராக தோன்றினார். தன் சாய்ந்த கண்களைப் பாதி மூடிக் கொண்டும், தலையைத் திருப்பியும், குதிரை கனைப்பதைத் தெளிவின்றி நினைவூட்டியும், கணப்பொழுதுக்கு அவர் உள்ளொடுங்கியதாகத் தோன்றினார்.

பாஸ்டர்நாக் படிமத்துடனேயே காதல் கொண்டவர் என மாஸ்கோவின் சில எழுத்தாளர்கள் - அவர்களில் பெரும்பாலானவர்களுக்கு அவரைப் பற்றி தனிப்பட்ட முறையில் என்னிடம் கூறியிருந்தனர். மாஸ்கோவில் நான் கழித்த சில தினங்களில் அவரைப் பற்றி முரண்பட்ட பல விஷயங்களையும் தெரிவித்தனர்.

பாஸ்டர்நாக், சிலருக்கு நாயகனாகவும் வேறு சிலருக்கு ரஷ்யாவின் எதிரிகளுக்கு விலை போனவரான சாகசக் கதையாயிருந்தார். எழுத்தாளர்களிடையேயும், கலைஞர்களிடையேயும் அவரது கவிதை மீதான போற்றுதல் உலகளாவியதாயிருந்தது. டாக்டர் ஷிவாகோ வின் தலைமைப் பாத்திரம் மிகவும் சர்ச்சைக்குரியதாயிருந்தது. நன்கறியப்பட்ட இளம் கவிஞரும் தாராள மனமுடையவரும் பாஸ்டர்நாக் கவிதையைப் பெரிதும் போற்றுபவருமான ஒருவர், எந்த வித ஆர்வமில்லாத ஓய்ந்துபோன அறிவுஜீவி தவிர்த்து வேறொன்றுமில்லை என்றார்.

பாஸ்டர்நாக் தன் அகத்தில் ஆழ்ந்தவர் என்னும் குற்றச்சாட்டு உண்மையானதில்லை. மாறாக தன்னைச் சுற்றியிருந்த உலகினை மிகவும் உணர்ந்திருந்தார். மேலும் தன்னருகிலுள்ள மக்களின் ஒவ்வொரு மனநிலை மாற்றத்திற்கும் எதிர்வினையாற்றினார். மேலும் கூர்நோக்குள்ள உரையாடல் காரரைக் கற்பிதம் செய்வது கடினம். மிகவும் நழுவிப் போவதான சிந்தனையை அவர் சட்டென்று பற்றிக் கொண்டார். உரையாடல் பாரமில்லாதிருந்தது. பாஸ்டர்நாக் என் பெற்றோரைப் பற்றி விசாரித்தார். அவர்களை அவர் தன் வாழ்நாளில் ஓரிருமுறையே பாத்திருந்தாலும், அவர்களைப் பற்றி அனைத்தையும் அவர்களது ருசிகளையும் கூட அறிந்திருந்தார். தான் விரும்பிய என் அப்பாவின் கவிதைகள் சிலவற்றை ஆச்சரியமூட்டும் துல்லியத்துடன் ஞாபகப்படுத்தினார். பாரிஸிலுள்ள ரஷியர்கள், பிரெஞ்சுக் காரர்கள், அமெரிக்கர் என நானறிந்த எழுத்தாளர்கள் பற்றித் தெரிந்து கொள்ள விரும்பினார். அமெரிக்க இலக்கியத்தில் முக்கிய பெயர்களை மட்டுமே அவர் அறிந்திருந்த போதிலும், அது

அவருக்குக் குறிப்பாக ஆர்வமூட்டுவதாகத் தோன்றிற்று. தன்னைப் பற்றிப்பேசுமாறு அவரை வற்புறுத்துவது சிரமமென்று சீக்கிரமே கண்டுகொண்டேன். தன்னைப் பற்றிப் பேசுவார் என்றும் நம்பினேன்.

டாக்டர் ஷிவாகோ வின் ஆங்கில மொழிபெயர்ப்பு அதற்கு நியாயம் செய்யவில்லை என்பது என்னுடையதும் மற்றும் பலரதுமான அபிப்பிராயமாக இருந்த போதிலும், மேற்கில் குறிப்பாக அமெரிக்காவில் அது எத்தனைய ஆர்வத்தையும் பாராட்டையும் தூண்டிவிட்டிருந்தது என்று கூறிய ஒளியில் நாங்கள் நடந்து போன போது பாஸ்டர்நாக்கிடம் கூறினேன்.

ஆமாம் இந்த ஆர்வம் குறித்து அறிவேன். அதன் காரணமாகப் பெருமை அடைகிறேன். என் எழுத்து பற்றி வெளிநாடுகளிலிருந்து ஏராளமான கடிதங்கள் வருகின்றன. உண்மையில் சில வேளைகளில் அது ஒரு சுமையாக இருக்கிறது. அவற்றுக்குப் பதிலளிக்க வேண்டும் என்பதால், ஆனால், எல்லைகளுக்கு அப்பால் தொடர்புகளைப் பராமரித்து வருவது முக்கியமானதாகும். மொழிபெயர்ப்பாளர்களைப் பொறுத்தமட்டில் அவர்களை அதிகம் குறைகூற வேண்டாம். அது அவர்கள் தவறில்லை. சொல்லப்பட்டதன் தொனியைவிடவும் இலக்கிய அர்த்தத்தை மீண்டும் கொண்டு வரவே அவர்கள் பயன்படுத்தப்பட்டார்கள் எங்கேயும் மொழி பெயர்பாளர்கள் பயன்படுத்தப்படுவது போன்றே - தொனிதான் முக்கியமானது. உண்மையில், சுவையான மொழியாக்க வகை, செவ்வியல் படைப்புகளுடையதே. அது சவால்மிக்க பணி. நவீன எழுத்தைப் பொறுத்தவரை, அதனை மொழி பெயர்ப்பது வெகுமதியளிப்பதாய் இருப்பது அரிது. அது எளிதாய் இருக்க முடியும் என்ற போதிலும், நீங்கள் ஓர் ஓவியர் என்றீர்கள். மொழியாக்கம் என்பது ஓவியங்களை பிரதியெடுப்பது போன்றது. மேல்விக்கின் ஓவியத்தைப் பிரதியெடுப்பதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். அது சலிப்பூட்டுவதாய் இருக்காதா? நன்கறியப்பட்ட செக் மிகையதார்த்தவாதி நெஸ்வாலிடம் அதையேதான் நான் செய்ய வேண்டியுள்ளது. அவர் உண்மையில் மோசமானவரில்லை. ஆனால் இருபதுக்களின் எழுத்துக்களெல்லாம் பயங்கரமான விதத்தில் வயதேறியிருக்கின்றன. முடிப்பதாக நான் உறுதியளித்திருக்கும் இம்மொழியாக்கம் மற்றும் என் கடிதத் தொடர்புகளெல்லாம் எனது நேரத்தை நிறையவே எடுத்துக் கொள்கின்றன என்றார்.

தபால்களைப் பெறுவதில் உங்களுக்குச் சிரமம் இருக்கிறதா?

தற்போதைக்கு அனைத்தையும் பெற்றுவிடுகிறேன். எல்லாம் அனுப்பப்படுகிறது என்று கருதுகிறேன். நிறைய வருகின்றன. அவற்றைப் பெற்றுக்கொள்வதில் சந்தோஷமடைகிறேன். அதன் அளவு மற்றும் பதிலளித்தாக வேண்டிய கட்டாயம் குறித்து நான் சிரமப்பட்டாலும் கூட.

டாக்டர் ஷிவாகோ குறித்து எனக்கு வரும் கடிதங்களில் சில முற்றிலும் அபத்தமானவை என்பதை நீங்கள் புரிந்து கொள்ள இயலும். சமீபத்தில் பிரான்ஸில் டாக்டர் ஷிவாகோ பற்றி எழுதுகின்ற ஒருவர், நாவலின் திட்டம் குறித்து 'விசாரித்துக் கொண்டிருந்தார். பிரெஞ்சக்காரரின் ஒழுங்குமுறையுணர்வை அது திகைக்க வைக்கிறது என்று யூகிக்கிறேன். நாவலின் திட்டம் உடன் சேர்ந்துள்ள கவிதைகளால் கோடிகாட்டப்படுகிறது. நாவலுடன் சேர்த்து அவற்றைப் பிரிசுத்திடுமாறு நான் தெரிவு செய்ததற்கு ஒரு காரணம் இதுதான். நாவலுக்கு மேலும் திண்மையும் மேலும் செழுமையும் அளித்திடவும் அவை அங்குள்ளன. அதே காரணத்திற்காக மதவியல் குறியீட்டியலைப் பயன்படுத்தினேன் நூலுக்கு வெதுவெதுப்பைத் தந்திட. இப்போது சில விமர்சகர்கள் அக்குறியீடுகளில் மூடுண்டு போயுள்ளனர். வீட்டில் கதகதப் பேற்றுவதற்காக அடுப்புகள் நுழைவதுபோல அவை நூலில் வைக்கப்படுகின்றன.

டாக்டர் ஷிவாகோ குறித்து எட்மண்ட் வில்சன் எழுதிய விமர்சனக் கட்டுரைகளை வாசித்துள்ளீர்களா?

ஆமாம், அவற்றைப் படித்துள்ளேன், அவற்றின் நோக்குநிலையினையும் அறிவுத் திறனையும் பாராட்டியுள்ளேன், ஆனால் அந்நாவலை இறையியல் ரீதியில் முடிவுகட்டக் கூடாது என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். உலகைப் பற்றிய எனது பதிலிலிருந்து எதுவும் அவ்வளவு விலகியதில்லை. வாழ்க்கை வழங்கிடும் புதிய ஆயத்த வசதிகளின் துணையுடன், ஒருவர் வாழவேண்டும், ஓய்வொழிச்சலின்றி எழுதவேண்டும். ஒரு நோக்குநிலைக்கு எந்த நிலையிலும் விசுவாசமாயிருத்தல் என்னும் இக்கருத்து என்னை ஆயாசமடையச் செய்கிறது. நம்மைச் சுற்றியுள்ள வாழ்க்கை எப்போதும் மாறிக் கொண்டிருக்கிறது. அதற்கேற்ப ஒருவர் தன் பார்வையை மாற்றிக் கொள்ள முயலவேண்டும் என்று நம்புகிறேன். குறைந்த பட்சம் பத்தாண்டுகளுக்கு ஒருமுறையேனும் ஒரு நோக்குநிலையில் மாபெரும் வீரதீர அர்ப்பணிப்பு கொண்டிருப்பது எனக்கு மிகவும் அந்நியமானது. அது அடக்கமின்மையே. தனக்குள்ளேயே அல்லது

தன்னைச் சுற்றிலும் புதிதாய் நடந்து கொண்டிருந்த ஏதோவொன்றுடன் தன் பெருமிதம் ஒத்திசைய முடியாததால்தான், மாயகோவ்ஸ்கி தன்னை மாய்த்துக் கொண்டார்.

நீண்டும் தாழ்ந்துமிருந்த மரவேலியினருகே இருந்த கேட்டினை நாங்கள் அடைந்திருந்தோம். பாஸ்டர்நாக் நின்றார். அவர் அங்கு வந்து சேரவேண்டியவர், எங்களது உரையாடல் ஏற்கனவே அவரைச் சற்று தாமதப்படுத்தியிருந்தது. நான் வருத்தத்துடன் விடைபெற்றேன். அங்கேயே நான் ஏராளமானவற்றை அவரிடம் கேட்க விரும்பினேன். சிறிய கல்லறையின் பின்னுள்ள குன்றின் சரிவுக்கு மிக அருகாமையில் உள்ள இரயில் நிலையத்திற்கான பாதையை பாஸ்டர்நாக் எனக்குக் காட்டினார். சிறிய மின் இரயில் ஒரு மணிநேரத்திற்குள்ளாகவே என்னை மாஸ்கோவிற்கு கொண்டு சேர்த்தது.

மற்றும் வணக்கத்துடன், பணிவாய் கவனிக்கிறேன்.

வயதான குடியானவப் பெண்டிரை, மாஸ்கோவைச் சார்ந்தவர்களை,

பகட்டில்லாத கைவினைக் கலைஞர்களை, பகட்டில்லாத தொழிலாளர்களை

இளம் மாணவர்களையும் புறநகர் பகுதியினரையும்

அடிமைத்தளையின் தடயங்களை நான் காணவில்லை.

சந்தோஷமின்மை, திகைப்பு, அல்லது பற்றாக்குறையால் பிறந்தவை அவர்தம் அன்றாட சோதனைகளைத் தாங்கிக் கொள்கின்றனர்.

தங்கிவிட வந்துள்ள எஜமானரைப் போல

ஒவ்வொரு விதமான தோற்றநிலையில் விடப்பட்டுள்ளனர்.

சின்னஞ்சிறு முடிச்சுகளில், நிசப்த மூலைகளில்,

குழந்தைகளும், இளைஞரும் சலனமின்றி அமர்ந்திருக் கின்றனர்.

வித்தகர்களென புத்தகங்கள் படிப்பதில் ஆழ்ந்திருக் கின்றனர்.

அப்போது வெள்ளி - சாம்பலாய் மாறிடும் இருளின் மூடுபனியில் நம்மை வரவேற்கிறது மாஸ்கோ.

பாஸ்டர்நாக்குடனான எனது அடுத்த இரு சந்திப்புகளும், நீண்டதொரு இலக்கிய உரையாடலாக, என் ஞாபகத்தில் ஒன்று கலக்கின்றன. சம்பிரதாயமானதொரு பேட்டியை அவர் எனக்களிக்க மறுதலித்திட்ட போதிலும் (இதற்கு நீங்கள் அவ்வளவு மும்முரமாய் நானில்லாத வேளையில் வரவேண்டும். ஒரு வேளை அடுத்த இலையுதிர்காலமாய் இருக்கலாம்) நான் கேட்க விரும்பியிருந்த

கேள்விகளில் ஆர்வம் கொண்டவராகக் காணப்பட்டார். உணவு நேரங்கள் தவிர்த்து, நாங்கள் தனித்திருந்தோம், குறுக்கீடு ஏதும் இல்லை. நான் புறப்பட இருந்த இரு சமயங்களிலும், பழைய ரஷிய முறையில் பாஸ்டர்நாக் என் கையில் முத்தமிட்டார். அடுத்த ஞாயிறன்று வருமாறு கேட்டுக் கொண்டார்.

கல்லறையருகேயுள்ள குறுக்குவழியை அறிந்து அதன் வழியே இரயில் நிலையத்திலிருந்து அந்திவேளையில் பாஸ்டர்நாக் வீட்டுக்கு வந்தது எனக்கு நினைவிருக்கிறது. சட்டென காற்று வலுத்தது. பனிப்புயல் ஆரம்பித்துக் கொண்டிருந்தது. இரயில் நிலையத்தின் தொலைதூர விளக்குகளைக் கடந்து, பெரும் வட்ட அலைகளாக பனி பறப்பதை என்னால் பார்க்க முடிந்தது. சீக்கிரமே இருட்டியது. காற்றை எதிர்த்து நடப்பது சிரமமாயிருந்தது. இது ஒரு வழக்கமான ரஷியக் குளிர்காலநிலை என்பதை அறிவேன். ஆனால் நான் பார்த்திருந்ததில் இது நிஜமான முதலாவது பனிப்புயல் புஷ்கின், ப்ளாக் ஆகியோரின் கவிதைகளை நினைவு கூர்ந்தேன். அது பாஸ்டர்நாக்கின் ஆரம்பக் கட்டக் கவிதைகளையும் டாக்டர் ஷிவாகோ வின் பனிப்புயல்களையும் மனத்திற்குக் கொண்டு வந்தது. சில நிமிடங்கள் கழித்து அவர் இல்லத்தில் இருப்பதும், அவரது கவிதையைப் போன்ற உய்த்துணரவேண்டிய அவரது வாக்கியங்களைக் கேட்க இருப்பதும், புதிராய்த் தோன்றின.

நண்பகல் உணவுக்கு மிகத்தாமதமாய் வந்து சேர்ந்திருந்தேன். பாஸ்டர்நாக்கின் குடும்பம் ஓய்வெடுக்கச் சென்றிருந்தது. இல்லம் ஆளரவமற்றதாய்த் தோன்றியது. நான் சிறிதேனும் உண்ணவேண்டும் என்று பாஸ்டர்நாக் வற்புறுத்தவே, சமையல்காரர் சிறிது மான்கறியும் வோத்காவும் கொண்டு வந்தார். சுமார் நான்கு மணி இருக்கும், பனியின் சப்தம் மற்றும் வெளிப்புறக்காற்று தவிர்த்து, உலகிலிருநது மூடுண்டதாக, அந்த அறை இருண்டும் கதகதப்பாயும் இருந்தது. எனக்கு உணவு ருசியாய் இருந்தது. என் தாத்தா லியோத் ஆண்ட்ரீவைப் பற்றி விவாதித்தபடி பாஸ்டர் நாக் எனக்கெதிரே அமர்ந்திருந்தார். அவரது கதைகள் சிலவற்றைச் சமீபத்தில் மீண்டும் வாசித்த பாஸ்டர்நாக் அவற்றை விரும்பினார். ரஷ்யாவின் அற்புதமான 1900 களின் முத்திரையைக் கொண்டிருப்பவை அவை. அந்த ஆண்டுகள் இப்போது நம் ஞாபகத்தில் பின்வாங்கிக் கொண்டிருக்கின்றன. எனினும் தொலைதூரத்தில் காணப்படும் பிரும்மாண்ட மலைகளென மனதில் பூதாகாரம் கொள்கின்றன. ஆண்ட்ரீவ், நீட்ஷேயின் வசியத்தில் இருந்தார். அதிகப்படியானவைகளின் மீதான ருசியை அவர் நீட்ஷேயிடமிருந்து பெற்றிருந்தார். அது போலவே ஸ்கிரியாபினும்

அதீதமானதின், அருகியானதின் பேரிலான ரஷ்ய ஏக்கத்தை நீட்ஷே திருப்திப்படுத்தினார். குறிப்பான தன்மையைப் பெற்று தாமாக ஆவதற்கு முன்னர், இசையிலும் எழுத்திலும் மானுடர் இவ்வளப்பெரும் வீச்சினை கொண்டிருக்க வேண்டியிருந்தது.

மனிதன் என்றால் என்ன? என்பது குறித்த ஓர் இதழுக்கு சமீபத்தில் தான் எழுதியிருந்த கட்டுரை பற்றி பாஸ்டர்நாக் என்னிடம் கூறினார். என் இளமையில் மிக முக்கிய சிந்தனையாளராயிருந்த நீட்ஷே, எவ்வளவு பழமைப் போக்கினராய்த் தோன்றுகிறார். எத்தகைய பாரிய தாக்கம் - வாக்னர் மீது, கார்க்கி மீது... கார்க்கி அவரது கருத்துக்களின் செல்வாக்கிற்கு ஆட்பட்டிருந்தார். உண்மையில், நீட்ஷேயின் முதன்மையான பணியாயிருந்தது, தன்காலத்து மோசமான ரசனையைக் கைமாற்றியதே. அந்நாட்களில் அவ்வளவாக அறியப்பட்டிராத கீர்க்கேகார்டுதான், எங்கள் காலத்தில் செல்வாக்குச் செலுத்துவதற்கென விதிக்கப்பட்டிருந்தார். பெர்தயயேவின் எழுத்துக்களைச் சிறப்பாக அறிந்திட விரும்பியிருப்பேன். அவர் அதே சிந்தனைப் போக்கில் இருக்கிறார் என நம்புகிறேன். உண்மையிலேயே நம் காலத்து எழுத்தாளர்.

சாப்பாட்டு அறையில் மேலும் இருண்டது, அதே தளத்தில் விளக்கு எரிந்த இன்னொரு சிறிய அறைக்குச் சென்றோம். பாஸ்டர்நாக் எனக்கு கிச்சிலிப் பழங்கள் கொண்டு வந்தார். ஏற்கனவே ருசித்திருந்த ஒருவித புதிரான உணர்வுடன் அவற்றைத் தின்றேன். பாஸ்டர்நாக்கின் எழுத்தில் கிச்சிலிகள் அடிக்கடி இடம் பெறும். டாக்டர் ஷிவாகோ வின் ஆரம்பத்திலும் ஆரம்பக் கட்டக் கவிதைகளிலும் அவை ஒருவித சடங்கார்த்த தாகம் தணிவிப்பவற்றைக் குறிப்பதாகத் தோன்றுகின்றன. மற்றும் பாஸ்டர்நாக்கின் இன்னொரு கவிதையின் தெளிவான எடுத்துரைப்ப, வெளியே அடித்த பனிப்புயலான மிகபெரியதும் கருத்ததுமான பியானோ அறையின் பெரும்பகுதியை நிறைத்தது.

மற்றும் இருப்பினும் நாங்கள் மிக அருகே இருக்கிறோம்.
மங்கிய ஒளியில் இங்கே, இசை தூக்கி எறியப்படுகிறது
நெருப்பின் மீது
ஆண்டுக்கு ஆண்டு நாட்குறிப்பேட்டின்
பக்கங்களைப்போல

சாப்பாட்டு அறை போன்றே, இச்சுவர்களின் மேல் லியோனித் பாஸ்டர்நாக்கின் உருவரை ஓவியங்கள் உள்ளன. சூழல் தீவிரமாயும் ஆசுவாசமிகுந்தும் இருக்கிறது.

குறிப்பாக எனக்கு ஆர்வமூட்டிய கேள்வியொன்றினை

பாஸ்டர்நாக்கிடம் கேட்டிட இது நல்ல நேரமாகத் தோன்றிற்று. அவர் டாக்டர் ஷிவாகோ வை உருவாக்கிக் கொண்டிருந்த போது தனது ஆரம்பகாலக் கவிதைகளில் பலவற்றை மிகவும் தற்காலிகமானதாயும், காலத்திற்குப் பொருத்தமற்றதாயும் கூறி, நிராகரித்துவிட்டதாக அவரைப் பார்த்தவர்கள் கூறிடக் கேட்டிருந்தேன். அதனை நம்புவது எனக்குச் சிரமமாயிருந்தது. Themes and Variations மற்றும் My sister Life ஆகியவை 1920களில் பரிசோதனைப் படைப்புகளாய் இருந்தது போன்றே, செவ்வியல் பூரணத்துவம் பெற்றிருந்தவை. ரஷியாவின் எழுத்தாளர்களும் கவிஞர்களும் அவற்றை மனனம் செய்து, உக்கிரத்துடன் ஒப்பிப்பத்தைப் பார்த்திருந்தேன். இளங்கவிஞர்களின் கவிதைகளில் பாஸ்டர்நாக்கின் செல்வாக்கினைக் கண்டறிய முடியும். புரட்சியாண்டுகளிலும் 1920 களிலும் மாயகோவ்ஸ்கியும் பாஸ்டர்நாக்கும், தத்தமது பாணியில், குறியீடாக இருக்கின்றனர். அப்போது கலையும் புரட்சிகர கருத்துகளும் பிரிக்க முடியாதவையாகத் தோன்றின. நிரம்பிவழியும் நிகழ்வுகள் மற்றும் கருத்துக்களின் அவையால் தன்னைத் தூக்கிச் செல்லுமாறு விட்டுவிடுவது போதுமானதாயிருந்தது. மேற்கொள்வதற்சென்று இருதயத்தைப் பிளப்பதான தேர்வுகள் ஏதுமில்லை. (இளம் ரஷ்ய அறிவுஜீவிகளிடத்தே அந்த ஆண்டுகள் மீதான ஏக்கம் இருந்ததைக் கண்டறிந்தேன்) அந்த ஆரம்பக் காலப் படைப்புகளை பாஸ்டர்நாக் நிராகரித்தது நிஜமா?

பாஸ்டர்நாக்கின் பதிலில் லேசான எரிச்சலை உணர்ந்தேன். அக்கவிதைகளுக்காகவே புகழப்படுவதை அவர் விரும்பாது இருந்திருக்க வேண்டும். அவை விஞ்ச இயலாதவை என்பதை உணர்ந்தாரா? கடந்த காலச் சாதனைகளில் அதிருப்தியுறும் கலைஞனின் பொதுவான சோர்வினால், உடனடியான கலைப் பிரச்சனைகளில் மட்டும் அக்கறை கொண்டிருந்தானா?

இக்கவிதைகள் துரிதமான உருவரைகள் போன்றிருந்தன. நமது மூத்தவர்களது எழுத்துக்களுடன் இவற்றை ஒப்பிட்டுப் பாருங்கள். தாஸ்தாயெவ்ஸ்கியும் டால்ஸ்டாயும் வெறுமனே நாவலாசிரியர்கள் இல்லை. ப்ளாக் கவிஞர் மட்டுமில்லை. இலக்கியத்தின் மத்தியிலே பொதுவிடங்கள், சம்பிரதாயங்கள், நிறுவப்பட்ட பெயர்களின் உலகிலே தமக்கென்று கூறுவதற்கு ஏதோவென்றிருந்த அவை இடியென அதிர்ந்தன. இருபதுகளின் வாய்ப்பைப் பொறுத்தவரை, என் தந்தையை உதாரணமாய் எடுத்துக் கொள்ளுங்கள். அவரின் ஓவியங்களில் ஒன்றினை முடித்திட, எவ்வளவு தேடல், எத்தகைய முயற்சிகள், இருபதுகளிலான

நம்வெற்றியின் பகுதிக் காரணமாயிருந்தது சந்தர்ப்பமே. என் தலைமுறை வரலாற்றின் குவிமையப்புள்ளியில் தன்னைக் கண்டுகொண்டது. எங்கள் எழுத்துகள் காலங்களால் கட்டளையிடப்பட்டவை. அவற்றில் உலகளாவியத்தன்மை குறைவு. இப்போது அவற்றுக்கு வயதேறியுள்ளது. மேலும், நம் அனுபவத்தின் பிரும்மாண்டத்தை தன்னுணர்ச்சிக் கவிதையால் வெளிப்படுத்துவது சாத்தியமில்லை என்று நம்புகிறேன். வாழ்க்கை பராமிக்கதாக மிகவும் சிக்கலானதாக வளர்ந்துள்ளது. உரைநடையில் சிறப்பாக வெளிப்படுத்தப்படும் விழுமியங்களைப் பெற்றுள்ளோம். அவற்றை என் நாவல்மூலம் வெளிப்படுத்திட முயன்றுள்ளேன். என் நாடகத்தை எழுதுகையில் அவற்றை என் மனதில் வைத்திருக்கிறேன்.

ஷிவாகோ பற்றி என்ன கூறுகிறீர்கள்? 1957ல் என் பெற்றோறரிடம் கூறியது போல உங்கள் எழுத்தின் மிக முக்கிய உருவமாய் இருக்கிறான் என இன்னும் உணர்கிறீர்களா?

டாக்டர் ஷிவாகோ நான் எழுதியபோது உன் உடனிகழ்காலத்தவரிடத்தே அளப்படும் கடன்பட்ட உணர்விருந்தது. நாவலுடன் மெதுவாய் முன்னேற்றிச் சென்றபோது கடன்பட்ட உணர்வு மீதூர்ந்தது. தன்னுணர்ச்சிக் கவிதை மட்டும் எழுதுவது அல்லது மொழிபெயர்ப்பது என்று இருந்த பல ஆண்டுகளுக்குப் பின்னர், நம் சகாப்தம் குறித்த தொலைதூரதாயினும் எங்கள் மீது நெருங்கி கவிந்திருந்த அந்த ஆண்டுகள் பற்றி ஒரு வாசகத்தை ஆக்குவது என் கடமையாயிருந்தது என்றெனக்குத் தோன்றிற்று. காலம் எழுதிக் கொண்டிருந்தது. கடந்த காலத்தைப் பதிவு செய்து, அக்காலத்து ரஷ்யாவின் அழகானதும் உணர்வு நுட்பமானதுமான அம்சங்களைக் கௌரவித்திட விரும்பினேன். அந்நாட்களுக்கோ நம் தந்தையர் மற்றும் முன்னோரிடத்தோ திரும்ப முடியாது, ஆனால் எதிர்காலத்தின் மாபெரும் மலர்ச்சியிலே அவற்றை விழுமியங்கள் உயர்ந்திருக்கும் என்பதை முன்னுணர்ந்தேன். அவற்றை விவரித்திட முயன்றுள்ளேன். டாக்டர் ஷிவாகோ ஒரு நாவலாக முழுவெற்றி பெற்றுள்ளதாக என்றெனக்குத் தெரியாது. ஆனால் அதன் குறைகளெல்லாம் இருப்பினும் கூட, அந்த ஆரம்ப கட்ட கவிதைகளை விட அது கூடுதல் விழுமியம் பெற்றுள்ளது என்றுணர்கிறேன். என் இளமைக்கால எழுத்தை விடவும் அது செழுமையானது, மிகவும் மனிதாயமானது.

இருபதுகளில் உங்கள் உடனிகழ்காலத்தவரிடையே சிறப்பாக நீடித்தவர்களென்று யாரைக் கருதுகிறீர்கள்.

மாயகோவ்ஸ்கி பற்றி எவ்விதம் உணர்கிறேன் என்பதை அறிவீர்கள். என் சுயசரிதம் Safe Conduct இல் அது பற்றி விரிவாகவே கூறியிருக்கிறேன். முடிக்கப்படாத அவரது இறுதிக் கவிதை At the Top of My Voice தவிர்த்து அவரது பிந்தைய எழுத்துகளில் அக்கறை இல்லாது இருக்கிறேன். அக்காலத்துக் கவிதையின் பண்பு நலனாயிருந்த, வடிவச்சிதைவும் சிந்தனை வறுமையும் எனக்கு அந்நியமானவை. ஆனால் விதிவிலக்குகள் இருக்கின்றன. ரஷிய மண்ணின் வாசனையை நன்றாக கையகப்படுத்தும் எஸனினது எழுத்து முழுதையும் நேசிக்கிறேன். ஸ்வெட்டாவை மிக உயரத்தில் வைக்கிறேன். ஆரம்பத்திலிருந்தே அவர் ஓர் உருக்கொண்ட கவிஞர். பாவனைகளின் உலகிலே தனக்கான குரல் கொண்டிருந்தவர். அது மனிதாயமான, செவ்வியல் குரல். ஆணின் ஆன்மா கொண்டிருந்த பெண். அன்றாட வாழ்வுடனான அவரது போராட்டம் அவருக்கு வலிமை தந்தது. கச்சிதமான தெளிவுக்கு முயன்று அதனை அடைந்தார். நான் எளிமையின் பொருட்டும் தன்னுணர்ச்சித் தன்மைக்காகவும் எப்போது போற்றியுள்ள அக்மதோவாவை விடவும் உயர்ந்தவர். ஸ்வெட்டாவின் இறப்பு என் வாழ்வின் மாபெரும் வேதனைகளுள் ஒன்றாயிருந்தது.

அந்த ஆண்டுகளில் மிகவும் செல்வாக்குள்ளவராய் விளங்கிய ஆந்திராய்பெலி குறித்து?

பெலி துறவுத் தன்மைமிக்கவர். மிகவும் வரம்புக்குட்பட்டவர். சேம்பர் இசையுடன் ஒப்பிடத்தக்கது அவரது வீச்சு. ஒருபோதும் பெரியதில்லை. அவர் நிஜமாகவே வருந்தியிருந்தால், அவரால் முடியக் கூடியதான பெரும்படைப்பை, எழுதியிருப்பார். ஆனால் அவர் ஒருபோதும் நிஜ வாழ்வுடனான தொடர்பில் இல்லை. இது பெலி போல புதிய வடிவங்களில் ஈர்ப்புண்டு இளமையிலேயே இறந்துவிடும் எழுத்தாளர்களின் விதி போலும். புதிய மொழியின் அக்கனவுகளையும் முற்றிலும் அசலான வெளிப்பாட்டு வடிவத்தையும் நான் புரிந்து கொள்ளவே இல்லை. இக்கனவின் காரணமாக, பாணிசார்ந்த பரிசோதனையாக மட்டுமே இருந்த, இருபதுகளின் அதிகமான எழுத்தும் உயிர்த்திருக்காது போயிற்று. மிகவும் அசாதாரண கண்டுபிடிப்புகள், தான் சொல்ல இருப்பதனால் கலைஞனால் நிரம்பிவழியும் போது, செய்யப்படுகின்றன. அப்போது அவன் தன் அவசத்தில் பழைய மொழியைப் பயன்படுத்துகிறான். பழைய மொழி உள்ளிருந்து உருமாற்றப்படுகிறது. அந்த ஆண்டுகளில்கூட ஒருவர் பெலியின்பால் வருத்தப்பட்டார். ஏனெனில் அவரது மேதைமை மலரச் செய்வதற்கு உதவியிருக்கக்கூடிய நிஜ வாழ்விலிருந்து அவர் துண்டிக்கப்பட்டிருந்தார்.



இன்றைய இளங்கவிஞர்கள் பற்றி, ரஷ்யர்களின் அன்றாட வாழ்வின் அங்கமாய் கவிதை தோன்றுவது குறித்து நான் ஈரக்கப்படுகின்றேன். இளங்கவிஞர்களின் கவிதை இருபதாயிரம் தொகுதிகளில் அச்சிடப்படுவது மேற்கத்தைய கவிஞனுக்கு ஆச்சரியமூட்டுவதாய் இருக்கலாம். ஆனால் ரஷ்யாவில் கவிதை, நீங்கள் எண்ணுவது போல, அவ்வளவு உயிர்ப்புடன் இல்லை. அது அறிவுஜீவிகளின் குழாமுடன் வரம்புக்கு உட்பட்டிருக்கிறது. மற்றும் இன்றைய கவிதை பெரிதும் சாதாரணமாயிருக்கிறது. சுவர்க்காகிதத்தின் சித்திர விசித்திரம் போலிருக்கிறது. சந்தோஷம் தருவது ஆனால் சாரமற்றது. சில இளைஞர்கள் திறமையைக் காட்டுகின்றனர். நிச்சயமாக உதாரணமாக எவ்டுசென்கோ எனினும் ரஷ்ய இருபதாம் நூற்றாண்டின் முதல் பாதி உரைநடையை விடவும் கவிதையில் அதிக சாதனையுடைய காலம் என்று கூறமாட்டீர்களா?

அப்படி நான் கருதவில்லை. உரைநடையே இன்றைய ஊடகம் என நம்புகிறேன். ஃபாக்னருடையது போன்ற விரிவான, வளமான உரைநடை இன்றைய எழுத்து வாழ்வின் முழுப்பகுதிகளையும் மறு நிர்மாணம் செய்ய வேண்டும். என் புது நாடகத்தில் இதைத்தான் நான் முயன்று கொண்டிருக்கிறேன். அன்றாட வாழ்வு மிகவும் சிக்கலானதாக வளர்ந்துள்ளதால், முயற்றுக் கொண்டிருக்கிறேன் என்கிறேன். நன்கறியப்பட்ட எழுததாளர் ஒவ்வொருவருக்கும் இப்படித்தான் இருக்கும். ஆனால் இத்தகைய பங்கு பணிக்கு நான் ஆயத்தமாயில்லை. இரகசியமும் அமைதியும் இழந்த வாழ்வினை நான் விரும்புவதில்லை. என் இளமையில், வாழ்விலுள்ள எந்தவொன்றுக்கும் ஒளியூட்டுவதாக, வாழ்வுடன் ஒருங்கிணைந்த அம்சமாக வேலை இருந்தது என்று எனக்குத் தோன்றுகிறது. இப்போது அது நான் போராட வேண்டிய ஒன்றாக இருக்கிறது அறிஞர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், வாசகர்களின் அக்கோரிக்கைகளையெல்லாம் புறக்கணிக்க இயலாது, ஆனால் மொழிபெயர்ப்புடன் சேர்ந்து அவை என் நேரத்தை விழுங்குகின்றன. என்னிடம் அக்கறை கொண்டுள்ள வெளிநாட்டவர் அனைவரிடமும் நீங்கள் சொல்ல வேண்டும் பயங்கரமான இந்நரேப் பற்றாக்குறையினை.

பாஸ்டர்நாக்குடனான எனதுக் கடைசிச் சந்திப்பு நீண்ட நேரம் கொண்டது. சீக்கிரமே வருமாறு அவர் கூறியிருந்தார். குடும்ப விருந்தாக நடக்க இருக்கும் விருந்துக்கு முன்னர் பேசலாம் என்பதற்காக. அதுவும் ஒரு பிரகாசமான ஞாயிறுதான். பாஸ்டர்நாக் காலை நேர நடை போய்வருவதற்குச் சற்று முன்னதாகவே வந்து சேர்ந்தேன். அவரது படிப்பறைக்குள் நான் நுழைந்தபோது, வீடு உற்சாகமான குரல்களால் எதிரொலித்தது. அதன்பின்புறம் ஓரிடத்தில் குடும்ப உறுப்பினர்கள் திரண்டிருந்தனர்.

பாஸ்டர்நாக்கின் படிப்பறை, இரண்டாம் தளத்தில் பெரியதாக, வெறுமையாக இருந்தது. வீட்டின் இதர பகுதிகள் போன்றே, அது தளவாடங்கள் இல்லாதிருந்தது. விரிந்த ஜன்னலருகே பெரிய டெஸ்க், இரண்டு நாற்காலிகள், ஒரு ஷோஃபா இருந்தன. பெரிய பனிபடர்ந்த வயலை நோக்கி, ஜன்னலிலிருந்து வரும் வெளிச்சம் பிரகாசமாயிருந்தது. மெல்லிய சாம்பல் நிற மரச் சுவர்களின் மீது ஓவிய அஞ்சலட்டைகள் ஏகமாகக் குத்தப்பட்டிருந்தன. பாஸ்டர்நாக் நுழைந்ததும், அவையெல்லாம் வாசர்களால் பெரிதும் வெளிநாட்டாவர்களால், தனக்கு அனுப்பப்பட்டவை என்றெனக்கு விளக்கினார். அவற்றைப் பல இடைக்காலத்து கிறித்து பிறந்தநாள் விழா புனித ஜார்ஜ் அரக்கனை மாய்ப்பது, மேரி மக்தலேனர்வைச் சித்தரிக்கும் படங்கள் கொண்டவை. டாக்டர் ஷிவாகோ வின் மையக் கருத்துடன் தொடர்புடையவை.

நடை போய் வந்த பின்னர் பாஸ்டர்நாக் நன்றாகத் தோன்றினார். கடல் நீல உடுப்பில் நல்ல மனநிலையில் இருந்தார். சன்னலருகே டெஸ்க் முன் அமர்ந்த அவர், என்னை எதிரே அமரச் சொன்னார். இதர சந்தர்ப்பங்கள் போன்றே, சூழல் ஆசுவாசமானதாய் இருந்தும் பெரும் தீவிரமிக்கதாய் இருந்தது. சந்தோஷமான பாஸ்டர்நாக் உற்சாகமாய் தோன்றினார். சன்னல் வழியே வந்த சூரிய ஒளி வெதுவெதுப்பாயிருந்தது. இரண்டு மணி (அ) அதற்கு மேலும் நாங்கள் அங்கே உட்கார்ந்திருந்தபோது, அக்கணங்களை நீட்டித்திடும் ஏக்கம் எனக்கிருந்தது. நான் மறுநாள் மாஸ்கோவிலிருந்து புறப்படுகிறேன் பகல் முன்னேற முன்னேற அறையில் கடுமையாக பாய்ந்த பிரகாசமான சூரிய ஒளி மங்கிற்று.

பாஸ்டர்நாக் தன் புதிய நாடகம் பற்றி என்னிடம் சொல்லத் தீர்மானித்தார். அந்தக் கணத்தில் அவர் அப்படிச் செய்ததாகத் தோன்றிற்று. மிகவும் ஈர்க்கப்பட்டவளாய், நான் கவனித்துக் கொண்டிருந்தேன். என்னிடமிருந்து குறுக்கீடுகளே இல்லை. சில வரலாற்று / இலக்கியக் குறிப்புகளில் சந்தேகம் வந்த ஒன்றிரு முறையே விளக்கம் கேட்டேன்.

ரஷ்யாவின் பத்தொன்பதாம் நூற்றாண்டு நிகழ்வுகளுடன் மிக நெருக்கமான பின்புலம் கொண்டுள்ளதன் காரணமாக, எனது புதிய படைப்பின் உருவரைகளில் நீங்கள் ஆர்வம் கொள்வீர்கள் என்றெண்ணுகிறேன். நானொரு முத்தொகுதியை எழுதிக் கொண்டிருக்கிறேன். மூன்றிலொரு பகுதியை எழுதியுள்ளேன்.

அடிமைகளை விடுவித்தல் என்னும் பிரதான நிகழ்வைக் கொண்டுள்ள ரஷ்யாவின் பத்தொன்பதாம் நூற்றாண்டினை, ஒட்டுமொத்த வரலாற்று சகாப்தத்தினை மறு நிர்மாணம் செய்ய விரும்புகிறேன். எக்காலம் குறித்து நம்மிடம் பல படைப்புகள் உள்ளன. ஆனால் அது குறித்த நவீனச் சித்தரிப்பு இல்லை. கோகோலின் இறந்த ஆன்மாக்கள் போல பிரும்மாண்டமான ஒன்றை எழுது ஆசைப்படுகிறேன். இறந்த ஆன்மாக்கள் போன்று, அன்றாட வாழ்வில் அவ்வளவு ஈடுபாடுடையதாக, என் நாடகங்கள் அவ்வளவு நிஜமாக இருக்கும் என நம்புகிறேன். அவை நீளமாயிருப்பினும், ஒரு மாலையில் நிகழ்த்தப்படக் கூடியவையே என்று நம்புகிறேன்.

நாங்கள் சாப்பாட்டு அறைக்கு வந்த போது, நீண்ட மேசையைச் சுற்றிலும் குடும்பத்தினர் அமர்ந்திருந்தனர். அவர்கள் மனப்பதிவு (Impressionist) ஓவியம் போல் தோன்றவில்லையா,? பின்புலத்தில் ஜெரேனியச் செடிகளும் மத்திய பிற்பகலின் ஒளியும் சேர்ந்து? குவில்லமின் வரைந்த இது போன்றதொரு ஓவியம் உள்ளது என்றார்.



மேசையைச் சுற்றிலும் என்னை பாஸ்டர்நாக் அறிமுகப்படுத்த, ஒவ்வொருவரும் எழுந்து நின்றிருந்தனர். திருமதி. பாஸ்டர்நாக்குடன், பாஸ்டர்நாக்கின் இரு மகன்கள் இருந்தனர். முதல் திருமணத்தின் மூலம் பிறந்த மூத்த மகன் மற்றும் 18 அல்லது 20 வயதுள்ள இளைய மகன். பேரா. நெவ்ஹாஸ்ஸும் விருந்தினராக இருந்தார். மாஸ்கோ இசைப்பள்ளியில் அவர் புகழ்பெற்ற சோபின் ஆசிரியர் திருமதி பாஸ்டர்நாக்கின் கணவராயிருந்தவர்.

பேச்சு பொதுவானதாயிருந்தது. ஹெமிங்வேயின் எழுத்துகள் விவாதிக்கப்பட்டன. சென்ற குளிர்காலத்தில் மாஸ்கோவில் மிகவும் பரவலாக வாசிக்கப்பட்ட எழுத்தாளராய் இருந்தார். அவரது எழுத்தின் புதியதொகுதி ஒன்று சமீபத்தில்தான் வெளியிடப்பட்டிருந்தது. திருமதி. பாஸ்டர்நாக்கும் மேசையின் முன்னிருந்த பிற பெண்டிரும் ஹெமிங்வே சலிப்பூட்டுவதாக உணர்ந்தனர். நேயர்களுக்கு வேறெதுவும் நிகழாமல் முடிவுறாத குடிக்கும் காட்சிகளென.

சிறிது நேரம் நிசப்தமாயிருந்த பாஸ்டர்நாக் ஆட்சேபித்தார்.

ஓர் எழுத்தாளரின் பெருமை, எடுத்தாளப்படும் விஷயத்துடன் தொடர்பில்லாதது, அது எவ்வளவுக்கு அவரை ஈர்க்கிறது என்பதுடன்தான் தொடர்புடையது. பாணியின் அடர்த்தியே கருதற்குரியது. ஹெமிங்வே பாணியின் வழியே நீங்கள் இரும்பினை, மரத்தினை, பொருளினை உணர்கிறீர்கள். ஹெமிங்வேயைப் பாராட்டுகிறேன். ஆனால் ஃபாக்னரையே விரும்புகிறேன். Light in August ஒரு அற்புதமான நூல். சிறிய கர்ப்பிணியின் பாத்திரம் மறக்க முடியாதது. அலபாமாவிலிருந்து டென்னெஸ்ஸிக்கு அவள் நடந்து போகையில் அமெரிக்காவினுடைய தெற்கின் பிரும்மாண்டம், அதன் சாராமெல்லாம் அங்கில்லாத நமக்காக பதிவு செய்யப்படுகிறது.

பின்னர் இவ்வுரையாடல் இசையின் பக்கம் திரும்பியது. பேரா. நெவ்ஹாஸ்ஸும் பாஸ்டர்நாக்கும் சோபனின் விளக்கவுரை குறித்த நுண்ணம்சங்களை விவாதித்தனர். எந்த அளவுக்கு சோபினை நேசித்தேன் என்பதை பாஸ்டர்நாக் விளக்கினார். முற்றிலும் புதியதாய் ஒன்றினைக் கூற, சோபின் பழைய மோஸார்ட் மொழியைப் பயன்படுத்தினார். அவ்வுருவம் உள்ளிருந்து புத்துயிர்ப்பு கொண்டது. எனினும் அமெரிக்காவில் சோபினைப் பழைய பாணியினராகக் கருதும் அபாயம் உள்ளது. சோபின் குறித்த சுரக்குறிப்பொன்றை ஸ்டீபன் ஸ்பெண்டரிடம் தந்தேன். அது இன்னும் வெளியாகவில்லை.

சோபினை வாசிக்க எந்த அளவுக்கு கைட் நேசித்தார் என்பதை அவரிடம் கூறினேன். பாஸ்டர்நாக்கிற்கு இது தெரியாது

என்பதால் கேட்டு சந்தோஷப்பட்டார். அக்காலகட்டத்தில் அவர் மெதுவாக வாசித்துக் கொண்டிருந்த ப்ரூஸ்ட்டின் பக்கமாய் உரையாடல் நகர்ந்தது.

இப்போது நான் Ala Reecherche du temps perdu வின் இறுதியை நெருங்கிக் கொண்டிருக்கிறேன். 1910ல் எங்களை உள்ளீர்த்துக் கொண்ட கருத்துக்களில் சிலவற்றை அது எப்படி எதிரொலிக்கின்றது என்பதில் அதிர்ந்து விட்டேன். டால்ஸ்டாய் இறப்பதற்கு என் அப்பாவுடன் அஸ்டபோவோவுக்கு போனேன். முந்தைய தினம் நானளித்த குறியீட்டியலும் அமரத்துவமும் என்னும் சொற்பொழிவில் அவற்றைச் சேர்த்திருந்தேன். அபபிரதி தொலைந்துவிட்டது - கலைஞன் இறந்துவிடுவான் என்ற போதிலும், அவனனுபவித்துள்ள வாழ்தலின் ஆனந்தம் அமரத்வமானது என்பதை அதில் குறிப்பிட்டிருந்தேன். தனிப்பட்ட இருந்தும் உலகளாவிய வடிவில் அதனை கையகப்படுத்தி இருந்தால், அவன் படைப்பின் மூலமாக மற்றவர்களால் அது நிஜமாகவே விடுவிக்கப்படக் கூடியதே.

அவர் தொடர்ந்தார். நான் எப்போதும் பிரெஞ்சு இலக்கியத்தை விரும்பியிருக்கிறேன். போர் தொடங்கியதிலிருந்து, பிரெஞ்சு எழுத்து புதிய தொனியினையும் குறைந்த சொல்லாட்சித் திறனையும் பெற்றுள்ளது என்றுணர்கிறேன். எங்களுக்கெல்லாம் காம்யுவின் இறப்பு பெரிய இழப்பாகும். மையக் கருத்திலான வித்தியாசங்கள் இருப்பினும், பிரெஞ்சு இலக்கியம் இப்போது எங்களுக்கு நெருக்கமாய் இருக்கிறது. ஆனால் பிரெஞ்சு எழுத்தாளர்கள் அரசியல் காரணங்களில் சார்பு கொள்ளும் போது பொலிவிழந்து போகிறார்கள். ஒன்று, கும்பல்வாதத்தில் சேந்து நேர்மையின்றிப் போய்விடுகிறார்கள். அல்லது பிரெஞ்சு தர்க்க உணர்வில், தம் நம்பிக்கைகளை அவற்றின் இறுதி வரையிலும் எடுத்துச் செல்ல வேண்டியிருப்பதாக உணர்கின்றனர். ரோபெஸ்பியர் அல்லது புனித ஜஸ்ட் போல அறுதிவாதிகளாக தாமிருக்கவேண்டும் என்று புனைவு செய்து கொள்கின்றனர்.

ஆறு மணி தாண்டி நீண்ட நேரமாகி விட்டது. நான் கிளம்ப வேண்டியிருந்தது. சோர்ந்து போனதாயும் உணர்ந்தேன். பாஸ்டர்நாக் என்னுடன் நடந்து சமையலறை வழியே வாசல்வரை வந்தார். என்கையைப் பற்றி கணப்பொழுது தன் கையில் வைத்திருந்து, விரைவில் வருமாறு வற்புறுத்தினார்.

கேபிபாரிபி நதியின் இயற்கை நிலக்காட்சி

ஜோ. சப்ரால் டி மெலோ நெதோ
தமிழில் : ஜெ. சாந்தாராம்



ஒரு தெருவைக்
குறுக்காகக் கடந்திருக்கிற நாய் போல்
நகரத்தைக்
குறுக்காகக் கடந்திருக்கிற நதி,
பழம் துண்டாகப் பிளந்திருக்கிற வாள்

நதி நினைவுக்கு வருகிறது
நாயின் பணிந்திணங்குகிற நாக்காக
நாயின் வருந்தும் வயிறாக
அல்லது நாயின் அழும் இருகண்களின்
அழுக்கடைந்த ஈரத்துணியாய் இருக்கிற
மற்றை நதியாக.

நதி இறகுகளில்லா நாய் போன்றிருந்தது
நீலநிற மழை, ரோசாநிற நீரூற்று
நீரடிக் காட்சிக் குழல் கண்ணாடியின்
உள்ளிருக்கும் நீர்,
பெரிய சாடிகளில் நிறைந்துள்ள நீர்,
நீரில் வாழும் மீனினம்,
நீரில் மிசைந்தசையும் மென்காற்று
இவையெலாம் பற்றி
அது ஒன்றுமறிந்திருக்கவில்லை.

சேற்றிலும் பூஞ்சணத்திலும் அலையும்
நண்டுகளை அது அறிந்திருந்தது.
நீர்ப்பிடிகொண்ட சளி சவ்வை
நீளவாட்டாகக் கீறித் திறக்க
அது அறிந்திருந்தது
இரையின் இரத்தத்தை உறிஞ்சக் கூடிய
எண்காலி ஆக்டோபஸை
அவசியம் அது அறிந்திருந்திருக்க வேண்டும்.
ஈரிதழ்ச் சிப்பிகளில் வாழும்
அமைதியற்றப் பெண்ணை
நிச்சயமாய் அது அறிந்திருந்தது.

நதி ஒருபோதும்
மீனுக்கு, மினுக்கொளிக்கு,
மீனுக்குளதான விசைகூர்த்த உலைவுக்கு
வெளிப்படுத்துவதில்லை.
அது ஒருபோதும்
மீனில் வெளிப்படுத்துவதில்லை

அது பூக்களின் வெளிப்படுத்துகிறது,
கருநிற ஆண்கள் கருநிறப் பெண்கள் போல
பேதைமையும் கருமையுமாக இருக்கிறது,
ஏழ்மைப்பட்டதாக,
குறையிரந்து மன்றாடிக் கேட்பதற்கு
ஆளாகியுள்ள கருநிற மனிதர்களாக
திணையிலான தாவரங்களுக்குள்ளே
அது வெளிப்படுத்துகிறது,
தடித்த இலைகளுடைய வெப்பமண்டல
சதுப்புநில மேங்ரோவ் மரங்களில்
கருநிற மனிதர்களின் சுரிசுருள் கேஸமாக
அது வெளிப்படுத்துகிறது.

கருநிற நாயின் வயிறு போல்
மெல்லமைதியாக
எக்காலத்திலும் கொந்தளிப்பற்று
பருபாரிக்கிறது நதி.
நாயினுடையதாற் போன்றே
நதியினுடைய குழந்தைப் பிறப்பு
நெகிழ்விழைவுடனும்
முதுகெலும்பற்றும் இருக்கிறது

மற்றும் (சுடப்படும் போது ஒரு ரொட்டியின்
பொங்கழல்கள் போன்று)
கொதித்தெழுந்துக் குமுறுவதாக நதியை
ஒருபோதும் நான் கண்டதில்லை
மோனத்தில் நதி
பொருமும் ஏழ்மையைச் சுமந்து
கருப்புப் பூமியுடனாகச் சூலுற்றுள்ளது.

அது மோன அமைதியில் இசைந்திருக்கிறது
கருப்புநிலக் கரைக்கூம்புகளில்
கால் அல்லது கை மூழ்கியிருப்பதன் பொருட்டு
கருப்புநிலப் புதைமிதியடிகளில் கையுறைகளில்

சில சமயங்களில் நாய்கள்
ஓடுவதை நிறுத்தி உடனிலையாக
நிற்க நேர்வதாற் போன்று
நதி அசையாது தேங்கி
நிற்பதாகத் தோன்றுகிறது
அதன் நீர்ப்பரப்பு
திண்மையானதாக வெதுவெதுப்பானதாக
பாம்பின் திண்ணிய
வெதுப்பித்த அலைகளுடனாகப்
பாய்வுறுவதாக மாற நேரும்.

பித்துப்பிடித்த மனிதனுக்குரியதாக
மந்தித்து இருப்பதான ஏதோ ஒன்றை
அது தாங்கியுள்ளது.
மருத்துவமனைகள், சிறைச்சாலைகள்,
பைத்திதர் நலக்காப்பு மனைகள்
இவற்றுக்குரியதாக
மந்தித்து இருப்பதான ஏதோ ஒன்றின் ஊடாக,
மாசடைந்த, மூச்சுத்திணறடிக்கிற
வாழ்க்கைக்குரியதாக
(மாசடைந்த, மூச்சுத்திணறடிக்கிற
சலவைமனைக்குரியதாக)
மந்தித்து இருப்பதான ஏதோ ஒன்றின் ஊடாக
அது சோர்வுற்று நடக்கிறது.

சிதைந்து அழிபாடுற்ற
அரண்மனைகளுக்குரியதாக
மந்தித்து இருப்பதான ஏதோ ஒன்று
பூஞ்சக் காளானாலும் புல்லுருவியாலும்
தின்னப்பட்டுவிட்டது.
தடித்த மரங்களுக்குரியதாக
மந்தித்து இருப்பதான ஏதோ ஒன்றின் ஊடாக,
பெர்னாம்புக்கோவிலுள்ள

உணவு விருந்தறைகளிலிருந்து
சொட்டுச் சொட்டாக வடியும்
ஆயிரமாயிர தித்திப்புத் துளிகளின் ஊடாக
அது சோர்வுற்று நடக்கிறது.

நதிக்கு நேர்மாறானவற்றுடனாக
நகரம் சார்ந்த
கல்வியால் மேம்பாடுற்ற குடும்பங்கள்
அவர்களது சலிப்பூட்டும் வசனத்தின்
பருத்த முட்டைகளை அடைகாக்கிறார்கள்
அவர்களது சமையலறைகளின்
முழுமுற்றமைதியில்
தீயொழுக்க ஈடுபாட்டுடன் தம்
ஒட்டுப்பசை வாய்ந்த சோம்பலின்
பாத்திரங்களைக் கிளறியடியிருக்கிறார்கள்.

ஏதோவொரு மரத்தின் செழுங்கனியாக
நதியின் நீர் இயல்ந்திருக்கக் கூடுமோ?
ஏன் அது பழுத்துக் கனிந்த நீர் போன்று
தோன்றுகிறது?
நிலத்தில் சுற்றிப் பறந்தாற் போன்றே
நதி மேலாக ஏன் பூச்சிகள்
வட்டமிட்டுள்ளன?

நதியின் ஏதாகிலுமொரு பகுதியேனும்
கழிமகிழ்வில்
அலையலையாக வீழும் அருவியாக
எப்போதாவது இருந்திருக்கிறதா?
எங்கனும் குரலெடுத்துப் பாடும்
ஒரு பாடலாக அல்லது நீரூற்றாக
எப்போதாவது இருந்திருக்கிறதா?
பிறகு ஏன் நிலப்படங்களில்
அதன் கண்கள் நீலவண்ணத்தில்
தீட்டப்பட்டதாக இருக்கின்றன?



(Landscape of the Capibaribe River
- by JOAO CABRAL DE MELO NETO)



ஆசிரியர் குறிப்பு: வடகிழக்கு பிரேசிலில் கேபிபாரிபி நதி பாயும் பெர்னாம்புக்கோ எனுமிடத்தில் பிறந்த ஜோ சப்ரால் தோட்டப் பண்ணையில் வளர்ந்தார். 1942ல் ரியோ டி ஜெனெய்ரோவுக்க குடிபெயர்ந்த சப்ரால் மூன்று வருடங்களுக்குப் பிறகு அரசியல் வல்லுநர் பணித்துறையில் சேவையாற்றத் தொடங்கினார். ஸ்பெயின், இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் அயல்நாட்டு அரசியல் தூதுவர்களின் குழுவில் ஒருவராக 1987ல் ஓய்வு பெறும் வரை நாற்பதாண்டுகளுக்கும் மேலாக பணிபுரிந்தார். அவர் செனகல் மற்றும் ஹோண்டுராஸ் நாடுகளில் பிரேசில் அரசின் தூதரக தூதராகவும் இருந்தார். இருபதாம் வயதுகளில் அவரின் கவிதை நூல்கள் வெளிவரத் தொடங்கி 25க்கும் அதிகமான கவிதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். 1992ல் அவருக்கு இலக்கியத்திற்கான சாவோ பவ்லா விருதும் நெயுஸ்டட் விருதும் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். மந்திர வாசகச் சொற்றொடரியலும் எதிரொலிக்கும் படிமங்களும் அவரது கவிதைகளுக்கு சூட்சுமப் பாடலின் ஆற்றலைத் தருகின்றன. சமகாலத்தில் பிரேசிலியக் கவிதைக்கலை இயற்கூறுபாட்டுச் சிதைவுகளை பொருந்திசைவாக மாற்றும் பரீட்சார்த்தம் கொண்டுள்ள போதிலும், மரபார்ந்த கவிதை வடிவங்களை ஒருபோதும் கை துறக்காது எவ்வழியிலேனும் தன்னொழுக்கத்தில் மிகுந்த பண்டிதமும் எளிமையும் வாய்ந்த கருத்துப் படிவங்களாக சப்ராலின் புதிது புனைவான நவீனக் கவிதைகள் விளங்குகின்றன. நாட்டுப்புற இசையின் செல்வாக்கு என் கவிப் பொருட்சாரத்தில் ஊடாடி வெளிப்படுவதாகவும், வாய்மொழி கட்டமைப்புகளின் சாத்தியப்பாடுகளாகவும் அமையும்படி எழுதப்பட்ட கவிதை அதற்கு ஒரு காலத்தில் சொந்தமாயிருந்த பிரதேசத்தில் செயல்படத் திரும்புவதற்கு அவ்விசை சுதந்தரமளித்து அனுமதிப்பதாக நான் நம்புகிறேன் என்றார் சப்ரால்.

கோருகன

கன்னடத்தில்: கனகராஜ் ஆரணைகட்டை
தமிழில்: கே. நல்லதம்பி



இது இப்படியெல்லாம் நடக்குமென்று வீரேசனுக்கு தோன்றவே இல்லை. விளயாட்டிற்கென்று ஆரம்பித்தது இன்று உயிரைப் பிசைகிறது....ஏனோ அதை நினைத்துக் கொண்ட தருணம் மனதிற்குள் ஒரு நடுக்கம். நெஞ்சமெல்லாம் உறைந்து போனதைப் போலத் தோன்றி ஏ.சி காற்றுக்கு தேகம் குளிர்ந்து இதயம் பட்டென்று நின்றுவிடுமோ என்று பயந்து எழுந்து நின்றான். தன் வாழ்க்கையில் என்னென்னவெல்லாம் பார்த்தாகி விட்டது, இதற்கெல்லாம் பயப்படுவதா என்று சமாதானப் படுத்திக்கொண்டு வெய்யிலில் வெந்து கொண்டிருந்த தெருவைப் பார்த்தான். ரமலான் பண்டிகை ஆனதால் மக்களின் நடமாட்டம் குறைவாக இருந்தது. காரிலிருந்து இறங்கிய அரேபியன் ஒருவன் இந்தப் பக்கம் வருவதைப் பார்த்தான். மனதின் இறுக்கம் தளர்ந்ததைப் போல உணர்தான்."ஸலாமா லேக்கும்..இந்த ஃபாதி?" இறுகிய முகத்துடன், உறுதியான உடல்வாகுடைய சுமார் இருபது வயதுடைய அரேபியன் உயர்ந்த தொனியில் கேட்டான். "ஃபத்தல்" என்று வீரேசன் சொல்லிக் கொண்டே இருக்கையை சரிப்படுத்தி கத்திரி, சீப்புக்களை சுடுநீரில் கழுவினான். தொனி, பார்வை, மங்கிப்போன உடையிலிருந்து வந்திருக்கும் இந்த அரேபிய வாடிக்கையாளன் யாரென்று அவனுக்கு புரிந்ததது. பதூவன் சவுதிகளுடன் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று அவனுக்குத் தெரியும். புனித ரமலான் மாத வெய்யிலில் முடி திருத்திக் கொள்ள வந்திருக்கும் இந்த அரேபியன் "சோம்" கடைப்பிடிக்கவில்லையா!? கண்டிப்பாக நோம்பிருப்பான்...பின் ஏன் இவன் இப்படி தவிப்புடன் தென்படுகிறான். தன்னுள் இருக்கும் கனலை விட அரேபிய வாடிக்கையாளனின் கணகளிலுள்ள நெருப்பு வீரேசனை இப்போது கவர்ந்து

கொண்டிருந்தது. சுலையல்— ரியாத்— அபாஹ மெயின் ரோட்டிலிருக்கும் இவனது 'நூர் சலூனு''க்கு வருபவர்களில் அதிகம் அரேபியர்களே. நல்ல சொல் வளத்துடன் அரேபிய மொழி பேசத் தெரிந்த அளவுக்கே வந்தவன் பதூவன் இல்லை ஹதரிய என்று அடையாளம் கண்டு, யாருடன் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதை தெரிந்து வைத்துக் கொண்டிருந்தான். தன் சொந்த ஊரான 'பட்ட நாயகன ஹள்ளி'யில் கட்டிய வீட்டைத் தவிர, அரேபியர்களின் வாழ்க்கை முறைகளை நன்றாக தெரிந்து கொண்டிருந்ததுதான் இந்த பன்னிரண்டு வருட சவுதி வாழ்க்கையில் அவன் அடைந்ததாக இருக்கும்.... தாய்நாட்டிற்கு திரும்புவதைப் பற்றி அவன் இதுவரை யோசித்ததே இல்லை. சவுதியின் புதிய நியாகத் சட்டம் அவனை அவ்வளவாக பாதித்ததில்லை. விசாவின் நியமப்படி அவன் வேலை செய்வதால் நியாகத் அவனது பர்கத்தை நிர்ணயிக்கும் நிலையிலேயே இல்லை. வீட்டின் பல பிரச்சனைகள், பொறுப்புக்கள் அவனை சவுதி அரேபியாவின் நஜ்த் பாகத்தின் சுலையல் என்னுமிடத்திலேயே தங்கவைத்து விட்டது. இதையெல்லாம் விட மேலாக சூலத்தைப் போல எப்போதும் குத்திக் கொண்டே இருக்கும் அவனது மனைவியின் கொடூரமான பழக்க வழக்கங்களே தன்னை இந்த பாலைவனத்து மலைச் சிகரங்களுக்கு நடுவே புதைத்து விட்டது என்று நினைப்பான். மனைவியின் தொனி அவ்வப்போது கேட்காவிட்டாலும் அவளின் பகை, பொறாமை இவைகள் தன்னை விடாமல் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது என்று அடிக்கடி எண்ணுவான். அவளுடன் குடும்பம் நடத்தி தனக்கும் அது போலான புத்தி வந்தது போலா எவ்வளவோ முறை யோசித்திருக்கிறான். குடகு, மைசூர் என்று கடைசியாக கடல் கடந்து கண் காணாத இடத்திற்கு வந்தால் இவற்றிற்கெல்லாம் ஒரு முடிவு காண முடியும் என்பது தன் ரம்மியமான கற்பனை என்று அறிய வெகு சமயமொன்றும் தேவைப்படவில்லை. இந்த பன்னிரண்டு வருட கல்ஃப் வாழ்க்கை அவனுக்கு கொடுத்ததாவது என்ன? அதே குழப்பம், எதிர்பார்ப்பு மற்றும் நிலையில்லாத வாழ்க்கை.

பதூவன் அரேபியர்கள் வாசனை திரவியங்களுக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. ஆனால் இந்த இளைஞன் கொஞ்சம் வித்தியாசமாக இருக்கிறானே! இவன் உடல்வாகு, தொனி, ஆடை இவைகளையெல்லாம் பார்த்தால் சுலபமாகச் சொல்லிவிடலாம்: இவன் பதூவன் என்று. ஆனால் இந்த கமகமக்கும் வாசனை? இவன் ஹதரி அரேபியனா? இல்லை. அப்படி இருக்காது என்று எண்ணிக் கொண்டே அரேபிய இளைஞனின் முடியை கத்தரித்துக் கொண்டிருந்த வீரேசன் தன்னுடைய ஊகத்தை ஊர்ஜிதப் படுத்திக்கொள்ள ஆணியில் தொங்கிக் கொண்டிருந்த கோத்ரம் மற்றும் அகல்களைப்

பார்த்தான். அரேபியர்களின் சிரத்தை அலங்கரிக்கும் அவை இரண்டும் பதூவன் மற்றும் ஹதரி இருவரிடமும் வெவ்வேறாக இருக்கும். மெல்லிய நூலளவே வித்தியாசமாகத் தெரியும் இவை சூட்சுமமாகப் பார்க்கும் கண்களுக்கு மட்டுமே தாம் யாருடைய தலையிலிருக்கிறோம் என்னும் ரகசியத்தை வெளிப்படுத்தும்.. அரேபியர்களின் நடுவிலான வித்தியாசங்கள், உறவுகள், நட்புக்கள், நடைமுறைகள் மற்ற இந்தியர்களை விட வீரேசனுக்கு நல்ல அத்துப்படி. ஆனால் இந்தப் இளைஞன் மட்டும் ரகசியமாகவே இருக்கிறான். கோத்ரா என்னும்: அரேபியர்களின் தலையை அலங்கரிக்கும் இந்த துணியில் எந்த வித்தியாசங்களும் தெரியவில்லை. கடைசி முயற்சியாய் "இஸ் இஸம் முதீர்?" என்று கேட்டான். கண்ணாடியையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த அரேபிய இளைஞன் திடுக்கிட்டு "ஹூம்!.... முஹம்மத்" என்று கண்ணாடியில் முடியைப் பார்த்தான். வீரேசன் "முஹம்மத் இஸ்?" என்றான். இவனின் அப்பா பெயரைக் கொண்டாவது இவனது மூலத்தை கண்டறிய முடியுமா என்று முயற்சித்தான். இளைஞன் கோபமாக "முஹம்மத் ராஷீத்...இஸ் இப்கா?" என்று வினவினான். இளைஞனின் இந்தக் கேள்விக்கு தடுமாறி சும்மா கேட்டேன் என்று பல்லிளித்து தன் வேலையில் கவனம் செலுத்தினான். "ஸூப் ஹினா..." என்று வலது காதின் மேலே சமமாக இல்லாத முடியைக் காட்டி சரி செய்யச் சொன்னான். இளைஞனை சந்தோசப்படுத்தும் அவசரத்தில் வீரேசன் 'அல கஸம்" என்று மூக்கு நுனியை ஆள்காட்டி விரலால் தொட்டுக் கொண்டான், இதன் மூலமாகாவது இவன் பதூவன் என்று உறுதிப்படுத்திக் கொள்ள முயன்றான். பதூவன் அரேபியர்களின் பழக்கங்களில் ஒன்றான இதற்கான பதிலாக "அல ஷெஹம்" என்று சொல்லாமல் அநத இளைஞன் வீரேசனின்



முகத்தை ஒரு முறை முறைத்துப் பார்த்து திரும்பவும் கண்ணாடியை பார்க்கா ஆரம்பித்தான். அகலமான மார்பு அவனுடைய மூச்சுக்கு விரிந்தும் குறுகிக் கொண்டும் இருந்தது. அவனுடைய மூச்சுச் சத்தம் அதிகமாக உயர்ந்தது. யாருக்காவது 'ஆக்சிடென்ட்' செய்து தப்பித்து வந்து விட்டானா? இல்லை வீட்டில் சண்டை போட்டுக் கொண்டு வெளியெறிவிட்டானா? அப்பாவின் இரண்டு குடும்பத்தின் முழுப் பொறுப்பும் இவனுடைய முதுகில் ஏறிவிட்டதா? இல்லை மூன்று நான்கு திருமணம் செய்து கொண்ட தந்தை இவன் குடும்பத்தை புறக்கணித்து விட்டாரா? அவனுடய கண்களைக் கண்ணாடியில் பார்த்தான். அவை "ஓபார்" என்னும் பாலைவன காற்றில் சிக்கிக் கொண்ட மணல் மேடுகளைப் போல அதிர்ந்து கொண்டிருந்தன. அவன் கண்களுக்கு கீழ்ே இரண்டு கோடுகள் தெரிந்தும் தெரியாததும் போல வந்து போய்க் கொண்டிருந்தன. கோபம் மற்றும் வலியில் தவிப்பதைப் போல அவன் கண்டான். இந்த வயதில் அப்படியென்ன ஆழமான வலி? என்ன சொல்லுப்பா, உன்னைப் போல நிறையப் பேரை என் பால்யத்திலிருந்தே பார்த்திருக்கிறேன், அவர்களின் கோப தாபங்களை நன்றாக அறிவேன், அவர்களின் மனதின் ஆழத்தில் இறங்கி தூர்வாரி இருக்கிறேன், சொல் என் அரேபிய நண்பனே...யல்லா, ஷப்பாப் கல்லம், உன் வருத்தம் தான் என்ன? கேட்கட்டுமா? இந்த பதூவன் அரேபியரின் மனதை அறிந்து கொள்வது மிகவும் கடினம்....இப்படித்தான் என்று சொல்லமுடியாது. ஆடு போல மென்மையாக இருக்கும் மனது திடீரென்று ஓநாயைப் போலப் பாயும். பேரைக் கேட்டதற்கே அவன் தன்னை முழுங்கி விடுவதைப் போலப் பார்த்தான். இன்னும் இதையெல்லாம் கேட்டாலோ உதைத்தே விடுவான்.... இந்தத் தலைவலி தனக்கெதற்கு...தன்னுடையதே பொத்திப் படுக்கும் அளவுக்கு இருக்கு....." சுளுக் என்ற ஒரு நடுக்கம் மார்பில் உண்டாகி அடிவயிற்றை பிசைந்து தொண்டையை இறுக்கியது.

எப்படியோ சிரமப்பட்டு வேலையை முடித்து "முதிர் கலாஸ்" என்று சொல்லி சிரிப்பை முகத்தில் காட்ட முயற்சித்தான். எதிலிருந்தோ விடுபட்டவனைப் போல அந்த அரேபியன் ஒரு நீண்ட பெருமூச்சுவிட்டு , கண்களை அரை விநாடி மூடி பிறகு திறந்து "ஹம்துலுல்லாஹ்" என்று வீரேசனைப் பார்த்தான். செயற்கையாகச் சிரிப்போன்றை உதிர்த்து வீரேசன் அவன் கண்களையே பார்த்தான். அவை முன்னைப் போல சுடவில்லை., அகலமாகப் பரவியிருந்த மணல் வெளியில் நிலாப் பொழிவதைப்போல குளிர்ச்சியாக இருந்தது. அவனது முரட்டு தேகத்திலிருந்து வெளிப்பட்ட அந்த ஜவ்வாது மணம் வீரேசனின் மூக்கைத் துளைத்து நெஞ்சில் இறங்கி அவனை புல்லரிக்கச் செய்தது. .ஐம்பது ரியால் நோட்டொன்றை அவன் கையில்

இணித்து சந்தோசமாக சிரித்தான். அவன் கண்களில் நீர் நிறைந்ததைப் போல தென்பட்டது. முகம் மலர்ந்திருந்தது. "ஜீதிக் ஹால ஷூத் அல் முஜாஹிம் ஹாஃபி எஹத்த எனிஷிதக் ஒகுப் அல்பத கேஃப் ஹலஹ்வான்?". என்னும் பதூவன் கவிதம் ஒன்றை சொன்னபோது அவனது குரல் குழந்தையின் பிஞ்சுக் பாதங்களைப் போல மிருதுவாக இருந்தது. உதட்டை விரித்து சிரித்தபோது அவன் உதடு கருப்பாக இருந்ததை வீரேசன் கவனித்தான். மணல் வெளியின் குளிர், வெயில்களுக்கு அஞ்சாத முகம் இவனுடைது என்று எண்ணிக்கொண்டே "இந்த மாலூம் ஷாயர்?" என்றான். ஒன்றும் பேசாமல் விறுக்கென்று வெளியே போன அரேபியன் நொடியில் கதவைத் தள்ளி உள்ளே திரும்பி வந்து சோபாவில் அமர்ந்து கொஞ்ச நேரம் அங்கேயே இருப்பதாக சொன்னான். வீரேசன் சரி என்பதைப் போல தலையாட்டினான். அவனுடன் பேச வேண்டும் போல இருந்தது. பயம் , தயக்கம் எல்லாம் சேர்ந்த பார்வையில் அவனைப் பார்த்தான் வீரேசன். கண்ணை மூடி சுவரில் சாய்ந்து அமர்ந்திருந்தான். இந்த பதூவன் அரேபிகளுடன் பேச்சைத் துவங்குவதே சிரமம்! கோபம் வந்தால் என்ன செய்வார்கள் என்று எண்ணிக் கூடப் பார்க்க முடியாது. ஹதரி அரேபியர்களைப் போல மென்மையானவர்களும், நாகரீகமானவர்களும் அல்ல இவர்கள்! தைரியசாலிகளாகவும், பலசாலிகளாகவும் இருக்கும் இவர்கள் நட்பு, உறவு, பகை, அதிகாரங்களுக்கு பெயர் போனவர்கள். அரேபிய சமுதாயத்தின் மேல்வர்கத்தின் முக்கியமானவர்கள் அரேபியர்களின் உலகில் இஸ்லாமுடன் பதூவன் வாழ்க்கையும் பின்னப்பட்டுள்ளது. பதூவன் களின் இம்சைப் பாதையை இஸ்லாம் தடுத்திருப்பது நிஜமல்லவா !? தர்மத்தின் கட்டுப்பாடுகள் இல்லாவிட்டால் இவர்களை அடக்கமுடியுமா? என்று கம்பீரமாக வீரேசன் தன் நண்பர்களுடன் பேசியிருக்கிறான். இடுப்பில் கத்தியையோ, துப்பாக்கியையோ எப்போதும் சொறுவிக் கொண்டிருக்கும் இவர்களைப் பார்த்தால் மனம் பயந்த பூனை போல மூலையிலிருந்து எட்டிப் பார்த்துக் கொண்டே இருக்கும். வார்த்தைகள் தடித்து சண்டைக்கு வந்தாலோ முடிந்தது....கோபம் நெத்திக்கேறி, நேரமும் கெட்டிருந்தால் வாழ்க்கை முடிந்ததென்றே அர்த்தம்....நம் நாட்டின் தேவர் ஜாதிப் பசங்களும் அப்படித்தானே! அவர்களைப் போல இந்த பதூவன்களும் மக்களை மிதிக்கிறார்கள். ஹதரிகளின் மற்றும் கருப்பு சவுதிகளின் வாழ்க்கை இவர்களுக்கு தூசிக்குச் சமம். 'நாகரீகம் தெரியாத, முரட்டுத் திமிர் பிடித்த கத்தாளைகளைப் போல இவர்கள்' என்று மற்ற அரேபியர்கள் இவர்களைப்பற்றிச் சொல்வார்கள். தமிழ்த் தேவர்களும் இப்படித்தானல்லவா!!? வறட்டு ஜம்பத்தின் சோளக் கொல்லை பொம்மைகள். நாசுவன், வண்ணான், பறையர்கள் இருப்பதே இவர்களுக்கு தொண்டு செய்வதற்காக என்ற



எண்ணத்தில் அவர்களின் வாழ்க்கையின் மேல் சவாரி செய்வார்கள்! தங்களையாவது திண்ணைவரை விடுகிறார்கள் ஆனால் பறையர்களை..!? லா..இலாஹ இல்லல்லா...! அவர்களின் வாழ்க்கை நாய் வாழ்க்கை. தமிழ்நாட்டில் நடப்பதைப் போல கர்நாடகாவிலும் இந்த தேவர்களின் அட்டகாசத்தை ஏன் சிலர் முறியடிக்க முயற்சிக்கவில்லை? அவர்கள் தங்களைக் கீழாகவே பார்க்கிறார்கள்... இந்த பதூவன் அரேபியர்கள் ஹதரி மற்றும் கருப்பு அரேபியர்களைக் காண்பதுபோல... ஒரு மூட்டை நெல்லுக்காக தன் தந்தை தேவர் வீட்டில் வருடம் முழுவதும் சவரம் செய்து கொண்டிருந்தது சில சமயம் நினைவில் வந்து சுரீரென்று வீரேசனின் தலைக்குள் நெருப்பின் பிழம்பு புகுந்ததைப்போல உணருவான். இப்போது நிலமை அப்படியில்லை என்பது சமாதானம்... அவர்களின் வாழ்க்கை பழைய மாதிரி இல்லை. வயல்களை விற்று வாழ்க்கையை ஓட்டவேண்டிய நிலையில் அநேகம் பேர் உள்ளார்கள். பழைய வழக்கங்களை கடைபிடிக்க அவர்களால் முடியாது... முக்கியமாக இந்தக் காலத்து மற்ற ஜாதிப்பசங்களுடன் அவர்களின் சாதி ஜம்பமெல்லாம் வேகாது...ஹஹஹ...ஆனாலும் அவர்களின் திமிர் அடங்கவில்லையே! இந்த பதூவன் களைப் போலவே அவர்கள் வெகு ஆசை பிடித்த மனிதர்கள். கட்டிக்கிட்டவ ஒருத்தி இருந்தாலும் வெப்பாட்டி ஒருத்தி இருக்கணும்.. இந்தக் காலத்து தேவர்கள் யாரும் அப்படி வைத்துக் கொள்வதில்லை, ஆனால் மற்ற பெண்கள் மேல் பாய்வார்கள். கூலிக்குப் போகும் பாவப்பட்ட பறையர் பெண்கள் அவர்களின் தோட்டத்தில் தங்கள் உடம்பை விற்று வருகிறார்கள்..இந்த அரேபியர்களாவது சட்டப்பூர்வமாக மூன்று நான்கு திருமணம் செய்துக்கொண்டு எல்லோரையும் நன்றாக பார்த்துக்

கொள்கிறார்கள்... ஆனால் அந்தத் திருட்டுப் பசங்க...? 'தன் மனைவியை ஏதாவது அந்த பட்றேஹைள்ளி தேவர்கள்....?' என்ற எண்ணம் தோன்றி அதிர்ந்து போனான். அவள் மட்டும் என்னவாம்!, அடம், பிடிவாதங்களில் வேகும் அவள் தன் மேல் பகை தீர்க்க என்ன வேண்டுமென்றாலும் செய்யத் துணிந்தவள். ..ச்சே ஞ். அப்பப்ப வதைக்கும் இந்த யோசனை இன்று ஏன திரும்பவும் தோன்றுகிறது? அதுவும் இந்த குளிர்ந்த நேரத்தில்?

கதவு வேகமாக திறந்து மூடிக்கொண்டது. "வீரேச சௌக்கியமா?" உள்ளே வந்த மதுரைக்கார பஷீர் கேட்டான். திடீரென்று எழுந்த வீரேசன் 'உம்" என்று பதிலளித்து கண் படபடக்க நின்றான். பஷீர் அரேபிய இளைஞனிடம் " முஹம்மத், ரோஷ்..இந்த பாபா இந்தஸார் பர்ர" என்றான். அந்த இளைஞன் எழுந்து கண்ணாடியில் தலையின் மேலுள்ள கோத்ரா மற்றும் அகல் களை சரி செய்து கொண்டு வெளியே புறப்பட்டான். நீளமான அந்த அரேபிய உடை தோபில் கண்ட அவனது பின் பாகம் வீரேஷனுக்கு தன் மனைவியை நினைவுப் படுத்தி உடம்பெல்லாம் புல்லரித்தது. மனைவியை விடவும் வாதி அல் தவாசிர் மருத்துவ மனையின் கேரள நர்ஸ் மரியம்மின் உடல் அழகை அவன் கண்முன் கொண்டு வந்து நிறுத்தியது என்று சொல்லலாம். "வீரேச இவன் யார் தெரியுமா?" என்னும் பஷீரின் கேள்வி கோபமூட்டினாலும். சற்று பொறுமையாக 'இல்லை, தெரியாது, யார் இவன்?" என்றான். அதற்கு பஷீர் "அல் தொஸரி பதூவன்களின், அல் மொஹரின் வகுப்பைச் சேர்ந்தவன் இந்த முஹம்மத் ராஷீத். இந்த வகுப்பு மக்கள் சாமாணியமானவர்களல்ல, சமுதாயத்தின் கட்டுப்பாடுகளுக்கு சவாலாக தங்களுடையதே ஆனா தனி நீதி நியாயங்களை அமைத்துக்கொண்டவர்கள். அடிக்கு அடி, உயிருக்கு உயிர்... எதற்கும் பயப்படாத கூட்டம். இவர்களிடம் ஒரு எழுதப்படாத சட்டம் உள்ளதாம், இவர்களில் யாராவது ஒருவன் கொலையுண்டால் பதிலுக்கு கொன்றவர் வீட்டில் இரண்டு பிணமாவது விழவேண்டுமாம் இந்த வகுப்பைச் சேர்ந்த முகமத் ரஷீதினுடைய தாத்தாவை ஐந்து வருடங்களுக்கு முன் தொஸரிகளின் அல்ரிஜ்பான் என்னும் மற்றொரு வகுப்பைச் சேர்ந்தவன் கொன்றுவிட்டானாம். அதன் பழி இன்னும் தீரவில்லை. அப்பாவிடம் இல்லாத இந்த பழியின் வெறி இவனிடம் சீப்பிடித்து அழுகிக் கொண்டிருக்கிறது. பைத்தியக்காரன் போல் அலைகிறான். வீட்டில் யார் சொன்னாலும் கேட்பதாயில்லை. இந்தக் காரணங்களுக்காக வீட்டில் சண்டைபோட்டுக்கொண்டு அவ்வப்போது பாலைவனத்திற்கு போய்விடுவான்..."

அரேபிய இளைஞன் கூறிய அந்தக் கவிதையின் மற்றொரு பொருள் புரிந்து வீரேசன் கொஞ்சம் பயமுற்றான். "வெறுங்காலில் ஒடி, கருப்பு ஒட்டகம் ஏறி வந்தேன் நண்பா, உன்னைப் பார்த்து

'எப்படி இருக்கிறாய்?' என்று கேட்க" கவிதையை தனக்குப் தெரிந்த அரேபியில் புரிந்துகொண்ட வீரேசனுக்கு கொஞ்சம் புரியாத பயம் உண்டானது. வயிற்றுக்குள் புரியாத சங்கடம். ஜுகர் தொழுகைக்கு அதான் கூவினார்கள். சலூனைப் பூட்டியபொழுது தலை கொஞ்சம் சுற்றியது. கால்கள் நடுங்கத் தொடங்கின. வீசிக் கொண்டிருந்த சுடு காற்று அவனை எரித்தது. அந்த அரேபிய இளைஞனின் கதை கேட்ட பிறகுதான் இப்படியெல்லாம் அவன் உணர்தான். ஒன்றும் தோன்றாமல் எல்லாம் சூனியமாக இருப்பதைப்போல தெரிந்தது. கால்களை முன்னே வைக்க முடியவில்லை. சிறிது சுதாரித்துக்கொண்டு தனது அறைப் பக்கம் போகலாம் என்று திரும்பினான். பஷீர் போய்விட்டான். தான் எல்லாவற்றையும் மறந்து விட்டேனா? அல்லது மறக்க வேண்டுமென்றே வெளிநாடு வந்தேனா? நாலு காசு சம்பாதித்து வீடு நிலம் வாங்க வேண்டுமென்றல்லவா இங்கே வந்தேன்?! இல்லை அந்த அடங்காப்பிடாரி மனைவியின் பிடியிலிருந்து தப்பித்துக் கொள்ளவா? தேவர், கவுண்டர், நாயக்கர், குஞ்சிடிகர் எல்லாரையும் மீறும் வாழ்க்கை வாழவல்லவா இங்கே வந்தது? அது எதுவாகவாவது இருக்கட்டும், தன் தாத்தாவைக் கொன்ற அந்த 'பட்றேஹள்ளி' தேவர்களை ஒரு கதி காண வைக்கவேண்டும்....அடையாளம் இழந்துகொண்டு குப்பையாய்க் கொண்டிருந்த ஒரு வலி அவன் மனதின் பொந்திலிருந்து வெளியேறிக்கொண்டிருந்தது. பல வருடங்களுக்கு பிறகு வந்த அவனுடைய தாத்தாவின் நினைவு கொஞ்சம் அவனை தைரியம் இழக்க மற்றும் நிலையற்றவனாக உணரச் செய்தது. மிகப் பழமையான அந்த மங்கிய நினைவு அவன் மனதின் ஆழத்தில் இன்னும் அடங்கியிருந்தது. அது அவனை திகிலுறச் செய்தாலும் தன் கோபத்தை அது கிளறியதை அவன் விரும்பினான்.

தமிழ்நாட்டின் பொள்ளாச்சியிலிருந்து கர்நாடகாவின் 'ஹிரியூறு' என்ற ஊருக்கு இடம் பெயர்ந்து வந்த தேவர் குடும்பங்களுக்கு விசுவாசமான நாசுவனாக வீரேசனின் தாத்தா பழனிச்சாமி தன் முன்னோர்களைப் போல தேவர் மற்றும் கவுண்டர்களின் சேவையே தன் வாழ்க்கை என்று எண்ணிக் கொண்டிருந்தான். தேவர்கள் அதிகமிருந்த 'பட்ரேஹள்ளி' அவனுடைய தொழில் இடமாக இருந்தது. வருடக் கூலி, திருமணம், சாவு இவைகளில் கிடைக்கும் சொற்பக் காசுதான் அவன் வருமானமாக இருந்தது. தேவர்களின் வீட்டு பிறப்பு — சாவு, திருமணம் — விழா, குலதெய்வ பூசை இவைகளுக்கெல்லாம் பழனிச்சாமி நாசுவனின் தேவை இருக்கும். எவ்வளவோ சடங்குகளை பழனிச்சாமியை கேட்டு தேவர்களின் பெரியவர்கள் செய்வார்கள். தேவர்களுக்கு நடுவிலேயே பிறந்து வளர்ந்த அவனுக்கு அவர்களின் எல்லா சடங்குகளும் அத்துப்படியாயிருந்தது. இளைய தலைமுறைத் தேவர்கள்

இவனைக் கேட்டுத்தான் பல சடங்குகளை செய்வார்கள். இது மட்டுமல்ல தேவர்களின் ஒவ்வொரு வகுப்பின் சரித்திரம், அவர்களுடைய தெய்வங்களின் இதிகாசம் எல்லாமும் அவனுக்கு மனப் பாடம். தனது கொங்கு நாசுவ குலத்தின் வழிமுறைகளை விட அதிகமாக அவன் தேவர்மார்களின் சாஸ்திர சம்பிரதாயங்களையே நன்றாக அறிந்திருந்தான். பொன்னைத் திருடியவர்கள், கோட்டையைக் காத்தவர்கள், நாட்டை ஆண்டவர்கள், அணைகளைக் கட்டியவர்கள், நிலம் உழுதவர்கள், தங்களிடையே நடந்த தாயாதி கலகங்களால் வெந்து வீதிக்கு வந்தவர்கள், என்று நூறாண்டு கால சோழ,பாண்டியர் முதல்கொண்டு, விஜயநகர அரசர்களின், நவாப்களின் மற்றும் வெள்ளையர்கள் காலத்து வரையிலான தேவர் குலத்தின் கதைகளை பாட்டாகவே பாடிக் காட்டக் கூடியவனாக இருந்தான்.

அன்று 'பில்லுக்கட்டி' தேவர் குலத்தின் முதியவளான அங்கையம்மா இறந்திருந்தாள். ராமசாமித்தேவரின் மருமகளும், ரத்தினத் தேவரின் மகளுமான அங்கையர்க்கரசி சிறுவயது முதலே சுகமாக வளர்ந்தவள். தன் குலத்தின் எல்லாப் பழக்க வழக்கங்களையும் நன்கு அறிந்திருந்த அவள் சுற்று எட்டூர்களிலுள்ள தேவர்களின் குடும்பத் தகராறுகளை தீர்த்து வைக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு அவர்களின் மரியாதைக்கு உரியவளாக இருந்தாள். பழனிச்சாமிக்கு இந்தக் கிழவி என்றால் உயிர். எவ்வளவோ விஷயங்களை ஒருவரிடமிருந்து மற்றவர் கற்றிருந்தார்கள். இப்படிக் குலத்திற்கே மூத்தவளாக இருந்த



அங்கைப் பாட்டி, அங்கம்மா, அங்கையர்க்கரசி இவ்வுலகை துறந்து பரலோகம் சென்ற நேரம். சுற்றியிருந்த தேவர் குல மக்கள் எல்லாம் வேலுச்சாமி வீட்டில் கூடியிருந்தனர். சாவின் சடங்குகளில் மூழ்கியிருந்த பழனிச்சாமி நாசுவன் துன்பத்துடன் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தான். சாவின் தருணங்களில் மட்டுமே அவர்களின் வீட்டுக்குள் போக முடியுமானதால், ஆரம்பத்தில கொஞ்சம் தடுமாறினான். மெதுவாக சூழ்நிலைக்கு தன்னைப் பொருத்திக்கொண்டு சடங்குகளை ஒழுங்காகச் செய்யும் கவலையுடன் சாவின் சூதக காரியங்களை கூவிச் சொல்லி செய்துகொண்டிருந்தான். அன்று பெரிய சாவானதினால் பழனிச்சாமி மிக அக்கறையுடன் வேலை செய்து கொண்டிருந்தான். குலத்தின் பெரியவளான அங்கம்மாவின் ஈமச் சடங்குகளை சரிவர செய்யவேண்டுமென அவனுக்குள்ளேயே சொல்லிக் கொண்டான். பிணத்தின் துவாரங்களுக்கு பஞ்சடைத்து, கால் பெருவிரல்களை துணியால் கட்டி, எல்லா விதமான சடங்கு, பூசைகளுக்கு தயார் செய்து கொண்டிருந்தான். வீட்டு ஆட்கள் எல்லோரும் கும்பிட்டு முடித்தனர். பெண்கள் ஒப்பாரி வைத்து அழத் தொடங்கினர். வெளியே வண்ணான்மார்கள் தேர் கட்டிக் கொண்டிருந்தார்கள். பறையர்கள் தம்பட்டத்தை நெருப்பில் சூடு காய்த்துக் கொண்டிருந்தனர். எல்லாம் தயார் ஆனா நிலையில், பிணத்தை வாசலில் வைத்து 'பில்லுக்கட்டி' தேவர் குலத்தவர் எண்ணை — சீவக்காயை பிணத்தின் தலைக்கு வைக்க பழனிச்சாமி நாசுவன் உதவி செய்து கொண்டு, பெண்கள் கொண்டுவந்து வைத்த தண்ணீர் குடத்தை அங்கையர் பாட்டியின் உடம்பில் ஊற்றினான். பிறகு மற்றொரு சடங்கான 'கோடி' போட அழைத்தான். 'பிறந்த வீட்டுக் கோடி போட வாங்கோ சாமியோ" என்று கூவினான். அங்கையர் பாட்டியின் பிறந்த வீடான 'காடை'த் தேவர்கள் பிறந்த வீட்டுக் கோடியை எடுத்துவர அந்த ஊரின் காடைத் தேவர் குப்புசாமி வீட்டில் கூடியிருந்தார்கள். கோடிச்சீலை, தேங்காய், பழம, ஊதுவத்தி, கற்பூரம் எல்லாம் எடுத்து வைத்துக் கொண்டிருந்தார்கள். அங்கையர் பாட்டியின் மூன்று தம்பிகளில் கடைசித் தம்பியான குழந்தைவேல கத்திக்கொண்டிருந்தான்..... வாழ்க்கை முழுதும் தன் அக்காவை இம்சைப் படுத்திக்கொண்டிருந்த அந்த வேலுச்சாமி தேவனை ஒரு வழி ஆக்கிவிட வேண்டுமென்று கூவிக் கொண்டிருந்தான். அவனை சமாதானப் படுத்த அங்கே எல்லோரும் முயன்று கொண்டிருந்தனர். அங்கையர்க்கரசியின் கணவனுக்கும் அவளது தம்பிகளுக்கும் ஏதோ ஒரு விசயத்தில் தகராறு முற்றி அடிதடியளவுக்கு போய்விட்டது. வருடக் கணக்காக பிறந்த வீட்டிற்கு போக முடியாமல் தடை போடப்பட்டிருந்தவளுக்கு சாவின் தருணம் தன் பிறந்த வீட்டாரைப் பார்க்கும் பாக்கியம் கிட்டியது. உயிர் பிரிவதை இரண்டு வாரங்களுக்கு தள்ளிப்

போட்டுக்கொண்ட. அங்கையர்க்கரசி பாட்டி , மார்கழி மாச அமாவாசை கழிந்த மூன்றாவது நாள் உயிர் நீத்தாள். குழந்தைவேலனின் கத்தல் அதிகமாகிக்கொண்டே போக அவன் அண்ணனும் வீட்டிற்கு பெரியவனும் ஆனா முத்துராச வழியில்லாமல் அவன் காலில் விழுந்து — “பில்லிக்கட்டு வீட்டார் முன் நம் குடும்பத்தின் மானத்தை வாங்கதேடா” என்று அழ ஆரம்பித்தான். சாவை மறந்து எல்லோரும் குழந்தைவேலனை சமாதானப் படுத்துவதிலேயே களைப்படைந்திருந்த பெரியவனை பார்த்து பரிதாபப்பட்ட காடைத்தேவர்கள் “அவனை ரூமிலே போட்டு அடையுங்கள்”, “ வேண்டாம், இன்னும் அதிகமாக ஆர்ப்பாட்டம் பண்ணி அசிங்கப் படுத்திடுவான்...” என்றெல்லாம் அறிவுரைகளை அள்ளி வீசிக் கொண்டிருந்தார்கள். கொஞ்சம் கோபம் தணிந்த குழந்தைவேலு ‘ஒண்ணும் செய்யமாட்டேன்” என்று பேச்சியாத்தாளின் மேல் சத்தியம் செய்தான். கோடிச் சீரை எடுத்துக்கொண்டு புறப்பட்டனர். இதற்கிடையில பிறந்த வீட்டு கோடிக்கு காத்து அலுத்து கோபமுற்ற அங்கையர்க்கரசியின் கணவன் வேலுச்சாமித் தேவர் “ இந்த காடைப் பசங்க திமிறு அதிகமாயிடுச்சு. காக்குட்டும்னு வேணும்னே பண்ராணுக. சாவிலயும் அவங்க குரங்கு புத்தியக் காட்றாணுக....அநாகரீகப் பசங்க... நம்மள என்ன வண்ணா கழுதைங்கனு நினைச்சாணுங்களா..டே நாசுவ பளனி.. புகுந்த வீட்டு கோடியை போடசொல்றா மொதல்லே... அவனுக குடிச்சு தின்னுட்டு வர்ற வரைக்கும் காக்க முடியாது” என்று கத்திக் கொண்டிருந்தார். இதற்கு அதிர்ச்சியுற்றது பழனிச்சாமி மட்டுமல்ல அங்கே கூடியிருந்த அனைவரும் தான். பிணம் எடுக்கும் முன்னே சம்பிரதாயப்படி முதல் கோடி பிறந்த வீட்டுக் கோடியாகத்தான் இருக்கவேண்டும், பிறகுதான் புகுந்த வீட்டுக் கோடி போடவேண்டும். முதலில் எண்ணை சீவக்காய் தலையில் இட்ட பிறகு , குளிப்பாட்டி, பிறகு இரு வீட்டாரின் கோடியை முறைப்படி சடலத்தின் மீது சாத்தி, பிணத்தை பாடையில் ஏற்றுவார்கள். இறந்தவர் பேரன் பேத்திகளைப் பார்த்திருந்தால், வெறும் பாடை கட்டமாட்டார்கள், அதை தேர் போல் சிங்காரித்து, பட்டாசுக்கள் வெடித்து , தாரை தம்பட்டை அடித்து இறுதியில் ஊர்வலமாக எடுத்துச் செல்வார்கள். அங்கையர் பாட்டிக்கு இது போல எல்லாம் தயாராகவே இருந்தது. பெரிய சாவை மிக மரியாதையோடு அனுப்ப தயாராக இருந்த தேர் அங்கைப்பாட்டியின் ஸ்பரிஸத்திற்காக காத்துக்கொண்டிருந்தது. அங்கையர்ப் பாட்டியை அதில் ஏறறுவதுதான் பாக்கி.

வேலுச்சாமியின் இந்தப் பேச்சு அங்கிருந்தவர்களில் சிலருக்கு அங்கயர் பாட்டியின் சவத்திற்கு கிடைக்கும் கௌரவங்களை பற்றிய சித்திரங்கள் மனதில் தோன்றிக் கொண்டிருதால், பலருக்கு நாசுவன் பழனிச்சாமி காலில் விழாத குறையாக பயமூட்டியது.

வேண்டிக்கொண்டான். " இது சரியல்ல ! முதலில் பிறந்த வீட்டுக் கோடிதான் போடவேண்டும், அதுதான் நியாயம்." என்று சொன்னபோது நெஞ்சு படபடத்தது. கொதித்து வெந்துபோயிருந்த வேலுச்சாமி தேவர் 'பளீர்' என்று பழனிச்சாமியின் கன்னங்களில் அறைந்து "எனக்கே நியாயம் — அநியாயம் பாடம் நடத்தரயா நாசுவப்பயலே, சூ..த்....த மூடிக்கிட்டு உன் வேலையைப்பாரு" என்றார். சாவின் வீடு மயான மௌனம் அடைந்து நிசப்தமானது. அதிர்ச்சியுற்று நடுங்கி கீழே விழப்போன பழனிச்சாமி சுதாரித்துக் கொண்டு எழுந்து நின்றான். .எல்லோரும் அவனையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். "தம்மாத்துண்டு சொத்துக்கே இப்படி கோவிச்சுக்கிட்டு ஆடர அந்த காடத் தேவனுங்களுக்கே அவ்வளவு இருந்தா, அம்பது அறுபது ஏக்கர் இருக்கற நமக்கு எவ்வளவு இருக்க வேணாம்..அந்தப் பசங்க கோடி போடலேனாலும் பரவால்லே...நம்ம கோடி போட்டு எடுங்கட பொணத்த..." வேலுச்சாமித் தேவர் கொதிக்கும் எண்ணெய் காலில் சிந்தியதைப் போல கோபத்தில் பறந்து கொண்டிருந்தார். பழனிச்சாமியின் கண்களிலிருந்து கண்ணீர் சிந்திக் கொண்டிருந்தது. யாருக்கும் தெரியாமல் கண்ணைத் துடைத்துக் கொண்டு அங்கையர்க்கரசிக்கு கணவன் வீட்டின் இறுதி மரியாதைகளை எல்லாம் சரிவர செய்து முடித்தான். அவன் உள் மனது இவைகளைச் செய்ய மறுத்துக் கொண்டிருந்தது. காடைத் தேவர்கள் கோபக்காரர்கள் , சிறிதும் அவமானத்தை சகித்துக் கொள்ளாதவர்கள். எல்லாவற்றிற்கும் மேலாக அவர்களுக்கு மானம் பெரிது.....அவர்களின் தன்மானத்திற்கு கலங்கம் ஏற்பட்டால் உயிரை எடுக்கவும் — கொடுக்கவும் துணிந்தவர்கள்...!!! "கருப்பா...சாமி, உன் பிள்ளைகளுக்கு நீதான் நல்ல புத்தி கொடுத்து அங்கையர்க்கரசியின் தேகத்தை எந்தக் குறையுமில்லாமல் எடுத்துச் செல்ல வழி செய்ய வேண்டும்...திருப்பதி வெங்கடாசலபதி நீதான் உன் பில்லுக்கட்டி தேவர்களின் நரி புத்தியை மன்னித்து நல்ல புத்தியை கொடுக்க வேண்டும்....." பழனிச்சாமி மனதிற்குள்ளேயே வேண்டிக்கொண்டான்.

அங்கிருப்பவர்கள் எல்லாம் எதிர்பார்த்துக் கொண்டிருந்த அத்தருணம் வந்தது. 'பிறந்த வீட்டுக் கோடி' யை எடுத்துக்கொண்டு காடைத் தேவர்கள் வந்து கொண்டிருந்தார்கள். நான்கு பிளாஸ்டிக் குடங்களில் தண்ணீர் எடுத்துக்கொண்டு வர அவர்களுக்கு முன் அங்கையர் பாட்டியின் முதல் மகள் மண் பானையில் தண்ணீர் எடுத்துக்கொண்டு வர.. பாட்டியின் இரண்டு சகோதரர்கள் ஒரு வெள்ளைத் துணியை அந்த ஐவரின் தலைக்கு மேல் பிடித்துக் கொண்டு வந்து கொண்டிருந்தார்கள். பின்னால் கோடித்துணி, பூசை பொருட்களுடன் சிலர் வர, கடைசியில் குழந்தைவேலு தான் தள்ளாடுவதை கட்டுப்படுத்திக்கொண்டு

வந்து கொண்டிருந்தான். காடைத் தேவர்களெல்லாம் உடனே கவனித்தார்கள். பெரியவனான முத்துராசனுக்கு கோபம் சுருக்கென்று நெத்திக்கேறி "வக்களோலி பில்லிக்கட்டுங்கள பாருங்கடா...நாம அவன்களுக்கு அவ்வளவு இளக்காரமா போய்ட்டோம்.....எங்கக்கா சாவிலேயும் நம்மள அவமானப் படுத்திட்டாணுங்க.." என்று ஆக்ரோஷமாக கத்தினான். ஒருவரோடொருவார் மோதிக்கொண்டு கூச்சலிட்ட சத்தம் ஊரையும் தாண்டி மயானம்வரை கேட்டது. குழந்தைவேல் தன் மாமனை அடிக்கும் முன்னமே அவனை பில்லிக்கட்டு மைனர்கள் அடித்து நொறுக்கியிருந்தனர். அங்கையர் பாட்டியின் சவம் மௌனம்தான் இதற்கெல்லாமான பதில் என்பதைப்போல சாந்தமாக அந்த மர நாற்காலியின் மேல் அமர்ந்திருந்தது. அவள் தலையிலிருந்து நீர் கண்களின் வழியாக அவள் கன்னங்களில் இறங்கி தொண்டையில் மறைந்தது. சண்டையை நிறுத்துவதில் ஊரின் பெரியவர்கள் வெற்றி பெற்றனர். கடைசியில் எப்படியோ அங்கையர்க்கரசியின் சவம் அலங்கரிக்கப்பட்ட பாடைத்தேரில் ஊர் பக்கம் முகம் காட்டி மயானம் நோக்கி புறப்பட்டது. சவக்குழிச் சடங்குகள் சீக்கிரமாக செய்து முடிக்கப்பட்டது. இரண்டு நாள் இடைவிடாமல் வேலை செய்த பறையர், வண்ணான், நாசவன் தங்களுக்கு கிடைக்கவேண்டிய கூலிக் காசு சரிவர கிடைக்காமல் தங்கள் ஆத்திரத்தை அடக்கிக்கொண்டனர். குழி தோண்டிய பறையன் மாயவன் மற்றும் தொந்தி பிடித்த, வண்ணான் மணி அடம் பிடித்து மற்றவரை விட கொஞ்சம் அதிகமாகவே காசு வாங்கிக் கொண்டனர். எல்லோரை விடவும் அதிகமாகவே வேலை செய்த பழனிச்சாமி மட்டும் கொடுத்ததை வாங்கிக் கொண்டு ஒன்றும் பேசாமல் நடந்தான். ஆண்களெல்லாம் மயானத்திலிருந்து திரும்புவதற்குள் பெண்கள் வீட்டை முழுகி நடுவில் மண் தீபம் ஏற்றி வைத்திருந்தனர். செருப்பைக் கழற்றி கைகால் முகம் அலம்பிய ஆண்கள் விளக்கை கையெடுத்து கும்பிட்டு அவரவர் வீட்டுக்கு புறப்பட்டனர். பழனிச்சாமி "நாளானிக்கு காலேல பத்து மணிக்கு குழிக்கு பாலுத்தறது , எல்லாரும் வந்திடுங்க சாமியோ" என்று உயர்ந்த குரலில் யந்திரம் போலக் கூவிக்கொண்டிருந்தான். அவன் சொன்னதை கேட்டும் கேட்காததுமாக மக்கள் போய்க் கொண்டிருந்தார்கள். கூட்டத்தின் நடுவிலிருந்து திடீரென்று நுழைந்த குழந்தைவேலன் " எல்லாம் இந்த நாசவப் பயலாலதான் ஆச்சு" என்று கத்திக்கொண்டே கையிலிருந்த வீச்சறுவாளை பழனிச்சாமியின் கழுத்தின் பக்கம் வீசினான். குடிபோதையிலிருந்த அவன் கை நடுங்கி வீச்சறுவாள் குறி தவறி பழனிச்சாமியின் தோள்பட்டையை தாக்கி இரத்தம் பீச்சிட்டது. அவனை விடுவிப்பதற்குள் பழனிச்சாமியின் வயிற்றைக் கிழித்து இரத்தச் சிவப்பில் மூழ்கடித்திருந்தது குழந்தைவேலின் வீச்சறுவாள். அவன்

கையிலிருந்து பிடுங்கப்பட்ட வீச்சறுவாளோ தன் முதலாளியை பில்லிக்கட்டுத் தேவர்கள் அடித்துக் கொண்டிருக்கையில் தன்னால் எதுவும் செய்ய இயலாமலும் , ஒரு பாவமும் அறியாத பழனிச்சாமியை வெட்டியதற்கு எந்த சங்கடம் இல்லாமலும் கம்பீரமாக கீழே விழுந்திருந்தது.

பழனிச்சாமி ஒரு வாரம் மருத்துவ மனையில் தன் தோள் பட்டைக்கும், வயிற்றிற்கும் சிகிச்சை முடித்துக்கொண்டு வீடு வந்து சேர்ந்தான். எப்போதும் கண்ணீருடன் வீட்டுக் கூறையையே வெறிச்சோடிய பார்வையில் பார்த்து புலம்பிக் கொண்டிருந்தான். பேரன் வீரேசன் மட்டும் கலங்காமல் தன் கூடவே இருந்தது மனதிற்கு சிறு ஆறுதலாக தோன்றியது. . இந்த நிகழ்வு நடந்து முடிந்த மூன்று வாரங்களில் கொஞ்சம் சுதாரித்துக் கொண்டதைப்போல தென்பட்டான். அந்த ஒரு வெள்ளிக்கிழமை அதிகாலை சிறுநீர் கழிக்க எழுந்து பின்வாசல் சென்றவனுக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. தன் மனைவியிடம் பெரிய வீட்டு ரங்கசாமி தேவரின் மூத்த மகன் நாகராசன் இணைந்துகொண்டிருந்ததைப் பார்த்தவன் வெலவெலத்துப் போனான். உள்ளே வந்து தாளிட்டுக்கொண்டு, சில நாட்களாக சும்மா கிடந்த சவரக் கத்தியை எடுத்து தன் கழுத்தை அறுத்துக்கொள்ள.... வலி தாங்காமல் கதறினான். அரை ஜாமத்தில் தன் தூக்கத்தைக் கலைத்த அந்த சத்தத்திற்கு அதிர்ச்சியுற்று எழுந்த பன்னிரண்டு வயது வீரேசன் இரத்தத்தில் மிதந்து புரண்டு கொண்டிருந்த தாத்தாவைப் பார்த்து பயந்து கதறிக் கொண்டிருந்தான்.....

வழி முடிவதாகவே தெரியவில்லை. மக்கள் தொழுகை முடித்து வெளியே வந்துகொண்டிருந்தார்கள். ரமலான் மாதத்து சூரியன் அன்று அதிகமாகவே சுட்டெரித்துக் கொண்டிருந்தான். மசூதியிலிருந்து வெளியே வந்த பஷீர் இன்னும் தன் அறைக்குப் போய் சேராத வீரேசனைப் பார்த்து “ என்னடா, உடம்புக்கு சரியில்லையா?” என்று கேட்டான். அதற்கு சிரித்து ஒன்றும் இல்லை என்பதைப் போல் தலையை ஆட்டினான் வீரேஸ். ஜோராக சிரித்துக்கொண்டே பஷீர் “ மரியம்மின் புருசன் வந்திருக்கறதுக்கு வருத்தமா?” என்று கேலி செய்தான். குழந்தைவேலுத் தேவன் மற்றும் பெரிய வீட்டு நாகராசனைக் கொல்ல வேண்டுமென்ற ரோசம் குறைந்து அவன் மனசுக்குள் இப்பொழுது வேறொரு பலூன் விரிந்துகொண்டே போனது. சும்மா பொழுது போக்கிற்காக வளர்த்துக் கொண்ட இந்த மலையாள நர்ஸ் மரியம்மின் சகவாசம் இவ்வளவு இக்கட்டான நிலைக்கு கொண்டு செல்லுமென்று அவன் எண்ணியிருக்கவில்லை. அரேபிய இளைஞனை பார்க்கும் முன் அவனை வாட்டிக் கொண்டிருந்த இந்த மரியம்மின் நினைவுத் தொல்லை திரும்பவும் பற்றிக்கொண்டது. அறைக்கு வந்து

படுத்தான். மரியம்மின் மணம் அறையெல்லாம் நிறைந்திருப்பதைப் போல உணர்ந்தான் "எல்லாரையும்—எல்லாத்தயும் விட்டுட்டு மலேசியாக்கோ சிங்கப்பூருக்கோ போயி நிம்மதியா இருக்கலாம்" என்ற மரியம்மின் வார்த்தைகளை அவன் ஒத்துக் கொண்டிருக்கவில்லை.... கோபித்துக் கொண்டு சண்டை போட்டிருந்தாள்...தன் புருசன் வந்தால் நிலைமை இன்னும் மோசமாகும் என்று சொன்னது அவனை வருத்தத்தில் ஆழ்த்தியது. இதற்கு நடுவில் தாத்தாவின் நினைவு அவனை கொஞ்சம் வக்கிரமாக்கியிருந்தது. இதையெல்லாம் விட முக்கியமாக இந்த மரியம் தன்னைப் பற்றி சவுதி போலீஸிடம் புகார் எதுவும் கொடுத்தால்? என்ற சிறிய கற்பனை அவனை மிகவும் பயமுறுத்தியது. கடினமான சட்டமுள்ள இந்த நாட்டில் தன் நிலை என்னவாகும் என்பதை நினைத்தே நடுங்கினான். கொதிக்கும் எண்ணையில் விழுந்த உயிருள்ள ஆமையைப் போல அவன் தலை படபடவென்று வெடித்துக் கொண்டிருந்தது. "எல்லாம் அந்த தேவிடி.... முண்டையாலதான். அவ நிம்மதிய கொடுத்திருந்தா இப்படி நாடு விட்டு வெளிநாட்டிலே வந்து அவதிப்படும் அவசியமிருந்திருக்காது... அவ வார்த்தயால குத்திக்குத்தியே என்ன உயிரோட பொணமாக்கிட்டா...கட்டிக்கிட்ட பாவத்துக்கு அவ கழுத்து நிறைய தங்கச் சங்கிலி செஞ்சு போட்டதை நினச்சு பொருமினான். தன் அம்மாவ பேசியே கொன்னுட்டா, படுபாவி முண்ட....அத்தை, புருசன் ரெண்டுபேரும் இல்லாம சுகமா. கொழுத்திருப்பா . யாரையாவது.....???? திருட்டு நாயி...மொதல்ல அவள கொல்லனும், அப்புறந்தா மத்தவங்கள....பத்து விரல்களையும் முடிக்குள் நுழைத்து கீறிக்கொண்டான்...உய் ...உய்...யிய் யீ என்றெல்லாம் கூவினான். சிறிது ஆசுவாசப் படுத்திக்கொண்டு தலையை தூக்கிப் பார்த்தான். மூலையில் சிலந்தி வலை தொங்கிக் கொண்டிருந்தது. அதையே பார்த்துக் கொண்டிருந்தவன் கண்களுக்கு மெல்ல குடகு, பிளிகிரி ரங்கனபெட்டா தெரிந்தன. ஆதிவாசிகள் எனப்படும் சோலிகரின் அந்தப் பாட்டு மனதில் மலர்ந்தது..."கோருகன" என்றால் "சிலந்தி வலை" என்று சொல்லியிருந்தாள் அந்த சோலிகரின் மசனவ்வ....கட்டான உடலின், பெரிய முலைகளும், பின்னழகும் உடைய மசனவ்வ......குடகின் காப்பித் தோட்டத்தில் கிடைத்த பிளிகிரி ரங்கன பெட்டத்தின் மசனவ்வ....காட்டின் ராணி, கோருகன பாட்டின் அரசி மசனவ்வ........


"கோருகோ கோருகோ கோருகன
கோருகோ கோருகோ கோருகன
சம்பங்கிப் பூவின் சர மாலை
செவ்வந்திப் பூவின் குண்டு மாலை
கோருகோ கோருகோ கோருகன

கோருகோ கோருகோ கோருகன
யார் முடியை அலங்கரிக்குமோ
சாமி தலையை அலங்கரிக்குமோ
கோருகோ கோருகோ கோருகன...."

மனது சந்தோசத்தில் மிதந்தது.... பொழியும் அந்த மழையில் அவள் பாட்டுப்பாடி ஆடுவதைப் பார்த்துக் கொண்டிருப்பதே ஒரு தனி அழகு. மசனவ்வாவை பார்த்தே ஆகவேண்டுமென்று மனம் துடித்தது. அவளை ஒரு முறையாவது தொட்டுவிட வேண்டுமென்று நினைத்த போது அவளது தாய்மாமன் தன் முரட்டு முகத்துடன் எதிரில் வந்து நின்றான். சற்று பயந்து பின்னே சரிந்தாலும், பிளிகிரி மலையின் காடு, மழை, விலங்குகளின் கூவல், கியாதப்ப சாமியின் மலை எல்லாம் ஞாபகம் வந்து இதமாக இருந்தது. தீர்கமான பெருமூச்சு ஒன்று அவனுடைய எந்த முயற்சியுமின்றி வந்த பொழுது அவன் மனதில் மத்தி மரத்தின் கிளைகள் தூவிய நீர்த்துளிகள் ஓவியம் தீட்டிக்கொண்டிருந்தன. காயங்களை ஆற்றும் கருவாதி மரத்தின் பட்டை கண்முன் வந்துபோனது. விசாலமான மணல் — மணல் மேடுகள், காடு — வான் உயர மலைகள் எல்லாம் அவனுடைய நினைவின் பெட்டகத்தை திறந்து வெளியே வந்தன. வானம் தொடும் பர்— பாலைவனமும்; தோண்டத் தோண்ட ஆழமாகும் காடும் ஒன்றுக்குள் ஒன்றாகி வீரேசனின் மனதை குதூகலப் படுத்தியது.

படைப்பாக்கமும் இலக்கியச் செயற்பாடும்

சிமாமண்டா கோஜி அடிச்சியுடன் நேர்காணல்
முனைவர். அடா உஜோமாக அஃஜொடோ
தலைவர்
ஆஃப்ரிக்க இலக்கியச் சங்கத்தின் பெண்களுக்கான
அமைப்பு



அஃஜொடோ : நீங்கள் கிழக்கு நைஜீரியாவில் இபோமொழி பேசும் பகுதியைப் பூர்வீகமாகக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் பெற்றோர், உடன் பிறந்தோர், தாத்தாக்கள்—பாட்டிகள் ஆகியோரைப் பற்றி எங்களுக்குச் சொல்கிறீர்களா?

அடிச்சீ : எனது தந்தை அஃப்பாவைச்?சேர்ந்தவர். தாயார் உமுன்னாசியைச் சேர்ந்தவர். இரண்டு ஊர்களுமே அநாம்ப்ரா மாநிலத்தில் உள்ளவை. பல்கலைக்கழகம் அமைந்துள்ள ந்ஸுக்கா நகரில் வளர்ந்தேன். எனது பெற்றோர் இருவருமே பல்கலைக்கழகத்தில் பணியாற்றினார்கள். எனது தாத்தாக்களை நான் அறியவில்லை. அவர்கள் இருவரும் நைஜீரியா—பையாஃப்ரா போரில் இறந்து விட்டனர். பாட்டிகள் இருவரும் பலசாலிகளான பெண்கள். எனது பெற்றோரின் ஆறு குழந்தைகளில் நான் ஐந்தாவதாகப் பிறந்தேன்.

அஃஜொடோ : உங்களுக்கான எழுத்து வெளிப்பாட்டு ஊடகமாக ஆங்கில மொழியை ஏன் தேர்ந்தெடுத்தீர்கள்? ஆஃப்ரிக்கப் புனைவெழுத்தாளர்கள் பூர்வீக மொழியைப் பயன்படுத்துவது குறித்து உங்களது நோக்கு என்ன? நீங்கள் இபோ மொழியில் எழுதுவதைப் பற்றிப் பரிசீலித்திருக்கிறீர்களா?

அடிச்சீ : எழுதுவதற்கு ஆங்கில மொழியைத் தேர்ந்தெடுத்தது பற்றி எனக்கு அறுதியிட்டுச் சொல்லமுடியவில்லை. பள்ளியில் இபோ மொழியில் பேசுவது தாழ்வாகக் கருதப்பட்ட சூழலில், இபோ மொழி கூடுதலாய் ஒரு பாடமாக மட்டுமே வைக்கப்பட்டிருந்த நிலையில், மாணவர்கள் அதைக் கடினமானதெனக்

கருதிய சூழலில் அம்மொழிக்கு நிர்வாகத்தின் ஆதரவும் இல்லாத நிலையில் என்னைப் போன்று இபோ இன நைஜீரியன் ஆங்கிலத்தில் மட்டுமே கல்வி கற்றால் ஆங்கிலத்தில் எழுதுவதை ஒரு தெரிவு என்று சொல்ல முடியாது. ஏனெனில் தெரிவு என்பதின் கருத்தாக்கம் ஒரே தரத்தில் மாற்றுகள் இருப்பதாகக் கொள்கிறது. பள்ளி இடைநிலை இறுதி வரை நான் இபோ மொழியை எடுத்துப் படித்து தேர்ச்சி பெற்றிருந்தாலும், அதையே பேச வேண்டும் என்பது ஒரு வழக்கமாக இருக்கவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக அதன் போதாமை. நான் இபோ மொழியில் நன்றாகவே எழுதினாலும் எனது அறிவார்ந்த சிந்தனைகளை வெளிப்படுத்துவதற்கு இபோ மொழி மட்டுமே போதியதாக இல்லை. நான் ஆங்கிலம் மற்றும் இபோ மொழிகள் இரண்டிலும் பயிற்றுவிக்கப்பட்டிருந்தால் அது வேறு மாதிரியாக இருந்திருக்கும். அல்லது இபோ மொழியை நான் பயின்ற விதம் முழுமையானதொரு அணுகு முறையைக் கொண்டதாய் இருந்திருந்தாலும் நான் எழுதுவது வேறு மாதிரி இருந்திருக்கக் கூடும்.

நான் இபோ மொழியில் எழுதினால் இபோ இன மக்கள் பலருக்கு அதைப் படிக்க முடியாது. நானறிந்த கல்வி கற்ற இபோ இன மக்கள் பலருக்கும் இபோ மொழியில் வாசிக்க முடியாது. அவர்கள் எழுதினாலும் அது மிக மோசமான நடையில் இருக்கும். இந்தச் சொல்லாடலில் மிக முக்கியமென்று நான் நினைப்பது ஆஃப்ரிக்க எழுத்தாளர்கள் ஆங்கிலத்தில் எழுத வேண்டுமா அல்லது எழுதக் கூடாதா என்பதல்ல. ஆஃப்ரிக்க

எழுத்தாளர்கள் பொதுவாக ஆஃப்ரிக்கர்கள் ஆஃப்ரிக்காவில் எவ்வாறு கல்வி பயிற்றுவிக்கப் படுகிறார்கள் என்பதே எனக்கு முக்கியமாகப் படுகிறது. ஆஃப்ரிக்க எழுத்தாளர்கள் அவர்களுக்கு என்ன மொழியில் எழுத முடிகிறதோ அந்த மொழியில் எழுத வேண்டுமென நான் எண்ணுகிறேன். ஆஃப்ரிக்க கதைகளைச் சொல்வதே முக்கியம். அத்துடன் நவீன ஆஃப்ரிக்கக் கதைகள் இனி மேலும் கலாச்சாரச் சுத்தம் என எதையும் கோர முடியாது. எப்போதும் இரண்டு மொழிகளில்— கொச்சை ஆங்கிலத்தையும் நீங்கள் சேர்த்துக் கொண்டால்— சில வேளைகளில் மூன்று மொழிகளினூடாக பாதை வகுத்துக் கொண்டு போகும் நைஜீரியாவின் புதிய தலைமுறையைச் சேர்ந்தவள் நான். குறிப்பாக இபோ மொழியைப் பொருத்தவரை எங்களுடையது ஆங்கில— இபோ தலைமுறை. எனவே இபோ மொழியில் மட்டுமே எங்களது அனுபவங்களை வெளிப்படுத்தமுடியும் எனச் சொல்வது ஒரு விதத்தில் அதைக் கட்டுப்படுத்துவதாகும். எம் மீது உலகமயமாதல் பல விதங்களில் ஆழமான அழுத்தமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது.

ஆங்கிலம் குறித்தும் நான் சொல்ல விரும்புவது யாதெனில் ஆங்கிலமும் கூட எனது மொழி தான். சில நேரங்களில் நாம் ஆஃப்ரிக்காவில் ஆங்கிலத்தைப் பற்றிப் பேசுகையில் ஆஃப்ரிக்கர்களுக்கு அதில் பங்கேதுமில்லை என்ற எண்ணத்தில், ஆங்கிலமயமான ஆஃப்ரிக்க நாடுகளில் தனித்தன்மை கொண்ட ஆங்கில மொழியொன்று இல்லாதது போன்ற தொனியிலேயே பேசுகிறோம். நான் அந்த

மொழியில் தான் பயிற்றுவிக்கப்பட்டேன். இபோ மோழியைப் பேசிய அதே நேரத்தில் நான் அந்த மொழியையும் பேசினேன். எனது ஆங்கிலம் பேசும் முறை நைஜீரிய வாழ்வனுபவங்களில்தான் வேர் கொண்டுள்ளதேயன்றி பிரிட்டிஷ் அல்லது அமெரிக்க அல்லது ஆஸ்திரேலியாவிலோ அல்ல. நான் ஆங்கிலத்தை ஒரு உடைமையாக ஏற்றுக் கொண்டுள்ளேன்.

அஃஜொடோ : உங்களது இலக்கியப் பயணத் திட்டத்தைப் பற்றி எங்களுக்குச் சொல்ல முடியுமா அதாவது உங்களது பயணத்தின் ஆரம்பம், இப்போது எங்கிருக்கிறீர்கள், உங்களது எழுத்துப் பயணம் எதிர்காலத்தில் எங்கே செல்லும்?

அடிச்சீ : சொற்களை உச்சரிக்கப் போதுமான வயதையடைந்த காலத்திலிருந்தே நான் எழுதிக் கொண்டிருக்கிறேன். குழந்தையாக இருந்தபோதே நான் புத்தகங்களின் மீது தீராக் காதல் கொண்டுவிட்டேன். உண்மையில் எனக்கு அர்த்தமுள்ள ஒன்றாக இருப்பது எழுதுவது மட்டுமே. எதிர்காலத்தில் எனது எழுத்துப்பயணத்தில் எங்கே செல்வேன் என்பது பற்றி இப்போதே என்னால் பேச முடியாது. ஏனெனில் அந்த இடத்தை அடையும்போதே அதை நான் அறிவேன் என்று எண்ணவே விரும்புகிறேன்.

அஃஜொடோ : அரசியல், பொருளாதாரம், இனவியல், மொழி, மதம், தகவல் தொடர்பு, ஒழுக்கவியல், பாலியல் உள்ளிட்ட நைஜீரிய வாழ்க்கையின் பல்வேறு கூறுகளின் மீது ஈடுபாட்டை வெளிப்

படுத்துகிறீர்கள். இந்தத் தளங்களில் செயலாற்றுவதற்கு உங்களுக்கு உந்துசக்தியாக இருப்பது எது?

அடிச்சீ : சுயபிரக்ஞையுடன் எனது ஈடுபாட்டுக்கான வேர்களை ஆய்வு செய்ய முடியுமா என்பது குறித்து எனக்கு உறுதியில்லை. சிலவற்றில் ஒருவருக்கு ஈடுபாடு என்பது இயல்பாக நிகழ்கிறதென்றே நான் எண்ணுகிறேன். நான் என்னைச் சுற்றியுள்ள உலகத்தைக் கூர்ந்து அவதானிப்பவள். நான் ஈடுபாடு கொள்ளும் விஷயங்களைத் தீர்மானிப்பதில் ஒரு கருப்பு ஆஃப்ரிக்கப் பெண்ணாக எனது வாழ்வனுபவங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. இறுதியில் மனிதர்களின் பேரிலேயே நான் அக்கறை கொள்கிறேன். மனிதராக இருப்பதென்றால் என்ன என்பதிலுள்ள கருத்தே நான் ஈடுபாடு கொள்ளும் விஷயமாக உள்ளது.



அஃஜொடோ : உலகமயமாகிவிட்ட உலகில் யாவும் சரிந்து கொண்டிருக்கும் சூழலில் ஒருவரது மொழிப்பாரம்பரியத்தைப் பேணிப் பாதுகாப்பதற்கு ஒருவர் என்ன செய்ய இயலும்? நைஜீரியாவைப் பொருத்தமட்டில் அறிஞர்களும் படைப்பாளிகளும் பலராகவோ அல்லது அனைவரும் இணைந்தோ செய்ய வேண்டியது என்ன?

அடிச்சீ : நான் இந்தக் கேள்வியை அடிக்கடி ஒலிக்கக் கேட்பதுடன் அதைப் பற்றி ஆழ்ந்து யோசிக்கவும் செய்கிறேன். அதற்கான முதல் பணி நம்மிடமிருந்தே தொடங்கப்பட வேண்டும். நமது மொழிகளை நமது பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். இத்தகைய விஷயங்கள் பற்றி கற்பிக்கும், எழுதும் ஆஃப்ரிக்க கல்வியாளர்களின் பிள்ளைகள் அவர்களது சொந்த மொழியைப் பேசுவதில்லை. அப்படிப்பட்ட கல்வியாளர்களின் எண்ணிக்கையைக் கண்டு நான் வியந்து போகிறேன். ஆஃப்ரிக்கர்களாகிய நமக்கு நேர்ந்தவை பற்றிப் பேசுவதில் எனக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. எனது தந்தை 1960களின் தொடக்கத்தில் முனைவர் பட்ட ஆய்வு மாணவராக இருந்தார். எனது தாயார் அவரது முதல் மகளைப் பெற்றெடுத்தபோது அவர்களது மகள் அவளது சொந்த மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் எனது பெற்றோர் வீட்டில் இபோ மொழியில் மட்டுமே பேசுவது எனத் தீர்மானித்தனர். அவள் தன்னுடைய பள்ளியில் ஆங்கிலம் கற்றுக் கொள்வாள் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர்.

இப்போது, நாற்பது வருடங்களுக்குப் பின்பு அவர்களது மகளுக்கு இபோ மொழி பேசாத, பேச ஊக்கமளிக்கப்படாத ஒரு மகன் இருக்கிறான்.

நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த சில நைஜீரியர்கள் அவர்களது பிள்ளைகள் இரண்டு மொழிகளையும் பேசினால் "குழப்பம்" அடைந்து விடுவார்கள் என என்னிடம் சொல்கிறார்கள். இது என்னை வியப்படைய வைக்கிறது. நான் இரண்டு மொழி பேசி வளர்ந்ததில் எந்தவொரு குழப்பத்தையும் அடையவில்லை. இத்தகைய சில மேலோட்டமான காரணங்களுக்கடியில் சுய மரியாதை மற்றும் நாம் யார் என்பதிலுள்ள அடிப்படையான பெருமித உணர்வு ஆகியவை பற்றிய ஆழமான கேள்விகள் உள்ளன என்பதாக நான் எண்ணுகிறேன்.

அஃஜொடோ: தங்களுக்கு மிக்க நன்றி அடிச்சி அவர்களே.



பறவையின் பாடல்

சிமாமண்டா கோஜி அடிச்சீ

தமிழில்: வடகரை ரவிச்சந்திரன்



முன்பின் அறிந்திராத அந்தப்பெண் என்னை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். வெயில் தகிக்கும் நண்பகலில், இருசக்கர வாகனங்களும், வியாபாரிகளும் என்றான சூழலில் அவளது ஜீப் வாகனத்தின் பின் இருக்கையிலிருந்தவாறு என்னைப் பார்த்துக் கொண்டிருந்தாள். உற்று நோக்கிய அவளது பார்வை வெற்றுப் பார்வையாக இல்லாமல் நேருக்கு நேர் என்பதாக இருந்தது. லாகோஸ் நகரின் போக்குவரத்து நெரிசல் மிகுந்த சூழலில் ஜனங்கள் பக்கத்தில் நிற்கும் வாகனங்களை வெற்றுப்பார்வை பார்ப்பது வழக்கம் தானெனினும் அவளது பார்வை அப்படியிருக்கவில்லை. அவள் என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள். முதலில் நான் பார்வையைத் திருப்பிக் கொண்டேன். ஆனால் பின்பு நானும் வெறித்துப்பார்த்தேன். தற்பெருமையை வெளிப்படுத்தும் பட்டுப்போல் மிருதுவான பின்னலாய் அவளது தோள்களில் விழுந்திருந்த சுருண்ட குழல் கற்றைகளைப்பார்த்தேன். அந்த வகை சிகையலங்காரம் பிரேசிலியன் முடி என்று பெயரிடப்பட்டு சிகையலங்கார நிலையங்களில் அதற்கென அதிகமான பணம் வசூலிக்கப்பட்டது. அதிக விலை கொண்ட பதனக் களிம்புகளைப் பயன்படுத்துவதால்

அடையக்கூடிய பளபளப்பைக் கொண்டிருந்த அவளது சிவந்த தோலைப் பார்த்தேன். சஞ்சிகைகள் விற்பவனை அகலுமாறு சைகை காட்ட உயர்த்திய நகையணிந்த அவளது சுட்டு விரலுடன் அவளது கரங்களைப் பார்த்தேன். ஆட்களை அகலச்சொல்லி சைகை காட்டிப் பழக்கமுடையவர்களுக்கான லாவகத்துடன் அசைந்தன அவை. அவள் மிக அழகாக இருந்தாள். ஆழக் குழிந்த, விரிந்த கண்களுடன் ஒரு வித அசாதாரணத் தோற்றத்துடனிருந்த அவளை வர்ணிப்பதற்கு 'அழகானவள்' என்பது தான் மிகப்பொருத்தமாக வார்த்தையாக இருக்கும். எனது காதலனின் மனைவியென நான் கற்பனை செய்திருந்த பெண்ணின் —அவள் பொருட்டு காரியங்கள் நடந்தேறுகிற— ஒரு பெண்ணின் சாயல்களைக் கொண்டிருந்தாள்.

எனது காதலன். இது நாடகப்பாணியில் ஒலித்தாலும், அவனை எப்படிக் குறிப்பிடுவது என்பதையறியேன். என்னைத் தொடுவதற்கு முன் கவனமாக தனது திருமண மோதிரத்தைக் கழற்றிவிட்ட நாற்பத்தைந்து வயதான நாகரிகமான ஒரு ஆணை "பாய் ப்ரண்ட்" என விளிப்பது தவறானதாகத் தோன்றியது. சிக்வாடோ நாங்கள் இருவருமே அந்த நகைச்சுவையில் பங்கெடுத்துக் கொண்டது போல சற்றே கிண்டல் தொனிக்கும் சிரிப்புடன் அவனை "உனது ஆண்" என்றே குறிப்பிட்டாள். உண்மையில் அவன் எனக்குரியவன் இல்லை. அவளது நாற்காலியில் சாய்ந்தவாறு அவளது சடைப் பின்னலின் கீழ் அரிப்பெடுக்கும் அவளது தலையைத் திரும்பத் திரும்ப தட்டிக் கொண்டே "உனது ஆணின் நிமித்தமாகத் தான் எப்போதும் நீ கிளம்புவதில் அவசரம் காட்டுகிறாய்" என்பாள் அவள். ஏறக்குறைய சொறிந்து கொள்வதற்கு நெருக்கமானதாக அவளால் செய்ய இயன்றது அது தான். "உன் மனது ஏற்றுக் கொள்கிறவரையிலும் ஜாலியாக அனுபவி! ஆனால் என்னைப் பொருத்தவரை நான் திருமணமான ஒரு ஆணுக்கு என் கால்களை விரிக்க மாட்டேன்" என்றாள். அன்றைக்கான பணியை முடிக்கும் விதமாக எனது கணினியை மூடிவிட்டு எனது கோப்புக்களைக் கட்டிக் கொண்டிருக்கையில் இதை அவள் அடிக்கடி தெளிவான நோக்குடனும் நல்லொழுக்க மேட்டிமையுடனும் சொன்னாள்.

நாங்கள் இருவரும் தேவையை முன்னிட்டே தோழிகளாக இருந்தோம். நாங்கள் இருவருமே எநுகு பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பை முடித்துவிட்டு லாகோஸில் உள்ள செல்நெட் தொலைத் தொடர்பு நிறுவனத்தில் வேலை கிடைக்கப்பெற்றோம். இல்லாவிட்டால் நாங்கள் தோழிகளாகியிருக்க மாட்டோம். அவள் எளிதாக எப்படி இத்தகைய கருத்துக்களைக் கொண்டவளாக இருக்கிறாள் என்பது குறித்து எனக்கு எரிச்சல் தான். குட்டையாகத் தொங்கும்படி கேசத்தை வெட்டிக் கொள்வது, எல்லோரும் பார்க்கும்படி அலுவலகக் கட்டடத்திற்கு முன்பாக சிகரெட் புகைப்பது, எங்கள் உயரதிகாரி திங்கள் கிழமைக் கூடுகைக்குப் பின்பு நடத்தும் ஜெப அமர்வுகளில் கலந்து கொள்ள மறுப்பது என நான் வெளி நாட்டு பதின்ம வயதினள் போல் பொறுப்பற்ற தன்மையில் நடந்து கொள்வதாக அவள் நினைக்கிறாள் என்பதை நான் அறிவேன்.

நான் என் காதலனைப் பற்றிச் சொல்லியிருக்க மாட்டேன். நான் எனது தனிப்பட்ட வாழ்க்கை பற்றி அவளிடம் சொல்வதில்லை. ஆனால் ஒல்லியாகக் கருப்பு நிறத்தில் வெளிர் ஊதா நிற கழுத்துப்பட்டை அணிந்து செல்வந்தர்களுக்குரிய அடையாளங்களுடன் அவன் முதன்முதலாக எங்களது அலுவலகத்திற்கு வந்தபோது அவளும் இருந்தாள். அவன் தனது முக்கியத்துவத்தைத் தவிர்க்கும் போர்வையில் நாசூக்கான சைகைகள் மூலம் அதை மேலும் அழுத்தம் பெறச்செய்யும் தன்முனைப்புக் கொண்டவனாக இருந்தான். எங்கள் உயரதிகாரி இரண்டு கரங்களாலும் அவனது கரங்களைப்பற்றிக் குலுக்கியவாறு, “நல்வரவு ஸார்! தங்களை இங்கு பார்ப்பதில் மிக்க மகிழ்ச்சி ஸார்! எப்படி இருக்கிறீர்கள் ஸார்! தய்வுசெய்து வந்து அமருங்கள் ஸார்!” என்றார். அவன் என்னைப் பார்க்க நான் அவனைப் பார்க்க பின்பு அவன் கனிந்த, வெளிப்படையான சிரிப்பொன்றை உதிர்த்த போது சிக்வாடோ எங்களுடன் இருந்தாள். அவன் எனக்குக் கேட்கட்டுமென்றே “எனது குடும்பத்தினர் அமெரிக்காவில் வசிக்கிறார்கள்” எனக் கூடுதலான சத்தத்துடன் உலகறிந்த நைஜீரியனுக்குரிய அந்நிய உச்சரிப்புடன் எங்களது உயரதிகாரியிடம் கூறியபோது அவள் அதைக் கேட்டுக் கொண்டிருந்தாள். அவன் ஏதாவது ஒன்றைப்பற்றி



தன்னுணர்வு கொண்டவனாகும் போது அது மறைந்து விடுகிறது என்பதைப் பின்னர் நான் கண்டுகொண்டேன். அவன் நடந்து வந்து என்னிடம் அவனது முகவரி கொண்ட சீட்டைக் கொடுத்தபோது அவள் பார்த்தாள். ஓரிரு நாட்களுக்குப்பின்னர் அவனது வாகன ஓட்டி அன்பளிப்புப் பையொன்றை எனக்கென கொண்டு வந்தபோது அவளும் இருந்தாள். அவள் பார்த்ததால் என்பதினாலும், ஒரு ஆணை முன்னிட்டு இன்னதென்று பெயரிட்டுச் சொல்லமுடியாத விதமாக உணர்ச்சிகளின் சுழலில் சிக்கியவளாக இருப்பது எனக்கு நல்லதல்ல என நான் அறிந்திருந்ததாலும், நான் அவன் அனுப்பிய வாசனைத் திரவியத்தையும் "நான் உன் நினைப்பில் இருக்கிறேன்" என்றெழுதப்பட்ட சீட்டையும் அவளிடம் காட்டினேன். "திருமணமான ஒரு ஆணை முன்னிட்டு உன் கண்கள் எப்படி ஒளிர்கின்றன பார்!" என நகையாடினாள். அவள் அடிக்கடி "பிதா உனக்களித்த துணையைத் தேடுதல்" என்பதை முன்வைத்து வெவ்வேறு தேவாலயங்களில் நடக்கும் இரவு நேர ஜெபக் கூடுகைகளுக்குச் சென்றாள். அடுத்த நாள் காலையில் தூங்கி வழியும் முகத்துடன், அவளது கண்களின் வெண்பகுதி

சேர்ந்து காணப்பட இன்னொரு ஜோடிக் கூடுகையில் கலந்து கொள்வதென்று தீர்மானத்துடன் அலுவலகத்திற்கு வருவாள். அவளுக்கு வயது முப்பத்திரண்டாகி விட்டது. குடும்ப வாழ்வில் ஈடுபட வேண்டுமென்ற அவளது ஆசை எனும் கனவினை கனத்திற்கடியில் தடுமாறிக் கொண்டிருந்தாள். அதைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தாள். சிற்றுண்டி நிலையத்தில் நாங்கள் மதிய உணவு உண்ணும்போது எங்களுடன் வேலை பார்த்த சக பெண் பணியாளர்கள் எல்லோரும் அதைப் பற்றித்தான் பேசினார்கள்.

"பெண்ணே அவளது காதலனுடன் காலத்தை விரயமாக்கிக் கொண்டிருக்கிறாள். அவன் திருமணத்திற்கு ஆயத்தமாய் இல்லை. தயவுசெய்து அவனிடம் கேள். அவனுக்குத் திருமணத்தைப் பற்றிய யோசனை இல்லையென்றால் நீ வேறு ஒருவனைத் தேடுவது நல்லது. எகேடேவிற்கு நல்ல யோகம். ஆறே மாதம் தான். அவளுக்கு இப்போது திருமணம் பேசி முடிக்கப்பட்டுவிட்டது." அவர்கள் பேசிக் கொண்டிருக்கையில் நான் ஜன்னலின் வழியே விரியும் வெளியில், லாகோஸ் நகரின் மேலே துருப்பிடித்த கூரைகளின் பெரும் பரப்பையும், கறைபடிந்த தேவதைகள் நிறைந்த இந்த நகரில் நம்பிக்கையின் எழுச்சியையும், தாழ்வையும் பார்த்துக் கொண்டிருப்பேன்.

என் காதலனும் இந்த ஆசையைப்பற்றிப் பேசினான். "நீ சீக்கிரம் குடும்ப வாழ்வில் ஈடுபட விரும்புவாய். நான் உன் வாழ்க்கைப் பாதையின் குறுக்கே நிற்க மாட்டேன் என்பதை நீ அறிந்து கொள்ள வேண்டும்" நாங்கள் இருவரும் படுக்கையில் நிர்வாணமாக இருந்தோம். அதுவே எங்களுக்கு முதல்முறை. தலையணையிலிருந்து ஓர் இறகு அவனது தலைமுடிக்குள் சிக்கிக்கொண்டிருந்ததை எடுத்து அவனிடம் காட்டினேன். நடந்து முடிந்திருந்த அந்தச் செயலுக்குப் பின்பு நாங்கள் இருவரும் இன்னும் ஒருவருக்கொருவர் என்றான இதத்தில் முகம் சிவந்து கொண்டிருக்கையில் அவனது வாயிலிருந்து எவ்வளவு எளிதாக வார்த்தைகள் சரளமாய் வந்தன என்பதை என்னால் நம்ப முடியவில்லை. "உன்னை முன் நகர விடாமல் உன் வாழ்க்கையில் ஆதிக்கம் செலுத்த நினைக்கும் மற்ற ஆண்களைப்போல் இல்லை நான்" என்றவாறு என்னைப் பார்ப்பதற்காக முழங்கையை முட்டுக் கொடுத்தவாக்கில் பேச்சைத் தொடர்ந்தான்.

அந்த விளையாட்டைப்பற்றி நான் இன்னும் முடிவேதும் எடுத்திராத நிலையில் அவன் விளையாட்டை

மற்ற ஆண்களை விட நன்றாக விளையாடுவதாகக் கூறினான். அவனைச் சந்தித்த கணத்திலிருந்து ஒரு சாத்தியத்திற்கான உணர்வைக் கொண்டிருந்தேன். ஆனால் அவனைப் பொறுத்தவரை அந்தப் பாதை ஏற்கனவே மூடப்பட்டிருந்தது. சொல்லப்போனால் அது அவனுக்கு எப்போதும் திறந்திருக்கவே இல்லை. உள்ளே வந்து இடையூறு செய்வதற்கு இடமேதுமில்லை.

சேதத்தை மறைக்கும் கைத்துப் போன ஒரு தொனியில், "நீங்கள் ரொம்பவும் தான் யோசிக்கிறீர்கள்" என்றேன் நான். அவன் என்னை ஆமோதிப்பது போல் தலையசைத்தான். போர்வையை எனது நாடி வரை இழுத்து மூடினேன். நான் எழுந்து ஆடைகளை அணிந்துகொண்டு சுருலெலரேவில் இருக்கும் எனது இருப்பிடத்திற்குச் சென்று எனது தொலைபேசியிலிருந்து அவனது எண்ணை நீக்கியிருக்கவேண்டும். ஆனால் நான் அங்கேயே தங்கியிருந்தேன். பதின்மூன்று மாதங்கள், எட்டு நாட்கள் நான் விக்டோரியா தீவில் இருந்த அவனது வீட்டில் தங்கியிருந்தேன். வெளுத்த வெள்ளை நிறத்தில் ஒரு மாளிகையின் வனப்பையும் காற்றோட்டமுள்ள இடங்களையும் கொண்டிருந்த அந்தக் கட்டடம் பிரிட்டிஷ் காலனிய ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டது. அது இருந்த வளாகம் முழுவதும் பழ மரங்கள் நிறைந்திருக்க, சுற்றியிருந்த சுவரின் மேல் போகைன்வில்லாக் கொடிகள் படர்ந்திருந்தன. அவன் என்னை இகொயிலுள்ள அவனது வீடு மாற்றியமைக்கப்படுவது வரை அவன் தங்கியிருந்த ஒரு லெபனீஸ் நண்பனின் விருந்தினர் இல்லத்திற்கு இட்டுச்செல்வதாக என்னிடம் கூறியிருந்தான். வாகனத்திலிருந்து வெளியே காலடி வைத்ததும் நான் ஓர் இரகசிய தோட்டத்திற்குள் தடுமாறி வந்து விட்டேனோ என எண்ணினேன். வீட்டிற்கு இட்டுச்செல்லும் பாதையின் இரு புறத்திலும் வெள்ளை மற்றும் இளஞ்சிவப்பு நிறங்களில் பூக்கள் அடர்ந்து கோடிட்டிருந்தன. காற்று இங்கே சுத்தமாக இருந்ததுடன் வாசனையுடனும் இருந்தது. அவை எல்லாமும் சேர்ந்து ஏதோ ஒரு விதத்தில் எனக்குள் புதுப்பிப்பு பற்றிய எண்ணத்தைத் தோற்றுவித்தன. அவன் என்னைக் கவனித்தவாறு இருந்தான். அந்த வீடு எனக்குப்பிடித்திருக்க வேண்டுமென எவ்வளவு விரும்பினான் என்பதை என்னால் உணர முடிந்தது.

"இது உங்களது வீடு தானே. இல்லையா?" இது உங்களுடைய லெபனீஸ் நண்பருக்குச் சொந்தமானதில்லை. அப்படித்தானே?" என அவனிடம் கேட்டேன்.

ஆச்சரியம் படர என்னை நெருங்கி வந்தவன், "தயவுசெய்து தவறாகப் புரிந்து கொள்ளாதே. நான் அதைப்பற்றிச் சொல்லவிருக்கிறேன். "நீ இதை வேறு மாதிரி நினைத்துவிடக் கூடாதென்று தான்... அவன் பேசுவதை இடை நிறுத்தி எனது கையைப்பற்றிக் கொண்டான். "மற்ற ஆண்கள் என்ன செய்வார்கள் என்பது எனக்குத் தெரியும். நான் அப்படியான ஆளில்லை. நான் பெண்களை இங்கே அழைத்து வருவதில்லை. இடித்துவிட்டு தொகுப்பு வீடுகளைக் கொண்ட வளாகத்தை எழுப்பலாம் என்ற எண்ணத்தில் கடந்த வருடம் தான் நான் இதை வாங்கினேன். ஆனால் இது மிக அழகான மாளிகையாக இருந்தது. நான் இதை இடிக்காமல் விட்டு வைத்திருப்பதற்கு என் நண்பர்கள் என்னைப் பைத்தியக்காரன் என எண்ணுகிறார்கள். இந்த நாட்டில் பழையவற்றுக்கு யாரும் மதிப்பளிப்பதில்லை என்பது உனக்குத் தெரியும் தானே. நான் எனது அலுவலகத்திற்குச் செல்வதற்குப் பதிலாக பெரும்பாலும் இங்கேயிருந்து கொண்டே எனது பணிகளைச் செய்கிறேன்" என்றான். தாழ்வாரத்திற்கு இட்டுச்செல்லும் வழியில் உருண்டு நகரும் கண்ணாடிக்கதவுகளின் அருகே நாங்கள் நின்று கொண்டிருந்தோம். தாழ்வாரத்திற்கு மேலாக சிவப்பு நிறப்பூக்களைக்கொண்ட மரமொன்று கிளைகளை நீட்டியிருந்தது. மரம் உதிர்த்த சிவப்பு நிறப்பூக்கள் பிரம்பு நாற்காலிகளின் மீது விழுந்திருந்தன. அதைச் சுட்டிக் காட்டியவாறு அவன், "அங்கே அமர்ந்து கொண்டு பறவைகளை வேடிக்கை பார்ப்பது எனக்குப் பிடிக்கும்" என்றான். அவன் பறவைகளை விரும்பினான். எனக்குப் பறவைகள் எப்போதும் பறவைகளாகத்தான் தோன்றியிருக்கின்றன. ஆனால் அவனுடனிருக்கையில் நான் வேறொருவளானேன். பறவைகளை விரும்பும் ஒரு ஆளாக ஆனேன். அடுத்து வந்த ஞாயிற்றுக்கிழமை காலை நாங்கள் இருவரும் சேர்ந்திருந்த வாரக் கடைசியில் அந்தத் தாழ்வாரத்தின் அமைதியில் பத்திரிகையின் பக்கங்களை ஒருவருக்கொருவர் மாற்றியவாறு வாசித்துக் கொண்டிருக்கையில் அவன் வானில் அண்ணாந்து பார்த்தவாறு, "அங்கே ஓர் அணில்வால் பறவை இருக்கிறது.

அவற்றுக்கு ஒளிரும் பொருட்களென்றால் ரொம்பப் பிடிக்கும்."என்றான். அந்தப் பறவை தாழப் பறந்து வந்து கவ்விக் கொண்டு செல்லும் விதமாக அவன் தனது திருமண மோதிரத்தைக் கழற்றி பிரம்பு நாற்காலியில் வைப்பதாக நான் கற்பனை செய்தேன்.

நான் தொழில் மற்றும் விளையாட்டுச் செய்திகள் கொண்ட பக்கங்களை வாசிப்பதைக் கவனித்துவிட்டு வியப்படைந்தவனாய் ஏதோ நான் அவ்வாறு வித்தியாசமானவளாய் இருப்பது அவனுடைய நல்ல ரசனையைப் பிரதிபலிப்பதைப்போல் "நீ வித்தியாசமான பெண் என்பதை நான் அறிவேன்" என்றான் அவன். தொடர்ந்து நாங்கள் ஆர்வத்துடன்

செய்திப் பத்திரிகைகள் பற்றியும், AIT மற்றும் CNN ஆகியவற்றின் செய்தி ஒளிபரப்புகள் பற்றியும், எங்களுடைய கருத்துக்கள் ஒரே மாதிரியாய் இருப்பது கண்டு வியந்தவாறும் பேசிக்கொண்டிருந்தோம். நான் அங்கு தங்கியிருப்பது குறித்து நாங்கள் பேசவேயில்லை. இரவு நேரத்தில் வாகனத்தில் சுருலெரேவிற்குத் திரும்பிச் செல்வது அவ்வளவு பாதுகாப்பானதில்லை. "நீ இங்கிருந்து வேலைக்குச் செல்வதற்குத் தோதாக நீ ஏன் நாளைக்கு உன்னுடைய பொருட்களை இங்கே கொண்டு வரக்கூடாது?" எனச் சொல்லியபடியிருந்தான். பெரும்பான்மையான எனது உடைகள் அவற்றுக்கான பெட்டியிலும், பதனக் களிம்புகள் குளியலறை அலமாரியிலுமாகச் சேரும் வரை. ஐம்பதினாயிரம் நைராக்களை நான் பெட்ரோலுக்காகச் செலவிடுவது சாத்தியமென்பது போல் "உனது வாகன எரிபொருட் செலவிற்காக" என்று பழுப்பு நிற உறைகளின் மேல் எழுதி மேஜையில் எனக்கென பணத்தை விட்டுச் சென்றான். பல தடவை என்னை நிர்வாணமாகப் பார்த்திராதவன் போல் சில வேளைகளில் உடை மாற்றிக் கொள்வதற்கு தனிமை வேண்டுமா எனக் கேட்டான்.

நாங்கள் அவனது மனைவி அல்லது அவனது குழந்தைகள் பற்றியோ அல்லது எனது தனிப்பட்ட வாழ்க்கை பற்றியோ அல்லது எப்போது நான் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன் என்றோ அதற்கேற்றவாறு அவன் எனது ஆசைகளுக்குக் குறுக்கே நிற்பதைத் தவிர்த்துக் கொள்வது பற்றியோ பேசிக் கொள்ளவில்லை. நாங்கள்

பேசாமல் விட்ட விஷயங்களே என்னை அவனைக் கவனிக்க வைத்திருக்கக் கூடும். அவனது தோல் அடர்கருப்பாக இருந்ததினால் நான் அவனை காம்பியாவிலிருந்து வந்தவனா எனக் கேட்டு கேலி செய்தேன். அவன் ஒரு பெண்ணாக இருந்திருப்பானெனில் அவனது தோல் நிறத்திற்குப் பொருத்தமான முகப்பொடியை அவனால் கண்டு பிடிக்க முடியாது என நான் அவனிடம் கூறினேன். ஈரமான நறுமணமூட்டப்பட்ட மென் தாள்களை கண்ணாடியைத் துடைப்பதற்கென அவன் மிகக் கவனத்துடன் பிரித்தெடுக்கும்போதும், அல்லது அவனது தட்டில் இருக்கும் கோழிக் கறித்துண்டை வெட்டும்போதும், அவனது தொப்புள் பகுதியில் தடித்தெழும்பிய தழும்பிற்குக் கீழ் துண்டை இடுப்பில் சுற்றி முடிச்சிடும்போதும் நான் அவனைக் கவனித்தேன். அவனைப் பற்றி அறியாததால் நான் அவனை மனப்பாடம் செய்தேன். அவன் நாகரீகம் மிக்கவன். அவனது வாழ்க்கை இலகுவான காட்சிக் கோர்வைகளைக் கொண்டிருந்தது. அவனது சட்டையின் கைப்பட்டைப் பித்தான்கள் தேர்ந்த ரசனையை வெளிப்படுத்தின.

அவன் வைத்திருந்த மூன்று செல்பேசிகளும் அடிக்கடி ஒலித்தன. அவனது மனைவியிடமிருந்து வரும் அழைப்பை நான் அறிவேன். அப்போதெல்லாம் கழிவறைக்கோ அல்லது வெளித் தாழ்வாரத்திற்கோ சென்று விடுவான். அரசாங்க அதிகாரிகளிடமிருந்து வரும் அழைப்பையும் அறிவேன். அப்படியான அழைப்பாக இருந்தால் பேசிய பின்பு, "ஏன் இந்த ஆளுநர்கள் எவரையும் சற்று தனியே விடுவதில்லை?" என்பான். ஆனால் அவன்



ஆளுநரிடமிருந்து வந்த அழைப்புகளை விரும்பினான் என்பது தெளிவு. உணவக மேலாளர் எங்களது மேஜைக்கு வந்து, “தங்களது வருகை மிக்க மகிழ்ச்சி அளிக்கிறது ஸார்” என்பான். ஞாயிற்றுக் கிழமை சஞ்சிகைகளின் உள் பக்கங்களில் அவனது படம் வந்திருக்கிறதா என்று தேடிப் பார்ப்பான். அவனது படம் ஏதும் இருந்தால் “இங்கே பார், இவர்கள் ஏன் தொழிலதிபர்களை முக்கியமானவர்களாக மாற்றுகிறார்கள்?” எனச் சற்று புகார் தொனிக்கும் குரலில் சொல்வான். ஆனாலும் அவன் பத்திரிகை நிழற்படக்காரர்களை முன்னிட்டு இரண்டு வெவ்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஒரே உடையை அணிய மாட்டான். அவன் ஒரு உலக உருண்டையைப் போல் வட்டமாய், பெரியதாய், தொடர்ந்து மெருகூட்டப்பட வேண்டிய தேவையைக் கொண்ட, ஒளிரும் இயல்புடைய அகந்தையைக் கொண்டிருந்தான். ஜனங்களுக்கு வேண்டியதைச் செய்தான். அவர்களுக்குப் பணம் கொடுத்தான். தொடர்புகளை அறிமுகப் படுத்தினான். அவர்களது உறவினர்களுக்கு வேலை கிடைக்க உதவி செய்தான். அவற்றுக்கு நன்றிகளும், பாராட்டுக்களும் வந்தபோது அவனது செல்பேசிக்கு வந்த தகவல் விவரங்களை என்னிடம் காட்டுவான். நான் வாசித்த ஒன்றை நினைவில் வைத்துள்ளேன். “வரலாறு தங்களை உன்னத மனிதராக ஆக்கும்” என அதை வாசித்தபோது அவனது கண்களில் ஒளி வீச அவனுக்குள் உண்டான அதிர்வலைகளை என்னால் கேட்க முடிந்தது.

ஒரு நாள் நாங்கள் இருவரும் கொய்யா மரத்தில் இரண்டு மீன்கொத்திப் பறவைகள் இணைவதை முன்னிட்டு நடனமாடிக் கொண்டிருந்ததைக் கவனித்திருக்கும்போது அவன் பெரும்பாலான பறவைகளுக்கு ஆண்குறி கிடையாது என்றான். பறவைகளின் ஆண் குறியைப்பற்றி நான் எண்ணிப் பார்த்ததில்லை.

“நான் வளர்கையில் என் அம்மா கொல்லையில் கோழிகள் வளர்த்த போது, அவை இணைவதைப் பார்த்திருக்கிறேன்”என்றேன்.

“அவை இணையும் தான். ஆனால் ஆண்குறியோடு அல்ல” என்றான் அவன். “நீ எப்போதாவது சேவலுக்கு குறியிருக்கப் பார்த்திருக்கிறாயா? எனக் கேட்டான். நான் சிரித்துவிட்டேன். அதிலுள்ள நகைச்சுவையை உணர்ந்து அவனும் சிரித்தான். அது எங்களது உறவின் அடையாள

வார்த்தை ஆனது. "சுன்னியுடன் சேவல்" என அவனைக் கட்டிக்கொண்டு கிசுகிசுப்பேன். வெடிச்சிரிப்பாய் சிரித்துத் தீர்ப்போம். அவன் செல்பேசியில் குறுந்தகவல்களை "சுன்னியுடன் சேவல்" என அந்த வார்த்தையுடன் அனுப்பினான். விக்டோரியா தீவின் குழிகள் நிறைந்த சாலையில் திரும்பி பறவைகளின் பாடல்கள் ஒலிக்கும் அந்த வளாகத்திற்குள் நுழையும் ஒவ்வொரு முறையும் நான் என் சொந்த வீட்டிலிருப்பதைப் போல் உணர்ந்தேன்.

அந்தப் பெண் இன்னும் என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள். இந்த பிற்பகல் வேளையில் வழக்கத்திற்கு மாறாக போக்குவரத்து அப்படியே நின்று விட்டது. டேங்கர் வாகனம் ஏதாவது சாலையின் குறுக்கே விழுந்து கிடக்க வேண்டும்.— டேங்கர் வாகனங்கள் எப்போதும் சாலையின் குறுக்கே தான் விழுகின்றன—அல்லது பேருந்து ஒன்று பழுதாகி நின்றிருக்கக் கூடும். அல்லது வாகனங்கள் பெட்ரோல் நிலையத்தின் முன்பாக சாலையை மறைத்து வரிசை கட்டி நின்றிருக்கக் கூடும். எனது வாகனத்தின் எரிபொருள் அளவு காலியாகிவிடும் நிலையில் இருந்தது. அந்தப் பெண்ணும் கண்ணாடியை இறக்கிவிட்டு என்னிடம் ஏதாவது பேசுவாளோ என்ற யோசனையுடன் எனது வாகனத்தை அணைத்து விட்டு ஜன்னல் கண்ணாடியை இறக்கினேன். நானும் அவளை வெறித்துப் பார்த்தேன். நான் வேறு பக்கம் பார்வையைத் திருப்பும் வரை அவளது பார்வை என் மீது நிலைத்திருந்தது. சஞ்சிகைகளை நீட்டுபவர்கள், ரீசார்ஜ் அட்டை விற்பவர்கள், நேந்திரம் பழ சிப்ஸ் விற்பவர்கள், செய்தித்தாள் விற்பவர்கள் என இப்போது கூவி விற்பவர்கள் கூடி விட்டனர். எனக்கு முன்னால் இருந்த வாகன ஓட்டுநர் ரீசார்ஜ் அட்டை வாங்கினான். விற்ற சிறுவன் சிவப்பு நிற சட்டை அணிந்திருந்தவன் அவனது விரல் நகத்தினால் அட்டையை உரசிக் கொடுத்து வாகன ஓட்டுனர் அந்த எண்களை செல் பேசியில் பதிந்து அட்டை போலியல்ல என்று உறுதியாகும்வரை காத்துக்கொண்டிருந்தான்.

நான் அந்தப் பெண்ணைப் பார்க்க மறுபடியும் திரும்பினேன். எனது காதலன் முதல் முறையாக எங்கள் அலுவலகத்திற்கு வந்தபோது . "அவனது முகம் முழுவதும் வெளிநாடுகளின் அடையாளம்" என அவனைப் பற்றி சிக்வாடோ சொன்னது இப்போது என் நினைவிற்கு வந்தது.

அந்தப் பெண்ணும்கூட அப்படியான ஒரு முகத்தை—வெளிநாடுகளின் அடையாளம் பூசிய முகத்தைக் கொண்டிருந்தாள். ஆகக் கூடுதலான வசதிகள் நிறைந்த வாழ்க்கை வாய்க்கப் பெற்ற ஒருவரது முகமாக இருந்தது அவளது முகம். அவளது உதடுகள் அமைந்திருந்த விதத்தில் ஏதோ வித்தியாசம் தெரிந்தது. கோக்கோ பென்சிலால் கோடிடப்பட்டிருந்த அவளது உதடுகள் சண்டையிடவே விருப்பம் இல்லாதவள் போரில் வெற்றி பெற்றதைப்போல திருப்தி தராத வெற்றியைக் குறிப்பதாக இருந்தது. ஒரு வேளை அவள் உண்மையிலேயே எனது காதலனின் மனைவியாகக்கூட இருக்கலாம். லாகோஸிற்குத் திரும்பி வந்துள்ள அவள் என்னைப் பற்றி அறிந்து கொண்டு மோசமான கேலிக்கூத்தாக போக்குவரத்து நெரிசலில் என்னைப் பார்க்க நேரிட்டிருக்கலாம். ஆனால் அவனது மனைவிக்குத் தெரிந்திருக்க சாத்தியமில்லை. அதில் அவன் மிகக் கவனமாக இருந்தான்.

சனிக் கிழமை பிற்பகலை என்னுடன் ஜாஸ் ஹோல் விடுதியில் கழிக்குமாறு நான் அவனிடம் கேட்ட போது அல்லது இரவு உணவுக்கு வேறொரு விடுதிக்குப் போகலாம் எனக் கேட்டபோதெல்லாம், “எனக்கும் ஆசை தான் ஆனால்ஞ்” என இழுப்பான். நாங்கள் எப்போதும் அவொலோவா சாலையில் உள்ளடங்கிய இருட்டான வீதியில் இருந்த உணவு விடுதிக்கே சென்றோம். உயர்ந்த விலை ஒயின் பரிமாறப்படும் அந்த விடுதியின் முகப்பில் அடையாளம் ஏதும் கிடையாது. இயற்கையின் விளக்க முடியாத பெரிய சக்தியொன்று பொதுவெளியில் என்னுடன் வர இயலாமல் தடுப்பது போல் பேசினான். அதே போல நான் அனுப்பும் குறுந்தகவல்களையும் செல்பேசியில் அவனால் வைத்துக் கொள்ள முடியாது. நான் அனுப்பும குறுந்தகவல்களை வாசித்த உடனேயே உடனுக்குடன் நீக்கிவிட முடிவதெப்படி, அவற்றை ஒரு சில மணி நேரத்திற்காவது அல்லது ஒரு நாளைக்காவது அழிக்காமல் வைத்துக் கொள்ளும் ஆசை ஏன் அவனுக்கு இல்லை என அவனைக் கேட்க விரும்பினேன். இத்தகைய கேள்விகள் கேட்கப்படாமலேயே என் தொண்டைக்குள் கூழாங்கற்களாய்த் திரண்டிருந்தன. என்னுடைய பெற்றோர்களின் கவலை குறித்து அவனிடம் சொல்வது, எனது பழக்கத்திற்கு மாறான விதத்தில் எல்லாவற்றையும் உதறிவிட்டு அவனுக்காகப் படுக்க முடிகிற அதே வேளையில்

அவனிடம் கேள்விகள் ஏதும் கேட்கமுடியாதவளாக
பாதுகாப்பின்மை, இனம் புரியாத மன உந்துதல்கள்
ஆகியவற்றினால் கட்டுண்டவளாக இருப்பது என இப்படி
ஒரு ஆணுக்கு மிக நெருக்கமாக உணர்வதே எனக்கு
வினோதமாகத் தோன்றியது.

முதல் முறையாக நாங்கள் சண்டையிட்டுக்
கொண்டபோது அவன் என்னிடம் குற்றம் சுமத்துவது
போல், "நீ அழாதே" என்றான். அவனது மனைவி அழுவாள்
என்பதையும், அவனால் கண்ணீரைக் கையாள முடியும்
ஆனால் எனது பிணங்கிய நடத்தையைச் சகித்துக் கொள்ள
முடியாது என்பதையும் உணர்ந்தேன்.

அவனுடைய வாகன ஓட்டியான இம்மானுவேலை
முன்னிட்டுத்தான் எங்களுக்குள் சண்டை மூண்டது.
அவனது முகம் சுளிக்க வைக்கும் இயல்புகளைத்
தவிர்த்துவிட்டால் அவன் ஒரு வயது முதிர்ந்த
புத்திசாலியாகத் தோன்றக் கூடும். ஒரு சனிக்கிழமையின்
பிற்பகல் வேளை. அன்று காலையில் அலுவலகத்தில் வேலை
பார்த்துக் கொண்டிருந்தேன். எனது உயர்திகாரி அவசரக்
கூடுகை ஒன்றைக் கூட்டியிருந்தார். நான் அதை
அவசியமற்றது என நினைத்தேன். தீவின் அருகே உள்ள
நகரின் மாண்பு மிகு ஆளுநர் செல்நெட் தொலைத் தொடர்பு
நிறுவனம் ஜனங்களின் முன் அவரை அசிங்கப்படுத்தி
விட்டதாகச் சொல்லி இடைஞ்சலை ஏற்படுத்துகிறார்.
அவரது ஜனங்களுக்கு ஒரு சிறிய ஆழ்துளைக் கிணறு ஒன்றை
மட்டும் தானமாகச் செய்துவிட்டு அவருக்குச் சொந்தமான
பூர்வீக இடத்தில் எங்கள் நிறுவனம் பெரிய அளவிலான
நிலையத் தளம் ஒன்றை எப்படிக் கட்டப்போயிற்று எனக்
கேட்டுப் பல தாக்கீதுகளை அனுப்பியிருந்தார். அன்று
காலையில் அவரது காவலர்கள் எங்களது நிறுவனத்தின்
கட்டடத் தளத்தைச் சுற்றி மறித்துவிட்டனர். எமது
நிறுவனத்தின் பொறியாளர்கள் சிலரை
வெளியேற்றிவிட்டதுடன் அவர்களது வாகனத்தின்
டயர்களைப் பழுதாக்கிவிட்டனர். எனது உயரதிகாரி கடும்
கோபம் கொண்டவராய் கூடுகையில் பேசும்போது
மேஜையின்மீது கையை ஓங்கிக் குத்தினார். பின்னர் நானும்
கூட அவரைப் போலவே செய்வதாக எண்ணி பிரம்பு
மேஜைமீது என் கையை ஓங்கிக் குத்தினேன். எனது காதலன்
சிரித்தான். "கடவுளையல்லாது பேய்—பூதங்களை வழிபடும்

இந்த பரம்பரை ஆட்சியாளர்களிடம் இது தான் பிரச்சினை" என்றார் எனது உயரதிகாரி. "அந்த ஆள் ஒரு அயோக்கியன்! நாம் அவனுக்குக் கொடுத்த பத்து இலட்சம் நைரா பணம் என்னவாயிற்று? நமது நிலையத் தளத்தைக் கட்டுவதற்கு முன் அவனது ஜனங்கள் எல்லோருக்கும் அரிசி மூட்டைகளும் பயறு மூட்டைகளும் கொண்டு வந்து போட வேண்டுமா?

ஒவ்வொரு நாளும் கோலா உருண்டை போடவேண்டுமென நினைக்கிறானா?" என்றார். எமது உயரதிகாரி வேடிக்கைக்காகச் சொல்லா விட்டாலும்கூட "கோலா உருண்டை" எனச்சொன்னது என்னையும் சிக்வாடோவையும் சிரிக்க வைத்தது. "ரொட்டி போல சாதாரணமான ஏதேனும் கொடுக்கக் கூடாதா?" என என்னிடம் கிசுகிசுத்தாள் சிக்வாடோ. பின்னர் எமது உயரதிகாரி உடனே சென்று ஆளுனரைச் சந்திக்க ஆயத்தமாக இருப்பவர் யார் எனக் கேட்ட போது தாமதமேதுமின்றிக் கையை உயர்த்தினாள். நான் அதற்கெல்லாம் முன் செல்ல மாட்டேன். கிராமத்தினர் கண்கள் விரிய எங்களைப்பார்ப்பது, வாலிபர்கள் இலவச ரீசார்ஜ் அட்டை மற்றும் செல்பேசி கேட்பது என இவற்றுக்காகவே இத்தகைய இடங்களுக்குப் போவதை நான் விரும்புவதில்லை. அவையெல்லாம் என்னை அதிகாரம் உடையவளாக உணர வைத்தன.

இன்னும் சிரித்துக் கொண்டே ஏன் கோலா உருண்டை என என் காதலன் கேட்டான்.

அதைப் பற்றி எனக்கொன்றும் தெரியாது என்றேன் நான்.

"இப்போதே நான் கோலா உருண்டை சாப்பிட விரும்புகிறேன்"என்றான்

"நானும் தான்" என்றேன்.

வானில் சூரியன் ஒளி வீசிக் கொண்டிருக்க, மேலேயிருந்த பறவைகள் பலவித ஒலிகளை எழுப்ப, உருண்டு நகரும் கதவின்மீது திரைத்துணிகள் மோதி ஓசை எழுப்ப நாங்கள் சிரித்துக்கொண்டிருந்தோம். எனது உயரதிகாரி பற்றி நகைச்சுவையான கதைகளைச் சொல்லிச் சிரித்தவாறு நான் ஏற்கனவே நாங்கள் இருவரும் சேர்ந்து கழிக்கக்கூடிய வருங்கால சனிக்கிழமைகள் பற்றி யோசித்துக் கொண்டிருந்தேன். என் காதலன் இம்மானுயேலை வரச்சொல்லி அவனிடம் கோலா உருண்டை வாங்க

என்னைக் கடை வரை அழைத்துப் போகச் சொன்னபோது நான் வாகனத்தில் ஏறி அமர்ந்த போது இப்பொழுதோ எனக்கு வணக்கம் சொல்லவில்லை. அவன் வேறு திசையில் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். என் காதலை இல்லாமல் என்னை மட்டும் வாகனத்தில் அழைத்துச் செல்வது அவனுக்கு அதுவே முதல் முறை இருவருக்குமிடையே மௌனம் இறுக்கமாய் இருந்தது அவனது பிள்ளைகள் யாவரும் என்னை விட வயதில் மூத்தவர்கள் என எண்ணுகிறேனோ என்னவோ.

“நல்லது இப்பொழுதோ!” என கடைசியில் நானே வலிய வரவழைத்துக் கொண்ட மரியாதையுடன் அவனுக்கு வணக்கம் கூறினேன். “லோலோ அப்பொழுது வீதியில் உள்ள கடையை உனக்குத் தெரியுமா? எனக் கேட்டேன். அவன் பதிலுக்கு ஒன்றும் பேசாமல் வாகனத்தைக் கிளப்பினான். அந்தக் கடையை அடைந்ததும் கதவின் அருகிலேயே வாகனத்தை நிறுத்தியவன், “இறங்குங்கள், நான் வாகனத்தை வரிசையில் கொண்டு போய் நிறுத்த வேண்டும்” என்றான். நான், “தயவுசெய்து கடை வாசலில் கொண்டு போய் விடு” என்று கூறினேன். வாகன ஓட்டுனர்கள் எல்லோரும் வாகனத்தை நிறுத்த இடம் பார்ப்பதற்கு முன் அப்படித்தான் செய்தார்கள்.

அவன் என்னைப் பார்க்காமலேயே, “இங்கேயே இறங்குங்கள்” என்றான். காற்றில் அசைவது போல தள்ளாடிய நிலையில் கடும் கோபம் என் உடம்பு முழுக்கப் பரவியது. நான் இறங்குகையில் என் கால்களுக்கடியில் தரையை என்னால் உணர முடியவில்லை. பண்டங்கள்



பரப்பி வைத்திருந்த கண்ணாடிப் பேழையிலிருந்து சில கோலா உருண்டைகளை தெரிந்தெடுத்துவிட்டு, நான் என் காதலனை செல்பேசியில் அழைத்து இம்மானுயேல் என்னை அவமதிக்கும் விதமாக நடந்து கொண்டான் என்றும் நான் ஒரு வாடகை வாகனத்தில் வீடு திரும்புவேன் என்றும் கூறினேன்.

நான் வீடு திரும்பிய போது என் காதலன் என்னைச் சமாதானம் செய்யும் தொனியில், “இம்மானுயேல் சாலை மிக மோசமாயிருப்பதாகச் சொன்னான்” என்றான்.

“அந்த ஆள் என்னை அவமதித்துவிட்டான்” என்றேன்.

“இல்லை, அவன் அப்படி இல்லை. நீ பேசியது அவனுக்குப் புரியாமல் இருந்திருக்கலாம்” எனறான்.

இம்மானுயேல் என் காதலனுடைய மனைவியின் அதிகாரத்தை எனக்குக் காட்டிவிட்டான். தான் தண்டிக்கப் படுவோம் என்ற அச்சம் அவனுக்கு இருந்திருந்தால் அவன் அப்படி அவமதிக்கும் வித்த்தில் நடந்து கொண்டிருக்க மாட்டான். நான் கோலா உருண்டைகள் இருந்த பையை ஜன்னல் வழியே வீசியெறிய எண்ணினேன்.

“இப்படித்தான் நீங்கள் செய்வீர்களா? உங்கள் வாகன ஓட்டியைக் கொண்டு உங்கள் பெண் நண்பர்களுக்கு அளிக்கப்படும் இடத்தைச் சுட்டிக் காட்டுவீர்களா?”என்று கத்தினேன். அப்படிக் கத்தியதற்காக என்னையே எனக்குப் பிடிக்கவில்லை. எனது கண்களில் கண்ணீர் வழிவதைக் கண்டு நானே அதிர்ச்சி அடைந்தேன். பேதைப்பருவத்துச் சிறு பிள்ளை போல் என் காதலன் அவனது கரங்களைக் கொண்டு என்னை அரவணைத்துக் கொண்டு நான் அவனுக்கு கோலா உருண்டை தருவேனா எனக் கேட்டான். “நீங்கள் இங்கே பெண்களை அழைத்து வந்திருக்கிறீர்கள் தானே?” எனக் கேட்டேன். எங்களது பேச்சு மற்ற பெண்களைப் பற்றிப் பேசுவதாக எப்படி ஆனது என்பது குறித்து அறியாத நிலையிலேயே அப்படிக் கேட்டேன். அவன் தலையை உதறிக் கொண்டான். “இல்லை, நான் அவ்வாறு செய்யவில்லை. இதைப்பற்றி மேற்கொண்டு பேச வேண்டாம். கோலா உருண்டையைச் சாப்பிட்டுக் கொண்டு ஒரு படம் பார்க்கலாம் வா!” என்றான்.

என்னை சாந்தப் படுத்தும் அவனுடைய விருப்பத்திற்கு நான் வளைந்து கொடுத்தேன். பிறகு அவன்,

"திருமணமான பின்பு இரண்டு பெண்களுடன் மட்டுமே எனக்கு உறவிருந்தது. நான் மற்ற ஆண்களைப் போல் இல்லை." என்றான்.

"இதற்குப் பரிசு தரவேண்டும் என்று நினைத்துப் பேசுவது போல் அல்லவா பேசுகிறீர்கள்" என்றேன். அவன் புன்னகைத்தான். "அவர்கள் இருவரும் உன்னைப் போலத்தான்." வார்த்தயொன்றைத் தேடுவது போல அவன் சற்று இடை நிறுத்தி பின் அதைக் கண்டு கொண்டபோது குதூகலத்துடன் கூறினான். "அவர்கள் உன்னைப் போலவே உயிர்ப்புடன் இருந்தார்கள்."

நான் அவனை நோக்கினேன். என்னிடம் சொல்லக் கூடாதவை என சில விஷயங்களும், நான் அவனுடன் சேர்ந்து அனுபவிக்க விரும்பும் விஷயங்களும் இருக்கின்றன என்பது ஏன் இவனுக்குத் தெரியவில்லை? அது வலிய வரவழைத்துக் கொண்ட குருட்டுத்தனம். அது அப்படித்தான் இருக்க வேண்டும். அவற்றைக் கண்டு கொள்ளக் கூடாது என்பதையே அவன் தேர்ந்து கொண்டான். "நீ ஒரு வேசி மகன்" என்றேன் நான்.

"என்னது?" என்றான் திடுக்கிட்டவனாய்.

நான் அதைத் திரும்பச் சொன்னேன்.

தேள் கொட்டினாற்போல் பார்த்தான். "வெளியே போ! இந்த வீட்டைவிட்டு உடனே வெளியேறு" என்றவன், "இது ஏற்றுக் கொள்ள முடியாதது." என்று முணுமுணுத்தான். இதற்கு முன்னர் ஒருபோதும் நான் இப்படி வீட்டைவிட்டு வெளியேற்றப்பட்டதில்லை. இம்மானுயேல் வாகனம் நிறுத்துமிடத்தின் நிழலில் ஆசனமொன்றில் அமர்ந்தவாறு கல் போன்ற முகத்துடன் நான் எனது வாகனத்தை நோக்கி விரைவதைப் பார்த்துக் கொண்டிருந்தான். என் காதலன் ஐந்து நாட்களுக்கு என்னை அழைக்கவே இல்லை. நானும் அவனை அழைக்கவில்லை. முடிவில் அவனே என்னை அழைத்தபோது, "தீக்கொன்றை மரத்தில் இரண்டு புறாக்கள் அமர்ந்துள்ளன. நீ அவற்றைப் பார்க்க வேண்டும் என விரும்புகிறேன்" என்பதே அவனது முதல் வார்த்தைகளாய் இருந்தன.

"ஒன்றுமே நடவாதது போல நீங்கள் நடிக்கிறீர்கள்!" என்றேன் நான்.

"நான் தான் உன்னை அழைத்தேன்" என்றான் அவன் அழைத்ததே ஒரு மன்னிப்புக் கோரல் என்ற தொனியில்.

பின்னர், அவனை வேசி மகன் என்று அழைத்ததிற்குப் பதிலாக நான் அழுதிருந்தேன் என்றால் அவன் அவ்வாறு நடந்து கொண்டிருக்க மாட்டான் என்று கூறினான். நான் மறுபடியும் அங்கே போயிருக்கக் கூடாது. அப்போதே அதை நான் அறிந்திருந்தேன்.

அந்தப் பெண் இன்னும் என்னைப் பார்த்துக்கொண்டே அவளது செல் பேசியில் பேசிக் கொண்டிருந்தாள். கறுப்பும் வெள்ளி நிறமும் கொண்டிருந்த அவளது ஜீப் வாகனம் அதிசயமாய் சிராய்ப்புகளின்றி இருந்தது. இரு சக்கர வாகனம் எந்த இடைவெளியிலும் போகும் என்பதைச் சொல்வது போல் நெரிசலில் நின்றிருக்கும் வாகனங்களுக்கிடையில் குறுகிய இடைவெளியில் இரு சக்கர வாகனங்கள் ஒன்றுக்குப்பின் ஒன்றாக விரையும் இந்த நகரத்தில் அது எப்படி சாத்தியம்? அவளது வாகனம் இடிக்கப்பட்ட போதெல்லாம் வாகனப் பராமரிப்பாளன் ஒருவன் வானிலிருந்து இறங்கி வந்து இடித்ததால் உண்டான நெளிவை மாயமாய் மறையச் செய்தானோ என்னவோ. எனக்கு முன்னால் நின்றிருந்த வாகனம் பின் வால் விளக்குப் பகுதியில் உடைந்திருந்தது. என்னுடைய வாகனமே பல காயங்களைக் கொண்டிருந்தது. ஒரு மாதத்திற்கு முன்பு கிங்ஸ்வே சாலையில் வாடகை வாகனமொன்று இடித்ததால் உண்டான சிதைவு தான் இருப்பதில் பெரியது. அந்த வாகனத்தை ஓட்டியவன் வெளியில் குதித்து சட்டைப் பித்தான்கள் போடாது திறந்த வாக்கில் என்னைப் பார்த்து, "மூளை கெட்ட பெண்ணே! உன்னோடு பெரும் தொல்லை தான்! ஏன் அப்படி நிறுத்தினாய்? அறிவில்லையா உனக்கு?" என்று கத்தினான். நான் அவன் தனது வாகனத்தை ஓட்டிச்செல்லும் வரை திகைத்து அவனையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவன் போன பின் அவனிடம் என்ன சொல்லி திரும்பக் கத்தியிருக்கலாம் என்று யோசிக்கத்த் துவங்கினேன். அதை சிக்வாடேோவிடம் கூறியபோது அவள், " நீ உன் விரலில் திருமண மோதிரம் அணிந்திருந்தாயானால் அவன் அப்படிக் கத்தியிருக்க மாட்டான்" என்றாள்.

நான் வேறு பக்கம் திரும்பி என் காதலன் இந்நேரம் என்ன செய்து கொண்டிருப்பான் என யோசித்தேன். அவன் இரண்டு வார காலம் அமெரிக்காவில் உள்ள அவனது குடும்பத்தினரைப் பார்க்கப் போயிருக்கிறான். அன்று

மாலையில் அவன் எனக்கு குறுந்தகவல் ஒன்றை அனுப்பினான். அது "என் மனைவியுடன் இசை நிகழ்ச்சியில் இருக்கிறேன். அழகான இசை. பத்து நிமிடத்தில் உன்னை அழைப்பேன். உன் செல்பேசியை அணைக்காமல் வைத்திரு. நீயும் கேட்கலாம். கண்ணியுடன் சேவல்" என்றிருந்தது. அவன் அனுப்பிய மற்ற குறுந்தகவல்களையெல்லாம் நீக்காமல் வைத்திருந்தேன் என்றாலும் அதை மட்டும் நான் இரண்டு முறை வாசித்து விட்டு நீக்கிவிட்டேன். அவ்வாறு நீக்கியது அவன் அப்படியொரு தகவல் அனுப்பப்படவில்லை எனப் பொருள் படும் என்று நான் எண்ணினேன். அவன் செல்பேசியில் அழைத்தபோது ஏற்காமல் மணியைத் தொடர்ந்து ஒலிக்கச் செய்தேன். நான் அவர்கள் இசை நிகழ்ச்சியில் இருப்பதாய், அவனது மனைவி அவன் கையைப் பிடித்து நிறுத்துவதாய் கற்பனை செய்து கொண்டேன். ஏனெனில் அவன் அழைப்பை மேற்கொள்வதை என்னால் தாள முடியவில்லை. அவன் அதற்குப் பின் என்னை, நான் முன்நிறுத்தும் உவப்பில்லாத யதார்த்தத்தைப் பார்க்க விரும்பமாட்டான் என்பதையும் அதற்குப்பதிலாக கிளர்ச்சியூட்டும் ஒரு விளையாட்டில் அவன் தன்னைத் தானே பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பதையும் அறிந்திருந்தேன்.

அவன் அவனது பயணத்தை முடித்து வந்தபோது என்னால் இனமறிந்து கொள்ளமுடியாத விதத்தில் புது வகைக் காலணியை அணிந்திருந்தான். அவன் அதிக உற்சாகத்துடன் இருந்தான். கையயைச் சுழற்றி என்னைக் கட்டிக்கொண்டு என் கழுத்தின் கீழ் இறுக்கமாகச் சுருட்டப்பட்டிருந்த கேசத்தை வருடியவாறு, "மிகவும் மென்மையாக இருக்கிறாய்" என்றான்.

இரவு உணவிற்கு வெளியே போகலாம் என்றும் எனக்கு ஆச்சர்யமுட்டக் கூடிய ஒன்றை வைத்திருப்பதாகவும் அவன் கூறினான். அவன் குளியலறைக்குள் சென்றிருந்த போது அவனது செல்பேசிகளுள் ஒன்று ஒலித்தது. நான் அதை எடுத்து அதிலிருந்த குறுந்தகவல்களைப் பார்த்தேன். அதற்கு முன்பு அப்படிப் பார்க்க வேண்டுமென நான் எண்ணியதேயில்லை. இருந்தபோதிலும் சட்டென அதைப் பார்க்க வேண்டுமென்ற உந்துதலால் ஆட்கொள்ளப்பட்டேன். "அனுப்பப்பட்டவை" பகுதியிலிருந்த செய்தி ஒவ்வொன்றும் பேபி என்ற பெயருக்கு

அனுப்பப்பட்டிருந்தன. அவற்றுள் மிக அண்மையில் அனுப்பப்பட்ட தகவல் அவன் பத்திரமாக ஊர் திரும்பியதைச் சொல்வதாக இருந்தது. என்னை ஈர்த்தது என்னவென்றால் அவனது மனைவிக்கு எத்தனை தகவல்களை அனுப்பியிருந்தான் என்பதோ அல்லது 'போக்குவரத்து நெரிசலில் சிக்கிக் கொண்டேன்', 'உன் பிரிவை உணர்கிறேன்,' 'நெருங்கி வந்து விட்டேன்', என்று சின்னச்சின்ன தகவல்களை அனுப்பியிருந்தான் என்பதோ அல்ல. அவை அனைத்தும் "கவனிப்புடன் சேவல்" என்ற பெயரில் அனுப்பப்பட்டிருந்தன. எனக்குள் ஏதோ ஒன்று அறுந்து விழுவதை உணர்ந்தேன். அவன் தன் மனைவியுடன் உரையாடல் ஒன்றைக் கட்டமைத்து, அதனூடாக "கவனிப்புடன் சேவல்" என்பதை ஒரு நகைச்சுவையாக மிக சாதுர்யமாகக் கோர்த்து அதை அவர்களுக்கிடையிலான உறவின் அடையாள வார்த்தையாக மாற்றியிருக்கிறான். என் அதற்கென மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சியை எண்ணிப்பார்த்தேன். நான் செல்பேசியை வைத்துவிட்டுக் கண்ணாடியைப் பார்த்தேன். எனது பிம்பம் ஒரு தொடுத் நூலில்லாத பொம்மையாக உருமாறக் கூடுமென்று எதிர்பார்ப்புடன் பார்த்தேன்.

வாகனத்தில் செல்லும்போது "ஏதேனும் தவறு நடந்து விட்டதா? நன்றாக இருக்கிறாய் தானே?" என வினவினான்.

"நீங்களும் உங்களது மனைவியும் பேசிக் கொண்டிருந்தபோது அதை நானும் கேட்டேன் நீங்கள் என்னை செல்பேசியில் அழைத்ததை என்னால் நம்பவே முடியவில்லை" என்றேன். "நான் என்ன அப்படிச்செய்தேனா தெரியுமா? நான் உன் பிரிவை அதிகமாக உணர்ந்தேன். நான் அங்கே உன்னோடு இருக்க விரும்பினேன்" என்றான்.

"ஆனால் நீங்கள் என்னுடன் இருக்கவில்லையே" என்றேன்.

"நீ நல்ல மனநிலையில் இல்லை" என்றான்

"நீங்கள் பார்க்கவில்லையா? நீங்கள் என்னுடன் இருக்கவில்லையே" என்றேன் நான்.

அவன் கையை நீட்டி என் கையைப் பிடித்து அவனது கட்டை விரலைக் கொண்டு என் உள்ளங்கையில் தேய்த்தான். நான் மங்கலான விளக்கு வெளிச்சத்தில் தெரிந்த வீதியைப் பார்த்தேன். நாங்கள் வழக்கமாகச் செல்லும் ஒடுங்கி மறைந்திருந்த உணவு விடுதிக்குச் சென்று கொண்டிருந்தோம். அங்கே பரிமாறப்பட்ட உணவுகளின்

பட்டியலில் எல்லாவற்றையும் நூறு முறை சரிபார்த்திருந்தேன். கொசுவொன்று எனது இரத்தத்தை உறிஞ்சிய மயக்கத்தில் வாகனத்திற்குள் வந்து விட்டது.

அதை அடிக்க முனைந்த நான் என்னையே அடித்துக் கொண்டேன்.

நாங்கள் போய் அமர்ந்தவுடன் பரிமாறுபவன், “மாலை வணக்கம் ஸார்!

நல்வரவு ஸார்!” என்றான்.

“அவர்கள் எப்போதும் எனக்கு வணக்கம் சொல்வதில்லை. நீங்கள் கவனித்திருக்கிறீர்களா?” என நான் என் காதலனைக் கேட்டேன்.

“அப்படியா...” என்றவன் அவனது கண்ணாடியைச் சரி செய்தான்.

பரிமாறுபவன் திரும்ப வந்தான். தெளிவுடன் கூடிய நாசூக்கான தோற்றத்தைக் கொண்ட அவன் சிவப்பு ஒயின் குப்பியைத் திறக்கும் வரை காத்திருந்த நான், “நீ ஏன் எனக்கு வணக்கம் சொல்லவில்லை?” எனக் கேட்டேன். பரிமாறுபவன் என் காதலன் பக்கம் அவனது குறிப்பை நாடுபவன் போல் பார்த்தான். அது என்னை இன்னும் அதிகமாகக் கோபமூட்டியது. “நான் உன் கண்களுக்குத் தெரியவில்லையா? உன்னைக் கேள்விகேட்டது நான் தானே! இங்கிருக்கிற ஊழியர்கள், கதவைத் திறப்பவன், லாகோஸில் உள்ள வாகன ஓட்டுனர்கள் என எல்லோரும் ஏன் எனக்கு வணக்கம் சொல்ல மறுக்கிறீர்கள்? என்னை நீங்கள் பார்க்கவில்லையா?” எனக் கத்தினேன். பரிமாறுபவனிடம் “பத்து நிமிடம் கழித்து வா!” என அவனுக்குரிய நாசூக்கான ஆழமான குரலில் கூறினான் அவன். என்னிடம், “நீ சாந்தம் கொள்ள வேண்டும்” என்றவன் “நாம் இங்கிருந்து போக விரும்புகிறாயா?” எனக் கேட்டான்.

“அவர்கள் ஏன் எனக்கு வணக்கம் சொல்வதில்லை?” எனக் கேட்டவாறு எனது கோப்பையிலிருந்த மதுவில் பாதியைக் காலி செய்தேன்.

“உனக்கொரு ஆச்சர்யம் காத்திருக்கிறது! நான் உனக்காக புதிய வாகனம் ஒன்றை வாங்கியிருக்கிறேன்” என்றான்.

நான் அவனை வெறுமையாய்ப் பார்த்தேன்.

“நான் சொன்னதைக் கேட்டாயா?” எனக் கேட்டான்.

“நான் சொன்னதைக் கேட்டாயா?” எனக் கேட்டான்.

துள்ளியெழுந்து அவனைக் கட்டிக்கொண்டு வரலாறு அவனை உன்னத மனிதனாக நினைவு கொள்ளும் என்று சொல்லவேண்டும். புதிய வாகனம். நான் மேலும் கொஞ்சம் மதுவை அருந்தினேன்.

"ஆறு வருடங்களுக்கு முன்பு, நான் லாகோஸிற்கு வந்திறங்கிய எனது முதல் பேருந்துப் பயணத்தைப் பற்றி உங்களிடம் சொன்னேனா?" எனக் கேட்டேன். "நான் பேருந்திற்குள் ஏறிய போது ஒரு சிறுவன் அதிர்ச்சியில் கூச்சலிட்டுக் கொண்டிருந்தான். ஏனெனில் அவன் அறிந்திராத ஒரு ஆள் அவன் தொலைத்த பையைக் கண்டுபிடித்து அவனிடம் ஒப்படைத்திருக்கிறான். அந்த சிறுவன் என்னைப் போலவே வேலை தேடுபவனாகத் தோன்றினான். அவனும்கூட அவனது சொந்த ஊரிலிருந்து பிறர் சொல்லக் கேட்ட எச்சரிக்கைகளுடன் வந்திருக்க வேண்டும். அவர்கள் சொன்னவை எல்லாவற்றையும் நீங்களும் அறிவீர்கள்.

தெருவில் பிச்சைக் காரர்களுக்குக் காசு கொடுக்காதீர்கள். ஏனெனில் அவர்கள் ஊனமுற்றவர்களாக பாசாங்கு செய்கிறார்கள். வியாபாரிகள் அம்பாரமாய் குவித்து வைத்திருக்கும் தக்காளி வரிசைக்குள் அழுகிப் போனவையும் இருப்பதைக் கவனிக்கத் தவறி விடாதீர்கள். பழுதான வாகனத்துடன் சாலையில் நிற்பவர்களுக்கு உதவி செய்யாதீர்கள். ஏனெனில் உண்மையில் அவர்கள் ஆயுதங்களோடு இருக்கும் கொள்ளையர்கள். நிலைமை இப்படியிருக்கையில் யாரோ ஒருவர் அவனது காசுப்பையைக் கண்டுபிடித்து அவனிடம் திரும்பக் கொடுக்கிறார்கள்."

என் காதலன் திகைப்பூண்டை மிதித்தவன் போலத் தோன்றினான்.

"நம்பிக்கையின்மையின் சடங்குகள்" என்றேன் நான். நம்பிக்கையின்மையின் சடங்குகளின் மூலமாகத்தான் இங்கே நாம் ஒருவருக்கொருவர் தொடர்பு வைத்துக் கொள்கிறோம். பெட்ரோல் நிரப்பும்போது நிரப்பும் ஆள் ஏதேனும் திரிப்பு வேலை செய்கிறானா என்று பெட்ரோல் அளவு காட்டியைக் கவனமாகப் பார்த்துக்கொண்டிருப்பேன் என்பது உங்களுக்குத் தெரியுமா? நடைமுறைகளை அறிந்து நாம் அவற்றைப் பின்பற்றுகிறோமே தவிர நாம் கற்பனை செய்திராத விதத்தில் நம் வாழ்க்கையில் நடக்கக்

கூடியமட்டுக்கு நாம் இடமளிப்பதில்லை. விரைவாகவே நாம் கதவை அடைத்து விடுகிறோம். அவன் புரிந்து கொள்ளாதவற்றை, புரிந்து கொள்ள விரும்பியவற்றை சொல்கிறோமே என்று என்னை நானே அற்பமாக உணர்ந்தேன். அவற்றைச் சொன்ன முறையில் என்னை நானே கோழையாக உணர்ந்தேன். அவன் அவனது முழங்கையை மேஜையில் முட்டுக் கொடுத்தவாக்கில் என்னைக் கவனித்தவாறு அமர்ந்திருந்தான். அவன் எதிர்பார்ப்பதெல்லாம் நான் அவன் வாகனத்தைப் பரிசளித்ததற்காக ஆதுரமாக மகிழ வேண்டும், நன்றியைக் காட்ட வேண்டும், புது வாகனத்தை எப்போது காண முடியும் என்று கேள்வி கேட்க வேண்டும். நான் அழத் துவங்கினேன். அவன் எழுந்து சுற்றி வந்து என்னை அவனது இடுப்பின் மீது சாய்த்துக் கொண்டான். எனது மூக்கு ஒழுகிக் கொண்டிருந்தது. கைக்குட்டையால் என் கண்களைத் துடைத்த போது அவை அரிப்பதை உணர்ந்தேன். எனக்கு நாசூக்காக அழத்தெரியவில்லை. அவனது மனைவி அப்படி அழுவாள் என கற்பனை செய்தேன். மூக்கு ஒழுக்காமல், முக ஒப்பனை கலையாமல் கண்ணீர் மட்டும் கன்னங்களில் வழிந்தோடும் விதத்தில் நாசூக்காக அழத்தெரிந்த பெண்களில் அவனது மனைவி ஒருத்தியாக இருக்கக் கூடும். வாகனங்கள் சற்று நகரத் தொடங்கியிருந்தன. நான் எனது இடது பக்கக் கண்ணாடியில் இரு சக்கர வாகனமொன்று சடாரெனத் திரும்பி ஒலிப்பானை ஒலித்துக்கொண்டு படு வேகத்தில் வந்து கொண்டிருப்பதைப் பார்த்தேன். அந்த வாகனம் என்னுடைய வாகனத்தில் இடிக்கும் சத்தத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தேன். ஆனால் அப்படி ஏதும் நிகழவில்லை. அந்த வாகனத்தை ஓட்டியவன் ஹெல்மட் அணிந்திருந்தான். அவன் பின்னால் அமர்ந்திருந்த பெண் எவரேனும் போக்குவரத்து அதிகாரியின் தலை தெரிந்தால் சட்டென மாட்டிக் கொள்ளும் வகையில் ஹெல்மட்டை தலைக்கு மேலாகச் சற்றே உயர்த்தியிருந்தாள். அதன் உள்ளே இருக்கும் வாடையடிக்கும் செயற்கைப் பஞ்சு அவளது கேசத்திற்குக் கேடு விளைவித்திருக்கக்கூடும். என் காதலன் ஒரு முறை இதை விதியின் தத்துவம் என்று கூறினான். அவனது ஊழியர்கள் அனைவருக்கும் இலவசமாக ஹெல்மட் அளித்திருக்கிறான். ஆனால் அவர்களில் பெரும்பாலானோர் இன்னும்கூட ஹெல்மட் அணியாமல்

இரு சக்கர வாகனங்களை ஓட்டிக் கொண்டிருந்தனர். அன்றைக்கு முந்தைய தினம் வெறுந்தலையுடன் படு வேகமாக வந்த ஒருவன் நான் ஒருவளைவான திருப்பத்தில் திருப்பிக் கொண்டிருந்தபோது எனது வாகனத்தில் இடித்துவிட்டான். அவன் வாய்க்குள் விரலை விட்டுக் கொண்டு என் பக்கமாக வந்து, "மன்னியுங்கள் ஆன்டி! உங்கள் வாகனத்திற்கு ஒன்றும் ஆகவில்லை" என்று சொல்லிவிட்டு பயணத்தைத் தொடர்ந்தான். நான் சிரித்தேன். மதிய உணவு நேரத்தில் அலுவலகத்திலிருந்து கிளம்பி என் காதலன் வீட்டிற்குச் சென்றதிலிருந்து கடந்த மூன்று வாரத்தில் நான் சிரித்திருக்கவேயில்லை. நான் எனது உடைகள், புத்தகங்கள் மற்றும் குளியலறைப் பொருட்கள் என எல்லாவற்றையும் பெட்டியில் அடைத்துக் கொண்டு எனது இருப்பிடத்திற்குச் சென்றுவிட்டேன். களைகள் முளைத்தது போல் வீடென முளைத்த வண்ணமிருக்க லாகோஸ் நகரம் இடையறாது நகரப்படுவதாய் இருப்பதைக் கண்டேன்.

அந்த மூன்று வார காலத்தில் அலுவலகத்தில் நான் எவருடனும் அதிகமாய்ப் பேசிக்கொள்ளவில்லை. திடீரென எங்களது அலுவலகம் அதிகமும் குளிராக அசௌகரியமாய்த் தோன்றியது. மாண்பு மிகு ஆளுநர் கூடுதலாகப் பணம் கேட்டுக் கொண்டிருந்தார். அவரது நகர் நிர்வாகக் குழு ஆழ்துளைக் கிணற்றிலிருந்து கருப்பு நிறத்தில் தண்ணீர் வெளிவருவதாகச் சொல்லிக் கடிதமொன்றை அனுப்பியிருந்தது. எனது உயரதிகாரி பல கூடுகைகளைக் கூட்டிக் கொண்டிருந்தார்.

அத்தகைய கூடுகை ஒன்று முடிந்த பின்பு அவர், "நன்றி சொல்லி ஜெபிப்போம்" என்றார்.

நான், "வேலை பார்க்குமிடத்தில் ஏன் ஜெபிக்க வேண்டும்!" எனக் கேட்டேன். நாங்கள் எல்லோரும் கிறிஸ்தவர்கள் என்று ஏன் நீங்கள் நினைக்க வேண்டும்!" அவர் திகைத்துப் போனார். நான் எப்போதும் ஜெபத்தில் கலந்து கொள்வதில்லை என்பதும் "ஆமென்" எனக் கூறியதில்லை என்பதும் அவர் அறிந்ததே ஆனால் இதுவரை அவர் அதைப் பற்றி வாய்திறந்து பேசியதில்லை.

"இறைவனுக்கு நன்றி கூறுவதில் கட்டாயத்தின்பேரில் எவரும் கலந்து கொள்ளத் தேவையில்லை" என்றவர் அதே சீரில், "இயேசுவின் நாமத்தினாலே!" எனத் தொடர்ந்தார்.



"ஆமென!" என மற்றவர்கள் பின்பாட்டாய் ஒலித்தார்கள்.

நான் அந்த அறையைவிட்டு வெளியேற எத்தனித்தேன்.

"போகாதே! அகின் பிறந்த நாள் கேக் கொண்டு வந்திருக்கிறான்!" என்று எனது சக பணியாளன் ஜெரால்ட் கிசுகிசுத்தான்.

ஜெபம் முடியும் வரை நான் அறைக்கு வெளியே நின்றிருந்தேன். பிறகு நாங்கள் எல்லோரும் அகினுக்குப் பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்தோம். அவன் கொண்டு வந்திருந்த கேக் நான் விரும்பும் விதத்தில சம்பிரதாய அடையாளங்கள் ஏதுமின்றித் தோற்றமளித்தது.

எங்களது உயரதிகாரி அதை என்னிடமோ அல்லது சிக்வாடாவிடமோ பரிமாறக் கொடுக்கும்படி அகினிடம் கூறினார். "ஏன எப்போதும் நாங்கள் மட்டுமே பரிமாற வேண்டும்? எவரேனும் கேக் கொண்டு வரும்போதெல்லாம் நானோ அல்லது சிக்வாடோவோ தான் பரிமாறுகிறோம். ஜெரால்ட் நீ பரிமாறு! அல்லது எமேகா நீ தான இங்கிருப்பவர்களில் இளையவள். எனவே நீ பரிமாறலாமே!" என்றேன்.

அவர்கள் என்னை வெறித்துப் பார்த்தார்கள். சிக்வாடோ அவசரமாக எழுந்து கேக்கைத் துண்டுகளாக வெட்டத் துவங்கினாள். "தயவுசெய்து அவளைப் பொருட்படுத்தாதீர்கள்" என எல்லோருக்குமாகவும் கூறினாள். ஆனால் அவளது கண்கள் எங்கள் உயரதிகாரி மீதே இருந்தது. "அவள் ஏன் அப்படி நடந்து கொள்கிறாளெனில் அவள் இன்றைக்கு அவளுடைய

நடக்கிடக்கிறான் பூக்கை எடுத்துக் கொள்ளவில்லை" என்றான்.

பின்னர் அவன் "நீ என் கொழுக நாளாக இப்படி உடுத்து கொண்டிருக்கிறாய்! என்ன பிரச்சினை! உனது ஆறுதலை எதுவும் நடக்காதா?" என என்னிடம் கேட்டான்.

ஒரு கணம் நான் எப்படி உணர்ந்தேன் என்பதை அவனிடம் சொல்ல வேண்டுமென எண்ணினேன். எனது தோல் வழியாக வெடிப்புறு துளைகள் வெளிக் கொட்டிய நான் பட்டாக வலியுடன் உரிந்து வருவதைப் போல உணர்வதையும் என்ன செய்வதெனத் தெரியாமலிருப்பதையும் சொல்ல வேண்டுமென நினைத்தேன். நான் என் அறையிலிருந்து வெளியேறி வந்தேன் என்பதைத் தவிர புரிந்து கொள்ள முடியவில்லை என்று இரண்டு குறுக்கமைப்பை அவன் அனுப்பியிருந்தாலுங்கூட நான் அடிக்கடி எனது செயல்பாட்டை வெறித்துப் பார்ப்பதைக் கண்டு கண்ணாடியைத் துடைக்கவோ அவன் பயன்படுத்திய பேனா நான்களின் வாசனையைத் தெரியாமல் என்னால் நிலைகொள்ள முடியாது இருப்பதை அவனிடம் கூற நினைத்தேன். ஆனால் அவனிடம் எதுவும் சொல்லவில்லை. ஏனெனில் அவன் "நீ எதையும் அறிந்து கொள்ளத் தேவையில்லை. உன்னைக் கூட்டிச் செல்லத்தான்" அவனுக்குத் தெரிந்த ஞாபகங்களை எடுத்து விடுவான்.


நான் எனது கண்ணீரின் நிறத்தைக் கூட என் பார்வையை உடைக்கும்போது அவன் என்னைக் கவனித்துக் கொண்டிருக்கும் அதே வேளையில் தன் தலையில் தட்டியவாறு அவன் வெளிப்படுத்திய குரலில் இன்னும் இரக்கத்தைக் கொண்ட ஒரு பெண்மை இருந்தது. நீண்டதாக வெட்டிய நிறக் கீறல்களுடன் குவிந்த பாணியில் இருந்த அவனது கேசம் பின்னல் விளை குறுக்குப் பொருட்களை நிறைய பரிசுத்தமாக இருந்தது. ஆனாலும் அதில் ஒருவித சோகம் காணப்பட்டது. நீர் வாசனையில் அடர்த்தியான பொன் பிரிசில் பாணி கொண்டிருந்த முறையில் காணப்படாத ஒன்றாகக் கொண்டிருந்தது அது.

இளம் வயதுடைய சிறுவன் ஒருவன் கோப்பைத் தண்ணீர் கொண்டு வந்தபோதுடனும், துடைக்கும் துணியுடனும் எனது வாசனையை அணுகினான். அவனைத்

தடுக்கவும் விதமாகத் தனை பயணங்களை இயக்கினேன். ஆனாலும் அவனை கண்ணாடியில் நிலைப் பிம்பமான நான் தனை பயணங்களின் வேகத்தை குறைத்தேன். என்னை முறைத்துப் பார்த்த அவனை எனது வாகனத்திற்குப் பின்னால் நிறுத்த வாகனத்தைச் செலுத்தினான். இறுதியில் அவனை அழைப்ப வேண்டுமென்று ஒரு தூண்டுதல் சென்று என்னை அடி கொண்டு ஒரு கணம் எனது பார்வை திரும்பியது. உண்மையில் அந்தப் பெண்ணையே அழைப்ப நினைத்தேன். அவனது ஜீப் வாகனத்தின் பக்கம் திரும்பியபோது அவன் வேறு பக்கம் திரும்பியிருந்ததால் நான் எனது வாகனத்தின் ஒலிப்பானை அழுத்தினேன் வாகனத்தின் ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தேன்.

“உனக்கு என்ன பிரச்சினை? ஏன் நீ என்னை அப்போதிருந்து வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறாய்? நான் உன்னிடம் கடன்பட்டிருக்கிறேனா?” எனக் கத்தினேன்.

வாகனங்கள் நகரத் துவங்கின. நான் அவனும் அவனுடைய வாகனத்தின் ஜன்னல் கண்ணாடியை இறக்கி விடுவானென நினைத்தேன். அதை நோக்கிச் சாய்ந்தவன் பின் சட்டெனத் திரும்பி தலையை நிமிர்த்தி சிறு புன்னகையொன்றை உதிர்த்தான். நான் கவனித்தவாறிருக்க அந்த ஜீப் வாகனம் வேகமெடுத்துப் பாலத்தை நோக்கிச் சென்றது.



சிமாமண்டா கோஸி அடிச்சி



நைஜீரியாவின் இபோ இனத்தவரான சிமாமண்டா கோஸி அடிச்சி 1977 அன்று நைஜீரியாவின் அனம்பரா மாநிலத்தில் உள்ள எனுகு எனும் ஊரில் பிறந்தார். நைஜீரியப் பல்கலைக்கழகம் அமைந்துள்ள நுசுக்கா எனும் நகரத்தில் வளர்ந்தார். அங்கு துவக்கக்கல்வியும், உயர்நிலைக்கல்வியும் முடித்தபிறகு நைஜீரியப் பல்கலைக்கழகத்தில் சிறிது காலம் மருத்துவமும் மருந்துகள் பற்றிய படிப்பும் பயின்றார். பின்பு உயர்கல்விக்கென அமெரிக்கா சென்றார். அங்கு கிழக்கு கனெக்டிகட் மாகாண பல்கலைக்கழகத்தில் தொடர்பியலை முதல் பாடமாகவும் அரசியல் விஞ்ஞானத்தை இரண்டாவது பாடமாகவும் கொண்டு, உயர்தனிச்சிறப்புடன் பட்டம் பெற்றார். அதுடன் ஜான் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தில், படைப்பு எழுத்தாக்கத்தில் முதுகலைப்பட்டமும், யேல் பல்கலைக்கழகத்தில் ஆப்பிரிக்க பற்றிய படிப்புகள் பிரிவில் முதுகலைப்பட்டமும் பெற்றுள்ளார். அவரது முதல் நாவல் ஊதா செம்பருத்தி (Purple Hibiscus) அக்டோபர் 2003-ல் வெளியிடப்பட்டு 2005-ம் ஆண்டு காமன்வெல்த் நாட்டு எழுத்தாளர்களுக்கான விருதினைப்பெற்றது. 2004ம் ஆண்டு ஆரஞ்சு, புக்கர் ஆகிய விருதுகளுக்குப் பரிந்துரைக்கப்பட்ட நூல்களின் பட்டியலில் இடம் பெற்றது. 2003ம் ஆண்டு ஓ ஹென்றி (O Henry) விருதினையும் பெற்றார். அவரது கதைகள் கிராண்டா, ப்ராஸ்பெக்ட், அயோவா ரிவ்யூ ஆகிய இதழ்களிலும், பிற இலக்கிய இதழ்களிலும் வெளியாகியுள்ளன.

அவரது இரண்டாவது நாவல், 'மஞ்சள் நிறச் சூரியனின் பாதி' (Half of a yellow sun) ஆகஸ்ட் 2006—ல் வெளியானது. அவரது சிறுகதைகளின் தொகுப்பு 'The thing around your neck' 2009ல் வெளியிடப்பட்டது. திருமணமான சிமாமண்டா, தற்போது நைஜீரியாவிலும் அமெரிக்காவிலுமாக வாழ்ந்து வருகிறார். அவரது மூன்றாவது நாவல் 2013—ல் வெளியாகியுள்ளது.

ரத்தமும் ஒயினும் கலந்த மார்க்வெஸின் பேனா மை

தாரன் ஆனா



உண்மையான ஓவியமொன்று இரத்தத்தைப்போல உயிரணுவைப்போல் தசையிலிருந்து (guts) வரவேண்டும் என்பதாய் மரியா வர்கஸ் யோசாவின் சொர்க்கத்திற்கான பாதை (Way to Paradise) நாவலில் ஒரு வரி வரும். லத்தீன அமெரிக்க இலக்கிய எழுச்சியின் முக்கிய ஆளுமைகளான மார்க்வெஸ், யோசா, புயன்டஸ், ஹூலியோ கொர்த்தஸார் போன்றோரின் படைப்புக்களை வாசிக்கையில் அவர்களுடைய எழுத்துக்களுங்கூட தசையிலிருந்து தோன்றியவையாகவே உணர்கிறேன். நினைவு மற்றும் புனைவாக்கத் தளங்களில் இயங்கிய போர்ஹேஸை இவர்களிடமிருந்து வேறுபட்டவராகச் சொல்லலாம். இவர்களைத் தவிர்த்து இவான் ருல்போ, அலேஹோ கார்ப்பெந்தியார், இவான் கார்லோஸ் ஒன்னெட்டி, இஸபெல்லா ஆலண்டே ஆகியோரை உள்ளிட்ட இன்னொரு நீண்ட வரிசையும் இருக்கிறது.

ஸ்பானிய மொழியில் பைபிளுக்கு அடுத்து அதிகம் விற்பனையாகியிருககும் நூலாக சொல்லப்படுவதும் மாய யதார்த்தவாத கதை சொல்லல்முறையை ஒரு சமயமரபளவிற்கு உயர்த்திய நாவலுமான தனிமையின் நூறு ஆண்டுகள்(**one hundred years of solitude**) தான் நான் முதன்முதலில் வாசித்த மார்க்வெஸின் நாவல். மாற்று

டதாரத்தத்தின நிலவெளியை அறிமுகப்படுத்திய அந்நாவல் கொடுத்த கிளர்ச்சியில் உடனடியாக காலரா காலத்துக் காதல் (Love in the time of chelora) மற்றும் அசதாவால் மொழியாக்கம் செய்யப்பட்டு புது எழுத்தால் வெளியிடப்பட்ட முன்கூறப்பட்ட சாவின சரித்திரம் ஆகிய நாவல்களை வாசித்தேன். அதற்குப்பின்னர் கடந்த எட்டாண்டுகளாக அவருடைய எழுத்துக்கள் எதையும் வாசித்திருக்கவில்லை. சமீபத்தில் மார்க்வெஸின பூதவுடல் மறைந்தபோது அவரைக் குறித்த ஒரு முழுமையான வாசிப்பைக் கொண்டிருக்கவில்லை என்று உணர்ந்ததின் காரணமாக மீண்டும் அவருடைய எழுத்துக்களைத் தொகுத்து வாசிக்கத் தொடங்கினேன். விமர்சனமாகவோ அறிமுகமாகவோ பாவித்துக்கொள்ளாமல் அவ்வாசிப்பனுபவத்தின் அடிப்படையிலான குறிப்புகளாகவே இக்கட்டுரையை முன்வைக்கிறேன்.

மார்க்வெஸின் படைப்புக்களில் லத்தீன அமெரிக்க நிலப்பரப்பின தோன்மங்களும் அவரது சொந்தநாடான கொலம்பியாவின் வரலாறும் ஊடுபாவியிருக்கின்றன. ஸ்பெயினிடமிருந்து 1810 ஆம் ஆண்டு சுதந்திரமடைந்த கொலம்பியா தன் விடுதலைக்குப் பின்னும் ஒரு ஸ்திரமற்ற சமூகமாகவே இருந்திருக்கிறது. காலனிய காலத்திற்குப் பின்னர் அந்நாட்டின இரண்டு பிரதான அரசியல் அணிகளான பழமைவாத மற்றும் தாராளவாதக் குழுக்களிடையே மோதலும் உள்நாட்டுப் போர்களும் தொடர்ச்சியாக நடந்திருக்கின்றன. மார்க்வெஸின தாய்வழி பாட்டனாரான நிக்கோலஸ் மார்க்வெஸ் தாராளவாதக் குழுவின் போர்ப்படையில் கர்னல அந்தஸ்தில் இருந்திருக்கிறார்.

தனிமையின் நூறு ஆண்டுகள், கேடான நேரத்தில் (In evil hour), கர்னலுக்கு யாரும் எழுதுவதில்லை (No one writes to the colonel) போன்ற மார்க்வெஸ படைப்புகளின் உள்ளோட்டங்களில் உள்நாட்டுப்போர் குறித்த சித்திரங்களைக் காண்கிறோம். மேலும் மிகச்சமீபத்தில், ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பதுகளிலும் தொண்ணூறுகளிலும் கொலம்பிய அரசாங்கத்திற்கும் போதை மருந்துக் கடத்தல் குழுக்களுக்குமிடையில் நிகழ்ந்த மோதல்களையும் வன்முறைகளையும் பின்புலமாகக் கொண்டு ஒரு கடத்தல் செய்தி (News of a kidnapping) என்ற

உண்மைச் சம்பவங்களின் அடிப்படையிலான புத்தகத்தை நாவலுக்கு இணைவைத்துச் சொல்லத்தக்க வகையில் எழுதியிருக்கிறார்.

மார்க்வெஸின் நாவல்களையும் சுயசரிதையையும் வாசிக்கையில் அவற்றிற்கிடையேயான ஒற்றுமைகளை உணர முடிந்தாலும், அவை தெள்ளத்தெளிவாக ஒரு ஒற்றைச் சொற்றொடருக்குள் அடைபட மறுத்து புகைமூட்டமாகவே இருந்தது. கரீபிய நிலப்பரப்பின் யதார்த்தம் மூர்க்கமான கற்பனைக்கு இணையானது என்று தன்னுடைய பாரிஸ் ரெவ்வியூ நேர்காணலில் அவர் கூறியிருந்ததை வாசித்தவுடன சட்டென்று அப்புகைமூட்டம் விலகியது. அவருடைய நாவல்களில் அபாரமான கற்பனைகளாகத் தோற்றமளித்தவை பலவற்றின் வேர்கள் யதார்த்தவாழ்வில் இருந்திருப்பதை அவருடைய சுயசரிதையான கதை சொல்வதற்காக வாழ்தல் (Living to tell the tale) வாசிக்கும்போது அறியமுடிந்தது.

தன் ஒன்பதாவது வயதுவரை அரக்கட்டாக்காவிலுள்ள பாட்டனார் வீட்டில் முழுக்கவும் பெண்கள் சூழ்ந்த சூழலில் பாட்டியின் அபாரமான கற்பனைகள் கொண்ட கதைகளைக் கேட்டவாறு மார்க்வெஸ வளர்ந்திருக்கிறார். சிறுவனான மார்க்வெஸூம் பாட்டனாரும் மட்டுமே அவ்வீட்டில் ஆண்கள். தனிமையின் நூறு ஆண்டுகள் நாவலில் அரகட்டாக்கா மெக்கண்டோவாகவும் பாட்டனார் நிக்கோலஸ், ஜோஸ் ஆர்கோடியா புயந்தியாவாகவும் பாட்டி டிரான்குலினா இகுரான் ஊர்சுலாவாகவும் உருமாற்றம் பெறுகிறார்கள். ஜோஸ் ஆர்கோடியா புயந்தியாவின் இளைய மகனான கர்னல் அரேலினா புயந்தியாவையும் பாட்டனார் நிக்கோலஸின் ஆளுமையைக் கொண்டே உருவாக்கியிருக்கிறார் மார்க்வெஸ். தன்மானத்தின் பொருட்டான துவந்த மோதலில் புருடென்சியோ அகுலியாரை கொல்லும் ஜோஸ் ஆர்கோடியா புயந்தியாவுக்கு ஏற்படும் குற்றவுணர்வு, கர்னல் அரேலினா புயந்தியாவின் மகன்களான பதினேழு அரேலினாக்களைப் பற்றிய விவரிப்புகள் போன்றவையும் பாட்டனார் நிக்கோலஸின் வாழ்க்கைச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டவையே. மார்க்வெஸின் இளைய சகோதரிகளில் ஒருவருக்கு இருந்த மண் உண்ணும் பழக்கம் நாவலில்

ரிபேக்காவுடையதாக மாறியிருக்கிறது.

மார்க்வெஸுடைய பெற்றோரின் காதல்தான், காலரா காலத்துக் காதல்(Love in the time of Cholera) நாவலில் ப்ளோரிண்டினா அரிசா மற்றும் பெர்மினா டாசாவுக்கிடையேயான இளமைக்காலக் காதல் சித்திரங்களுக்கான பின்னணியை அளித்திருக்கிறது. உள்நாட்டுப் போரில் தாராளவாத அணியில் போரிட்டவர்களுக்கு ஓய்வூதியம் அளிக்கும் சட்டம் கொலம்பிய அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்டாலும் அரசாங்க எந்திரத்தின் சிக்கல்களால் நிக்கோலஸ் உள்ளிட்டவர்களுக்கு அதன் பயன் வந்துசேர்வதில்லை. இதைப் பின்னணியாகக் கொண்டு கர்னலுக்கு யாரும் எழுதுவதில்லை குறுநாவலை எழுதியிருக்கிறார். மார்க்வெஸின் குடும்பம் சுக்ரே நகரத்தில் வசித்தபோது அங்கே பொய்யாக உருவாக்கி பரப்பப்பட்ட வதந்திகளால் நகரத்து மக்களிடையே ஏற்படும் சமூக குழப்பங்களையும் உறவுச்சிக்கல்களையும் அடிப்படையாக வைத்து எழுதப்பட்டதுதான் கேடான நேரத்தில் நாவல். தன் எழுத்துக்கள் அத்தனையுமே யதார்த்தத்திலிருந்து கிளைத்தவையாக மார்க்வெஸ் குறிப்பிடுகிறார்.

மார்க்வெஸின் சுயசரிதையிலிருந்தும் நாவல்களிலிருந்தும் நான் உணர்ந்த மற்றொரு முக்கியமான விஷயம் லத்தீன் அமெரிக்க ஆண்களின் கட்டற்ற பாலியல் துய்ப்பும் அவற்றின் மீதான பெண்களின் சகிப்புத்தன்மையும். தன் கணவர் நிக்கோலஸிற்கு போர்க்காலகட்டத்தில் பிற பெண்களுடன் ஏற்படும் உறவில் பிறக்கும் குழந்தைளையும் தன் குழந்தைகளாக மார்க்வெஸின் பாட்டி ஏற்றுக்கொள்கிறார். மார்க்வெஸின் தந்தையாரும் சுதந்திரமான பாலியல் நடத்தையுடையவராக இருந்திருக்கிறார். மூத்த மகன் மார்க்வெஸோடு சேர்த்து மொத்தம் பதினொரு குழந்தைகளைப் பெற்றெடுத்த அவருடைய தாயார் தன் கணவருக்கும் பிற பெண்களுக்குமான உறவில் பிறந்த குழந்தைகளையும் தன் குழந்தைகளாகவே ஏற்றுக்கொள்கிறார்.

மருந்துக்கடை நடத்துபவரான தந்தையார் பாக்கி வரவேண்டிய மருந்துப்பணத்தை வசூலித்து வரச்சொல்லி பின்பதின்ம வயதிலிருக்கும் மார்க்வெஸை பரத்தையர் குடியிருப்புக்கு அனுப்பியபோது அங்கே நிகழ்ந்த தன் முதல்




புணர்ச்சி, ஏற்கனவே திருமணமான பெண்ணுடன் ஏற்படும் தொடர்பு, அவளுடன் படுக்கையிலிருக்கையில் அவள் கணவனிடம் அகப்பட்டுவிடும் ஒரு தருணம், தன் உடலில் படிந்திருக்கும் விலைமாதுவின் வாசனையைக் கண்டறிந்துவிடும் தாயார் பாலியல் நடத்தையில் தன் கணவனைப் போலவே மகன் மார்க்வெஸும் இருப்பதாக வருத்தப்படுவது, இளம் எழுத்தாளனாக கொலம்பிய நகரங்களில் அலைநத காலத்தில் பாலியல் தொழிலாளர்களுடனான ஏற்படும் நட்பு, வறுமையின் காரணமாக ஒருநாள் அவர்களிடம் குளியல் சோப் இரவல் வாங்கியது போன்றவற்றையெல்லாம் ஒரு புனைவாகவே தோற்றமளிக்குமளவிற்கு தன் சுயசரிதையில் எழுதியிருக்கிறார் மார்க்வெஸ். பரத்தையரைப் பற்றிய மார்க்வெஸின் எழுத்துக்கள் கனிவு கூடியவை என்றே நான் நம்புகிறேன். காமத்தைத் தணிக்கும் வெறும் உயிர் எந்திரங்களாக அவர்களைச் சித்திரிக்காமல் தாய்மையுணர்வு கூடியவர்களாகவும் கள்ளமற்ற புனித ஆன்மாக்களாகவும் நிராகரிக்கப்பட்ட காதலோடு திரியும் ஆண்களின் உக்கிரமான வெப்பத்தை உறிஞ்சித் தணிவிக்கும் ஈரநிலமாகவும் சொல்லப்பட்டிருக்கிறார்கள்.

ஆண்களின் எல்லையற்ற பாலியல் சுதந்திரத்தின் பிரதிபலிப்பை என் துயரார்ந்த பரத்தையர்களின் நினைவுகள் (Memories of my meloncholy whores) நாவலின் பெயரற்ற மையக்கதாப்பாத்திரத்திலும் காலரா காலத்துக் காதல் நாவலின் ப்ளோரிண்டினோ அரிசா பாத்திரத்திலும்

பார்க்கிறோம் நூற்றுக்கணக்கான பெண்களுடன் உடலுறவு கொள்ளும் இந்த இருவருக்குமிடையேயான ஒரு சுவாரசியமான வேறுபாடாக என் துயரார்ந்த பரத்தையர்களின் நினைவுகள் நாயகன் தான் உடலுறவு கொள்ளும் பெண்கள் அத்தனை பேருக்கும் பணம் கொடுப்பதை கட்டாய வழக்கமாக வைத்திருப்பதையும் மாறாக ப்ளோரிண்டினோ அரிசா தன் எண்ணற்ற புணர்ச்சிகளை பெண்களுடன் நட்பை உருவாக்குவதின் மூலம் நிகழ்த்திக்கொள்வதையும் சொல்லலாம். மார்க்வெஸ்ஸின் கதாபாத்திரங்களில் எல்லையற்ற இன்பநுகர்ச்சி கொண்ட ஒரே பெண் பாத்திரமாக நான் காண்பது காதலும் ஏனைய பேய்களும் (of love and other demons) நாவலில் வரும் பெர்னார்டா காப்ரியா பாத்திரத்தை மட்டுமே அதனைத் தவிர்த்து அவருடைய பிரதான பெண்பாத்திரங்கள் பலர் காதலுறுதி கொண்டவர்களாகவே இருக்கிறார்கள். காலரா காலத்துக் காதல் நாவலில் தன் கணவர் இவானுல் அர்பினோவிற்கு வேறொரு பெண்ணுடன் ஏற்படும் உறவின் காரணமாக பெர்மினா டாசா அவரை விட்டுப் பிரிந்து போனாலும் இவானுல் அர்பினோவின் மன்னிப்புக் கோரலோடு அப்பிரிவு தற்காலிகமானதாக மாறிவிடுகிறது.

ஆயினும் என் துயரார்ந்த பரத்தையர்களின் நினைவுகள் மற்றும் காலரா காலத்துக் காதல் ஆகிய இரு நாவல்களும் பேசும் ஆதாரமான விஷயம் காமம் அல்ல. காதல்தான் முன்னது வயோதிகத்தில் மலரும் காதலைப் பற்றியும் பின்னது நீண்ட வாழ்வைக் கடந்த பின்னும் மங்காத இளம்பருவத்துக் காதலின் நித்யத்தன்மையைப் பற்றியும் பேசுகின்றன. இரண்டு கதைகளிலும் பொது அம்சமாக காதலின் பிரிவாற்றாமையும் உடலின் ஒவ்வொரு அணுவிலும் உணரப்படும் அதன் வலியும் இருக்கின்றன. ஆனாலும் இறுதியில் அப்பிரிவாற்றாமையின் ஏக்கத்தைத் தீர்த்துவைத்து அக்காதல்கள் கோரும் நீதியையும் மார்க்வெஸ் வழங்கிவிடுகிறார். இதற்கு மாறாக காதலும் ஏனைய பேய்களும் நாவலில் சொல்லப்படும் காதலுக்கு ஒரு துயரார்ந்த முடிவு நேர்கிறது. தனிமையின் நூறு ஆண்டுகள் நாவலில் அமரந்தா மற்றும் ரிபேக்கா இருவராலும் காதலிக்கப்பட்டபோதும் அவர்களில் ஒருவரைக்கூட அடையவியலாமல் தற்கொலை செய்துகொள்கிறான்



பியூட்ரோ க்ரெஸ்பி. காதலைப் பற்றிய எழுத்துக்களில் மார்க்வெஸின் ஆளுமைச்சிறப்பு நமக்குத் தனித்துக் கட்புலனாவதை எளிதாக உணரலாம். காதலுணர்ச்சியே தோன்றாமல் தன் வாழ்நாள் முழுக்கவும் காமம் சார்ந்த தேவைகளை பரத்தையர்களின் மூலமே நிறைவேற்றிக்கொண்ட பத்தி எழுத்தாளனும் லத்தீன், ஸ்பானிய மொழிகளை போதிப்பவனுமான நாயகன் தன் தொண்ணூறாவது பிறந்தநாளுக்கு ஒரு கன்னிப்பெண்ணை தனக்குத் தானே பரிசளித்துக்கொள்ள விரும்பி பரத்தையர் விடுதியின் தலைவியை தொலைபேசியில் அழைப்பதிலிருந்து தொடங்குகிறது என் துயரார்ந்த பரத்தையர்களின் நினைவுகள் நாவல். குடும்ப வறுமையின் காரணமாக இதற்கு ஒப்பும் இளம் கன்னிப்பெண்ணின் உடலுறவு குறித்த அச்சத்தைத் தவிர்க்கும் பொருட்டு அவளுக்கு உறக்கமருந்து கொடுத்து உறங்கவைக்கிறாள் விடுதித்தலைவி. ஆயினும் அப்பெண்ணோடு உடலுறவு கொள்ளாமல் அவள் உறக்கத்தை மட்டும் ரசித்துவிட்டு திரும்புகிறான் நாயகன். அதற்குப் பின்வரும் நாட்களில் விடுதித்தலைவியின் உதவியோடு ஒவ்வொரு இரவிலும் அவளோடு வெறுமனே உறங்குவதின் மூலம் வாழ்க்கையில் முதன்முதலாக காதல் அளிக்கும் நிம்மதியையும் மகிழ்ச்சியையும் கண்டடைகிறான். ஒரு கொலைச்சம்பவம் காரணமாக விடுதி மூடப்பட்டுவிட விடுதித்தலைவியை தொடர்புகொள்ள முடியாமலும், இளம்பெண்ணைக் காணவியலாமலும் காதலின் உக்கிரமான வேதனையில் தவித்து இறுதியில் அவளை மீண்டும்

கனடடைவதோடு நாவல் முடிகிறது. இந்தக் குறுநாவலை வாசிக்கும்போது நபகோவின் லோலிதா மற்றும் யசுனாரி கவாபட்டாவின் தூங்கும் அழகிகள் இல்லம் ஆகிய நாவல்கள் நினைவிற்கு வந்தன. தூங்கும் அழகிகள் இல்லம் நாவலின் வரிகளை மேற்கோளாகக் கொண்டுதான் நாவலைத் தொடங்கியுள்ளார் மார்க்வெஸ். Nymphet என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் ஒரு தளிரிளம்பெண் நாயகனின் காதலுக்குரிய பெண் கதாப்பாத்திரமாக இருப்பதே எனக்கு லோலிதாவை நினைவூட்டியது.

காலரா காலத்து காதல் நாவலிலோ இளமையில் உக்கிரத்தோடு காதலிக்கும் ப்ளோரென்டினோ அரிசா மற்றும் ஃபெர்மினா டாசாவின் உறவை முறிப்பதற்காக மகளை தன் சொந்த நிலத்திற்கு அழைத்துப்போகிறார் ஃபெர்மினாவின் தந்தை. ஆனாலும் தந்தி அலுவலகத்தில் பணிபுரிபவரான ப்ளோரென்டினோவும் பெர்மினாவும் தந்திகளின் மூலம் தொடர்பை பேணுகிறார்கள். சிறிய கால இடைவெளிக்குப் பின் பயணம் தரும் அனுபவங்களோடு முதிர்ந்தவளாகத் திரும்பும் ஃபெர்மினா இன்னும் அதே வெகுளித்தனத்தோடும் காதல் பித்தோடும் இருக்கும் ப்ளோரென்டினோவைத் திரும்பக் கண்ணுறும் கணத்தில் அவர்களுடைய காதல் வெறும் மாயையாகவும் வயதின் தற்காலிக மோகமாகவும் தோன்றிவிடுவதால் அவனை நிராகரிக்கும் கணத்தில் தொடங்குகிறது அவனுடைய மிக நீண்ட காத்திருப்பு.

இளம் ப்ளோரென்டினோவின் காதல் பித்தானதாகவும் உயிர் நிரம்பித் ததும்பும் தன்மை கொண்டதாகவும் இருக்கிறது. காதலின் வேட்கை அவனை நோயுற வைக்கிறது. கவிதைகளோடு வாழவைக்கிறது. தன் காதலை மீண்டும் அவளிடம் வலியுறுத்த அவள் கணவரான டாக்டர் இவானுல் அர்பினோ இறக்கும் வரைக்குமான ஐம்பது ஆண்டுகள் ஒன்பது மாதங்கள் மற்றும் நான்கு நாட்கள் அவன் நம்பிக்கையோடு காத்திருக்கிறான். தனக்குள் பொங்கும் காதலின் அபரிமிதமான வேட்கையைத் தணித்துக்கொள்ள அவன் நகரத்துக் காதலர்களுக்கு காதல் கடிதங்கள் எழுதிக் கொடுக்கிறான். தன் காதலிக்கு கடிதம் எழுதித்தரச்சொல்லி கேட்கும் காதலன் மற்றும் அதே காதலனுக்கு கடிதம் எழுதித்தரச் சொல்லி கேட்கும் காதலி ஆகிய இருவருக்குமே ஆணாகவும் பெண்ணாகவும் மாறி




கடிதங்கள் எழுதிக்கொடுத்து அவர்களின் வாழ்வு இணையவும் துணையாகிறது ப்ளோரிண்டினோவின் உக்கிரமான காதல்.


ஃபெர்மினாவின் மீதான ப்ளோரிண்டினோவின் இதயகாதல் பிற பெண்களோடான காமத்துய்ப்புக்கு இடையூறாக இருப்பதில்லை. மார்க்வெஸ் நாவல்களில் அதீத பாலியல் துய்ப்புள்ள பாத்திரங்களான ப்ளோரிண்டினோவும் என் துயரார்ந்த பரத்தையர்களின் நினைவுகள் நாயகனும் திருமணம் என்னும் சமூக உறவிற்கு வெளியே இருப்பவர்களாக சித்தரிக்கப்பட்டிருப்பதை கவனிக்கவேண்டும். மாறாக கணவன் என்ற அங்கீகரிக்கப்பட்ட உறவிற்குள்ளிருக்கும் இவானுல் அர்பினோ ஃபெர்மினாவிற்கு இழைக்கும் துரோகத்திற்கான குற்றவுணர்வை அனுபவிப்பதையும் கவனிக்கவேண்டும். ஃபெர்மினாவும் இவானுல் அர்பினோவும் சமூகத்திற்கு வெற்றிகரமான தம்பதிகளாக தோற்றமளித்தாலும் தங்களுடைய நீண்டகால திருமண வாழ்வில் மன ஆழங்களில் பல கசப்புகளைக் கொண்டவர்களாகவே வாழ்கிறார்கள். நல்ல திருமண வாழ்வின் மிக முக்கியமான அம்சம் மகிழ்ச்சியல்ல, அதன் ஸ்திரத்தன்மைதான் என்று இவானுல் அர்பினோவின் கூற்றாக நாவலில் சொல்லப்படும் ஒரு வரி அவர்களுடைய திருமண வாழ்வை மிகச்சரியாக சித்தரிக்கும் வாக்கியமாகும். இவானுல் அர்பினோவின் கோணத்தில் தொடங்கும் நாவல் பின் மெல்ல மெல்ல ஃபெர்மினா மற்றும் ப்ளோரிண்டினோவின் கோணங்களுக்கு மாறுகிறது. இருபது

வயதில் தான் நிராகரித்த ப்ளோரிண்டினோவின் காதலை எழுபத்திரண்டு வயதில் கணவரின் இறப்பிற்கு பின்னர் பெர்மினா ஏற்றுக்கொள்வதற்கான தர்க்கத்தை மிகச்சரியாக நிறுவியிருக்கிறார் மார்க்வெஸ்.

காலரா காலத்துக் காதல் நாவலின் பெண் கதாப்பாத்திரங்களில் ஒன்றான அமெரிக்கானா விக்கானா, என் துயராந்த பரத்தையர்களின் நினைவுகள் நாவலின் தெல்கதினா வரிசையில் மார்க்வெஸின் இன்னொரு குறிப்பிடத்தகுந்த தளிரிளம்பெண் பாத்திரப்படைப்பு காதலும் ஏனைய பேய்களும் நாயகியான செர்வா மரியா. 1949 ஆம் ஆண்டில் ஐந்து நட்சத்திர விடுதி கட்டப்படுவதற்காக சாண்ட்டா க்ளாரா கன்னிமாடத்தின் கல்லறைகள் இடிக்கப்படுகையில் அங்கே புதைக்கப்பட்டிருக்கும் செர்வா மரியாவின் தாமிர நிறக்கூந்தல் அவளுடைய மரணத்திற்கு பின்னும் வளர்ந்துகொண்டிருந்தது கண்டுபிடிக்கப்படுகிறது. இருநூறு ஆண்டுகளுக்கும் முற்பட்ட தொல்கதையான செர்வா மரியாவின் வாழ்வை நாவலாக்கியிருக்கிறார் மார்க்வெஸ்.



கிறிஸ்துவ மிஷனரிகளின் ஆதிக்கம் மிகுந்த காலனிய காலத்தில் இக்கதை நிகழ்கிறது. உடல் சார்ந்த இன்பநுகர்வுக்கு தன்னை முழுமையாக ஒப்புக்கொடுத்துவிட்ட தாய் பெர்னாண்டா காப்ரியா மற்றும் உட்சுருங்கிய குணமுடைய தந்தை மார்க்குயூஸால் முறையாக அன்பு செலுத்தப்படாமல் அடிமைப் பெண்களால் வளர்க்கப்படும் செர்வா மரியாவிற்கு



அவளுடைய பனிரெண்டாவது பிறந்தநாளில் வெறிநாய்க்கடி விபத்து ஏற்படுகிறது. சற்றே மூர்க்கமான குணமுடைய செர்வாவிற்கு யதார்த்தத்தில் நோய்தொற்று எதுவும் இல்லையென்று புத்தறிவைக் கற்பதில் வேட்கையுடையவரும் அதன் பொருட்டு மதவிலக்கம் செய்யப்பட்டவருமான மருத்துவர் அப்ரனன்சியோ உறுதிப்படுத்தினாலும் செர்வாவை பேய் பீடித்திருப்பதாக சூழலும் சம்பவங்களும் பிறரை நம்பவைக்கின்றன. பிஷப்பின் வற்புறுத்தலால் கன்னிமாடத்தில் தனிமைப்படுத்தப்படுகிறாள் செர்வா. அவளைப் பீடித்திருக்கும் பேய்களை விரட்டி குணப்படுத்தும் பொறுப்பை தன் நம்பிக்கைக்குரிய நூலகரான கயாத்தானோ டெலுராவிற்கு பிஷப் கையளிக்க கயத்தானோவோ செர்வாவுடன் காதல்வயப்படுகிறார். அக்குற்றத்திற்குத் தண்டனையாக தொழுநோய் மருத்துவமனையில் கயத்தோனாவை பணிபுரிய உத்தரவிடுகிறார் பிஷப். ஆனால் காதலின் உந்துதலில் தினமும் இரவில் கன்னிமாடத்தின் ரகசிய சுரங்கப்பாதை வழியே செர்வாவின் தனிமையறைக்கு கயத்தோனா சென்றுவருகிறார். இறுதியில் அச்சுரங்கப்பாதை கண்டுபிடிக்கப்பட்டு அடைக்கப்பட்டுவிட இருவரும் தனிமைப்படுத்தப்படுகிறார்கள். உணவெடுக்க மறுத்து தன் மரணத்தைத் தேடிக்கொள்ளும் செர்வாவின் சிரைக்கப்பட்ட தலையிலிருந்து தாமிரநிறக் கூந்தல் வளரத்தொடங்குகிறது. காதலையும் ஒரு பேயாக கருதும் மதத்தின் பழமைவாத நோக்கிற்கும் தர்க்க அறிவிற்குமிடையேயான

முரண்பாடுகளைப் பேசுவதோடல்லாமல் காலனிய காலத்தின் அமெரிக்கா குறித்தவொரு சித்திரத்தையும் அளிக்கிறது இந்நாவல்.

தன் சிறுவயதில் தேவலாயத்தில் சேவை செய்திருக்கிறார் மார்க்வெஸ். பாவமன்னிப்பு சடங்கின் போது சிறுவனான மார்க்வெஸிடம் பாதிரியார் ஒவ்வொரு பாவமாக வரிசையாக சொல்லி நீ இதைச் செய்திருக்கிறாயா என்று கேட்டிருக்கிறார். அதுவரை அந்தப் பாவங்களைப் பற்றி எதுவுமே தெரிந்திராத தான் பாதிரியாரின் கேள்விகளின் மூலமே அவற்றை அறிந்துகொண்டதாக நகைச்சுவையாக தன் சுயசரிதையில் குறிப்பிடுபவர் அன்றைய காலகட்ட கிறிஸ்துவ தேவாலயங்களின் செயல்பாடு, முதிய பாதிரியார்களின் வயோதிகத் தனிமை, முன்னிரவில் திரைப்படக்காட்சிகளுக்கான தணிக்கையை வெவ்வேறு எண்ணிக்கையுள்ள மணியோசைகளின் மூலம் மக்களுக்கு அறிவிக்கும் வழக்கம் போன்ற மதம்சார்ந்த உலகத்தை தனிமையின் நூறு ஆண்டுகள், காதலும் ஏனைய பேய்களும், கேடான நேரத்தில், முன் கூறப்பட்ட சாவின் சரித்திரம் போன்ற நாவல்களில் மிக நுட்பமாக விவரித்திருக்கிறார்.



மார்க்வெஸின் பெரும்பாலான நாவல்களில் கதை நிகழ்வது மகதலேனா நதியை ஒட்டிய நிலப்பரப்பாக இருக்கும். மேலும் அந்நிலப்பரப்பின் அதீத வெப்பநிலை மற்றும் அதன் காரணமாக உருவான சியஸ்டா எனப்படும் மதியத்தூக்கம், திடீர் மழைப்பொழிவுகள், அக்டோபர் மாதக்குளிர் என்று இயற்கை சார்ந்த பின்புல வரைபடத்தை பல நாவல்களில் காணலாம். மேலும்




அவருடைய நாவல்களில் சிலவற்றிலேயே ஒரிரு பிரதானமையக் கதாப்பாத்திரங்களின் மூலம் கதையை நகர்த்தும் உத்தியைப் பயன்படுத்தியிருக்கிறார். பல நாவல்கள் குழுக்களின் கதைகளாகவோ அல்லது பல பிரதானக் கதாப்பாத்திரங்களைக் கொண்டவையாகவோ இருக்கின்றன. தனிமையின் நூறு ஆண்டுகள், கேடான நேரத்தில், காதலும் ஏனைய பேய்களும் போன்ற நாவல்களை இதற்கு உதாரணங்கள். இவற்றோடு ஒரு வட்டக் கதைசொல்லல் (Circular Narrative) முறையைக் கொண்ட முன்கூறப்பட்ட சாவின் சரித்திரம் நாவலையும் சேர்த்துக்கொள்ளலாம்.

ஏஞ்சலா விக்காரியாவிற்கும் பயார்டோ சான் ரொமானுக்கும் திருமணம் முடிந்த கொண்டாட்டமான இரவில், தனிவீட்டிறகுச் சென்ற சில மணிநேரங்களிலேயே ஏஞ்சலா கன்னித்தன்மையை இழந்தவளென்று சொல்லி அவளைக் கொண்டுவந்து திரும்பவும் பெற்றோரிடம் ஒப்படைத்துவிடுகிறான் பயார்டோ. இந்த அவமானத்தின் காரணமாக மிகுந்த கோபமடையும் ஆஞ்சலாவின் சகோதரர்கள் அவள் கன்னித்தன்மை இழப்பிற்கு காரணமானவன் யாரென்று கேட்கும்போது அவள் சாண்டியாகோ நாசரின் பெயரைச் சொல்கிறாள். கொண்டாட்டங்கள் முடிந்த பின்னிரவில் தன் வீட்டிற்குச் சென்றுவிட்ட சாண்டியாகோ நாசர் காலையில் வெளியே வரும்போது அவனைக் கொல்ல விக்காரியா சகோதரர்கள் காத்திருக்கும் தகவல் விடிவதற்குள் நகரமக்கள் பலருக்குத் தெரிந்துவிடுகிறது. அதைத் தடுக்கவும் சாண்டியாகோ நாசரை எச்சரிக்கைப்படுத்தவுமான எல்லா முயற்சிகளும் தோல்வியடைகின்றன. காலையில் படகில் நகரைக்

கடந்துபோகும் பிஷப்பைத் தரிசிக்க ஆற்றங்கரைக்கு சென்றுவிட்டுத் திரும்பும் சாண்டியாகோ நாசர் தன் வருங்கால மனைவியின் வீட்டிலிருக்கையில் விக்காரியோ சகோதரர்கள் தன்னைக் கொல்லக் காத்திருக்கும் செய்தியை தெரிந்துகொள்கிறான். அங்கேயே பதுங்கச்சொல்லும் தன் வருங்கால மாமனாரின் ஆலோசனையை மீறியும் அவர் எடுத்துப்போகச்சொல்லும் துப்பாக்கியை ஏற்க மறுத்தும் துணிச்சலோடு வெளியே வருபவன் நகரின் பிரதான சதுக்கத்தில் விக்காரியா சகோதரர்களைக் காணும்போது ஒருவித குழப்பமிகுந்த அச்சத்திற்கு ஆட்பட்டு நிலைகுலைய விக்காரியா சகோதரர்களால் அக்காலைநேரத்தில் தன்னுடைய வீட்டு வாசலிலேயே சாண்டியாகோ நாசர் கொல்லப்படுகிறான்.

விதியைப் பார்வை இந்நாவலின் மையப்பண்பாக இயங்கிருப்பதைக் காணலாம். விதியில் நம்பிக்கையற்றவர்கள் இந்தக் கதையில் நிகழும் தொடர் தற்செயல்களின் ஒழுங்கை அவதானிக்கலாம். மேலும் ஏஞ்சலா விக்காரியோவின் கன்னித்தன்மை இழப்பிற்கு உண்மையில் சாண்டியாகோ நாசர்தான் காரணமென்று நாவலில் எங்குமே நிறுவப்படாமல் விட்டிருப்பதன் மூலம் வாழ்வின் அபத்த அவலம் சுட்டப்படுகிறது. சாண்டியாகோ நாசரின் கொலையைத் தவிர்ப்பதற்கான வாய்ப்புகள் எப்படி தற்செயலான சம்பவங்களின் மூலம் நிறைவேறாமல் போகின்றன என்பதை மார்க்வெஸின் பிரமாதமான விவரிப்பு விளக்குகிறது. மிகச்சமீபத்தில் சவுதி அரேபியாவில் தன் மனைவி கன்னியாக இல்லையென்று திருமணமான தினத்திலேயே கணவன் திருப்பி அனுப்பிய செய்தியொன்றை வாசிக்கையில் இந்த நாவல் நினைவிற்கு வந்தது. ஒரு பத்திரிகையாளனின்





ஆகச்சிறந்த ஆற்றலான செய்தியை வழங்கும் உத்தியில் புனைவாக்கப் பட்டிருக்கிறது இந்நாவல்.

காப்காவின் உருமாற்றத்தை வாசித்தவுடன் அதன் பாதிப்பில் தன் முதல் சிறுகதையை எழுதியதாகவும் அப்போதைய தன் கதைகள் அறிவுப் பூர்வமானதாகவும் வாழ்க்கையோடு தொடர்பற்றிருந்ததாகவும் மார்க்வெஸ் சொல்கிறார். தாராளவாத கட்சியைச் சேர்ந்தவரும் கொலம்பியாவின் அடுத்த அதிபராவதற்கான பிரகாசமான வாய்ப்புகளைக் கொண்டிருந்தவருமான கெய்டன் 1948 இல் சுட்டுக்கொல்லப்படும்போது பகோட்டா நகரத்தில் மூண்ட கலவரங்களை நேரிடையாகக் கண்ட மார்க்குவெஸ் தான் எழுதவேண்டியது அரசியல் பிரக்ஞை கூடிய வேறுவகையான எழுத்து என்பதைப் புரிந்தகொண்டதாகச் சொல்கிறார்.

தன் புதிர்வட்டப்பாதையில் தளபதி (the general in his labyrinth), குலபதியின் இலையுதிர்காலம்(The autumn of the patriarch) போன்ற நாவல்களும் ஒரு கடத்தல் செய்தி என்ற அபுனைவு நூலும் அரசியலைப் பின்னணியாகக் கொண்டவை. தென்னமேரிக்க நாடுகளின் சுதந்திரத்திற்குப் போராடியவரும் ஒரு பரந்த தென்னமேரிக்காவைக் கட்டியெழுப்பக் கனவு கண்டவருமான சிமோன் டி பொலிவார் எதிர்ப்புகளால் பதவியிலிருந்து விலகி நாட்டிலிருந்து வெளியேறும் திடடத்தோடு மகதலேனா நதிவழியே தன் உதவிக்குழுவோடு பயணிக்கிறார். தன் நினைவின் புதிர்வட்டப்பாதைக்குள் முன்னும் பின்னும் அலைவுற்றவாறு பயணிக்கும் அவருடைய நோய்மிகுந்த இறுதிநாட்களை "தன் புதிர்வட்டப்பாதையில் தளபதி"

நாவல் விவரிக்கிறது. பயணத்தினிடையே தற்காலிகமாக ஒரு தீவில் தங்கியிருக்கையில் அங்கு மற்ற நாய்களால் கடிபட்ட ஒரு நாயைக் காப்பாற்றி பொலிவாரின் உதவிக்குழுவினர் படகில் அழைத்துச்செல்வார்கள். அந்த நாய்க்கு பெயரிடக் கேட்டுக்கொள்ளப்படும்போது அவர் சற்றும் யோசிக்காமல் பொலிவார் என்று பெயரிடுவார். விடுதலையளிப்பவர் என்ற பட்டத்தைப் பெற்றவரும், தன் மதியூகத்தால் பல போர்களை வென்று சாகசங்களை நிகழ்த்தியவரும் பெண்களின் காதலுக்குரியவராகவும் விளங்கிய பொலிவார் தன் இறுதிநாட்களில் எவ்வளவு கைவிடப்பட்டவராக இருந்தார் என்பதை இந்தக் காட்சி நமக்குச் சுட்டுகிறது. தன் நண்பரும் பொலிவாரைப் பற்றியொரு நாவல் எழுத ஆராய்ச்சிகள் செய்தபின் அம்முயற்சியை கைவிட்டிருந்த எழுத்தாளருமான அல்வாரோ முயூடிஸிடமிருந்து இந்நாவலுக்கான கரு அமைப்பை இரவல் பெற்று வீழ்ச்சியின் துயரார்ந்த மனோநிலையையும் நோய்மையின் வலியையும் பிரதிபலிக்கும் வகையில் எழுதியிருக்கிறார் மார்க்வெஸ்.

டொமினிக்கன் நாட்டின் சர்வாதிகாரியான ட்ரூஜில்லோவைக் கொலைசெய்யத் திட்டப்படும் திட்டத்தை பின்புலமாகக் கொண்டு மரியா வர்கஸ் யோசா ஆட்டு விருந்து (the feast of the goat) என்றொரு நாவல் எழுதியிருக்கிறார். ட்ரூஜில்லோவைக் கொலை செய்யும் திட்டத்திற்கு அவருடைய எதிர்ப்பாளர்கள் இடும் சங்கேதப் பெயர்தான் ஆட்டு விருந்து. ரத்தமும் வன்முறையும் பரபரப்புமாய் யோசாவால் அந்நாவல் எழுதப்பட்டிருக்கையில் சர்வாதிகாரத்தைப் பற்றிய மார்க்வெஸின் எழுத்து குலபதியின் இலையுதிர்காலம் நாவலில் வேறு



பரிமாணம் கொள்கிறது. கரீபிய நிலப்பரப்பைச் சேர்ந்த பல சர்வாதிகாரிகளின் வாழ்வை இணைத்து கற்பனைக் குறியீடாக உருவாக்கப்பட்ட ஒரு நித்ய சர்வாதிகாரியைப் பற்றி சர்ரியலிசமும் மாயா யதார்த்தமும் இணைந்த நடையில் எழுதியிருக்கிறார் மார்க்குவெஸ். ஒவ்வொரு அத்தியாயமும் ஒரே பத்தியாக இடைவெளியற்று சொல்லப்பட்டிருக்கும் இந்நாவல் அதிகாரத்தின் தனிமை பற்றி பேசுவதாக மார்க்வெஸ் சொல்கிறார்.

உலகக்கோப்பைக் கால்பந்துப் போட்டியில் தவறுதலாக தன் அணிக்கே சுயகோல் போட்ட கொலம்பிய கால்பந்து வீரர் ஆந்தெரேஸ் எஸ்கோபார் சுட்டுக்கொல்லப்பட்ட செய்தியையும் போதைமருந்துக் கடத்தல் தொழிலின் மன்னனாக இருந்த பாப்லோ எஸ்கோபார் குறித்த செய்தியையும் வாசித்த மேல்நிலைப்பள்ளிக் காலத்தில் கொலம்பியா என்பது வன்முறையான சமூகம் என்றெனக்குத் தோன்றியது. போகிற போக்கில் செய்திகளாக அன்று வாசித்தவற்றின் விரிவான பின்புல வரலாற்றை ஒரு கடத்தல் செய்தி நூலின் மூலம் அறிந்துகொள்ள முடிந்தது. தேர்ந்த பத்திரிகையாளனின் நுணுக்கமும் புனைவெழுத்தாளனின் எழுத்தாற்றலும் ஒன்றுக்கொன்று முயங்கியிருக்கும் இந்த நூல் மார்க்குவெஸின் ஆளுமைக்கு இன்னொரு உதாரணம்.

எண்பதுகளின் தொடக்கத்தில் கொலம்பியாவிற்கும் அமெரிக்காவிற்குமிடையில் குற்றவாளிகளைப் பரிமாறிக்கொள்ளும் ஒப்பந்தம் கையெழுத்தாகிறது. போதைமருந்துக் கடத்தல் தொழிலால் பெற்ற அபரிமிதமான செல்வாக்கின் மூலம் தனி அரசாங்கமே நடத்தும் பாப்லோ எஸ்கோபர் உள்ளிட்டவர்களுக்கு இந்த ஒப்பந்தம் நெருக்குதலை உண்டாக்குக்கிறது. போதைமருந்துக் கடத்தல் குறித்த குற்றவரையறைகள் மற்றும் தண்டனைக் காலங்கள் பற்றிய தெளிவான நீதியமைப்பு கொலம்பியாவில் இன்னும் உருவாகாத சூழலில் தாங்கள் கைது செய்யப்பட்டால் அமெரிக்காவிடம் ஒப்படைக்கப்படுவோம் என்ற அச்சத்தால் அரசாங்கத்திற்கு நெருக்குதலை உண்டாக்கும் வகையில் அவ்வொப்பநதத்திற்கு ஆதரவாக செயல்பட்ட பல பத்திரிகையாளர்களை எஸ்கோபரின் குழுவினர் கடத்திவைத்துக்கொண்டு அரசாங்கத்துடன் பேரத்தில் ஈடுபடுகிறார்கள்.

கடத்தப்பட்டவர்களில் ஒருவரான பத்திரிகையாளர் மருஜா பக்கோன் தான் கடத்தப்பட்ட காலத்தின் அனுபவங்களை மார்க்வெஸிடம் பகிர்ந்துகொண்டு அதை ஒரு நூலாக எழுதக் கேட்டுக்கொண்டுள்ளார். புத்தகத்தை எழுதத் தொடங்கும்போதுதான் மருஜாவின் கடத்தல் சம்பவம் தனியான ஒன்றல்லவென்றும் இன்னும் பல கடத்தல்கள் இதே காரணத்திற்க்காக நிகழ்ந்திருப்பதையும் அறியும் மார்க்குவெஸ் கூடுதல் ஆராய்ச்சியும் களப்பணியுமாற்றி தான் முதலில் திட்டமிட்டிருந்த வடிவத்திலிருந்து முற்றிலும் வேறான வடிவத்திற்கு நகர்ந்திருக்கிறார். எந்தத் தரப்பையும் நல்லவராகவோ கெட்டவராகவோ சுட்டாமல் 360 பாகைக் கோணத்தில் இந்நூலை எழுதியிருக்கும் மார்க்குவெஸின் எழுத்தாற்றலை நாம் வியக்காமல் இருக்க முடியாது. இந்தப் புத்தகத்தின் மூலம் மட்டும் நீங்கள் பாப்லோ எஸ்கோபரை தெரிந்துகொள்வீர்களானால் அவரை அவ்வளவு மோசமானவராக உங்களால் உணரமுடியாது. உண்மைச் சம்பவங்களின் அடிப்படையிலானதாக இப்புத்தகம் இருந்தாலும் கடத்தலுக்குள்ளானவர்களின் உயிரச்சத்தை பேசும் இடங்களில் ஆகத்தேர்ந்த புனைவெழுத்தாளனின் ஆளுமையைக் காண்கிறோம்.



பக்க அளவில் சிறியதாயினும் அதுவெழுப்பும் மனவுணர்வுகளின் அடிப்படையில் தனிச்சிறப்பு கொண்ட ஒரு படைப்பாக கர்னலுக்கு யாரும் எழுதுவதில்லை குறுநாவலைச் சொல்லலாம். உள்நாட்டுப் போரில் மகனை இழந்து வறுமையும் பசியுமிக்க

வயோதிகத் தனிமையில் வாழும் கர்னல், அவரது மனைவி மற்றும் ஒரு சேவலை மையமாகக் கொண்டது இக்கதை. நீண்ட நெடுங்காலமாக ஓய்வூதியம் குறித்த நற்செய்தியை தினமும் எதிர்பார்த்து காத்திருக்கிறார் கர்னல். அவர் மகனால் வளர்க்கப்பட்ட, இன்னும் சிலமாதங்களில் நடக்க இருக்கின்ற சேவற்கட்டில் பரிசை வெல்லும் தகுதியுடையதாக கருதப்படுகிற அச்சேவல் அவ்வயோதிகத் தம்பதிகளுக்கு அவனை நினைவூட்டும் உயிராக இருக்கிறது.சேவற்கட்டிற்கு இன்னும் நாட்கள் பாக்கியிருக்கையில் அவர்கள் வறுமையின் அழுத்தம் கூடுகிறது. சேவலை விற்றுவிட்டால் வறுமையிலிருந்து மீளும் வழி கிடைக்குமென்றாலும் அதைச் செய்யவியலாமல் தடுமாறும் அத்தம்பதிகளோடு சேவலை வைத்து வாழ்வு ஆடும் சூதாட்டத்தை நுட்பமாக எழுதியிருக்கிறார் மார்க்வெஸ்.

என் ரசனையின் அடிப்படையில் மார்க்வெஸின் ஆகச்சுமாரான நாவலாக கேடான நேரத்தில் நாவலையும் மிகப்பிடித்தமானவைகளாக தனிமையின் நூறு ஆண்டுகள், காலரா காலத்துக் காதல், முன்கூறப்பட்ட சாவின் சரித்திரம் மற்றும் குறுநாவலான கர்னலுக்கு யாரும் எழுதுவதில்லை ஆகிய நான்கையும் சொல்வேன். அசோகமித்திரன் ஒரு பேட்டியில் தனிமையின் நூறாண்டுகளை விட தன் புதிர்வட்டப்பாதையில் தளபதி நாவலை தான் சிறந்ததாக கருதுவதாகச் சொல்லியிருந்தார். ஒவ்வொருவருக்கும் அவரவர் ரசனை, விருப்பம் மற்றும் வாசிப்பின் அடிப்படையில் சிறந்த படைப்பு என்பதற்கு வெவ்வேறு அளவுகோல்கள் இருக்கும். ஆயினும் மார்க்வெஸை வரலாற்றில் வாழவைத்த நாவல் தனிமையின் நூறு ஆண்டுகள் என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள்.

தனிமையின் நூறு ஆண்டுகளை வாசிக்கும் ஒருவர் அந்த நாவலில் பைபிளின் சாயைகள் இருப்பதை எளிதாக அறியலாம். விமர்சகரான் ஹெரால்டு ப்ளூம் தனிமையின் நூறு ஆண்டுகள் நாவலை மெக்காண்டோவின் பைபிள் என்று குறிப்பிட்டிருக்கிறார். மெல்குவாதிஸ் மற்றும் நாடோடிகளால் மெக்காண்டாவிற்கு கொண்டுவரப்படும் புதிய விஷயங்கள், காணாமல் போய் திரும்பிவரும் ஊர்சுலாவின் மூலம் ஏற்படும் வெளியுலகத் தொடர்பு, புயந்தியா குடும்பத்தின் செல்வச்செழிப்பு, போரில் ஈடுபடும்

கர்னல் அரேரோலினா புயந்தியா, போரின் முடிவு, வாழைப்பயிர் நிறுவனத்தின் வருகை, அதையொட்டிய மெக்காண்டோவின் மாற்றம், மெய்யா பொய்யா என்று நிரூபிக்கப்படாத 3400 வாழைப்பயிர் நிறுவனத் தொழிலாளர்களின் படுகொலை, நான்காண்டுகளுக்கு மேல் தொடர்ந்து பெய்யும் மழை, மெக்காண்டோவின் வீழ்ச்சி என்று ஒரு நூற்றாண்டுகால மெக்காண்டோவின் புறவரலாறு ஒரு இழையாக நீள்கிறது.

அந்தப் புற இழையின் உள்ளோட்டமாக ஜோஸ் ஆர்கோடியோ புயந்தியாவின் வித்திலிருந்து வரும் ஆறு தலைமுறைகளின் வம்ச வரலாறு நீள்கிறது. மிகமிக மெதுவாகவே நகரும் காலத்தில் ஒவ்வொரு தலைமுறையின் ஆண்களும் பெண்களும் தங்களுடைய மரணத்திற்குப் முன்பு பெருந்தனிமைக்குள் அகப்படுவதைக் கவனிக்கலாம். குறிப்பாக அமரந்தா, ரிபேக்கா, ரெமோதியாஸ் போன்ற புயந்தியா வம்சத்துப் பெண்களின் தனிமையும் மூப்படைந்த பெருங்கிழவியான ஊர்சுலாவின் இறுதிக்காலத் தனிமையும் ஆழமானவை. புதிர்மையும் ரகசியங்களும் கூடிய மனித இருப்பின் பலவகைத் தோற்றங்களை அளிக்கும் தனிமையின் நூறு ஆண்டுகள் நாவலின் ஆதார பலமாக அதன் காவியத்தன்மையைச் சொல்லலாம்.

மிகத் தவறாக புரிந்துகொள்ளப்பட்ட இலக்கியக் கோட்பாடுகளில் மிகப்பிரதானமானதாக மாய யதார்த்தவாதம் குறிப்பிடப்படுகிறது. எனினும் அக்கோட்பாட்டை அறிந்துகொள்ள விரும்பும் இன்றைய இலக்கிய மாணவனுக்கு ஏராளமான தகவல்கள் வாதப்பிரதிவாதங்களோடும் உதாரணங்களோடும் இணையத்தில் கிடைக்கின்றன. தனிமையின் நூறு ஆண்டுகள் நாவலில் நான் புரிந்துகொள்ளும் மாய யதார்த்தவாதம் என்பது தர்க்கத்தையும் யதார்த்தத்தின் எல்லைகளையும் மீறும்போது அல்லது யதார்த்தத்தோடு மாயத்தை கலக்கும்போது நமக்குப் புதிதாகக் கட்புலனாகும் வாழ்வின் கவித்துவமிக்க சாத்தியங்களைத் தரிசிப்பதாக இருக்கிறது. யதார்த்தம் செல்லமுடியாத தூரங்களுக்கு விரிவாக்கப்பட்ட யதார்த்தமான மாய யதார்த்தவாதம் நம்மை அழைத்துச்செல்கிறது.

வானிலிருந்து மஞ்சள் மலர்களாக உதிர்கின்றன என்ற யதார்த்தவாழ்வில் சாத்தியமற்ற காட்சியை ஒரு


இறப்போடு தொடர்புபடுத்துகையில் அது நமக்கு அந்த இறப்பைக் குறித்த முற்றிலும் வேறான வண்ணத்தை அளிக்கிறது. ஜோஸ் ஆர்கோடியா கொல்லப்படும்போது இரத்தம் ஒரு நூலிழையாக தெருக்கள் வீடுகள் எல்லாவற்றையும் தாண்டி ஊர்சுலாவின் காலடியில் வந்து சேர்ந்தது என்ற காட்சி ஒரு தாயின் நுண்மையான உள்ளுணர்வு மகனின் மரணத்தை உணர்கிறது என்பதாக நாம் விளங்கிக்கொள்கிறோம். ரெமோதியாஸ் உயிரோடு வானேகி மறைந்தாள் என்பதை எள்ளவும் கள்ளமற்ற, அவ்வளவு தூய்மையான பேரழகு தேவதைக்கு மனித மரணம் என்பது பொருத்தமற்றது, அவள் வானகத்தில் வைக்கப்படவேண்டியவள் என்பதாய் ஒரு வாசிப்பை வைக்கலாம். நான்காண்டுகளாகத் தொடர்ந்து பெய்யும் மழையை ஒரு தூய்மையாக்க(purge) நிகழ்வின் குறியீடாகச் சொல்லலாம். இப்படி இந்நாவலில் புழங்கிவரும் பல்வேறு மாயக்கூறுகளுக்கு நாம் வெவ்வேறு வாசிப்புகளைக் கொடுக்கலாம்.

ஒரு பத்திரிகையாளராக இருந்ததாலோ என்னவோ மார்க்குவெஸ் பல்திறன் இயல்புடையவராய் வெவ்வேறு வகைப்பட்ட நாவல்களை எழுதியிருக்கிறார். அதன் காரணமாகவே அவருடைய நாவல்களுக்குள் பொது அம்சங்களை இனங்காண்பது சிரமமாக இருக்கிறது. ஆயினும் லத்தின் அமெரிக்க அரசியல் மற்றும் கலாச்சாரம், காலனிய காலச் சித்திரங்கள், நாகரீகத்தை நோக்கிப் பயணிக்கும் சமூகத்தில் மதத்தின் செயல்பாடு, கொள்ளை நோய்களைப் பற்றிய பதிவுகள், உக்கிரமான காதலுணர்ச்சி மற்றும் எல்லையற்ற காமத்துய்ப்பு, வெப்பமிகுந்த நிலவெளி, தொன்மக் குறியீடுகள், களிமிகுந்த கொண்டாட்டங்கள் மற்றும் எதைக்கொண்டும் நிரப்பவியலாத மனிதர்களின் தனிமையுணர்ச்சி, வாழ்க்கையை வேறாகப் பார்க்க கற்றுத்தரும் மாயக்கற்பனைகள் போன்றவற்றை அவருடைய நாவல்களின் சாரமாக நான் பார்க்கிறேன். இன்னும் சுருக்கமாகச் சொல்வதென்றால் மார்க்குவெஸின் பேனா மையில் ரத்தமும் ஒயினும் கலந்திருந்தன என்று சொல்வேன். (கோவை இலக்கியச் சந்திப்பு—45 இல் வாசிக்கப்பட்ட கட்டுரை)

பின்குறிப்புகள்:—

1. கட்டுரையின் வடிவ அமைதிக்கு நாவல்களின் ஆங்கிலப்பெயர்கள் தடையாக இருந்ததால் நாவல் தலைப்புகள் தமிழாக்கப்பட்டுள்ளன. இதற்கு தன் ஆலோசனைகளை வழங்கிய அசதாவிற்கு நன்றி.

2. பாலியல் தொழிலாளர்கள் என்ற சொல்லின் தட்டைத்தன்மை காரணமாக பரத்தையர் என்ற சொல் இக்கட்டுரையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. பாலியல் தொழிலாளர்கள் என்ற அர்த்தத்தில் இச்சொல்லைக் கருதவும்.



காப்ரியேல் கார்சியா மார்க்குவெஸ்

தமிழில் சம்யுக்தா சாதனா

பழைய அழகான பகுதி, திரும்பும் இடமெல்லாம் கண்கவரும் வண்ண மெக்ஸிகோ பூக்கள், வீட்டின் பின்புறம் உள்ள சான் ஏஞ்சலோ விடுதியில் இருக்கும் அலுவலகத்தில் தான் உரையாடல்...காப்ரியேல் கார்சியா மார்க்குவெஸ் உடனான நேர்காணல்ஞ்அலுவலகம் என்பதை விட ஓவிய அறை(studio) என்று சொல்லவே விரும்புகிறேன்.. நீள் குறைந்த அக்கட்டிடத்தை பார்க்கையில் விருந்தினர் மாளிகையாக வடிவமைக்க பட்டிருக்கக்கூடும் என்று. நினைக்கிறேன் . அறையின் மூலையில் ஓர் படுக்கை , இரண்டு சாய்வு நாற்காலிகள் மேலும் சிறிய குளிர்சாதன பெட்டியுடனான தற்காலிக மது அருந்தும் அறை.

அறையின் மிகவும் முக்கியமான அம்சம் , சாய்வு நாற்காலிக்கு மேல் இருக்கும் மார்க்குவெஸின் புகைப்படமே— சாலையின் ஓரத்தில் கேப் (cape) உடை அணிந்தவாறு நிற்கும் காப்பிரியேலைப் பார்க்கையில் அந்தோனி குவினே நினைவுக்கு வருகிறார்.

அறையின் மூலையில் அமர்ந்திருந்தவர் என்னைப் பார்த்ததும் வரவேற்க மேஜையினிருந்து எழுந்தார். மிகவும் வலுவான தோற்றம், நல்ல உயரம், மத்திய குத்துச்சண்டை வீரர் போல் அகன்ற மார்பு, சற்று மெல்லிய கால்கள், பழுப்பு நிற சுருட்டைமுடி, முழு மீசை ,கார்ட்டுயுராய் கால்ச்சட்டை, டர்டிள்நெக் ஸ்வெட்டர் மற்றும் கருப்பு லெதர் பூட்ஸ் மேலும் அவருக்கே சொந்தமான சுறுசுறுப்பான மெல்லிய நடையுடன் அருகில் வந்தார்.

மார்க்குவெஸுடனான நேர்காணல் மூன்று பகுதிகளாக மூன்று மதிய வேலையில் நடைப்பெற்றது. அவரின் ஆங்கிலம் சிறப்பாக இருப்பினும் பெரும்பாலும் ஸ்பேனிஷிலே பேசினார். மொழிப்பெயர்ப்பினை மார்க்குவெஸின் மகன்கள் பகிர்ந்தனர். முன்னும் பின்னுமான நகர்வுகளுடன் கேட்கும்போது முன்னோக்கி சாய்ந்தும் , பிரதிபலிப்பாக பேசுகையில் கால் மேல் கால் போட்டு தீர்க்கமான சைகைகளுடனும் பதிலளித்தார் .

பேட்டியாளர்: ஒலிப்பதிவன் பயன்படுத்துவது குறித்து?

காப்பிரியல் கார்சியா மார்க்குவெஸ்: பிரச்சனை என்னவெனில் உங்கள் உரையாடல் பதிவு செய்யப் படுகிறது என்று தெரிந்த நொடி முதல் உரையாடல் குறித்த உங்கள் அணுகுமுறை மாறுகிறது.எல்லோரையும் போலவே பாதுகாப்பான அணுகுமுறையையே நானும் கையாள்வேன். ஒலிப்பதிவனை நேர்காணலிற்கு எவ்வாறு பயன்படுத்தவேண்டும் என்று ஒரு பத்திரிக்கையாளராக நாம் இன்னும் தெறிந்துக்கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். குறிப்பு ஏதும் எடுக்காமல் பத்திரிக்கையாளர் உரையாடல் மேற்கொள்வதையே என் மனம் விரும்புகிறது.

பேட்டியாளர்: என்னை சற்று குற்றவுணர்வில் ஆழ்த்துகிறீர்கள், எனினும் இத்தகைய உரையாடலுக்கு தேவை என்றே நினைக்கிறேன்.

மார்க்குவெஸ்: எதுவாக இருப்பினும் , நான் சொன்னதன் முழு நோக்கமும் உங்களைப் பாதுகாக்கவே.

பேட்டியாளர்: அப்படியெனில் நீங்கள் ஒலிப்பதிவனை நேர்காணலிற்கு பயன்படுத்தியதில்லையா?

மார்க்குவெஸ்: ஒரு பத்திரிக்கையாளனாக நான் பயன்படுத்தியதில்லை. நல்ல ஒலிப்பதிவன் ஒன்று என்னிடம் உள்ளது. அதை பாட்டு கேக்கவே பெரும்பாலும் பயன்படுத்துகிறேன். அறிக்கைகளுக்காக பயன்படுத்தி உள்ளேன்,ஆனால் நேர்காணலுக்காக பயன்படுத்தியதில்லை.

பேட்டியாளர்: கப்பல் விபத்தில் தப்பிய மாலுமி உடனான உங்களின் நேர்காணல் குறித்து கேள்வியுற்றேன்.

மார்க்குவெஸ்: அது வினா விடைச் சார்ந்த நேர்காணல் அல்ல. அவர் தன் பயணத்தினிடையே ஏற்பட்ட சாகசங்கள் குறித்து என்னிடம் கூறுவார். அவர் எழுதியது போலவே அவற்றை மாற்றியமைப்பேன். ஒரு நாளிற்கு இரண்டு பகுதியென்று தொடராக இக்கதை

செய்தித்தாள் ஒன்றில் வெளியிடப்பட்டபோது, இரண்டு வாரங்களுக்கு அம்மாலுமியே கையொப்பமிட்டார். இருபது வருடங்களுக்கு பிறகு மறு வெளியீட்டின்போது தான் எழுதியது நான் என்று எல்லோருக்கும் தெரியும். நான் 'ஓர் நூற்றாண்டுக்கால தனிமை' எழுதி முடிக்கும் வரையில், ஒரு ஆசிரியரும் அக்கதைகளை ஏற்றுக்கொள்ளவில்லை .

பேட்டியாளர்: நாம பத்திரிக்கை துறை குறித்து பேச தொடங்கியதால், உங்களிடம் இக்கேள்வியை கேட்க விரும்புகிறேன். நாவல்கள் எழுத தொடங்கியப் பின்னும் பத்திரிக்கையாளனாக இருப்பதை எப்படி உணர்கிறீர்கள்?

மார்க்குவெஸ்: சமாதானபடுத்தப்பட்ட பத்திரிக்கையாளனாக இருந்தேன் என்றே நினைக்கிறேன். வேலைச் சூழலே பத்திரிக்கை துறையில் எனக்கு மிகவும் பிடிக்காதவை. அது மட்டுமல்லாமல், என் எண்ணங்கள் மற்றும் யோசனைகளை செய்தித்தாளின் ஆர்வத்திற்கேற்ப குறுக்கிக்கொண்டு பணியாற்றவே நான் ஆளானேன். நிதி சுதந்திரம் பெற்ற நாவலாசிரியன் என்ற நிலையை அடைந்த பிறகே,என் சிந்தனைகளுக்கு உருவம் கொடுக்கும் விடுதலையை பெற்றதாக நினைக்கிறேன்.எப்படியோ .. பத்திரிக்கையாளனாக இருப்பதை மிகவும் நேசிக்கிறேன். இதழியலின் சிறந்த படைப்புகளை அனுபவிக்கத் தவறுவதில்லை.

பேட்டியாளர்: இதழியலின் சிறந்த படைப்பாக நீங்கள் கருதுவது?

மார்க்குவெஸ்: ஜான் ஹெர்ஸியின் 'ஹிரோஷிமா' மிகவும் அருமையான படைப்பாக நினைக்கிறேன்.

பேட்டியாளர்: நீங்கள் இன்றும் எழுத நினைக்கும் கதை ஏதாவது உள்ளதா?

மார்க்குவெஸ்: நிறைய உண்டு.. போர்ச்சுகல், க்யூபா, அங்கோலா பற்றி நிறைய எழுதியுள்ளேன். போலந்து குறித்து எழுத ஆர்வம் தற்போது போலந்தில் நடக்கும் நிகழ்வுகள் குறித்து துல்லியமாய் விவரிக்க விரும்புகிறேன், மேலும்

இக்கதை மிகவும் முக்கியமான ஒன்றாக இருக்கும் என்றும் நினைக்கிறேன். போலாந்தில் மிகவும் பனியாக உள்ளது என்று கேள்வி உற்றேன். தன் வசதிகள் மற்றும் இன்ப நலன்களை விரும்பும் பத்திரிக்கையாளன் நான் என்பதால் அவ்வெண்ணம் இப்போது மனதில் இல்லை.

பேட்டியாளர்: பத்திரிக்கையால் செய்ய முடியாதவற்றை நாவலால் செய்ய முடியும் என்று நினைக்கிறீர்களா?

மார்க்குவெஸ்: உண்மை என்னவெனில், பத்திரிக்கை துறையில் பொய் முழு படைப்பையும் முன்னோக்கி கொண்டுபோகும், ஆனால் அறிவியலில் ஒரு சிறிய உண்மை கூட கதையை முறையான முடிவிற்கு இழுத்துச் செல்லும். இரண்டும் எழுத்தாளனின் அர்பணிப்பை பொருத்ததே. மக்கள் நம்பும் வரை ஒரு நாவலாசிரியன் தனக்கு வேண்டிய எதை வேண்டுமானாலும் எழுதலாம்.

பேட்டியாளர்: உங்களின் முந்தைய நேர்காணல் ஒன்றில் பிரமிப்புமிக்க ஒரு பத்திரிக்கையாளனாக தோன்றினீர்கள், நாவல் எழுதுவதில் உங்களுக்கு எவ்வளவு ஆர்வம் இருந்தது அப்போது ?

மார்க்குவெஸ்: நாவல் மற்றும் பத்திரிக்கை எழுதுவதை இப்போது கடினமாக உணர்கிறேன். செய்தித்தாளிற்காக வேலை செய்த போது ஒவ்வொரு வார்த்தையையும் விழிப்புணர்வுடன் எழுதியதில்லை ஆனால் இப்போது அப்படி இல்லை. 'எல் எஸ்பெக்டேடர்'க்காக பகோட்டாவில் பணிபுரிந்த போது, வாரத்திற்கு குறைந்தது மூன்று கதைகளாவது எழுதிவிடுவேன். திரைப்பட விமர்சனங்களும் அவற்றுள் அடக்கம். இரவில் அனைவரும் வீட்டிற்கு சென்ற பிறகும் கூட நாவல் எழுதிக் கொண்டிருந்த காலமும் உண்டு. 'லினோடைப்' தட்டச்சு கருவியின் சத்தம் மிகவும் பிடிக்கும். மழைநீர் தரையை தொடும் போது ஏற்படும் சத்தத்தை போன்றது அது. அவ்வோசை நின்றுவிட்டால் எனக்கும் எழுதும் மனநிலை மாறிவிடும். ஆனால், இப்போது அப்படி இல்லை, ஒரு நல்ல வேலை நாளில் காலை 9.00 மணிக்குத் தொடங்கினால் மதியம் 2

அ 3 மணி வரை எழுதுவேன், 2 அ 3 பத்தியே எழுதியிருப்பேன் அதையும் அடுத்த நாளே கிழித்து கசக்கி எறிந்துவிடுவேன்.

பேட்டியாளர்: இம்மாற்றம் உங்கள் படைப்பிற்கு கிட்டிய பாராட்டினால் இருக்கும் என்று நினைக்கிறீர்களா இல்லை பொறுப்பினால் இருக்கும் என்று நினைக்கிறீர்களா?

மார்க்குவெஸ்: இரண்டுமே காரணமாக இருக்கும். நான் கற்பனை செய்ததை விட அதிகமான மக்களுக்காக இப்போது எழுதுகிறேன் என்ற எண்ணமே பெரிய இலக்கிய பொறுப்பை தலையில் வைத்துள்ளது. கொஞ்சம் கர்வமும் உள்ளடங்கியிருப்பதால் சீக்கிரம் கீழே விழுந்துவிட விரும்பவில்லை.

பேட்டியாளர்: எழுதுவதை எப்படி தொடங்கினீர்கள்?

மார்க்குவெஸ்: கேலிச்சித்திரம் வரைய ஆரம்பித்த காலத்திலிருந்தே தொடங்கியது. எழுத படிக்க தொடங்குவதற்கு முன்னரே பள்ளியில் காமிக்ஸ் வரைய ஆரம்பித்தேன். வேடிக்கையான விஷயம் என்னவெனில் உயர்நிலைப் பள்ளியில் நண்பர்களிடையே எழுத்தாளன் என்ற அந்தஸ்து எனக்கு இருந்தது. உண்மையில் நான் அப்போது எதுவும் எழுதியதில்லை. துண்டுப்பிரசுரமோ அல்லது மனு எழுதவேண்டும் என்றாலோ நான் தான் எழுத வேண்டும், நான் தான் எழுத்தாளனாயிற்றே. கல்லூரிக்கு சென்ற பிறகு என் நண்பர்களை ஒப்பிடும் போது போதுமான இலக்கிய பின்னணி எனக்கு இருந்தது. பகோட்டா பல்கலைக்கழகத்தில் படிக்கையில் எனக்கு நல்ல நண்பர்கள் இருந்தனர் அவர்களின் மூலம் சமகால எழுத்தாளர்களின் அறிமுகம் கிட்டியது. 'ப்ரான்ஸ் கவ்கா' வின் சிறுகதை தொகுப்பு ஒன்றினைப் நண்பனிடமிருந்து கடனாக பெற்றேன். தங்கியிருந்த இடத்திற்கு சென்று 'தி மெடமோர்ப்பிஸை' படிக்கத் தொடங்கினேன். முதல் வரியே என்னை படுக்கையிலிருந்து கீழே தள்ளியது. மிகுந்த ஆச்சரியம். முதல் வரி இவ்வாறாக இருந்தது,"அன்று காலை கிரீகோர் சம்ஸ்கா சஞ்சலமிக்க கனவுகளினின்று எழுந்த

போது பெரிய பூச்சியாக மாறியிருப்பதை உணர்ந்தார்" அவ்வரியை படித்தவுடன் இவ்வாறெல்லாம் எழுத கூட அனுமதி உண்டோ, தெரிந்திருந்தால் எப்போவோ ஆரம்பித்திருக்கலாமே என்று நினைத்தேன். அவ்விதமாய் உடனே சிறுகதைகள் எழுத தொடங்கினேன். அவை அனைத்தும் அறிவு சார் கதைகள், அவற்றை நான் என் இலக்கிய அனுபவங்களிலிருந்து எழுதினேன், வாழ்க்கைக்கும் இலக்கியத்திற்குமான தொடர்பை நான் அப்போது அறிந்திருக்கவில்லை. அக்கதைகள் 'எல் எஸ்பெக்டேடரி'ன் இலக்கிய துணைப்பக்கத்தில் வெளியிவந்தன. சொல்லிக் கொள்ளும் அளவிற்கு நல்ல ஆதரவு கிட்டியது. ஏனெனில் கொலம்பியாவில் யாரும் அறிவுசார் கதைகளை எழுத தொடங்காத காலகட்டம் அது. நகர்புற வாழ்க்கை பற்றியும் சமூக வாழ்க்கை பற்றியுமே என் கதைகள் பெரும்பாலும் இருந்தன. நான் என் முதல் சிறுகதையை எழுதியபோது ஜாய்சின் தாக்கமும் அவரின் பாணியும் இருந்ததாக பலர கூறினர்.

பேட்டியாளர்: ஜாய்சின் படைப்புகளை அப்போது படித்திருந்தீர்களா?

மார்க்குவெஸ்: நான் படித்தேயில்லை. அதனால் 'உலிசஸ்' படிக்க தொடங்கினேன். ஸ்பேனிஷ் பதிப்பே எனக்கு கிட்டியது. பல வருடங்களுக்கு பிறகு ஆங்கிலம் மற்றும் அருமையான ப்ரெஞ்சு மொழிப்பெயர்ப்பினை படித்த பின்னரே ஸ்பேனிஷ் பதிப்பு எத்துணை மோசமாக இருந்தது என்பதை உணர்ந்தேன். ஆனால் அவையே எனக்கு இலக்கிய நுணுக்கங்களை கற்றுக்கொடுத்தன. இந்த திறனை விர்ஜினியா உல்ஃப் இடம் கண்டேன். ஜாய்ஸை விட மிகவும் நேர்தியாக கையாண்டிருக்கிறார். **interior monologue** கண்டுப்பிடித்தவர் பெயர் லஜாரில்லோ டி டோர்மஸை சேர்ந்த ஓர் எழுத்தாளர்.

பேட்டியாளர்: ஆரம்ப காலங்களில் உங்களுக்கு தாக்கத்தை ஏற்படுத்தியவர்களுள் சிலரை குறிப்பிடுங்கள்.

மார்க்குவெஸ்: என்னுடைய அறிவுசார்ந்த அணுகு முறையிலிருந்து விடுபட உதவியாய் இருந்தவர்களுள் கடந்த

அமெரிக்க தலைமுறையின் எழுத்தாளர்களின் பங்கு அதிகம். இலக்கிய வாழ்வு ஏற்படுத்திக்கொடுக்கும் தொடர்பினை சிறுகதைகள் ஏற்படுத்திக் கொடுப்பதில்லை. பொகோடஜோ வில் நடந்த நிகழ்வு என் மாற்றத்திற்கு முக்கிய காரணமாக இருந்தது. ஏப்ரல் 9, 1948 அன்று அரசியல் தலைவர் கைடான் சுடப்பட்டபோது பெரும் கலவரம் நடந்தது, அப்போது மதிய உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். செய்தியை அறிந்தவுடன் அவ்விடத்தை நோக்கி ஓடினேன். ஆனால் அதற்குள் கைடானை டாக்ஸியில் கொண்டு சென்று விட்டனர். விடுதிக்கு திரும்பும் வழியில் கடைகளை சூறையாடிக் கொண்டும் கட்டிடங்களுக்கு தீ வைத்துக்கொண்டும் மக்கள் திரிந்தனர். அவர்களுடன் நானும் இணைந்தேன். அன்று மாலை தான் எத்தகைய நாட்டில் நான் வாழ்ந்துக் கொண்டிருக்கிறேன் என்பதை உணர்ந்தேன், என் சிறுகதைகள் எவ்வளவு செய்ய வேண்டியிருக்கிறது என்பதையும் உணர்ந்தேன். பின்னர் கட்டாயத்தின் பேரில் நான் குழந்தை பிராயத்தை செலவிட்ட பாரன்குவ்வில்லா விற்கு சென்றேன். அத்தகைய வாழ்க்கையினையே நான் வாழ விரும்பினேன் என்றும் அவ்விடத்தை சார்ந்த வாழ்க்கை குறித்தே நான் எழுதவும் விரும்பினேன் என்றும் புரிந்தது.

1950 —51இல் நடந்த மற்றொரு நிகழ்வு என்னுடைய இலக்கிய போக்கினை மிகவும் பாதித்தது. அம்மா என்னை அவருடன் அரகாடகா விற்கு வரச்சொன்னார். அரகாடகாவில் தான் நான் பிறந்தேன். ஐந்து வயது வரை நாங்கள் இருந்த வீட்டை விற்கவே சென்றோம். மிகவும் அதிர்ச்சியான விசயம் என்னவெனில் எனக்கு இப்போது இருபத்து இரண்டு வயது ஆகிறது எட்டு வயதில் இந்த இடத்தில் இருந்தது நினைவுக்கு வந்தது அன்று முதல் இன்று வரை எதுவும் மாரவில்லை. ஏதோ புத்தகத்தில் படித்துக் கொண்டிருப்பது போலவே இருந்தது. நான் பார்த்த அனைத்தும் ஏற்கனவே எழுதப்பட்டதாகவும், அவை அனைத்தையும் சேகரித்து எழுதப்படாத வற்றை நான் எழுதவேண்டும் என்றும் தோன்றியது. அனைத்து நடைமுறை நோக்கங்களும் இலக்கியத்தில் பரிணாமம் மேற்கொண்டுவிட்டதாகவே தோன்றுகிறது. அவற்றுள் வீடு, மக்கள், நினைவுகளும் அடக்கம். ஃபால்க்னரின்

படைப்புகளை படித்திருக்கிறேனா என்று தெரியவில்லை. ஆனால் ஃபால்க்னரின் நுட்பம் போன்ற ஒன்று நான் பார்த்ததை எழுத தூண்டியிருக்கும் என்று நினைக்கிறேன். அவ்விடத்தின் சூழல், நலிந்த நிலை அனைத்தையும் பார்க்கையில் ஃபால்க்னரின் படைப்புகளில் வருவதைப் போன்றே இருந்தது. பழச்சாறு தயாரிக்கப்படும் நிறுவனத்தைச் சார்ந்த பல அமெரிக்கர்கள் குடியேறியிருந்த வாழைத்தோட்டங்கள் தெற்கத்திய எழுத்தாளர்களின் படைப்புகளில் வருவது போன்று இருந்தன. விமர்சகர்கள் ஃபால்க்னரின் இலக்கிய தாக்கம் குறித்து பேசிய அனைத்தும் தற்செயலான ஒன்றாகவே பார்க்கிறேன். ஃபால்க்னரின் பார்வையில் ஒரு பொருள் எவ்வாறு தோன்றியதோ அதே பார்வையில் நான் கையாள்வதாக நினைக்கிறேன். விமர்சகர்களுக்கு அது தாக்கமாக தோன்றியிருக்கும்.

என்னுடைய முதல்நாவலை (இலைப்புயல்— **leafstorm**) எழுதுவதற்காக அக்கிராமத்திலிருந்து வந்தேன். சிறுவயது நிகழ்வுகளின் இலக்கிய மதிப்பினை இப்போது தான் பாராட்டுகிறேன் என்பதை அரகாடகா பயணத்திற்கு பின்னரே புரிந்துக்கொண்டேன். முதல் நாவலை எழுதி முடித்தப் பின்னர் எழுத்தாளனாக வேண்டும் என்றும் நான் எழுதுவதை யாராலும் தடுக்க முடியாதென்றும் உலகின் மிகச் சிறந்த எழுத்தாளன் ஆக முயற்சிக்கவேண்டும் என்ற எண்ணமும் ஆழமாக பதிந்தது.

1953 இல் தொடங்கியது. என்னுடைய எட்டில் ஐந்து புத்தகங்களை எழுதி முடித்தப்பின்னர் தான் 1967இல் முதல் ஆதாயவூதியத்தைப் பெற்றேன்.

பேட்டியாளர்: பிள்ளைப் பருவத்தின் மதிப்பினையும் அனுபவத்தினையும் மறுதலித்தல் இளம் எழுத்தாளர்களிடையே சாதாரணம் என்று நினைக்கிறீர்களா?

மார்க்குவெஸ்: இல்லை. நடைமுறையில் இப்போக்கு முற்றிலும் முரணாக நிகழ்கிறது. இளம் எழுத்தாளர் ஒருவற்கு ஆலோசனை அளிக்க வேண்டுமெனில் தான் அனுபவித்தவையை எழுதவே பரிந்துரைப்பேன். ஒரு எழுத்தாளன் தனக்கு நிகழ்ந்தவற்றை எழுதுகிறாரா இல்லை

எங்கேயோ கேட்டது அல்லது படித்ததை எழுதுகிறாரா என்று சொல்வது சுலபமான விஷயமே. 'பப்லோ நெருடா' தன் கவிதை ஒன்றில் "கடவுளே நான் பாடும்போது நான் கண்டுபிடிப்பதிலிருந்து தடு" என சொல்லியிருக்கிறார். வேடிக்கை என்னவென்றால் கற்பனையில் தான் எனக்கு மிகுந்த பாராட்டு கிடைக்கிறது, என் படைப்புகளில் ஒரு வரியில் கூட உண்மையின் அடிப்படை இல்லை. கரிபிய மெய்மை பயங்கரமான கற்பனையை ஒத்திருக்கிறது.

பேட்டியாளர்: யாருக்காக எழுதினீர்? உங்களின் வாசகர்கள் யாவர்?

மார்க்குவெஸ்: இலைப்புயல் (leafstorm) எனக்கு உதவியாகவும், தன் புத்தகங்களை நான் வாசிக்க கொடுத்தவர்களுக்காகவும், என் படைப்பில் மிகவும் ஆர்வம் காட்டிய என் நண்பர்களுக்காக எழுதினேன். பொதுவாகவே நாம யாரோ ஒருவற்காக எழுதுவோம். நான் எழுதும்போதே இந்நண்பருக்கு இவ்வரி பிடிக்குமென்றும் அந்நண்பருக்கு அப்பத்தி பிடிக்கும் என்று நினைத்துக் கொண்டுதான் எழுதுவேன். முடிவில், எல்லாப் புத்தகங்களும் நண்பர்களுக்காக எழுதப்பட்டவை ஆகின்றன.'ஒரு நூற்றாண்டு கால தனிமை(one hundred years of solitude)'க்குப்பின், கோடிக்கனக்கான வாசகர்களுள் யாருக்காக எழுதுகிறேன் என்று தெரியவில்லை. இப்பிரச்சனை துன்பத்தை மட்டுமல்ல எழுதுவதையும் தடுக்கிறது. கோடிக்கானவர்களின் பார்வையும் உங்கள் மீது இருக்கும் போது ஒவ்வொருவரும் என்ன நினைக்கிறார் என்று உங்களுக்கு தெரியாது.

பேட்டியாளர்: அறிவியல் மீது பத்திரிக்கைக்கு இருக்கும் தாக்கம் குறித்து உங்களின் கருத்து?

மார்க்குவெஸ்: அத்தாக்கம் பரஸ்பரமான ஒன்றாகும். அறிவியல் என் பத்திரிக்கை திறனுக்கு பெரும் உதவி செய்துள்ளது, அவையே என் பத்திரிக்கைத் திறனுக்கு இலக்கிய மதிப்பை அளித்தவை. இதழியல் என் அறிவியல் திறனுக்கு பெரும் உதவி செய்துள்ளது, அவையே என்னை நடைமுறை வாழ்க்கையுடன் ஒத்திருக்க செய்கிறது.

பேட்டியாளர்: இலைப்புயலுக்கு (leafstorm) பின்னும் ஒரு நூற்றாண்டுக்கால தனிமைக்கும் இடையே யான பாணியை தேர்ந்தெடுப்பதற்கான தேடல் பற்றி?

மார்க்குவெஸ்: இலைப்புயலுக்குப்பின், கிராமத்தை பற்றியும் சிறுவயது அனுபவங்கள் குறித்து எழுதுவதால் அரசியல் யதார்த்தத்திலிருந்து தனித்து வந்ததாக வுணர்ந்தேன். யதார்த்தங்களை எதிர்கொள்ளாமல் ஒரு வகையான ஏக்கத்தின பின் ஒளிந்துகொண்டிருக்கிறேன என்று தவறாக நினைத்தேன். இந்த காலக்கட்டத்தில தான வாழ்க்கைக்கும் இலக்கியத்திற்குமிடையான தொடர்பினை அதிகம் விவாதித்தேன். இரண்டிற்குமிடையான இடைவெளியை குறைக்க முயற்சி செய்துக் கொண்டிருந்தேன். இதற்கு முன் ஃபால்க்னரின் தாக்கம் இருந்தது.இப்போது ஹெம்மிங் வே வின் தாக்கம் அதிகரித்திருப்பதாக உணர்ந்தேன்' படைத்தலைவருக்கு யாரும் எழுதுவதில்லை', 'கெட்ட நேரத்தில்', 'பெரியம்மாவின் இறுதிச்சடங்கு' கிட்டத்தட்ட சமகாலத்தில் எழுதப்பட்டவை. மேலும் அவற்றிற்கு பொதுவான விஷயங்களும் இருந்தன. இக்கதைகள் அனைத்தும் வேற்றுக்கிராமம் தொடர்பான கதைமாய மந்திரம் இல்லாத கிராமம் அது. பத்திரிக்கைத்திறன் சார்ந்த இலக்கியம் என்று வைத்துக்கொள்ளலாம். 'கெட்ட நேரத்தில் (in evil hour)'எழுதி முடித்த பின்னர், என் எண்ணங்கள் அனைத்தும தவறானவை என்று தோன்றியது. என்னுடைய எல்லா பிள்ளைப்பருவ நிகழ்வுகளுமே அரசியல் சார்ந்தவையாக இருந்தது. மேலும் நாட்டின் யதார்த்தம் குறித்த யோசனையினின்று வெகு தொலைவில் இருக்கிறேன் என்பதையும் உணர்ந்தேன். 'கெட்ட நேரத்தில் (in evil hour)'எழுதி முடித்த பின்னர் ஐந்தாண்டுகளுக்கு நான் எதுவும் எழுதவில்லை. என்ன செய்ய வேண்டுமென்ற எண்ணம் மனதில் இருந்தது,எனினும் ஏதோவொன்று குறைவதாகவே தோன்றியது. சரியான தொனியை— இறுதியாக 'ஒரு நூற்றாண்டுக்கால தனிமையில் 'பின்பற்றிய தொனியை கண்டெடுக்கும் வரை எனக்கு தெரியவில்லை. என் பாட்டி எனக்கு கதை சொல்லும் பாணி அது.அவை அனைத்தும் கற்பனை கதைகளே ஆனால் 'அற்புதமானவை'. ஆனால் பாட்டியோ நிஜத்தில் நடந்தவை போல கூறுவார்.

சரியான தொனியை கண்டெடுத்து பதினெட்டு மாதங்கள் பழகினேன்.

பேட்டியாளர்: 'அற்புதமானவை'யை இயற்கையாகவும் எளிமையாகவும் எப்படி கூறுவார்?

மார்க்குவெஸ்: அவரின் முகபாவனையே மிகவும் முக்கியம். கதை முழுவதையும் சொல்லி முடிக்கும் வரை அவர் முகத்தில் உற்சாகம் குறையாது. எங்களுக்கு மிகவும் ஆச்சரியமாக இருக்கும். 'ஒரு நூற்றாண்டுக்கால தனிமை 'எழுத நினைத்த முந்தைய முயற்சிகள் யாவிலும் அவற்றை நம்பாமல் கதை சொல்ல முயன்றேன். அதே தொய்வற்ற முக பாவனையுடன் நான் எழுத வேண்டுமென்று பின்னர் புரிந்துக்கொண்டேன்.

பேட்டியாளர்: இத்தொனியும் இதழியலின் சிறப்பம்சமாகவே தெரிகிறது. ஆச்சரியமான மற்றும் சுவாரசியமான நிகழ்வுகளையும் மிகவும் துல்லியமான நுணுக்கங்களுடன் விவரிப்பதால் யதார்த்தமாகவே கண்ணுக்குத் தெரிகிறது. இதழியலிலிருந்து சேகரித்த ஒன்றா?

மார்க்குவெஸ்: இந்த யுத்தி இலக்கியத்திற்கும் பொருந்தும். உதாரணத்திற்கு, 'வானில் பறக்கும் யானைகளும் உள்ளன' என்று நீங்கள் கூறினால் யாரும் உங்களை நம்பமாட்டார்கள். ஆனால், அதுவே 'நானூற்றி இருபத்தைந்து யானைகள் வானில் பறந்துக் கொண்டிருக்கின்றன' என்று கூறினால் நம்புவதற்கான வாய்ப்புகள் உள்ளன. 'ஒரு நூற்றாண்டுக்காலத் தனிமை' முழுமையும் அத்தகையது தான். பாட்டி உபயோகித்த அதே உத்தி தான். அதுவும் அந்த மஞ்சள் நிறப் பட்டாம்பூச்சிகளால் சூழப்பட்ட கதாபாத்திரத்தின் கதை எனக்கு நன்றாக நினைவில் உள்ளது. நான் சிறுவனாக இருந்த போது வீட்டுக்கு ஒரு மின்னியல வல்லுனர் (electrician) வருவார். மின் கம்பத்திலிருந்து தொங்க பயன்படும் அரைக்கச்சினை(belt) கொண்டு வந்துவிட்டால் போதும் எனக்கு உற்சாகம் அதிகரித்துவிடும். பாட்டி என்ன சொல்வார்ரென்றால், ஒவ்வொரு முறை அவர் வரும் போதும் வீடு நிறைய பட்டாம்பூச்சிகளை விட்டு

செல்வாராம். இதை எழுதுகையில் மஞ்சள் நிறப் பட்டாம்பூச்சி என்று சொல்லமாலிருந்தால் மக்கள் நம்பியிருக்க மாட்டார்கள். 'ரெமிடியோ, சொர்கத்திற்கு செல்லும் அழகி' தொடரை நம்பகமான முறையில் எழுத வெகு நாளானது. ஒரு நாள் தோட்டத்தில் நின்றுக் கொண்டிருந்தபோது, துவைப்பதற்காக வீட்டுக்கு வரும் பெண் ஒருவர் தாள்களை காயப்போட்டுவிட்டு பலமாக வீசி பறக்கடிக்க செய்ய வேண்டாமென்று காற்றுடன் சண்டையிட்டுக் கொண்டிருந்தார். அந்த தாள்களை ரெமிடியா பயண்படுத்தினால் மேலேறிவிடலாம் என்று எனக்கு தோன்றியது. அப்படித்தான் அதை நம்பற்குறியதாக மாற்றினேன். நம்பகத்தன்மையே கதைக்கு மிகவும் முக்கியம். மக்கள் நம்பும் வரை என்னவேண்டுமானாலும் எழுதலாம்.

பேட்டியாளர்: 'ஒரு நூற்றாண்டுக்கால தனிமை'யின் தூங்கா கொள்ளை நோய் (ப்ளேக்) எப்படி தொடங்கியது?

மார்க்குவெஸ்: 'ஓடிப்பஸி'லிருந்து கொள்ளை நோய் மீது ஆர்வம் அதிகரித்தது என்று வைத்துக் கொள்ளலாம். இடைக்கால கொள்ளை நோய் குறித்து நிறைய படித்துள்ளேன். டானியல் டீபோ வின்' கொள்ளை நோய் வருடத்தின் நாளேடு 'எனக்கு மிகவும் பிடித்த புத்தகம். பத்திரிக்கையாளரான டீபோ சொல்வதெல்லாம் கற்பனையாக இருக்குமோ என்று தோன்றும். லண்டன் ப்ளேகால் பாதிக்கப்பட்டவர்களை பார்த்து எழுதியிருப்பார் என்று பல வருடங்களாக நினைத்துக்கொண்டிருந்தேன். கொள்ளை நோய் லண்டன் நகரை தாக்கிய போது அவருக்கு ஏழு வயது கூட ஆகவில்லையென்றும் அவரின் நாவல் என்றும் பின்னர் தான் தெரிந்தது. கொள்ளை நோய், நான் மீண்டும் மீண்டும் பயன்படுத்திய கருப்பொருள்களுள் ஒன்று.'கெட்ட நேரத்தில்..' துண்டு பிரசுரங்கள் கொள்ளை நோய்கள் ஆகவும், 'ஒரு நூற்றாண்டுக்கால தனிமை' எழுதுவதற்கு முன்னர் எழுதிய'சனிக்கிழமைக்கடுத்து ஓர் நாள்..' கதையில் பறவைகளை கொல்ல கொள்ளை நோயைப் பயன்படுத்தினேன்.கொலம்பியாவில் நடந்த அரசியல் வன்முறையும் கொள்ளை நோயின் இயங்காவியலைப் போன்ற ஒன்றாக இருக்கும் என்று பல வருடங்களாக னைத்துக் கொண்டிருந்தேன். 'ஒரு நூற்றாண்டுகால

தனிமை'யில் தூங்கும் கொள்ளை நோயிற்கு எதிர்மறையாய் தூங்கா கொள்ளை நோயை ஓர் இலக்கிய உத்தியாக பயன்படுத்தினேன். இறுதியில், இலக்கியமானது தச்சுவேலையைப் போன்றதுவே.

பேட்டியாளர்: அவ்வொப்புமையை விவரிக்க முடியுமா?

மார்க்குவெஸ்: இரண்டும் கடினமானவையே. இரண்டிலும், யதார்த்தத்துடன் பணிபுரிகிறீர்கள். நாம் எழுத நினைக்கும் விஷயமும் மரத்தை போன்று வலிமையானது. யுத்திகளாலும் வித்தைகளாலுமானவை. ப்ரொஸ்ட் சொல்வது போல், பத்து சதவித உத்வேகமும் தொண்ணூறு சதவீத கடின உழைப்பும் இரண்டிற்கும் முக்கியம். தச்சுவேலை நான் செய்ததில்லை எனினும், நான் ரசிக்கும் வேலைகளில் ஒன்று. குறிப்பாக வேலையை முடித்து தர யாரும் இல்லாத நேரங்களில் அதிகமாக விரும்புகிறேன்.

பேட்டியாளர்: 'ஒரு நூற்றாண்டுக்கால தனிமை'யில் வரும் வாழைப்பழ காய்ச்சல் குறித்து சொல்லுங்களேன். அமெரிக்க பழ நிறுவனத்திற்கும் வாழைப்பழ காய்ச்சலுக்கும் தொடர்பு உண்டா?

மார்க்குவெஸ்: வாழைப்பழ காய்ச்சலுக்கும் யதார்த்தத்திற்கும் மிகவும் நெருங்கிய தொடர்பு உண்டு. வரலாற்று ரீதியாக நிறுபிக்கப்படாத வற்றுக்கும் இலக்கிய உத்திகளை பயன்படுத்தி உள்ளேன். சதுக்கத்தில் நடந்த படுகொலை அனைத்தும் உண்மை. சாட்சியங்களையும் ஆவணங்களையும் வைத்தே அவற்றை எழுதினேன். மூன்றாயிரமென்ற இலக்கத்தினை பயன்படுத்தியிருந்தேன். மிகைப்படுத்தி கூறியிருந்தாலும் அது ஒரு இலக்கிய உத்தியே. மிகவும் பெரிய ரயில்வண்டி ஒன்று வாழைப்பழங்களால் நிரப்பப்பட்டு செல்வதை சிறுவயதில் பார்த்திருக்கிறேன். இறந்தவர்களை கடலில் குவிக்க ரெயில் பெட்டியில் எடுத்து சென்றிருக்கலாம். ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், காங்கிரசிலும் சரி செய்திதாள்களிலும் சரி 'மூன்றாயிரம் பேர் இறந்திருக்க கூடும்' என்று சாதாரணமாக கூறுகிறார்கள். வரலாற்றில் பாதி இம்முறையில் எழுதப்பட்டவையாக இருக்கும் என்று சந்தேகிக்கிறேன்.'

குலபதியின் இலையுதிர்காலம் (the autumn of the patriarch) கதையில் வரும் சர்வாதிகாரி சொல்வது போல் இப்போது ஒரு விஷயம் உண்மையா இல்லையா என்பது முக்கியமில்லை. எதிர்காலத்தில் அது கண்டிப்பாக உண்மையாகிவிடும். அரசாங்கத்தை விடுத்து எழுத்தாளர்களை மக்கள் நம்பும் காலம் வெகு தொலைவில் இல்லை என்று தோன்றுகிறது.

பேட்டியாளர்: இவ்வெண்ணம் ஒரு எழுத்தாளனை முற்றிலும் ஆற்றல் மிக்கவனாய் மாற்றும் அல்லவா?

மார்க்குவெஸ்: ஆம், அதை என்னாலும் உணரமுடிகிறது. ஆற்றலுடன் பொறுப்பும் அதிகரிக்கிறது. முழுமையான யதார்த்தத்துடனும் 'ஒரு நூற்றாண்டுக்கால தனிமை'யைவிடவும் அற்புதமான ஒன்றை எழுத விரும்புகிறேன். கடந்தகால நினைவுகளை எவ்வளவு நெருக்கமாக நினைவில் வைத்துக்கொள்கிறேனோ இலக்கியமும் இதழியலும் அவ்வளவு நெருக்கமாய் இருக்கும் என்று நினைக்கிறேன்.

பேட்டியாளர்: 'குலபதியின் இலையுதிர்கால'த்தில் வருவது போல் அந்நிய நாட்டுடன் ஏற்பட்ட கடனுக்காக கடலை கடனாய் தரும் நாடுகள் குறித்து என்ன நினைக்கிறீர்கள்?

மார்க்குவெஸ்: அது ஒரு உண்மைச் சம்பவம். இதற்குமுன் இது போன்று நடந்திருக்கிறது. நடக்கும் வாய்ப்புகளும் உண்டு. 'குல பதியின் இலையுதிர்காலம்' ஒரு வரலாற்றுப் புத்தகமாகும். உண்மை சம்பவங்களிலிருந்து சாத்தியக்கூறுகளை கண்டுபிடித்தல் என்பது ஒரு பத்திரிக்கையாளன் மற்றும் நாவலாசிரியரின் வேலை மட்டும் அல்ல தீர்க்கதரிசியின் வேலையுமாகும். பிரச்சனை என்னவெனில் என்னை அற்புதமான கதையெழுதும் கதாசிரியனாக பார்கிறார்கள். உண்மையில் மிகவும் யதார்த்தமான மனிதன் நான். பொது நலக்கோட்பாட்டின் அடிப்படையிலிருக்கும் யதார்த்தவாதத்தினையே நான் எழுதுகிறேன்.

பேட்டியாளர்: கற்பனையான ஒன்றா?

மார்க்குவெஸ்: உண்மையான என்ற சொல்லுக்குள் அடங்குமா சிறந்த என்ற சொல்லுக்குள் அடங்குமா என்று தெரியவில்லை.உண்மையான ஒன்றாகத்தான் நான் நினைக்கிறேன்.

பேட்டியாளர்: 'குலபதியின் இலையுதிர்கால'த்தில் வரும் கதாபாத்திரங்கள் சர்வாதிகாரியில் தொடங்கி அனைத்தும் யாரோ ஒருவருடன் தொடர்புபடுத்தி எடுக்கப்பட்டது என்று நினைக்கிறீர்களா? ப்ரான்கோ, பெரான், ட்ருஜிலோ வுடன் ஒப்புமை உள்ளதாக தோன்றுகிறதே?

மார்க்குவெஸ்: எல்லா நாவல்களிலும் கதாபாத்திரங்கள் பலவற்றின் கலவையே. நமக்கு தெரிந்த, கேட்ட அல்லது நாம் படித்தவர்கள் பற்றிய கலவை அவை. கடந்த நூற்றாண்டின் மற்றும் இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த லத்தீன் அமெரிக்க சர்வாதிகாரிகள் குறித்து நிறைய படித்தேன், சர்வாதிகாரத்தின் கீழ் வாழ்ந்தவர்களிடமும் நிறைய பேசினேன். பத்து வருடங்களாக இவற்றை செய்துக் கொண்டிருந்தேன். கதாபாத்திரங்கள் எவ்வாறு இருக்கவேண்டும் என்று தெளிவான எண்ணம் கிட்டியபின் கேட்ட, படித்த அனைத்தையும் மறக்க முயன்றேன் அப்போது தான் புதிதாக ஒரு கதாபாத்திரத்தை உருவாக்க முடியும் என்று நினைத்தேன். நான் எந்த சர்வாதிகாரத்தின் கீழும் வாழ்ந்ததில்லை. ஸ்தாபித்த சர்வாதிகாரத்தின் கீழ் வாழும் சூழலை என்னால் கற்பனை செய்ய முடிந்தது. ப்ராங்கோவின் கீழான ஸ்பெயின் சர்வாதிகாரம் கரிபியன் சர்வாதிகாரத்திற்கு முற்றிலும் மாறான ஒன்று. அவ்வேலையை ஒரு வருடத்திற்கு ஒத்திவைத்தேன். ஏதோ ஒன்று குறைவது போலவே இருந்தது. என்னவென்று என்னால் கண்டு பிடிக்க முடியவில்லை. அன்றிரவே பாரன்குவில்லாவிற்கு செல்ல ஆயத்தமானோம். கொய்யாவின் வாசம் எப்படி இருக்கும் என்பதை மறந்துவிட்டேன். அதை தெரிந்துக் கொள்ளவே கொலம்பியாவிற்கு வந்தேன் என்று சொன்னதை

பத்திரிக்கையாளர்கள் கேளிக்கையாக நினைத்தனர், எழுதி முடித்தவுடன் கரிபியனிற்கு ஒரு பயணம் மேற்கொண்டேன். தீவிலிருந்து தீவு பயணம் செய்த பின்பு தான் என் நாவலில் என்ன குறைந்தது என்று தெரிந்துக்கொண்டேன்.

பேட்டியாளர்: ஆற்றலின் தனிமையை கருப் பொருளாக அடிக்கடி பயன்படுத்துகின்றீர்களே?

மார்க்குவெஸ்: ஆற்றல் அதிகமாக இருந்தால் யார் நம்மிடம் பொய் சொல்லுகிறார் யார் உண்மை பேசுகிறார் என்று கண்டுபிடிப்பது கடினமான ஒன்றாகிறது. முழுமையான அதிகாரத்தையோ அல்லது ஆற்றலையோ அடைந்த பின் யதார்த்த வாழ்க்கையுடனான தொடர்பு முடிந்து விடுகிறது. அதுவே மிகவும் மோசமான தனிமையாகும். மிகவும் ஆற்றல் வாய்ந்த சர்வாதிகாரியை யதார்த்தத்திலிருந்து தனிமை படுத்தும் எண்ணங்களாலும், தனிமைப் படுத்த நினைக்கும் மக்களாலும் சூழப்பட்டிருப்பதாக நினைக்கிறேன். முடிவில் அவரைத் தனிமை படுத்தவே எல்லாம்.

பேட்டியாளர்: எழுத்தாளரின் தனிமை எவ்வாறானது? வித்யாசமான ஒன்றா?

மார்க்குவெஸ்: ஆற்றலின் தனிமையுடன் நிறைய போராட வேண்டிருக்கிறது. யதார்தத்தை சித்தரிக்க ஒரு எழுத்தாளன் நினைத்தால் பெரும்பாலும் இயல்பினின்று விலகி வேறொரு நிலைக்கு கொண்டு சென்று விடுகிறது. யதார்த்தத்தை தூக்கிச்செல்லும் முயற்சியில் கடைசியாக கிட்டுவது அறுபட்ட தொடர்பே. இதழியல் ஒரு பாதுகாவலனைப்போல் இவ்விடத்தில் தாங்குகிறது. ‘ஒரு நூற்றாண்டுக்கால தனிமை’ க்கு பிறகு ஆற்றலின் தனிமை என்னை துரத்தும் என்ற பயமில்லை புகழின் தனிமை வாட்டிவிடுமோ என்ற பயம் தான் இருந்தது. புகழின் தனிமை ஆற்றலின் தனிமையைவிட வலிமை வாய்ந்தது. அத்தகைய கொடுமையான தனிமையினின்று என் நண்பர்கள் என்னை பாதுகாத்தனர். எப்போதும் என்னுடன் இருக்கும் என் நண்பர்கள்.

பேட்டியாளர்: எப்படி?

மார்க்குவெஸ்: நெருங்கிய நண்பர்களை வாழ்க்கையுடன் இணைத்து வைத்துள்ளேன். பழைய நண்பர்களுடன் என் நட்பை துண்டித்துக் கொள்ளவில்லை. அவர்கள் தான் என்னை தரைக்கு இழுத்து பிடிப்பவர்கள். எப்போதும் தன் கால்களை தரையில் வைத்துக் கொண்டிருப்பவர்கள். பிரபலமானவர்கள் அல்லர்.

பேட்டியாளர்: எப்படி எல்லாம் தொடங்கியது? ‘குலபதியின் இலையுதிர்கால’த்தில் மீண்டும் மீண்டும் வரும் மாடுகளுக்கும் யதார்த்தத்திற்கும் சம்பந்தம் உண்டா?

மார்க்குவெஸ்: என்னிடம் ஒரு புகைப்பட புத்தகம் உள்ளது. அதை உங்களுக்கு காட்ட விரும்புகிறேன். என் எல்லா புத்தகங்களின் ஆதியாகமங்களிலும் ஒரு புகைப்படம் இருக்கும். ‘குலபதியின் இலையுதிர்கால’த்தில் இருக்கும் முதல் புகைப்படம் முதியவர் ஒருவரின் ஆடம்பரமான மாளிகையின் திரைச்சீலைகளை மாடு சாப்பிட்டுக் கொண்டிருப்பது போலான புகைப்படமது. அந்த புகைப்படத்தினை பார்க்கும் வரையில் அந்த படிமம் உருவெடுக்கவில்லை. ரோம் சென்றபோது ஒரு புத்தக கடையில் தான் அந்த புகைப்பட புத்தகத்தை நான் பார்த்தேன். புகைப்படங்கள் சேகரிக்க எனக்கு பிடிக்கும். அந்த புகைப்படத்தை பார்த்த உடனே சரியானதென்று மனதிற்கு பட்டது. நான் பெரிய அறிவாளி இல்லை என்பதால் என் முன்னோடிகளை அன்றாட வாழ்க்கையிலே கண்டெடுக்கிறேன் தலைசிறந்த படைப்புகளில் அல்ல.

பேட்டியாளர்: உங்கள் நாவல்கள் எதிர்பாரா திருப்பங்கள் கொண்டவையா?


மார்க்குவெஸ்: ஆரம்ப கட்டங்களில் அவ்வாறு இருந்தன. தொடக்க காலங்களில் மன நிலை குறித்தான பொதுவான எண்ணம் எனக்கு இருந்தது. போக போக என் மனநிலை குறித்து கதைகளும் மாறின. அப்போது எனக்கு கிடைத்த சிறந்த ஆலோசனை என்னவெனில் வேலைகளை அவ்வாறு செய்வது சிறந்தது என்பது தான் அது. உத்வேக

பொழிவில் மிதந்து கொண்டிருந்த காலம் அப்போது. உத்தி ஒன்றை கற்றுக்கொள்ள வேண்டும் அதுவே உத்வேகம் குறைந்த பிறகும் துணையாய் இருக்கும் இல்லையேல் பிரச்சனையில் சிக்கிக்கொள்வேன் என்றே சொல்லப்பட்டேன். அதை நான் சரியான நேரத்தில் கற்றுக் கொள்ளவில்லையெனில் இப்போது சரியான நிலைக்கு கோடிட்டிருக்க முடியாது. கதை அமைப்பு என்பது மிகவும் நுட்பமான பிரச்சனையே. ஆரம்ப காலத்தில் கற்றுக் கொள்ளவில்லை எனில் பின்னர் கற்றுக் கொள்ளமுடியாது.

பேட்டியாளர்: ஒழுக்கம் முக்கியமென்று நினைக்கிறீர்களா?

மார்க்குவெஸ்: அசாதாரண ஒழுங்குமுறையில்லாமல் எழுதப்படும் புத்தகம் அவ்வளவு தகுதியானது என்று எனக்கு தோன்றவில்லை.

பேட்டியாளர்: செயற்கைத் தூண்டிகள் குறித்து என்ன நினைக்கிறீர்கள்?



மார்க்குவெஸ்: ஹெம்மிங் வே எழுத்தில் என்னை மிகவும் ஈர்த்த விஷயம் என்னவென்றால் எழுதுவது என்பது அவருக்கு குத்துச்சண்டை போன்றதுவாம். அவர் தன்னுடைய உடல்நலம் குறித்தும் நன்மை குறித்தும் அதிக ஆர்வம் காட்டினார். ஃபால்க்னருக்கு குடிகாரன் என்ற புகழுமிருந்தது. குடித்திருந்தால் ஒரு வரி கூட எழுத முடியாது என்று அவர் அளித்த எல்லா நேர்காணல்களிலும் சொல்லியிருந்தார். ஹெம்மிங்வேவும் இதை சொல்லியிருந்தார். குடித்துவிட்டு சிலவற்றை எழுதிவிட்டேனா என்று சில மோசமான வாசகர்கள் என்னிடம் கேட்டுள்ளனர். அவர்களுக்கு மது குறித்தும் எதுவும் தெரியவில்லை இலக்கியம் குறித்தும எதுவும தெரியவில்லை என்பதையே விளக்குகிறது. நல்ல எழுத்தாளனானவன் எழுதும் எல்லா நேரங்களிலும் முற்றிலும் தெளிவாகவும் நல்ல ஆரோக்கியத்துடனும் இருத்தல் வேண்டும். எழுதுவது என்பது புனிதமானதென்றும் எழுதுவதென்பது தியாகமென்றும், எவ்வளவு மோசமாக பொருளாதார நிலையோ அல்லது மனநிலையோ உள்ளதோ அத்துணை அருமையாக எழுத முடியுமென்னும் கூற்றுகளுக்கு எதிரானவன் நான். சிறந்த படைப்பு ஒன்றை எழுத வேண்டுமெனில் அமைதியான மற்றும் மகிழ்ச்சியான மனநிலை அவசியம் என்று நினைக்கிறேன். என்னை பொருத்தமட்டில சிறந்த ஆரோக்கியம் முக்கியம். இதை கடந்த தலைமுறையினர் நன்றாக புரிந்து வைத்திருந்தனர். வாழ்க்கையை நேசித்தவர்கள் அவர்கள்.

பேட்டியாளர்: ப்ளேய்ஸ் செண்ட்ரார்ஸ் எழுதுவதென்பது மிகவும் கௌரவமானதென்றும் எழுத்தாளன் தன் வேதனையை மிகைப்படுத்திக்கூற முடியுமென்றும் கருதுகிறார். இது குறித்து உங்களின் கருத்து

மார்க்குவெஸ்: எழுதுவதென்பது மற்ற வேலையைப் போன்று மிகவும் கடினமான ஒன்றாகவே நினைக்கிறேன். ஒருவரின் மனத்திருப்திக்கேற்றார் போல அவ்வேலையை செய்வதே கௌரவமென்று நினைக்கிறேன். என்மீதும் மற்றவர்கள் மீதும் அதிகப்படியான கோரிக்கை வைப்பதாக உணர்கிறேன் ஏனெனில் என்னால் பிழைகளை பொருத்துக்கொள்ள முடியாது.ஒரு வேலையை கச்சிதமாக

செய்துமுடிப்பதே கௌரவம் என்று நினைக்கிறேன். எழுத்தாளர்கள் பெரும்பாலும் மேலாதிக்கம் கொண்டவர்கள், தன்னை பிரபஞ்சத்தின் மையமாகவும் சமூகத்தின் மனசாட்சியாகவும் கருதுகின்றனர் என்னும் கோட்பாட்டை நம்புபவன் நான்.சிறந்த படைப்பினை ரசிப்பேன். நான் எழுத்தாளனாக இருப்பதை விட விமான ஓட்டிகள் சிறந்தவர்கள் என்பதனை பிரயாணத்தின் போது தான் புரிந்துக்கொள்கிறேன்.

பேட்டியாளர்: எப்போது நீங்கள் சிறந்த பணியை செய்ததாக உணர்ந்திருக்கிரீர்கள்? வேலை அட்டவணை எதாவது உங்களுக்கு உள்ளதா?

மார்க்குவெஸ்: முழு நேர எழுத்தாளனாக ஆன பிறகு நான் சந்தித்த முதல் பிரச்சனை நேரமேலாண்மையே. பத்திரிக்கையாளனாக இருந்த போது இரவில் வேலை செய்துக்கொண்டிருந்தேன். அப்போது எனக்கு நாற்பது வயது ஆகியிருந்தது. காலையில் சுமார் 9 மணிக்கு துவங்கினால் மதியம் 2 மணிக்கு மகன்கள் இருந்து வீட்டிற்கு வரும் வரை எழுதுவேன். கடின உழைப்பிற்கு பழகியிருந்ததால் காலையில் மட்டும் வேலை செய்ய கொஞ்சம் குற்றவுணர்வாகவே இருந்தது. அதனால் பகலிலும் வேலை செய்ய முயற்சித்தேன். ஆனால், அடுத்த நாள் காலை பகலில் எழுதிய அனைத்தையும் மறுமுறை சீர்திருத்த வேண்டியதாயிருக்கும். காலை 9மணி முதல் நண்பகல் இரண்டரை மணி வரை எழுதுவதே பொதுமானது என்று முடிவுசெய்தேன். பகல் நேரத்தை நியமனங்களுக்காகவும் நேர்காணல்களுக்காகவும் செலவளித்தேன். இன்னொரு பிரச்சனையும் இருந்தது. ஏற்கனவே பழக்கப்பட்ட இடத்திலும் புத்தகத்தில் முன்னரே குறிப்பிட்ட இடங்களிலும் என்னால் பணிபுரியமுடியாது. மேலும் விடுதிகளிலோ கடன் வாங்கிய தட்டச்சு இயந்திரத்திலோ என்னால் எழுத முடியாது. பிரயாணம் செய்யும் போது இது ஒரு பிரச்சனை ஆகிவிடுகிறது. குறைவாக வேலை செய்ய போலிக்காரணங்கள் தேவைப்படுகின்றன. அதனால் தான் நம் மேல் நாமே சுமத்திக்கொள்ளும் நிபந்தனைகள் கடுமையாக உள்ளன. அதனால் தான் உத்வேகத்திற்காக சூழ்நிலைகளை எதிர்ப்பார்க்கிறோம். அத்தகைய

சூழ்நிலையில் தான் கற்பனைகள் அதிகமாக சுறண்டுகின்றன. என் மார்க்சிய நண்பர்கள் அதை ஒற்றுக்கொள்ள சிரமப்படுகின்றனர். சிறப்பான மனநிலை ஒன்று உள்ளதாகவும் அம்மனநிலையில் எண்ணங்கள் பொங்கிவழியும் என்றும் சமாதானப்படுத்தப்பட்டேன். எல்லாப் போலி காரணங்களும் மறைந்து விடுகின்றன. சரியான கருப்பொருளும் அதை முடிப்பதற்கான சரியான வழியையும் கண்டெடுத்துவிட்டால் அத்தகைய நேரமும் மனநிலையும் அமையும் என்று நினைக்கிறேன். அது உங்களுக்கு மிகவும் பிடித்த ஒன்றாக இருக்கவேண்டும். பிடிக்காத விஷயத்தை செய்வது போன்று மோசமான விஷயம் எதுவுமில்லை. முதல் பத்தியை எழுதுவதுதான் மிகவும் கடினமான வேலையாகும். முதல் பத்தியை எழுதுவதற்கே ஒரு மாதம் ஆகிவிடும். சரியான தொடக்கம் கிடைத்துவிட்டால் மற்றவையெல்லாம் எளிமையாகிவிடும். புத்தகத்தின் பெரும்பாலான பிரச்சனைக்கு முதல் பத்தியிலே தீர்வு கிட்டிவிடும். கருப்பொருள் தீர்மானமாகி விட்டால் வேலை முக்கால்வாசி முடிந்தது. குறைந்தபட்சம் என விஷயத்தில் அப்படித்தான். முழு புத்தகமும் எது பற்றியது என்ற கருவை முதல் பத்தியிலே புரிந்துக் கொள்ளலாம். அதனால் தான் சிறுகதை எழுதுவது நாவல் எழுதுவதை விட சிரமம். ஒவ்வொருமுறை சிறுகதை எழுதும்போதும் முதலிலிருந்து ஆரமிக்க வேண்டும்.

பேட்டியாளர்: கனவுகள் உத்வேகத்திற்கான நோக்கமாக இருக்கும் என்று நினைக்கிறீர்களா?

மார்க்குவெஸ்: ஆரம்பத்தில் அவற்றுக்கு முன்னுரிமை கொடுத்தேன். வாழ்க்கையே சிறந்த உத்வேகம் என்று பின்னர் புரிந்துக் கொண்டேன். வாழ்க்கை என்னும் வேகமான நீரோட்டத்தின் ஒரு அங்கமே கனவுகள். கனவுகள் குறித்தும் அவற்றின் வேறுபாடுகள் குறித்தும் நான் நிறைய எழுதியுள்ளேன். கனவுகளை விட யதார்த்த வாழக்கை இன்னும் சிறப்பாக இருப்பதாக நினைக்கிறேன். ஒருவேளை அத்தகைய கனவுகளை நான் அனுபவிக்காமல் இருந்திருக்கலாம்.

பேட்டியாளர்: உள்ளுணர்விற்கும் உத்வேகதுக்கு மிடையான வேறுபாட்டினை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?

மார்க்குவெஸ்: உத்வேகமானது சரியான கருப்பொருளைத் தேர்ந்தெடுக்கும் போது ஏற்படுவது. உங்களுக்கு மிகவும் பிடித்த ஒன்று. உள்ளுணர்வானது கதை எழுதுவதற்கு தேவையான சிறப்பு பொருளாகவும், விஞ்ஞான அறிவு இல்லாமலே உண்மையையும் யதார்த்தத்தையும் ஆராய உதவுவதாகவும் நினைக்கிறேன். புவியீர்ப்பு விசையின் விதிகளை உள்ளுணர்வுடனே ஆராய்ந்து விட முடியும். எந்த போராட்டமும் இன்றி அனுபவம் சம்பாதிக்க உதவும். நாவலாசிரியனுக்கு உள்ளுணர்வு அவசியம். இது அறிவு ஜீவித்தனத்துக்கு எதிரானது என்று நினைக்கிறேன். உலகில் வெறுக்கும் விஷயங்களில் அதுவும் ஒன்று. ஏதோ ஒரு இயக்கமற்ற கோட்பாட்டின் கீழ் சிக்கி கொண்டது போலே எனக்கு தோன்றும். சதுர துவாரத்தினுள் வட்ட உருளையை போட முயற்சிக்க மாட்டோம். இதையே உள்ளுணர்வின் அனுகூலமாக நினைக்கிறேன்.

பேட்டியாளர்: கோட்பாளர்களை பிடிக்காத காரணத்தால் இருக்குமா?

மார்க்குவெஸ்: சரியாக முக்கியமான காரணம் அவர்களை என்னால் புரிந்துக்கொள்ள முடியவில்லை என்பதே. அதனால் தான் உபகதைகள் மூலம் விளக்குகிறேன் ஏனெனில் கருத்தியல்கள் வாயிலாக சொல்லும் அளவிற்கு எனக்கு திறமை இல்லை.

பேட்டியாளர்: உங்களை ஒரு விமர்சகராக நினைக்கிறீர்கள்?

மார்க்குவெஸ்: அறிவு ஜீவித்தனத்திற்கு சிறந்த உதாரணம் விமர்சகர்களே. ஒரு எழுத்தாளன் எப்படி இருக்க வேண்டுமென்று அவர்கள் மனதில் ஒரு கோட்பாடு இருக்கும். அக்கோட்பாட்டிற்குள் நம்மை உட்கார வைக்க நினைப்பார்கள், முடியவில்லை என்றாலும் கட்டாயப்படுத்தி அதனுள் அடக்க முயற்சிப்பார்கள். நீங்கள் கேட்டதாலே சொல்கிறேன். விமர்சகர்கள் என்னைப் பற்றி என்ன

நினைக்கிறார்கள் என்பதில் எனக்கு எந்த ஆர்வமும் இல்லை. எழுத்தாளனுக்கும் வாசகர்களுக்கும் நடுவில் இருக்கும் ஒரு பொது நபராக தங்களை கருதுகின்றனர். எந்த பொதுநபரின் துணையில்லாமல் மக்களுக்கு நேரடியாக சேரவேண்டும் என்பதற்காக தெளிவாகவும் எளிமையாகவும் எழுத விரும்புகிறேன்.

பேட்டியாளர்: மொழிபெயர்ப்பாளர்கள் குறித்து உங்களின் கருத்து?

மார்க்குவெஸ்: அடிக்குறிப்புகளைப் பயன்படுத்தா மொழிபெயர்ப்பாளர்கள் மீது பெரும் மதிப்பு எனக்குண்டு. ஏனெனில் ஆசிரியர் சொல்லாததைக்கூட வாசகர்களுக்கு புரியவைக்க நினைப்பார்கள். அதனால் வாசகர்கள் போராட வேண்டியிருக்கும். மொழிபெயர்த்தல் மிகவும் கடினமான, வெகுமதி கிட்டா, சம்பளம் குறைந்த வேலை. நல்ல மொழிபெயர்ப்பு அப்பதிப்புக்கு ஒரு மறு உருவாக்கமாக நினைக்கிறேன். கிரிகோரி ரபஸ்ஸாவின் மேல் அதனால் தான் எனாக்கு அத்துணை மதிப்பு. என் புத்தகங்கள் இருபத்து ஒரு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. அவற்றுள் கிரிகோரி ரபஸ்ஸாவே தெளிவுபடுத்திக்கொள்ள எந்த அடிக்குறிப்புகளும் இல்லாமல் மொழிபெயர்த்தவர். என் எல்லாப்படைப்புகளும் முழுமையாக ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அவற்றுள் சில பகுதிகள் பின்பற்ற கடினமாக உள்ளன. மொழிபெயர்ப்பாளர் அப்படைப்பினை படித்துவிட்டு தன் சொந்த நடையில் எழுதுவார். அறிவாளிகளாக அல்ல உள்ளுணர்—வாளர்களாக இருக்கின்றனர். வெளியீட்டாளர்கள் குறைந்த சம்பளம் அளிக்கிறார்கள் என்பது மட்டுமல்ல அவர்கள் அதை தங்களின் இலக்கிய படைப்பாக கருதுவதில்லை. சில புத்தகங்களை ஸ்பேனிஷில் மொழிபெயர்க்க நினைத்தேன். புத்தகம் எழுதுவதை விட மொழிபெயர்ப்பானது மிகவும் கடினமான ஒன்றாக நினைக்கிறேன். சாப்பாட்டிற்கு கூட சம்பாதித்திருக்க முடியாது என்று நினைக்கிறேன்.

பேட்டியாளர்: எவற்றை மொழிப்பெயர்க்க நினைத்தீர்கள்?

மார்க்குவெஸ்: மால்ராக்ஸின் எல்லா

படைப்புகளையும், செயிண்ட்—எக்ஸுபெரி, கன்ராட் முதலியவற்றை மொழிபெயர்க்க நினைத்தேன். எதாவது ஒரு புத்தகத்தை படிக்கையில் அதை நாம் மொழிபெயர்த்தே ஆகவேண்டும் என்று தோன்றும். தலைசிறந்த படைப்பு ஒன்றினை மிகுந்த குழப்பத்துடன் படிப்பதை விட எளிமையான மொழிபெயர்ப்பு ஒன்றினை படிக்கவே விரும்புவேன். ஸ்பேனிஷில் படிப்பதே மிகவும் சௌகரியமாக இருப்பதாக நினைக்கிறேன். இத்தாலிய மொழி மற்றும் ப்ரெஞ்சு நன்றாக பேசுவேன். இருபது வருடங்களாக நான் படித்த 'டைம்ஸ்' இதழானது சரளமாக பேசும் அளவிற்கு என் மனதில் ஆங்கிலத்தை விதைத்திருக்கிறது.

பேட்டியாளர்: மெக்ஸிகோவில் இருப்பது எப்படி இருக்கிறது? எழுத்தாளச் சமூகத்தின் பகுதியாக உங்களை நினைக்கிறீர்களா?

மார்க்குவெஸ்: ஒருவர் எழுத்தாளன் என்பதற்காகவோ இல்லை கவிஞன் என்பதற்காகவோ அவரின் நண்பனாக நான் விரும்பமாட்டேன். எனக்கு வெவ்வேறு துறைகளைச் சார்ந்த நண்பர்கள் நிறைய உள்ளனர். லத்தீன் அமெரிக்காவை தாய்நாடாக நினைக்கிறேன். லத்தீன் அமெரிக்கர்கள் ஸ்பெயினிலே அவர்கள் உபசாரம் செய்யப்படுவதாக நினைக்கிறார்கள், தனிப்பட்ட முறையில் எனக்கு அப்படித் தோன்றவில்லை. லத்தீன் அமெரிக்காவில் என்னைப் பொருத்தவரை எந்த எல்லைகளும் இல்லை எந்த பிரிவுகளும் இல்லை. ஒரு நாட்டிற்கும் மற்றொரு நாட்டிற்குமுள்ள வேறுபாடுகள் இருந்தாலும் மனதை பொருத்தவரை எல்லாம் ஒன்று தான். கரிபியன் பகுதிகளையே வீடாக நினைக்கிறேன். ப்ரெஞ்சோ இல்லை டச்சோ இல்லை ஆங்கில கரிபியனோ எல்லாம் ஒன்று தான். எனக்கு நினைவிருப்பதோ ஒன்று மட்டும் தான் பாரன்குவில்லாவிற்கு விமானத்தில் ஏறினால் கருப்பு உடை அணிந்த கருப்பு பெண்மணி கடவுச்சீட்டினை முத்திரையிடுவார், ஜமெய்காவில் இறங்கும்போது நீல உடை அனிந்த கருப்பு பெண்மணி கடவுச்சீட்டினை முத்திரையிடுவார். மொழி வேறுபாட்டினை உருவாக்குகிறது என்பதில் நம்பிக்கை இல்லை. வேறு எந்த பகுதிக்கு சென்றாலும் அந்நியனாகவும் பாதுகாப்பில்லாதது போலவே

தோன்றும். பயணிக்கும் போது தோன்றும் உணர்வு அவை. சிறுபான்மை கொண்ட மனசாட்சி.

பேட்டியாளர்: லத்தீன் அமெரிக்க எழுத்தாளர்கள் சில காலம் ஐரோப்பாவில் இருப்பது என்பது மிகவும் முக்கியமான ஒன்றாக நினைக்கிறீர்களா?

மார்க்குவெஸ்: அநேகமாய் வேறு கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால் புரியுமென்று நினைக்கிறேன். லத்தீன் அமெரிக்கர்கள் ஐரோப்பாவிற்கு பெயர்ந்து வருவது குறித்து ஒரு சிறுகதை எழுத நினைக்கிறேன். இருபது வருடங்களாக இதைப்பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறேன். லத்தீன் அமெரிக்கர்கள் ஐரோப்பாவிற்கு அரிதாகத்தான் வருவார்கள் குறிப்பாக மெக்ஸிகர்கள் என்பதே சிறுகதையின் முடிவாக இருக்கும். ஐரோப்பாவில் நான் சந்தித்த மெக்ஸிகர்கள் பெரும்பாலும் அடுத்த புதன்கிழமையே நாடு திரும்பிவிடுகின்றனர்.

பேட்டியாளர்: லத்தீன் அமெரிக்க இலக்கியத்தின் மீது க்யூப புரட்சியின் தாக்கம் எத்தகையது?

மார்க்குவெஸ்: இதுவரை எதிர்மறையாகத் தான் உள்ளது. அரசியல் ரீதியாக ஒப்புவித்த எழுத்தாளர்கள், அவர்களுக்கு என்ன வேண்டும் என்பது குறித்து எழுத விரும்பவில்லை மாறாக கட்டாயமாக என்ன கிடைக்க வேண்டும் என்றே எழுதுகின்றனர். இலக்கியத்தை கணக்கிடப்பட்ட ஒன்றாக மாற்றுகின்றனர். அப்படிப்பட்ட இடத்தில் அனுபவத்துக்கோ உள்ளுணர்வுக்கோ இடமில்லை. அதற்கு காரணம் லத்தீன் அமெரிக்கா மீதான க்யூபாவின் கலாச்சார தாக்கமே. புதிய இலக்கியத்துக்கோ கலைக்கோ ஏற்ற இடமாக க்யூபாவின் செயல்முறை இன்னும் மாறவில்லை என்று நினைக்கிறேன். மாற சிறிது காலம் தேவை. லத்தீன் அமெரிக்காவில் ஏற்கனவே பின்பற்றப்பட்ட லத்தீன் அமெரிக்க இலக்கியத்தை புதுப்பித்தலில் க்யூபாவின் கலாச்சார முக்கியத்துவமானது இருக்க வேண்டும். வேறு விதமாக சொல்ல வேண்டுமெனில் லத்தீன் அமெரிக்க இலக்கியத்தின் ஏற்றத்திற்கு காரணம் க்யூப புரட்சியாக இருத்தல் வேண்டும். இருபது வருடங்களாக லத்தீன்

அமெரிக்க எழுத்தாளர்கள் எழுதிக்கொண்டுதான் இருக்கிறார்கள் ஐரோப்பிய மற்றும் அமெரிக்க வெளியீட்டாளர்களோ அவற்றுக்கு ஆர்வம் காட்டுவதாக இல்லை. க்யூப புரட்சி தொடங்கியபோது க்யூபா மீதும் லத்தீன் அமெரிக்கா மீதும் அதிக ஆர்வம் காட்டினர். நாளடைவில் அந்த ஆர்வமானது நுகர்வு கட்டுரைகளாக மாறின. லத்தீன் அமெரிக்காவும் வெளிச்சத்திற்கு வந்தது. லத்தீன் அமெரிக்க நாவல்கள் அருமையானவை என்பதுவும் மொழிப்பெயர்க்கப் பட வேண்டியவை என்பதும் கண்டுபிடிக்கப்பட்டது. கலாச்சார ஏகாதிபத்தியமானது லத்தீன் அமெரிக்காவில் எந்த அளவிற்கு மோசமாய் இருந்து என்றால் அவர்களின் நாவல்கள் எவ்வளவு அருமையானவை என்பதை வெளியாட்கள் சொல்லும் வரை அவர்கள் உணரவில்லை.

பேட்டியாளர்: நீங்கள் விரும்பும் பெரிதும் அறியப்படாத லத்தீன் அமெரிக்க எழுத்தாளர்கள் எவரேனும் உள்ளனரா?

மார்க்குவெஸ்: அப்படி யாருமில்லை என்று நினைக்கிறேன். கொர்த்தஜாரின் படைப்புகளை தவற விட்டுவிடக்கூடாதென்று நினைக்கும் வெளியீடாளர்களின் தேடல் லத்தீன் அமெரிக்காவில் க்யூப புரட்சியின் ஏற்றமென்று சொல்வேன். துரதிட்டவசமாக இளம் எழுத்தாளர்கள் புகழுக்காக எழுத நினைக்கிறார்கள். டொலோஸி பல்கலைக்கழகத்தைச்சார்ந்த ப்ரெஞ்சு பேராசிரியர் ஒருவர் லத்தீன் அமெரிக்க இலக்கியங்கள் குறித்து எழுதுகிறார். இளம் எழுத்தாளர்கள் பலர் இனி தங்களைப்பற்றி எழுதவேண்டாம் என்று அவருக்கு எழுதினர். நான் அவ்வயதில் இருந்தபோது விமர்சகர்கள் என்னைப்பற்றி எழுதியதில்லை மிகைல் ஏஞ்சல் அஸ்ரூரியஸ் குறித்தே நிறைய எழுதுவர். நம்மைப் பற்றி எழுதப்படுவதைக் காட்டிலும் நாம் நம் படைப்பை எழுதுவதே முக்கியம் என்பதனை அவர்கள் மறந்து விடுகின்றனர். என் இலக்கிய வாழ்க்கையில் முக்கியமான விஷயம் என்னவெனில் என் நாற்பதாவது வயது வரை ஐந்து புத்தகங்கள் வெளிவந்த பிறகும் கூட நான் ஒரு சதவீத ஊதியத்தைக்கூட வாங்கியிருக்கவில்லை.

பேட்டியாளர்: புகழோ வெற்றியோ ஒரு

எழுத்தாளனின் இலக்கிய வாழ்வில் ஆரம்ப காலத்திலே வருவதென்பது சரியானதில்லை என்று நினைக்கிறீர்களா?

மார்க்குவெஸ்: எந்த வயதில் வந்தாலும் அது சரியானதில்லை. என் புத்தகங்கள் என் மரணத்திற்கு பின்னர் அங்கீகாரம் பெற்றிருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். குறைந்தது முதலாளித்துவம் மிகுந்த நாட்டிலாவது ஏனெனில் நீங்கள் அங்கொரு வியாபார பொருளாக மாறிவிடுகிறீர்கள்.

பேட்டியாளர்: உங்களுக்கு விருப்பமானவற்றைத் தவிர இன்று வேறு என்ன படித்தீர்கள்?

மார்க்குவெஸ்: விசித்திரமான ஒன்றை இன்று படித்தேன். முகமது அலியின் வாழ்க்கை நினைவுகளைப் படித்தேன். ப்ராம் ஸ்டோகர்ஸின் 'ட்ராகுலா' மிகவும் சிறந்த புத்தகம். பல வருடங்களுக்கு முன்னதாகவே படித்திருக்க வேண்டும் நேரத்தை வீணாக்கும் ஒன்றாக நினைத்துவிட்டேன் அப்போது. என் நம்பிக்கைக்குறிய யாரேனும் ஒருவர் ஒரு புத்தகத்தை பரிந்துரைக்கும் வரை அப்புத்தகத்தினுள் என்னை ஆட்படுத்திக்கொள்ள மாட்டேன். பிடித்த புத்தகங்களை மறுபடியும் படிப்பேன். படித்த புத்தகத்தையே மறுமுறை படிப்பதிலான நன்மை என்னவெனில் நமக்கு பிடித்த பக்கத்தை எடுத்து பிடித்த வரியை எத்தனை முறை வேண்டுமானாலும் படிக்கலாம். 'இலக்கியம்' மட்டும் படிக்க வேண்டும் என்ற எண்ணம் எல்லாம் இப்போது இல்லை. எதுவாயினும் படிப்பேன். தற்போதைய உலகத்துடன் ஒத்திருக்க நினைப்பேன்.உலகின் மிக முக்கியமான வார இதழ்கள் எல்லாவற்றையும் படிப்பேன். செய்திகளுக்கான தேடலில் ஈடுபடும் பழக்கமானது தொலைவகை (teletype) இயந்திரங்களை நான் பயன்படுத்த தொடங்கிய போதினின்று ஆரம்பித்தது. அனைத்து தீவிர மற்றும் முக்கிய செய்தித்தாள்களை படித்த பின்னரும் என் மனைவி என்னிடம் வந்து நான் கேட்காத புதிய செய்தி ஒன்றினைச் சொல்லுவார். எங்கு படித்தாய் என்று கேட்டால், அழகு நிலயத்தில் இருந்த நாளிதழ் ஒன்றில் படித்ததாக கூறுவார். அதனால் எல்லா அழகு சார்ந்த இதழ்களையும் கிசுகிசுக்களையும் படிக்க ஆரம்பித்தேன். அதன்மூலம் நிறைய விஷயங்களையும் கற்றுக் கொண்டேன்.

அவை என்னை பரபரப்பாக வைத்திருக்க உதவும்.

பேட்டியாளர்: புகழ் ஏன் எழுத்தாளர்களுக்கு ஆக்கப்பூர்வமானதன்று என்று நினைக்கிறீர்கள்?

மார்க்குவெஸ்: புகழானது முதலாவதாக தனிமனித வாழ்க்கையை ஆட்கொள்கிறது. நண்பர்களிடம் செலவழிக்கும் நேரத்தினையும் வேலை செய்யும் நேரத்தினையும் திருடுகின்றது. யதார்த்த வாழ்க்கையினின்று பிரித்து விடுகிறது. ஒரு பிரபலமான எழுத்தாளன் புகழிடமிருந்து தொடர்ந்து பாதுகாத்துக்கொள்ள வேண்டும். இதை இப்போது சொல்லியே தீர வேண்டும் என்றில்லை, என் புத்தகங்கள் என் மரணத்திற்கு பின் வெளிவருவதையே விரும்பியிருப்பேன் ஏனெனில் புகழ் என்னும் வணிகத்தினுள் சிக்கிக்கொள்ள வேண்டியதில்லை. என் விஷயத்தில் புகழினால் ஏற்பட்ட அனுகூலம் அரசியல் பயண்பாடு ஒன்றே. இல்லையெனில் அசௌகரியமாக இருந்திருக்கும். பிரச்சனை என்னவெனில் ஒரு நாளிற்கு இருபத்து நான்கு மணிநேரமும் பிரபலமாக இருப்பீர்கள் அதனால் உங்களால்' நான் நாளை வரை பிரபலமாக இருக்கமாட்டேன் 'என்றோ ஒரு பொத்தானை அழுக்கி' நான் இங்கு இப்போது பிரபலமாக இருக்கமாட்டேன்' என்றோ சொல்லமுடியாது.

பேட்டியாளர்: 'ஒரு நூற்றாண்டுக்கால தனிமை'யின் அசாதாரதமான வெற்றியானது நீங்கள் எதிர்பார்த்த ஒன்று?

மார்க்குவெஸ்: மற்ற எல்லாரையும் விட என் நன்பர்களை மகிழ்விக்கும் என்று எனக்குத் தெரியும். எட்டாயிரம் பிரதிகள் வெளியிடப்போவதாக ஸ்பேனிஷ் வெளியீட்டாளர் சொன்னதை கேட்டவுடன் வியப்பில் திகைத்து விட்டேன் ஏனெனில் என் மற்ற புத்தகங்களின் விற்பனை எழு நூறைத் தாண்டவில்லை. ஏன் பொறுமையாக ஆரம்பிக்ககூடாது என்று கேட்டேன், அவர் இது நல்ல புத்தகம் என்றும் டிசம்பருக்குள் மூவாயிரம் பிரதிகள் விற்பனையாகி விடும் என்றும் கூறினார். உண்மையில் ஒரு வாரத்திற்குள் ப்யூனஸ் ஏர்ஸில் விற்பனையாகிவிட்டன.

பேட்டியாளர்: 'ஒரு நூற்றாண்டுக்கால தனிமை'யின் வெற்றியின் காரணம் என்னவாக இருக்கும் என்று

நினைக்கிறீர்கள்?

மார்க்குவெஸ்: என்னவாக இருக்கும் என்று சிறிதளவு கூட யோசனை இல்லை, என் படைப்புகளின் மிகவும் மோசமான விமர்சகன் நான் தான். லத்தீன் அமெரிக்க மக்களின் தனிப்பட்ட வாழ்க்கையினை சித்தரித்த ஒரு புத்தகம், மனதினின்று எழுதப்பட்ட ஒன்று என்பதே அடிக்கடி நான் கேள்வியுற்ற விளக்கங்கள். இவ்விளக்கங்கள் என்னை வியக்க வைக்கின்றன ஏனெனில் 'வீடு' என்றே முதலில் பெயர் வைக்க விரும்பினேன். மொத்த கதையும் வீட்டைச் சார்ந்ததாகவும், சம்பவங்கள் வெளியில் நடந்தாலும் வீட்டின் மீது அதன் தாக்கம் இருக்கும். பின்னர் அந்த தலைப்பினைக் கைவிட்டுவிட்டேன்.

கதை மக்கோண்டா நகருக்குள் சென்றதிலின்று சம்பந்தம் இல்லாமால் போய்விட்டது.

கதையில் வரும் ஒவ்வொரு கதாபாத்திரங்களையும் வாசகர் தன் விருப்பத்திற்கேற்ப கற்பனை செய்துகொள்ள முடியும் என்பதே நான் கேள்வியுற்ற மற்றொரு விளக்கம். என் புத்தகம் படம் பார்க்கும் ஒருவர் தான் இது வரை கற்பனை செய்திடாத முகத்தை பார்க்கும் ஒரு படமாக மாறுவதை நான் விரும்பவில்லை.

பேட்டியாளர்: உங்கள் படைப்புகளை படமாக எடுக்க விருப்பம் உண்டா?

மார்க்குவெஸ்: என் முகவர் அதை பத்து லட்சம் டாலர்கள் என்று விலையை நிர்ணயித்துவிட்டார். அதையும் அவர்கள் கொடுக்கத் தயாராக இருந்ததால் முப்பது லட்சம் டாலர்களாக உயர்த்திவிட்டார். படமாக எடுப்பதில் எனக்கு ஆர்வம் இல்லை.நான் தடுக்கும் வரை படமாக எடுக்கப்பட மாட்டாது. வாசகர்களுக்கு புத்தகத்திற்குமான தனிப்பட்ட உறவாகவே என் புத்தகம் இருக்க விரும்புகிறேன்.

பேட்டியாளர்: எந்த ஒரு புத்தகமும் ஒரு நல்ல படமாக மொழிப்பெயர்க்கப்பட முடியுமென்று நினைக்கிறீர்களா?

மார்க்குவெஸ்: மிகவும் அருமையான நாவலில் இருந்து உருவாக்கப்பட்ட நல்ல படமென்று சொல்லும்

அளவிற்கு எதுவும் எனக்குத் தோன்றவில்லை.ஆனால், மோசமான நாவல்களினின்று உருவாக்கப்பட்ட மிகவும் அருமையான படங்களும் உள்ளன.

பேட்டியாளர்: படம் எடுப்பதில் ஈடுபாடு உண்டா?

மார்க்குவெஸ்: இயக்குனர் ஆக வேண்டும் என்று நினைத்த காலமும் உண்டு. ரோமில் சில காலம் இயக்கம் குறித்துப் படித்தேன். சினிமா என்னும் ஊடகத்தினுள் எந்த ஒரு வரையறையுமில்லை என்றும் எல்லாம் சாத்தியம் என்றும் நினைத்தேன். ஆனால், சினிமாவில் மிகவும் பெரிய தடை ஒன்று உள்ளது. மொத்தமும் ஒரு கலை. நாம் சொல்ல விரும்புவதை வெளிப்படுத்துவதென்பது மிகவும் கடினமான விஷயம். அதனால் சினிமாவினின்று விலகி விலகி சென்றுவிட்டேன். சினிமாவுக்கும் எனக்குமான தொடர்பு தம்பதிகள் போன்றது பிரிந்து வாழமுடியாது அதேசமயம் சேர்ந்தும் வாழமுடியாது. திரைப்பட நிறுவனமா பத்திரிகையா என்று வந்த போது நான் பத்திரிகையை தேர்ந்தெடுத்துவிட்டேன்.

பேட்டியாளர்: க்யூபா குறித்து நீங்கள் எழுதிக் கொண்டிருக்கும் கதையானது எத்தகையது ?

மார்க்குவெஸ்: உண்மையில் அது ஒரு நீண்ட செய்திதாள் கட்டுரை போன்றது. க்யூப வீடுகளில் வாழ்க்கை எப்படி இருக்கிறது என்றும் பற்றாக்குறைகளை எப்படி சமாளிக்கிறார்கள் என்பது குறித்தும் எழுதிக் கொண்டிருக்கிறேன். கடந்த இரண்டு ஆண்டுகளில் க்யூப பயணத்தின் போது அதிர்ச்சியாக இருந்த விஷயம், கலாச்சார தேவைக்கென முற்றுகை உருவாகியிருக்கிறது. சிலவற்றுடன் ஈடுக்கட்ட வேண்டிய ஒரு சமுகச்சூழல் உருவாகியுள்ளது. மக்களின் மனமாற்றத்திற்கு இம்முற்றுகையின் பங்களிப்பு மிகந்த ஆர்வத்தினை ஏற்படுத்தியுள்ளது. நுகர்வோருக்கு எதிரான சமூகத்திற்கும் நுகர்வு சார்ந்த சமூகத்திற்கும் இடையே இருக்கும் மோதல் குறித்தானது. என்ன எழுதவேண்டும் என்று நினைத்த காலத்தில் இது ஒரு எளிமையான பத்திரிகையாக இருக்கும் என்று நினைத்தேன், ஆனால் மிகவும் நீண்ட சிக்கலான

ஒரு புத்தகமாக மாறிவருகின்றது. 'ஒரு நூற்றாண்டுக்கால தனிமை'யில் வரும் கரிபிய வாழ்கையினின்றும் யதார்த்த வாழ்க்கை எவ்வளவு அற்புதமானதென்ற வரலாற்று உண்மைகளை வெளிப்படுத்தும் புத்தகமாக இருக்கும்.

பேட்டியாளர்: ஒரு எழுத்தாளனாக நீண்ட கால அபிலாஷைகளோ இல்லை வருத்தமோ உள்ளதா?

மார்க்குவெஸ்: புகழ் பற்றி நான் சொன்ன பதிலானது இதற்கும் பொருந்துமென்று நினைக்கிறேன். நோபல் பரிசில் எனக்கு ஆர்வமுள்ளதா என்று கேட்டபோது அது என் முழுமையான அழிவிற்கு அடிக்கல்லாக இருக்கும் என்றே நினைத்தேன். அதற்கு தகுதியான ஒருவனாக இருக்க நிச்சயமாக விரும்புகிறேன் எனினும் அப்பரிசினை வாங்குவதென்பது மிகவும் பயங்கரமான ஒன்றாகவே நினைக்கிறேன். புகழினால் ஏற்படும் பிரச்சனைகளை மேலும் சிக்கலான ஒன்றாக மாற்றும் என்றே நினைக்கிறேன். என் வாழ்வில் நான் வருந்தும் ஒரே விசயம் மகள் இல்லை என்பதுதான்.

பேட்டியாளர்: தற்போது எழுதிக்கொண்டிருக்கும் புத்தகம் குறித்து எதாவது சொல்ல விரும்புகிறீர்களா?

மார்க்குவெஸ்: என் வாழ்வின் மிகச்சிறந்த புத்தகத்தினை நான் எழுதப் போகிறேன் என்னும் எண்ணமே என்னை முழுமையாக சமாதானப்படுத்தியுள்ளது. எப்போது எந்த புத்தகமாக இருக்கும் என்றுத்தெரியவில்லை. இப்போது நான் உணருவது போல மீண்டும் உணர்ந்தால் மிகவும் அமைதியாக இருப்பேன் அப்போது தான் யோசனைகள் கடந்துச் செல்லும்போது சரியாக அவற்றை சி றை ப் ப டு த் தி வி ட முடியும் என்னைப்பொருத்த மட்டில்.

மேய்ச்சலிலிருந்து விளைச்சலுக்கு — வாசிப்பின் அரசியல்

ஜமாலன்

பிரதியின் வாசிப்பின்பம் எனது உடலானது ஒரு புதிய கருத்தை உடலில் அதுபோன்று இல்லாத ஒரு கருத்தை நான் தேடி அடைந்துவிட்ட அக் கணமே.

— ரோலாண்ட் பார்த்

(The Pleasure of the Text)

நூற்கள் அர்த்தங்களை படைக்கிறது, அர்த்தங்கள் வாழ்க்கையை படைக்கிறது.

— ரோலாண்ட் பார்த்

(The Pleasure of the Text)

சிலநேரங்களில் நான் சந்தேகிப்பதுண்டு நல்ல எழுத்தாளரைவிட நல்ல வாசகர் அரிதான கருநிற அன்னபட்சிப் போன்றவர். வாசிப்பு, தெளிவாக, எழுத்திற்கு பிறகு வரும் ஒரு செயல்: அது அதிக தன்னடக்கமுள்ளது, அதிக முனைப்பற்றது, அதிக அறிவுசார்ந்தது.

— ஜார்ஜ் லூயி போர்ஹேஸ்

(Preface to A Universal History of Infamy)

வாசிப்பு இரண்டு வகையானது. ஒன்று துரிதவாசிப்பு மற்றது நிதான வாசிப்பு. அல்லது அதை இப்படி சொல்லலாம் ஒன்று மேய்ச்சல் மற்றது விளைச்சல். மேய்ச்சல் தற்காலிக பசியை போக்கக்கூடியது. விளைச்சல் பலரின் பசிக்காக பல்கிப் பெருகக்கூடியது. தலைமுறைகளை உருவாக்கக் கூடியது. இவ்வுருவகங்களிரண்டும் மனித உடலின் அடிப்படை இயல்பூக்கங்களான பசி மற்றும் பாலுணர்ச்சி சார்ந்தவை. இரண்டும் சமூக உற்பத்தி சார்ந்தவை. பசி உணவு உற்பத்தியோடும், பாலுணர்ச்சி உடல் உற்பத்தியோடும் உறவு கொண்டது. பசி நுகர்ச்சியோடும் பாலுணர்ச்சி இன்பத்துடனும் உறவு கொண்டது.

துரிதவாசிப்பு நுகர்வின் மகிழ்ச்சியைத் தரக்கூடியது.

தற்காலிகமானது. துரித உணவகங்களைப்போல நேரத்தை மிச்சப்படுத்தி துரிதமாக நுகர்வதற்காகவும், அதனடிப்படையில் எழுத்தை பண்டங்களாக மாற்றுவதுமான வாசிப்பு. நிதானவாசிப்பு இன்பத்தை தரக்கூடியது. நீடித்த தன்மைக் கொண்டது. இன்பம் என்பது தாக்கத்தை ஏற்படுத்தும் ஒன்று. தாக்கம் உணர்வுரீதியானது அல்ல. உடல்ரீதியானது. மூளையின் சங்கேத அமைப்பை மாற்றியமைக்கக் கூடியது.

மகிழ்ச்சி வேறு இன்பம் வேறு. மகிழ்ச்சி நுகர்வோடு உறவு கொண்டது. இன்பம் அனுபவத்தோடு உறவுகொண்டது. மகிழ்ச்சி ஒரு தற்காலிக இதம் தரும் உணர்ச்சி. இன்பம் இதமாக மூளைக்குள் கட்டமைக்கப்படும் ஓர் அனுபவம். பசியைப்போல நுகர்வு தற்காலிக உணர்வை நிறைவேற்றிக் கொள்வது. தாக்கம் ஒரு குறிப்பிட்டவகை உணர்வாகக் கட்டமைவது. அது நமது புலனின் செயலை மாற்றியமைக்கிறது. நமக்குள் ஒரு நிரந்தர மாற்றத்தை உருவாக்கிவிடுவது. ரோலான் பார்த் சொல்வதைப்போல நமது உடல் ஒரு புதிய கருத்தைக் கண்டடைந்து பரவசம் கொள்ளும் தருணம். வாசிப்பு புதிய அனுபவங்களைத் தருவதாக இருக்க வேண்டும். அவ்வனுபவம் பரவசத்தின் கிளர்ச்சியைத் தரக்கூடியதாக இருக்கும். அத்தகைய வாசிப்பே நிதான வாசிப்பு. துரித வாசிப்பு என்பது ஒரு பிரயாணத்தில் நேரம் செலவிட அல்லது பொழுதுபோக்கிற்காக வாசிப்பது.

பொழுதுபோக்கிற்காக அல்லது போரடிப்பதால் வாசிப்பது எப்படி வாசிப்பு அனுபவத்தை நீர்த்துபோகச் செய்து வெறும் தற்காலிக உணர்ச்சியாக மாற்றி உள்ளது என்பதையும், பொழுதுபோக்கு என்ற உணர்வு அதாவது சலிப்பு என்கிற வாதை எப்படி ஓர் உடலுக்குள் கட்டமைக்கப்பட்டு அதைப் போக்க துரிதவாசிப்பு என்பதையும், மூளையின் கூர்ந்த அறிதல் திறனை மழுங்கடித்து ஒரு பொது உணர்வாக மாற்றப்பட்டது என்பதையும் அறிந்துகொள்ள முயலலாம். இதை அறிந்து நம்மிடமிருந்து பிரக்ஞைபூர்வமாக அவ்வகை உணர்வை வெளியேற்றுவதே நிதான வாசிப்பிற்கான முதற்படி.

பின்நவீனத்துவம் என்று இன்று அறியப்படும் ஒன்றின் ஆரம்பகால அதாவது 1960—களில் அதன் உணர்வுதளம்பற்றி பேசிய ஆய்வாளரான சூசன் சாண்டக் போரடித்தல்

அதாவது 'போர்டம்' என்பது பற்றி 1965 ல் எழுதப்பட்ட 'One Culture and the New Sensibility' என்கிற தனது நூலில் சொல்கிறார்.

பெக்கெட் மற்றும் பர்ரோஸ் போன்றோரின் கதையாடல்கள் பற்றிய பொதுவான குற்றச்சாட்டு வாசிக்கக் கடினமானது, அவை 'போரிங்' ஆனவை என்பதே. ஆனால் போர்டெம் என்று சொல்வது உண்மையில் பாசாங்குத் தன்மைக் கொண்டது (ஹிப்போகிரிட்டிக்கல்). அதாவது உணர்வுரீதியாகச் சொன்னால், போர்டெம் என்ற ஒன்றே இல்லை. சில உயிர்களின் விரக்திக்கான (அதாவது பிரஸ்டேரஷனுக்கான) மற்றொரு பெயரே போர்டெம். மேலும் நம் காலத்து கலை ஆரவமூட்டக்கூடிய புதிய மொழியில் விரக்தி (பிரஸ்ட்ரேட்டிங்) என்பதை மேததபடித்தவர்களின் ஓர் உணர்வுநிலையாகச் சொல்கிறது. இந்தக் குறிப்பை விவரிப்பதற்கு முன்பு இதில் உள்ள இரண்டு படைப்பாசிரியரகளை பற்றியும் இலக்கிய வாசிப்பை மாற்றியமைத்த போர்ஹேஸ் என்ற படைபபாசியரைப் பற்றியும் பருந்துப் பார்வையாகச சிலவற்றை அறிவது அவசியம்.

உலக இலக்கியத்தின மூன்று முக்கிய "ப"—ககள் (Three Great B's) போர்ஹேஸ், பெக்கெட், பர்ரோஸ் என்கிறாரகள இலக்கியத் திறனாயவாளர்கள. இவர்கள் மூவரும் புதிர்நடையில எழுதி மொழியின் புனைவு தளத்தை அடுத்த நிலைக்கு கொணடு சென்ற முக்கியமான இலக்கிய மேதைகள். இம்மூவரில போர்ஹேஸ் பாதிக்காத உலக இலக்கிய ஆசிரியர்கள் குறைவே.

போர்ஹேஸ் நவீன இலக்கியத்தில புதிய பாதையை வகுத்தவர். தனது ஆழ்ந்த அகன்ற வாசிப்பின் வழி தான் படைத்த கதைகளில் உலகின் அனைத்து மனிதர்களின் வகை மாதிரிகளையும் கொணடுவந்து மொழியின் உள்ளாரந்த தளத்திலிருந்து கிளைக்கும் புனைவை தனது புதிர்நடை மூலம் உருவாக்கியவர். பழங்கதைகளும், நாடோடிக் கதைகளும், வரலாற்றுத் தருணங்களும், புவியின் பல புதிர் அமைப்புகளையும் தனது கதைகளுக்குள் உருவாக்கியவர். இவரது "டிலான், உக்பார், ஆர்பிஸ் டெரத்தியஸ" என்ற கதை உலக அளவில பேசப்பட்ட ஒன்று. இக்கதை இலக்கிய வகைமையில முற்றிலும் புதியதொரு கதைசொல்லும் முறையை உருவாக்கியது. இக்கதை வழியாக வாசிப்பு

என்பதன் தளம் விரிவடைந்தது. இக்கதையில கலைக்களஞ்சியம் வழியாக தெரியவராத கற்பனையான ஒரு நாடு உக்பார். இதன்மீது அறிவுஜீவிகளின் பல கற்பனைகள் புனையப்பட்டு அதன்வழியாக 'ட்லான்' என்று ஒரு உலகு படைக்கப்படுவதை எழுதுவார். இக்கதை அன்றைய அதிகாரவர்க்க அரசுகளினை பகடி செய்வதாக விரிந்து செல்லக்கூடியது. வரலாறு, பண்பாடு, மொழி உள்ளிட்ட அனைத்தும் எப்படி படைக்கப்படுகிறது என்பதை உள்ளார்ந்த தளத்தில வைத்து எழுதப்பட்ட ஒரு கற்பனைப் புனைவு. கதைகள், புனைவுகள் வழியாக எப்படி ஒரு நாடு கட்டமைகிறது என்பதை எழுதிக்காட்டிய கதை அது. பல கட்டுரைகள் ஆதாரங்கள் வரலாற்றுத் தரவுகள் வழி உருவாக்க வேண்டிய ஒரு சிந்தனையை இக்கதை வாசிப்பு எளிமையாக நமக்குள் கொண்டு சென்றுவிடுகிறது. மனிதர்கள் பிரபஞ்சத்தை தன்னோடு பிணைத்துக் கொள்ள தங்களைச் சுற்றி உருவாக்கிக் கொண்ட கதைகளும புனைவுகளும்தான் எல்லாம். இவை காலந்தாண்டிய உண்மைகள் அல்ல என்பதை,

"தனது வாழ்வின் முக்கிய நிகழ்வு எனது தந்தையின நூலகத்தில் கழித்த நாட்கள்தான்" என்று கூறும் போர்ஹெஸ் உலகின் அனைத்து பண்பாடுகளையும், அதன் கதை மாந்தர்களையும் தனது கதைகளுக்குள் கொண்டுவந்தவர். வாசிப்பு எப்படி ஒரு இலக்கிய ஆசிரியனின் படைப்புலகை உருவாக்குகிறது என்பதற்கு போர்ஹேஸை தவிர ஒரு சிறந்த உதாரணம் இல்லை. புத்தகங்களையும், நூலகங்களையுமே தனது பல சிறுகதைக்கான தளங்களாகக் கொண்டு எழுதியவர். தனது வாசிப்பு என்ற தளத்தின்மீதே தனது படைப்புலகை கட்டமைத்தவர். வாசிப்பு என்பது ஆழ்ந்ததாகவும் அகன்றதாகவும் அமைவது ஒரு படைப்பாளிக்கு மட்டுமல்ல படைப்பை உள்வாங்கும் வாசிப்பாளனுக்கும் அடிப்படை. 19—ஆம் நூற்றாண்டின் படைப்பில் ஆளுமை செலுத்திய இயற்கைவாதத்திற்கும் யதார்த்தவாதத்திற்கும எதிராக எழுதப்பட்ட இவரது கதைகள், புதியதொரு இலக்கியக் கோட்பாட்டை உருவாக்கியது. புனைவு என்பதை முழுமையாக புனைவாகவும், அதனவழியாக வாசிப்பின் பரவசத்தையும் உருவாக்கியது. புதுமைப்பித்தன் சொல்வதைப்போல எழுத்தாளன் கடவுளைப் படைக்கிறான். கடவுள்

மனிதனைப் படைக்கிறான் என்பது போர்ஹேஸின் எழுத்திற்கு பொருத்தமான ஒரு வாசகம்.

ஸாமுவெல் பெக்கெட் தனது புனைவில் முற்றிலும் புதியதொரு உணர்வு நிலையை உருவாக்கியவர். தமிழில் மௌனி போன்றொதொரு எழுத்து நடையாளர். அவரது "வெயிட்டிங் பார் கோதோ" மிகவும் பிரபலமான ஒரு நாடகம். அந்நாடகத்தில் காலங்காலமாகக் காத்திருத்தல், அது எதற்காக வேண்டுமென்றாலும் இருக்கலாம், ஒரு தீர்க்கதரிசிக்காக, ஓர் அவதாரத்திற்காக, ஒரு கடவுளுக்காக, ஒரு காதலுக்காக, ஓர் உறவுக்காக, ஒரு வாழ்விற்காக இப்படி எதற்காகக் காத்திருந்தாலும், அவ்வகை உணர்வு எப்படி வாழ்வை பயனுள்ளது என்ற கருத்தாக்க—மையம் வழியாக வாழும் கணங்களைப் பயனற்றதாக ஆக்குகிறது என்கிற முதலாளியம் உருவாக்கிய அபத்தத்தை விவரிக்கும் நாடகம்.

முதலாளியம் உருவாக்கிய போர்டெம் பற்றியும் அதன் அபத்தம் பற்றியும் தத்துவ தளத்தில் விவரிக்கும் நாடகம். முதலாளிய உணர்வு மையத்தை நுகர்வு வெறிக்கான அடிப்படையை விமரிசித்த ஒரு முக்கியமான நாடகம். மதங்கள் உருவாக்கிய ஆன்மீக உணர்வு வறண்டு, நம்பிக்கைக்காகக் காத்திருக்கும் கடந்தநிலையான தத்துவங்கள் உள்ளிட்டவை உருவாக்கிய வாழ்வுபற்றிய பயன்மதிப்பு, முதலாளியத்தினால் நுகர்வின்பமாக வாழும் உடல்களுக்குள் முதலீடு செய்யப்பட்டதை நுட்பமாக உணர்ந்து வெளிப்படுத்திய நாடகம். போர்டெம் என்பதைத் திரும்பத் திரும்ப ஒன்றை நிகழ்த்துவதன் வழியாகப் பார்வையாளருக்கு அந்த உணர்வை நிகழ்த்திக்காட்டிய நாடகம். இச்சமூகத்தில் புத்துணர்ச்சி என்பதை நுகர்வின்பமாக மாற்றி விற்பனை செய்வதற்கான உத்தி எப்படி உருவாகுகிறது என்பதையும் அதன் அபத்த உணர்வையும் வெளிப்படுத்திய நாடகம். அதில் வரும் அடிமையைக் கொண்டிருக்கும் போஸோ என்ற பாத்திரம் ஒரு முக்கிய முதலாளியக் குறியீடு. இறுதிவரை வராத கோதோ ஒரு மதவாதக் குறியீடு.

வில்லியம் பர்ரோஸ் மற்றொரு முக்கியமான நாவலாசிரியர். அவரது "நேக்கட் லஞ்ச்" மிகவும் பிரபலமானது. 1959—ல் 'நான் ஒரு பொழுதுபோக்காளன் அல்ல' என்று அறிவித்த பர்ரோஸ், விளிம்புநிலை அல்லது மைய அதிகாரத்தால் உள்ளடக்கப்பட்ட பண்பாட்டை தனது எழுத்தில் புனைவுகளாக்கியவர். அவரது சொந்த

வாழ்வை உள்ளடக்கிய பகுதிகளை, தன்வரலாற்றுத் தனமைக்கொண்ட தனது மாற்றுத் தன்னிலையை நாயகனாக்கி எழுதிய நாவலே "நேக்கட் லஞ்ச்". அதீத போதை, தன்பாலியல் விருப்பு என்பதைக் கொண்ட ஓர் உள்ளடக்கப்பட்ட இருள்பகுதியின் பண்பாட்டை தனது நாவலின் களமாக்கி எழுதியவர். அமெரிக்க வரலாற்றில் இத்தகைய கீழ்மையான மொழியில் எழுதப்பட்ட நாவல் ஒன்று இல்லை என சில பகுதிகளில் தடை செய்யப்பட்ட நாவல்.

ஒருமிப்பு அற்ற துண்டாடப்பட்ட கதைகளைக் கோர்த்து அ—நேர்க்கோட்டு முறையில் எழுதப்பட்ட இந்நாவல் எந்தவொரு பகுதியிலிருந்தும் வாசிப்பதற்கு ஏற்ப பர்ரோஸால் எழுதப்பட்டது. மதம், மொத்தத்துவ அதிகாரச் சமூகம், ஆகியவற்றிற்கு எதிராக போதை, காமம் இவற்றைக் களமாகக் கொண்டு எழுதப்பட்ட நாவல். புதிய ஒடுக்குமுறை அரசதிகாரம் கொண்ட சமூகத்தையும் அது மனித உடலை விஞ்ஞானம் கொண்டு கட்டுப்படுத்துவதையும், மதங்கள் வியபாரமாக மாறியிருப்பதையும், போதை மற்றும் தன்பால் விருப்பை அடக்குவதன் வழியாக உருவாகும் கண்காணிப்பையும் விவரிக்கும் நாவல். பல தனிப்பகுதிகளாகவும் இணைப்பதற்கேற்ற வகையில் முழுமையாகவும் ஒருவகையான எழுத்தின் அபத்தத்தை வெளிப்படுத்தும் நாவல். ஏஜெண்ட் லீ என்ற மையப்பாத்திரம் சந்திக்கும் நேர்கொள்ளும், போதை உண்டு எற்படுத்திக் கொள்ளும் அனுபவங்கள் அதன் உருவெளிக் கற்பனைகள் என பல அடுக்கு உலகங்களை முன்னும் பின்னுமாக வைத்து எழுதப்பட்ட ஒரு நாவல்.

இவ்விரு நாவலாசிரியர்களின் எழுத்துக்களும் போர்டெம் என்று பரவலாக குற்றம் சாட்டப்பட்டது என்பதை சொல்லி அப்படி ஓர் உணர்வுநிலையே இல்லை, அது ஒரு பாசாங்குத்தனம் அதாவது ஹிப்போகரசி என்கிறார் சாண்டாக். அது ஒருவகை விரக்தியின் வெளிப்பாடு என்கிறார். ஒன்று போரடிக்கிறது என்றால், அது நமது விரக்தியின் வெளிப்பாடுதான். விரக்தியடைந்த, செயலற்ற நவீன மனிதனின் ஓர் உணர்வு. மெத்தபடித்தவன் என்பது இந்நவீன மனிதனைத்தான்.

மெத்தப்படித்த இந்த நவீன மனிதன் என்னவாகி

உள்ளான் என்றால் நுனிப்புல் மேயும் துரிதவாசிப்பு நுகர்வு எந்திரமாகி உள்ளான். அவனுக்குத் தீனிப்போடும் நுனிப்புல்களை எழுதிக் குவிக்கும் எழுத்தாளர்கள் பல்கிப் பெருகி உள்ளனர். இவர்கள் அனைவரும் தன்னை அறியாமல் அரசு எந்திரத்தின் ஒரு உதிரிப்பாகமாக அதிலும் துருவேறிய உதிரிப்பாகமாக உள்ளனர். இவர்கள் நுனிப்புல் எழுத்தை மைய எழுத்தாக மாற்றி சிறுசூழலில் தமிழில் தழைத்து காத்து வந்த சீரிய இலக்கியத்தை புரியாமை என்கிற தனது நுனிப்புல் மனோபாவத்தில் விளிம்பிற்குத் தள்ளி சிறுபான்மையாக்கி அந்த இனத்தையே அழிக்கும் ஓர் அதிகார பேரெந்திரமாக மாறி உள்ளனர். அதன்மூலம் வாசிப்பு என்பதை நுகர்வின்பமாக மாற்றி மனித உடலின் யத்தனங்களை மொண்ணையாக்கி உள்ளனர்.

குறிப்பாக தமிழ் இலக்கியச் சூழல் பதிப்பக வியாபாரிகளால் அதன் உச்சத்திற்கு கொண்டு செல்லப்பட்டு உள்ளது. வணிக எழுத்தை இலக்கிய எழுத்தாக மாற்றி அதற்கு அங்கீகாரம் தரும் ஒரு சூழலை உருவாக்கி கட்டமைத்து காத்துவருகின்றனர். இந்த அறிவு முடக்கப்பட்ட தமிழ்ச் சூழலில்தாின் வாசிப்பு என்பதன் ஒரு படைப்பாக்க நிலையை உரத்து சொல்லவும் கட்டமைக்கவும் வேண்டி உள்ளது. ஆனால் அந்த உரத்த குரல் ஒலிப்பவரின் காதிலேயே விழாமல் வெறும் மனதின் குரலாக மாற்றப்படும் அளவிற்குக் கூச்சலும் குழப்பமாக மாற்றப்பட்டு உள்ளது தமிழ்ச் சூழல். திட்டமிட்டு சீரிய இலக்கியத்தை புரியாமை, போர்டெம் என்று வகைமைக்குள் தள்ளும் பணியை தனது பதிப்பக பையை நிரப்பும் இக்குழு தீவிரமாகச் செயல்பட்டு வணிக எழுத்தையும் சீரிய எழுத்தையும் அதன் இடைவெளியையும் இல்லாமலாக்கியுள்ளது. எழுத்தும் உழைப்பும் அறிவுஜீவிதமும் ஏளனப் பொருளாக்கப்பட்டு உள்ளது. பயனற்றதாக மாற்றப்பட்டு உள்ளது, இந்த எழுத்து முதலாளிகளால். இது ஒரு கலாச்சாரப் போராக மாறியுள்ளது இப்போது. சீரிய எழுத்தை போர்டெம் என்று மாற்றுவதன் வழியாக முதலாளியக் கருத்து எந்திரமாக மாறியுள்ளது இக்கும்பல்.

அப்படியென்றால் வாசிக்கும் பிரதிகளில் போர்டெம் இல்லையா? நிச்சயமாக இல்லை. காரணம் அப்பிரதியும் யாரோ ஒருவருக்கு ஆர்வமூட்டக் கூடியதாக இருக்கும்

என்பதால் பிரதியின் வாசக இடையீடுதான் போர்டெம் என்பதை உருவாக்குகிறது. போர்டெம் எழுத்திலோ பிரதியிலோ இல்லை. ஒவ்வொரு கணமும் வாழத்தகுந்த உயிர்ப்புள்ள ஒன்றாக ஆகும்போது போர்டெம் என்ற தனியான கணங்கள் சாத்தியமா? வாழத்தகுதியற்றதான கணங்களை இந்தச் சமூகம் நமக்களிக்கிறது அல்லது நாம் அத்தகைய கணங்களை உருவாக்கிக் கொள்கிறோம் என்பதே இதன் பொருள்.

வாழ்வு பற்றிய மனித உடலின் நிலையை அதாவது காலத்தை உணர்வுரீதியாக பயனுள்ளது அல்லது பயனற்றது என்பதாகப் பிரித்திருப்பதின் விளைவு அல்லது பிரித்தறியும்படி மாற்றப்பட்ட மனித உணர்வின் நிலையே இந்த போர்டெம் என்பதற்கான தத்துவார்த்த நிலை. காலத்தைப் பயனுள்ளதாகவும் பயனற்றதாகவும் பிரித்திறிவதற்கான புலன்செயல் கட்டமைக்கப்பட்டிருப்பதே இதற்கான உடலரசியல் நிலை. அதாவது புலன் உணர்வுடன் இணைக்கப்பட்ட இன்பம் அல்லது இதம் என்பது நுகர்விற்கான வெற்று மகிழச்சியாகக் கட்டமைக்கப்பட்டிருப்பதே இதற்கான சமூக—பொருளியல் அரசியல் நிலை. காலம் என்பது நம்மை அறியாமல் பணமதிப்பும் பயன்மதிப்பும் கொண்டதாக மாற்றப்பட்டுள்ளது. பணமோ பயனோ அற்ற காலமே போர்டெம் எனப்படுகிறது.

பிரதியின் வாசிப்பில் நமது உணர்வு நிலையை உணரமுடியும். ஒரு பிரதி போரடிக்கிறது என்றால், அது பிரதியின் குறை அல்ல. நமக்கு ஏன் இந்த போர்டெம் வந்தது என்பதாக ஆராய்வதன்மூலம், பிரதிக்கும் நமக்கும் இடையிலான அரசியல் உறவை அதாவது நமது "தான்" என்கிற தன்னிலைக் கட்டமைப்பின் அரசியலை அறிந்துகொள்ள முடியும்.

ஒன்று புரியவில்லை என்றாலோ, போரடிக்கிறது என்றாலோ பிரதியோடு நாம் கொள்ளும் உறவை முதலில் ஆராய்வது அவசியம். நமது குறைகளை நாம் பிரதியில் ஏற்றிக் காணக்கூடாது. நாம் நம்மை வாசிப்பிற்குப் பயிற்றுவித்துக் கொள்வது அவசியம். ஒருவகையில் நிதான வாசிப்பு என்பதே ஒரு புரட்சிகர நடவடிக்கைதான். அது நம்மை நமது உடலை விமர்சனரீதியானதாக மாற்றுகிறது. பொதுக் கருத்தியலுக்கும், பொதுபுத்திக்கும் எதிரானதாக

மாற்றுகிறது. துரித வாசிப்பு என்பது இயல் உலகின் பொது அதிகார அமைப்பை அப்படியே ஏற்றுக்கொள்ளும் மந்தையாக மாற்றுகிறது. விளைச்சலை பற்றி அக்கறையற்ற மேய்ச்சலில் சுகம் காணும் மந்தையாக மாற்றுகிறது.

போர்டெம் தமிழில் சொல்லற்ற ஒன்று. அலுப்பு, அயர்ச்சி, சோர்வு போன்றவற்றை குறிப்பதாகக் கொள்ளலாம். இந்த உணர்வைக்கூட நாம் மேற்கிலிருந்துதான் கற்றுள்ளோம். அதாவது கொள்ளை நோயாலும், போர்களாலும் அழிமதிக்கு ஆளான ஐரோப்பிய மனிதனின் கையறுநிலை உருவாக்கிய மனித முறிவின் ஒரு வெளிப்பாட்டு உணர்வே அது. போர்டெம் என்பதை ஆராய்ந்தால், தொழில் சமூகங்களிலிருந்து தொழில்நுட்ப சமூகத்திற்கு மாறிய காலத்தின் ஒரு புதிய உணர்வுநிலையாக அறியலாம். போர்டெம் அதாவது அலுப்பும் சலிப்பும் நிறைந்த ஓர் உணர்வு தொழில்துறை அந்நியமாதல் என்கிற மார்க்சிய நவீனத்துவ கருத்தாக்கத்தின் ஒரு புதிய பின்நவீன உணர்வாக வெளிப்படுவதாகக் கொள்ளலாம்.

படைப்பாற்றல் மிக்கதான மனித உடல்கள், முதலாளித்துவ அரூபமாக்கப்பட்ட உற்பத்தியிலிருந்து அந்நியமாக்கப்பட்டதால் உயிர்ப்புடன் செயல்பட முடியாது வாழ்ந்து சலிக்கும்படி ஆக்கப்பட்டு உள்ளது. வாழ்க்கை அலுப்பும் சலிப்பும் நிறைந்தாக மாற்றப்படும்போது, நுகர்ச்சியால் அவற்றை நிறைவு செய்வதற்கான மகிழ்ச்சியை தரக்கூடியதாகக் கட்டப்பட்டதே நுகர்வுக் கலாச்சாரம். அது துரித உணவைப்போல, துரித உணர்வு, துரித சிந்தனை, துரித வாசிப்பு என்பதைக் கட்டமைக்கிறது. அதனால் நுகர்வுகலாச்சாரத்திற்கு போர்டெம் என்கிற உணர்வு அவசியப்படுகிறது. இது எண்ணற்ற நூல்களை, எழுத்துகளை, கதைகளை, கற்பனைகளை பெருக்குகிறது. இதன் ஒரு விளைவே வெகுசனக் கலாச்சாரத்திற்காக என எழுதிக் குவிக்கப்படும் எழுத்துகள். எல்லோருக்கும் புரியும்படிதான் எழுதுவேன் அதுவே சாதுர்யம் என்று அடம்பிடித்து அள்ளிவிடப்படும் எழுத்துகள்.

போர்டெம் என்கிற நவீன உணர்வு நவீன முதலாளித்துவத்தின் அதாவது நவீனத்துவத்தின் உணர்ச்சி—மூலதனம் (Emotional Capital) என்று சொன்னால் மிகையாகாது. இம் மூலதனத்தின் மூலம் கலாச்சார தளத்தில் மனித உயிர்களின் அமைவு உள்ளீடற்றதான,

இலட்சியமற்றதான நுகர்வு எந்திரங்களாகக் கட்டமைக்கப்படுகிறது. நுகர்ச்சியின்றி வாழ்வே இல்லை என்பதாகவும், நுகர்ச்சி என்பதே வாழ்வு என்பதாக மாற்றியமைக்கப்படுகிறது. இதற்கு எதிரான புரட்சி என்பது நமது உணர்வை நிதானவாசிப்பின் மூலம் புதிய உயிரிகளாகக் கட்டமைத்துக் கொள்வதே. உயிர்த்தலுக்கான நமது உரிமையைப் போராடிப் பெறுவதே. அதற்கு நிதான வாசிப்பைக்கோரும், எழுத்தாளனோடு சேர்ந்து தானும் எழுதும் பிரதிகளின் பெருக்கம் அவசியம்.

நவீனத்துவவாதம் எனப்படும் மாடர்னிசத்தின் ஓர் இலக்கிய வெளிப்பாட்டு உத்தியே நாவல் என்கிற வடிவம். மார்க்சீயம்கூட ஒரு நவீனத்துவ கருத்தாக்கத்தை உள்வாங்கிய சிந்தனையே. அதாவது நவீனத்துவம் என்பது தெகார்தேவிடம் துவங்கிய சிந்திப்பதால் மனிதன் என்கிற காஜிட்டோவை அடிப்படையாகக் கொண்ட ஒன்று. அது பகுத்தறிவுவாதத்தைத் தனது உலக நோக்காகக் கொண்டது. நாவல் என்கிற இலக்கியவடிவம் இத்தகைய பகுத்தறிதல் என்கிற தர்க்கசிந்தனை முறையுடன் உறவு கொண்டது. அந்தவகை உறவே யதார்த்தவாத நாவல்களின் அடிப்படை. யதார்த்தத்தில் இருப்பதை எழுதுவது அல்ல புனைவு. யதார்த்தத்தில் இருப்பதாக நம்பப்படுவதை இல்லாததாக அல்லது இருப்பது என்பது இல்லாததாக இருப்பதே என்பதை எழுதுவதே புனைவு. புனைவு என்பது இயல் உலகின் உண்மையை எழுதுவது அல்ல அதன் பொய்மையை எழுதுவது. அப்படி ஓர் இலக்கிய கோட்பாட்டில் எழுதப்படும் நாவல்களே வாசிப்பவரின் சிந்தனையைத் தூண்டக் கூடியதாக, வாசிப்பவனை மாற்றியமைப்பதாக இருக்கும்.

அதனால்தான் யதார்த்தவாத நாவல்களில் உண்மைகளைத் தேடி அலையும் ஒரு துப்பறியும் சாம்புவாக வாசகன் மாறுகிறான். ஆசிரியன் அறம் போதிக்கும் மரமாக தன்னைத் தனது நாவலுக்குள் கிளை பரப்புகிறான். வாசிப்பவன் நாவலை புனைவாகக் கொள்ளாமல் உண்மையாக எண்ணி எனது ஊர் பெண்ணை, எனது மதத்தை, எனது சாதியை, எனது இன்னபிறவை... கீழிறக்கம் செய்து கேவலப்படுத்திவிட்டதாகக் கொதித்து எழுகிறான். அறம் போதிக்க எண்ணியும், அறத்திற்கு விருதாக முரசறிவிக்கப்படும் ஏக்கத்திலும் திளைக்கும் ஆசிரியன்

தனது நாவலின் உண்மைக்கு எதிரான குரலைக் கண்டு மிரட்சியடைகிறான். தனது புனைவிற்குள் ஒலிக்க வேண்டிய பண்பாட்டுக் குரல் அதற்கு வெளியே ஒலிப்பதைக் கண்டு திகைக்கிறான். அறிவார்ந்த தளத்தில் நிதான வாசிப்பைக் கோரும் எழுத்து இத்தகைய ஒலித்தல்களை உருவாக்காது. அதன் நோக்கம் பிரதியோடு வாசகனின் விளையாட்டை உருவாக்கி அவனை அறிவார்ந்த சிந்திக்கும் தளத்திற்கு நகர்த்துவதே. அப்படி நகர்த்தமுடியாத எழுத்து போர்டெம் சிக்கலுக்குள் சிக்கிக் கொள்கிறது.

போர்டெம் அதாவது "போர்" அடிக்கிறது என்பது போன்ற நேரத்தை பயனுள்ளது, பயனற்றது மற்றும் இன்பநோக்கு ஆகியவற்றுடன் இணைத்து பேசுவது ஒரு பழக்கப்படுத்தப்பட்ட நுகர்தலின் அடிப்படையிலிருந்து வருகிறது. போரடிக்கிறது என்பதைவிட பழகிப்போன மந்தையான ஒரு மொண்ணை வாழ்வை திரும்பத் திரும்ப ஏற்கவும், உற்பத்தி செய்யவும் அது நிர்பந்திக்கிறது என்பதே. தொடர்ந்து போர்டெமை உருவாக்குவதன்மூலம் முதலாளித்துவம் இரண்டு நன்மைகளை அடைகிறது. 1. பண்டங்களின் நுகர்ச்சிக்கு அடிமையான இன்றைய வாழ்வை அப்படியே காப்பாற்றிக் கொள்கிறது. 2. நுகர்ச்சியை நிறைவுசெய்ய தனது நுகர்வுப்பொருள் உற்பத்தியை பெருக்குகிறது. அதாவது பிள்ளையைக் கிள்ளிவிட்டு தொட்டிலை ஆட்டுகிறது. இந்த வலைப்பின்னலுக்குள் முதலாளித்துவம் ஒரு யதார்த்தத்தைக் கட்டமைத்து உள்ளது. அது பல மதிப்பீடுகளை உருவாக்கி உள்ளது. அந்த யதார்த்தத்தை உண்மையாகவும், அந்த மதிப்பீடுகளை உன்னதமாகவும் நம்மை நம்ப வைப்பதே நவீன நாவல்களின் முக்கியப்பணியாக உள்ளது. அதாவது தனக்கான உலகை நாவல்கள் வழியாகவும் கட்டமைக்கிறது. ஆக, "போர் அடித்தல்" என்பது நுகர்வு அடிப்படையிலான ஒன்று. நாவல் நுகர்வை தாண்டிய ஒன்று. அதாவது நாவல் வாசிப்பவனை மந்தையாகக் கருதாமல் பங்கேற்பவனாக, சிந்திப்பவனாக, தனது மூளையைக் கசக்குபவனாக அதன்மூலம் புதிய ஓர் அறிதலை பெறுபவனாக மாற்றுவதாக இருக்க வேண்டும். இந்தப் புள்ளியில்தான் அமைப்பியல் துவங்கி பின்நவீனம் வரையிலான சிந்தனைகள் கவனம் கொள்கின்றன. இண்டர்டெக்ஸ்டுவாலிடி (இடையீட்டு பிரதி), நான்—

லீனியர் (அ—நேர்க்கோட்டு கதையாடல்), பாலிம்செஸ்ட் (அழித்தெழுதப்பட்ட பிரதி) உள்ளிட்ட புதியவகை நாவல் எழுத்து வாசகனை பயிற்றுவிப்பதன் மூலம் பிரதியைக் கட்டும் செயலில் ஈடுபட வைக்கிறது. யதார்த்தம் என்பது ஒரு புனைவு, அது உண்மை அல்ல என்பதை உணர வைக்கிறது. எல்லாம் ஒரு கதையாடலின் வழி கட்டப்பட்டது என்பதை எடுத்துக்காட்டுகிறது. அதாவது நாவல் என்பது ஒரு பொழுதுபோக்கு சாதனம் அல்ல, அது ஒரு சமூகச்செயல்பாடு என்பதை உணர்த்துவதாக அமைகிறது. அச்செயலில் படைப்பூக்கத்துடன் ஈடுபட வைக்கிறது.

எனவே வாசிப்பு என்பது முதலில் இந்த அலுப்பூட்டும் சலிப்பூட்டும் உணர்வுகளிலிருந்து மாறி ஓர் ஈடுபடுதலாக இருக்க வேண்டும். நுகர்விற்கான துரிதவாசிப்பாக இல்லாமல் நிதான வாசிப்பு என்பது ஓர் ஈடுபடும் செயல்பாடாக இருக்க வேண்டும். அதாவது வாசிப்பு வாசிப்பாளனின் தன்னிலைக்குள் ஒரு புதிய தன்னிலையை எழுதுவதாக இருக்க வேண்டும். வாசிப்பு என்பது பிரதியைக் கட்டுவதாக இருக்க வேண்டும். அத்தகைய வாசிப்பு துரிதவாசிப்பில் சாத்தியமில்லை. துரிதவாசிப்பு என்பது நுகர்விற்கான வாசிப்பு. அது ஓர் உணவுப்பழக்கத்தைப் போன்றது. உணவுப்பழக்கத்தின் செரிமானம், கழிவு என்கிற செயல்பாட்டைப்போல துரிதவாசிப்பு என்பதும் சீரணஉறுப்பும், கழிவும் சார்ந்தாக மாறிவிடுகிறது.

ஆக, துரிதவாசிப்பு நமக்கு நமது வாழ்தலை, உயிர்த்தலை காட்டிக் கொடுக்காது. அது கண்களால் மேயப்படும் ஒன்று. நிதானவாசிப்பு என்பது நமக்கான பிரதியை உருவாக்குவது. அது விளைச்சலுக்கான உழைப்பு. நிதான வாசிப்பு நமது மூளையால் எழுதப்படும் ஒரு செயல்பாடாக இருக்கிறது. வாசிப்பாளன் நுகர்வாளனாக இல்லாமல் உற்பத்தியாளனாக படைப்பாளியாக மாற்றுவதாக இருக்கிறது. நுகர்வில் சிக்கிய மனிதனை விடுவிப்பதாக இருக்கிறது. ஒவ்வொரு வாசிப்பாளரும் தனது வாசிப்பை நிதான வாசிப்பிற்குப் பழக்கப்படுத்த வேண்டும்.

நிதான வாசிப்பைப் பழக அதற்கான விளையாட்டைக் கொண்ட நாவல்கள், எழுத்துகள் வரவேண்டும். ஆனால், தமிழில் தற்பொழுது மெகா—நாவல்களின் காலமாக உள்ளது. எல்லோரும் நாவல்

எழுதுவதற்கான ஆசையில், அதற்கான உந்துதலில் உள்ளனர். தமிழ் நாவல்களை வாசிப்பதைவிட மற்ற மொழி நாவல் முயற்சிகளை அறியும் ஆர்வம் அதிகமாகி உள்ளது. அல்லது தமிழ்நாவல்கள் மேற்சொன்ன போர்மெடம் நாவல்களாக மாறிவிட்டதான காரணமும் இருக்கலாம். அதனால்தான் தமிழில் மொழிபெயர்ப்பு நாவல்கள் அதிகம் வரத் துவங்கி உள்ளன. தற்போது நாவல் எழுதுபவர்கள் பக்கங்களினை அதிகமாக்குவதைப் பற்றியே அதிகம் சிந்திக்கின்றனர். இது தொலைக்காட்சிகளின் மெகாசீரியல்கள் எனப்படும் நெடுந்தொடர்களின் பாதிப்பு. யாரைக்கேட்டாலும் ஆயிரம் பக்கங்கள் குறையாமல் நாவல் எழுதுவதை குறிக்கோளாகக் கொண்டு உள்ளனர். நாவல்கள் எழுதும் ஆசிரியர்கள் அதிகமாகி வாசிப்பாளர்கள் அற்ற நிலையில் வாசிப்பாளர்களை உற்பத்தி செய்வதற்கான பிரத்யேக பயிற்சி தரவேண்டிய நிலைக்குத் திறனாய்வாளர்கள் ஆளாகவேண்டி உள்ளது.

சரி அப்படி எண்ணற்ற பக்கங்களில் என்னதான் எழுதுகிறார்கள் என்றால், செவ்வியல் நாவல்கள் ஏற்படுத்திய ரொமாண்டிக் அதாவது கற்பனைவயப்பட்ட பரிவு, பாசம், அன்பு போன்ற உணர்வை மீண்டும் மீண்டும் உருவாக்கும் பணியையே செய்கிறார்கள். கிளாசிக் நாவல்கள் ஓர் அடிப்படையான சமூகப்பணியை செய்தன. அது தேசியங்களை, தேசம் பற்றிய உணர்வை, தேசிய உணர்வை கட்டமைத்தது. தேசத்திற்கு அரசிற்கும் அதன் ஒழுங்கிற்கும் அடிபணியும் நல்ல குடிமகன்களை உருவாக்கியது. யதார்த்தவாதம் பற்றிய எனது கட்டுரை ஒன்றில் நான் குறிப்பிட்டு உள்ளதைப்போல ஒரு தேசத்திற்கான குடிமகன் என்ற அடையாள அட்டையை வழங்கின. அந்த அடையாள அட்டையை புதுபபித்தல் அதாவது ரினுவ் செய்வதையே இன்றைய யதார்த்தவாத நாவல்கள் செய்கின்றன. நாவலாசிரியர்கள் எல்லாம் குடிமை—அலுவலக அதிகாரிகளாக மாறிவிட்ட ஒரு சமூகத்தில் வாழ்கிறோம் நாம். முன்பு அடையாள அட்டைகளை (ஐடி கார்டுகளை) தந்தார்கள் இப்போது மெகா—நாவல்கள் என ரேஷன் கார்டுகளை வழங்குகிறார்கள். அதில்தான் குடும்ப நபர்கள் உள்ளிட்ட பல பக்கங்கள் இருக்கும். உலகமயமாதல் பெட்டிக்கடைகளை சூப்பர் மார்க்கெட்டுகளாக்கி பின் அதை ஹைபர் மார்க்கெட்டுகளாக மாற்றியதைப்போல

நாவல் எழுத்து என்பது மெகாநாவல்கள் நோக்கியதாக மாறிக்கொண்டு உள்ளது.

செவ்வியல் நாவல்கள் ஒரே அடையாளத்தை ஒரே மொழிபேசும் மக்களுக்குள் உருவாக்கி தேசத்தைக் கட்டியமைத்தன. ஆனால் தேசங்கள் உருவாகிவிட்ட நிலையில் மீண்டும் மீண்டும் செவ்வியல் வடிவ நாவல்கள் எழுதுவது என்பதன் நோக்கம் என்ன? தமிழில் தேசியம் கட்டமைக்கப்படவில்லை என்பதாலா? அல்லது இந்திய தேசியத்தை கட்டமைக்கும் முயற்சியா? தேசப்பற்று குளிர்காய்ச்சலா? குறிப்பாக மத மற்றும் சாதி சங்கங்கள் உருவான பின் அவற்றின் வரலாற்றை எழுதும் புனைவு பணியை இந்நாவல்கள் செய்கிறதா? காரணம் யதார்த்தநாவலின் குறியிலக்கு தனிமனித பிரக்ஞை அதாவது தனிமனிதர்களின் அல்லது தனிமனிதர்கள் உள்ள குழு அமைப்புகளான சாதிகளின், மதங்களின் மனசாட்சிகளை கட்டமைப்பதுதான்.

இத்தகைய நாவல்களின் வடிவங்களிலிருந்து விலகி தேசங்கள் உருவானதால் ஏற்பட்ட உலகப்போர்களினால் தனிமனிதனின் அவல வாழ்வை அதன் உக்கிரமான புதியவகை இழப்புணர்வை, பதற்றத்தைச் சித்திரிக்க முயன்றவையே நவீனத்துவ நாவல்கள். ஜேம்ஸ் ஜாய்ஸ், ஆல்பர் காம்யு, பிரான்ஸ் காஃப்கா, வெர்ஜினியா வுல்ஃப் எனப்பலரின் நாவல் எழுத்துகள் அத்தகைய நவீன மனிதனை விவரித்தன. தமிழிலும் குறிப்பிடத்தகுந்த பல நாவல்கள், சிறுகதைகள் வந்துள்ளன. ஆனால் அவற்றை எல்லாம் அழித்துவிடும் ஒரு அழிமதிக் காலமாக இன்றைய எழுத்தும், படைப்புநிலையும் மாறிக்கொண்டு உள்ளது.

ஆக. நாவல் என்பது நாம் நினைப்பதைப்போல ஒரு படைப்போ, வெறும் பிரதியோ அல்ல. சமூக வாழ்வை சமூகத்தின் மனித அடையாளத்தை, சமூக உயிரியை மனித உயிரியாக உணரவைப்பதே நாவலின் பணி. எனவே நாவலை வாசிப்பதை பயில்வதன்மூலம், இன்னும் பலரை நாம் பயிற்றுவிப்பதன்மூலம் ஒரு சரியான சமூகத்தின் கூட்டுணர்வை, ஒரு சமூக அடையாளத்தை உருவாக்க முடியும். இன்றைய நாவல்களின் செவ்வியல் மனிதப் பெருக்கத்தை தடுத்து நிறுத்தி நவீனமனிதனை உருவாக்க முடியும். நாவல் வாசிப்புகள் ஏற்படுத்தும் தாக்கம் என்பது நவீனமனிதனை, ஒரு புதிய அறிதலை, ஒரு புதியவகை

உணர்வை உருவாக்குவதாக இருக்க வேண்டும்.

உம்பர்த்தோ எக்கோ—வின் “நேம் ஆஃப் த ரோஸ்“ என்ற நாவல் பின்நவீனத்துவ வகைமையில் ஒரு முக்கியமான நாவல். அந்நாவல் மத்தியக்கால ஒரு கிறித்துவ மடத்தில் நிகழ்ந்த ஒரு நிகழ்வை புனைவாக்கி நேரடியாக இல்லாமல் குறியீட்டு மொழியில் எழுதப்பட்ட ஒரு துப்பறியும் வகைமை நாவல். ஒரு கிறித்தவ மடலாயத்தில் உள்ள நூலகத்தில் நிகழும் தொடர் மரணங்கள் பற்றியது. அந்நூலகத்தில் உள்ள அரிஸ்டாட்டிலின் ”பொயட்டிக்ஸ்” என்கிற கவிதையியல் நூலை வாசிப்பவர்கள் தொடர்ந்து மரணமுறுவதை கண்டுபிடிப்பார் அக்கதையின் நாயகப் பாத்திரமான ஒரு பாதிரியார். காரணம் அந்த நூல் இரண்டு பகுதிகளைக் கொண்ட கவிதையியல் என்ற பெயரில் நாடகம் இலக்கியம் ஆகியவற்றின் வகைமைகள் பற்றிய கோட்பாடுகளை பேசும் நூல். அதில் காமெடி எனப்படும் இரண்டாம் பகுதி இலக்கியத்தில் காமெடி எனும் வகைமைப் பற்றியது. அது நகைப்பண்பை உருவாக்கும் இலக்கியவகைமை. அந்த சிரிப்பு இறை நம்பிக்கையை குலைக்கும் என்றும் அது மதங்களை விமர்சிக்கும் மனநிலையை உருவாக்கும் என அந்நூலை வாசிக்கும் நபர்கள் இறப்பதைப்போல அந்நூலில் விஷம் தடவப்பட்டிருக்கும் அந்த மடலாய பாதிரி ஒருவரால்.

நூல்களின் வாசிப்பு எப்படி மதத்திற்கும் இறைநம்பிக்கைக்கும் எதிரானதாக மாறும் என்பதையும் அது எப்படி ஒரு சிந்தனைக் கிளர்ச்சியை உருவாக்கும் என்பதையும் சொல்லும் நாவல். அரிஸ்டாட்டிலின் அந்த நூல் அரபி மூலமாகவே கிரேக்கத்திற்கு சென்றது. அந்நூலை மட்டும் பாதிரியார் அழித்திருக்கலாம். ஆனால் அதை அழிக்காமல் அதன் வாசிப்பாளர்களை அழிக்கிறார். இங்கு தர்க்கரீதியாக கேள்விகளை எழுப்ப முடியாது. காரணம் நாவலின் தர்க்கம் நாவலுக்கானது. அது இயல்வாழ்வின் பகுத்தறிவு தர்க்கமல்ல. புனைவில் வருபவை புனைவுலகமாக இல்லாமல் யதார்த்த உலகை பிரதிபலிப்பதாக படைப்பதில் உள்ள சிக்கலே நாவலையும் தர்க்கமாக சிந்திக்க தூண்டுவதாக உள்ளது.

தமிழின் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரம் என்பதின் தலைப்பை கவனியுங்கள். சரித்திரம் என்பது இங்கு எதை குறிக்கிறது ஒரு புனைவை. வரலாறு என்பது ஒரு புனைவுச்செயல்பாடு என்கிற ஒரு

மொழிவிளையாட்டை இது நிகழ்த்துகிறது. கமலாம்பாள் சரித்திரம் என்கிற நாவல் ராமயாணத்தை யதார்த்த கதா பாத்திரங்களாக்கி எழுதப்பட்ட பிராமண அறநோக்குகளைக் கொண்ட போதனை நாவல். இந்த இரண்டுவகை தமிழ் நாவல்களின் வழித்தோன்றல்களாக உள்ளவையே பெரும்பாலான தமிழ் நாவல்கள். இவை யதார்த்தம் என்கிற ஒன்றை கற்பனையாக வடித்து அதை உண்மை என முன்வைத்தன. நாவல்கள் எழுதப்படும் மூலங்கள் ஆன யதார்த்தம் என்பதே உற்பத்தி செய்யப்பட்டது, கட்டமைக்கப்பட்டது எனும்போது ஒரு நாவலின் புனைவு எப்படி உண்மையைச் சொல்லும் அல்லது யதாரத்தத்தை பிரதிபலிக்க முடியும். எனவே, யதார்த்தம் இல்லை யதார்த்தங்கள் தான் உண்டு. பல யதார்த்தங்கள் உண்டு. அவற்றை புனைவாகவும், உண்மை என்பது ஒரு புனைவு என்கிற எண்ணத்தை உருவாக்கக்கூடியதாகவும் உள்ள புதியவகை நாவல்களே இதுவரை சொல்லப்பட்ட புதிய வாசிப்பை தரக்கூடியதாக உள்ளன.

அத்தகைய புதிய நாவல்கள் சிலவற்றை வாசிப்பதற்கான பயிற்சியையும், பழகிய நாவல்களினை இப்புதிய வாசிப்பின்மூலம் எப்படி புரிந்துகொள்வது, அவை காட்டும் புனைவை உண்மையாக நம்பும் நம் அறிதலிலிருந்து, உண்மை எப்படி புனைவாக உருவாக்கப்படுகிறது என்பதை உணரும் நிதான வாசிப்பிற்கான பயிற்சியை பெறவேண்டியது அவசியம். அதாவது மேய்ச்சலில் சுகம் கண்டுவிட்ட நமது வாசிப்பை, விளைச்சலுக்குரிய உழைப்பாக மாற்றுவது அவசியம்.

ரகசியமாக நிகழ்ந்த அற்புதம்

ஜோர்ஜ் லூயி போர்ஹே

தமிழில்: **செங்கதிர்**



அவனை நூறு வருடத்திற்கு இறந்துபோகச் செய்த கடவுள், பின்னர் உயிர்ப்பித்துக் கேட்டார்.

"எவ்வளவு காலமாக இங்கே இருக்கிறாய்".

அவன் சொன்னான், "ஒரு நாள் அல்லது ஒரு நாளின் சிறுபகுதி".

குரான் II *261.*

1943 ம் வருடம், மார்ச் 14 ந்தேதி இரவு, பிராக் நகரத்தின் ஜெல்டர்னெர்காஸூ பகுதியில் உள்ள தனது மாடிக்குடியிருப்பில் உறக்கத்தில் இருந்த ஜரோமிர் லாடிக் — எழுதி முடிக்கப்படாத "எதிரிகள்" நாடகத்தையும், நித்தியத்துவத்தின் நிரூபணம் எனும் தலைப்பிலான புத்தகத்தையும், யாகோப் போமுவைப் பற்றி, மறைமுக யூத ஆதாரங்களின் அடிப்படையிலான விமர்சன நூலையும் எழுதியவர் அவர் —— முடிவுறாத நீண்ட சதுரங்க ஆட்டம் ஒன்றைக் கனவு கண்டார். போட்டி, இருநபர்களுக்கு இடையில் அன்றி, இரு புகழ்பெற்ற குடும்பங்களுக்கு நடுவே நடைபெற்றுகொண்டிருந்தது. அந்த ஆட்டம், நூறாண்டுகளாக நடந்து கொண்டிருந்தது. எதைப் பணயம் வைத்து ஆடத் துவங்கினார்கள் என யாருக்கும் நினைவு இல்லை என்றாலும், பணயப்பொருள் அபாரமானது எனவும், அந்த ஆட்டம் முடிவு இல்லாமல் நடந்து கொண்டிருந்தது எனவும் மக்கள் பேசிக் கொண்டார்கள். சதுரங்கக் காய்களும், அதன் பலகையும், ரகசியமான கோபுரத்தில் விளையாட வைக்கப்பட்டிருந்தன. ஜரோமிர், விளையாட்டில் ஈடுபாட்டிருந்த குடும்பங்களில் ஒன்றின் மூத்தமகனாக கனவில் வந்தார். ஆட்டத்திற்கான மணி அடித்தது; அதை தள்ளிவைக்கமுடியாது. மழை பெய்து கொண்டிருந்த பாலைவன மணலின் மீது அதிவேகமாக ஓடிக்கொண்டிருந்த 'லாடிக்'கிற்கு, சதுரங்கக் காய்களைப்பற்றியும், விளையாட்டின் விதிகளும் ஞாபகம் வரவில்லை. அக்கணத்தில்தான் அவர் விழித்துக்கொண்டார். அதுவரை கேட்ட மழைப்பொழிவின் சப்தமும், தூரதிருஷ்டமான அலாரங்களின் ஓசையும் திடீரென நின்றது. புரிபடாத ஏதோ அரவம் ஒத்திசைவுடன் கேட்டது. அதன இடையில் ஜெல்டர்னெர்காஸூவில், ஒருவர் ஆணையிடும் குரல் மட்டும் கேட்டது. பொழுது புலரும் அந்த அதிகாலை நேரத்தில், பிராக் நகரத்திற்குள், மூன்றாம் ரைச்சின் படை, ஆயுதங்கள் ஏந்தி அடியெடுத்து வைத்துக்கொண்டிருந்தது.

19ம் தேதியன்று காலைதான் லாடிக்கிற்கு எதிரான ஆணை அதிகாரிகளுக்குக் கிடைத்தது. அன்று மாலையே லாடிக் கைது செய்யப்பட்டார். மோல்டாவ் நதியின் எதிர்க்கரையில் அமைந்திருந்த, சுத்தம் செய்யப்பட்ட, வெண்ணிற சுவர்களாலான சிறைச்சாலையில் கெஸ்டாப்போ வைத்த அடைக்கப்பட்டார்.

குற்றச்சாட்டுகளில் ஒன்றைக்கூட அவரால் மறுக்க முடியவில்லை. அவரது அம்மாவின் குடும்பப்பெயர் ஜரோஸ்லாவ்ஸ்கி; அவர் உடலில் ஓடுவது யூத ரத்தம்; யாகோப் போமு மீதான அவரது விமர்சனத்தில் வெளிப்படையாகத் தெரிந்த யூதர்கள் மீதான குவியம்; ஜெர்மனி ஆஸ்திரியாவை இணைத்து கொண்டதற்கு எதிராக வெளியிட்ட அறிக்கையில் இருந்த பல கையெழுத்துகளில் ஒன்றான அவரது கையெழுத்து என குற்றச்சாட்டுகள் அடுக்கப்பட்டன. 1928ல் ஹெர்மன் பார்ஸ்டார்ஃப் பதிப்பு நிறுவனத்துக்காக அவர் செபெர் யஜீராவின் படைப்பை மொழிபெயர்ப்பு செய்திருந்தார். பதிப்பகம் தனது புத்தகப்பட்டியலில் செய்திருந்த செயற்கைத் தனமான விவரணையில், மொழிபெயர்ப்பாளரின் தகுதியை கொஞ்சம் அதிகமாகவே புகழ்ந்திருந்தது. அந்த பட்டியலைப் படித்த அதிகாரி ஜூலியஸ் ரோதுவின் கையில்தான் லாடிக்கின் விதி இருந்தது. தனது வேலையைத் தவிர வேறெதிலும் ஆர்வம் காட்டாத அம்மனிதர், யாரையும் எளிதில் நம்பிவிடாத குணமுடையவர். செயற்கையாக இருந்தாலும், அதீதமாகப் புகழப்பட்ட ஒன்றிரண்டு பாராட்டு வரிகளே, லாடிக்கின் முக்கியத்துவத்தை உணர்த்த ரோதுவுக்குப் போதுமானதாக இருந்தது. அதுவே, லாடிக்கிற்கு மரணதண்டனை விதியையும் பெற்றுத்தந்தது அத்தண்டனை மற்றவர்களுக்கான செய்தியாகவும் இருந்தது. தண்டனை நேரம், 29ம் தேதி மார்ச் காலை 9 மணி என நிச்சயிக்கப்பட்டது. மரணதண்டனை தாமதமானதற்கு காரணம் — அதன் முக்கியத்துவத்தை வாசகர்கள் பின்னர் புரிந்துகொள்வர் — மரம், செடி கொடிகளைப் போல, தாங்களும் நிதானமாகவும், நடுநிலைமையோடும் செயல்படவேண்டும் என அதிகாரிகள் நினைத்ததார்கள்.

லாடிக் முதலில் பயந்தார். தூக்கில் இடப்பட்டோ, கட்டையால் தலை துண்டிக்கப்பட்டோ அல்லது கத்தியால் குத்தப்பட்டோ இறந்தால்கூட பயந்திருக்கமாட்டார். ஆனால், சுடப்பட்டு இறந்து போவதை அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. மரணம் என்னும் சராசரியான, ஆடம்பரம் ஏதுமற்ற செயல் மட்டும்தான் பயப்படக்கூடிய ஒன்று எனவும், அது சம்பந்தப்பட்ட மற்ற விசயங்கள் அப்படி பயப்படும்படியானது இல்லை எனவும், வேறுவழியின்றி நினைக்க முயற்சி செய்தார். இறந்து

போவதைப் பற்றிய சூழ்நிலையையும், அதை வெவ்வேறு விதமாக அர்த்தம் இன்றி கற்பனை செய்வதிலும் அவருக்கு சலிப்பு ஏற்படவில்லை. இறந்து போவதைப் பற்றி, தூக்கமில்லாத அதிகாலைகளிலிருந்து, மர்மம் நிறைந்த தோட்டா தன்னைத் துளைக்கும் நேரம்வரை, அவர் தொடர்ந்து யோசித்தவாறு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். ஜூலியஸ் ரோது முடிவு செய்த தண்டனை நாள்வரை, லாடிக், ஜியோமிதி விதிகளையே மீறும்படி, வெவ்வேறு வகைகளிலும், கோணங்களிலும், தான் வெவ்வேறு படைவீரர்களின் இயந்திரத்துப்பாக்கியால் சுடப்பட்டு நூற்றுக்கணக்கான முறை கூடாரங்களில் இறந்து கொண்டிருந்தார். வீரர்கள் அவ்வப்போது மாறிக் கொண்டேயிருக்க, சிலசமயம் தூரத்தில் இருந்தும், சில சமயம் அருகில் இருந்தும், அவர் சுடப்பட்டார். இந்த கற்பனையான மரணதண்டனைகளை, அவர் நிஜமான பயத்தோடும், அநேகமாக நிஜமான தைரியத்தோடும் எதிர்கொண்டார். ஒவ்வொரு வகை கற்பனை மரணமும், சில விநாடிகளே நீடித்தன. இவ்வாறு, ஒவ்வொரு சுற்று முடிவுற்ற பின்னர், லாடிக் மீண்டும் மரணத்தின் பீதியூட்டும் உணர்ச்சியையே எதிர்கொள்ள நேர்ந்தது. நிகழப்போகும் ஒரு சம்பவம், அதற்கான காத்திருத்தலோடு சம்பந்தம் இல்லாதது என புரிந்துகொண்டார். பின்னர் தனக்கேயான தர்க்கத்தில், ஒரு சம்பவத்தின் விவரங்களைப்பற்றி யூகிப்பதால், அச்சம்பவத்தை நிறுத்திவிடலாம் என நினைத்துக்கொண்டார். இந்த வீரியம் குறைந்த மந்திரத்தை நம்பியவர், அவ்வாறு நடக்காது என நம்பி, மேலும் பீதியூட்டும் விவரஙகளைக் கற்பனை செய்தார். கடைசியாக, எப்போதும் நடப்பது போல, அவ்வாறு நினைக்கும் சம்பவங்கள் ஆருடம்போல பலிக்கும் எனப் பயப்படத் தொடங்கினார். தன்னைத்தானே பரிதாபமாக உணர்ந்த இரவுகளில், நிலையில்லாத பொருண்மையான காலத்தை நகராமல் இருக்க வைக்க, எபபடியாவது தன் கைப்பிடியில் வைத்துக் கொள்ள முயற்சி செய்யத் துவங்கினார். காலம் 29ந்தேதியை நோக்கி பறந்து கொண்டிருப்பது அவருக்குப் புரிந்தது. சப்தமிட்டுப் பேசினார், "இன்று 22ந்தேதி இரவு. இந்த இரவிலும், இனிவரப்போகும் ஆறு இரவுகளிலும், நான் தைரியத்துடனும், சாகாவரம் பெற்றவனாகவும் இருப்பேன்". தூக்கத்தின் இரவுகள், அவருக்கு ஆழமான, இருண்ட

குளங்கள் போலவும், அவற்றில் தான் மிதந்துகொண்டு இருப்பது போலவும் தோன்றியது. சில சமயங்களில், துப்பாக்கியின் கடைசி வெடிச் சப்தத்திற்காக அவர் பொறுமையின்றி ஏங்கினார். அச்சப்தம், நல்லதற்காகவோ கெட்டதற்காகவோ, உபயோகமற்ற பழகிப்போன கற்பனையில் இருந்து அவரை விடுவித்துவிடும் என நம்பினார். 28ம்தேதி, கடைசி சூரிய அஸ்தமனம், உயரமான சாளரங்களில் அலைந்துக் கொண்டிருந்தபோது, அவரது நாடகமான “எதிரிகள்” பற்றிய நினைவு, இப்படிப்பட்ட மோசமான எண்ணங்களில் இருந்து அவரை விடுவித்தது.

லாடிக்கிற்கு நாற்பது வயது ஆகியிருந்தது. சில நண்பர்களையும், பல பழக்கங்களையும் தவிர, பிரச்சனைக்குரிய செயல்பாடான இலக்கியமே அவரது வாழ்க்கையை ஆக்கிரமித்திருந்தது. எல்லா எழுத்தாளர்களைப் போல லாடிக்கும் மற்றவர்களை அவர்களது சாதனைகளைக் கொண்டு மதிப்பிட்டார். ஆனால் தன்னை மட்டும், தான் கற்பனை செய்திருக்கும், மற்றும் திட்டமிட்டிருக்கும் எழுத்துச் செயல்பாடுகளைக் கொண்டு அளவிடுமாறு, மற்றவர்களிடம் எதிர்பார்த்தார். தான் எழுதிய புத்தகங்கள் எல்லாவற்றையும் சேர்த்துத் தன்னை எடைபோட்டதில், கழிவிரக்கம் போன்ற குழப்பமான மனநிலையையே அவருககுள் ஏற்பட்டது. போமு, இபின் எஜ்ரா, ஃப்ளட் போன்றவர்களின் படைப்புகளைப் பற்றி அவர் எழுதிய புத்தகங்கள், தொழில்முறைத்தனமாக இருந்தது. செஃபிர் யெஜிரா எழுதிய படைப்பின் மொழிபெயர்ப்பு, கவனமின்மை, சோர்வு மற்றும் ஊகத்தால் நிறைந்து இருந்தது. அவரது புத்தகம் “நித்தியத்துவத்தின் நிரூபணம்” மட்டும் மிகச்சில குறைபாடுகளோடு இருந்தது. முதல் தொகுதியில், பர்மினிட்ஸின் கருத்தான மாற்றமே இல்லாத மனிதஇருப்பில் இருந்து, ஹிண்டனின் மாறக்கூடிய கடந்தகாலம் வரையான, நித்தியத்துவத்தைப் பற்றிய மனிதகுலத்தின் பல்வேறு கருத்தாக்கங்கள் இடம் பெற்றிருந்தன. இரண்டாவது தொகுதியில், பிரபஞ்ச நிகழ்வுகள் காலவரிசையில் நடக்கிறது என்பதை பிரான்சிஸ் பிராட்லியைப் போலவே லாடிக் மறுத்தார். மனிதனுக்கு நேரக்கூடிய அனுபவங்கள், முடிவேயல்லாத ஒன்று அல்ல எனவும், முன்பு நடந்து முடிந்த ஒரு சம்பவம் மீண்டும்

நடந்தாலே, காலம் என்பது பொய் எனச் சொல்வதற்கு போதுமான ஆதாரம் எனவும் வாதிட்டார். துரதிர்ஷ்ட வசமாக, காலத்தின் பொய்மையைப் பேசும் வாதமும், நம்பத்தகுந்தது அல்ல. இந்த வாதங்களை, லாடிக் ஒரு ஏளனம் மிகுந்த மனக்குழப்பத்தோடு எதிர்கொண்டார். உணர்ச்சி வெளிப்பாட்டுத்தன்மை கொண்ட சில கவிதைகளையும் அவர் எழுதியிருந்தார். அவரை ஆச்சரியப்படுத்தும் விதமாக, அக்கவிதைகள் 1924ம்தேதியில் வெளிவந்த ஒரு தொகுப்பில் சேர்க்கப்பட்டன. அதற்கப்புறம் அக்கவிதைகள் பின்னர் வெளிவந்த எல்லா தொகுப்புகளிலும் இடம்பெற்றன. இத்தகைய சாதாரணமான, உத்வேகத்தை அளிக்காத தனது வாழ்க்கையை, "எதிரிகள்" நாடகத்தை செய்யுள் வடிவில் எழுதி முடித்து ஈடுகட்டி விடலாம் என நம்பிக்கை கொண்டிருந்தார். செய்யுள் வடிவம்தான், கலையின் தேவைகளில் ஒன்றான, யதார்த்தமின்மையில் இருந்து பார்வையாளர்கள் தங்களது கவனத்தை தவிர்க்கவே முடியாதபடி செய்துவிடுகிறது என லாடிக் நம்பினார்.

நாடகத்தில்தான் காலம், இடம், செயல்பாடு ஆகியவை ஒருமித்து அமைகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின் நேரப் பகல்பொழுது ஒன்றில், ரட்கானி நகரில், ரோமர்ஸ்டாட் பிரபுவின் நூலகத்தில் நாடகம் அரங்கேறுகிறது. முதல் பாகத்தின் முதல் காட்சியில், ரோமர்ஸ்டாட்டைப் பார்க்க ஒரு விநோதமான மனிதன் வருகிறான். அச்சமயம், ஏழு மணிக்கான அலாரம் ஒலிக்க, அத்தமிக்கும் சூரியனின் தீவிரம் சாளரங்களை அழகூட்ட, மனமோகிக்கும் கேட்டுப் பழக்கப்பட்ட ஒரு ஹங்கேரிய இசைத்துணுக்கு காற்றில் மிதந்து வருகிறது. மற்றவர்களும் பிரபுவைப் பார்க்க வருகிறார்கள். ரோமஸ்டார்டுக்கு தன்னைப் பார்க்க வந்தவர்களை அடையாளம் தெரியவில்லை. ஆனால் அவர்களை எங்கோ பார்த்தது போலவும், அநேகமாக கனவில பார்த்திருப்பதாகவும் சங்கடமான உணர்ச்சி அவருக்கு மேலிட்டது. எல்லோருமே அவர்மீது அன்பைப் பொழிந்தார்கள் என்றாலும், முதலில் பார்வையாளர்களுக்கும், பின்னர் பிரபுவுக்கும், அவர்கள் அவரின் ரகசிய எதிரிகள் என்பதும், ஒன்று சேர்ந்து அவரை சீரழிக்க வந்திருக்கிறார்கள் எனவும் தெரியவருகிறது. ரோமஸ்டார்ட் அவர்களின் ரகசியத் திட்டங்களில் இருந்து

தப்பிப்பதிலும், அதைத் தடுப்பதிலும் வெற்றி பெறுகிறார். உரையாடல்களில், அவரது காதலி ஜூலியா வான் வெய்டனாவைப் பற்றியும், முன்னொரு காலத்தில் அவளைக் காதலித்த ஜரோச்லாவ் கியூபினைப் பற்றியும் பேச்சு வருகிறது. ஆனால், கியூபினின் மனம் குழம்பி இப்போது அவர் தன்னையே ரோம்ஸ்டர்டாக நினைத்துக் கொள்கிறார். ஆபத்து அதிகமாகிறது. இரண்டாவது பகுதியின் கடைசியில் ஒரு சதிகாரனைக் கொல்ல வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்படுகிறது. மூன்றாவது மற்றும் கடைசி பகுதி ஆரம்பமாகிறது. நாடகத்தில் குழப்பங்கள் அதிகரிக்கின்றன. நாடகத்தில் தங்கள் பங்கை முடித்துக் கொண்டவர்கள் மீண்டும் தோன்றுகிறார்கள். ரோம்ஸ்டர்டால் கொல்லப்பட்டவன் சில நொடிகளுக்காக மீண்டும் திரும்ப வருகிறான். இன்னும் மாலை நேரம் ஆகவில்லையென யாரோ நினைவூட்டுகிறார்கள். கடிகாரம் ஏழுமணியடிக்க, மேற்கத்திய சூரியன் உயரமான சாளரங்களில் மினுங்க, உணர்ச்சியற்ற ஹங்கேரிய இசை காற்றில் மிதந்து வருகிறது. முதன்முதலில் நாடகத்தில் தோன்றிய நடிகன் மீண்டும் வந்து தான் முதலில் பேசிய அதே வசனத்தைப் பேசுகிறான். ரோம்ஸ்டார்ட் அவனிடம் வியப்பேதும் இன்றி பேசுகிறார். அப்பொழுதுதான், ரோம்ஸ்டார்ட் என்பது பாவப்பட்ட கியூபின்தான் எனப் பார்வையாளர்களுக்குப் புரிகிறது. நாடகத்தில் ஒன்றும் நடக்கவேயில்லை. கியூபின்தான் மீண்டும் மீண்டும் முடிவே இன்றி, மிகைஉணர்ச்சியுடன் அவற்றைக் கனவுகண்டும், வாழ்ந்தும் இருக்கிறார்.

இவ்வாறான பிழைகளின் சோக அங்கதம் நிரம்பிய நாடகம், கோமாளித்தனமானதா இல்லை பிரமிக்க வைக்கக் கூடியதா, நன்றாக எழுதிக் கொண்டிருக்கிறேனா அல்லது சொதப்பி இருக்கிறேனா என தன்னைத்தானே ஒருதாம் கூட, லாடிக் கேட்டுக் கொள்ளவில்லை. தான் எழுதிய கதையின் வலைப்பின்னல், தனது குறைகளை மறைத்துவிடும் எனவும், திறமையை நன்றாக வெளிக்காட்டும் எனவும், தன் வாழ்க்கையின் அர்த்தத்தை குறியீட்டுரீதியாக மீட்டுக்கொள்ள உதவக்கூடும் எனவும் நினைத்தார். முதல் பகுதியையும், மூன்றாவது பகுதியின் ஒருசில காட்சிகளையும் எழுதி முடித்திருந்தார். யாப்புவடிவில் எழுதி இருப்பதால், எழுத்துப்பிரதி தன் கையில் இல்லையெனினும், அறுசீர்வரிகளை அவரால் மீண்டும் மாற்ற முடிந்தது.

இன்னும் இரண்டு பகுதிகளை எழுதவேண்டும் எனவும், கூடிய சீக்கிரம் தான் இறந்து விடுவேன் எனவும் அவர் நினைத்தார். கடவுளோடு அவர் இருளில் பேசினார், "ஏதாவது ரூபத்தில் என் இருப்பு இருந்தால், நான் இன்னொரு பதிலீடாகவோ, தவறாகவோ பிறந்திராத பட்சத்தில், "எதிரிகள்" நாடகத்தின் ஆசிரியராக அறியப்பட விரும்புகிறேன். எனது இருப்பையும், உனது இருப்பையும் உறுதி செய்யும் விதமாக, இந்த நாடகத்தை முடிக்க, எனக்கு இன்னும் ஒரு வருடம் தேவைப்படுகிறது. உன் கையில்தானே நூறாண்டுகளும், காலமும் தஞ்சம் அடைந்து இருக்கின்றன. ஒருவருடத்தை எனக்குத் தா". மிகவும் பயமூட்டியதாக அந்தக்கடைசி இரவு இருந்தது. ஆனால் பத்து நிமிடங்களில், கருத்த நீரென தூக்கம், அவரை மூழ்கடித்துக் கொண்டது.

விடியும் நேரத்தில், கிலமெண்டைன் நூலகத்தின் நடுமையக்கூடங்களில் தான் ஒளிந்து கொண்டிருப்பதாக லாடிக் கனவு கண்டார். கருப்பு கண்ணாடி அணிந்திருந்த நூலகர் அவரைப் பார்த்துக் கேட்டார். "யாரை தேடிக் கொண்டிருக்கிறாய்?". லாடிக் சொன்னார், "கடவுளைத் தேடிக் கொண்டிருக்கிறேன்". அதற்கு நூலகர் சொன்னார், "கிலமெண்டைனில இருக்கும் நான்கு லட்சம் தொகுப்புகளில் உள்ள ஒரு புத்தகத்தில், ஏதோ ஒரு பக்கத்தில் இருக்கும் ஒரு எழுத்துதான் கடவுள்". என் தகப்பன்களும், எனது பாட்டன்களும் அந்த எழுத்தைத்தான் தேடிக் கொண்டிருந்தனர். நானும் அதைத்தான் தேடித்தேடி குருடாகிப் போய்விட்டேன். அவர் தனது கண்ணாடியைக் கழட்டினார். அந்தக் கண்ணைப் பார்த்தபோது, அது உயிரற்று இருந்தது தெரிந்தது. அச்சமயம், ஒரு வாசகர் ஏதோவொரு வரைபடத்தைத் திருப்பித் தந்தார். அந்த வரைபடம் உபயோகமற்றது என்ற நூலகர், அதைப பார்க்குமாறு லாடிக்கிற்குத் தந்தார். தோராயமாக அதைத் திறந்த லாடிக், தான் பார்க்கக்கிடைத்த இந்திய வரைபடத்தை வியப்புடன் நோக்கினார். நம்பிக்கை கொண்டவராக, மிகச்சிறியதாகத் தெரிந்த ஒரு எழுத்தைத் தொட்டார். அப்போது ஒரு அசரீரி ஒலித்தது. "உனது உழைப்புக்கான கால அவகாசம் உனக்கு அளிக்கப்படுகிறது". அந்த நேரத்தில்தான் லாடிக் விழித்துக்கொண்டார்.

மனிதர்களின் கனவுகள் கடவுளுக்குச் சொந்தமானது என்பதை அவர் ஞாபகப்படுத்திக் கொண்டார்.

மெய்மோனிட்ஸ் எழுதி இருப்பதன்படி, கனவில் நாம் கேட்கும் வார்த்தைகள், தனித்தன்மையுடனும், தெளிவாகவும் இருந்தால், புனிதத்தன்மை வாய்ந்தது மற்றும் அவ்வார்த்தைகளை உச்சரிக்கும் மனிதரை நாம் காணமுடியாது. லாடிக் உடையணிந்து கொண்டார்; இரு வீரர்கள் சிறையறைக்குள் வந்து, தங்களைப் பின்தொடருமாறு அவருக்கு ஆணையிட்டனர்.

சிறையறையில் இருந்து தான் பயணிக்கப் போகும் பாதை நடைவழிப்பாதைகள், படிக்கட்டுகள் மற்றும் தனித்தனி கட்டிடங்களாலான புதிர்வழிப்பாதையாக இருக்கும் என நினைத்தார். உண்மையில் பாதை, நினைத்ததைவிட பிரம்மாண்டம் குறைந்து காணப்பட்டது. குறுகலான இரும்புப் படிக்கட்டுக்கள் வழியாக அவர்கள் ஒரு உள்கூடாரத்தில் இறங்கினர். பல வீரர்கள் —அதில் சிலர் தங்கள் சீருடைப் பொத்தான்களை அவிழ்த்து விட்டு இருந்தனர் — ஒரு இரு சக்கர வண்டியை பரிசோதித்தவாறு, விவாதித்துக் கொண்டிருந்தனர். சார்ஜெண்ட் கடிகாரத்தை உற்று நோக்கினான் : மணி 8.44 ஆகியிருந்தது. அவர்கள் ஒன்பது மணி ஆகும் வரை காத்திருக்க வேண்டும். பரிதாபப்படுவதைவிட மோசமான நிலைமையில் இருந்த லாடிக், மரக்குவியலின் மீது உட்கார்ந்து கொண்டார். வீரர்கள் அவரின் பார்வையைத் தவிர்க்க விரும்பினர். காத்திருப்பை இலகுவாக்குவதற்காக, சார்ஜெண்ட் அவருக்கு ஒரு சிகரெட்டைத் தந்தான். புகைப்பிடிக்கும் பழக்கம் இல்லாதவர் எனினும், லாடிக அதை நாசூக்குக் கருதி வாங்கிக் கொண்டார். சிகரெட் பற்றவைக்கும்போதுதான், தன் கைகள் நடுங்குவதை அவர் கவனித்தார். நாள் மேகமூட்டத்துடன் இருந்தது. அதற்குள் அவர் இறந்து போய்விட்டவர் போல, வீரர்கள் மெதுவான குரலில் பேசினர். அர்த்தமின்றி, ஜூலியா வான் வெய்டனா கதாபாத்திரத்திற்கு தூண்டுதலாக இருந்த பெண்ணை நினைத்துக் கொண்டார்.

வீரர்களின் குழு தங்களுக்கான இடங்களில் வந்து விறைப்பாக நின்றது. சிறைச்சாலைச்சுவரை ஒட்டி நின்றுகொண்ட லாடிக், தோட்டாவின் சப்தத்தை எதிர்நோக்கினார். ரத்தத்தால் சுவர் கறையாகிவிடும் என்பதை கண்டுகொண்ட ஒருவர், லாடிக்கை சுவரில் இருந்து சில அடி தள்ளி நிற்கச் சொன்னார். இந்நடப்புகள்

சம்பந்தமேயில்லாமல், புகைப்படக்காரர்களின் தடுமாற்றமான முன்தயாரிப்புகளை லாடிக்கிற்கு நினைவுபடுத்தியது. ஒரு பெரிய மழைத்துளி, லாடிக்கின் நெற்றிப்பொட்டில் விழுந்து, கன்னங்களில் வழிந்தோடியது. சார்ஜெண்ட் கடைசி உத்தரவை கொடுத்தார்.

ஸ்தூலமான பிரபஞ்சம் திடீரென அசைவற்று நின்றது.

துப்பாக்கிகள் லாடிக்கை குறிபார்த்தன. ஆனால் சுடவேண்டிய வீரர்கள் அசைவற்று நின்றனர். முடிவுறாத சைகையை சார்ஜண்ட் காட்டிக்கொண்டே இருந்தார். திறந்தவெளி கூடாரத்தின் கற்பாதைமீது, ஈ தனது மாற்றம் ஏதுமில்லாத நிழலை பரப்பியது. சித்திரத்தில் பார்ப்பதுபோல, காற்று வீசுவது முழுதாக நின்றது. லாடிக் கத்தவும், கொஞ்சம் பேசவும், கையை அசைக்கவும் முயற்சித்தார். ஆனால் தனது உடல் அசைவற்றுப்போனதை உணர்ந்தார். அசைவு நின்றுபோன உலகத்தில் இருந்து ஒரு ஓசையும் அவரை வந்தடையவில்லை.


அவர் நினைத்தார். "நான் நரகத்தில் இருக்கிறேன், நான் இறந்து விட்டேன்".

அவர் நினைத்தார், "எனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது".

அவர் நினைத்தார், "காலம் நின்றுவிட்டது".

பின்னர் யோசித்தபோது, அப்படியாக இருந்தால், தனது மனமும் செயலற்றுப் போயிருக்கும் எனப் புரிந்தது. இந்நிலையை சோதிக்க விரும்பியவர், உதடுகளை அசைக்காமல், வெர்ஜிலின் மர்மமான நான்காவது மேய்ப்பு நிலப்பாடலை மீண்டும் மீண்டும் சொன்னார். தனக்கிருக்கும் படபடப்பைப் போலவே பொம்மை வீரர்களும் உணர்கிறார்கள் என நினைத்தார். அவர்களோடு பேச வேண்டும் என்ற ஏக்கம் பிறந்தது. கொஞ்சம்கூட சோர்வு தனக்குத் தோன்றவில்லை என்பதிலும், நீண்ட அசைவின்மையால் கால் மரத்துப் போகவில்லை என்பதையும் உணர்ந்து, மிகுந்த ஆச்சரியத்திற்கு உள்ளானார். தோராயமான கொஞ்ச நேரத்திற்குப் பிறகு, அவர் உறங்கிப் போய்விட்டார். அவர் விழித்துக் கொண்டபோது, உலகம் அப்படியே அசையாமலும், அமைதியாகவும் இருந்தது. துளிநீர் அவரது கன்னத்திலும், ஈயின் நிழல் கல்லிலும் இன்னும் ஒட்டிக்கொண்டிருந்தது. அவர் புகைத்து ஊதிய

சிகரெட் புகை, இன்னும் காற்றில் கரையாமல் இருந்தது. லாடிக் புரிந்து கொள்வதற்கு முன்னரே, ஒருநாள் கழிந்தது.



தனது படைப்பை முடிக்க, ஒரு வருடம் வேண்டுமென அவர் கடவுளை வேண்டிக் கொண்டார். அவரது எல்லாம் வல்லவன் அதை அளிக்கவும் செய்தார். அவருக்காக கடவுள் ரகசியமாக ஒரு அற்புதத்தை நிகழ்த்தி இருந்தார். ஜெர்மானிய உலோகம் குறிப்பிட்ட சமயத்தில்தான் அவரை சாகடிக்கும். ஆனால், அவரது மனதுக்குள், ஆணையிடுவதற்கும், அதை செய்து முடிப்பதற்குமான இடைவெளி ஒரு வருடமாக மாறும். அவர் குழப்பத்தில் இருந்து மந்த நிலைக்கும், மந்தநிலையில் இருந்து விலகலான மனநிலைக்கும், அதில் இருந்து திடீரென நன்றிஉணர்வு நிலைக்கும் தள்ளப்பட்டார்.

அவர் கையில் நோட்டுப்புத்தகம் ஏதுமில்லை. நாடகத்தின் ஞாபகம் மட்டும் போதுமானதாக இருந்தது. திருத்தித் திருத்தி அவர் எழுதிய செய்யுளின் ஒவ்வொரு வரியும், அதன் பயிற்சியும் கொடுத்த ஒழுக்கம், எப்போதாவது அறைகுறையாக எழுதி மறந்து போய் விடுபவர்கள் சந்தேகம் கொள்ளாதபடி இருந்தது. அவர் பிற்காலத்திற்காகவோ, தான் அறியாத கடவுளின் இலக்கிய ரசனைக்காகவோகூட எழுதவில்லை. தீவிரமாகவும், சமரசமின்றியும், ரகசியமாகவும், அவர் தனது உயர்வான, கண்ணுக்குப் புலனாகாத புதிர்வழி எழுத்தை காலத்தைக் கொண்டு புனைந்தார். நாடகத்தின் மூன்றாவது பாகத்தை இரண்டு முறை எழுதினார். மிக வெளிப்படையாகத் தெரிந்த சில குறியீடுகளான மீண்டும்

மீண்டும் ஒலிக்கும் அலார நிகழ்வையும், இசையையும், அவர் நீக்கினார். எதுவும் அவரை அவசரப்படுத்தவில்லை. சில வார்த்தைகளை நீக்கினார்; சிலவற்றை சுருக்கினார்; சிலவற்றை விரிவாக்கினார். சில சந்தர்ப்பங்களில் அவர் மூலப்பிரதியில் இருந்ததையே ஏற்றுக்கொண்டார். திறந்தவெளி கூடாரத்தையும், சிறைச்சாலை அறையையும், அவர் விரும்பத் தொடங்கினார். அவருக்கு முன்னால் நின்றுகொண்டிருந்த ஒரு முகத்தைப்பார்த்ததும், ரோமெர்ஸ்டாட்டைப் பற்றி அவர் நினைத்திருந்த உருவாக்கத்தை மாற்றவேண்டி இருந்தது. ப்ளாபரை தொந்தரவு செய்த சலிப்பேற்படுத்தும் நாராச ஓசைகள், எழுதப்பட்ட வார்த்தைகள் கொடுக்கும் எரிச்சலும், குறைகளும், போதாமைகளும்தானே ஒழிய, பேசப்படும் வார்த்தைகளுக்கு அது பொருந்தாது...... அவர் நாடகத்தை எழுதி முடித்துவிட்டார். முடிவுக்கான கடைசி சொற்றொடரில்தான் அவர் சிக்கலை உணர்ந்தார். அதையும் எழுதி முடித்துவிட்டார். துளிநீர் அவரது கன்னங்களில் இருந்து வழிந்தோடியது. அவர் வாயைத் திறந்து வெறித்தனமாக கத்தி, முகத்தை கோணினார். பின்னர் நான்கு பெரும்வெடி சப்தத்தின் கீழே புதையுண்டு விழுந்தார்.

ஜரோமிர் லாடிக் 29 ம் தேதியன்று காலை 9.02 மணிக்கு இறந்துபோனார்.



கட்டுப்படுத்தும் சமூகத்தில் பிறக்கும் ரட்சிப்பு: ஜில் டெல்யூஜ்ஜை ஆண்டனியோ நெக்ரி எடுத்த பேட்டி

(பிரெஞ்சிலிருந்து ஆங்கிலத்தில்:மார்ட்டின் ஜ்யுகின்)

மொழிபெயர்ப்பு:முபீன் சாதிகா



ஜில் டெல்யூஜ் சென்ற நூற்றாண்டின் மாபெரும் தத்துவவியலாளர். அவரது 'எதிர் இடிபல்' 'ஆயிரம் பீடபூமிகள்' போன்ற பல நூல்கள் இன்றும் பல்வேறு வகையான ஆய்வுகளுக்குப் பயன்படுகின்றன. அரசியல், தத்துவம், சினிமா, இலக்கியம் என்று அவர் பல்வேறு துறைகளிலும் பங்களிப்பைச் செய்திருக்கிறார். அவரை ஆண்டனியோ நெக்ரி என்ற இத்தாலியைச் சேர்ந்த மார்க்சிய சோஷலிசவாதி பேட்டி கண்டார். நெக்ரி 'பேரரசு' என்ற நூலை மைக்கேல் ஹார்ட்டுடன் இணைந்து எழுதியிருக்கிறார். பல வருட சிறை வாழ்க்கையும் இடதுசாரி தீவிரவாத நிலையும் அவரைப் பண்படுத்தியிருக்கின்றன. பூக்கோ, டெரிடா, ஜில் டெல்யூஜ் போன்ற தத்துவவியலாளர்களுடன் அவர் இணைந்து பணியாற்றி இருக்கிறார்.

நெக்ரி: உங்கள் அறிவுலக வாழ்வில் அரசியலின் சிக்கல் எப்போதுமே இருந்துவருவதாகவே தெரிகிறது. ஹியும் பற்றிய நூலிலிருந்து பூக்கோ பற்றிய நூல் வரை நீங்கள் பங்கெடுத்திருக்கும் பல்வேறு இயக்கங்கள் (சிறைக்கைதிகள், ஓரினச் சேர்க்கையாளர்கள், இத்தாலிய பிரிவினைவாதிகள், பாலஸ்தீனர்கள்) ஒரு புறம், நிறுவனங்களில் ஏற்படும்

நிரந்தரச் சிக்கல்கள் மற்றொரு புறம். ஒன்றுக்குப் பின் ஒன்றாகத் தொடரவும் உங்கள் பணியில் இரண்டுக்கும் இடையில் ஏற்படும் பரிமாற்றமும் இருந்து கொண்டே வருகிறது. அரசியல் பற்றிய கேள்வியில் தொடர்ந்து இருக்கும் கவனத்தின் ஆணிவேர்கள் எவை? அது எப்படி உங்கள் வளரும் பணியில் விடாப்பிடியாக இருந்தது? இயக்கத்திற்கும் நிறுவனத்திற்குமான உறவு ஏன் எப்போதுமே சிக்கலாக இருக்கிறது?

டெல்யூஜ்: நான் எதில் அதிகமான ஆர்வம் கொண்டிருக்கிறேன் என்றால் பிரதிநிதித்துவத்தைவிட கூட்டுப் படைப்புகளில்தான். "சட்டங்கள் நியதிகளை" மீறி நிறுவனங்களில் முழுமையான ஒழுங்கின் இயக்கம் இருக்கிறது. சட்டத்தைப் பற்றியும் நிறுவனங்கள் பற்றியும் மிகவும் படைப்பூக்கமான எண்ணத்தை நான் ஹியுமில் கண்டேன். நான் தொடக்கத்தில் அரசியலைவிட சட்டத்தில் அதிக ஆர்வம் கொண்டிருந்தேன். பாலியல் தொடர்பான ஒப்பந்தங்கள் பற்றி மாசோக்கிலும் நிறுவனங்கள் பற்றி சேத்-திலும் முறையான தலைகீழாக்கப்பட்ட கருத்தாக்கங்கள் வெளிப்படுவதே நான் அதிகம் விரும்பியவை. இன்றைய காலகட்டத்தில் ஃப்ரான்கொய் ஈவால்ட்டின் சட்டம் பற்றிய தத்துவத்தை மீட்டுருவாக்கம் செய்வது என்பது மிகவும் அடிப்படையானது என்று கருதுகிறேன். சட்டம் அல்லது சட்டங்கள் (முதல் சொல் உள்ளீடற்ற கருத்து. இரண்டாவது சொல் விமர்சனமற்ற கருத்துகள்) அல்லது சமநிலைச் சட்டம் அல்லது உரிமைகள் என்னை ஆர்வப்படுத்துவது இல்லை. மாறாக சட்டவியல்தான் என்னை ஆர்வப்படுத்துகிறது. இந்தச் சட்டவியலின் நோக்கம் சட்டத்தை உருவாக்கிக் கொண்டேசெல்வது. இதை நீதிபதிகள் உருவாக்குவதாக நாம் விட்டுக்கொண்டிருக்கக் கூடாது. குடியாண்மை சட்டத்தைப் படிப்பதைவிட சட்ட அறிக்கைகளை எழுத்தாளர்கள் படிக்கவேண்டும். ஏற்கனவே நவீன உயிரியியலுக்குச் சட்ட அமைப்பை உருவாக்க எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நவீன உயிரியலில் இருப்பதெல்லாம், அது உருவாக்கும் புதிய சூழல்கள், அது சாத்தியப்படுத்தும் புதிய நிகழ்வுகளுக்கான வழிகள் போன்ற அனைத்துமே சட்டவியலை ஒட்டியுள்ளதுதான். இதற்காக நல்ல தகுதி படைத்த அறிவாளிகள் என்று அழைக்கப்படுகிற அறவியல் குழு தேவையில்லை, ஒரு பயனர் குழு போதும். இங்குதான் நாம் சட்டத்திலிருந்து அரசியலுக்கு நகர்கிறோம். கத்தாரி மூலமும், பூக்கோ மூலமும், எலை சம்பார் மூலமும். நான், எனது தனிப்பட்ட பங்கிற்காக, மே-68 இயக்கத்தை ஒட்டி நிகழ்ந்த அரசியலில் நகர்ந்து குறிப்பிட்ட சில பிரச்சனைகளோடு தொடர்பு கொண்டேன். 'எதிர்-இடிபல்' நூல் துவக்கத்திலிருந்து இறுதி வரை அரசியல் தத்துவத்தைப் பற்றிய நூல்.

நெக்ரி:68-நிகழ்வுகளை நீங்கள் காலந்தவறிய வெற்றியாக, வழமையாதலுக்கு எதிரான விடியலாக எடுத்துக்கொண்டீர்கள். நீங்கள் நீட்ஷே பற்றி எழுதியதிலும் சிறிது நாட்களுக்குப்பிறகு எழுதிய "சில்லிடலும் குரூரமும்" என்ற நூலிலும் அரசியலுக்குப் புதிய பொருள் அளித்தீர்கள்-அதற்கு சாத்தியம், நிகழ்வு, ஒருமை என்று. நிகழ்காலத்தோடு எதிர்காலம் முறிவுகொள்ளும் நிகழ்புள்ளியை நீங்கள் கண்டுபிடித்தீர்கள் அதன் விழிப்பில் நிறுவனங்கள் மாற்றமுறவேண்டும் என்றீர்கள். ஆனால், '68-நிகழ்வுக்குப் பிறகு நீங்கள் உங்கள் அணுகுமுறையை சற்று மாற்றிக் கொண்டீர்கள்: "சிறுபான்மை உலகமயமாவது" வெளியாக மட்டுமேயாகும்போது, நாடோடிச் சிந்தனை எப்பொழுதும் காலத்தில் தன்னெழுச்சியான எதிர்-வழமையாதல் என்ற வடிவத்தை எடுக்கிறது என்பதாக. இந்தக் காலந்தவறியதின் உலகமயத்தை எப்படிப் புரிந்துகொள்வது?

டெல்யூஜ்: அதாவது, உருவாகுதலுக்கும் வரலாறுக்கும் இடையிலுள்ள வேறுபாட்டிற்கான சாத்தியத்தைக் குறித்து மிகஅதிகமான விழிப்புணர்வைக் கொண்டிருக்கிறேன். "வரலாரற்ற மூட்டத்தில்" இருந்து எப்பொழுதுமாக விடுபடுவதை விட வேறெதுவும் முக்கியமில்லை என்று நீட்ஷே கூறியிருக்கிறார். இது நித்தியத்துவத்தையும் வரலாறையும் அல்லது சிந்தனையையும் செயல்பாட்டையும் எதிர்ப்பதல்ல: நிகழ்வுகள் நடக்கும் வழிமுறைகள் பற்றியும், நிகழ்வுகள் அதற்குள்ளாகவே உருவாகுதலைப் பற்றியும் நீட்ஷே பேசுகிறார். வரலாறு எதை உள்வாங்குகிறது என்றால் குறிப்பான சூழல்நிலையில் நிகழும் நிகழ்வுகள் எப்படி வழமையாக்கப்படுகிறது என்ற வழிமுறைகளைத்தான்; அந்த நிகழ்வின் உருவாகுதல் என்பது வரலாற்றின் நோக்கெல்லைக்கு அப்பாலுள்ளது. வரலாறு பரிசோதனைக்குரியதல்ல, அது உத்தேசமாக வரலாற்றிற்கு அப்பால் உள்ள சிலவற்றை சாத்தியமாக்கும் எதிர்மறையான முன்நிபந்தனைகளின் தொகுதி. வரலாறு இல்லாமல் இப்பரிசோதனை நிர்ணயமற்றது, எந்தவொரு முன்நிபந்தனையும் இல்லாதது. ஆனால் பரிசோதிப்பதே வரலாறு அல்ல. க்ளியோ, பெகை தங்களது சிறந்த தத்துவ நூலில் வரலாற்றின் நிகழ்வுகளை இரு வகையாகப் பார்ப்பதைச் சுட்டியிருக்கிறார்கள். ஒன்று, நிகழ்வின் போக்கைப் பின்தொடர்வது, வரலாற்றில் அது எப்படி நடந்திருக்கும் என்று சேகரிப்பது அதன் தயாரிப்பு எப்படிப்பட்டது அது எப்படி வரலாற்றில் மட்கிப் போகிறது என்று பார்க்கும் பார்வை ஒன்று. மற்றொன்று, நிகழ்விற்குள் திரும்பப் போய் உருவாகுதலில் பாத்திரமேற்பது போல் பாவித்து, அதற்குள்ளேயே அத்தருணத்திலேயே இளமையாகவும் முதுமையாகவும் வளர்ந்து, அதன் கூறுகள் அல்லது ஒருமைகளில் செல்வது. உருவாகுதல் வரலாற்றின்

பகுதி அல்ல, வரலாறு தருவது முன்நிபந்தனைகளின் தொகுதியை மட்டுமே. இருந்தபோதிலும் தற்பொழுது, ஒருவர் "உருவாகுதல்" என்பதிலிருந்து விலகிச்செல்ல வேண்டும், அதாவது, புதிய ஏதோ ஒன்றை படைக்க. இதைத்தான் நீட்ஷே காலந்தவறுதல் என்றார். மே 68 என்பது உருவாகுதலின் தெளிந்த நிலையைக் காட்டும் ஓர் ஆர்ப்பாட்டம், ஒரு வெடிப்பு. இந்தக் காலகட்டத்தில் புரட்சியின் பயங்கரங்களைப் பற்றி கண்டிப்பது ஒரு பாணியாகிவிட்டது. அது புதிதல்ல. இன்று ஸ்டாலின் பற்றிய எதிர்வினை போலத்தான் க்ராம்வெல் மீதான எதிர்வினையாக ஆங்கில வீறுணர்வுவாதம் இருந்தது. புரட்சிகள் தீமையான விளைவுகளைத் தருபவை என்று கூறுகிறார்கள். ஆனால் வரலாற்றில் புரட்சிகள் மாறியிருப்பதையும் மக்கள் புரட்சிகள் காரணமாக உருவாகியிருப்பதையும் தொடர்ந்து இரு வேறு கருத்துகளாகப் பார்க்காமல் அவர்கள் குழப்பிக் கொள்கிறார்கள். இவை இரு வகையான மக்களைப் பற்றியதாக உள்ளன. மனிதர்களின் ஒரே நம்பிக்கை என்பது புரட்சிகர உருவாகுதலில் உள்ளது: அவர்களின் அவமானத்தைத் துடைத்தெறியும் ஒரே வழி அல்லது சகிக்க முடியாத ஒன்றுக்கு மறுமொழி கொடுப்பது.

நெக்ரி:நீங்கள் எழுதிய 'ஆயிரம் பீடபூமிகள்' நூல் மாபெரும் தத்துவ நூலாக நான் கருதுகிறேன். அதே நேரத்தில் அது தீராத சிக்கல்களின் அட்டவணையாகவும் எனக்குத் தோன்றுகிறது. குறிப்பாக அரசியல்



கதைகளைப்பின் ஆட்ட இருக்கிறது அதில் வரும் இரவை முரண் சொற்களை- வெகுதூரம் இடத்துக் குறுமையப் தள்ளிவைப் தொகுப்பு நிறுவனமும் போகத்தின் கூறுகளும் உபகரணங்களும் உத்திகளும் நுண்மையும் விசித்திர போன்றவை-கோட்பாட்டுக்கம் செய்யும் ஆசாரியமான விருப்பத்தினாலும் தீவிரமான நினைவூட்டல்களின் நிகழ்வுகளாலும் இவை எல்லாம் எப்போதுமே திறந்திருக்கும் என்பது மட்டுமல்லாமல் தொடர்ந்து இவை மீண்டும் திறக்கப்படுகின்றன அதற்கு எதிராக எனக்கு எதுவும் இல்லை அதற்கு ஆதாரமாகத்தான் உள்ளது ஆனால் சில சமயங்களில் எனக்கு அவை ஒலியைக் கேட்பது போல் தோன்றுகிறது. சில பக்கங்களில் 'போர் எந்திரம்' எங்கு செல்கிறது என்பது தெளிவாக இல்லை.

டெல்யூஸ்: நீங்கள் சொல்வது என்னுள் பாதிப்பை ஏற்படுத்துகிறது நானும் ஃபீலிக்ஸ் கட்டாரியும் இன்னும் மார்க்சியர்களாக இருக்கிறோம் என நினைக்கிறேன். நாங்கள் இருவருமே இரு வேறு வழிகளில் எந்த ஒரு தத்துவமும் முதலாளித்துவம் பற்றியும் அதன் வளர்ச்சி பற்றியும் ஆய்வு செய்யவேண்டும் என்று நாங்கள் நினைப்பதை நீங்கள் கவனிக்கவேண்டும். எங்களுக்கு மார்க்ஸிடம் ஆர்வமூட்டக்கூடியதாக இருப்பது என்னவென்றால் அவருடைய ஆய்வில் முதலாளித்துவம் ஓர் உள்ளுறைந்த அமைப்பாகவும் அது தொடர்ந்து தனது எல்லைகளை மீறி வருவதையும் மீண்டும் விரிவான வடிவத்தில் அவற்றைக் காண்பு வருவதையும் ஏனெனில் அதன் அடிப்படை எல்லையே மூலதனம்தான் என்பதுமே. 'ஆயிரம் பீடபூமிகள்' பல திசைகளில் சென்றாலும் அவற்றின் மூன்று முக்கியமாக உள்ளது. முதலாவது எந்த ஒரு சமூகமும் அதன் போக்குகளின் கூறுகளால் விளக்கம் பெறுவதைப் போல அதன் முரண்பாடுகளால் விளக்கம் அடைவதில்லை. அது எல்லா இடங்களிலும் பரவுகிறது. போக்குகளின் கூறுகள் வெறும் ஒரு தருணத்தையே மற்றொரு தருணத்தையோ பின் தொடர்வதும் பார்க்க முடிகிறதும் பெரும் ஆர்வத்தைத் தருவதாக உள்ளது. இப்போது ஐரோப்பாவை பாருங்கள் மேற்கத்திய அரசியல்வாதிகள் அதனைக் கட்டமைக்க பெருமுயற்சி எடுத்திருக்கிறார்கள். தொழில்நுட்பவாதிகள் ஒழுங்கான ஆட்சியையும் விதிகளையும் அமைக்க பெரும் முயற்சி செய்திருக்கிறார்கள். இருந்தாலும் இளைஞர்கள் பெண்களின் எழுச்சி ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அது சாத்தியப்பட்டதற்கு எளிமையான காரணம் சில தடைகள் நீக்கப்பட்டிருக்கின்றன ("தொழில்நுட்பமயமாக இயலாத" விளைவுகளினால்) இந்த ஐரோப்பா தொடங்கப்படுவதற்கு முன்பே முழுவதுமாகக் கிழக்கிலிருந்து வந்த இயக்கங்களால் பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட்டது என்று ஒருவர்

கருதினால் அது நகைப்புக்குரிய ஒன்றாகக் கவனிக்கப்பட வேண்டும். இவை முதன்மையான போக்கின் கூறுகள். ஆயிரம் பீடபூமிகளில் மற்றொரு திசை உள்ளது. அது போக்கின் கூறுகளை ஆய்வது மட்டும் அல்ல. அவற்றின் முரண்பாடுகளை ஆய்வது. வர்க்கங்களைப் பற்றியதல்ல சிறுபான்மைகளைப் பற்றியது. பிறகு இறுதியாக மூன்றாவது திசை, "போர் எந்திரங்களின்" குணாம்சங்களைக் கண்டறிவது பற்றியது. அது போரைப் பற்றியதல்ல ஆனால் சில வகையான ஆக்கிரமிப்பை எடுத்தாள்வதை, காலவெளி அல்லது புதிய காலவெளியை: புரட்சிகர இயக்கங்கள் (அரேபிய உலகில் பாலஸ்தீன விடுதலை அமைப்பு எப்படி தனது காலவெளியைக் கண்டுபிடித்தது பற்றி மக்கள் அதிகமாகக் கண்டு கொள்வதில்லை) கண்டுபிடிப்பது பற்றியது. அத்துடன் கலை இயக்கங்கள் கூட அந்தப் பொருளில் போர் எந்திரங்கள்தான்.

நீங்கள் இவை அனைத்திலும் ஓர் அவலம் அல்லது துக்க ஒலி கேட்பதாகச் சொல்கிறீர்கள். அது ஏனென்று என்னால் சிந்திக்க முடிகிறது. பிரைமோ லெவி 'மனிதனாக இருப்பதில் அவமானம்' என்று நாஜி சித்திரவதை முகாம்கள் பற்றி விளக்கி எழுதிய எல்லா பத்திகளும் என்னை ஆட்படுத்தின. சிலர் நம்மை நம்பவைப்பது போல நாஜிசத்திற்கு நாம் அனைவருமே பொறுப்பு என்பதாக அது இல்லை, மாறாக நாம் அனைவருமே அதன் கறையைக் கொண்டிருக்கிறோம் என்பதால்தான் அதிலிருந்து தப்பியவர்கள் கூட உயிர் வாழ்வதற்காகவே அவற்றுடன் சமரசம் செய்யவேண்டியிருந்தது. நாஜிக்களாக மாறுவதிலுள்ள அவமானம், அதிலிருந்து விலக இயலாதது, அதை எப்படித் தடுப்பது என்று அறியாமல் இருந்தது, அதனுடன் சமரசம் செய்தது. இவை எல்லாமே பிரமோ லெவி, எதை "சாம்பல் பகுதிகள்" என்று அழைத்தாரோ அவை.. மனிதனாக இருப்பதில் அவமானம் அடையவேண்டிய மிக அற்பமான தருணங்களும் உள்ளன: வக்கிரமான சிந்தனை வரும் முகத்தில், அமைச்சர்களின் பேச்சை பொழுதுபோக்காகக் கேட்கும் பொழுதுகளில் "கிளுகிளுப்பான மக்கள்" பேசும் அவதூறுகளில். இதுதான் தத்துவத்திற்கு பெரும் ஆற்றலைத் தரும் ஊக்கமாக உள்ளது. அதுதான் தத்துவத்தை அரசியலாக உருவாக்குகிறது. முதலாளித்துவத்தில் ஒரே ஓர் அம்சம்தான் சர்வதேசத்திற்கும் உரியது, அது சந்தை. சர்வதேச அரசு இல்லை, ஏனெனில் சர்வதேச சந்தையில் அரசுகள்தான் மையங்களாக வியாபார பீடங்களாக உள்ளன என்பதுதான் முக்கிய காரணம். ஆனால் சந்தை என்பது சர்வதேசமயமாக்காது, அது ஒருபடித்தானதாக்குகிறது. அது சொத்தையும் துயரத்தையும் பயக்கும் அசாதாரணமான பொறி. மனித உரிமைகளுக்கு உரிய கவனம் தரப்படுவதை முற்போக்கு முதலாளித்துவத்தின் "ஆனந்தங்கள்' என்று

புகழ்வதற்கு நாம் தள்ளப்படக்கூடாது அந்தக் கவனமும் முதலாளித்துவத்தின் ஓர் உள்ளார்ந்த அம்சம்தான். எந்த ஒரு ஜனநாயக அரசும் மையத்திலிருந்து அதன் ஒரு பகுதிவரை மனித துயரத்தை உண்டாக்குவதிலிருந்து விலகிச் செல்லும் சமரசத்தில் இல்லை. எது அதிகமான அவமானம் என்றால் நம்முள்ளேயே கூட உருவாகுதல்களைக் கையாள்வதற்கான வழிகள் இல்லை அல்லது அதை விட கூடுதலாக அவற்றைத் தூண்டுவதற்கான வழிகளும்கூட நம்மிடம் இல்லை. எப்படி ஒவ்வொரு குழுவும் மாற்றம் பெறும் அது எப்படி வரலாற்றுக்குள் வீழ்ந்து போகும் என்பது தொடர்ந்த 'கவனம்' பெற்றுள்ளது. பாட்டாளிகளைச் சுற்றி அவர்கள் விழிப்புணர்வின் நிலையை அடைவதற்கு எந்த ஒரு பிம்பமும் இனி இல்லை.

நெக்ரி: எப்படி சிறுபான்மை உருவாகுதல் என்பது ஆற்றல் கொண்டதாக இருக்கும்? எப்படி எதிர்ப்பு என்பது எழுச்சியாக உருவாகும்? உங்களைப் படிக்கும் போது அந்தக் கேள்விகளுக்கு எப்படி பதிலளிப்பது என்று தெரியவில்லை. ஆனாலும் அந்தக் கேள்விகளைக் கோட்பாட்டு ரீதியாகவும் அனுபவரீதியாகவும் மறுவடிவமாக உங்களின் நூல்கள் உத்வேகத்தையும் சக்தியையும் எனக்கு எப்போதும் அளித்தன. மேலும் கற்பனையைப் பற்றி அல்லது ஸ்பினோஸாவில் இருந்தப் பொதுக் கருத்துகள் பற்றி நான் படித்த போதும் மூன்றாம் உலக நாடுகளில் எடுக்கப்படும் புரட்சிகர திரைப்படங்களில் கால-பிம்பம் பற்றிய விளக்கத்தைத் தொடர்ந்த போதும் மற்றும் பிம்பத்திலிருந்து கட்டுக்கதை வரையான பாதையையும் அரசியல் நடைமுறைகளையும் உங்களுடன் உள்வாங்கிய போதும் நான் இந்தக் கேள்விகளுக்கான பதிலை ஏறக்குறைய கண்டுபிடித்துவிட்டேன்...அல்லது நான் தவறாகப் புரிந்துகொள்கிறேனா? பிறகு ஒடுக்கப்பட்டவர்கள் செயலூக்கம் பெறுவதற்காகக் காட்டும் எதிர்ப்புக்கு வழி இருக்கிறதா. சகிக்கமுடியாதது என்று சொல்லப்படுவது தீர்மானகரமாக நீக்கப்படுமா? ஒருமையின் திரள்களும் அணுக்களும் ஒருங்கிணைந்து நாமெல்லாம் முன்வந்து அதிகாரம் ஒழுங்கமைக்கப்படுவதற்கான வழி ஏதாவது இருக்கிறதா அல்லது நீதியியல் முரண்பாடு நிறுவும் அதிகாரம் விளக்குவதாக ஒழுங்கமைக்கப்படும் அதிகாரத்தை நாம் ஏற்கவேண்டியதாக இருக்குமா?

டெல்யூஜ்: சிறுபான்மையினருக்கும் பெரும்பான்மையினருக்கும் இடையிலுள்ள வேறுபாடு அளவு சார்ந்தது அல்ல. ஒரு சிறுபான்மை, பெரும்பான்மையை விடப் பெரியதாக இருக்கலாம். பெரும்பான்மையை எப்படி விளக்கலாம் என்றால் அது உறுதியான மாதிரி: உதாரணமாக ஒரு சராசரி ஐரோப்பிய நகரம்சார் ஆண்...ஆனால் ஒரு சிறுபான்மைக்கு

மாதிரி என்று எதுவும் இல்லை. அது ஒரு உருவாகுதல், அது ஒரு செயல்முறை. பெரும்பான்மை என்று யாரும் இல்லை என்று ஒருவர் சொல்லலாம். ஒவ்வொருவரும் ஒரு வழியிலோ மற்றொன்றிலோ, சிறுபான்மை உருவாகுதலில் பீடிக்கப்படுவார்கள் அவர்கள் அதைப் பின்தொடர்ந்தால் அவர்களைப் திசை அறியாத பாதைகளுக்கு இட்டுச் செல்லும். சிறுபான்மை தனக்கான மாதிரிகளை உருவாக்கும் போது அது பெரும்பான்மை ஆக விரும்புகிறது, பெரும்பான்மை ஆகவேண்டியிருக்கிறது, வாழவும் அல்லது வளரவும் (உதாரணமாக ஓர் அரசைக் கொண்டிருக்க அங்கீகாரம் பெற அதன் உரிமைகளை நிலைநாட்ட). ஆனால் அதன் அதிகாரம் அது படைப்பைக் கையாள்வதிலிருந்து வருகிறது. அது ஓரளவுக்கு மாதிரிக்கு உரியதாகிறது. ஆனால் அதன் மீது சார்ந்திருப்பதில்லை. ஒரு மக்கள் திரள் என்பது எப்போதுமே படைக்கப்பட்ட சிறுபான்மை, அது பெரும்பான்மையை ஈட்டும் போதும் அப்படியே இருக்கும், ஒரே சமயத்தில் இரண்டுமாகவும் அது இருக்கும் ஏனெனில் ஒரே தளத்தில் இரண்டுமே வாழ்ந்திருப்பதில்லை. மகா கலைஞர்கள் (பிரபலமான கலைஞர்கள் அல்லாமல்) ஒரு மக்கள் திரளை நிலைநிறுத்துபவர்களாவும் அப்படி அமைக்கையில் அவர்கள் "மக்கள் திரள் இன்மையை' கண்டறிபவர்களாகவும் இருக்கிறார்கள். மல்லார்மே, ரிம்பாட், க்ளீ, பெர்க் போன்றவர்கள். திரைப்படத்தில் ஸ்ட்ராப் போன்றவர்கள். கலைஞர்கள் ஒரு மக்கள் திரளை நிலைநிறுத்த மட்டுமே முடியும், அவர்களது செயல்களின் அடித்தளம்வரை செல்லவேண்டிய தேவைவரும்.. அவர்களை உருவாக்குவது அவர்களது வேலை அல்ல, அவர்களால் முடியவும் முடியாது. கலை என்பது எதிர்ப்பு: அது மரணத்தை, அடிமைத்தனத்தை, முறைகேட்டை, அவமானத்தை எதிர்க்கிறது. ஆனால் ஒரு மக்கள் திரள் கலை பற்றி கவலைப்பட முடியாது. எப்படிப்பட்ட அல்லல்களுக்கு இடையில் எப்படி ஒரு மக்கள் திரள் படைக்கப்படுகிறது? ஒரு மக்கள் திரள் படைக்கப்பட்டால் அது அதன் மூலத்திலிருந்துதான் படைக்கப்படுகிறது, ஆனால் தொலைவில் அது கலையுடன் ஓர் இணைப்பைக் கொள்கிறது (லுவரில் கூட பெரும் அல்லல் இருப்பதாக கேரல் கூறுகிறார்) அல்லது அது அதன் குறையை நிறைவாக்க கலையுடன் இணைகிறது. கற்பனாவாதம் சரியான கருத்தல்ல. அது ஒரு மக்கள் திரளும் கலையும் பகிர்ந்து கொள்ளும் பெரும்பாலான "பட்டியலிடப்படல்". நாம் பெர்க்ஸனின் பட்டியலிடப்படும் கருத்தை எடுத்துக் கொண்டு அதற்கு அரசியல் பொருளைத் தரவேண்டும்.

நெக்ரி:நீங்கள் பூக்கோ பற்றிய நூலிலும் என்ஐஏ தொலைக்காட்சிக்கு அளித்தப் பேட்டியிலும் மூன்று வகையான அதிகாரங்களைப் பற்றி

கோட்டு காட்டுகிறீர்கள் இறையாண்மை அதிகாரம், ஒழுங்குறுதலின் அதிகாரம் மற்றும் எல்லாவற்றுக்கும் மேலாக மேலாண்மையை நோக்கிச் செலுத்தப்படும் "தொடர்புறுதலின்" கட்டுப்பாடு. மூன்றாவது சூழல் என்பது ஆதிக்கத்தின் துல்லியமான வடிவம், கற்பனையையும் பேச்சையும் கூட கட்டுப்படுத்தும். ஆனால் மற்றொரு பக்கம், எந்த ஒரு மனிதனும், எந்த ஒரு சிறுபான்மையும், எந்த ஓர் ஒற்றைத்துவமும், முன்பு எப்போதும் இருந்ததை விட ஆற்றலுடன் வெளிப்படுத்துவதும் அதன் காரணமாக பெருமளவு சுதந்திரத்தை மீட்டெடுப்பதும் நடக்கிறது. மார்க்சிய கற்பனாவாதமான 'க்ரண்ட்ரைஸி'ன் கம்யூனிசம் சுதந்திர தனிநபர்களுக்கான நேர்எதிர் நிறுவனத்தின் வடிவத்தை எடுக்கிறது. அதைச் சாத்தியப்படுத்தும் ஒரு தொழில்நுட்பத்தால் அது கட்டப்பட்டிருக்கிறது. இப்போதும் கூட கம்யூனிசம் சாத்தியமான வாய்ப்பா? தொடர்புறும் சமூகத்தில் அது எப்போதும் இருப்பதை விட குறைந்த கற்பனாவாதமாக உள்ளதா?

டெல்யூஜ்: நாம் நிச்சயமாக "கட்டுப்படுத்தப்படும்" சமூகங்களுக்குச் சென்று கொண்டிருக்கிறோம். ஆனால் அவை ஒழுங்குறுத்தல் சார்ந்ததாக இனியும் இல்லை. பூக்கோ எப்போதும் ஒழுங்குறுத்தல் சமூகங்கள் பற்றிய கோட்பாட்டாளராகப் பார்க்கப்படுகிறார். மற்றும் அந்தச் சமூகங்களின் முதன்மை தொழில்நுட்பம் என்பது அடைத்து வைத்தல் மருத்துவமனைகளிலும் சிறைகளிலும் மட்டும் அல்ல, பள்ளிகளில், தொழிற்சாலைகளில், படைகளில் கூட. ஆனால் அவர்தான் முதன் முதலாக ஒழுங்குறுத்தல் சமூகங்களிலிருந்து நாம் விலகிச் செல்கிறோம் என்பதைச் சொன்னவர். நாம் அவற்றை விட்டு வந்துவிட்டோம். நாம் கட்டுப்படுத்தப்படும் சமூகங்களுக்குச் செல்கிறோம். இவற்றில் மக்கள் அடைத்து வைக்கப்படுவது இல்லை. ஆனால் தொடர் கட்டுப்பாடு மூலமாகவும் உடனடி தொடர்புறுத்தல் மூலமாகவும் செயல்படுகின்றன. பர்ரோஸ்தான் இதை முதலில் சொன்னார். மக்கள் தொடர்ந்து சிறைகள், பள்ளிகள், மருத்துவமனைகள் குறித்து பேசிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிறுவனங்கள் குலைந்து கொண்டிருக்கின்றன. அவை தோற்கும் போராட்டத்தில் இருப்பதால் குலைந்து கொண்டிருக்கின்றன. புதிய வகையான தண்டனைகள், கல்வி, நலச் சேவைகள் மறைமுகமாக அறிமுகப்படுத்தப்படுகின்றன. திறந்த மருத்துவமனைகள் மற்றும் வீடுகளுக்கே வரும் நலச் சேவைகள் போன்றவை இப்போது

வந்திருக்கின்றன. கல்வி மூடப்பட்ட இடமாக இருந்தது மிகவும் குறைந்து வருகிறது. உழைக்கும் இடத்திலிருந்து வேறுபட்டதாக அதுவும் ஒரு மூடப்பட்ட இடமாக இருப்பதும் ஆனால் இரண்டுமே மறைந்துகொண்டிருப்பதும் உழைப்பாளி-பள்ளிக் குழந்தைகளுக்கு மற்றும் அரசு அலுவலர்-மாணவர்களுக்கு அஞ்சத்தக்க தொடர் பயிற்சிகளை அளிப்பவையாகவும் தொடர் கண்காணிப்பைக் கொண்டவையாக மாறிக் கொண்டிருப்பதும் புரிந்து கொள்ள முடிகிறது. அவர்கள் இதை கல்வி சீர்திருத்தமாகச் சொன்னாலும் அது பள்ளியின் சீர்குலைவுதான். கட்டுபாடுள்ள அமைப்பில் எதுவுமே அதிக காலத்திற்குத் தனியாக விடப்படுவதில்லை. இத்தாலியில் பகுதி நேர வேலையை வீட்டிலேயே நடத்திக் கொள்ளலாம் என்பது பற்றி நீங்களே நீண்ட காலத்திற்கு முன் பரிந்துரைத்திருந்தீர்கள். அதன் பின் அது பரவியது(புதிய வடிவங்களில் உற்பத்திப் பொருள் பரவலாக்கப்படுவதும் பங்கிடப்படுவதும் நடந்தது). ஒவ்வொரு சமூகமும் ஒரு வகையான எந்திரத்தை எதிர்கொள்வது பற்றி பார்க்கமுடியும். எளிமையான இயக்கம் உள்ள எந்திரங்களை இறையாண்மை சமூகங்களும், வெப்ப இயக்கம் உள்ள எந்திரங்களை ஒழுங்குறுத்தல் சமூகங்களும், தொடர்புகட்டுப்பாட்டு எந்திரங்கள் மற்றும் கணினி எந்திரங்களை கட்டுப்படுத்தும் சமூகங்களும் எதிர்கொண்டதைப் பார்க்க முடியும். ஆனால் எந்திரங்கள் எதையும் விளக்குவதில்லை. ஒழுங்கமைக்கப்படும் தொகுப்பு வரிசையின் ஓர் உறுப்பாக இருக்கும் எந்திரங்களை ஆய்வு செய்யவேண்டியிருக்கிறது. எதிர்வரும் முடிவற்ற கட்டுப்பாடுள்ள திறந்த சமூகங்களோடு ஒப்பிடும் போது கடுமையான அடைத்து வைக்கப்பட்ட மூடிய சமூகங்கள் மகிழ்வான கடந்தகாலமாகப்



பார்க்கப்பட்டன. "தொடர்புறுத்தலின் சர்வதேசமயம்" பற்றிய தேடல் நம்மை நடுங்க வைக்கிறது. கட்டுப்படுத்தப்படும் சமூகங்கள் முழுவதுமாக உருவாவதற்கு முன்பே குற்றத்தின் வடிவங்களும் அல்லது எதிர்ப்புகளும் (இரண்டும் வேறுவேறானவை) தோற்றமெடுப்பதும் உண்மை. உதாரணமாக கணினி களவுகளும் வைரஸ்களும் வேலை நிறுத்தங்கள் மற்றும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் சொல்லப்பட்ட 'நாசவேலைகளையும்" (எந்திரங்களின் "அடைப்புகள்") ஒத்திருந்தன. கட்டுப்படுத்தப்பட்ட அல்லது தொடர்புறு சமூகங்கள் தடைகளுக்கான வடிவங்களுக்குக் கொண்டுசெல்லுமா, அதனால் கம்யூனிசம் மீண்டும் வர பாதை திறக்கப்படும் என்பது "சுதந்திரமான தனிநபர்களின் நேர்எதிர் நிறுவனங்கள்" என்று அறியப்படுமா என்று கேட்கிறீர்கள். இருக்கலாம். எனக்குத் தெரியவில்லை. அது சிறுபான்மையினர் வெளிப்படையாகப் பேசுவதற்கு எதுவும் செய்யப் போவதில்லை. பேச்சும் தொடர்புறுத்தலும் ஒருவேளை சிதைந்திருக்கலாம். தற்செயலாக அல்லாமல் இயல்பாகவே அவர்கள் பணத்தால் ஊடுருவப்பட்டிருக்கிறார்கள். நாம் பேச்சைக் கடத்தவேண்டும். தொடர்புறுத்தலைவிட படைப்பாக்கம் என்பது எப்போதுமே வேறுபட்டது. தொடர்புறுத்தமுடியாத இடைவெளிகளையும் தடுப்பான்களையும் உருவாக்கிக் கட்டுப்பாடுகளிலிருந்து தப்பவேண்டும்.

நெக்ரி: உங்களின் மற்ற நூல்களைவிட ஃபூக்கோ பற்றிய நூலிலும் மடிப்புகள் நூலிலும் தன்னிலையாக்கத்தின் சிக்கல் குறித்து ஆழமாக ஆய்வு செய்யப்பட்டிருப்பது போல் தெரிகிறது. உள்ளுக்கும் புறத்துக்கும் இடையிலான இடையறாத இயக்கம்தான் தன்னிலை. இந்தத் தன்னிலை என்ற கருத்தியலின் அரசியல் விளைவுகள் என்ன? இந்தத் தன்னிலை வெளிப்புறத்தில் குடியுரிமையாகச் சுருக்கப்படாவிட்டால், அது குடியுரிமையைக் கட்டாயமாகவும் உயிர்ப்புடனும் முதலீடு செய்யமுடியுமா? அது ஒரு புதிய தீவிரவாத செயல்முறையியலை உருவாக்க சாத்தியமாகுமா? உலகத்திற்கு ஒரு மட்டிப்படைத் தருவதாகவோ பாட்சிக அமைப்பாகவோ ஆகுமா? நிகழ்வின் உன்னதங்கள் மற்றும் தன்னிலையின் அரசியல் எதை வரலாற்றுக்குள் எடுத்துச் செல்லும்? ஆற்றலுடையதாய் இருந்தாலும் எந்த ஓர் அடிப்படை இல்லாவிட்டாலும் கூட அது மொத்தத்துவமாகாது. நாம் எப்படி ஸ்பினோசா சொல்வது போல் முழுமையான ஓர் இனத்தை உண்டாக்குவது?

"Perhaps one day this century will be known as Deleuzian"

– Michel Foucault



டெல்யூஜ்: தன்னிலையாக்கம் எனும் செயல்பாட்டின் மூலம் தனிநபர்களும் குழுக்களும் தன்னிலைகளாக பல வழிகளில் நிலைபெறுவதைப் பார்ப்பது நிச்சயமாகப் பொருளாம்சம் மிக்கது. அந்தச் செயல்பாடுகளில் எது முக்கியமாக இருக்கிறது என்றால் அறிவின் நிறுவன வடிவத்தையும் அதிகாரத்தின் ஓங்கிய வடிவங்களையும் பறக்கணித்து அவர்கள் எந்த அளவு வடிவமைக்கப்படுகிறார்கள் என்பதே.

அதிகாரத்தின் புதிய வடிவங்களை அவர்கள் தோற்றுவித்தாலும் அல்லது அறிவின் புதிய வடிவங்களில் இணைந்தாலும் அதுவும் முக்கியமானதே. ஒரு தருணத்தில் உண்மையாக தன்னெழுச்சியான கலக இயல்பைக் கொண்டிருந்தாலும் கூட ''தன்னிலை'' என்பதோடு எதுவும் தொடர்புடையதில்லை. அதாவது கடமைகள், அதிகாரம், அறிவு என்பதில் முதலீடு செய்யப்படுவதாக இல்லை. ஒருவர் தன்னிலையாக்கச் செயல்பாட்டிற்கு பதிலாக, புதியவகை நிகழ்வுகள்பற்றி சரிநிகராகவும் நன்றாகவும் பேசலாம்: நிகழ்வுகள் அவற்றை உருவாக்கும் சூழ்நிலைகளை அல்லது அவற்றை கொண்டுசெலுத்தும் நிலமைகளை விவரிக்காமல் விளக்கப்படமுடியாது. ஒரு தருணத்தில் அவை தோற்றம் பெறும். அந்தத் தருணம்தான் முக்கியமானது அந்த வாய்ப்பை நாம் கைப்பற்றவேண்டும். அல்லது நாம் எளிமையாக மூளையைப் பற்றிப் பேசலாம்: மூளை உள்ளும் புறமும் நடக்கும் இரு வழி தொடர் இயக்கத்தின் இடையில் உள்ள எல்லை, அதாவது இரண்டுக்கும் இடையிலுள்ள ஒரு சவ்வு, அல்லது அது அறிவியலுக்குரியது. ஒருவர் ஏன் இந்த வழியில் அல்லது மற்றொரு வழியில் சிந்திக்கிறார் என்பதைக் கண்டறிவது, புதிய மூளைப் பாதைகளை தெளிவது, புதிய சிந்தனைகளைக் கண்டுபிடிப்பது போன்றவை நுண்ணிய அறுவை சிகிச்சை மூலம் கூட விளக்கப்பட முடியாததுதான். தன்னிலையாக்கம், நிகழ்வுகள் மற்றும் மூளைகள் என்பவை எல்லாமே ஓரளவில் ஒன்றுதான் என்றே நான் நினைக்கிறேன். என்ன நாம் உலகின் மீதான நம்பிக்கையை நாம் இழந்துவிட்டோம். நாம் இந்த உலகத்தை இழந்துவிட்டோம். நம்மிடமிருந்து இந்த உலகம் பறிக்கப்பட்டுவிட்டது. நாம் உலகத்தை நம்பினால் எத்தனை தெளிவற்றதாக இருந்தாலும் அதைப் படியச் செய்வோம், அது கட்டுப்பாட்டைத் தாண்டிச் செல்லும். எத்தனை சிறியதான பரப்பும் கொள்ளளவும் இருந்தாலும் புதிய காலவெளிகளைக் கண்டுபிடிப்போம். இதைத்தான் நீங்கள் ரட்சிப்பு என்கிறீர்கள். நம்முடைய ஒவ்வொரு இயக்கத்தை வைத்தும் நாம் கட்டுப்பாட்டுக்கு எதிராக இருக்கும் திறன் பெற்றிருக்கிறோமா அல்லது அதற்கு அடிபணிந்துவிட்டோமா என்பதை அளக்கமுடியும். அதற்கு நமக்கு படைப்பும் ஒரு மக்கள் திரளும் வேண்டும்.

நினைவுகள் எனைக் காண்கின்றன

தாமஸ் ட்ரான்ஸ்ட்ரோமர்

தமிழில்: சபரிநாதன்



நினைவுகள்

"என் வாழ்க்கை." இச்சொற்களைக் குறித்துச் சிந்திக்கையில் என் முன்னே ஓர் ஒளிக்கீற்றைக் காண்கிறேன்.நெருங்கிச் சென்று கண்ணுற்றதில் அது ஒரு வால்நட்சத்திரத்தின் வடிவைக் கொண்டுள்ளது. குழந்தைப் பருவம் மற்றும் வளர்பருவம் தான் அதன் பிரகாசமான முனை-தலை.அடர்த்தி வாய்ந்த பகுதியான வால்மீன்கரு என்பது மழலைப்பிராயம்.நம் வாழ்வின் அதிமுக்கியமான கூறுகளெல்லாம் தீர்மானிக்கப்பெறும் அந்த முதல் பருவம்.நான் ஞாபகங்கொள்ள முயற்சிக்கிறேன். அந்த அடர்த்தியை துளைத்துக் காண முயல்கிறேன். ஆனால் இவ்வடர்ந்த பிரதேசங்களில் அலைவது மிகவும் கடினமானது.ஆபத்தானது.ஏதோ மரணத்திற்கு அருகிலே வந்துகொண்டிருப்பதைப் போல் உணரச்செய்வது.இன்னும் போகப் போக. வால்நட்சத்திரம் மெலிந்துசெல்கிறது-அது தான் நீளமான பகுதி.வால். அது மேலும் மேலும் அடர்த்தி குறைந்ததாகிறது. இருந்தும் அகன்றதாகிறது. நானிப்போது அந்நட்சத்திர வாலின் வெகுதூரத்தில் இருக்கிறேன். இதை எழுதும் எனக்கு வயது அறுபது.

பெரும்பாலும் நமது ஆரம்பகால அனுபவங்கள் மீட்கவியலாதவை.மீள்கூறல்கள். ஞாபங்களின் ஞாபகங்கள். திடீரென வாழ்க்கைக்குள் ஜொலிக்கும் மனநிலைகளைப் பொறுத்த மீளுருவாக்கங்களே அவை.

துல்லியமான எனது முதல் நினைவு ஓர் உணர்ச்சி.ஒரு பெருமித உணர்ச்சி.அப்போது தான் மூன்று வயதிற்குள் அடியெடுத்திருந்தேன். அது மிகவும் குறிப்பிடத்தக்கது என்று அறிவிக்கப்படவும் செய்திருந்தது- அதாவது நானிப்போது பெரியவன் என்பது. ஒரு பிரகாசமான அறையில் படுக்கையில் இருந்தேன். நான் பெரியவனாகிக் கொண்டிருக்கிறேன் என்ற உண்மையை அற்புதமாக உய்த்துணர்ந்தபடி தாளத்தில் குதித்தேன். என்னிடம் ஒரு பொம்மை இருந்தது. என்னால் யோசிக்கக்கூடிய மிக அழகான பெயரை அதற்குச் சூட்டினேன்:கரீன் ஸ்பின்னா. நானதைத் தாய்மைபாவத்துடன் நடத்தவில்லை. அதைவிட அவள் எனக்கு ஒரு தோழியாக அல்லது நான் காதலிக்கும் ஒருத்தியாகவே இருந்தாள்.

நாங்கள் ஸ்டாக்ஹோமில் உள்ள சோடர் பகுதியில் ஸ்வீடென் போர்க்ஸ்காத்தன் (தற்போது க்ரைன்ஸ்காத்தன்) 33 என்ற முகவரியில் வசித்து வந்தோம்.அப்பா இன்னும் குடும்பத்தின் ஒரு பகுதியாகவே இருந்தார் எனினும் மிகவிரைவில் பிரிந்துவிட இருந்தார்.எங்களது வழிமுறைகள் எல்லாம் மிகவும் 'நவநாகரிக'மாகவே இருக்கும்-துவக்கம் முதலே என் பெற்றோரிடம் பரிச்சயமான 'நீ நான்' தொனியையே பயன்படுத்தி வந்துள்ளேன்.அம்மாவின் பெற்றோர்கள் அருகிலேயே இருந்தனர்.தெருமுனைக்கு அருகிலேயே ப்ளெகிங்காத்தனில்.

எனது தாய்வழி தாத்தா கார்ல் ஹெர்மென் வெஸ்டர்பெர்க் 1860இல் பிறந்தார்.அவர் ஒரு கப்பல் ஓட்டுனர்.என்னை விட எழுபத்தியொரு வயது மூத்த அவர் எனது மிகச்சிறந்த நண்பரும்கூட.மிக விசித்திரமாக, அதே வயது வித்தியாசம் தான் அவருக்கும் அவருடைய தாய்வழித் தாத்தனாருக்கும்.அவர் பிறந்தது 1789இல்:பேஸ்டில் முற்றுகை,அஞ்சலா கலகம்,க்லாரினெட் க்விண்டெட்டை மொஸார்ட் எழுதியது.காலத்தில் பின்னோக்கி இரண்டு சமஎட்டுகள்,இரு நீள எட்டுகள்,இருந்தும் உண்மையில் அவ்வளவு நீளமில்லை தான்.நாம் வரலாற்றைத் தொடமுடியும்.

தாத்தாவின் பேச்சுவழக்கு பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்தது.அவரது பெரும்பான்மையான வெளிப்பாடுகள் இன்று ஆச்சர்யப்படத்தக்க பழைய பாணியாகத் தோன்றக்கூடும்.ஆயினும் அவரது வாயிலும் என் காதிலும் அவை முற்றிலும் இயல்பானவையாகப் பட்டது.அவர் ஓரளவிற்கு குள்ளமான மனிதர். ஒரு வெள்ளை மீசையுடன் முக்கியத்துவம் மிகுந்த அதைவிட வளைவு மிக்க மூக்கு-அவரே சொன்னதைப் போல் 'ஒரு துருக்கியனுடையதை ஒத்த' மூக்கு.துடிப்பான சுபாவம் கொண்ட அவர் எந்நேரம் வேண்டுமானாலும் கிளர்ந்தெழுந்து விடுவார்.அவரது அவ்வப்போதைய கோபக்கிளர்ச்சி ஒருபோதும் பெரிதாக எடுத்துக் கொள்ளப்பட்டதில்லை மேலும் தொடங்கியவுடனேயே வடிந்தும் விடும். நிரந்தர ஆக்ரோஷம் அற்ற சாந்தமானவர். உண்மையில்

மென்மையானவர் என்று முத்திரையிடும் ஆபத்துடைய அளவிற்கு இணக்கமானவர். சகஜ உரையாடல்களின் போது விமர்ச்சிக்கப்படும் ஆட்கள் விஷயத்தில் கூட அவர்களது நல்ல பக்கத்தையே வலியுறுத்த விரும்புவார்.

"ஆனால் நீங்கள் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும் அந்த X ஒரு பொறுக்கி என்று"

"நல்லது, நல்லது- உண்மையில் அதைப் பற்றி எனக்கொன்றும் தெரியாது.."

விவாகரத்திற்குப் பின்னர் அம்மாவும் நானும் விதவிதமான ஆட்கள் மிகநெருங்கி வசித்துவந்த கீழ்மத்தியவர்க்கத்தினரின் குடியிருப்பான ஃபோல்குங்காத்தன், 57ற்கு குடிபெயர்ந்தோம். அக்குடியிருப்பு வாழ்க்கையின் ஞாபகங்கள் முப்பது நாப்பதுகளில் வெளியான ஒரு திரைப்படத்தின் காட்சிகளைப் போல,பொருத்தமான கதாபாத்திரங்களின் பட்டியலுடன் தங்களை அடுக்கிக்கொண்டன. அன்பிற்குரிய உணவக உபசரிப்பாளர், அவளது சுருங்கப் பேசும் திடகாத்திரமான கணவன். எனக்கவர் மீது மரியாதை இருந்தது ஏனெனில் ஏனைய விஷயங்கள் தவிர அவர் ஏதோ விஷவாயுவினால் பாதிக்கப்பட்டிருந்தார்-அது ஆபத்தான எந்திரங்களுக்கு ஒரு துணிச்சலான அருகாமையில் அவர் இருந்திருக்கக்கூடும் என்பதை உத்தேசித்தது.

அங்கு அவ்விடத்தைச் சேராத வருவோர் போவோரின் தொடர் நடமாட்டம் இருக்கும். எப்போதாவது குடிப்பவர் படிக்கட்டில் மெதுவாக தன் நகைச்சுவையுணர்ச்சிக்குத் திரும்புவார். வாரத்தில் பலமுறை பிச்சைக்காரர்கள் வாயில்மணி அழுத்துவர். முனகியபடியே முகப்பில் நிற்பர். அம்மா அவர்களுக்காக சேண்ட்விச் செய்வார்-காசுக்குப் பதிலாக ரொட்டித்துண்டுகள் கொடுப்பார்.

நாங்கள் ஐந்தாவது தளத்தில் வசித்துவந்தோம்.அதாவது உச்சியில். நாலு கதவுகளும் மேல்மாடத்தறைக்கான நுழைவாயிலும் இருந்தன. அதிலொன்றில் ஓர்கே எனும் பேர்கொண்ட ஊடகப் புகைப்படக்காரர் இருந்தார். ஒரு ஊடகப் புகைப்படக்காரருக்கு கீழே வாழ்வது ஒருவகையில் மதிப்பிற்குரிய விஷயமாகத் தோன்றியது.

எமது அடுத்தவீட்டுக்காரர் நடுவயதடைந்த,மஞ்சள் நிறமுடைய ஒரு மணமாகதவர். வீட்டிலிருந்தே வேலை செய்த அவர் தொலைபேசியைப் பயன்படுத்தி ஒருவிதமான தரகு வியாபாரத்தை நடத்திக்கொண்டிருந்தார். தொலைபேசி அழைப்புகளினிடையே அடிக்கொருதரம், எங்களது குடியிருப்பிற்குள் சுவர்களைத் துளைத்துப் புகும் களிப்புமிக்க வெடிச்சிரிப்புகளை வெளியேற்றுவார். அடிக்கடி கேட்கும் மற்றொன்று கார்க் செருகுமூடிகள் பிடுங்கப்படும் ஓசை. அப்போதெல்லாம் பீர் போத்தல்களுக்கு உலோக மூடிகள் கிடையாது.



அந்த டையோனிசிய ஒலிகள்,வெடிச்சிரிப்புகள் மற்றும் செருகுமூடிகளின் திறப்போசைகள். மின்தூக்கியில் அவ்வப்போது சந்தித்த, பார்ப்பதற்கு வெளிறிய அந்த வயோதிக மனிதரினுடையவை என்பது நம்புவதற்குக் கடினமானதாகத் தோன்றும். வருடம் ஆக ஆக அவர் சந்தேகத்திற்குரியவராய் மாறினார். சிரிப்போலங்களும் எண்ணிக்கையில் குறைந்தன.

ஒருமுறை வன்முறை சம்பவம் ஒன்று நடந்தது. நான் ரொம்பச் சின்னவன் அப்போது. ஒரு அண்டைவீட்டுக்காரர் மனைவியால் வெளியே நிறுத்தி கதவடைக்கப்பட்டார். அவர் குடியிலும் பெருங்கோபத்திலும் இருந்தார். அவள் உள்ளே தன்னைப் பத்திரப்படுத்திக் கொண்டாள். கதவை உடைக்க விரும்பிய அவர் பல்வேறு மிரட்டல்களைக் கத்திக் கொண்டிருந்தார். அந்தத் தனித்துவமான வாக்கியத்தை அவர் இரைந்தது எனக்கு நினைவிருக்கிறது: "குங்ஷொல்மெனிற்குப் போனாலும் எனக்கு ஒரு மயிரும் இல்லை". என் அம்மாவிடம் கேட்டேன் குங்ஷொல்மெனை பற்றி அவர் சொன்னதற்கு என்ன அர்த்தமென்று. அவள் விளக்கினாள் அங்குதான் காவல்நிலையத் தலைமையகம் இருப்பதாக. அப்போதிருந்து அந்தப் பிராந்தியம் ஏதோவொரு அச்சவுணர்ச்சியை ஏற்படுத்தியது. (புனித எரிக் மருத்துவமனைக்குச் சென்று,1939-40 குளிர்காலத்தில் ஃபின்லாந்திலிருந்து கவனித்துக் கொள்ளப் படுவதற்கென்று வந்திருந்த போர்க்காயம் உற்றவர்களைப் பார்த்தபொழுது இந்த உணர்ச்சி தீவிரமடைந்தது)

அம்மா அதிகாலையிலேயே பணிக்குச் சென்றுவிடுவாள். ட்ராமிலோ பேருந்திலோ பயணிப்பதில்லை-தனது வாலிபப்பிராயம் முழுக்க சோடரிலிருந்து ஓஸ்டெர்மாமிர்க்கு.. ஓஸ்டெர்மாமிலிருந்து சோடருக்கும் நடக்கவே செய்தார். அவர் ஹெட்விக் லியனோரா பள்ளியில் வேலை பார்த்தார். ஆண்டுதோறும் மூன்றாம் மற்றும் நான்காம் வகுப்புகளைப் பார்த்துக் கொண்டார். குழந்தைகளிடம் பெரும் அக்கறை கொண்டிருந்த அவர் ஒரு சிரத்தைமிக்க ஆசிரியர். பணிவோய்வை ஏற்றுக்கொள்வது அவருக்குக் கடினமானதாக இருந்திருக்கும் என ஒருவர்

எண்ணக்கூடும். ஆனால் அப்படியில்லை-அவர் பெரிய விடுதலை அடைந்ததாகவே உணர்ந்தார்.

அம்மா வேலைக்குச் சென்றதால் நாங்கள் ஒரு வீட்டு வேலைக்காரி வைத்துக்கொண்டோம். 'ஆயா' என அழைக்கப்பட்டாலும் குழந்தை-கவனிப்பாளர் என்பதே உண்மைக்கு அருகிலிருக்கும்.உண்மையில் அடுக்களைக்குள் ஒரு பகுதியான சின்ன அறை ஒன்றில் உறங்கிக் கொள்வாள் அவள். இரண்டறைகளும்-சமையலறையும்-கொண்ட-குடியிருப்பு எனும் எங்கள் வீட்டின் அதிகாரப்பூர்வ அடைமொழிக்குள் வராதது அவ்வறை.

எனக்கு ஐந்து அல்லது ஆறு வயதிருக்கும் பொழுது, எங்களது ஆயா அன்னாலிசா என அழைக்கப்பட்டாள். அவள் தெற்கு ஸ்வீடனில் ஸ்கயேனிலுள்ள எஸ்லோவில் இருந்து வந்தாள். அவள் மிகவும் வசீகரமானவளென நினைத்தேன். சிறுஞ்சுருள் பொன்முடிகள். மேல நிமிர்ந்த ஒரு மூக்கு. மிதமான ஸ்கயேன் பேச்சு வழக்கு-அவள் ஒரு அழகான நபர். இப்போதும் எஸ்லோவ் ஸ்டேஷனை கடக்கும்போதெல்லாம் நான் ஏதோவொன்றை உணர்கிறேன். ஆனால் என்றுமே அம்மந்திர இடத்தில் ரயிலை விட்டிறங்கியதில்லை.

குறிப்பாக அன்னாலிசா வரைவதில் திறமைசாலியாக இருந்தாள் டிஸ்னி வடிவங்களே அவளது விசேஷம். 1930களின் பிற்பகுதியான அவ்வருடங்களில் நானும் தங்குதடையின்றி வரைந்தேன். அப்போது எல்லா மளிகைக்கடைகளிலும் உபயோகப்படும் ஒருவித பழுப்பக் காகிதச் சுருள்களை வாங்கி வருவார் தாத்தா. விளக்கப் படக்கதைகளால் அவற்றை நிரப்புவேன் நான். ஐந்து வயதில், உறுதியாகச் சொல்லலாம், நானே எழுதக் கற்றுக் கொண்டேன். ஆயினும் அது மிகமெதுவான செயல்முறையாக இருந்தது. என் கற்பனைக்கு அதைவிட வேகமான வெளிப்பாட்டு யுக்தி தேவைப்பட்டது. முறையாக வரைவதற்கு கூட போதிய பொறுமை இல்லை எனக்கு. அதிவேக சலனத்திலுள்ள வடிவங்கள் கூடிய ஒருவித குறுக்கெழுத்து உருவரைவு முறையைக் கண்டுபிடித்தேன்:துரிதவோட்டம் கொண்ட இருந்தும் எந்த விவரணைகளுமற்ற நாடகம். என்னால் மட்டுமே நுகரப்படும் படக்கதைகள்.

1930களின் மத்தியில் ஒருநாள் ஸ்டோக்ஹோல்மின் நடுவே நான் தொலைந்துவிட்டேன். அம்மாவும் நானும் ஒரு பள்ளிக்கூட கச்சேரிக்குச் சென்றிருந்தோம். 'வெளியே' வாயிலின் நெருக்கடியில் அம்மாவின் கைப்பிடியை நழுவ விட்டுவிட்டேன். மனித நீரோட்டத்தில் கதியற்று அடித்துச் செல்லப்பட்டேன், கண்டறிய முடியாதபடிக்கு நான் மிகவும் சிறுவனாக வேறு இருந்தேன், ஹோட்டோர்கெட் மேல் இருள்


சரிந்து கொண்டிருந்தது. அனைத்து பாதுகாப்புணர்வும் பறிகொடுத்த நிலையில் வெளிவாயிலில் நின்றிருந்தேன். என்னைச் சுற்றி மக்கள் இருந்தனர் ஆனால் அவரவர் வேலையைப் பார்த்துக் கொண்டு. பற்றிக் கொள்ள ஏதுமில்லைஅது எனது முதல் மரண அனுபவம்.



ஒரு ஆரம்பகட்ட பீதிக்குப் பிறகு யோசிக்கத் தொடங்கினேன். வீட்டிற்கு நடந்து செல்வது சாத்தியமானதாகவே இருக்க வேண்டும். அது நிச்சயமாக சாத்தியமே. நாம் பேருந்தில் வந்தோம். வழக்கம்போல இருக்கையில் முட்டிபோட்டபடி சன்னலுக்கு வெளியே பார்த்துக்கொண்டே வந்தேன்.ட்ரோடிங்காத்தன் கடந்துபோனது.நான் இப்போது செய்யவேண்டியது என்னவென்றால் வெறுமனே ஒவ்வொரு பேருந்து நிறுத்தமாக வந்த வழியே திரும்பி நடக்க வேண்டியதுதான்.

நான் சரியான திக்கில் சென்றேன்.அந்த நெடுநடையில் ஒரேயொரு இடத்தைப் பற்றிய தெளிந்த ஞாபகம் மட்டுமே எனக்கிருக்கிறது:நோர்ப்ரூவை அடைந்து பாலத்தடியில் இருந்த தண்ணீரைக் கண்டது.வாகன நெரிசல் பலமாக இருந்தது.அதனால் தெருவைக் கடப்பதற்கு துணியவில்லை.எனக்குப் பின்னிருந்த ஒரு மனிதனிடம் திரும்பி 'இங்கே வாகனநெரிசல் அதிகமாக உள்ளது' என்றேன்.அவன் என் கையைப் பற்றி கடக்கச் செய்தான்.

ஆனால் பிறகு அவன் எனை போக விட்டுவிட்டான்.எனக்குத் தெரியவில்லை ஏன் இந்த மனிதரும் மற்ற அனைத்து அறிமுகமற்ற பெரியவர்களும், ஒரு சின்னபையன் இருண்ட மாலையில் ஸ்டாக்ஹோல்மின் ஊடே தனியாகத் திரிவது அவ்வளவு ஒன்றும் தவறானதில்லை எனக் கருதினாரென. ஆனால் அப்படித்தான் எண்ணினர். பயணத்தின் மீதித்தொலைவு-பழைய நகர்ப்புறமான காம்லா ஸ்டன் வழியாக ஸ்லுச்செனுக்கடுத்து சோடருக்குள்-சிக்கலானதாகவே இருந்திருக்க வேண்டும். ஒருவேளை நாய்கள் மற்றும் தூதுப்புறாக்களின் உள்ளே இருக்கும் அதே புதிர்த் திசைமானியின்-எங்கே விடப்பட்டாலும் அவை தம் வீடு செல் வழியை எப்போதும் கண்டடைந்து விடும்-



உதவியினோடே நான் என் வீட்டை வந்தடைந்தேன்.பயணத்தின் இப்பகுதி குறித்து எதுவும் நினைவில்லை. ஆம், எனக்கு நினைவுள்ளது-எப்படி என் சுயநம்பிக்கை வளர்ந்தபடியே சென்றது என்றும் கடைசியாக வீடடைந்த பொழுது நான் பெருங்களிப்பில் இருந்ததும் நன்றாக நினைவுள்ளது. தாத்தா தான் எனை எதிர்கொண்டார். உடைந்துபோன என் தாயோ காவல்நிலையத்தில் அமர்ந்து கொண்டிருந்தாள் அவர்களது தேடுதலின் முன்னேற்றத்தை தொடர்ந்து கவனித்தபடி. தாத்தாவின் திடநரம்புகள் அவரைக் கைவிடவில்லை; வெகுவியல்பாக என்னை வரவேற்றார். அவர் நிம்மதியடைந்தார் என்பது உண்மைதான் எனினும் அலட்டிக் கொள்ளவில்லை. அது எல்லாமே பாதுகாப்பானதாகவும் இயல்பானதாகவும் உணரச்செய்தது.

அருங்காட்சியகங்கள்

ஒரு குழந்தையாக நான் அருங்காட்சியகங்களால் ஈர்க்கப்பட்டேன். முதலில், இயற்கை வரலாற்று அருங்காட்சியகம். என்னவொரு கட்டடம்! பிரமாண்டாமாய், பாபிலோனிய சாயலில், வற்றாததாய்!.. தரைத்தளத்தில் அடுத்தடுத்து, தூசியில் நெருக்கியடித்திருக்கும் பொதியப்பட்ட பாலுட்டிகள் மற்றும் பறவைகளின் பேரறைகள். தவிர தோரணவாயில்கள், கூரையிலிருந்து திமிங்கலங்கள் தொங்கிக் கொண்டிருந்த அங்கே எலும்புகளின் வாசனை. அதற்கு மேற்தளத்தில்: புதைபடிமங்கள், முதுகெலும்பிலிகள்.

சுமார் ஐந்து வயது இருக்கும்போதே நான் இயற்கை வரலாற்று அருங்காட்சியகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டேன் .நுழைவாயிலில் இரண்டு யானை எலும்புக்கூடுகள் பார்வையாளர்களை எதிர்கொண்டன. அற்புதத்திற்கான நுழைவாயிலின் இரு பாதுகாவலர்களான அவை என்னிடம் அளவற்ற தாக்கத்தை உண்டுசெய்தன; மேலும் நான் அவற்றை ஒரு பெரிய சித்திர ஏட்டில் வரைந்தேன்.

கொஞ்ச காலத்திற்குப் பிறகு அந்த இயற்கை வரலாற்று மியூசிய பார்வையிடல்கள் நின்றுவிட்டன. எலும்புக்கூடுகள் மீது பேரச்சம் கொண்ட ஒரு காலகட்டத்தினூடே பயணிக்கத் தொடங்கினேன். அதில்

மிகமோசமானது. நோர்டியக் குடும்ப பேரகாரமுதலியில் 'மனிதன்' பற்றிய கட்டுரையின் முடிவில் சித்திரிக்கப்பட்டிருந்த எலும்புருவம் ஆயினும் பொதுவாகவே எலும்புக்கூடுகள் எனது பயத்தைக் கிளர்த்தின. மியூசிய மாடியில் உள்ள யானைக் கூடுகள் உட்பட அவற்றின் எனது சொந்த வரைபடங்கள் கூடத் திகிலூட்டின. சித்திர ஏட்டை திறப்பதற்குக்கூட முடியவில்லை.

எனது ஆர்வம் ரயில்வே மியூசியத்தை நோக்கித் திரும்பிற்று. இப்பொழுது அது காவ்லே டவுனுக்கு வெளியே விசாலமான இடத்திலுள்ளது. ஆனால் அக்காலத்திலோ ஒட்டுமொத்த மியூசியமே ஸ்டோக்ஹோம் நகர் மையத்தில் இருந்த க்லாரா வட்டத்தின் ஒருபகுதியில் திணிக்கப்பெற்றிருந்தது. வாரம் இருமுறை தாத்தாவும் நானும் சோடரிலிருந்து இறங்கி வந்து மியூசியத்தைப் பார்வையிடுவோம். தாத்தா அங்கிருந்த ரயில் மாதிரிகளால் பிரமிப்படைந்திருக்க வேண்டும். இல்லையெனில் அத்தனை தரம் அங்கு வருவதை அவர் தாங்கியிருக்கமாட்டார். அந்த நாளுக்கு இது போதும் என முடிவாகிவிட்டால், அருகிருந்த ஸ்டோக்ஹோல்ம் சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு வந்து சேர்வோம். அங்கு புகை கக்கிக்கொண்டு வரும் நிஜ-அளவு-ரயில்களைப் பார்ப்போம்.

அருங்காட்சியக ஊழியர்கள் இளஞ்சிறுவனின் பேரார்வத்தை கவனித்தனர். ஒரு சந்தர்ப்பத்தில் நான் அருங்காட்சியக அலுவலகத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டு பார்வையாளர் புத்தகத்தில் எனது பெயரை 'இடவலம் மாறிய S உடன்' எழுத அனுமதிக்கப்பட்டேன். நானொரு ரயில்வே பொறியியலாளனாக விரும்பினேன். ஆனாலும் மின்சார எஞ்சின்களைக் காட்டிலும் நீராவி எஞ்சின்களிலேயே அதிக ஆர்வமுற்றிருந்தேன். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் தொழிநுட்பவாதியைக் காட்டிலும் கற்பனாவதியாக இருந்தேன்.

கொஞ்ச காலத்திற்குப் பின்னர், ஒரு பள்ளிச் சிறுவனாக இயற்கை வரலாற்று அருங்காட்சியகத்திற்குத் திரும்பினேன். ஒரு தடயபேராசிரியரென பெருமிதத்துடனிருந்த நான் அப்பொழுது ஒரு முதிரா விலங்கியலாளன். பூச்சிகள் மற்றும் மீன்களைப் பற்றிய புத்தகங்களின் மேல் குனிந்தமர்ந்தேன்.

நான் என் சொந்த சேகரிப்புகளை ஆரம்பித்திருந்தேன். அவை வீட்டில் ஒரு அலமாரியில் வைக்கப்பட்டன. ஆனால் என் மண்டையோட்டிற்குள் ஒரு பிரம்மாண்ட மியூசியம் வளர்ந்தது. இந்தக் கற்பனை மியூசியத்திற்கும் நான் பார்வையிட்ட நிஜ மியூசியத்திற்கும் இடையில் ஒருவித பரஸ்பர உறவு உருவானது.

ஏறத்தாழ ஒவ்வொரு இரண்டாம் சனிக்கிழமையும் நான்



இயற்கை வரலாற்று அருங்காட்சியகத்தைப் பார்வையிட்டேன். ரோஸ்லாக்ஸூல் வரை ட்ராமில் சென்று மீதித் தொலைவை நடந்து கடப்பேன். எப்போதுமே அந்த சாலை நான் கற்பனை செய்திருந்ததைக் காட்டிலும் சற்று நீண்டதாகவே இருந்தது. அந்த நடை அணிவகுப்புகளை தெளிவாக ஞாபகம் வைத்துள்ளேன்: மூக்கொழுக, கண்களில் நீர் தளும்ப, அவை எப்போதுமே பெருங்காற்று சூழவே இருந்தன. எதிர்திசைப் பயணங்கள் எனக்கு நினைவிலேயே இல்லை. அது ஏதோ நான் ஒருபோதும் வீடு திரும்பாததைப் போலும், மியூசியத்திற்கு மட்டுமேயான, ஒரு ராட்சஸ பாபிலோனிய கட்டடம் நோக்கிய, மூச்சிரைக்கும், அழுகைநிரம்பிய நம்பிக்கையான தொடர் பயணத்தைப் போலும் இருந்தது.

இறுதியாக வருகையில், யானை எலும்புக்கூடுகளால் வரவேற்கப்படுவேன். அடிக்கொருதரம் நான் 'பழமையானவை' பகுதிக்கு நேரடியாகச் சென்றுவிடுவேன். பதினெட்டாம் நூற்றாண்டில் பொதிந்துவைக்கப்பட்ட விலங்குகளின் பகுதி அது. அவற்றுள் சில வீங்கிய தலைகளுடன் நயமின்றித் தயாரிக்கப்பட்டவை. என்றபோதும் அதில் ஒரு பிரத்யேக அற்புதம் இருக்கவே செய்தது. நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்ட விலங்கின மாதிரிகளுடன் கூடிய பெரிய செயற்கையான நிலவெளிகள் என் ஆர்வத்தைத் தூண்டத் தவறின-போலியான அவை குழந்தைகளுக்கானவை. இல்லை, இது உயிருள்ள விலங்குகளின் விஷயம் இல்லை என்பது தெளிவானது. அவை பொதியப்பட்டு, அறிவியலின் சேவைக்காக அங்கு நின்றன.நான் நெருக்கமாக உணர்ந்த அறிவியல் முறைமையோ லின்னேயன்களது:கண்டறி,சேகரி,உசாவு. (பொதிந்து என்பது wrapped, packed, bundled என்பதாக இருக்கிறதல்லவா? stuffed என்பதற்கு இந்த இடத்தில் பஞ்சடைத்த \ பஞ்சு திணித்த என்பது சரியாக இருக்குமா?)

நான் மியூசியத்தில் மெதுவாகவே செயல்புரிவேன். திமிங்கிலங்கள் மத்தியிலும் தொல்லுயிரியல் அறைகளிலும் நீண்ட நிறுத்தங்கள். அதன்பிறகு என்னை அதிகமாக நிறுத்தி வைத்தவை

எவையென்றால் அவை: முதுகெலும்பிலிகள்.

நான் ஒருபோதும் மற்ற பார்வையாளர்களுடன் தொடர்பு வைத்துக்கொண்டதில்லை. சொல்லப்போனால்,அங்கு மற்ற பார்வையாளர்கள் இருந்ததே எனக்கு நினைவில்லை. அவ்வப்போது காணச்சென்ற மற்ற அருங்காட்சியங்கள்-தேசிய கடல்சார் அருங்காட்சியகம், தேசிய இனவரைவியல் அருங்காட்சியகம், தொழில்நுட்ப அருங்காட்சியகம் -எப்போதுமே கூட்டமாயிருந்தன. ஆனால் இயற்கை வரலாற்று மியூசியமோ எனக்காக மட்டுமே திறந்திருப்பதெனத் தோன்றியது. என்ற போதும் ஒருநாள் யாரோ ஒருவரை சந்திக்கவே செய்தேன் -இல்லை, பார்வையாளர் இல்லை. அவர் ஏதோ ஒருவித பேராசிரியர். நாங்கள் முதுகெலும்பிலிகளுக்கிடையே சந்தித்துக் கொண்டோம்-காட்சிப் பெட்டகங்களுக்கு இடையில் திடீரென உருக்கொண்டார் அவர். உயரத்தில் கிட்டத்தட்ட என்னளவிற்கே குள்ளமாக இருந்தார். உடனேயே நாங்கள் மெல்லுடலிகள் பற்றிய ஓர் உரையாடலில் ஈடுபட்டோம். என்னை ஒரு பெரியாளென நடத்தும் வகைக்கு கவனக்குறை உள்ளவராகவும் முன்னபிப்பிராயமற்றவராகவும் இருந்தார் அவர். என் குழந்தைப்பருவத்தில் அவ்வப்பொழுது தோன்றி எனைத் தம் சிறகுகளால் தொட்ட அந்த காவல் தேவதைகளுள் அவரும் ஒருவர்.

எங்களது உரையாடல் பொதுமக்களுக்கு அனுமதியற்ற ஒரு பகுதிக்கு என்னை அனுமதிக்க இட்டுச்சென்றது. சிறிய மிருகங்கள் தயாரிப்பைப் பற்றி மேலான அறிவுரைகள் வழங்கப்பட்டன எனக்கு. மேலும் உண்மையாகவே புரஃபஷனலாகத் தோன்றிய சிறுகண்ணாடிக் குழாய்கள் உடன் தரப்பட்டன.

பதினொரு வயது முதல் பதினைந்தாகும் வரை நான் பூச்சிகளைச் சேகரித்தேன், எல்லாவற்றுக்கும் மேல், வண்டுகளை. பிறகு வேறு போட்டியிடும் ஆர்வங்கள் (பெரும்பாலும் கலாபூர்வமானவை) தமது கவனத்தை என்மீது திணித்தன. சிற்றுயிரியியலுக்கு விடைதந்தாக வேண்டும் என்பது எத்தனை சோகமானதாக உணரச்செய்தது. இது ஒரு இடைக்கால அனுசரிப்பு தான் என எனக்கு நானே சமாளித்தேன். பதினைந்து பதினாறு வருடங்களுக்குள் என் சேகரிப்பை மீண்டும் துவங்குவேன்.

ரன்மாரோ தீவில் வசந்தத்தில் தொடங்கும் என் சேகரிப்பு இயல்பாகவே கோடையில் கொழிக்கும். சுற்றித் திரிவதற்கு கொஞ்சம் போதுமான இடமிருக்கும் கோடையில்லத்தில், இறந்த பூச்சிகள் கொண்ட ஜாம் ஜாடிகளையும், பட்டாம்பூச்சிகளின் காட்சிப் பலகையையும் வைத்திருந்தேன். எல்லாவிடத்திலும் கமழ்ந்திருக்கும் எத்தில் அசிட்டேட்

வாசம்: எப்போதுமே எனது பாக்கட்டில் இந்த பூச்சிக்கொல்லித் தகரடப்பாவை வைத்திருந்ததால், நான் என்னுடனே சுமந்து செல்லும் வாசம்.

சந்தேகமேயில்லை, கையேடு சிபாரிசு செய்ததைப் போல பொட்டாஸியம் சைனைட் உபயோகித்திருந்தால் மேலும் துணிகரமானதாய் இருந்திருக்கும். அதிர்ஷ்டவசமாக, இந்தப்பொருள் என் கையெல்லைக்குள் இருக்கவில்லை, என்பதால் அதை உபயோகிப்பதா வேண்டாமா என்று தேர்வு செய்ய என் தைரியத்தை சோதித்தாக வேண்டியிருக்கவில்லை.

பூச்சிவேட்டையில் பலரும் ஈடுபட்டனர். அண்டைவீட்டுக் குழந்தைகள் ஆர்வமூட்டக்கூடிய ஒரு பூச்சியைக் கண்டவுடனேயே அலாரத்தை ஒலிக்க கற்றுக்கொண்டனர்.வீடுகளுக்கு மத்தியில் எதிரொலித்தது 'இதோ ஒன்று!' பிறகு நான் என் பட்டாம்பூச்சி வலையுடன் விரைந்து வருவேன்.

நான் சென்று கொண்டேயிருந்தேன் பல தொடர் பயணங்களுக்கு. அவ்வாறாக என் உடல்நிலையை மேம்படுத்தும் மீச்சிறிய எண்ணமும் இன்றி திறந்த காற்றில் ஒரு வாழ்வு. உண்மைதான், என் கொள்ளைப் பொருள் மீது எந்த அழகியல் அபிப்பிராயமும் எனக்கிருக்கவில்லை- என்ன இருந்தாலும் இது அறிவியல் தானே-ஆயினும் அறியாமலேயே இயற்கை எழிலின் அநேக அனுபவங்களை உட்கிரகித்துக்கொண்டேன் நான். அம்மகத்தான புதிரில் அலைந்தேன். நான் கற்றுக்கொண்டேன் நிலம் உயிரோடிருப்பதை, நம்மைச் சிறிதும் சட்டை செய்யாது தன் சொந்த வளமிக்க வாழ்வை வாழ்ந்துகொண்டிருக்கும் ஊர்வன மற்றும் பறப்பனவற்றின் ஒரு முடிவிலா உலகு அங்கிருப்பதை.

அவ்வுலகின் ஒரு பின்னமதில் பின்னமதைப் (Fraction of a fraction? சிறுபகுதியில் சிறுபகுதியை- துளியில் துளியை என இருக்கலாமா?) பிடித்தேன். பிடித்து நான் இன்னும் வைத்திருக்கும் பெட்டிகளில் குத்தி வைத்துக்கொண்டேன். நான் அரிதாகவே நினைவுகொள்ளும் ஒரு மறைந்துள்ள சிறு அருங்காட்சியகம் அது. ஆனால் அவை அங்கு அமர்ந்து கொண்டிருக்கின்றன, அப்பூச்சிகள். ஏதோ அவைதம் சரியான சமயத்திற்காக காத்திருப்பதைப் போல.

ஆரம்பப் பள்ளி

நான் தொடங்கியது கேத்தரினா நோர்ரா ஆரம்ப பள்ளியில். எனது ஆசிரியை மிஸ்.ஆர். ஒவ்வொரு நாளும் உடைமாற்றிக்கொள்ளும் ஒரு சிறிய முதிர்க்கன்னி. பள்ளிமுடியும் ஒவ்வொரு சனிக்கிழமையிலும், எல்லாக் குழந்தைகளுக்கும் கேரமல் கொடுப்பாள்; மற்றபடி கண்டிப்பான அவள், முடியைப் பிடித்து இழுப்பது மற்றும் அடிகளை வழங்குவது



என்று வரும்பொழுது தாராளமானவள். இருந்தும் என்னை அடித்ததே இல்லை. நான் ஒரு ஆசிரியையின் மகன்.

முதல் பருவத்தில் எனது முதன்மையான வேலை என் மேஜையில் அமைதியாக அமர்ந்திருப்பதே. அப்போதே எனக்கு எழுதவும் எண்ணவும் தெரியும். நான் அமர்ந்து வண்ணக் காகிதங்களில் வடிவங்களை வெட்ட அனுமதிக்கப்பட்டேன். ஆனால் என்ன வடிவங்கள்? என்னால் நினைவுபடுத்தமுடியவில்லை.

முதல் வருடம் முழுதும் சூழலமைவு ஓரளவிற்கு சுமுகமாக இருந்ததாகவே ஒரு எண்ணம். ஆனால் காலம் செல்லச் செல்ல எப்படியோ அது வாட்டமூட்டுவதானது. ஒழுங்கமைப்பில் ஏற்படும் இடையூறோ, எந்தவொரு தடங்கலோ சிக்கலோ மிஸ் ஆரை சீற்றமூட்டியது. நாங்கள் துருதுருவென்று இருப்பதற்கோ சத்தம்

போடுவதற்கோ அனுமதிக்கப்படவில்லை. நாங்கள் சிணுங்கக்கூடாது. ஒன்றைக் கற்றுக்கொள்வதில் எங்களுக்கு எதிர்பாராச் சிரமங்கள் இருக்கலாகாது. எல்லாவற்றுக்கும் மேலாக நாங்கள் எதிர்பாரா எதையும் செய்தல் தகாது. வெட்கத்திலும் பயத்திலும் தன்னை நனைத்துக்கொண்ட எந்த சிறுகுழந்தையும் (ஒருவனோ ஒருத்தியோ) கருணையை எதிர்பார்க்க முடியாது.

நான் சொன்னது போல, ஆசிரியரின் மகனாய் இருந்தது என்னை அடிகளிலிருந்து காத்தது. ஆனால் அந்த எல்லா அச்சுறுத்தல்களாலும் பழிப்புகளாலும் உருவான முடக்கும் சூழமைவை உணரமுடிந்தது. எப்போதுமே தலைமை ஆசிரியர் பின்னணியில் இருந்தார்-பருந்து மூக்குடையவர் மற்றும் ஆபத்தானவர். மிகமோசமான வாய்ப்பானது ஒரு சீர்திருத்தப்பள்ளிக்கு அனுப்பப்படுவதுதான். சிறப்புத் தருணங்களில் குறிப்பிடப்படும் ஒன்று அது. இதை ஒருபோதும் எனக்கான தனிப்பட்ட மிரட்டலாக உணரவில்லை எனினும் அந்தக் கருத்தாக்கமே ஒரு ஒவ்வாத உணர்ச்சியைத் தோற்றுவித்தது.

ஒரு சீர்திருத்தகம் எப்படி இருக்கும் என்று என்னால் எளிதாக கற்பனை செய்யமுடிந்தது-அதன் பேரொன்றைக் கேட்டதிலிருந்து இன்னும் நன்றாக கற்பனை செய்ய முடிந்தது-ஸ்க்ருபா (அழுத்தித் தேய்த்து சுத்தப்படுத்து), முள்ளரங்களையும், இழைப்புளிகளையும் குறிப்புணர்த்தும் ஒரு பெயர். பள்ளிவாசிகள் தினசரி சித்திரவதைக்கு ஆளானார்கள் என்பதற்கான ஒரு சுயநிரூபணமாகவே இதை எடுத்துக்கொண்டேன். இப்படியாக நான் பெற்றிருந்த உலகப்பார்வை, சத்தம் போடும் காரணத்திற்காக குழந்தைகளை பெரியவர்கள் -மரணம் வரை கூட-சித்திரவதை செய்யும் நிறுவனங்களின் இருப்பிற்கு அனுமதித்தது. ஒரு பீதியூட்டும் பார்வையே. ஆனால் அப்படியே இருக்கட்டும். நாங்கள் சத்தம் போடுபவராய் இருந்தால், பிறகுஞ்

எம் பள்ளி மாணவன் ஒருவன் சீர்திருத்தப்பள்ளிக்கு எடுத்துச் செல்லப்பட்டு ஓராண்டுக்குப் பின் திரும்பி வந்தபொழுது நான் அவனைச் சாவிலிருந்து எழுந்து வந்தவனாகவே கருதினேன்.

இதனினும் எதார்த்தமான அச்சமாக இருந்தது வெளியேற்றம். போரின் முதல் ஆண்டுகளில், பெரிய நகரங்களிலிருந்து பள்ளிச் சிறார்களை வெளியேற்றும் திட்டங்கள் தீட்டப்பட்டன. எங்களது தாள்கள் மற்றும் சிலவற்றின் மேல் அடையாள மையால் அம்மா 'ட்ரான்ஸ்ட்ரோமர்' என எழுதினாள். கேள்வி என்னவென்றால் நான் அம்மாவோடும் அவளது பள்ளி வகுப்போடும் வெளியேற்றப்படுவேனா அல்லது கேத்தரினா நோர்ராவில் உள்ள எனது சொந்த வகுப்போடு அதாவது மிஸ்.ஆருடன் வெளியேற்றப்படுவேனா என்பது தான். நான் பின்னது தான் நடக்குமெனச் சந்தேகித்தேன்.

நான் வெளியேற்றத்தலிருந்து தப்பித்தேன். பள்ளியில் வாழ்க்கை தொடர்ந்தது. பள்ளியில் எல்லா நேரத்தையும், இந்தநாள் எப்போது முடியும் என்ற ஏக்கத்தில் கழித்தேன். அப்போது தான் மெய்யாகவே எனக்கு ஆர்வமுள்ளவைகளில் எனைச் செலுத்தமுடியும்: ஆப்பிரிக்கா, நீரடி உலகம், மத்தியகாலங்கள். இன்னபிற. பள்ளியில் என் கவனத்தை ஈர்த்த ஒரே விஷயம் சுவர்ப்படங்கள் தான். நான் சுவர்ப்படங்களின் உபாசகனாக இருந்தேன். எனது உச்சகட்ட சந்தோஷமானது நொய்ந்துபோன மரச்சுவர்ப்படங்களை எடுப்பதற்காக சேமிப்பறைக்கு மிஸ் ஆருடன் துணைக்குச் செல்வதுதான். அவற்றை எடுக்கையில் அங்கு தொங்கிக்கொண்டிருக்கும் மற்றவற்றையும் எட்டிப்பார்ப்பேன். என்னால் முடிந்த அளவு வீட்டிலேயே சிலவற்றை உருவாக்க முயற்சித்தேன்.

என் வாழ்விற்கும் என் வகுப்புத்தோழர்கள் வாழ்விற்கும் உள்ள முக்கியமான வித்தியாசம் நான் எந்தத் தந்தையையும் உண்டாக்கமுடியாது என்பதே. எனது பெரும்பான்மை நண்பர்கள் உழைக்கும் வர்க்கக் குடும்பத்திலிருந்து வந்தவர்கள். தெளிவாகவே அவர்களுக்கு விவாகரத்து என்பது மிகவும் அரிதானது. என் குடும்ப நிலைமையில் ஏதோவொரு தனித்துவம் உள்ளதென்று நான் ஒருபோதும் ஒத்துக்கொண்டதில்லை, எனக்கு நானே கூட. இல்லை, வருடத்திற்கு ஒரேயொருமுறைதான் (வழக்கமாக கிறிஸ்துமஸ் மாலைகளில்) அவரைப் பார்த்தேன் என்றாலும் எனக்கு ஒரு தகப்பனார் இருக்கவே செய்தார். அவர் என்ன செய்கிறாரெ்ரென தெரிந்தும் வைத்திருந்தேன்-உதாரணத்திற்கு, போரின் ஒரு கட்டத்தில் நீர்மூழ்கிப்படகிலிருந்தபடி வேடிக்கையான கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அந்தக் கடிதத்தை என் வகுப்பினரோடு பகிர்ந்துகொள்ள விரும்பியிருப்பேன் ஆயினும் அந்த வாய்ப்பு வரவேயில்லை.

திகிற்கணம் ஒன்று ஞாபகமுள்ளது. ஒரு இரண்டு நாள்கள் நான் பள்ளிக்குச் செல்லவில்லை. திரும்பச் சென்றபோது ஒரு வகுப்புத்தோழன் சொன்னான் ஆசிரியர்-மிஸ்.ஆர் அல்ல ஒரு பதிலி ஆசிரியர்-மாணவர்களிடம் சொன்னாராம் தந்தையில்லை எனச்சொல்லி யாரும் எனைக் கேலி செய்யக்கூடாதென்று. வேறுவார்த்தைகளில் சொல்வதெனில், அவர்கள் என் மீது பரிதாபப்பட்டனர். நான் பீதியுற்றேன்: இயல்பாகவே நான் அசாமான்யன் தான். முகம் செக்கச்சிவக்க நான் எல்லாவற்றையும் பேசித் தீர்க்க முயற்சித்தேன்.

நான் ஒரு புறத்தாளாகக் கருதப்படும் ஆபத்தை தீவிரமாக உணர்ந்தேன். ஏனெனில் உள்ளுக்குள் நான் புறத்தாள்தான் என நானே சந்தேகித்தேன். வேறெந்த சராசரி மாணவனுக்கும் இல்லாத ஆர்வங்களில் நான் மூழ்கியிருந்தேன். தன்னார்வமாக ஓர் ஓவிய வகுப்பில் சேர்ந்தேன்.



நீரடிக் காட்சிகளை வரைந்தேன்: மீன், கடற்குப்பிகள், நண்டுகள், ஓடுகள். என் ஓவியங்கள் மிகச்சிறப்பாக இருந்ததாக ஆசிரியை சத்தமாகக் குறிப்பிட்டபோது என்னச்சம் திரும்பி வந்தது. ஏதோவகையில் நான் வித்தியாசமானவன் எனக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்பும், ஒருவித நுண்ணுணர்வற்ற யாராவது ஓராள் எப்போதும் அங்கு உண்டு. என் வகுப்பு சகாக்கள் எவ்வளவோ சகிப்புத்தன்மை கொண்டவர்கள். நான் பிரபலமானவனாகவுமில்லை வம்பனாகவுமில்லை.

ஹோஸே, என்னை விட ஐந்து மடங்கு வலுவான ஒரு பெரிய கருப்புப் பையன். பள்ளி முதல்வருடத்தில் ஒவ்வொரு இடைவேளையின் போதும் என்னுடன் மல்லுக்கட்டும் பழக்கமிருந்தது அவனுக்கு. தொடக்கத்தில் நான் ஆக்ரோஷமாக எதிர்த்தேன். ஆயினும் அது என்னை எங்கும் கூட்டிச் செல்லவில்லை ஏனெனில் அவன் என்னை அநாயசமாக தரையில் எறிந்து வெற்றிகொண்டான். இறுதியில், அவனை ஏமாற்றும் ஒரு வழியைக் கண்டுகொண்டேன்: முழுமையான ஓய்வுநிலை. அவன் என்னை அணுகிய பொழுது வெறும் பிணத்தை கிழே விட்டுவிட்டு என் உண்மையான சுயம் பறந்து போய்விட்டதைப் போல நடித்தேன். அவன் விரும்பியபடி தரையோடு அழுத்த முடிந்த ஒரு உயிரற்ற கந்தல். விரைவிலேயே அவன் ஆர்வமிழந்து விட்டான்.

என்னை ஓர் உயிரற்ற கந்தல்துணியாக மாற்றிக்கொள்ளும் இந்த முறை பிறகான வாழ்வில் எனக்கு என்னவாக அர்த்தம் கொண்டிருந்தது என வியக்கிறேன். தன் சுயமரியாதையை தக்கவைத்துக் கொண்டே கண்மூடித்தனமாக உதைவாங்கும் கலை. இந்த உத்தியிடம் ரொம்பவும் அடிக்கடி தஞ்சமடைந்தேனா? சிலசமயம் அது பலனளித்தது, சிலசமயம் இல்லை.

போர்

அது 1940 வசந்தகாலம். ஜெர்மானிய டாங்கிகளின் முன்னேற்றத்தைச் சுட்டும் கருப்பு அம்புகள் கொண்ட போர்வரைபடத்தைப் பார்க்கும் நோக்கத்தோடு செய்தித்தாளை எட்டிப்பார்த்த ஒல்லியான ஒன்பது வயது பையன் நான். அந்த அம்புகள் பிரான்ஸை துளைத்தன மேலும் ஹிட்லரின் எதிரிகளான எங்களுக்கு அவை எம்முடலில் தொற்றுண்ணிகளாய் வசித்து வந்தன. நான் உண்மையிலேயே என்னை ஹிட்லரின் எதிரிகளில் ஒருவனாகக் கருதிக்கொண்டேன். என் அரசியல் கடப்பாடு பின்னெப்போதுமே அவ்வளவு முழுமனத்துடன் இருந்ததேயில்லை.

ஒரு ஒன்பது வயதாளனின் அரசியல் கடப்பாட்டை எழுதுவதென்பது, சந்தேகமே இல்லை, கேலிச்சிரிப்பை வரவழைக்கவே செய்யும். ஆனால் இது அவ்வார்த்தையின் முறையான அர்த்தத்தின்பாற்பட்ட ஒரு அரசியல் கேள்வியெல்லாம் கிடையாது. வெறுமனே அதன் அர்த்தம் நான் போரில் பங்கெடுத்தேன் என்பதுதான். சமூகப் பிரச்சனைகள், வர்க்கங்கள், தொழிற்சங்கங்கள், பொருளாதாரம், வளங்களின் பகிர்மானம், சோஸலிசம் மற்றும் முதலீட்டியத்திற்கிடையான எதிர்வாதுரைகள் போன்ற விடயங்களின் குறைந்தபட்ச புரிதல் கூட கிடையாது என்னிடம். 'கம்யூனிஸ்ட்' என்பவர் ருஷ்யாவை ஆதரிக்கும் ஒருவர். "வலதுசாரி" ஒரு மூட்டமான பிரயோகமாக இருந்தது ஏனெனில் அவ்வரசியல் அலைக்கற்றையின் இறுதியில் இருந்தோர் ஜெர்மானிய சாய்மானங்கள் கொண்டிருந்தனர் .மற்றும் செல்வந்தர்களாகவும் அறியப்பட்டிருந்தனர். இருந்தும் செல்வந்தராய் இருப்பதென்றால் என்ன அர்த்தம்.ஒரு சில சமயங்களில் நாங்கள் பணக்காரர் எனச் சொல்லப்படும் ஒரு குடும்பத்தாருடன் விருந்தாட வரவேற்கப்பட்டோம். அவர்கள் ஆப்பிள்வைக்கனில் வாழ்ந்தனர். அவ்வீட்டு உரிமையாளர் ஒரு மொத்தவிற்பனை வணிகர். கருப்பு வெள்ளையில் சேவகர்கள் கொண்ட ஒரு பெரிய வில்லா. நான் கவனித்தேன் அந்த வீட்டிலிருந்த பையனிடம்--அவனுக்கு என் வயது தான்-மிகவும் விரும்பத்தக்க நம்பமுடியாத அளவு பெரிய பொம்மைக் கார் (தீ எஞ்சினுடன் கூடிய) இருந்தது. அப்படியொரு பொருளை ஒருவர் எவ்விதம் பெற்றார்?. அந்தக் குடும்பம் வேறொரு சமூகவர்க்கத்தைச் சேர்ந்தது (இதில் உள்ளவர்கள் அரிதான பெரிய பொம்மைக்கார்களை வாங்கக்கூடியவர்கள்) என்ற கருத்தின் கணநேரத்தீற்றல் உதித்தது என்னிடம். இருந்தும் இது ஒரு தனித்த முக்கியத்துவம் அற்ற நினைவுதான்.

இன்னொரு ஞாபகம்: ஒரு வகுப்புத் தோழனின் இல்லத்திற்குச் சென்றிருக்கையில், எனக்கு ஆச்சர்யமாயிருந்தது அங்கு கழிப்பறை இருக்கவில்லை, நாட்டுப்புறத்தில் இருப்பது போல புழக்கடையில் வெறும்

ஒரு வறண்ட மலத்தொட்டி தான் இருந்தது.நாங்கள் அந்த ஒதுக்கப்பட்ட உலோகப்பாத்திரத்தில் சிறுநீர் கழிப்போம். அதை என் நண்பனின் அம்மா எடுத்து வந்து அடுக்களைக் குழியில் கொட்டிவிட்டுச்செல்வாள். அது காட்சித் துல்லியமான விவரமாக இருந்தது. மொத்தத்தில் அந்தக் குடும்பம் அது அல்லது இது இல்லாதிருந்தது எனத் தோன்றவில்லை எனக்கு. ஆப்பிள்வைக்கனில் இருந்த வில்லா எனக்கு முக்கியத்துவமுடையதாகப் படவில்லை. அநேக குழந்தைகள் அதைச் செய்ய முடிந்தவர்களாய் தோன்றினர் என்னால் முடியவில்லை.தமது மிக இளவயதிலேயே வர்க்கத் தகுதியையும் ஒரு குறிப்பிட்ட சூழலின் பொருளாதார நிலையையும் வெறும் ஒரு பார்வையிலேயே கணித்துவிடும் திறன் நிறைய பேரிடம் இருப்பதாகப் பட்டது. இது என்னிடம் மிகவும் சொற்பமாக இருந்தது.

எனது அரசியல் உள்ளுணர்வுகள் மொத்தமும் போரையும் நாஜிஸித்தையும் நோக்கி செலுத்தப்பட்டது. நான் நம்பினேன் ஒருவர் நாஜியாக அல்லது நாஜி எதிர்ப்பாளாராக மட்டுமே இருக்கமுடியுமென. ஸ்வீடனில் பெரிதாகப் பரவியிருந்த சந்தர்ப்பவாத 'பொறுத்திருந்து பார்ப்போம்' நிலைப்பாட்டின் சுரத்தில்லாத அணுகுமுறை பற்றிய புரிதல் எனக்கிருக்கவில்லை. நானிதை நேயநாடுகளுக்கான ஆதரவாகவோ அல்லது மறைமுகமான நாஜிஸமாகவோதான் எடுத்துக்கொண்டேன். நான் விரும்பும் ஒரு நபர் உண்மையில் ஒரு ஜெர்மானிய ஆதரவாளர் எனத் தெரியவருகையில் உடனே என் மார்பின் மேல் கொடூரமான இறுக்கம் ஒன்றை உணர்ந்தேன். யாவுமே சீரழிந்தது. எங்களுக்கிடையே எந்த விதமான சகபாவமும் ஒருபோதும் இருக்கமுடியாது.

எனக்கு நெருக்கமானவர்களிடமிருந்து நான் ஒருமித்த ஆதரவை எதிர்பார்த்தேன். ஒரு மாலை நாங்கள் இலோஃப் மாமாவையும் அத்தையையும் பார்க்கச்சென்றிருந்தபோது, பொதுவாக சாதுவான எனது மாமாவை அன்றைய செய்தியானது 'ஆங்கிலேயர்கள் வெற்றிகரமாக பின்வாங்குகிறார்கள்' எனச் சொல்லத்தூண்டியது. இதை அவர் சற்று வருத்தம் கலந்த முரண்நகை அடிநாதத்துடன் கூறினார் (முரண்நகையே அவருக்கு மொத்தத்தில் சம்பந்தமில்லாதது). சட்டென நான் அந்த கொடூர இறுக்கத்தை உணர்ந்தேன். நேயநாட்டு வழக்கிலான வரலாறு ஒருபோதும் கேள்விக்குட்படுத்தப் பட்டிருக்கவில்லை. நான் ஆறுதலுக்காக கூரைவிளக்கை முறைத்தபடி வெறித்துக் கொண்டிருந்தேன். அது ஒரு பிரித்தானிய எஃகு தலைக்கவசத்தின் வடிவம் கொண்டிருந்தது: ஒரு சூப் வட்டில் போல.

ஞாயிறுகளில் அடிக்கடி நாங்கள் என்ஸ்கிடேயில், என் அம்மாவின் தரப்பிலுள்ள இன்னொரு மாமா மற்றும் அத்தையுடன் இரவுணவு முடித்திருக்கிறோம். விவாகரத்திற்குப் பின்னர் அம்மாவிற்கு அவர்கள் ஒருவித நிகர்குடும்பத்தை வழங்கினர். வானொலியில்

பிபிசியின் ஸ்வீடிய ஒலிபரப்பை போடுவது அவர்தம் சடங்கின் ஒரு பகுதி. நான் ஒருபோதும் மறக்கமாட்டேன் அந்நிகழ்ச்சியின் துவக்கப் பீடிகையை: முதலில் வெற்றிச் சமிக்ஞை, பிறகு ஸிக்னேச்சர் மெட்டு (ஜெராமியா கிளார்க்கின் ஊதிப்பெருக்கப்பட்ட இசையமைப்பில் உண்மையில் அது பர்ஸெலின் trumpet voluntary இன் ஹார்ப் துணுக்கு). அறிவிப்பாளரின் அமைதியான குரல், குண்டுகள் பொழிந்து கொண்டிருந்தாலும் வழக்கம்போலவே வழமையான தொனிச்சாயலுடன் சினேக நாயகர்களின் உலகிலிருந்து என்னிடம் நேரடியாகப் பேசியது.

என்ஸ்கேட் செல்லும் புறநகர் தொடர்வண்டியில் நான் எப்போதுமே அம்மாவை (அவளுக்கு கவனத்தை ஈர்ப்பது பிடிக்காது) பிரச்சாரப் பத்திரிக்கையான 'நியூஸ் ஃப்ரம் கிரேட் பிரிட்டன்' ஐ பிரிக்க வேண்டுவேன். இப்படியாக நாங்கள் எங்களது நிலைப்பாட்டை மௌனமாகப் பிரகடனம் செய்தோம். எனக்காகக் கிட்டத்தட்ட எல்லாவற்றையுமே அவள் செய்தாள், இது உட்பட.

போரின்போது அப்பாவை எப்போதாவது தான் சந்தித்தேன். ஆனால் ஒருநாள் திடீரென வந்து குதித்த அவர் அவரது பத்திரிக்கைத் துறை நண்பர்களுடனான பார்ட்டிக்கு (விருந்துக்கு?) எனை அழைத்துச் சென்றார். கண்ணாடிக் குவளைகள் தயாராக நின்றன, குரல்களும் சிரிப்புமாக, சிகரெட் புகை அடர்த்தியாக இருந்தது. அங்குமிங்கும் இழுத்துச்செல்லப்பட்ட நான் அறிமுகப்படுத்தப்பட்டும் பதில் சொல்லிக்கொண்டுமிருந்தேன். சாவகாசமாகவும் இணக்கமுமான அச்சூழலில் நான் விரும்பியதைச் செய்ய முடிந்தது. விலகிவந்து நான் இவ் விநோத வீட்டின் புத்தக அடுக்குகளின் ஓரம் கள்ளத்தனமாக நகர்ந்தேன்.

'போலந்தின் வீரத்தியாகம்' என்ற புதிதாகப் பதிப்பிற்கு வந்த ஒரு புத்தகத்தைக் கண்டேன். ஆவணப்புத்தகம். குரல்கள் காற்றை நிரப்பிக்கொண்டிருக்க நான் தரையில் அமர்ந்து முன்னட்டையில் இருந்து பின்னட்டை வரை வாசித்தேன். அந்தக் கோரப்புத்தகம்-பின்னெப்போதும் அதைப் பார்க்கவில்லை-நான் அஞ்சியதை அல்லது ஒருவேளை நான் எதிர்ப்பார்த்ததைக் கொண்டிருந்தது. நான் கற்பனை செய்திருந்ததைப் போலவே நாஜிக்கள் மனிதார்த்த மற்றவர்களாயிருந்தனர்-இல்லை அதனினும் மோசமாக. ஈர்ப்புற்றவனாய் கலக்கத்தில் அதை வாசித்தேன். அதேநேரம் ஒரு வெற்றிக்களிப்பும் எழுந்தது: நான் சரியாகத் தான் நினைத்திருக்கிறேன்! விவரமான நிரூபணம் எல்லாமே அப்புத்தகத்தில் இருந்தது. ஒருநாள் எல்லாமே வெளிச்சத்திற்கு வரும். சந்தேகித்த உங்கள் எல்லோர் முகத்திலும் உண்மை ஒருநாள் எறியப்படும்.சற்று பொறுத்திருங்கள்! ஒருவகையில் அது தான் நடந்தது.

நூலகங்கள்

மெத்போகர்ஹுஸட்(குடிமகன் இல்லம்) 1940 வாக்கில் கட்டப்பட்டது. சோடர் மையத்தில் அமைந்த ஒரு பெரிய நாற்சதுரக்கட்டடம், தவிர ஒரு பிரகாசமான நம்பிக்கையூட்டும் மாடம் கொண்டது. நவீனமான 'செயலகம்'. நாங்கள் வாழ்ந்த இடத்திலிருந்து ஐந்து நிமிட தூரம்தான்.

மற்ற வசதிகளுடன் ஒரு பொது நீச்சல்குளமும் ஒரு நகர்நூலகக் கிளையும் கொண்டிருந்தது. இயல்பாகவே எனக்கு ஒதுக்கப்பட்ட இடமானது சிறார்பிரிவு. துவக்கத்தில் எனது தேவைக்கான போதிய புத்தகங்களுடனும் இருந்தது. மிக முக்கியமானது ப்ரெமின் (Brem) 'மிருகங்களின் வாழ்வு'.

நான் ஒவ்வொரு நாளும் நூலகத்தில் புகுந்தேன். ஆயினும் இது முழுக்க இடையூறற்ற நடவடிக்கையாக இருக்கவில்லை. சிலநேரம் என் வயதுக்கேற்றதல்லாததாக நூலகப்பெண்கள் கருதிய புத்தகங்களை எடுக்க நேர்ந்ததுண்டு. அப்படியொன்று நுட் ஹோல்ம்போவின் (Knut Holmboe) வன்முறை ஆவணமான 'பாலை எரிந்துகொண்டிருக்கிறது'

'யாருக்கு இந்தப் புத்தகம்'

'எனக்கு'

'ஓ..முடியாது'

'நான் வந்து..'

'உன் அப்பாவிடம் சொல் அவரே வந்து இதை வாங்கிச் செல்லலாம் என்று'

நான் பெரியவர்களுக்கான பிரிவில் நுழைய முற்படுகையில் நிலைமை இதைவிட மோசமானது. சிறார் பிரிவில் இருக்க வாய்ப்பேயில்லாத ஒரு புத்தகம் எனக்கு வேண்டியிருந்தது. நான் தடுக்கப்பட்டேன் நுழைவாயிலில்.



'பதினொன்று'

'நீ இங்கு புத்தகம் எடுக்கமுடியாது. கொஞ்ச வருடங்களுக்குப் பிறகு திரும்ப வரலாம்'

'சரிதான், ஆனால் எனக்கு வேண்டிய புத்தகம் இங்குதான் உள்ளது'

'என்ன புத்தகம்?'

'ஸ்காண்டினேவிய விலங்குகள்: இடம்பெயர்வின் சரித்திரம்' ஆட்டம் தோல்வியுற்றது என்பதை அறிந்தவாறு உள்ளீடற்ற தொனியில் கூறினேன். 'எக்மான் (Ekman) எழுதியது'. கேள்விக்கே இடமிருக்கவில்லை, ஆட்டம் தோல்வியில் தான் முடிந்தது. வெஞ்சினம் கொண்டு நான் சிவந்துபோனேன். அவளை ஒருபோதும் மன்னிக்கமாட்டேன்!

அந்த நேரத்தில் குறைந்த சொற்களுக்குச் சொந்தக்காரரான என் மாமா ஈலோஃப் (முன்பு இலோஃப் என வந்துள்ளது) தலையிட்டார். வயதுவந்தோர் பிரிவுக்கான அவரது அட்டையை எனக்குத் தந்தார். அதன் பிறகு அவருக்காக புத்தகங்களை நான் சேகரிப்பதான அப்புனைவை நாங்கள் பராமரித்தோம். இப்போது நான் எங்கு விரும்பினாலும் நுழையலாம்.

வயதுவந்தோர் பிரிவு நீச்சல்குளத்துடன் ஒரு சுவற்றை பகிர்ந்துகொண்டிருந்தது. உள்ளிருந்து வரும் புகையை, வெண்டிலேட்டர் வழி கசிந்து வரும் குளோரின் வாசத்தை ஒருவர் வாசலிலேயே உணரமுடியும். தூரத்து எதிரொலி சப்தங்களை கேட்கமுடியும். நீச்சற்குளங்களும் அவை போன்ற மற்றவைகளும் எப்பொழுதும் விநோதமான ஒலியியிலைக் கொண்டுள்ளன. அறிவுக்கோயிலும், ஆரோக்கியக் கோயிலும் அண்டைவீடுகள்-ஒரு நல்ல யோசனை தான். பலவருடங்களுக்கு மெத்போகார்ஹஸ் நகர்நூலகக் கிளைக்கு நானொரு விசுவாசமான பார்வையாளனாக இருந்தேன். அதை ஸ்வெவாஜென் இல் இருக்கும் மையநூலகத்திற்கு நிச்சயமாக மேலானதென்று கருதினேன் – அங்கு,காற்று அசைவற்றதாக சூழலே கனத்திருக்கும், குளோரின் புகை இல்லை, எதிரொலிக்கும் குரல்கள் இல்லை. புத்தகங்களே கூட வேறு வாசனையுடனிருந்தன; எனக்குத் தலைவலி கொடுத்தன.

நூலகத்தில் என் கடிவாளம் என் கைக்கு வந்தபிறகு, என் கவனத்தை பெரும்பாலும் புனைவிலி பகுதிக்கு அர்ப்பணித்தேன். இலக்கியத்தை விதிவசம் விட்டுவிட்டேன். அதே போலத்தான பொருளாதாரம், சமூகப் பிரச்சனைகள் எனக் குறிக்கப்பட்ட அடுக்குகளையும். இருந்தும் வரலாறு ஆர்வமூட்டுவதாயிருந்தது. மருத்துவமோ அச்சமூட்டியது.

ஆனால் புவியியல்தான் எனது அபிமான மூலை. பரந்திருந்த

ஆப்பிரிக்க அடுக்குகளின் சிறப்பு உபாசகன் நான். 'எல்கான் சிகரம்', 'ஆப்பிரிக்காவில் ஒரு சந்தைச்சிறுவன்', 'பாலைவன வரைவுகள்'ஞ் போன்ற தலைப்புகளை இப்போதும் என்னால் ஞாபகப்படுத்தமுடியும். இவற்றில் ஏதாவது இன்றும் அடுக்குகளை நிரப்பிக் கொண்டிருக்கின்றதா என்று ஆச்சர்யமாகவும் உள்ளது.

ஆல்பர்ட் ஷ்வெய்ட்ஸர் (Albert Schweitzer) என்ற ஆள் "தண்ணீருக்கும் ஆதிக்காட்டிற்கும் இடையே" என மருட்சியூட்டும் தலைப்பிட்ட புத்தகத்தை எழுதியிருந்தார். அது பெரும்பாலும் உயிர்வாழ்வு பற்றிய ஊகக்கருத்துகள் கொண்டிருந்தது. ஆனால் ஷ்வெய்ட்ஸர்கூடத் தன் பயணத்தில் எங்கும் நகராது அங்கேயே நின்றிருந்தார். முறையான எக்ஸ்ப்ளோரர் இல்லை அவர். உதாரணத்திற்கு, நைஜர் (Niger) அல்லது சாட் (Chad) போன்ற, நூலகத்தில் சொற்ப தகவல்களே கிடைக்கப்பெறும், வசப்படுத்தக்கூடிய அறியப்படாத நிலங்களில் முடிவற்ற மைல்களை கடந்த (ஏன்?) குஸ்தா மோபர்க் (Gosta moberg) போல இல்லை அவர். அவ்வகையில் கென்யாவும் தங்கான்யிகாவும் ஸ்வீடிய குடியேற்றங்களால் கூடுதல் வாய்ப்பை பெற்றன எனலாம். சுத் (Sudd) பகுதிவரை நைலில் பயணித்து பின் மீண்டும் வடக்கு நோக்கித் திரும்பிய சுற்றுலா பயணிகள் புத்தகங்கள் எழுதினார்கள். ஆனால் சூடானின் உலர்ந்த பிரதேசங்களில் அல்லது கோர்டோஃபோன் (kordofan) அல்லது டர்ஃபுரில் (Darfur) துணிகரமாய் நுழைந்தவர்களோ அப்படிச் செய்யவில்லை. வரைபடத்தில் பெரிதாகக் காட்சியளிக்கும் போர்ச்சுகீஸிய காலனிகளான அங்கோலா மற்றும் மொசாம்பிக் பகுதிகளும் அறியப்படாது கைவிடப்பட்ட பகுதிகளாகவே ஆப்பிரிக்க அடுக்குகளில் கிடந்தன. இது அவற்றை இன்னும் கவர்ச்சிகர மானவையாக்கின.

நான் பல புத்தகங்களை நூலகத்திலேயே வாசித்தேன் - ஒரே வகைமையில் நிறைய புத்தகங்களையோ அல்லது ஒரே புத்தகத்தை தொடர்ச்சியாக பலதடவையோ வீட்டிற்கு எடுத்துச் செல்ல விரும்பவில்லை. அதற்காக நூலக ஊழியர்களால் விமர்சிக்கப்படுவேன் என எண்ணினேன். எப்படியாயினும் நான் தவிர்க்க நினைத்த ஒன்று அதுதான்.

ஒரு கோடைகாலம் - எந்தக் கோடையென்று நினைவில்லை - ஆப்பிரிக்கா குறித்த விலாவாரியான முடிவற்ற ஒரு பகற்கனவினூடே வாழ்ந்துகொண்டிருந்தேன். நூலகத்திலிருந்து தொலைதூரத்திலிருக்கும் ரன்மாரோ தீவில் இருந்தேன் அப்போது. ஒரு கற்பனைக்குள் நழுவிச்சென்று மத்திய ஆப்பிரிக்காவின் நேரூடாக ஒரு குழுப்பயணத்தை வழிநடத்திச் சென்றேன். ரன்மாரோவின் காடுகளின் ஊடாக கனத்துப்போய் நடந்தேன். எவ்வளவு தூரம் கடந்திருக்கிறேன்

என்பதை ஆப்பிரிக்காவின் ஒரு பெரிய வரைபடத்தில், நானே வரைந்து வைத்திருந்த முழுக்கண்டத்தின் வரைபடத்தில், ஒரு புள்ளிக்கோட்டின் மூலம் குறித்துக் கொண்டேன். உதாரணத்திற்கு ஒருவார காலத்திற்குள் ரன்மாரோவில் 120 கிமீ நடந்தேன் என்றால், வரைபடத்தில் 120கிமீ எனக் குறித்துக்கொள்வேன். அவ்வளவு ஒன்றும் தூரமில்லைதான்.

முதலில் பயணத்தைக் கிழக்குக் கடற்கரையில், கிட்டத்தட்ட ஸ்டேன்லி எங்கு ஆரம்பித்தாரோ அதே இடத்தில் தொடங்குவதாகத் தான் எண்ணமிட்டிருந்தேன்.ஆனால் அத்திட்டம், வெகு ஆர்வமூட்டும் இடங்களை அடையும் முன்னர் மிகப்பெரிய தொலைவை கடக்கவேண்டிய நிலையில் சென்று விட்டிருக்கும். அதனால் நானென் மனதை மாற்றிக்கொண்டு ஆல்பர்ட் நியான்ஸா வரை காரில் செல்வதாகக் கற்பனை செய்துகொண்டேன். அங்கிருந்துதான் முறையான பயணம் காலாறத் துவங்கியது. அப்போதுதான் கோடை முடியும் முன்னர் இட்டூரி வனத்தின் பெரும்பகுதியை கடக்கும் நியாயமான வாய்ப்பையாவது நான் பெறமுடியும்.

கையாட்கள் மற்றும் அது போன்றோரைக் கொண்ட ஒரு பத்தொன்பதாம் நூற்றாண்டுக் குழுப்பயணம் அது. அச்சமயம் நான் பாதி உணர்ந்திருந்தேன் அது ஒரு காலாவதியான பயண வழிமுறையென. ஆப்பிரிக்கா மாறிப்போயிருந்தது. பிரிட்டிஷ் சோமாலியாவில் போர் நடைபெற்று கொண்டிருந்தது. செய்திகளில் அது வந்துகொண்டிருந்தது. பீரங்கி வண்டிகள் களத்திலிருந்தன. உண்மையில், நேயநாடுகள் முன்னேற்றம் கண்ட முதல் பகுதி அது தான்-சந்தேகமே வேண்டாம், நானிதை உரிய முறையில் குறித்துக்கொண்டேன் - மேலும் அபிசினியா தான் அச்சுநாடுகளிடமிருந்து விடுவிக்கப்பெற்ற முதல் நாடு.

பல ஆண்டுகளுக்குப் பின் எனது ஆப்பிரிக்க கனவு



திரும்பிவருகையில்,அது நவீனமானதாக ஏறத்தாழ எதார்த்தமாக மாறியிருந்தது. அப்போது ,நானொரு சிற்றுயிரியிலாளனாகி, ஆப்பிரிக்காவில் பூச்சிகளைச் சேகரிப்பதைப் பற்றியும், புதிய பாலைவனங்களை அன்றி புதிய உயிரினங்களைக் கண்டறிவதைப் பற்றியும் சிந்தித்துக்கொண்டிருந்தேன்.

இலக்கணப்பள்ளி

என் சகமாணவர்களின் இருவர் மட்டுமே தொடக்கப்பள்ளியில் இருந்து மேல்நிலைப்பள்ளிக்கு (realskola) முன்னேறினர். மேலும் என்னைத் தவிர எவரும் சோட்ரா லத்தீன் இலக்கணப் பள்ளிக்கு விண்ணப்பிக்கவில்லை.

நான் தேர்ச்சி பெற்றாகவேண்டிய நுழைவுத்தேர்வு ஒன்று இருந்தது. இதுகுறித்த எனது ஒரே ஒரு நினைவு Sarskilt(குறிப்பாக) என்ற வார்த்தையை தவறாக எழுதியது: அதற்கு நான் இரண்டு l வழங்கியிருந்தேன். அப்போதிருந்து இவ்வார்த்தை ஒரு தொந்தரவூட்டும் விளைவை என்னில் ஏற்படுத்துவதாகவே 1960கள் வரைகூட தொடர்ந்து இருந்துவந்தது.

1942 இலையுதிர்காலத்தில் சோட்ரா லத்தீன் பள்ளியில் எனது முதல் நாள் மிகத்தெளிவாக நினைவுள்ளது. அது பின்வருமாறு: நிறைய பரிச்சயமற்ற பதினோரு வயது பையன்களால் நான் சூழப்பட்டிருந்ததைக் காண்கிறேன். எனக்கு வயிற்றில் பட்டாம்பூச்சிகள் பறந்தது. நிச்சயமற்று தனியாக இருக்கிறேன் நான்.ஆயினும் வேறுசிலர் ஒருவரையொருவர் நன்கு அறிந்தவர்கள் போல் தோன்றுகின்றனர்-இவர்களெல்லாம் மரியா ஆரம்பப் பள்ளியில் இருந்துவந்த மாணவர்கள். நான் சுற்றிச்சுற்றிப் பார்க்கிறேன் காத்தரீனா நோர்ராவில் இருந்துவந்திருக்கும் ஒரு முகத்திற்காக. எனது மனநிலை சரிபாதி மூடுண்ட சோர்வையும் நம்பிக்கையான எதிர்பார்ப்பையும் கொண்டுள்ளது.

எங்கள் பெயர்கள் வாசிக்கப்பட்டன.பிறகு நாங்கள் மூன்று வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டோம். நான் 15பி வகுப்பில் ஒதுக்கப்பட்டு எங்கள் வகுப்பாசிரியரான டாக்டர்.மோலினை பின்தொடரக் கேட்டுக் கொள்ளப்பட்டேன். அவரது பாடம் ஜெர்மன். குள்ளமான அவர் ஒரு பூனைபோன்ற தோரணையோடு வேகமாகவும் அமைதியாகவும் நடமாடினார். விறைத்தபடி அங்கங்கு நரைத்துக்கொண்டிருக்கும் முடி அவருக்கு, நெற்றி மேல் இருமருங்கிலும் ஒரு வழுக்கை-ஆப்பு. அவரை அறிந்தவராகப்பட்ட அருகிருந்த ஒருவரிடம் இருந்து அவரைக்குறித்த ஒரு மதிப்பீட்டை அடைந்தேன்: மாலே-அவ்வாறு தான் அவர் அழைக்கப்பட்டார்-கண்டிப்பானவர் ஆனால் நியாயமனவர். துர்க்குறிதான்.

முதற்கணத்தில் இருந்தே தெளிவானது இலக்கணப் பள்ளியானது ஆரம்பப்பள்ளியில் இருந்து முற்றிலும் வேறான ஒன்று என்பது.சோட்ரா

லத்தீன் முழுமுற்றாக ஆண்களுக்கான பள்ளி. ஒரு மடாலயத்தையோ அல்லது படைவீட்டைப் போலோ ஒரு பாலினர்க்கான தாயிருந்தது. பலவருடங்கள் கழித்துதான் பெண்கள் இருவர் ஆசிரியக் குழுவிற்குள் கடத்தி வரப்பட்டனர்.

ஒவ்வொரு காலையும் நாங்கள் எல்லோரும் பள்ளிக்கூட மண்டபத்தில் கூடினோம். துதிப்பாடல்கள் பாடினோம். மதக்கல்வி ஆசிரியர் ஒருவர் வழங்கிய சொற்பொழிவொன்றைக் கேட்டோம். பிறகு வரிசையில் நடந்து அவரவர் வகுப்பறைக்குச் சென்றோம். சோட்ரா லத்தீனின் இக்கூட்டுச் சூழமைவு இங்மார் பெர்க்மனால் அவரது படமான ஜோட்ஸ்" (சித்திரவதை)இல் அழிவுறதாக்கப்பட்டது. (அது அப்பள்ளியில் தான் படம்பிடிக்கப்பட்டது மாணவர்களான எங்களுல் சிலர் அப்படத்தின் பலகாட்சிகளில் உதிரிப் பாத்திரங்களாய் தோன்றினர்).

எங்களெல்லோருக்கும் ஒரு பள்ளிக் கையேடு அளிக்கப்பட்டது. அது ஏனையவற்றோடு இதையும் உள்ளடக்கியிருந்தது. "பள்ளிச்சட்டங்களோடு உடன்பட்ட ஒழுங்கு மற்றும் ஒழுக்கம் தொடர்பான வழிகாட்டல்கள்"

மாணவர்கள்.சுத்தமான நேர்த்தியான உடையில் அவசியமான புத்தகங்கள் கொண்டு வகுப்புகளுக்கு குறித்த நேரத்தில் வரவேண்டும். நல்லொழுங்கையும் நன்னடத்தையையும் கடைப்பிடிக்க வேண்டும். பாடங்களை உரிய கவனத்தோடு பின் தொடரவேண்டும். அதேபோல் மாணவர்கள் காலைப் பிரார்த்தனைகளில் கலந்துகொள்ளவேண்டும் அங்கு அமைதியுடனும் கவனமுடனும் நடந்து கொள்ளவேண்டும் மாணவர்கள் பள்ளியாசிரியர்களுக்கு கீழ்ப்படிதலுடன் உரிய மரியாதையும் வழங்கவேண்டும். அவர்தம் ஆணைகளையும் திருத்தங்களையும் தண்டனைகளையும் இணங்கி ஏற்றுக் கொள்ளவேண்டும்.

சோடரின் மிக உயரமான இடத்தை கைப்பற்றியிருந்தது சோட்ரா லத்தீன். அதன் விளையாட்டு மைதானம் அப்பகுதியின் அநேக மேற்கூரைகளுக்கு மேலே ஒரு பீடபூமியை உருவாக்கியிருந்தது. வெகுதூரத்தில் இருந்தும் காணத்தக்கவை. பள்ளிக்கட்டடத்தின் செங்கற்கள். இந்த பெருஞ்சுக்களின் கோட்டைக்கான வழியை பொதுவாக ஒரு மிதவோட்டத்தில் கடந்துமுடித்தேன். "பியோர்ன்ஸ் ட்ராட்கார்ட்" எதிரே கோத்காததன் மேலேறி -ஹேன்சன் மற்றும் ப்ருஸ் புத்தகச் சாலையைக் கடந்து -இடதுபக்கம் ஹோபர்ஸ்காத்தனுக்குள் திரும்பி நீண்ட அடிமரக்குவியலை-நெருக்கடி வருஷங்களுக்கான ஒரு அறிகுறி- ஓடி விரைந்தேன். அங்கு ஒவ்வொரு கூதிர்காலையும் ஒரு குதிரை நிறுபடி மூக்குப்பையிலிருந்து வைக்கோலை மென்றுகொண்டிருக்கும். அது ஒரு பெயரளவுக் குதிரை. ஒரு பெரிய கோடக்கார அர்டீன் குதிரை. ஒரு கணம் நானதன் ஈரநிழலில் நிற்கக்கண்டேன். எனக்கு இன்னும்

தெளிவாகவுள்ளது அப்பொறுமையான விலங்கின் ஞாபகம். குளிர் மற்றும் ஈரத்தில் அதன் வாசனையும் கூட. ஒரே நேரத்தில் மூச்சுமுட்டவும் தேற்றவும் செய்யும் வாசனை.

எங்களை காலைப் பிரார்த்தனைக்கு அழைக்கும் மணிகள் ஒலிக்கத் துவங்குகையில் நான் மைதானத்திற்குள் விரைவேன். மிக அரிதாகவே எப்போதாவது தாமதமாவேன், ஏனெனில் காலை எட்டு முதல் ஒன்பது வரைக்குள்ளான யாவுமே நேரச்சீர்மை செய்யப்பட்டிருந்தது. பள்ளிநாள் தொடங்குகையில் வசந்தம் உறுதியாகவும் இறுக்கமாகவும் இருந்தது.

இயல்பாகவே, நாளின் முடிவு கூடுதல் ஆசுவாசத்துடனும் அவ்வளவு முறைப்படுத்தப்படாததாகவும் இருந்தது. சிலநேரங்களில் பால்லியுடன் வீடுசெல்வேன். சோட்ரா லத்தீனில் முதல்வருடத்தின் போது அவன்தான் எனது மிக நெருங்கிய நண்பன். எங்களுக்குள் நிறைய ஒற்றுமை இருந்தது: ஒரு கடலோடியான அவன் அப்பா நெடுநாட்களாய் வரவில்லை. என்னைப் பார்ப்பதை விரும்பிய ஒரு நற்குணத்தாயின் ஒரே மகன் அவன். என்னைப் போலவே பால்லியும், தனிக்குழந்தைக்கான பல பண்புகளை வளர்த்துக் கொண்டிருந்தான். மேலும் தனது நலன்களுக்காகவே வாழ்ந்தான். எல்லாவற்றுக்கும் மேல் அவன் ஒரு சேகரிப்பாளன். என்ன சேகரிப்பான்? எதுவானாலும். பியர் லேபிள்கள், தீக்குச்சிகள், வாட்கள், சிக்கிமுக்கிக் கோடரிகள், அஞ்சல்தலைகள், அஞ்சலட்டைகள் ,ஓடுகள், இனப்பரப்பு விசித்திரங்கள் மற்றும் எலும்புகள்.

அவனது கொள்ளைப் பொருட்களால் நிரம்பியிருக்கும் அவன் இல்லத்தில் நாங்கள் வாட்களைக் கொண்டு டூயல் போடுவோம். கூட்டாக நாங்கள் ரிதார்ஹோமென்னில் ஒரு ரகசிய இடத்தில் அகழ்வாய்வுகளை மேற்கொண்டோம். அதில், என் பல் மருத்துவர் "ஒரு மனித உயிரின் பகுதிகள்" என அடையாளம் சொன்ன எலும்புக்கூட்டு துண்டுகளை மீட்டெடுக்கமுடிந்தது.

பால்லியை நண்பனாகக் கொண்டிருந்தது ஒரு வளப்படுத்தும் அனுபவமே ஆயினும் நாங்கள் மெதுமெதுவாக விலகிப்போனோம். மேலும் உடல்நிலை காரணமாக பள்ளிக்கு பால்லி நீண்ட பல நாட்களாக வரவில்லை. அவன் மற்றொரு வகுப்பிற்கு மாற்றப்பட்டபோது நாங்கள் தொடர்பை இழந்தோம். என் பழைய நண்பன் ரொம்ப தூரத்தில் இருந்தான். சொல்லப்போனால் அவன் மரணத்தால் குறிக்கப்பட்டிருந்தான் இப்போது வெளுத்து, கடுகடுப்பாக, ஒரு கால் துண்டிக்கப்பட்ட நிலையில் அவ்வப்பொழுது மட்டுமே பள்ளிக்கு வருவான். அவன் இறந்தபொழுது என்னால் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை. என் மனச்சாட்சி உறுத்தியது ஆனால் அதை அங்கீகரிக்க மறுத்தேன். நாங்கள் அடைந்த எல்லா வேடிக்கை நினைவையும் நான் அடக்கியாகவேண்டும் என உணர்ந்தேன்.

நான் நினைக்கிறேன் நாற்பத்தியிரண்டு வருடங்களுக்கு முன் வளராமலேயே இறந்துபோன பால்லியின் வயதுதான் எனக்கும். ஆனால் எனது பழைய ஆசிரியர்கள், 'பழைய ஆட்கள்' என பொதுவாக அழைக்கப்படுவோர என் நினைவில் முதியவர்களாகவே உள்ளனர் அவர்களுள் மிக முதியவருக்கு இப்போது இதை எழுதிக்கொண்டிருக்கும் என்னுடைய அதே வயதுதான் இருக்கும் என்றபோதும். நாம் எப்போதும் உள்ளதை விட இளமையாகவே உணர்கிறோம். ஒரு மரம் தன் வளையங்களைக் கொண்டிருப்பது போல, எனது முந்தைய முகங்களை என்னுள்ளே சுமக்கிறேன். அதன் கூட்டுத்தொகை தான் 'நான்'. கண்ணாடி எனது சமீபத்தைய முகத்தை மட்டுமே காண்கிறது. நானோ என் எல்லா முன்னைய முகங்களையும் அறிவேன்.

என் நினைவில் தனித்து நிற்கும் ஆசிரியர்களெல்லாம் நெருக்கடியை அல்லது சிலிர்ப்பை உண்டுசெய்தவர்கள், ஒளிவீசும், வண்ணமயமான, அசலான ஆட்கள். அவர்கள் அதிகம் பேர் இல்லைதான் ஆனால் போதுமான எண்ணிக்கையில் இருந்தனர். அவர்களுள் சிலரைக் குறித்து அவலச்சுவையுள்ள ஏதோவொன்றை உணரமுடிந்தது. இப்படிச் சித்தரிக்கமுடிகிற ஒரு இக்கட்டான சூழ்நிலை: "எனக்குத் தெரியும் என் முன்னால் இருக்கும் இந்த பொறாமை கொள்ளத்தக்க பூசணிக்காய் மண்டைகள் என்னை நேசிக்கப் போவதில்லை. எனக்குத் தெரியும் நான் நேசிக்கப்படமுடியாது. ஆனால் குறைந்தபட்சம் அவர்கள் என்னை மறந்துவிடாதபடியாவது உறுதி செய்துகொள்ளமுடியும்!"

வகுப்பறை ஒரு நாடக அரங்காக இருந்தது. முன்னணி நடிகரான ஆசிரியர் மேடையில் இரக்கமற்ற ஆய்விற்குள்ளாகி நடிப்பார். மாணவர்கள் தான் பார்வையாளர்கள் தவிர சிலநேரம்-ஒரு நேரத்தில் ஒருவரென-அவர்களும் பாத்திரமேற்று நடிப்பார்கள்.

தவறாது நாங்கள் எம்மைத் தற்காத்துக்கொள்ள வேண்டியிருந்தது. திரும்பத் திரும்ப நிகழ்கின்ற திடீர் உக்கிர வெடிப்புகளுக்கும் பழக்கப்படவேண்டியிருந்தது. மிஸ்.ஆர் நல்லதொரு அடித்தளத்தை இட்டிருந்தார் - அவர் கண்டிப்பும் கைநீட்டமும் உடையவர்.இருந்தும் நாடகீயமானவரில்லை. வீட்டில் இது போல கற்றுக்கொள்வதற்கு எதுவுமில்லை எனக்கு-காட்சிகள், சண்டைகள், கத்தும் தந்தை உரு எதுவுமில்லை. சரளமானவளானாலும் அம்மா நாடகீயமானவரல்ல. கோபத்திற்கு வடிகால் இடுவது சிறுபிள்ளைத்தனமாய் இருந்தது. குழந்தையாக நான் அடிக்கடி சீற்றமுறுபவனாக இருந்துள்ளேன் ஆனால் இப்போது நானொரு ஓரளவிற்கு சமநிலையடைந்துள்ள இளையவன். எனது ஆதர்சங்களோ ஆங்கிலேயர்கள்-ஒரு விறைத்த மேலுதடு மற்றும் இன்னபிற. வெறிக்கோபத்தின் பாய்ச்சல்கள் எல்லாம் அச்சு

நாடுகளுடையவை.

பள்ளியில்,பாடத்தின் பாதிநேரம் கடுஞ்சினத்தினத்தின் கோபுரத்தை கட்டுவதற்கு செலவிடும் (பின்னர் அவர்களின் கோபக்கொப்பரைகளை காலியாக்கும் ஒரே நோக்கத்தோடு), எளிதில் கோபமுறும் Prima Donna-க்கள் இருந்தனர்.

என் வகுப்பாசிரியரான மால்லே கொஞ்சம் கூட ஒரு Prima Donna கிடையாது. ஆயினும், ஒரு காலாந்தர கட்டற்ற ஆவேசத்தின் பலி அவர். உண்மையிலேயே ஒரு இனிமையான நபர், அமைதியான காலங்களில் நல்ல ஆசிரியரும் கூட. ஆனால் துயரத்திற்கு, நான் அதிகம் ஞாபகம் வைத்திருப்பது எதுவென்றால் அவரது ஆவேசத்தைத்தான். மிகக்காட்டமான வெடிப்புகள் ஒரு மாதத்திற்கு மூன்று அல்லது நான்கு முறைக்கு மேல் வரச் சாத்தியமில்லை. ஆனால் சந்தேகத்திற்கிடமின்றி அந்தத் தருணங்களின் மேல்தான் அவரது மகாஅதிகாரம் நிறுவப்பட்டிருந்தது.

அத்தகைய பாடங்களின் இடையே நிலவெளியின் குறுக்கே இடி உருண்டது முன்னும் பின்னும். மின்னல் தாக்கும் என்பது எல்லோருக்குமே தெளிவாகத் தெரியும் ஆயினும் எங்கென்று யாராலும் கணிக்கமுடியாது. மால்லே சில மாணவர்களை தாக்கியதில்லை. அவர், 'கண்டிப்பாணவர் ஆனால் நியாயமானவர்' யார் வேண்டுமானாலும் வீழ்த்தப்படலாம் மின்னலால்.

ஒருநாள் மின்னல் என் மேல் விழுந்தது. ஜெர்மன் இலக்கணப் புத்தகங்களைத் திறக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டோம். என்னுடையதைக் காணவில்லை. என் பள்ளிப்பையில் இருக்கிறதா? வீட்டில் மறந்து வைத்துவிட்டேனா? நான் தொலைந்தேன். அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

"எழுந்திரு!"

மேஜையினின்று இறங்கி மால்லே எனை நோக்கி நளினமாக நடந்துவருவதைக் கண்டேன். எனக்கருகில் நின்றார். அது வெளியே வயலொன்றில் இருந்துகொண்டு நெருங்கி வருகிற காளையைப் பார்ப்பது போலிருந்தது.

அடிகள் என்மீது பொழிந்தன. நான் இப்படியும் அப்படியுமாய்த் தடுமாறினேன். அடுத்த கணம் மால்லே அவரது மேஜை முன் அமர்ந்துகொண்டு, கோபத்தால் நுரைத்தபடி என் வீட்டிற்கு ஒரு குறிப்பெழுதிக் கொண்டிருந்தார். "பாடத்தின் போது கவனக்குறைவாக இருத்தல்" அல்லது அதுபோன்று ஏதோ ஒன்றிற்காக என்மீது தெளிவற்று குற்றம் சாட்டியது அக்குறிப்பு.

நிறைய ஆசிரியர்கள் நம்பினார்கள் வீட்டிற்கு எழுதப்படும் அக்குறிப்புகள் விசாரணைகளுக்கும் பெற்றோர்களின் கரங்களில்



கூடுதலான தண்டனை நிறைவேற்றலுக்கும் இட்டுச்செல்லும் என்று.

எனக்கு அப்படியாகவில்லை. அம்மா என் கதையை கேட்டார். குறிப்பை எடுத்து கையொப்பமிட்டார் பிறகு என் முகத்தில் ஆசிரியரின் மோதிர விரலால் உண்டான நீலத்தடங்களைக் கவனித்தார். அவளது எதிர்வினை எதிர்பாரா விதம் வலுவாக இருந்தது. பள்ளியைத் தொடர்பு கொள்ளப் போவதாகவும் ஒருவேளை தலைமை ஆசிரியருக்கு போன் செய்வாளென்றும் சொன்னாள்.

நான் எதிர்த்தேன். அவள் அதை செய்யமுடியாது! எல்லாமே ஓகே ஆகிவிட்டது. ஆனால் இப்போது பயமுறுத்தியதோ 'ஊரலர்'. நான் ஒரு 'அம்மா பையன்' என அழைக்கப்படுவேன். பின் எப்போதைக்குமாக மால்லேயால் மட்டுமல்ல ஒட்டுமொத்த ஆசிரியர்களாலும் வாட்டப்படுவேன்.

இயல்பாகவே அத்திட்டத்தை கைவிட்டாள். என் பள்ளிநாட்கள் முழுதும் இவ்விரண்டு உலகங்களையும்-பள்ளி மற்றும் வீடு-பிரித்து வைத்திருக்கும் முடிவை எடுத்தேன் இரண்டு உலகங்களும் ஒன்றோடொன்று கசிந்தொழுகிக் கலக்குமாயின் வீட்டை மாசடைந்ததாய் உணரநேரும். பிறகெனக்கு முறையான புகலிடம் ஏதும் இல்லாது போயிருக்கும். இன்றும்கூட "வீடு மற்றும் பள்ளியின் கூட்டுறவு" என்ற சொற்றொடரில் ஏதோ உடன்படமுடியாத ஒன்று உள்ளதாகவே காண்கிறேன். நான் வழக்கத்தில் கொண்டிருந்த இந்த இருவேறு உலகங்களையும் பிரித்துவைத்தலானது. காலப்போக்கில் வேண்டுமென்றே

நான் பராமரித்த, தனிமனித வாழ்க்கை மற்றும் சமூகம் இவற்றுக்கிடையான வேறுபாடு எழ வழிவகுத்ததையும் காணமுடிகிறது. (இதற்கும் அரசியல் சாய்மானங்களுக்கும்-இடதோ வலதோ-எந்தத் தொடர்புமில்லை) பள்ளியின் வழி நாம் வாழும் வாழ்க்கை சமூகத்தின் ஒரு படிமமாக உருத்தீட்டப்படுகிறது (projected). பள்ளி வாழ்வின் எனது மொத்த அனுபவச் சித்திரமானது கலப்புற்றதுதான், சமூகத்தின் எனது சித்திரம் ஆனதைப் போலவே. ஒளியைக் காட்டினும் இருளே அதிகமாக (இருப்பினும் சமூகம் என நாம் எதைப் பொருள்கொள்கிறோம் எனவும் கேட்டுக்கமுடியும்).

ஆசிரியருக்கும் மாணவனுக்குமான தொடர்பானது தீவிரமாக அந்தரங்கத்தனமானது(?) மற்றும் வகுப்பறைச் சூழமைவில் தீவிரத் தருணங்களின் விழைவால் முக்கியமான சுயகுணநலன்கள் பல உருப்பெருக்கப்பட்டன. அந்தரங்கமானது ஆம் ஆனால் சற்றும் தனிவாழ்வோடு சம்பந்தப்பட்டதல்ல. எங்களது பெரும்பாலான ஆசிரியர்கள் பள்ளியைச் சுற்றியுள்ள தெருக்களில் வாழ்ந்தபோதிலும் அவர்களது தனிவாழ்வைப் பற்றிக் கிட்டத்தட்ட எதுவுமே எங்களுக்குத் தெரியாது. இயற்கையாகவே வதந்திகள் இருந்தன-உதாரணத்திற்கு மால்லே இளமையில் 126 எடைத்தரப் பிரிவின் குத்துச்சண்டை வீரராக இருந்தது-ஆயினும் அவற்றுக்கு போதிய சாட்சியங்கள் இல்லை என்பதால் நாங்கள் அதற்கு அவ்வளவாக மதிப்பளிக்கவில்லை. மிக விவேகமான இளம்ஆசிரியர்களுல் இருவர் குறித்து எங்களிடம் நம்பத்தகுந்த தகவல்கள் இருந்தன. எப்போதும் எந்த கலகத்தையும் தூண்டாத ஆண்கள் அவர்கள். அதில் ஒருவர் மாலைநேரங்களில் உணவுவிடுதிகளில் பியானோ வாசித்து தன் ஊதியத்தை ஈடுகட்டும் ஏழை. மற்றொருவர் ஒரு செஸ் சாம்பியன்.அவர் செய்தித்தாளில் வந்திருந்தார்.

இலையுதிர் காலத்தில் ஒருநாள் மால்லே கையில் Russula aerugina உடன் வகுப்பிற்கு வந்தார். தனது மேஜையில் காளானை அடுக்கிவைத்தார். அவரது தனிவாழ்வின் ஒரு கீற்றைக் காணக்கிடைத்ததானது ஒரேநேரத்தில் விடுவிப்பதாகவும் அதிர்ச்சியளிப்பதாகவும் இருந்தது. இப்போது நாங்கள் அறிந்து கொண்டோம் மால்லே காளான்களை சேகரித்தார் என்பதை.

எந்த ஆசிரியரும் அரசியல் அபிப்பிராயங்களை வெளிப்படுத்தியதில்லை. ஆனால் அச்சமயம், இயல்பாகவே, ஆசிரியர் அறையில் முன்னறிந்திராத இறுக்கங்கள் இருந்தன. இரண்டாம் உலகப்போர் இங்கும் நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஆசியர்களில் பலர் கடப்பாடுடைய நாஜிக்கள். 1944 சமயம் அவர்களில் ஒருவர் ஆசிரியர் அறையில் "ஹிட்லர் வீழ்கிறாரென்றால் பின் நானும் வீழ்வேன்" என்று

கூவியதாகச் சொல்லப்பட்டது. எது எப்படியோ அவர் வீழவில்லை. பிறகெனக்கு அவர் ஜெர்மன் எடுத்தார். அவர் மிக நன்றாகவே தேறிவிட்டார். 1946 ஹெஸ்ஸேயின் நோபல்பரிசை வெற்றிக் கூப்பாடிட்டு வரவேற்கும் அளவிற்கு.

நான் ஒரு உருப்படியான மாணவன்தான் என்றாலும் மிகச்சிறந்தவர்களுள் ஒருவனல்ல. உயிரியல் எனது விருப்பப்பாடமாக இருந்திருக்கவேண்டும். ஆனால் எனது பெரும்பான்மையான மேல்நிலைப் பள்ளி வாழ்வில் நானொரு தனித்துவமான உயிரியல் ஆசிரியரைக் கொண்டிருந்தேன். கடந்தகாலத்தில் ஒரு கட்டத்தில் கதியற்று தனது நகல் புத்தகத்தைக் கறைப்படுத்திய அவர் எச்சரிக்கப்பட்டார். இப்பொழுது அவர் ஒரு தாகம் தீர்ந்த எரிமலை போல இருந்தார். எனது சிறந்த பாடங்கள் புவியியலும் வரலாறும். இவ்வகுப்புகளை பிரான்மன் என்றழைக்கப்பட்ட ஓர் உதவி ஆசிரியர் எடுத்தார். ஊக்கமுள்ள சிவந்த இளையவரான பிரான்மன் கோபப்படுகையில் (இது அடிக்கடி நடக்கும்) நேரான அவரது பொன்னிறமுடிக்கு நிமிர்ந்து நிற்கும் வழக்கமுண்டு. அவருக்கு நிரம்ப நற்பெயர் இருந்தது மேலும் எனக்கும் அவரைப் பிடிக்கும். நானெழுதிய கட்டுரைகள் எப்போதுமே புவியியல் அல்லது வரலாறு பற்றியவையே. அவை நீளமானவை. இதுகுறித்து, ரொம்ப நாட்களுக்குப் பின் இன்னொரு சோட்ரா லத்தீன் மாணவரான போ கிராண்டியனிடமிருந்து ஒரு கதையைக் கேள்விப்பட்டேன். பள்ளியின் பின்னைய ஆண்டுகளில் போ எனக்கு ஒரு நெருங்கிய நண்பனானார். ஆனால் அவர் என்னிடம் சொன்னது அதற்கு முந்தைய ஓர் ஆண்டுடன் தொடர்புடையது. அப்போது நாங்கள் ஒருவரையொருவர் அறிந்திருக்கவில்லை.

அவன் முதன்முதலில் என் பெயரை கேள்விப்பட்டது ஒரு இடைவேளையில் என் வகுப்புத்தோழர்கள் சிலரைக் கடந்தபோதுதான். அப்போது தான் அவர்கள் தமது கட்டுரைத் தாள்களை திரும்பப் பெற்றிருந்தனர் மற்றும் அவர்களது தரங்களை குறித்து அதிருப்தியுற்றுமிருந்தனர். போ அந்தக் கடுப்பான குறிப்பிடலைக் கேட்டிருக்கிறார்: "நம் எவராலும் ட்ரானன்* அளவிற்கு வேகமாய் எழுதமுடியாது, இல்லையா?"

"ட்ரானன்" தவிர்க்கப்படவேண்டிய ஒரு வெறுப்பூட்டும் பாத்திரமென முடிவெடுத்துள்ளான் போ.

*ட்ரானன் -நாரை

எனக்கு, ஒருவிதத்தில் இந்தக் கதை ஆறுதல் தரக் கூடியது. இந்நாட்களிலெல்லாம் குறைவான உற்பத்தித்திறனுக்கு பெயர் போயுள்ள நான் அப்போது ஒரு வளமான கிறுக்கலாளனாக, மிகை உற்பத்தி மூலம் பாவம் செய்த ஒருவனாக, அச்சு அசல் ஸ்டக்கநோவாக தெளிவாகவே குறிப்பிடப்பட்டுள்ளேன்.

பேயோட்டல்

எனக்கு வயது பதினைந்திருக்கையில், குளிர்காலம்.ஒரு மோசமான மனக்கலக்கத்தால் பீடிக்கப்பட்டேன். ஒளியன்றி இருளை வீசும் ஒரு நோட்டவிளக்கால் (searchlight) பிடிக்கப்பட்டேன். ஒவ்வொரு மதியமும் அந்தி கவிகையில் பிடிபட்டேன். மறுநாட்காலை விடியும் வரை அதன் கோரப்பிடியிலிருந்து விடுதலை இல்லை. மிகச்சொற்பமாக உறங்கினேன்; ஒரு கனத்த புத்தகத்தை முன்னே வைத்துக்கொண்டு படுக்கையில் அமர்ந்துகொள்வேன். இந்த நாட்களில் பல தடித்த புஸ்தகங்களை வாசித்தேன். உண்மையில் வாசித்தேன் எனச்சொல்ல முடியாது. ஏனெனில் அவை எந்த ஒரு சுவடையும் என் ஞாபகத்தில் விட்டுச்செல்லவில்லை. விளக்கை எரியவிடுவதற்கான வெறும் சாக்குபோக்கு தான் புஸ்தகங்கள்.

அது ஆரம்பித்தது முதிர் இலையுதிர்காலத்தில்.ஒரு மாலை சினிமாவுக்குச் சென்று 'வீணான நாட்கள்' (Squandered days) என்றொரு படம் பார்த்தேன் .குடிக்கடிமையானவன் பற்றிய படம். அவன் வெறிமயக்க நிலையில் இருக்கும் ஒரு பெரும் வலிமிக்க காட்சியோடு படம் முடிகிறது-இன்று ஒருவேளை சிறுபிள்ளைத்தனமாய் கருதலாம் நான். ஆனால் அன்று அப்படியில்லை.

உறங்கக் கிடக்கையில் படத்தை மனக்கண்ணில் மீள ஓட்டிப்பார்த்தேன், சினிமாவுக்குச் சென்றுவந்த பிறகு ஒருவர் செய்வதைப் போல.

சட்டென அறைச்சூழல் திகிலால் விறைத்துப்போனது. ஏதோவொன்று எனை முற்றுமாய் ஆட்கொண்டது. திடீரென என்னுடல் நடுங்கத்தொடங்கியது, குறிப்பாக என் கால்கள். நானிப்போது கலகலக்கும், அநாதரவாய் குதிகுதிக்கும் சாவி கொடுக்கப்பட்ட பொம்மையானேன். தசைப்பிடிப்புகள் எளிதாக என் இச்சையின் கட்டுப்பாட்டைத் தாண்டிச்சென்றன-இது போல எதையும் முன்னர் அனுபவித்ததில்லை. நான் உதவிக்காக ஓலமிட்டேன், அம்மா தோன்றினாள். மெதுமெதுவாக பிடிப்புகள் அலையடங்கின. மீளவுமில்லை. இருந்தும் என் அச்சம் தீவிரமடைந்தது மேலும் அது அந்தி முதல் விடியல் வரை எனை தனியே விட்டகலவில்லை. என்னிரவுகளை ஆட்டிப்படைத்த உணர்ச்சியானது ப்ரிட்ஸ் லாங் 'The Testament of Dr.Mabuse' படத்தின் சில இடங்களில் காட்சிப்படுத்தப்பட்ட அச்சத்திற்கு நெருக்கமானது. குறிப்பாக முதற்காட்சி: எந்திரங்களும் அறையும் அதிர, உள்ளே யாரோ ஒருவர் மறைந்திருக்கும் தொழிற்சாலை. எனதிரவுகள் அமைதியானதாகவே இருந்தபோதும், நான் உடனடியாக இதில் எனைக் கண்டுகொண்டேன்.

என் இருப்பின் மிக முக்கியமான கூறாக இருந்தது பிணி. உலகமே ஒரு பிரம்மாண்டமான மருத்துவமனையாக இருந்தது. எனக்கு முன்னே கண்டேன் உடலிலும் ஆன்மாவிலும் உருவழிந்த மனித ஜீவிகளை. விளக்கெரிந்து கோரமுகங்களை பின்னிழுத்துக் கொள்ள முயற்சித்தது ஆனாலும் சிலதருணம் நான் உறங்கிவிடுவேன். என் இமைகள் மூடிய உடன் திடுமென அக்கோரமுகங்கள் என் மீது பாயும்.

இது எல்லாம் மௌனத்தில்தான் நடந்தது. இருந்தும் இம்மௌனத்துள் குரல்கள் முடிவற்று மும்முரமாய் இருந்தன. சுவர்க்காகித வடிவமைப்புகள் முகங்களை உண்டுசெய்தன. அவ்வபொழுது அம்மௌனம் ஒரு சுவர்களின் நெக்கொலியால் முறிபடும். எதனால், யாரால் உண்டாக்கப்பட்ட ஒலி? என்னாலா? சுவர்கள் கீறலுற்றன ஏனெனில் எனது வாதை எண்ணங்கள் அவ்வாறு வேண்டின. மிக மோசமாயிற்று. நான் பைத்தியமானேனா? கிட்டத்தட்ட உலகை எய்ட்ஸ் நோய் ஆட்கொண்டுவிட்டது என்ற கருத்தில் பீடிதம் கொண்டு வாழ்வின் அனைத்து சந்தோஷத்தையும் இழந்த சில வயதுபையன்களைப் பற்றி சமீபத்தில் வாசித்தேன். அவர்கள் எனை புரிந்துகொண்டிருப்பார்கள்.

மனப்பிறழ்விற்குள் நுழைந்து கொண்டிருப்பதாய் அஞ்சினேன் நான். ஆனால் பொதுவில் எந்த வித உடல்நலக்குறைவாலும் அச்சுறுத்தப்பட்டவனாக உணரவில்லை-நோய்மைக் கலக்கத்தின் (Hypochondria) பீடிப்பு என்பதெல்லாம் இல்லை -ஆயினும் பிணியின் மொத்த ஆற்றல்தான் அச்சத்தை எழுப்பியது. ஒரு திரைப்படத்தில் தீதற்ற குடியிருப்பின் உட்புறம் தீவினையான இசை கேட்குந்தோறும் முழுக்க மாறுவதைப் போல இப்போது நான் எனது புறவுலகை முற்றிலும் வேறுபட்டதாக உணர்ந்தேன் ஏனெனில் அது நோயாதிக்கம் பற்றிய எனது பிரக்ஞையையும் உள்ளடக்கியிருந்தது. சற்று (சில?) ஆண்டுகளுக்கு முன்புவரை நான் ஒரு எக்ஸ்ப்ளோரர் ஆக விரும்பியிருந்தேன். இப்போதோ நான் சொல்லவே விரும்பியிராத ஒரு முன்னறியாத் தேசத்தில் என்னை நானே தள்ளிக்கொண்டு விட்டேன். ஒரு தீயசக்தியை கண்டுபிடித்து விட்டேன். அல்லது அதனினும் அத்தீயசக்தி எனைக் கண்டுபிடித்து விட்டது.

என் நெருக்கடி தொடங்கிய முதிரிலையுதிர் காலத்தின் மாலையில் நானுற்ற தசைப்பிடிப்புகளுக்கு அம்மா சாட்சியாக இருந்தாள். ஆனாலும் அப்போது, அவள் ஒரு வெளியாளாக மட்டுமே இருக்கமுடிந்தது. எல்லோருமே வெளியே இருந்தனர்; நடந்து கொண்டிருந்தது பேசிக் கொள்ள முடியாத அளவிற்கு கோரமானதாக இருந்தது. நான் பேய்களால் சூழப்பட்டிருந்தேன். நானே ஒரு பேயாக இருந்தேன். ஒவ்வொரு காலையும் பள்ளிக்குச் செல்லும் ஒரு பேய். போய் தன் ரகசியத்தைப் பொத்திக்கொண்டு வகுப்புகளினூடே அமர்ந்திருக்கும் பேய். பள்ளி நான் ஆசுவாசிப்பதற்கான இடமானது.

அங்கு என் அச்சம் அதே போலில்லை. என் தனி வாழ்க்கையில்தான் பேய் நடமாட்டம் இருந்தது. எல்லாமே தலைகீழாக இருந்தது.

அந்த நேரத்தில் நான் எல்லா வித மதவடிவங்கள் மீதும் ஐயங்கொண்டிருந்தேன் தவிர நிச்சயமாகப் பிராத்திக்கவுமில்லை. இந்த நெருக்கடி மட்டும் சில ஆண்டுகளுக்குப் பிறகு எழுந்திருந்தால், அதையொரு புத்தரிசனமாக அனுபவிக்க முடிந்திருக்கும் என்னால். சித்தார்த்தரின் நான்கு சந்திப்புகளை (ஒரு முதியவன், ஒரு நோயாளி, ஒரு பிணம், ஒரு பிச்சையெடுக்கும் பிக்கு) போல எனைத் தொட்டு எழுப்பியிருக்கக் கூடிய ஒன்றாக. என் யாமப்பிரக்ஞையை ஆக்கிரமித்த பிணியாளர்களை, உருச்சிதைவடைந்தவர்களை இன்னும் குறைந்த அச்சத்துடனும் கூடுதல் கரிசனத்துடனும் நோக்கும் வகையில் கையாண்டிருக்க முடியும்.ஆனால் அப்போது, என்னச்சத்தில் பிடிபட்டிருந்த எனக்கு மதச்சாயம் பூசிய விளக்கங்கள் கைவசம் இருக்கவில்லை. பிரார்த்தனைகள் ஏதுமில்லை, ஆயினும் இருந்தவை இசை வழியே பேயோட்டும் முயற்சிகள். மெய்யுறுதியுடன் நான் பியானோவில் அறையத் தொடங்கினேன்.

மேலும் இந்த எல்லா நேரத்திலும் நான் வளர்ந்து கொண்டிருந்தேன். இலையுதிர்கால வகுப்புத் தொடக்கத்தில் வகுப்பின் குள்ள மாணவர்களுள் ஒருவனான நான் அதன் முடிவில்,வகுப்பின் உயரமான மாணவர்களில் ஒருவனாயிருந்தேன். ஏதோ நான் வாழ்ந்தனுபவித்த அவ்வச்சம் தாவரம் முளைவிட உதவும் ஒருவித உரத்தைப் போலானது.

குளிர்காலம் அதன் முடிவை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது. பகல்கள் நீண்டுசென்றன. இப்போது அதிசயமாக என் சொந்த வாழ்விலிருந்தும் இருட்டு பின்வாங்கியிருந்தது. அது மிக மெதுவாக நிகழ்ந்தது. நடந்து கொண்டிருந்ததை முழுதுமாய் புரிந்துகொள்வதில் நானும் மெதுவாகவே இருந்தேன். ஒரு வசந்த மாலையில் கண்டுகொண்டேன் என் எல்லா அச்சங்களும் இப்போது விளிம்புக்குத் தள்ளப்பட்டிருப்பதை. நான் தத்துவப்படுத்திக் கொண்டும் புகைத்துக் கொண்டும் சில நண்பர்களுடன் அமர்ந்திருந்தேன். மங்கலான வசந்தகால இரவினூடே வீடு நடப்பதற்கான நேரம் அது மற்றும் வீட்டில் எனக்காகக் காத்திருக்கும் பயங்கரங்கள் குறித்த யாதொரு அச்சமும் இருக்கவில்லை.

இருந்தும், அது நான் பங்குகொண்ட ஏதோவொன்று ஒருவிதத்தில் எனது மிக முக்கியமான அனுபவம். ஆயினும் அது முடிவுக்கு வந்தது. நான் நினைத்தேன் அது நரகம் என இல்லை. அது கழுவாய்குன்றம்.

லத்தீன்

1946 இலையுதிர்காலத்தில் உயர்நிலைப்பள்ளி லத்தீன் பிரிவில் நுழைந்தேன். இதன் அர்த்தம் என்னவெனில் புதிய ஆசிரியர்கள் மால்லே, சாட்டன், ஸ்லூமன்(ஸ்லூ-மந்தமான) மற்றும் அவர்தம் கூட்டாளிகளுக்குப் பதிலாக ஃபியாலர், ஃபிடோ, லில்லன்(குட்டி), மோஸ்டர்(அத்தை) மற்றும் போக்கென்(கலைமான்) போன்ற கதாபாத்திரங்கள். இதில் கடைசியில் சொல்லப்பட்டவர் முக்கியமானவர் ஏனெனில் அவர்தான் என் வகுப்பாசிரியர். மேலும் எங்களிருவர் ஆளுமைகளும் மோத நேர்ந்ததால் நான் ஒத்துக்கொள்ள விரும்புவதைக் காட்டிலும் என்னில் மேலதிக தாக்கம் செலுத்தியவர்.

அவர் என் ஆசிரியராவதற்கு சில வருடங்கள் முன்பு எங்களுக்குள் ஒரு நாடகீயமான சந்திப்புக்கான தருணம் இருந்தது. தாமதமாகிவிட்ட ஒருநாள் நான் பள்ளி வராந்தாவில் ஓடிவந்து கொண்டிருந்தேன். எதிர்த்திசையில் ஒரு பையன் விரைந்து வந்துகொண்டிருந்தான், பக்கத்து வகுப்பைச் சேர்ந்த, வம்பன் என நன்கறியப்பட்ட ஜி தான் அது. மோதலை தவிர்க்கமுடியாமல் கீச்சொலியுடன் முகத்திற்கு முகம் நாங்கள் முட்டி நின்றோம். இந்த திடீர் நிறுத்தம் பெரிய அளவில் சீற்றத்தை உண்டுபண்ணியது. நாங்கள் நடைவெளியில் தனியாக வேறு இருந்தோம். வழங்கப்பட்ட வாய்ப்பை ஏற்றுக்கொண்டான் ஜி-அவனது வலதுமுட்டி என் இடைவயிற்றில் சாத்தியது. பார்வை இருண்டு, தரையில் விழுந்த நான் பத்தொன்பதாம் நூற்றாண்டு நாவலில் வரும் ஒரு பிரஞ்சு மங்கையைப் போல முனகினேன். ஜி மறைந்துபோனான்.

இருட்டு அகன்றபோது என்னைக் குனிந்து பார்த்தபடி இருக்கும் ஒரு நபரை வெறித்துக் கொண்டிருந்தேன். ஏதோ கலக்கத்தில் இருப்பதைப் போன்ற நீண்ட முணுமுணுக்கும், பாடும் குரல் மீண்டும் மீண்டும் கேட்டது 'என்ன விஷயம்? என்ன விஷயம்?'. நானொரு பிங்க் நிற முகத்தையும் சுத்தமாக ட்ரிம் செய்யப்பட்ட சுண்ணவெள்ளைத் தாடியையும் கண்டேன். அந்த முகத்திலிருந்த பாவம் கவலைக்குரியது.

அந்த முகமும் குரலும் லத்தீன் மற்றும் கிரேக்க ஆசிரியர் பெர் வென்ஸ்டோர்ம் என்கிற பெல்லே வென்ஸ்டெர் என்கிற போக்கெனுக்குச் சொந்தமானது. அதிர்ஷ்டவசமாக நான் ஏன் இப்படித் தரையில் சுருண்டு விழுந்து கிடக்கிறேன் என்பது பற்றிய எந்த விதமான கேள்விகளையும் தவிர்த்தார் அவர். தவிர நான் உதவியின்றியே நடக்கமுடிகிறது என்பதில் திருப்தியுற்றார். அவரே கவலையுற்றவராகவும் உதவுபவராகவும் தோற்றமளித்ததால், போக்கென் உள்ளத்தளவில் ஒரு நலங்கருதும் மனிதர் என்பதான மனப்பதிவை உருவாக்கிக்கொண்டேன். நாங்கள் எங்களது மோதல்களை கொண்டிருந்தபோதும், அவ்விதமான

எண்ணம் பின்னரும் தொடர்ந்தது.

போக்கெனது தோற்றம் நவநாகரிகமானது. உண்மையில் மிகவும் நாடகபாணியானது. வழக்கமாக அவரது தாடிக்குத் துணையாக ஒரு கருத்த அகல வட்டத்தொப்பியும் ஒரு மேலங்கியும் கொண்டிருப்பார். குளிர்காலத்திலோ குறைந்தபட்ச வெளிப்புற ஆடைகள். இயல்பாகவே ஒரு ட்ராகுலாவின் சாயல். தூரத்தில் மேன்மையானவராகவும் அலங்காரமானவராகவும் படுவார். முகநெருக்கத்தில் ஒரு கதியின்மை வெளிப்படும்.

அவரது குணவியல்பான சற்று பாடுவதற்கொப்பான குரல்தொனி கோத்லாந்து வழக்கின் தனிப்பட்ட விரிவாக்கமே.

நாட்பட்ட கீல்வாதத்தால் பாதிக்கப்பட்டிருந்த போக்கெனுக்கு ஒரு அழுத்தமான நொண்டலும் உண்டு. இருந்தும் அவரால் விரைசலாக நகரமுடிந்தது. தன் மேஜை மேல் தனது குறும்பெட்டியை எறிந்தவாறு எப்போதுமே வகுப்பிற்குள் ஒரு நாடகீய வருகையுடன் நுழைவார். ஒருசில நொடிகளுக்கு பின்னர், சம்சயமின்றி நாங்கள் அறிந்திருப்போம் அவரது மனநிலை அனுகூலமானதா, சூறைத்தனமானதா என்று. தெளிவாகவே வானிலை அவரது மனநிலை மீது தாக்கம் செலுத்தியது. குளிர்தினங்களில் அவரது பாடங்கள் வெளிப்படையாகக் களிநிறைந்திருக்கும். வானம் மூட்டஞ்சூழ எங்கள் மீது ஒரு தாழ்வழுத்தக் காற்றுமண்டலம் வட்டமிடுகையில், மந்தமான எரிச்சல் நிரம்பிய சூழமைவிடையே, தப்பிக்கவியலா அக்கோபப் பாய்ச்சல்களால் நிறுத்தப்? பெறும் அவரது பாடங்கள் தவழ்ந்து செல்லும்.

பள்ளி ஆசிரியர் அன்றி வேறெந்த பாத்திரத்திலும் கற்பனை செய்யமுடியாத மனித வகைப்பாட்டைச் சேர்ந்தவர் அவர். இன்னும் சொல்லப்போனால், ஒரு லத்தீன் ஆசிரியராக அன்றி வேறெதுவாகவும் கருதிப்பார்ப்பது சிரமமே.

பள்ளியில் இறுதிக்கு முந்தய வருடம் என் சொந்த வகையறா நவீனக்கவிதைகள் உருவாகிக்கொண்டிருந்தன. அதே நேரத்தில் பழங்கவிதைகளை நோக்கி இழுக்கப்பட்டேன். தவிர போர்கள், செனட்டர்கள், கவுன்சில்கள் பற்றிய பிரதிகளில் இருந்து லத்தீன் வகுப்புகள் காட்டுலஸ் மற்றும் ஹோராஸின் செய்யுட்களுக்கு முன்னகர்ந்தது. போக்கென் தலைமை தாங்கும் இந்தக் கவிதை உலகிற்குள் நானே விரும்பி எடுத்துச் செல்லப்பட்டேன்.

செய்யுள்களுள் சிரமநடை பயின்றது கற்றல் அனுபவமானது. இது இப்படித்தான் இருக்கும்: மாணவர்கள் ஒரு பத்தியை சத்தமாக வாசிக்க வேண்டும் உதாரணத்திற்கு ஹோராஸிலிருந்து:

Aequam memento rebus in arduis
Servare mentem,non secus in bonis

Ab insolent temperatam
Laetitia,morituri Delli

போக்கென் கத்துவார்: 'மொழிபெயர்த்துச் சொல்' மாணவனும் அப்படியே செய்வான்.

சாத்துவிகத்துடன்..ஆ.. ஞாபகம் கொள் சாத்துவிகத்தில்.. இல்லை.. சமபுத்தியுடன், பாதக நிலைகளில் கூட ஒரு சமபுத்தியை பேணுவது. ஆஞ்சாதஞ்சாதகமான நிலைமைகளில் உள்ளதைப் போல. ஆ..அதீதத்திலிருந்து விலகியிரு.... குதூகல ஆனந்தம் ஓ நிலைபேறற்ற டெல்லியஸ்ஸே...

இந்தநேரத்திற்குள். ஒளிவீசும் அந்த ரோமானியப் பிரதி நிஜமாகவே கீழிறக்கி பூமிக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. ஆனால் மறுகணமே, அடுத்த பத்தியில், வியக்கத்தக்க தனது செய்யுள் துல்லியத்துடன் லத்தீனில் மீண்டுவந்தார் ஹோரஸ். இவ்விதம், சாரமற்ற நொய்மை ஒரு கையில், மிதக்கும் தெய்வீகம் மறுகையில் என இந்நிலைமாற்றம் எனக்கு நிரம்ப கற்றுத் தந்தது. இது கவிதை மற்றும் வாழ்வின் நிலைமைகளுடன் தொடர்புடையது என்பதை. உருவத்தின் வழியாக ஒன்றை வேறொரு தளத்திற்கு எழுப்பமுடியும் என்பதை கூட்டுப்புழுக் கால்கள் போயின, சிறகுகள் விரிந்தன. ஒருவர் ஒருபோதும் இழக்கக்கூடாது நம்பிக்கையை!

பாவம், போக்கென் உணரவேயில்லை அந்த செவ்வியல் வரிகளுக்கு நான் எவ்வளவு ஆட்பட்டேன் என்பதை. அவரைப் பொறுத்தவரை நான் பள்ளி இதழ்களில் 1940களின் புரியவிய லா கவிதைகள் எழுதும்- இது 1948 இலையுதிர்காலத்தில் - எளிதில் கிளர்ச்சியுறும் பள்ளி மாணவன். நிறுத்தற்குறிகள், முகப்பெழுத்துக்கள் இவற்றின் தொடர்ந்த தவிர்ப்புடன் கூடிய எனது முயற்சிகளை காண்கையில், அவர் கடுஞ்சினத்துடன் எதிர்வினையாற்றினார். முன்னேறிவரும் காட்டுமிராண்டித்தன அலையின் ஒரு பகுதியாய் நான் அடையாளப்பட்டிருக்க வேண்டும். அத்தகைய ஒரு நபர் ஹோரஸால் தீண்டப்படக் கிஞ்சித்தும் முடியாதவனாகவே தெரிந்திருக்க வேண்டும்.

எனது பிம்பம் இன்னும் களங்கப்பட்டது. பதிமூன்றாம் நூற்றாண்டு வாழ்க்கை தொடர்பான ஒரு மத்தியகால லத்தீன் பாடத்திற்கு பின்னர். அது ஒரு மேகமூட்டமான தினம். போக்கென் வலியுற்று இருந்தார் மேலும் அவரது கோபம் எப்போது வெடிக்கலாம் எனக் காத்துக்கொண்டிருந்தது. சட்டென அவர் அக்கேள்வியைத் தொடுத்தார்: 'தெற்றுவாய் முடவன் எரிக் யார்? 'எரிக் என் பாடத்தில் குறிப்பிடப்பட்டிருந்தார். நான் மறுமொழி சொன்னேன்' அவர் தான் *க்ளூன்கோப்பிங்கின் நிறுவனர்' என்று. இறுக்கமான அச்சூழமைவை லகுவாக்கும் எனது

*தொன்மச் சிறுநகரம். க்ரூன்கோப்பிங்ஸ் வெக்கோபால்ட் நையாண்டி வார இதழின்படி இந்நகரம் தெற்றுவாய் முடவன் எரிக் என அழைக்கப்பட்ட மன்னர் எரிக் எரிக்ஸனால்(1216-50) நிறுவப்பட்டது.

விருப்பத்திலிருந்து துளிர்த்த என்னளவிலான ஒரு அனிச்சை செயல்தான் இது.ஆனால் போக்கென் கோபமடைந்தார் அப்போது மட்டுமல்ல வருட முடிவில் எனக்கு ஒரு 'எச்சரிக்கை' கொடுத்தபோது கூட. வீட்டிற்கு சிறிய எழுத்துப்பூர்வ தகவலும் கொடுக்கப்பட்டது. மாணவர் பாடத்தில் அதாவது லத்தீனில் கவனக்குறைவுடன் உள்ளதாக. எழுத்து தேர்வுகளில் எனது மதிப்பெண்கள் எல்லாம் நன்றாக இருந்ததால், இந்த எச்சரிக்கை ஒருவேளை எனது லத்தீன் செயல்பாட்டை அன்றி பொதுவான வாழ்க்கையை குறித்ததாக இருந்திருக்கும் போலும்.

பள்ளியில் கடைசி வருடம் எங்கள் உறவு முன்னேற்றம் கண்டது. நான் தேர்வுகள் எதிர்கொண்ட சமயம் அது, மிகவும் உளப்பூர்வமானதாகவும் மாறியிருந்தது.

அவ்வமயம் இரண்டு ஹோரேஸிய பத்தி வடிவங்கள் (ஸாப்பிய மற்றும் அல்காயிக்) என் சொந்த எழுத்திற்குள்ளும் நுழையும் வழியறிந்துவிட்டிருந்தன. மெட்ரிக்குலேஷனுக்குப் பின்னான கோடை நான் இரண்டு கவிதைகளை ஸாப்பிய பத்திகளில் எழுதினேன். ஒன்று பின்னர் 'தோரோவிற்கு ஐந்து பத்திகள்' என்று பின்னர் விடலைப்பகுதிகள் நீக்கி திருத்தியமைக்கப்பட்ட 'தோரோவிற்கு ஒரு பாடல்'. மற்றொன்று 'இலையுதிர்காலத் தீவுக்கூட்டங்கள்' தொடரில் இருக்கும் 'புயல்'. ஆனால் எனக்குத் தெரியவில்லை இவற்றுடன் போக்கென் எப்பதோவாது அறிமுகமானாரா என்று. செவ்வியற் சீர்கள் -நானெப்படி அதை உபயோகிக்க நேர்ந்தது?. அச்சிந்தனை திடீரெனத்தான் தோன்றியது. ஏனெனில் நான் ஹோரஸை ஒரு சமகாலத்தவராகவே கருதினேன். ரெனே கார், ஓஸ்கர் லோர்கே, எய்னர் மாம் போன்றவர்தாம் அவரும். இந்தக் கருத்து அத்தனை முதிர்ச்சியற்றதாக இருந்தது செம்மையுறும் அளவிற்கு.



தெய்யங்கள்

மலையாள மூலம்: யூ.பி. ஜெயராஜ்
வெளியான வருடம் : 1974
தமிழில் ஸ்ரீபதி பத்மநாபா



பிறகு மத்தியானத்தின் பாதி மயக்கத்தில் சோம்பலில் மூழ்கியிருந்த கிராமங்கள் திடீரென்று திடுக்கிட்டு எழுந்தன. செண்டைகளின் தாளலயத்தோடு கூடிய உக்கிர ஓசை கிராமத்தை முழுக்க எழுப்பிவிட்டிருந்தது. முந்திரிச்சோலைகளின் சரளைக்கற்களை மிதித்துத் தள்ளி சிறுவர்கள் தங்கள் வெற்றுப்பாதங்களுடன் இடைவழிகளைத் தாண்டிக்குதித்து கூவியபடி சிறுகோவிலை நோக்கி ஓடினார்கள். அதோ, அதோ, திடகாத்திரர்களான மலையர்கள் தோளில் தொங்கவிட்டிருக்கும் செண்டையின் பாரத்தால் சிறிது கூன் போட்டு கழகப்புரையையும் பள்ளியறையையும் மண்டபங்களையும் உண்டியல் கலங்களையும் நாகதெய்வங்களையும் வலம்வந்து, அவற்றை எழுப்பினார்கள். மெலிந்த செண்டைக் கோல்கள் மிக இலாகவத்துடன் அவர்களின் கைவிரல்களில்

கிடந்து துடித்து நடனமாடின. நாக தேவதைகளே எழுமின். மூத்த தந்தையரே, பண்டாரக் களஞ்சியங்களே எழுமின். சாஸ்தப்பா, சாமுண்டீ, பகவதீ, குளிகா, பெரியம்மை தேவியே எழுமின். முதல் தெய்யம் துவங்கப்போகிறது. திறைகள் ஆரம்பிக்கப்போகிறது. சிறுகோவில்களே எழுமின்.

திறை இது. உச்சிவெயிலில் குளிகனின் வரவு இது. முற்றத்தில் அளாவிய நெல்லுக்குக் காவல் காத்தபடி அஞ்சாங்கல் ஆடிக்கொண்டிருந்த விடாய்ப் பெண்கள் எல்லாம் வீட்டுக்குள் நோக்கிப் பின்வாங்கினார்கள். உச்சி வெயில் இது. திறை இது. குட்டிச்சாத்தனின் கீர்த்தி இது. கிணற்றங்கரையில் துணி துவைத்துக்கொண்டிருந்த பெண்களெல்லாம் துவைப்பதை நிறுத்தினார்கள்.

ஒரு சிறிய இடைவேளைக்குப் பிறகு செண்டைகளும் பீப்பீகளும் மீண்டும் ஒலித்தன. இரண்டாம் தெய்யம் இது. ஐந்தாம் தெய்யம் துவங்கும்போது சாயங்காலமாகிவிடும். குட்டிச்சாத்தனின் வெள்ளாட்டக் கூத்து துவங்கிவிடும்.

தெக்கறையின் பத்தாயப்புரையில் தூங்கிக்கொண்டிருந்த நந்தன் செண்டையின் மேளம் கேட்டபோதுதான் திடுக்கிட்டு எழுந்தான். மூன்று நான்கு நாட்கள் உறக்கமில்லாத ரயில் பயணத்தின் களைப்பு கண்ணிமைகளில் நிரம்பிக்கிடந்தது. காயப்போட்டிருந்த துணிகளை வாரிச்சுருட்டி உள்ளே வந்த ரோகிணிச் சேச்சியிடம் நந்தன் கேட்டான்:

"அது என்ன சத்தம் ரோணியேடத்தீ?"

"எது?"

"செண்டை கொட்டுற சத்தம்?"

துணிகளை கட்டிலில் போட்டு திரும்பிப் பார்த்த ரோஹிணிச்சேச்சியின் கண்களில் ஆச்சரியம். சிறிது நேரம் அவர்பார்வை அவன் முகத்திலேயே நிலைத்து நின்றது.

"நீ எல்லாத்தையும் மறந்துட்டே, இல்லே?" கொஞ்சம் வருத்தம் கலந்த தொனியில் ரோஹிணிச் சேச்சி கேட்டார். அதற்குள் செண்டைகள் மீண்டும் முழங்கத் துவங்கியிருந்தன.

"மார்கழி இருபத்தேழுக்கு கோவில்ல திறைன்னு உனக்கு எழுதியிருந்தேனே. நீ மறந்துட்ட. முன்னெல்லாம் மேளம் கேட்டால அது சாமுண்டித் தெறயா குட்டிச்சத்தான் தெறயான்னு சொல்லுடுவியே நீ?"

ரோஹிணிச் சேச்சி வெளியே போனார். உண்மைதான். முன்பெல்லாம் செண்டையின் மேல் கோல் விழுகிற தாளத்தின் வித்தியாசம் கொண்டே அது சாமுண்டித் திறையா குட்டிச்சாத்தான் திறையா என்று தெரிந்துவிடும் அவனுக்கு. நந்தனுக்கு பரிதாபமாகிவிட்டது. இனி இன்று முழுக்க ரோஹிணிச் சேச்சிக்கு அந்த

வருத்தம்தான் இருக்கும். கழிந்த போன காலங்களின் விலைமிகுந்த நினைவுகளைஎல்லாம் மாரில் அடுக்கி வைத்து நடந்துகொண்டிருக்கும் ரோஹிணிச்சேச்சியின் நிரந்தரமான புகார் இது: 'நந்தனுக்கு எல்லாம் மறந்து போச்சு!'

ஆனால் உண்மையிலேயே அவன் மறந்துதான் விட்டானா? குருத்தோலை விரித்த முந்திரிச் சோலைகளில் 'முகத்தில் எழுத்து'க்காக மல்லாந்து படுத்திருக்கும் மலையன்மார்களை சுற்றிச்சுற்றி நடந்திருந்த நாட்கள். அவர்களின் யௌவனத்தின் ஆற்றலில் பிறவி கொள்கிற பராக்கிரமசாலிகளான தெய்வங்கள். குட்டிச்சாத்தன், குளிகன், சாமுண்டி, வசூரிமாலாதேவிஞ் தோற்றம் பாட்டுகள் கேட்டு, கண்கள் மூடி, பக்தி போதையோடு கைகள் கூப்பி ஆடும் நரைத்த தலைகள். சாராயம் குடித்து போதம் இழந்து செம்மண் அப்பிய வேட்டியை உள்ளாடைகள் தெரியும் விதம் மடித்துக்கட்டி, கமிட்டிக்காரர்களோடு அடிதடி சண்டைகள் செய்து உலவிக்கொண்டிருக்கும் ஆண்கள். முந்திரிக்காடுகளில் அலைந்து திரிந்து பொறுக்குகிற முந்திரிக்கொட்டைகளை புதுத்தெருவில் உக்காசுமாப்ளாவின் கடையில் விற்று நாணயங்களாக்கி, ட்ரவுசரின் பாக்கெட்டில் போட்டு குலுக்கியபடி உல்லாச உற்சாகத்தோடு ஓடித்திரியும் சிறுவர்கள். கண்ணுக்கு மையெழுதி, கை நிறைய வளையலிட்டு, தீபத் தட்டு ஏந்தி நடக்கிற சிறுமிகள். இளம்பெண்கள்.

மறதியின் இருள் உலகத்திலிருந்து என்னவெல்லாம் உயிர்த்தெழுகிறது! ஒரு சிகரெட்டை இதழில் பொருத்தி, பிரியமான ஏதோ ஒன்று திரும்பக் கிடைத்த உற்சாகத்துடன், அவன் வராந்தாவுக்கு வந்தான். ரோஹிணிச் சேச்சியின் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். நந்தன் கொண்டு வந்து கொடுத்த புதிய உடைகள் உடுத்தி, சந்தோஷமாக சத்தம் போட்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள். குழந்தைகள், ஓ, குழந்தைகள்! வெளியே ஒரு அதீதகால மாலைவேளை மெல்ல உயிர்தெழுந்துகொண்டிருந்தது.

"எல்லாரும் மாமாகிட்ட காசு வாங்கிக்குங்க, அங்க இங்க ஓடியாடி விழுந்துரக் கூடாது, கேட்டுதா?"

வராந்தாவில் கால் நீட்டி உட்கார்ந்து சிறு இரும்பு உலக்கையால் வெற்றிலை பாக்கு குத்திக் கொண்டிருந்த அம்மா சொன்னார். குழந்தைகள் தயங்கித் தயங்கி அவனருகில் வந்தார்கள். நான்கு ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை பார்க்கும் மாமனை அவர்களுக்கு அவ்வளவு பரிச்சயமில்லை. நந்தன் சுவரில் ஆணியில் மாட்டியிருந்த பேன்ட்டிலிருந்து சில்லறைகளை எடுத்துக் கொடுத்தான் - சுரனுக்கும் மைதிலிக்கும் எட்டணா வீதம். பிறகு ஒரு நாலணா தான் மீதமிருந்தது. சதீசனை அருகில் அழைத்து அவனுடைய சின்ன சட்டைப்பைக்குள் அதைப் போட்டபடி நந்தன் கேட்டான்: "போதுமில்ல?" சதீசன் தலையாட்டினான். ஆனால்,

அவனுடைய சிவந்த கன்னங்களில் துக்கம் இருந்தது. கண்களில் இரண்டு நீர்த்துளிகள். மெல்லப் பிதுங்கும் உதடுகள். அது வேண்டாம். நந்தன் அவர்கள் கையிலிருந்து எல்லா சில்லறைகளையும் திரும்ப வாங்கி அவர்களுக்கு ஆளுக்கு ஒரு ரூபாய் நோட்டாகக் கொடுத்தான். சதீசன் மாமனை நோக்கி மனங்கவரும்படிஒரு புன்னகை புரிந்தான். குழந்தைகள் ஓடி மறைவதைப் பார்த்தபடி நிற்கும் ரோஹிணிச் சேச்சியின் கண்களிலும் சிரிப்பு தெரிந்தது.

"ஞாபகமிருக்கா?"

அவனுடைய கண்களைப் பார்த்து ரோஹிணிச் சேச்சி கேட்டார். மீண்டும் நினைவுகளில் ஆழ்ந்து மூழ்கியபடி நந்தன் தலையாட்டினான். ஒரு பழைய மார்கழி மாதத்தில், முந்திரிப்பூக்கள் கரிந்து போன அந்த வருடம் குழந்தைகளுக்கு தனிப்பட்ட சம்பாத்தியம் ஏதும் இருக்கவில்லை. கோவிலிலிருந்து வெள்ளாட்டத்தின் மேளம் துவங்கியபோது. குளித்து ஆடை உடுத்து நின்றார்கள். கல் கொத்துவதற்காக போன அப்பா வேலை முடிந்து கல்குழியிலிருந்து ஏறி வருவதற்காகக் காத்து நின்றார்கள்.

செம்மண் புரண்ட சட்டைப் பையிலிருந்து எடுத்த சில்லறையை அப்பா பங்கு வைத்தபோது நந்தனுக்குக் குறைவாகத்தான் கிடைத்தது. நந்தனின் கண்கள் நனைந்தன. அம்மாவின் ஆறுதல்களை அலட்சியப்படுத்தி அப்பாவிடம் கோபம் கொண்டு வெளியே போய் முகம் இறுக உட்கார்ந்துகொண்டான். அப்போது கையிலிருந்த சில்லறைகளியெல்லாம் அவனுடைய ட்ரவுசர் பையில் போட்டபடி ரோஹிணிச்சேச்சி கேட்டார்: "போதுமாடா தம்பி?" ரோஹிணிச்சேச்சி எப்போதும் அப்படித்தான். அவருடைய கனிவும் கருணையும் நிறைந்த ஆறுதல்கள் போல இனிமையான வேறெதுவும் அவனுடைய நினைவுகளில் உயிர்ப்புடன் இல்லை.

"நீ தெறய்க்கு போகலியா நந்தா?"

ரோஹிணிச்சேச்சி கேட்டார். அவருடைய கண்களில் ஆசை இருந்தது. மானந்தவாடியில் ஃபாரஸ்ட் ஆஃபீசில் கணக்கெழுதி காலக் கழிக்கிற கண்ணேட்டன் பல மாதங்களுக்கு ஒரு முறைதானே வருகிறார். ரோஹிணிச்சேச்சிக்கு எப்போது கஷ்டம்தான். நந்தன் திறைக்கு போவதாக இருந்தால் அவரும் கூட போகலாமே.

"பின்ன இல்லாம? நான் எத்தனை வருஷமாச்சு தெற பாரத்து?" நந்தன் கேட்டான்: "நான் குளிக்கணும். அதுக்குள்ள கருணனும் வந்துருவான்."

"நாம ராத்திரிக்கு சோறு வச்சுட்டு, குளிகன் தெற பாக்கப் போலாம்."

"கங்கன் தானே குளிகன் கட்டறது?" நந்தன் கேட்டான். கங்கனும் கருணனும்தான் சிறுவயது முதல் நந்தனின் தோழர்கள். ஆறாம்



வகுப்பில் படிப்பை நிறுத்திவிட்டு கங்கன் திறைகளின் காலங்களில் செண்டை கொட்டுவதறகும் தெய்யம கட்டுவதற்கும போய்விட்டான். மற்ற காலங்களில் நெசவுக் கம்பெனியில் வேலை செய்தான். கருணன் பள்ளி இறுதித் தேர்வை எழுதி, டிரெயினிங் முடித்து ஆசிரியரானான். ஆனாலும் அவர்கள் மூன்று பேரும நெருங்கிய நண்பர்களாகவே இருந்தார்கள். நந்தன் ஒவ்வொரு முறையும் லீவில் வரும்போது அவர்கள் ஒன்றாய்த் திரிந்தார்கள். சந்துவேட்டனின் டீக்கடையில் வேக வைத்த கிழங்கும் கல்லுமக்காயும் சாயாவும் சாப்பிட்டு அவர்கள் கடற்புறத்திலும் திப்பு சுல்தான் கோட்டையிலும் பொன்னியம்பாலத்திலும் காற்று வாங்கியபடி அலைந்து திரிந்தார்கள்.

கங்கன் எப்போதும் ஒரு கலகக்காரனாகவே இருந்தான். அவன் கண்களில் காரணம் தெரியாத ஒரு கோபக்கனல் எப்போதும் ஜ்வலித்தது. சிவப்புக் கொடிகளைப் பார்க்கும்போது, கோஷம் போடும் தொழிலாளர்களின் ஊர்வலம் அணியணியாய்க் கடந்து செல்லும்போது அவன் முகம் சிவந்துவிடும். நரம்புகள் துடிக்கும். நெடுந்தொலைவில் கண்கள் பதித்து ஏதோ கனவில் ஆழ்ந்தபடி சிறிது நேரம் அங்கேயே நின்றுவிடுவான். ஆனால் அப்போதும் அவன் குருத்தோலையும் வேஷங்களும் அணிந்து, முகத்தில் வரையப்பட்ட கடவுள் கோலத்தோடு கிராமத்துக் கோவில்களில தெய்யம் கட்டி ஆடிக்கொண்டுதானிருந்தான். வேஷம் கட்டியவுடன், சாராயச் செப்பிலிருந்து சிறிது சாராயம் ஊற்றிக் குடித்து, சிறிய கைக் கண்ணாடியில் தன் தெய்வ முகத்தைப் பார்த்து, கங்கன் ஆக்ரோஷமாய் அலறியபடி திருமுற்றத்தில் குதிப்பான். செண்டைகள் தகரும் அளவு ஒலியெழுப்பும். தாள லயத்துடன், மிக இயல்பாக ஒத்திசைந்து அவன் கால்கள் நடமிடும். தோற்றம்பாட்டுகளினூடே பர தெய்வங்களையும் ஐதீகங்களையும் லய அழகுடன் மறு உருவாக்கம் செய்து காண்பித்து கிராமம் முழுவதையும் ஆச்சரியத்தில் ஆழ்த்துவான்.

அப்போது அவன் உண்மையிலேயே ஒரு துர்தேவதையாக இருப்பான்.

திப்பு சுல்தானின் கோட்டைக்கு மேல் காற்று வாங்கி நடந்துகொண்டிருந்த ஒரு மாலை வேளையில் நந்தன் கேட்டான்:

"இந்தத் தெற, தெய்யங்கள் எல்லாம் ஒரு மூட நம்பிக்கை இல்லியா கங்கா? நீயோ நாத்திகத்தையும் முற்போக்கையும் பேசித் திரியுறவன். அப்பறம் எப்படி தெற கட்டறே?"

கங்கன் அன்று சிரித்தபடி சொன்னான்: "பைத்தியமாடா நீ? இப்போ யாருக்குத்தான் இதுல நம்பிக்கையிருக்கு? வயசான கிழவங்க கொஞ்ச பேருக்கு இருக்கும். அது யாரு மாத்தினாலும் மாறாது. மத்தவங்களுக்கெல்லாம் இது ஒரு பொழுதுபோக்கு தானே? நீயே பாத்துக்கோ. இந்தத் தெய்யம் கட்டி, தெய்யம் கட்டி, ஒரு நாள் நான் இந்த தெய்வங்களையெல்லாம் சாகடிச்சிடுவேன்." கருணனும் அதை ஆமோதித்தான்.

"நீ சொல்றது சரிதான். பஞ்சாபிகளோட பாங்ரா டான்ஸ் மாதிரி இதுவும் ஒரு கிராம உற்சவம்னுதான் நான் நினைக்கிறேன். நம்ம ஊர்லயே தெற்குப் பக்கம் போகப்போக யாருக்கு இதைப் பத்தியெல்லம் தெரியுது? உண்மையச் சொன்னா கதகளி மாதிரி இதுவும் ஒரு கலைதான்; சனங்களுக்கான கலை."

இப்படி அவர்கள் பல விஷயங்களைப் பேசிக்கொண்டு இருப்பார்கள். பேச்சு மெல்ல அரசியலுக்குள் நுழையும். சந்தேகத்தின் வேர்களைத் தோண்டிக் கேள்வி கேட்பான் நந்தன்:

"சில பேர் சொல்ற மாதிரி நம்ம இந்தியாவில ஒரு புரட்சி நடக்குமா? பாவப்பட்டங்களுக்கு விமோசனம் கிடைக்குமா?"

"எனக்கு அவ்வளவா நம்பிக்கையில்ல" கருணன் சொல்வான். "நம்ம ஆளுகளுக்கு எங்கடா சுய அறிவு இருக்கு? இருக்கிறது இத்துனூண்டு இடம். எத்தனை வர்க்கம், எத்தனை சாதி, எத்தனை மொழி? சும்மா சொல்லிக்கலாம். அவ்வளவுதான். அதில்லாம புரட்சி வரும்னெல்லாம் எனக்கு தோணல."

அதற்குள் கங்கனுக்கு கோபம் தலைக்கேறி விட்டிருக்கும். அவன் கண்கள் ஜ்வலிக்கும். தாடியும் மீசையும் நடுங்கும். உள்ளே பெரும் சக்தி உறங்கிக்கொண்டிருக்கிற கருங்கல் போல அவனுடைய முழங்கை நரம்புகள் படர்ந்து முறுக்கேறத் துவங்கியிருக்கும்.

"சீனாவில நடக்கலியா? ரஷ்யால நடக்கலியா? அதெல்லாம் என்ன சின்ன நாடுகளா? அமேரிக்காவோட மூக்குக்குக் கீழ கியூபால நடக்கலியா? களவாணிப் பய மகனுக பயங் காட்டியும் கூட வியட்னாம்ல நாம தோத்துப் போனமா?"

ஒரு தீர்மானத்துக்கும் வராமல் அவர்கள் கலைந்து செல்வதுதான்

வழக்கம். ஆனால் அன்றெல்லாம் ஒவ்வொரு முறையும் மாலை மயங்கும் வேளைகளில் திரும்பி வீட்டை நோக்கி நடக்கும்போது கங்கனின் உலக அறிவை நினைத்து நந்தனின் மனதில் ஆச்சரியம் நிறையும். படிப்பு இருந்தும் வாத்தியாராக இருந்தும் கருணனுக்கு கங்கன் அளவு விஷயஞானம் இருக்கவில்லை.

கிணற்றங்கரையில் போட்டிருந்த ஓலைக்கட்டின் மேல் ஏறி நின்று நந்தன் குளிக்கத் துவங்கினான். சோப்பும் துவர்த்தும் கொண்டு வந்த ரோஹிணிச் சேச்சியின் கண்கள் நந்தனின் வெற்று மார்பில் சில நொடிகள் நிலைத்தது.

"நீ ரொம்ப மெலிஞ்சு போயிட்டியேடா நந்தா. நா முதுகு தேச்சு விடவா?"

"வேண்டாம்."

"ரோணிச் சேச்சியேஞ்" படியில் நின்று யாரோ அழைத்தார்கள். கருணனின் குரல்தான். கருணன் முற்றத்திலும் பிறகு கிணற்றங்கரை நோக்கியும் டார்ச் அடித்தான். "என்ன சேச்சிஞ் தெறயும் அதுவுமாஞ் விசேஷம் எதுவுமில்லியா?"

"உக்காரு கருணா" ரோஹிணிச்சேச்சி சொன்னார்: "நந்தன் கிணத்தங்கரேல குளிச்சிட்டிருக்கான்."

கருணன் வராண்டாவில் உட்கார்ந்தான். குளுமையான புன்னகையும் எப்போதும் கோபப்படாத மனதும் உடைய கருணன் எல்லா வீடுகளிலும் சொந்தக்காரன்தான். குளித்து முடித்து தலை துவட்டியபடி நந்தன் கேட்டான்:

"டேய், நம்ம தெறைக்கு இந்தத் தடவ யாரு குளிகன் கட்டி ஆடறது? கங்கந்தானே?"

"அது கொஞ்சம் பிரச்சினைதாண்டா" சுவரை நோக்கியும் பின் வீட்டுதோட்டத்தின் வாழைக்கூட்டத்தை நோக்கியும் டார்ச் அடித்தபடி



சிந்தனைவயப்பட்ட தொனியில் கருணன் சொன்னான்: "நான் இப்ப அங்கிருந்துதான் வரேன். நா கிளம்பற வரைக்கும் அவன் வந்து சேரல. அவனுக்கு போலீஸ் வாரண்ட் போட்டிருக்காங்கன்னு பேசிட்டாங்க."

"போலீஸ் வாரண்டா? கங்கனுக்கா? எதுக்குடா?" ஆச்சரியமும் நடுக்கமும் கலந்த குரலில் நந்தன் கேட்டான்.

"ஓ. உனக்கு தெரியாதில்ல? நெசவுத் தொழிலாளிக மூணு வாரமா வேலை நிறுத்தம் பண்றாங்க. நேத்து கே கே வீதில அவங்க முதலாளியோட ஒரு குடோன் தீப்பிடிச்சு எரிஞ்சு போச்சு. அது வேலை நிறுத்தம் செய்றவங்க செஞ்ச வேலைன்னு கம்ப்ளெய்ண்ட். கங்கன்தானே இப்ப அவங்க செக்ரட்டரி?"

நந்தன் பேச்சிழந்து நின்றுவிட்டான். கங்கன் யூனியன் செக்ரட்டரியா? கங்கனின் உறுதி வாய்ந்த திடகாத்திரமான உடல் சட்டென்று முன்னில் நிமிர்ந்தது. அலட்சியமும் கோபமும் நிறைந்த அவன் கண்களில் என்ன வெளிச்சம்! நந்தன் வராந்தாவில் ஏறினான். குரலை மிகவும் தாழ்த்திக்கொண்டு கேட்டான்:

"என்ன கருணா? எல்லாரும் சொல்றது நெஜம்தானா? கங்கன்தான் கோடவுனுக்கு தீ வச்சுட்டானா?"

"பைத்தியமாடா உனக்கு? சும்மா சரக்கேயில்லாத கடைக்கு அவனுகளே தீ வச்சு பொய்க் கேசு போட்டிருக்காங்க."

பிறகு அவர்கள் இருவரும் மௌனமாக உட்கார்ந்து சாப்பிட்டார்கள். பரிமாறும்போது ரோஹிணிச்சேச்சி கேட்டார்: "என்னடா, நீ மீன் ஒண்ணும் தொடவேயில்ல. உனக்கு எறாலும் கல்லுமக்காயும் ரொம்பப் பிடிக்குமே?"

"வேண்டாம்னா விட்டிருங்க ரோணிச்சேச்சி," கருணன் சொன்னான்: "இவனெல்லாம் துரைகளோட மாடல்ல சாப்பிடறவன். நீங்க எனக்கு கொஞ்சம் போடுங்க."

மீண்டும் செண்டைகள் முழங்கத் துவங்கியிருந்தன. சாமுண்டியின் வெள்ளாட்டம். இது முடிந்ததும் குளிகனின் வெள்ளாட்டம் துவங்கும். அர்த்த ராத்திரியாகும்போது குருத்தோலையால் வசீகரமாக அலங்கரித்த, ஆகாசம் முட்டுகின்ற முடியும் பயமுறுத்தும் வேஷமும் அணிந்து நடுநிசியின் தெய்வமான குளிகனின் திறை ஆரம்பமாகும். அதற்குள் குளிகனின் திறை கட்டியாட கங்கன் வந்துவிடுவானா?

"அம்மா, நாங்க கிளம்பறோம். நீங்க கதவ சாத்தி படுத்துக்குங்க." அவர்கள் மூவரும் கிளம்பிப் போகும்போதும் அம்மா சிறிய இரும்பு உலக்கையால் வெற்றிலையை இடித்துக் கொண்டிருந்தார்.

ஆடாதோடைப் புதர்கள் வளர்ந்து நிற்கும் திட்டுகளுக்குக் கீழே, சரளைக் கற்கள் நிறைந்த இடைவழிகளையும் உடைந்த கற்களால்



கட்டப்பட்ட படிகளையும் தாண்டி அவர்கள் நடந்தார்கள். இருட்டில் ஓலைப் பீப்பீகளும் விசில்களும் ஆங்காங்கு அழுதன. பலூன்கள் ஒன்றொடொன்று உரசும் மெல்லிய ஒலி. அவசரமாக நடந்து போகும் ஆட்களின் கைகளில் புட்டிகள் நிறைய பாலோ சாராயமோ இருக்கும். கெண்டியில் சாராயமும் பாலும் தெய்வங்களுக்கு சேவிக்கக் கொடுத்து மனிதர்கள் தங்களுடைய துயரங்களையும் சிக்கல்களையும் மடை திறந்து விடுவார்கள். தலைமுறைகளாய் தொடர்ந்து வரும் வழக்கம் இது.

நிலா வெளிச்சம் படர்ந்த வயல் வரப்புகளில் நனைந்த புல் நுனிகள் காலில் உரசி கிளுகிளுப்பூட்டின. வரப்புகளில் ஆங்காங்கே வயலெட் பூக்கள் நிறைந்த குறுஞ்செடிக் கூட்டங்கள். இந்தப் பூவின் பெயர் என்ன? ஓணக் காலத்தில்முன்பு அவனும் ரோஹிணிச் சேச்சியும் வரப்புகளிலும் வயல்களிலும் சுற்றித் திரிந்து இந்தப் பூவை சேகரிப்பார்கள். அதன் பெயர் என்னவென்று கேட்க அவனுக்கு தைரியம் வரவில்லை. ரோஹிணிச் சேச்சியின் விழிகளில் அறிந்துகொள்ள முடியாத ஒரு வேதனையின் புகைப்படலம் மீண்டும் படர்ந்துவிடும்.

"நீ எல்லாத்தையும் மறந்துட்டே, இல்லே?"

வாய்க்காலுக்குக் குறுக்கே கட்டப்பட்ட மரப்பாலத்தினருகே ஊன்றுகோலுடன் குந்தியிருந்த ஒரு கிழவி அவர்களைப் பார்த்து குசலம் விசாரித்தாள்:

"ஏம்மா ரோணீ? தெறைக்கு போறியா?"

"யாரிது? மன்னியம்மா, என்ன இங்கே ஒக்காந்திருக்கீங்க?"

"யாரு அது? உன் கூட?"

"நந்தனும் கருணனும், தெரியலையா?"

"அய்யோ. நீ எப்ப வந்தே கண்ணு? மன்னியம்மாவ எல்லாம்

மறந்துட்டியா? சாயா சாப்பிட காசு குடு கண்ணு."

திறைகளையும் கோவில்களையும் போல மன்னியம்மாவும் கிராமத்தின் ஒரு பாகம்தான். காலாரம்பத்தில் என்றோ பார்த்த அதே முகம். மன்னியம்மா பங்கு பெறாமல் கிராமத்தின் எந்தத் திறையும் விழாவும் துட்டிகளும் கடந்து செல்வதில்லை. சிறு நடுக்கமுள்ள சுருங்கிப் போனஉள்ளங்கையில் ஒரு நோட்டு விழுந்தபோது மன்னியம்மா ஈறுகள் தெரிய திருப்தியோடு சிரித்தார்.

"குட்டிச்சாத்தா... பகவதீ... நல்லாயிரு கண்ணு." அவர்கள் பாலத்தைக் கடந்தார்கள்.

கோவிலின் நடையிலும் சுற்றுவட்டாரங்களிலும் வியாபாரிகளின் நெரிசல். எங்கும் மக்கள் கூட்டம். கண்ணாடி வளையல்களின் சத்தம். மைதானத்தில் ஆங்காங்கு சின்ன சின்ன வெளிச்ச வட்டங்களில் முழங்கும் ஆரவாரங்கள். சீட்டு விளையாடுபவர்கள்.

"ரோணியேச்சி, கழகப் புரையில இருங்க. நாங்க ஒரு ரவுண்ட் சுத்தியடிச்சிட்டு வரோம்."

கருணன் சொன்னான். கழகப்புரையின் வராந்தாவில்தான் வழக்கமாக பெண்கள் எல்லோரும் கூட்டமாக திறை பார்க்க கூடியிருப்பார்கள். பள்ளியறையும் மண்டபங்களும் இருக்கிற திருமுற்றத்துக்குள் பெண்கள் நுழைவதில்லை. முக்கியமாக உக்கிரமூர்த்தியான குளிகன் திறையின் இந்த நேரத்தில்.

"குளிகனுக்கு காணிக்கை போட காசு தந்துட்டு போ. தெறைக்கு முன்னாடி நீங்க இங்க வரலேன்னா என்ன பண்றது?"

"நம்ம கங்கனுக்கு எதுக்கு ரோணியேச்சி, காசு குடுக்கறீங்க?" கருணன் சிரித்தபடி கேட்டான்.

அது சரிதான். நந்தனுடனும் கருணனுடனும் கங்கன் பல முறை வீட்டுக்கு வந்திருக்கிறான்; ரோஹிணிச் சேச்சி தந்த சாயா வாங்கிக் குடித்தும் இருக்கிறான். ஆனால், திறை கட்டுபவன் யாராக இருந்தாலும் சரி, ரோஹிணிச் சேச்சிக்கு பக்தியும் நம்பிக்கையும் மிக முக்கியம்.

"கங்கன் வந்துட்டானான்னு பாத்துட்டு வரேன்." கருணன் போனான்.

கழகப் புரையின் வராந்தா முழுக்க பெண்களின் வாசம் வீசியது. நனைந்த கூந்தலின் வாசம். முல்லைப்பூவின் வாசம். சந்தனம் கலந்த வியர்வையின் வாசம். முலைப்பாலின் வாசம். நந்தன் அந்தக் கூட்டத்துக்குள் வழி ஏற்படுத்திக்கொண்டு வெளியே நடந்தான்.

"எங்கடா போனே?" என்றபடி கருணன் பின்னால் வந்து தோளைத் தட்டினான்: "சீக்கிரம் வா. கங்கன் உன்னைப் பாக்க காத்துட்டிருக்கான்."

"கங்கன் வந்துட்டானா?"

"ம்ம்ம்... முகத்தெழுத்து நடந்துட்டிருக்கு. என்னென்ன

பிரச்னைகள் வரப்போகுதோ. தெரியல. அவனை போலீஸ் ராத்திரி பகலா தேடிட்டிருக்காம்."

நந்தன் உற்சாகமடைந்தான். கங்கன் வந்துவிட்டான். குருத்தோலையும் வேஷங்களும் அணிந்து, ஐந்து ஆள் உயரமுள்ள கிரீடம் வைத்து, கங்கனின் குளிகன் தலைகீழாய் குட்டிக்கரணம் போட்டு உருண்டெழுவதைப் பார்ப்பதற்காக அல்லாமல் வேறெதற்கு நந்தன் லீவ் எடுத்து வந்திருக்கிறான்?

அங்கே, முந்திரிச்சுவட்டில் விரித்த குருத்தோலையில் 'முகத்தெழுத்து'க்காகப் படுத்திருக்கிற கங்கனின் தீர்க்கமான உடல். விழிகளில் மை. முகத்திலும் மாரிலும் வெள்ளைச்சாயம். அரையில் குருத்தோலையின் மடிப்புகள். கங்கன் பிரகாசமாய் சிரித்தபடி நந்தனின் கையைப் பிடித்து அழுத்திக்கொண்டான். அவனுடைய சூடேறிய கைகளின் வலிமையையும் சிநேகத்தையும் நந்தன் உணர்ந்தான்.

"நல்லா இருக்கியாடா?"

நந்தன் பதில் பேசவில்லை. கங்கனின் அருகில் அமர்ந்தான். நகத்தின் நுனியால் குருத்தோலையைக் கீறியபடி கேட்டான்:

"நெஜமாடா கங்கா? உன்னைப் பத்திக் கேள்விப்படறதெல்லாம்? நீ எதுக்கு தேவையில்லாத வேலைக்கெல்லாம் போறே?"

"ஓ..." கங்கன் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் அலட்சியமாக சொன்னான்.

கங்கன் எழுந்து உட்கார்ந்தான். வேஷங்களை அணியத் துவங்கினான். தலைமுறை தலைமுறையாக தெய்யம் கட்டியும், தெய்யங்களை தயார்படுத்தியும் பழக்கமுள்ள வயதான மலையர்களின் திறமையான கைகள் நடுநிசியின் தெய்வத்தை அழகுபடுத்திக் கொண்டிருந்தன.

"அவனுக்கு இனி கள்ளும் சாராயமும்தான் உள்ள போகும். வா, நாம ஒரு சாயா சாப்பிட்டு வரலாம்." கருணன் சொன்னான்.

கோவிலுக்கு வடக்கே பலாமரச் சுவட்டில் சந்தை. அவர்கள் சாயா சாப்பிட்டு திரும்பும்போது மீண்டும் செண்டைகள் உயிர்பெற்றன. மைதானமும் முற்றங்களும் மணல் வாரியிட்டால் தரையில் வீழாத அளவு ஜன சமுத்திரமாயின. மாமரக் கிளைகளிலும் உயரக் கட்டிய படிகளிலும் குளிகனுக்காக காத்திருக்கும் சிறுவர்களின் உற்சாகக் கூக்குரல் உயர்ந்தது. அதோ, அதோ! ஆரவாரம் முழங்கியது. வெடிகள் வெடித்தன. செண்டைகள் கிழிந்தன. குளிகன் தோன்றப்போகிறான்.

கால்சிலம்புகள் ஓசையிட ஒரு காற்றைப் போல குளிகன் முற்றத்தில் தோன்றினான். பள்ளியறையையும் பர தெய்வங்களையும் சாமியாடியையும் வணங்கி பீடத்தின் மேல் ஏறி நின்று அவன் கூவினான். வாத்திய கோஷங்களின் சத்தம் அதி உச்சத்தை எட்டியது. கிராமம் முழுக்க வாய் மூடாமல் பார்த்துக்கொண்டிருக்க, உயரக் கட்டிய

மண்டபத்தின் மேலிருந்து குருத்தோலை மடிப்புகள் சரசரக்க கங்கன் பின் நோக்கி தலைகீழாய்க் குதித்தான்.

குளிகனின் வெள்ளாட்டம் இது. வெள்ளாட்ட நேரத்தில் குளிகனுக்கு கிரீடம் கிடையாது. பள்ளியறைக்கு முன்னால் வீக்குச் செண்டையும் இலைத் தாளமும் கொட்டி நிற்கிற மலையர்கள் குளிகனின் வீரபராக்கிரமங்களை ஓதும் தோற்றம் பாட்டை ராகத்தோடு பாடத் துவங்கினார்கள். தோற்றம் பாட்டுகள் முடியும் நேரம் மெல்ல சாமியாடி பிரவேசமானான். கைகளில் கொழுந்து விட்டு எரியும் பந்தங்களுடன் சாராயம் நிறைத்த கெண்டியை மாரோடு அணைத்துப் பிடித்தபடி ஜொலிக்கும் தீக்கனல்களை மிதித்துத் தள்ளியபடி சாமியாடத் துவங்கினான். எழுபது வயது கழிந்த ராவுண்ணிதான் பல வருடங்களாக கோவிலின் சாமியாடி. உன்மத்தத்தின் உச்சத்தில் சாமியாடியின் மெலிந்த தேகம் வில் போல் வளைந்தது தாள கதியுடன் சுவடுகளை வைத்து கெண்டியையும் பந்தங்களையும் நிவேதனம் செய்யப்போவதுபோல் சாமியாடி குளிகனின் அருகில் போவான். குளிகன் அதற்காகக் கை நீட்டும்போது சாமியாடி பின்புறமாய் விலகிப் போவான். திறையாட்டத்தின் உச்சபட்ச உற்சாகமான காட்சி இது. இறுதியில் பலத்தை பிரயோகித்து குளிகன் சாமியாடியை வீழ்த்தி கெண்டியை பிடுங்கி, வெற்றி முழக்கம் செய்யும்போது - தெய்வங்கள் ஒருக்காலும் தோற்பதில்லை -பக்தியின் உன்மத்தத்தில் மயக்கமடைந்து விழுந்த சாமியாடியை இரண்டு பேர் தூக்கிக் கொண்டு போனார்கள்.

செண்டைகளின் தாள வேகம் குறைந்தது ஐந்து ஆள் உயரமுள்ள முடியை தாங்கிப் பிடித்தபடி நான்கு மலையர்கள் முற்றத்துக்கு வந்தார்கள். கிராமம் முழுக்க மூச்சடக்கி காத்திருக்கிறது. தலையில் கட்டப்பட்ட உயரமான கிரீடத்துடன் குளிகன் இரண்டு கால்களும் தரையில் படாமல் ஊன்றுகோல்கள் கொண்டு நடந்துபோய் பெரிய இரும்பு உரலைக் கிடைவாக்கில் தள்ளிவிட்டு அதன் மேல் ஏறி நின்று அதை உருட்டிச்செல்வான். பீடங்களின் மேலும் மண்டபங்களின் மேலும் குதித்து ஏறி, முன்னும் பின்னும் குட்டிக்கரணம் போட்டு உருளுவான். இளமையின் சக்தியும் சாகசமும் உச்சத்தை எட்டிய உருவமாய் குளிகன் கருணையோடும் வாத்சல்யத்தோடும் கிராமவாசிகளை கூவி அழைப்பான்:

"குழந்தைகளே..."

எல்லாம் மீண்டும் துவங்குகிறது. நினைவுகளில் தன்னை மறந்து மூழ்கியபடி, கிராமத்து வாழ்க்கையின் உள்ளழகின் துடிப்புகளை உள்வாங்கிக்கொண்டு கருணனின் தோளில் கைபோட்டு நந்தன் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்தான். கிரீடம் சூடியாகிவிட்டது. மூச்சை அடக்கிப் பிடித்து உடலை சமன்நிலைக்கு கொண்டு வந்து கங்கன் பீடத்தின் மேல் ஏறிவிட்டிருந்தான். அனேக செண்டைகளின்

தாளலயத்துடனான ஓசை அதன் உச்சத்தை அடைந்துவிட்டிருந்தது. குளிகனும் சாமியாடியும் மலையர்களும் மட்டுமா, கிராமம் முழுவதும் உன்மத்த நிலையை எய்தியிருந்தது.

பீடத்தின் மேல் தெற்கு நோக்கித் திரும்பி நின்ற கங்கன் கூவினான். வாத்தியங்கள் இன்னும் அதிக உச்சத்தை அடையும்படி முத்திரைச் சைகை செய்தான். ஏழு வெடிகள் ஒன்றாக வெடித்தன. லாவகமாக சுவடுகளை வைத்து வேகமாக ஆயாசமேயில்லாமல் கங்கன் பீடத்திலிருந்து கீழ் நோக்கி குட்டிக்கரணம் அடித்தான்.

அப்போது கோவிலின் கிழக்கு நடையில் ஜனங்கள் பரபரப்படைந்தார்கள். செண்டைகளின் ஓசையை தோற்கடிக்கும் விதமாக ஒரு ஆரவாரம் எழுந்தது ஒரு நிமிடம் எல்லாக் கண்களும் குளிகனை மறந்து அந்த திசையை நோக்கித் திரும்பின. பெண்களும் குழந்தைகளும் உட்பட மக்கள் எல்லாம் பயத்திலும் நடுக்கத்திலும் நாற்புறமும் சிதறி ஓடினார்கள். கருணனின் பீதி நிறைந்த குரல் நந்தனை சுயநினைவுக்குக் கொண்டுவந்தது.

"கடவுளே, அங்கே பாரு, போலீஸ்!"

உண்மைதான். ரோட்டுக்கருகே நிறுத்தப்பட்டிருந்த போலீஸ் வண்டியில் இருந்து தொப்பியும் லாத்தியுமாய் போலீஸ்காரர்கள் படபடவென்று குதித்தார்கள். பயந்து போன மக்கள் கூட்டம் மீண்டும் சிதறியது. பெண்களின், குழந்தைகளின் அலறல் ஒலிகள் உயர்ந்தன கூட்டத்தை உதைத்துத் தள்ளி வழியை ஏற்படுத்திக்கொண்டு போலீஸ்காரர்கள் முற்றத்துக்குள் வேகமாய் நுழைந்தார்கள்.

பயந்துபோன மலையர்கள் செண்டை கொட்டுவதை நிறுத்திவிட்டிருந்தார்கள். பள்ளியறைக்கு முன்னால் குளிகன் மட்டும் அப்போதும் ஆவேசமாய் ஆடிக்கொண்டிருந்தான். கழகக்காரன் கணாரிமூப்பனும் இரண்டு கிராம முக்கியஸ்தர்களும் பதட்டத்துடன் போலீஸ்காரர்களின் அருகில் ஓடிச்சென்றார்கள்.

"ஐயா, என்னங்க ஐயா..."

"எங்கே மலையன் கங்கன்? அவனுக்கு அரஸ்ட் வாரண்ட் இருக்கு."

"அய்யோ.... இப்போ ஒண்ணும் பண்ணிடாதீங்க ஐயா.. அவன் இப்ப தெய்வ ரூபத்தில இருக்கான். கொஞ்சம் நேரம் பொறுங்க ஐயா.... தெற முடிஞ்ச பிறகு நீங்க என்ன வேணும்னாலும் பண்ணிக்குங்க. மானம் போயிடுங்க ஐயா... தெய்வக் காரியம் ஐயா..."

பரம்பரைகளாக, தலைமுறைகளாக நடத்தி வருகிற தன் முன்னோரிடமிருந்து பெற்றுக்கொண்ட இந்தப் பொறுப்பு மானக்கேடாகிவிடுமா? கணாரிமூப்பனின் கண்கள் நிரம்பின. ஆனால், இன்ஸ்பெக்டரின் கல் போன்ற உணர்ச்சியில்லாத முகத்தில் தயை எழவில்லை.

"நாங்க என்ன செய்ய முடியும்? எங்களுக்கு வந்த ஆர்டர் இது. ரொம்ப நாளா அவன் எங்ககிட்ட விளையாட்டு காமிச்சிட்டிருக்கான்.

குடோனுக்கு தீ வைக்கும்போது அவன் தெய்வங்களை நினைச்சுப் பார்த்தானா? இந்த நாட்டில இருக்கிற எல்லா திறையும் முடியற வரைக்கும் கவருமெண்ட் காத்திட்டிருக்குமா?"

போலீஸ்காரர்கள் முன்னோக்கி நடந்தார்கள். இதற்கு முன் ஒருபோதும் கண்டிராத அந்த நம்பமுடியாத காட்சியை அந்தக் கிராமம் ஸ்தம்பித்துப் போய்ப் பார்த்துக்கொண்டிருந்தது. யுக யுகங்களாக தங்களின் அதிர்ஷ்ட, துரதிர்ஷ்டங்களை கட்டுக்குள் வைத்தபடி எங்கும் நிறைந்திருக்கும் உக்கிர மூர்த்தியான குளிகனுக்கு விலங்கு பூட்டுவதா?

அங்கே, மண்டபங்களுக்கு நடுவே, திருமுற்றத்தில், உக்கிரமாக அலறியபடி, நிலைகொண்டிருக்கும் மாமலையைப் போல குளிகன் அப்போதும் கம்பீரமாக நின்றான். போலீஸ்காரர்கள் படிகள் ஏறத் துவங்கியபோது, ரௌத்திரமாகக் கூவியபடி குளிகன் தன் கம்பை ஆகாயத்தில் ஆங்காரமாக வீசினான்.

"கல்லாடிகளே...!"

குளிகன் வாத்தியக்காரர்களைப் பார்த்து அலறினான். ஆனால், மலையர்களின் செண்டைக்கோல் பிடித்த கைகள் உயிர்பெற்று அசையவில்லை.

"கோமரமே..!"

பள்ளியறை வாசலில் மறைந்து நின்ற சாமியாடி தர்மசங்கடத்துடன் சிவப்புப் பட்டில் முகத்தை மறைத்துக் கொண்டான். கையறுநிலையில் தன் தெய்வத்தை நோக்கினான்.

"கயகக் காரா.!"



கழகக்காரன் கணாரிமூப்பனின் நெஞ்சம் வெடித்தது. மாரிலடித்தபடி சின்னக் குழந்தையைப் போல வீறிட்டு அழுத கணாரிமூப்பன் மயங்கித் தரையில் சாய்ந்தான்.

போலீஸ்காரர்களுக்குத் தலைமை தாங்கி கடைசிப் படியேறிய இன்ஸ்பெக்டர் ஒரு நிமிடம் மூச்சு வாங்கினார். உன்னதமான குளிகன்திறைக்கு நேராக முகத்தை உயர்த்தி இன்ஸ்பெக்டர் குளிகனைப் பார்த்துக் கத்தினார்:

''கங்கா, உன் பித்தாலாட்டத்தை இதோட நிறுத்திக்கோ. கிரீடத்தை அவுத்து வச்சிரு. மரியாதையா நடந்தா நாங்க ஒண்ணும் பண்ணமாட்டோம்.''

குளிகன் ஒரு நிமிடம் நிச்சலனமாய் நின்றான். ஆனால் தங்களின் தெய்வத்தை காப்பாற்றும் தைரியம் இல்லாத கல்லாடிகளும் கழகக்காரனும் சாமியாடியும் கிராமத்துத் தலைவர்களும் சிலைகளைப் போல மௌனமாக செய்வதறியாமல் நின்றிருந்தார்கள்.

திடீரென்று ஊன்றுகோல்களைத் தரையில் ஊன்றி நம்பமுடியாத வேகத்தில் ஆகாயத்தினூடே ஊஞ்சலாடி, போலீஸ்காரர்களின் தலைகளுக்கு மேலாக கங்கன் உயர்ந்து பறந்தான். நூற்றாண்டுகளாக தெய்வங்களின் இச்சா சக்திகளுக்கு கீழ்ப்படிந்து, அவர்களின் சாபங்களையும் வரங்களையும் ஏந்திக் கொண்டு நிற்கிற மண்டபங்களுக்கு மேலிருந்து எந்த எதிர்ப்புகளுக்கும் அடங்காத ஒரு குரல் உயர்ந்தது:

''இன்குலாப் ஜிந்தாபாத்! நெசவுத் தொழிலாளிகள் யூனியன் ஜிந்தாபாத்!''

போலீஸ்காரகளின் லத்திகள் உயர்ந்தன. அவர்கள் முன்னோக்கி நகர்ந்தார்கள். ஆனால் அதற்குள் மக்கள் எல்லோரும் உணர்வு பெற்று விட்டிருந்தார்கள். அவர்களின் நரம்புகளில் ஒரு பெரும் வெடிப்பு நிகழ்ந்துவிட்டிருந்தது. கங்கன் முழங்கிய கோஷம் ஆங்காங்கே எதிரொலி கொண்டது. நெசவுக் கூடங்களிலும் பீடிக் கம்பெனிகளிலும் முந்திரிக் கமபெனிகளிலும் வேலை செய்கிற கோபாவேசமான இளைஞர்கள் திருமுற்றத்துக்குள் உத்வேகத்துடன் பாய்ந்தார்கள்.

''இன்குலாப் ஜிந்தாபாத்.''

கற்களும் கவணைகளும் தடிகளும் உறுமிக்கொண்டு பறந்துவந்தன. ஆக்ரோஷங்களும் அலறல்களும் முழங்கின. போலீஸ்காரர்களின் தொப்பிகள் ஆகாயத்தில் பறந்து அலைந்தன.

நெற்றியில் சிறிதாக ரத்தம் வழிய எங்கிருந்தோ வந்த கருணன் அழைத்தான் : "நந்தா.."

ஒரு கெட்ட கனவிலிருந்து திடுக்கிட்டு எழுந்தது போன்ற பதட்டத்துடன் நந்தன் முகம் உயர்த்தினான். அங்கே மண்டபங்களின் மேலே உயரத்தில் நின்று, இளமையின் சக்தியும் சாகசமும் உச்சத்தை எட்டியஉருவமாய் குளிகன் கருணையோடும் வாத்சல்யத்தோடும் கிராமவாசிகளைக் கூவி அழைத்துக் கொண்டிருந்தான்:

''தோழர்களே...''

மொழியழிந்த மரணப் பாதையில் பலோனோவின் காட்சில்லா...

எஸ்.சண்முகம்

ஒரு கணினித் திரையில் இருமை எதிர்வுகளின் அதர்க்க சமிக்ஞைகளின் கலவைக்குள் நிகழும் அதி - நகர்வுகளைப் போல் மரணம் ஒளிப்பகுதியுது. நாம் காட்சியைக் கண்டுணரும் காட்சிகள் அனைத்தும் வாழ்தலின் முற்பக்கம் திரையாடுகிறது. அதன்பின் முனையில் நடக்கும் பிம்பக் கோர்வைகளுக்கான அலகுகள் வெறும் இருமை அதிர்வுகளுக்குள் நிகழ்த்தப்படுவது ஒரு விளையாட்டுதான்.

அனைத்துமே ஒரு தற்செயல் தன்மையின் திட்டமிடப்படாத சூட்சமமாக விரிகிறது. ஒரு தொலைகாட்சியில் அழிவினைச் சுட்டும் காட்சியைக் காணும் போது எதேச்சையாக விரல் படலில் - ஒரு கார்டூன் காட்சிக்கு மாறும் திரை. இதில் நமது அறிவார்த்தம் என்ற புலம் முந்தைய உணர்வெளியை விட்டு மீண்டது கூட தெரியாமல் கார்டூனில் களிப்பில் மிதக்கும். ஒரு கணினியின் வன்பொருள் எப்படி மென்-பொருளின் நொடி மாற்றத்தல் முந்தைய செயல் வெளியைவிட்டு சுவடின்றி தாவுகிறதோ அப்படி அறிதல் புலன் தாவுகிறது.

நிஜ ஓசைக்கும். ஓசையின் மாதிரிக்கும் இடையேயான வேறுபாடு அழிப்பாக்கத்திற்குள் புதைந்துள்ளது அதுபோல் மரணம் வாழ்வு இவையிரண்டும் தற்செயலின் அழிப்பாக்கத்தில் ஜீவிக்கிறது. சற்றும் யூகிக்க முடியாததை நொடிப் பொழுதில் மின்னி மறைகிறது. பார்த்தல் வாழ்தலின் தப்பித்தலைச் செய்கிறது.

Listen carefully my son; somes were falling
over mexico city
but no one noticed
the air carried poison through
the streets and open windows
you'd just finished eating and were watching
cartoons on TV

உணவருந்திவிட்டுத் தொலைக்காட்சியில் கார்டுனைப் பார்க்கும் மகனிடம் ஒரு நிகழ்வின் தொடரை படுக்கைக்நேர கதைபோல் கவிதையைச் சொல்ல ஆரம்பிக்கிறார் **Roberto Bolano** அதன் பக்கத்து அறையில் படித்துக் கொண்டிருந்துவிட்டு மரண மயக்கின் சூழல் வட்டமிடத் துவங்கிவிட்டதை உணர்ந்த தருணத்தில் பேசத் துவங்குகிறார்.

I was reading in the bedroom next door

when I realized we were going to die
Despite dizzines and nausea I dragging myself
to the kitchen and found you on the floor

கார்டூன் நிகழ்ச்சியின் சுழற்சிக்குள் மூழ்கிய மகனின் மனம் மரண கணத்தை உணராது தந்தையிடம் என்ன நிகழ்ந்தது என்று கேட்கிறான். ஒரு கார்டூன் காட்சியின் பகுப்பில் நீளும் எண்ணற்ற பிம்பங்களின் அடர்த்திக்குள்ளிருந்து விடுபடாத குழந்தைமையின் வெளிப்பாடு தான் இக்கவிதையின் நுட்பம். தனது மகனைத் தழுவிய கவிதை சொல்லி

We hugged you asked what was happening
and I didn't tell you we were on death's program
but instead that we were going on a journey
one more, together, and that you shouldn't be afraid
when it left, death didn't even
close our eyes.

கார்டூன் நிகழ்ச்சியின் பிடியிலிருந்து மீளாத தன் மகனுக்கு மரணம் திரையிடும் பேர் - உறக்க நிகழ்ச்சிச் துயில் நேர கதையாகச் சொல்லிச் செல்கிறார். இந்த புலன் கடந்த பயணத்தில் நீ மட்டுமின்றிநானும் உடனிருக்கிறேன் என்று தேற்றுகிறார்.

இந்த அநித்திய பயணத்திற்குள் காலம் சுவடற்று போதலைக் குறிக்கும் விதமாகவும் - மொழியழிந்த மரண பாதையில் நாட்கள், வருடங்கள், கரையும் மனித வகைமையின் தொடர்ச்சியின்மைப் பிறழ் எண்களென கவிதைக் குறிக்கிறது.

What are we? You asked a week or a year later
ants, bees, wrong numbers
and in the big rotten soup of chance?

We're human beings, my son, almost binds
public heroes and secrets

பேரகசிய ஏடொன்றைத் திருப்பும் மனகதியில் இக்கவிதை நம்மை ஆழ்த்துகிறது. இருப்பின் ஒளி துளைக்காத ஆழத்திலிருந்து தொடர்வட்டச் சுழலாக விம்மி இப்படி வெளிப்படுகிறது கவிதை சொல்லியின் குரல்.

நாம் மனிதர்கள் ஏறக்குறைய பறவைகள் மற்றும் இரகசியங்கள் என்று மரணத்துள்ளிலிருந்து தனது மகனுக்கு மட்டுமல்ல நமக்கும் சேர்த்தே கவிதையை குறிப்பீடு செய்கிறார் ரோபர்ட்டோ போலனோ.

2. கோமாளி - ஆடிகள் முன் நிகழ்த்தப்பட்ட பரிகாச விளையாட்டு பெசோவாவின் கவிதை...

பாதரசம் உரிக்கப்பட்ட ஆடியின் பிரதிபலிப் பின்மையினைப் போல், தன் என்ற பிரதிபலிப்பற்ற தன்னிலைக்குள் தளும்புகிறது. அவ-மனிதம் கைரேகைகளது நுண் - கோடுகளின் எதிர்மறைச் சேர்க்கையில் ஒரு முகம் தோற்றம் கொள்வதின் எதிர்பாராத தன்மைக்குள் ஒளிந்திருக்கிறது நம் நுண்முகம். நமது இருத்தலின் எதார்த்தத்தை நாமே தொலைத்துவிட்டு தேடும் பரிகாச விளையாட்டை நம்மால் நிறுத்த மனமின்றி தொடர்கிறோம்.

எண்ணிறந்த கோமாளி - ஆடிகள் சூழ்ந்திருக்கும் நிலவறை ஒன்றில் அகப்படுத்தப்பட்டு. அங்கு நமது சுணக்கற்ற நகை ரூபங்களை நாமே கண்டு இடையறாத சிரிப்பில் திளைக்கிறோம். அக்கணம் தன் பிறன்மையற்ற நிலையில் தொலைத்து விடுகிறோம். தொலைத்தலின் களிப்பில் இடமும் - காலமும் முயங்கி, நாம் இதுவரை அடையாத உறைநிலைக்குள் நம்மைத் தள்ளாட வைக்கிறது.

நமது தண்ணுணர்வும் - நமது பிறன்மைப் பிம்பமும் மொழி மறதிக்குள் சென்று புதைந்துவிடுகிறது. அழுதுதல் என்பது பன்மை - ஆடிப் பிம்பமாகவே தொழில்படுகிறது. உடலின் பருன்மை எழுத்தில் படியாக்கப்படுகிறது. அப்படி எழுதுதலின் அழிப்பாக்கத்தில் சுழற்சிக் கொள்கிறது பிறன் தன்மை. ஒரு எழுத்துப் பிரதிமீது தொடர்ந்து எழுதிக் கொண்டே இருப்பதும், அதனால் பல்கும் மொழி அடுக்குகளின் இடையாட்டத்தை கவிதைசொல்லி தாளின்மேல் பதிந்து கொண்டே செல்கிறார். அவ்வாறு பதியப்பட்ட அவலத்தின் சுவடுகளாக இருப்பவை பெசோவாவின் கவிதைகள்...

who whill write the story of what he could have beer?
that, if someone writes if,
will be the true listery of humanity
what exists is the real would - not us, just the world
we are, in reality what doesn't exist.

நமது உடலின் எல்லைக்கோட்டின் வெளியே உள்ள புற எதார்த்தத்திற்குள் நாம் பருண்மையாக இருந்தாலும். நமது

தன்னிலை என்பது அதன் கட்டுமானம்ப இருப்பதை சந்தேகித்துப் பார்க்கிறோமா? என்ற வினா எழுகிறது. கட்டமைக்கப்பட்ட அலைந்து ஒரு ஆடியின் மேற்பரப்பில் கீறடுக்கற்ற பிம்பச்சுவடாய் எஞ்சுகிறது தன்னிலை.

I am who. I failed to be
we are all who we supposed ourselves
our reality is what we never attained
what happened to the truth we had
the drema at the window of the childhood?
what happened to our certainty -
The plants at desk that fellowed?

காரண அறிவு கண்ணாடி முன் நிகழ்த்தப்பட்ட ஒத்திகையாகிறது. கனவுகள் உறக்கக் கோளாறுகளாக திரிபடைகிறது. யூகத்தின் ரேகைகள் கலைந்து தெளிவற்று மறைகிறது. தெளிவின் விளையாட்டத்தில் உண்மையின் நிறம் மங்கி காட்சியற்றுப் போகிறது. அகப்புற குறியீடற்ற வெறித்தலாய் எஞ்சுகிறது கவிதை.

Against the high sill of the balcony window - I ponder
what happened to my reality that all I have is life?
what happened to me, that I am Just who exist?
....
How many caesavs I've been!
In my soul, and with same truth
In my imagination and with some justice;
In my intellect and with some warrant -
My God! my God! my God!
How many caesars I have been!
How many caesars I have been!
How many caesars I have been!

சிதறுண்ட சீசரின் தோற்றங்களுக்குள் புதைந்த எத்தனை எத்தனை நாள்கள் என்னுடையவை. இடையறாத பன்மையாக்கத்தின் சங்கிலித் தொடரில் சுய - நினைவற்றுப் போனேன். விழுப்பழிந்த தன்னிழப்பின் மீளா நித்திரைக்குள் அயர்ந்து கரைகிறேன்.

எதார்த்தம் தொலைந்த கையறு வாழ்வின் படிவமே நாளாக கவிதை இங்கு எஞ்சுகிறது. களைத்துச் சோர்ந்த பெருவெள்ளப் பெருக்கில் எஞ்சிய வண்டலாக படியும் வீழ்தலின் மொழியாகிறது பெசோவாவின் கவிதை.

3. சட்டங்களுக்குள் அடங்காதவைகளைக் காணுங்கள்

என்கிறார் ஆர்.எஸ். தாமஸ்...

மிகைகளின் சட்டகத்திற்குள் பழகிவிட்டன நமது அன்றாட நகர அசைவுகள் எதிர்கொள்ளும் ஒவ்வொரு முகத்திற்குள்ளும் சேமித்து வைக்கப்பட்டுள்ள முன்-தின கனவின்மை சுழற்சிகளின் வெளிறிய படிமங்களாக நடமாடுகிறோம். மணிக்கட்டின் நாடித்துடிப்பு கடிகாரத்தின் சக்கரங்களின் விசைக்குள் சிக்குண்டு வீழ்கிறது. எண்ணிக்கையில் அடங்காத மொழிகளின் லிபிகள் நீள் சரமாக நெடுஞ்சாலைகளில் ஒன்றையொன்றுக் கவ்விக் கொண்டு பொருள் குவியலுக்குள் அமிழ்கிறது.

சொற்களை ஒரு முளையிலிருந்து மற்றொரு முளைக்கு பாய்ச்சும் கதிர்-அலைகளில், சொன்மையின் உணர்பிரவாகம் நொறுங்குகிறது. அதைப் பற்றிய நினைவு எப்படி என்னுள் இருந்து வினாடிதோறும் அழிகிறது? பேச்சிற்கிடையில் / அவசர நடைக்கிடையில் எத்தனை புன்-முறுவல்களை ஸ்மரணையின்றி கண்டும் காணாமலும் இமைகளில் மிதித்து நடக்கிறேன். முறுவல்களுக்குப் அப்பால் உள்ள ஒரு அரூப - உயிர்ப்பின் மற்றமையின் வேட்கையை எளிது படிமமற்ற சொற்கள் பிரதிகளில் அழிக்கின்றன. பிரக்ஞையோடு அசைந்தாலும் உள்ளுக்குள் நினைவின்மையின் வடிவமழிந்த வெளியில் புற - உலகின் தோற்றங்களோடுதான் நாம் உடன் அலைகிறோம். பார்த்தலின் மறதி நினைவு பெறுகிறது. தோற்றத்தின் பின் பக்கத்தில் அதன் பொருண்மை நகைத்துக் காட்டுகிறது. நாம் எதிர் கொண்டு நோக்கும் ஒவ்வொன்றும் நம்மோடு தொடர்புள்ள மற்றொன்றைக் காட்சிப்படுத்திக்காட்டுகிறது. பொருண்மையின் மொழியைச் சொல்லும். R.S. Thomas இன்

Flowers

But behind the flower
is the other flower
which is agelets, the idea
of the flower, the one
we smell when we imagine
it, that as after
as it is picked blosomms,
agains, that has the penfection
of all flowrs, the purity
without the imagility

Was it
apart of the plan

for humunity to have
flowers about it?

பக்கவாட்டில் கூட பார்த்தறியாத நகர விழிகளுக்குள் நிரம்பி வழியும் போக்குவரத்து திசைக்குறிகள். முக்கியன்மையின் குறியீடான முகக்குவியல், யாரும் யாரையும் குறிப்பீடு செய்யாத இணைவற்றலில் மெலியும் அன்றாடங்களுக்கிடையே, எப்போதாவது நியானின் பூச்சற்ற - மெல் ஒளியுடன் கலவி, களிக்கும் தருணங்களில் மனம் குழந்தைமையில் முகிழும்.

They are many
and beautiful, with faces
that are a reminder of those
of over own children though they come painlessly
them the bulbs womb we trouble
them as we go by. so they hang
their leads at our unreal progress.

பொருட் பெருக்கத்தின் பிடியில் வாழ்வியலை ஒப்புக் கொடுத்துவிட்டு, சுய-சாரமற்ற வாழ் - நுகர்வின் கேலிக்கூத்தை கவிதையாக்குவதில் 'metaphor' ன் பங்கு முக்கியமானது. இது குறித்து ரோலண்ட் பார்த்தின் வரையறை வரிகள்

If the movement of matephor it is fiction. force
however. recurs lower down. it in a metaphor
which leans and falls (Salcken)
the stereotype can be evaluated in terms of fatigue.

மேலும் நகர வாழ்வின் ஒற்றைத் தன்மை கொண்ட வார்படத்தை ஆர்.எஸ். தாமஸின் கவிதை மலர் என்ற 'metephor' வைத்து நொறுக்குகிறது. மலர் என்ற பருண்மையினைச் சுற்றி பின்னப்பட்ட தொடர் சுழல் வட்டமாக கவிதை சொல்லுதல் பிரதி செய்யப்படுகிறது. இதில் stereo type என்பதை போலியான வளர்ச்சி என்று கவிதையில் குறிப்பிடுவதை நகரஉடலின் வாதையையும் அதன் மிகை - சோர்வையும் இணைவில் கொண்டு மதிப்பீடு செய்யலாம்.


If flowers had minds,
would they not think they were the color
eternity is a window that gives are still view the hurrying
people must come to and store at pass by?

நிறக் குழப்பத்தில் உழலும் மனதிற்கு நீயும் நிலைபேறுடைமையின் குறியீடு என்பதை எப்படி அறிந்து கொள்ளும் நள்ளிரவு. நெடுஞ்சாலைகளின் தனிமை இரக்கப் பாடலை, கதிரொளியை நாள் முழுவதும் உள்வாங்கிய குறியீட்டு விளக்குகள் அணைத்து - ஒளிந்து - கசிந்து இசைக்கின்றன. உறைந்த காட்சிகளையே தந்து கொண்டிருக்கும் சாளரங்களுக்கு இடையே

முந்திச் செல்லும் எத்தனிப்பைத் தவிர்த்துவிட்டு சட்டங்களுக்குள் அடங்காதவைகளை சிறிதேனும் காணுங்கள்.

பயன்படுத்தப்பட்ட நூல்கள்

1. The Romantic Dogs - Roberto Balano
2. A little larger then the Entire universe - Fernando Pessoa
3. Collected Poems - R.S. Thomas



MILOZ




நீங்கள்
பிறருக்கு இழைத்த துன்பங்களை மறந்து விடுங்கள்.
பிறர்
உங்களுக்கு இழைத்த துன்பங்களையும் மறந்துவிடுங்கள்.
தண்ணீர் ஓடுகிறது
தன்னிச்சையாக ஓடிக்கொண்டே இருக்கிறது.
வசந்தம் ஜொலித்து நிகழ்ந்து விடுகிறது
நீங்கள் பூமியின்மேல் நடக்கிறீர்கள்
நீங்கள் மறந்தும் விடுகிறீர்கள்
சிலசமயங்களில் தூரத்திலிருந்து ஒருவிலகல் ஒலிகேட்கும்.
யார் அங்கு பாடுகிறார்கள்.
அதற்கு என்ன அர்த்தம் என்று கேட்கிறீர்கள்?
ஒரு மழலைச் சூரியன் வெதுவெதுப்பாக வளர்கிறது.
பேரனும் மற்றும் கொள்ளுப் பேரனும் ஜனிக்கிறார்கள்.
நீங்கள் மீண்டும் கையை பிடித்து அழைத்துச் செல்லப்படுகிறீர்கள்.
ஆறுகளின் பெயர்கள் உங்களுக்குள்ளேயே தங்கிவிடுகின்றன.
இந்த ஆறுகள் எப்படி அந்தமற்றதாகத் தோன்றுகிறது.
உங்களது வயல்கள் தரிசாக கிடக்கின்றன.
நகரின் அடுக்குமாடிகள்
அப்போதிருந்தது போல் காட்சியளிக்கவில்லை
நுழைவாயிலில் நீங்கள் ஊமையாய் நிற்கிறீர்கள்

அனைத்துமே தவறாக புரிந்து கொள்ளப்பட்டதாக
எனக்குத் தோன்றுகிறது
ஒரு மாதிரிக்காக செய்தவையெல்லாம்
உள்ளார்ந்தவையாக எடுத்துக் கொள்ளப்பட்டது
ஆறுகள் தங்களது ஊற்றுக்கண்களுக்குத் திரும்புகின்றன
காற்று திரும்பிச் சுழலுதலை கைவிடுகிறது,
மரங்கள் துளிர்க்காமல்
தனது வேர்களுக்கு செல்ல எத்தனிக்கிறது
வயோதிகர்கள் ஒரு பந்தைத் துரத்தி செல்கிறார்கள்
நிலைக்கண்ணாடியில் தங்களை
ஒருமுறைபார்த்துக் கொள்கிறார்கள்,
இது என்னவென்று புரிந்து கொள்ளாமலே
அவர்கள் அனைவரும் மீண்டும் சிறுவர்களாகிறார்கள்,
மரித்தோரெல்லாம் துயில்நீத்து விழிக்கிறார்கள்,
சம்பவித்தவை எல்லாம்
சம்பவிப்பின்மையாக மாறிவிட
எத்தனைப் பெரிய நிவாரணம்,
இனி அனாயாசமாக சுவாசி
அத்தனை பெரியதுயரை அனுபவித்தவனே.


தமிழில் எஸ். சண்முகம்

(புதுஎழுத்து வெளியீடாக வரவுள்ள தொகுப்பிலிருந்து)

அஞ்சலி




எடுவர்டோ காலியானோ



ஜே.கே.

குந்தர் கிராஸ்

அசதா





இது 2012ல் குந்தர் கிராஸ் எழுதிய, பெரும் சர்ச்சையைக் கிளப்பிய உரைநடைக் கவிதை. மிகவும் தட்டையாக, ஒரு அரசியல் அறிக்கையின் தொனியில் எழுதப்பட்டதென்றாலும் எந்த ஜெர்மானிய அறிவுஜீவியும் செய்யத் துணியாததை கிராஸ் இந்த கவிதையில் செய்தார். இஸ்ரேலை அதன் அணு ஆயுதக் குவிப்புக்காகச் சாடினார். அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் ஈரானின் அணு ஆயுத உற்பத்தி பற்றிய பீதிமிக்கப் பதற்றங்களை உருவாக்கிக் கொண்டிருந்த வேளை மத்திய கிழக்கின் அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் அளவுக்கு அணு ஆயுதங்களை வைத்திருப்பது இஸ்ரேல்தான் என்பதைத் துணிந்து சொன்னார். ஈரானில் போல இஸ்ரேலிலும் தன்னிச்சையான சர்வதேச அமைப்புகள் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டுமென்றார். இஸ்ரேலுடன் ஈரானை ஒப்பிட்டது அவமானகரமானதொரு ஒழுக்க ஒப்பீடு என்றார் இஸ்ரேல் பிரதமர். குந்தர் கிராஸ் இஸ்ரேலின் வேண்டா விருந்தாளி என அறிவிக்கப்பட்டார். கிராஸின் நினைவைப் போற்றும் விதமாக இங்கு அந்தக் கவிதை.

சொல்லியாக வேண்டியது என்ன?

ஏன் இதுவரை நான் மௌனம் காத்தேன்?
ஒருபோதும் நீக்க முடியாத கறைகளால் களங்கப்படுத்தப்பட்ட
என் பூர்வீகம் பற்றி யோசித்துக் கொண்டிருந்தேனா,
இப்போதும் எப்போதும் என்னோடு பிணைந்த
இஸ்ரேல் என்ற தேசம் இந்தப் பகிரங்க
உண்மையை ஏற்றுக்கொள்ளுமென எதிர்பார்க்க முடியுமா?
வயதேறிய காலத்தில் மிச்சமிருக்கும் மசியை வைத்துக் கொண்டு
ஏன் இப்போது நான் சொல்கிறேன்?
இஸ்ரேலின் அணுசக்தி ஏற்கனவே பலவீனப்பட்ட
உலக அமைதியை ஆபத்துக்குள்ளாக்குகிறதா?
நாளைக்கெனத் தள்ளிப்போட்டால்
சொல்லப்பட வேண்டியது
மிகத் தாமதமாகிவிடும்
ஏற்கனவே சுமையேறிக் கிடக்கும் ஜெர்மானியரான நாங்கள்
நிகழப் போகும் ஒரு குற்றச் செயலுக்கும் உறுதுணையாகிறோம்
வழக்கமான எந்தச் சமாதானத்தைச் சொல்லியும்
குற்றத்துக்கு உடந்தையாயிருந்ததை
மறுத்துவிட முடியாது
என் மௌனத்தைத் தகர்த்துவிட்டேன்
மேற்கின் வெளிவேஷம் என்னைப்
பைத்தியமாக்குகிறது
இன்னும் பலரும் தமது மௌனத்திலிருந்து
விடுவிக்கப்படுவார்கள்
இந்தப் பகிரங்க ஆபத்துக்குக் காரணமானவர்களை
படைகளைப் பயன்படுத்த வேண்டாமென
அவர்கள் தடுக்கக்கூடும்
சர்வதேச அமைப்புகள் சென்று
தமது அணுசக்தி ஆற்றலை ஆய்வு செய்ய
ஈரானும் இஸ்ரேலும் அனுமதிக்க வேண்டும்.

தி கார்டியன் 5-ஏப்ரல் 2012





தனிச்சுற்றுக்கு மட்டும்